உ

கணபதி துணை.

# திருப்பெருந்துறைப் புராணம்.

திருக்கைலாய பரம்பரைத்
திருவாவடுதுறை யாதீனத்து மஹாவித்துவான்
திரிசிரபுரம்


ஸ்ரீ மீனாட்சிசுந்தரம் பிள்ளையவர்கள்


இயற்றியது.

இது

மேற்படி ஆதீனத்துத் தலைவர்களாகிய,
ஸ்ரீலஸ்ரீ அம்பலவாண தேசிகரவர்கள்
செய்த
பேருதவியைக்கொண்டு
மேற்படி பிள்ளையவர்கள் மாணாக்கரும்
சென்னைப் பிரஸிடென்ஸிகாலேஜ் தமிழ்ப்பண்டிதருமாகிய
உத்தமதானபுரம்

## வே. சாமிநாதையரால்

தாம் நூதனமாக எழுதிய அரும்பதவுரையுடன்


சென்னை:
பிரஸிடென்ஸி அச்சுக்கூடத்திற்
பதிப்பிக்கப்பெற்றது.

பிரமாதீச ஆனி மீ
1913.

இரண்டாம்பதிப்பு.

விலை ரூ 1—0—0



(Copy-right Registered.)

MADRAS

Title page and preface only

PRINTED AT THE VAIJAYANTI PRESS,

(Madras Times Printing & Publishing Co., Ltd.)

BY

W. F. GRAHAME ESQ. I.C.S. (RETIRED) AT 32 MOUNT ROAD

1913

உ

# இப்புத்தகத்திலடங்கியவை.


| | | பக்கம். |
|---|---|---|
| ௧. | முகவுரை ... ... ... ... | 1–20. |
| ௨. | திருப்பெருந்துறைப்புராணம் ... | ௧. |
| ௩. | அரும்பதவுரை ... ... ... ... | ௨௧௭. |
| ௪. | சூசி பத்திரம் ... ... ... ... | ௨௫௧. |
| ௫. | பிழையும் திருத்தமும் ... ... ... | ௨௫௨. |

கணபதிதுணை.

# முகவுரை

திருச்சிற்றம்பலம்.

"இன்பம் பெருக்கி யிருளகற்றி யெஞ்ஞான்றுந்
துன்பந் தொடர்வறுத்துச் சோதியாய்—அன்பமைத்துச்
சீரார் பெருந்துறையா னென்னுடைய சிந்தையே
யூரூகக் கொண்டா னுவந்து."

[திருவாசகம், திருவெண்பா, கக.]

"நிறைபெருந் தவத்தோர் வேள்வி நீங்கரும் பெருமை மிக்கோர்
மறுவிலா வறநூ னான்மறையவர் விளங்கு மூதூர்
இறையினை மருங்கணைந்தோ ரியாவரா யினும் பிறங்கப்
பிறிவிலா வமர ராக்கும் பெருந்துறை முந்தைப் பேரூர்"

வேறு

அருந்தவர் சிந்தை செலுந்துறை வந்தணை யாதவர் முந்தைமகம்
புரிந்துசெ யுந்துறை சந்தைப டுந்துறை புந்திக டந்தபதம்
தருந்துறை யிந்திரை வந்துறை யுந்துறை தோன்றிகொ டுத்திடுமெ
பெருந்துறை யெந்தை பரிந்துகு ருந்திலி ருந்தபெருந்துறையே."

[திருவால. உஎ, ஞானோப. கரு, கசு.]

"கருணைவெள்ளப்பெருங்கடனிறைந்துறைபெருந்துறை"

[திருவிளை. வாதவூ. ருச.]

சீரடியார் முடியுடையார் நுண்ணணியாமெ வியசபையில
வாயுடையார் தீயருணை மனையுடையார் மாண்பில்லாச
சேயுடையார் நிலுமபலவார் நீங்கடையார் செறிதளிரூக
காயுடையார் திருந்தவனப் புராணமது கடப்போரே."

[பக்கம், உகரு, பாடரு, ருரு.]

* திருப்பெருந்துறை யென்பது, பாண்டிவளநாட்டில் † மிழலைக் கூற்றத்தில் வெள்ளாற்றின் தென்கரையில் உள்ள தாம் பழையகிராமங்

* இதன் வடமொழிப்பெயர் ப்ருஹச்சதீர்த்தமென்பது; இதன் காரணத்தை இந்நூற் பெருந்துறைப் படலத்தாலுணர்க. இது திருப்பெருந்துறைசை, துறைசை, பெருந்துறை எனத் தமிழ்நூல்களில் மருவிவழங்கும்.

† இது மிழலைநாடெனவும் வழங்குதும் புறநானூறு உசஎ-ம் செய்யுளிலும் மற்ற நூல்களிலும் கூறப்படும் மிழலைக்கூற்ற மென்பதும், பெருமிழலைக்

களாற் பாராட்டப்பெற்று மிகப்புராதனமாக விளங்குவதுமாகிய ஒரு சிவஸ்தலம். இதற்கு, அநாதிமூர்த்தஸ்தலம், ஆதிகைலாஸம், * ஆளுடையார் கோயில், ஆவுடையார் கோயில், உபதேசஸ்தலம், குருந்தவனம் அல்லது குருந்தவனம், சதுர்வேதபுரம், † சிவபுரம், ஞானபுரம், திரிமூர்த்திபுரம், தென்கைலை, தேசுவனம், பராசக்திபுரம், பவித்திரமாணிக்கம், பூலோக கைலாசம் அல்லது பூகைலாசம், யோகபீடபுரம், யோகவனம் முதலிய வேறு காரணத் திருநாமங்களும் உண்டு. இவற்றின் காரணங்களை இப்புத்தகத்தின் எ௩-ஆம் பக்க முதலியவற்றாலுணர்க. இவற்றுள் பெருந்துறை, ஆதிகைலாஸமென் னும் பெயர்களால் தேவார முதலியவற்றில் இத்தலம் சிறந்து கூறப் பெறும். ஸ்காந்த முதலிய மஹாபுராணங்கள், மஹேதிஹாஸமாகிய சிவரஹஸ்யம், மணிவாசகரசரித்திரம் அல்லது மணிவசன மாஹாத் மியம், ஸ்ரீ ஹாலாஸ்ய மாஹாத்மியம் ஆகிய இவற்றுள்ளும், வேறுஸ்தல புராணங்களுள்ளும் உரிய இடங்களில் இத்தலத்தின் பெருமைகள் பெரிதும் பாராட்டப்படுகின்றன.

உருவம், அருவம், அருவுருவ மென்னும் மூவகைத் திருமேனி களுள்ளே சிவபெருமான், அம்பிகையும் தாமும் அருவத் திருமேனி கொண்டு எழுந்தருளி விளங்குவது இந்தத் திருப்பதியிலேயே. [பக். க, பா. ரு; பக். சஉ, பா. கூ - அ; பக். சஅ, பா. கூ]

பிரஹ்மா முதலியவர்களுக்கும் திருவாதவூரடிகளுக்கும் பரம சிவன் குருமூர்த்தியாய்க் காட்சிகொடுத்து உபதேசித்தருளினமை யாலும் திருவாதவூரடிகளைப் பாதுகாத்தற் பொருட்டுப் பாண்டியன்

குறும்பநாயனார் அவதரித்த பெருமிழலையெனப் பெயருரைத்த தன்பாற் பெற்று விளங்குவதாகிய மிழலைநாடும் "மிழலைநாட்டுப் பெருமிழலை" [பெரிய. பெருமிழலைக். க.], ஸ்ரீ சுந்தரமூர்த்திநாயனார் அருளிச்செய்த, "மிழலைநாட்டு மிழலை வெண்ணிநாட்டு மிழலையே". என்னும் தேவாரத்துச் சுட்டப்பெற்ற மிழலைநாடும் இதுவே. "ஒழுக்கந் தருமந் தவந்தான முறவு வாய்மை பொறைமற்றும், விழுப்ப முள்ள குணத்திராவாழ மிழலைநாடு" எனத் திருவாலவாயுடையார் திருவிளையாடற்புராணத்திலும் இந்நாடு பாராட்டப் பெற்றுள்ளது. திருப்பெருந்துறைக்கோயில் சம்பந்தமான தமிழ்நூல்களி லும் பழைய பட்டயங்களிலும் பிறவற்றிலும் இந்தப்பெயர்கள் மிகுதியாகக் காணப்படும். இதன் சம்பந்தமாக மிழலைச்சதக மென்பதொரு நூலுமுண்டு.

* ஆளுடையார்கோயில் முதலிய இரண்டுபெயர்களும் பழைய தாமிரப் பட்டயங்களிற் காணப்படுகின்றன. சின்ன ஆளுடையார்கோயில் என ஒரு ஸ்தலம் இதற்கு வடக்கே (இருசாமடத்திற்கு அருகு) இருத்தலின், இது பெரிய ஆளுடையார்கோயிலெனவும் வழங்கும்.

† சிவபுரமென்னும்பெயரைத் திருவாசகத்திற் பரக்கக்காணலாம்.

முன்னிலையில் கருணைக்கடலாகிய எம்பெருமான் வேதமாகிய குதிரையின்மீது எழுந்தருளினமையாலும் அறுபத்துநான்கு மூர்த்தங்களுள், குருமூர்த்தத்திற்கும் அசுவாரூட மூர்த்தத்திற்கும் மூலமாகிய ஸ்தலம் இஃதென்று பெரியோர்கூறுவர்; தக்ஷனுடைய யாகத்தை அழித்த வீரபத்திரக்கடவுள், அந்தத் திருக்கோலத்துடன் அம்பிகையின் யோகத்தைப் பாதுகாப்பவராய் அம்பிகையின் ஸந்நிதியில் சிவாஞ்ஞையால் எழுந்தருளி, வழிபடுவோர்க்கு இஷ்ட சித்திகளை அளித்துக்கொண்டிருக்கின்றமையின், தக்ஷாத்துவரஸம்ஹாரமூர்த்திஸ்தலமென்றும் இதனைச்சொல்லுவதுண்டு.

இன்னும் ஷோடசாந்த ஸ்தலமென்றும் உலகமாகிய புருஷனுக்குத் துரியாதீத ஸ்தானமென்றும் காரணஸ்தலமென்றும் இதனைக் கூறுவர். [பக. எ௨. பா அ, கூ]

இத்தலத்தைக்குறித்த தேவாரமுதலியவைகள் வருமாறு:—

## தேவாரம்.

பெருந்துறை

திருச்சிற்றம்பலம்.

கயிலாயமலையெடுத்தான்கரங்களோடு
சிரங்களுரநெரியக்கால்விரலாற்செற்றோன்
பயிலாயபராய்த்துறைதென்பாலைத்துறை
பண்டெழுவர்தவத்துறைவெண்டுறைபைம்பொழிற்
குயிலாலந்துறைசோற்றுத்துறைபூந்துறை
பெருந்துறையுங்குரங்காடுதுறையினோடு
மயிலாடுதுறைகடம்பந்துறையாவடு
துறைமற்றுந்துறையனைத்தும்வணங்குவோமே
(அடைவு திருத்தாண்டகம், கக.)

ஆரூர்மூலட்டானமானைக்காவு
மாக்கூரிற்றான்றோன்றிமாடமாவூர்
பேரூர்பிரமபுரம்பேராவூரும்
பெருந்துறைகாம்பீலிபிடவூர்பேணுங்
கூரார்குறுக்கைவீரட்டானமுங்
கோட்டூர்குடமூக்குக்கோழம்பமுங்
காரார்கழுக்குன்றுங்கானப்பேருங்
கயிலாயநாதனையேகாணலாமே
(க்ஷேத்திரக்கோவைத்திருத்தாண்டகம், உ.)

## ஸ்ரீ திகைலாஸம்.

திருச்சிற்றம்பலம்.

ஆர்த்தவெனக்கன்பனீயேயென்று
"மாதிக்கயிலாயனீயேயென்றுங்
கூத்தநடமாடிநீயேயென்றுங்
கோடிகாமேயகுழகாவென்றும்
பாரத்தற்கருளசெய்தாயநீயேயென்றும்
பழையனூர்மேவியபண்பாவென்றுந்
தீர்த்தன்சிவலோகனீயேயென்று
நின்றநெய்த்தானாவென்னெஞ்சுளாயே

அல்லாயப்பகலானாயநீயேயென்று
மாதிக்கயிலாயனீயேயென்றுங்
கல்லாலமர்ந்தாயுநீயேயென்றுங்
காளத்திக்கற்பகமுநீயேயென்றுஞ்
சொல்லாயப்பொருளானாயநீயேயென்றுஞ்
சோற்றுத்துறையுறைவாயநீயேயென்றுஞ்
செல்வாயத்திருவானாயநீயேயென்று
நின்றநெய்த்தானாவென்னெஞ்சுளாயே
[திருநெய்த்தானம், ௨, ௩.]

## திருவாசகம்.

" திருவார்பெருந்துறைச்செல்வனாகிக்
கருவார்சோதியிற்கரந்தகள்ளமும்" [கீர்த்தி. ௫௪ - ௫.]

## திருச்சிற்றம்பலக்கோவையார், ௧௦௪.

"உருகு தலைச்சென்ற வுள்ளத்து மம்பலத் துமமொழியே
பெருகு தலைச்சென்று நின்றேன் பெருந்துறை"

## திருப்புகழ்.

செருக்குமம்பல மிசைதனி லசைவுற
நடித்தசங்கரா வழிவழி யடியவா
திருக்குருந்தடி யருளபெற வருளியகுருநாதா.
[திருப்பரங்குன்றம், ங.]

திருவாசகத்தில் இந்தஸ்தலமும் குருந்தவிருக்ஷமும் அங்கங்கே மிகப் பாராட்டப்பெற்றுள்ளனவென்பதும் சிவபுராணம், திருச்சதகம், திருப்பள்ளியெழுச்சி, செத்திலாப்பத்து, அடைக்கலப்பத்து, ஆசைப்பத்து, அதிசயப்பத்து, புணர்ச்சிப்பத்து, வாழாப்பத்து, அருட்பத்து, பிரார்த்தனைப்பத்து, குழைத்தபத்து, உயிருண்ணிப்

பத்து, திருப்பாண்டிப்பதிகம், திருவேசறவு, அற்புதப்பத்து, சென்னிப்பத்து, திருவார்த்தை, திருவெண்பா, பண்டாய நான்மறையென்னும் திருவாசகப்பகுதிகள் இத்தலத்திலிருந்தே அருளிச்செய்யப்பெற்றனவென்பதும் யாவருக்குந் தெரிந்தனவேயாம்.

இதன் பழைய வரலாற்றைத் தெரிவிக்கும் புராணங்கள் வடமொழியில் ஸ்ரீ ஆதிகைலாஸ மாஹாத்மியம், பிருஹந்தீர்த்த மாஹாத்மியம், அஷ்டாதசியாயீ என மூன்றுள்ளன என்பர்.

தமிழில் இப்புராணத்தையன்றி இத்தலசம்பந்தமாக வேறே பழையனவாக மூன்று புராணங்களும், திருப்பெருந்துறை யமகவந்தாதி, சிவயோகநாயகி பிள்ளைத்தமிழ் என இரண்டு பிரபந்தங்களும் உள்ளன. அவற்றுள்:—

முதலாவது திருப்பெருந்துறைப் புராணம்: இது திருக்கைலாயப் பரம்பரைத் திருவாவடுதுறை ஆதீனத்துப் பத்தாம் பட்டத்தில் எழுந்தருளியிருந்த ஸ்ரீ முனைவேலப்பதேசிகருடைய சிஷ்யராகிய ஸ்ரீ சாஸ்திரம் சாமிநாத முனிவரென்பவரால் இயற்றப்பெற்றது. இதிலுள்ள சருக்கங்கள், ௩௩; செய்யுட்களின் தொகை, ௧௨௭0. இந்நூல், தஞ்சாவூரில் முன்பு அரசு செலுத்திவந்த துளஜேந்திர மஹாராஜா அவர்கள் விருப்பத்தின்படி செய்யப்பெற்றதென்பதும் ஷை சாமிநாத முனிவரால் திருப்பெருந்துறைக்கலம்பகமென ஒருபிரபந்தம் இப்புராணம் இயற்றுமுன் இயற்றப்பெற்றதென்பதும் இதன்பாயிரத்தால் தெரிகின்றன. இக்கலம்பகம் இப்பொழுது கிடைக்கவில்லை. ௨௯00 - பாடலுள்ள திருவாவடுதுறைப்புராணமொன்றும் இவரால் செய்யப்பெற்றுள்ளது. அந்நூல் செய்தது, இதற்கு முந்தியோ பிந்தியோ யாதும் தெரிந்திலது.

இரண்டாவது ஆதிகைலாய மான்மியம்: இது, ஷை ஆதீனத்தில் ௧௨-ஆம் பட்டத்தில் எழுந்தருளியிருந்த திருச்சிற்றம்பலதேசிகருடைய சிஷ்யராகிய ஸ்ரீ சுந்தரலிங்க முனிவரால் இயற்றப்பெற்றது. இது, "திருவளரும் பெருந்துறையை மான்மியத்தைச் செந்தமிழாற் றிசைகள் போற்ற, வருளுதவு துறைசையில்வாழ் திருச்சிற்றம்பலக் குருவின் அடிமை போலாய், பெருவியஞா னப்பொருள்சேர் கல்வியினற் றெல்லையுணர் மதுர வாக்கி, இருநிலத்தோர்க் கமுதெனச்சுந் தரலிங்க முனிவன்று ணிபுமொழி ஞனே." என்னும் ஷை நூற் சிறப்புப் பாயிரத்தால் விளங்கும். இதிலுள்ள சருக்கங்கள் ௫௯. செய்யுட்களின் தொகை, ௨0௮0.

மூன்றாவது திருப்பெருந்துறைப் புராணம்: இஃது எட்டு அத்தியாயங்களையுடையது. இதிலுள்ள செய்யுட்கள் ௮௱ இது செய்யப்பட்ட காலம் சகாப்தம் ௧௫௱ என்பதுமட்டும் இதன்பாயிரத்தால் தெரிகின்றதேயன்றி வேறொன்றும் தெரிந்திலது.

இந்தத்திருப்பெருந்துறைப்புராணம் ௸ ஆதீனத்து மஹாவித்துவானாகிய திரிசிரபுரம் ஸ்ரீ மீனாட்சிசுந்தரம்பிள்ளையவர்களால் இயற்றப்பெற்றது [பக். ௯.]

இப்புராணத்தில், முதலில் ௨௬ - செய்யுட்களடங்கிய கடவுள் வாழ்த்தும் அவையடக்கமும் சிறப்புப்பாயிரமும் பின்னர், திருநாட்டுப்படலம் முதலிய ௩௨-படல உறுப்புக்களும் அமைந்துள்ளன. இதன் செய்யுட்டொகை, ௧௩௫௯.

இந்நூலை ஆக்குவித்தவர் ௸ ஆதீனத்துச் சிஷ்யருள் அக்காலத்துத் திருப்பெருந்துறைக் கட்டளைப்பணிபுரிந்து வந்தவருமாகிய ஸ்ரீசுப்பிரமணியமுனிவரென்பவர். இவருடைய பெருமை முதலியன இந்நூல் அவையடக்கத்தின் முதலிலுள்ள இரண்டு செய்யுட்களாலும் இப்புத்தகம் ௨௧௯-ஆம் பக்கத்திலுள்ள "வாதவூரடிகளுக்கு" என்னும் பாட்டாலும் நன்குவிளங்கும்.

நூலாசிரியர் பெயரைக்கேட்கவே இப்புராணத்தின் அருமை பெருமைகள் யாவருக்கும் சொல்லாமலே விளங்கும். ஆயினும் முக்கியமாகத் தெரிவிக்கவேண்டியவை சில உள. அவையாவன: ஆக்குவித்தோர், "நாட்டுச்சிறப்பு முதலியவற்றை வளம்பெற நீங்கள் அமைத்து, சாஸ்திரம் சாரநாதமுனிவர் இயற்றியபுராணத்தின் சொன்னடை பொருணடைகள் முதலியவற்றைப் பெரும்பாலும் தழுவியே இதனை இயற்றுக" என்றமையினால் இந்நூல் அங்ஙனமே இயற்றப் பெற்றதென்பதும் பலபுராணங்களை இயற்றிப்பின்பே பிள்ளையவர்கள் இந்நூலை இயற்றினாராதலின், இதிலுள்ளபலவகையான சுவைகளும் அறிஞர்கள் அறிந்து இன்புறற்பாலனவென்பதுமே. முன்னொருகாலத்தில் இதிலுள்ள திருவாதவூரடிகளின் சரித்திரப்பகுதிகளுள் ஒன்றை யான்படித்துக்கொண்டிருக்கையில் உடனிருந்த தமிழ்க்கவிஞர் ஒருவர் இதன்செய்யுட்களைப் பெரியபுராணச்செய்யுட்களென்றே எண்ணிப்பாராட்டிப் பின்பு தெரிந்து வியந்தனர்.

இப்புராணஸம்பந்தமாக மற்றும் தெரிவிக்கவேண்டியவற்றையெல்லாம் திருப்பெருந்துறைப்புராண ஆராய்ச்சியென ஒன்றுஎழுதி அதனைத் தனியே பின்னர் வெளியிடக் கருதியிருக்கிறேன்.

## ஸ்தலவிநாயகர்களும் மற்றவிநாயகர்களும்.

(௧.) ஆதபகணபதி அல்லது வெயிலுவந்த விநாயகர். இவர் கனகசபைக்குமேற்கே அக்கினிதீர்த்தத்தின் தென்கரையில் எழுந்தருளியுள்ளார்; திருமேனியில் வெயில்படுவதே இவர் திருவுள்ளத்திற்கு உவப்பு; அதனால் இவருக்குக் கோயில்முதலியவற்றுள் யாதொன்றுமில்லை. ஆதவப்பிரியர் எனவும் நிழலுவவாக்குஞ்சர மெனவும் இவர் பெயர் வழங்கும் [ப. ௯, பா. ௨; ப. ௬௮, பா. ௬; ப. ௭௮, பா. ௨௩; பா. ௯௮, பா. ௬௨; ப. ௧௦௦, பா. ௫௬, ப. ௧௦௬, பா. ௧௫; ப. ௧௧௧, பா. ௬; ப. ௪௫, பா. ௫௩; ப. ௨௧௩, பா. ௩௫]

(௨.) சோக்க விநாயகர்: கோயிலின் உட்பிராகாரத்தில் தென்மேற்கு மூலையில் இவர் திருவுருவமுள்ளது, ப. ௧, பா. ௩; ப. ௨௧, பா. ௩௭.

(௩.) ஸம்ஸாக்க விநாயகர்: இறைவனை மணஞ்செய்து கொள்ளுதற்பொருட்டு யாகஞ்செய்பவர்க்கு அடப்பிள்ளையாராய்ப் பூசிக்கப்பெற்றவராதலின், இவர் இப்பெயர் பெற்றார். சோக்கவிநாயகரெனவும் இவர்பெயர் வழங்கும்; இவர் நிருதிமூலையிலுள்ளார். சொக்கவிநாயகரையும் இவரையும் ஒருவரேயென்று கூறுவதுமுண்டு.

(௪.) பள்ளிக்கூடப்பிள்ளையார்: அந்தணர் முந்நூற்றறுவருடைய பிள்ளைகளுக்கு வேதாத்தியயனம் செய்வித்தற்கு வயோதிகப் பிராமணவடிவங்கொண்டுவந்த ஆளுடைய நாயகராற் பூசிக்கப்பெற்றவர் இவர்.

(௫.) சக்திகணபதி = வல்லபகணபதி: இவர், தேவதீர்த்தத்தின் வடகரையிற் கோயில்கொண் டெழுந்தருளியிருப்பவர்.

(௬.) முக்திவிநாயகர்: தியாகராஜமண்டபத்தில் ஸ்ரீமஹாலிங்கமூர்த்திக்கு எதிரே யெழுந்தருளியிருப்பவர் இவர்.

(௭.) ஆகண்டல விநாயகர்: இந்திரதீர்த்தத்தின் மேலகரையிலுள்ளவர் இவர். (மடத்து முகப்பின் கீழ்ப்பக்கம்.)

ஸ்வாமியின் திருநாமங்கள்: அசவநாதர், ஆதிகைலாஸநாதர், ஆத்மநாதர், உபதேசஸ்தலநாயகர், உபாத்தியாயர், குருந்தவனேசர், ஜகத்குரு, சதுர்வேதபுரேசர், சிவபுரேசர், ஞானமோக்ஷத்திரேசர், தக்ஷிணகைலாஸநாதர், திரிமூர்த்திதேசிகர், திரிமூர்த்திபுரவாஸர்,

தேசுவனேசர், பரமஸ்வாமி, பராசக்திபுரவாஸர், பவித்திரமாணிக்க புரவாஸர், பெருந்துறைநாதர், மூன்றூற்றொருவர், (மூன்றூற்றுவரில் ஒருவர்), யோகபீடப்பதியினர், யோகவனேசர், ஆவுடையார், ஆளுடையார், விப்பிரநாதரென்பன; ஆளுடைய பரமஸ்வாமியென்னும் பெயர், இத்தலத்திற்குரிய தாம்பிரப்பட்டயம் முதலியவற்றிற்காணப்படும்.

அம்பிகையின் திருநாமங்கள்: சிவயோகாம்பிகை, சிவயோகநாயகி, சிவயோகம் பிரியாள், யோகம் பிரியாள், யோகநாயகி, ஆளுடைநாயகி, ஆளுடையாள் என்பன; இவற்றை இந்நூல் யோகபீடச்சிறப்புரைத்தபடல முதலியவற்றாலும் சிவயோக நாயகியினைத் தமிழாலுமுணர்க.

## பீடங்கள் உ.

(க) பிரணவபீடம்: இது ஸ்வாமியின்பீடம். பக். ௯க, பா. உ.

(உ) யோகபீடம் உலகத்திலுள்ள சக்திபீடங்கள், ௫0; அவற்றுள் சகூ - காரியபீடங்கள்; இஃது ஒன்றே காரணபீடம். பக். எக, பா. ௩; பக். எகூ, பா ரு - எ.

ஸ்தல விருக்ஷம்: குருந்து; பரமாசாரியராகிய குருமூர்த்தி இதனடியில் தென்முகமாக எழுந்தருளியிருக்கின்றனர்; பிரமதேவர் முதலியோரும் திருவாதவூரடிகளும் உபதேசம்பெற்றது இவ்விடத்தேதான். இந்த விருக்ஷம் சிவரூபமென்று நூல்களிற் பாராட்டப்பெறும். "குருந்தவன் காண்" என்னும் தேவாரமும் இதனை வலியுறுத்தும்.

ஆறு: இந்த ஸ்தலத்திற்குரிய நதி, வெள்ளாறு. இது சுவேதநதியென்று வடநூல்களுள் வழங்கும். இந்நூலுள் வெண்குடிநை, வெள்ளைநதி, சிதநதி எனக்கூறப்பெறும், [ப. எ, பா. ச; ப. உகூ, பா. எ; ப. உச, பா. கரு,] இதற்கு ஆனந்தவெள்ளாறென்று ஒரு பெயருண்டென்றும் திருவாசகத்துள்ள தசாங்கத்தில், "ஆனந்தங் காணுடையானாறு" எனச்சுட்டியது இந்நதியையேயென்றும் இத்தலத் தமிழ்ப்புராணமுடையாரொருவர் வெளியிட்டிருக்கின்றனர். "வெள்ளாற்றை, ஆனந்தம் பாலிப் பார்தோய்ந் தானந்த மெய்தலாலே, ஆனந்த வெள்ளா றென்று மறைந்துவ ரறிந்தனரோ" என்றார், இந்நூலுடையாரும்; பக். எ0, பா. உரு.

## [நவதீர்த்தங்கள்.]

மற்றத் தீர்த்தங்கள் : இறைவன் அருளால் இந்தஸ்தலத்தில் முன்னொருகாலத்தில் ௯௯ கோடி தீர்த்தங்கள் உண்டாயினவாதலின், பிருகத்தீர்த்தமென வடமொழியிலும் பெருந்துறையெனத் தமிழிலும் இத்தலம் பெயர்பெற்றதென நூல்கள் கூறினும் இந்தப்புராணத்திற் கூறப்படும் தீர்த்தங்கள் ஒன்பதே. இவை ஸ்ரீ ஆத்மநாதப் பெருமானுடைய நவதீர்த்தங்களாகப் பாராட்டப் பெற்றுள்ளன; [பக். ௮௬, பா. ௨.] அவையாவன: பிரமதீர்த்தம் பிரஹ்மா, நாராயணதீர்த்தம் திருமால், உருத்திரதீர்த்தம் உருத்திரர், வாயுதீர்த்தம் மகேசுவரர், அசுரதீர்த்தம் சதாசிவம், தேவதீர்த்தம் நாதம், முனிவர்தீர்த்தம் விந்து, அக்கினிதீர்த்தம் சக்தி, ஆத்மகூபம் சிவம் என்பன. அவற்றுள்,

(௧.) பிரமதீர்த்தம், அக்கினிதீர்த்தத்திற்கு மேற்கேயுள்ளது; இதன்கரையில் பிரஹ்மபீடமிருக்கின்றது; முதலியப்பர் என்னும் ஒரு தெய்வத்தின்சந்நிதி இதன்கரையிலுள்ளது. இது, வேததீர்த்தமெனவும் வழங்கும்.

(௨.) நாராயணதீர்த்தம், திருமாலாலுண்டாக்கப் பெற்றது; பள்ளிக்கூடப் பிள்ளையார் கோயிலுக்கு மேல்பாலுள்ளது; இதன் வடகரையில் ஸ்ரீ ஆதிகேசவப்பெருமாள் எழுந்தருளியிருக்கின்றனர்; இது தொண்டாகுழியெனவழங்கும். [பக் ௧௧௩, பா. ௧௫.]

(௩.) உருத்திரதீர்த்தம், காலாக்கினி ருத்திரரால் உண்டாக்கப் பெற்றது; இது காலாக்கினி ருத்திரதீர்த்தமெனவும் சிவகங்கையெனவும் வழங்கும்; இது, வடகூரில் (வடக்குளூரா) ஆதிகைலாஸநாத ஸ்வாமிகோயிலின் வடக்கேயுள்ளது. [பக். ௧௧௫, பா. ௨௩.]

(௪.) வாயுதீர்த்தம், திருக்கோயிலுக்கு வாயுமூலையிலுள்ளது; வாயுதேவனாலுண்டாக்கப்பெற்றது. [பக். ௮௯, பா. ௪௭.]

(௫.) அசுரதீர்த்தம், ஸ்ரீ ஆத்மநாதர் உபாத்தியாயராக எழுந்தருளிய பள்ளிக்கூடத்திற்கு மேற்கேயுள்ளது; அசுரர்களால் உண்டாக்கப்பெற்றது. [பக். ௮௯.]

(௬.) தேவதீர்த்தம், ஸ்வாமி ஸந்நிதியிலுள்ளது; தேவர்கள் இடைவிடாமல் ஆடி இஷ்டசித்திகளைப்பெற்றுச் செல்லுதலின், இஃது இப்பெயர்பெற்றது. இதற்குரிய விருக்ஷம் கருநெல்லி; இத்தீர்த்தம் நெல்லியடியெனவழங்கும். [பக். ௮௭.]

(எ.) ஸ்ரீசிவர்தீர்த்தம், வடக்குவீதிக்குச் சமீபமாக உள்ளது; அகத்தியரால் உண்டாக்கப்பெற்றது. [பக் அஅ.]

(அ.) அக்கினிதீர்த்தம், திருக்கோயிலினுள் வெளிப்பிராகாரத்தில் தென்கிழக்கில் உள்ளது. [பக். அச.]

(௯.) ஆத்மகூபம், முதற்பிராகாரத்தில் குருந்தமூலத்தின் கிழக்கேயுள்ளது. ஸ்ரீ ஆத்மநாதருக்கு அபிஷேகஞ்செய்தற்பொருட்டுச் சிவயோகாம்பிகையால் இது நிருமிக்கப்பெற்றது. [பக் அச.]

இவற்றுள், ஆத்மகூபமும் அக்கினிதீர்த்தமும் திருக்கோயிலின் அகத்தும் மற்ற ஏழும் புறத்துமுள்ளன; [பக். ௧௭௯, பா. ௩.] ஆத்மகூபமல்லாதவை தடாகவடிவங்களாகவுள்ளன.

இவற்றையன்றி, இத்தலத்தில், மானவதீர்த்தம், காந்தாவதீர்த்தம், இந்திரதீர்த்தம், பராசரதீர்த்தம், சூரியதீர்த்தம், சந்திரதீர்த்தம், லக்ஷ்மிதீர்த்தம், ஸரஸ்வதிதீர்த்தம், பாண்டவதீர்த்தம், கௌதமதீர்த்தம், பக்ததீர்த்தம், வேததீர்த்தம் எனப் பலதீர்த்தங்கள், வாபீகூபதடாகவடிவங்களாக உள்ளனவென்று ஸ்ரீ ஆதிகைலாஸமாஹாத்மியம் விளங்கத்தெரிவிக்கின்றது. மொய்யார்தடம்பொய்கை யென இத்தலத்தில் ஒருவிசேடதீர்த்தம் உண்டெனவும் தெரிகின்றது; "மொய்யார் தடம்பொய்கை புகுது முகேரென்னக் கையாற்குடைந்து" (திருவாச. திருவெம். ௧௧), "திரைபொரு மொய்யார் பொய்கைத் திருப்பெருந் துறையைச் சேர்ந்தார்" [திருவால (உஎ) ௩௩], "மொய்யார்தடம்புக்கு" (சிவயோக. அம்புலி. ௪) என்பவற்றால் இஃது அறியலாகும்.

## தெய்வங்கள்.

ஸ்ரீ ஆதிகைலாஸநாதர்: இவர் காலாக்கினிருத்திரரால் பூசிக்கப்பெற்றவர். இவர் திருக்கோயில், வடக்கூரிலுள்ளது. தீர்த்தம் சிவகங்கை. விருக்ஷம் மகிழ்.

ஸ்ரீஅசுவாரூடர்—இவர் கனகஸபையில் தென்முகமாக எழுந்தருளியுள்ளார்.

## ஸ்ரீ மாணிக்கவாசகர் திருவுருவங்கள்.

மாணிக்கவாசகருடைய திருவுருவங்கள் இத்திருக்கோயிலின் அகத்தும் புறத்தும் பல அமைக்கப்பெற்றுள்ளன; அவற்றுள், குருந்தமூலத்துள்ள திருவுருவம், அருண்மூலஸ்தானமென்றும்

ஸ்ரீ மாணிக்கவாசகர் மண்டபத்துள்ளது திருமூலஸ்தானமென்றும் வழங்கப்பெறும்.

மஹாலிங்கம்: இவர் பெரிய பிராகாரத்தில் தியாகராஜ மண்டபத்தின் மேற்கே திருமதிலில் ஆகாயவடிவமாக இருந்து, வழிபடப் பெற்று விளங்குகிறார்; கணநாதரென்றும் இவர்க்குப் பெயருண்டு. இவரை முன்சுவரரென்றும் முதலியப்பரென்றும் கூறுவது உண்டு. அடியிற்குறிப்பிட்ட ஒன்பது இடங்களில் கூ - கூறுகளாகத் தங்கி இத்தலத்தைப் பாதுகாக்கின்றனரென்பர்:

க. இத்தலத்தின் மேற்குக் கோவாய்க்கரை. (முதலியப்பர்)
உ. திருவீதியில் தென்மேற்குமூலை
ரு. மாரியம்மை கோயில்
ச. பனைவயல் (கிராமக்) கடவாய்க்கரை
ரு. புன்னைவயல் (கிராமக்) கடவாய்க்கரை
சூ. காரவயல் (கிராமக்) கடவாய்க்கரை
எ. பழந்தாமரைக் (கிராமக்) கடவாய்க்கரை.
அ. கருங்காட்டில் (ஒரு கிராமம்) ஐயனார் கோயில்
கூ. ... .. ... . ..

ஸ்ரீ ஆதிகேசவப்பெருமாள்: இவர் நாராயண தீர்த்தத்தின் வடகரையிலுள்ளார்.

முந்நூற்றுவர்: இவர்கள் ஸ்ரீ ஆத்மநாதரைப் பூசிக்கும் பெருமை வாய்ந்தவர்கள்; தில்லைவாழ்ந்தணர்களைப் போன்று சிவபெருமானைத் தம்முள் ஒருவராகப்பெற்று, நூல்களில் துதிக்கப்படும் மேன்மை பெற்றவர்கள். [பக் ச:] இவர்களுடைய பிள்ளைகளுக்கு வேதாத்தியயனம் செய்வித்தற்பொருட்டே ஸ்ரீ ஆத்மநாதர் விருத்தப்பிராமண வடிவங்கொண்டு எழுந்தருளிப் பாடசாலையைத் தோக் கற்பித்தருளினர். ஷை பாடசாலையிருந்த மண்டபமொன்று (பள்ளிக்கூடம்) இன்றும் காணப்படுகின்றது.

## ஸ பை க ள்.

இத்திருக்கோயிலிலுள்ள ஸபைகள், ௬; அவைவருமாறு:—

(க.) ஆனந்தஸபை: இது கர்ப்பக்கிருகம்.

(உ.) சித்ஸபை: இது அர்த்தமண்டபம்.

(௩.) ஸத்ஸபை: இது, நிவேதனமண்டபம்; அமுது மண்டபமெனவும் வழங்கும்.

(௪.) தேவஸபை: இது யாவரும்நின்று தரிசனமபண்ணுகிற இடம்; ஸ்ரீ மாணிக்கவாசகரைத் திருவிழாக்காலத்தில் எழுந்தருளச் செய்யும ஸ்தானம இதுவே. சுந்தரபாண்டியரென்பவரால் திருப்பணி செய்யப்பெற்றமையின், இது சுந்தரபாண்டிய மண்டபமென்றும பெயர்பெறும். இதனை, "மேயவங்குரமாம" [பக். கஅக, பா. ருஅ.] என்னும செய்யுளாலுமுணர்க.

ரு நிருத்தஸபை; இது உ-ஆம பிராகாரத்திலுள்ள சந்நிதிமண்டபம. தில்லைமண்டபமெனறும இது கூறபபடும. முன்னொரு காலத்தில ஸ்வாமி சோழபாணடியாகளுககுச சபாபதியாகக் காடசிகொடுததமையின், இஃது இபபெயாபெறறது. இதில் பதஞ்சலிவியாக்கிரபாதர்களின் திருவுருவஙகளும சநகநிதி பதமநிதிகளின வடிவங்களுமுண்டு.

௬. கனகஸபை: இது ௩-ஆம பிராகாரததுளள சநநிதிமண்டபம். இதில அசுவாரூடமூாததி எழுநதருளியிருக்கினறமையின, இது குதிரைஸ்வாமி மண்டபமெனவும வழஙகும. ஜபிடபவாகளுக்குப பஞசாக்ஷரஜபஸித்தியைத தருதலபறறி, இது பஞசாக்ஷரமண்டபமென்றும கூறபபடும. இமமணடபததில் பாககறகளில ஆறு அததுவாக்கள் முறையாகச செவவனே செய்விக்கபபெறறுள்ளன. இம்மண்டபம, கலி ௩௭00-ல இயறறபபெறறதெனை இதிலுள்ள சாஸனமொன்று தெரிவிககினறது.

## மண்டபங்கள்.

க. மாணிககவாசகா மண்டபம: இது கோபுரததிறகு வெளியேயுள்ளது.

உ. சுந்தரபாண்டியமண்டபம்: இது முதறபிராகாரத்துள்ள ஸந்நிதிமண்டபம்; இப்புஸ்தகம கஅக-ஆம் பக்கததிலுள்ள ருஅ-ஆம் பாட்டைப்பாாக்க. இது தேவஸபையெனறும வழங்கபபெறும.

௩. தில்லைமண்டபம்: இது நிருத்தசபை.

௪. தியாகராஜமண்டபம்: இது மூன்றும் பிராகாரததில் மேல் பக்கத்துள்ளது.

## தீபங்கள்.

இந்தத் திருக்கோயிலில் இடப்படும் தீபவகைகள் விசேடப் பெயர்பெற்று விளங்குகின்றன. அவற்றுள்,

க. நக்ஷத்திரமாலை: இதிலுள்ள தீபங்கள் இருபத்தேழு: சக்கரத்தில் உச, மேலே ௩. இஃது, ஆனந்தஸபையில் மூலஸ்தானத்திற்குப் பின்னேயுள்ளது.

உ. கலாதீபம்: இதிலுள்ள தீபங்கள்-ரு; இது சித்ஸபையிலுள்ளது. (கலை, ரு)

௩. வாணதீபம்: இதிலுள்ள தீபங்கள் ருக, இது ஸத்ஸபையிலுள்ளது. வாணம்-அக்ஷரம்.

ச. தத்துவதீபம்: இதிலுள்ள தீபங்கள் ௩சு, இது தேவஸபையிலுள்ளது. தத்துவம், ௩சு.

ரு. புவனதீபம்: இதிலுள்ள தீபங்கள்-உஉச. இது தேவஸபையில் தத்துவதீபத்திற்கு முன்னேயுள்ளது. இதனைத் தீபமாலை யென்றுங் கூறுவர். புவனம், உஉச.

சு. பததீபம்: இதிலுள்ள தீபங்கள் அக; இது குதிரைச் சேவகர்க்குப்பின் உள்ளது. பதம், அக.

ஸ்ரீ ஆத்மநாதருடைய திவ்யலீலைகளையும் ஸ்ரீவாதபுரீசர் உபதேசம் பெற்றமையையும் புலப்படுத்துவனவான ஊர்களும் இடங்களும் வேறு ஆதாரங்களும் பலவுள்ளன. அவற்றுள்,

### ஊர்கள்.

ஆளுடையார்பட்டினம்: இது கீழ்கடற்கரையில் உள்ளதோர் ஊர். பண்டைக்காலத்தில் இது பெரியதொரு துறைமுகமாக இருந்ததாம்.

பரிவீரமங்கலம்: ஸ்ரீ ஆளுடைநாதர் முதலில் குதிரைவீரராகத் தோன்றியருளிய இடம். இது, திருப்பெருந்துறைக்குத் தென்கிழக்கே உள்ளது.

நரிக்குடி: இப்பெயர் உள்ள ஊர்கள் மூன்று. ஒன்று இவ்வூர்க்குத் தெற்கே உ-நாழிகைவழித் தூரத்திலும், மற்றொன்று மேற்கே ௩-நாழிகைவழித் தூரத்திலும், வேறொன்று மிழலைநாட்டிலும் உள்ளன. இவை, ஸ்ரீ ஆளுடையநாயகர் நரிகளைக் குதிரைகளாக்கிய

இடங்களென்பர். ஈற்றிலுள்ள நரிக்குடி, "மிழலைநாட்டு நரியெல்லா மழைத்துத் தெருட்டி விளையாட வவனிமீது நனிவிளங்கத, தழைத்த தலத்தை நரிக்குடியென் றின்னுஞ் சொல்வர் சான்றோரே" எனத் திருவாலவாயுடையார் திருவிளையாடற் புராணத்துக் கூறப்பெற்றுள்ளது. [பக். அக, பா. கக]

எழுநூற்றுமங்கலம்: இவ்வூர் இத்தலத்திற்குத் தெற்கே உ-நாழிகை வழித்தூரத்திலுள்ளது; இஃது, எ௦௦-நரிகளை ஸ்ரீ ஆத்மநாதர் குதிரைகளாகச் செய்வித்த இடமென்பர.

பாண்டிபாத்திரம்: இது, கோயிலுக்குரிய கிராமங்களுள் ஒன்று.

சிறுமருதூர்: இஃது இத்தலத்திற்குக் கிழக்கே உ-நாழிகை வழித்தூரத்திலுள்ளது; ஆத்மநாதரை வழிபட்ட ஸ்ரீ அகத்திய முனிவர் பிரதிஷ்டித்துப் பூசித்த சிவஸ்தலமொன்று இவ்வூரிலிருக்கின்றது; வெள்ளாற்றின் வடகரையிலுள்ளது இதில் அகஸ்திய தீர்த்தமென ஒரு தீர்த்தமுமுண்டு

ஆத்மநாதபுரம்: இத்தலத்திற்குத் தெற்கே ஒன்றரை நாழிகை வழித்தூரத்திலுள்ளது

திருச்சிற்றம்பலம்: இஃது இத்தலத்தின் வடக்கேயுள்ளதொரு சிவஸ்தலம்; ஒட்டங்காட்டிற்கு அருகிலுள்ளது

சின்னஆளுடையார்கோயில்: இஃது இத்தலத்திற்கு வடக்கே ராஜாமடத்திற்குத் தென்புறத்திலுள்ளதொரு சிவஸ்தலம்; ஸ்வாமி திருநாமம் ஸ்ரீ ஆளுடையார் அல்லது ஆவுடையார் அம்பிகை திருநாமம் சிவயோகாம்பிகை இதற்கு வடக்கே அக்கினியாறென்று பெயருள்ள ஒரு நதியுண்டு

## இடங்கள்.

முந்நூற்றொருவர்நந்தவனம். இது வெள்ளாற்றின் தென்கரையில் உருத்திரதீர்த்தத்தின் வடகரையிலுள்ளதொரு நந்தவனம்; மிகப்பழமையானது அந்தணர் முந்நூற்றுவர்க்குப் பண்டைக்காலத்திற் கொடுக்கப்பெற்றிருந்த நிலங்களுள், இது ஸ்ரீ ஆத்மநாதஸ்வாமியின் பாகநிலமென்று சொல்லப்படும்.

மாவிடுதுறை: இஃது ஒருவயல் இவ்வூரிற் கிழக்கேயுள்ளது.

சேணம்பரிமா: இஃது ஒருவயல்; ஊருக்குக்கிழக்கேயுள்ளது.

மாணிக்கவாசகர்தோப்பு: இது, முதலில் மாணிக்கவாசகர் தங்கியவிடமெனக் கூறப்படும்.

கீழ்நீர்காட்டி: இது கைலாஸநாதஸ்வாமி கோயிலுக்குக் கிழக்கேயுள்ளதோரிடம். முந்நூற்றுவருடைய நிலங்களைத் தன்னுடையதென்றும் எவ்வளவு ஆழம் வெட்டினாலும் தண்ணீர் ஊறாதென்றும் வல்வழக்குப்பேசிய ஒருவன் கொள்கையை மறுத்து, முந்நூற்றுவருள் ஒருவராக எழுந்தருளிய ஸ்ரீ ஆத்மநாதர், "இந்த நிலங்களுள் எங்கே வெட்டினாலும் உடனே தண்ணீர் ஊறும்" என்று சொல்லிப் பாண்டியனுக்கு முன்னே வெட்டுவிக்க, உடனே நீரைக்காட்டிய இடம்; இவ்வரலாற்றை, இந்நூற் பெருந்துறைப் படலத்தா லுணர்க. இது, "பொருந்து நிலனை வணங்கடந்து போந்து வேந்தற் சேர்ந்தருளின், வருந்த வுடலந் தனிவிருந்த மறையோ ரகிய மறையோர்கட், கிரங்கியருங்கீழ் நீர்காட்டிய பிரான்கனை மீட்ட பெருமானே, குருந்த் வாயிற் காந்தமறைத் கொழுந்தே செழும்பொற் றாளே போற்றி" (திருவால ஞானை க௯) என்னும் பாடலாலும் விளங்குகின்றது.

இன்னும் இந்த ஸ்தலத்திலும் இதைச் சூழ்ந்துள்ள ஊர்களிலும் உள்ள வயல்களிற் பின்னே வரைப்பெற்ற பெயர்களுள்ளவை மிக அதிகமாக இருக்கின்றன.

| | | | |
|---|---|---|---|
| ௧ | ஆவுடையான். | ௬. | பாண்டியபெரியான். |
| ௨ | குருந்தடி | ௭ | பெருந்துறை. |
| ௩. | சிற்றம்பலவன் | ௮. | மாணிக்கவாசகன் |
| ௪ | சுந்தரபாண்டியன் | ௯. | முந்நூற்றொருவன். |
| ௫ | சொக்கன். | ௧௦. | யோகநாயகி |

பள்ளிக்கூடம்: இது திருப்பெருந்துறையிலிருந்து வடக்கூருக்குப்போகும் மார்க்கத்திற்குக் கிழக்கேயுள்ள ஒருமண்டபம். முந்நூற்றுவர்களுடைய பிள்ளைகளுக்கு ஸ்ரீ ஆத்மநாதர் உபாத்தியாயராகத் தோன்றி வேதம் ஓதுவித்த இடம் இது. இதில் அவ்வுபாத்தியாயவடிவமும் பிள்ளைகளின் வடிவங்களும் சிலாரூபமாக அமைந்துள்ளன. "அங்கணருபாத்தியாயராய் மாகழக மாகத் தங்கியவாங் கோதானம்" என்பர் இந்நூலுடையாரும் [பக. ௮௯, பா. ௪௫,] 'ஆளுடைய பரமஸ்வாமியார் பள்ளிக்கூடம்' எனத் தாம்பிரப்பட்டயங்களிலும் இது சுட்டப்படுகின்றது.

இத்தலத்திற்குரிய மஹாராஷ்ட்ரசிகாக்கள்தோறும் முதலில்,

ஆநந்தபாதஹ்ருஹஸ்ரீஸ்வாமி தகஸ்ரீவேதாமஹேஸாவநீ
பொமாயிஷிதவாக்தீஷகாணீ க்ஷாமதேவஸம்ரக்ஷணீ

ஸம்ஸ்ருதாவநி நிஸ்ருபா நுபவ தயெவாஜிஷ்ணு நாமாநிவெஜ:
ஸாக்ஷாச் சிவநகரே குமாரகிரணீ வாதிநு ஸஞ்சாரதி: ||

என்னும் சுலோகம் வரையப்பெற்றுள்ளது. இதனாலும் ஸ்ரீ ஆத்மநாதப்பெருமானுடைய திவ்யலீலைகள் புலனாகின்றன.

## வழக்கங்கள்.

குருந்தமரத்தின் அடிமண்: கருவுற்ற நோயுள்ளவர்கள் இம்மண்ணைப்பூசிக்கொண்டால் அந்நோய்தீரும்; இது, "முதுகுருந்தடியின்மண் பூசிக் கருவுற்ற முற்றுநோய் துடைத்துவிடலாம்" (அம்புலி. ௪) என்னும் சிவயோகநாயகிபிள்ளைத் தமிழாலும் அறியலாகும்.

அம்பிகையின் அபிஷேகதீர்த்தம்: தரிசிப்பவர்களுக்கு அம்பிகை ஸந்நிதியில் இத்தீர்த்தம் கொடுத்தல் மரபு; உட்கொள்பவர்களுக்கு இது சிவஞானத்தை அளிக்கும்; இது, "கையார வபிடேக மாட்டுங் குமமஞ்சன மப்புமஞ்சனமாப் பருகிமேற், கருமமலக் கறைகள் கழுவியே சிவஞான கலையெலா மேவாரலாம்" (சிவயோக. அம்புலி. ௪) என்பதனாலும் அறியலாகும்.

## நிவேதனம்.

அன்ன நிவேதனம்:—சமைத்த பாத்திரங்களுடன் கொணர்ந்து ஸத்ஸபையிலுள்ள படைகல்லிற்கொட்டி மிகுதியாகப் புகையை யெழுப்பும் அன்னத்தை ஸ்வாமிக்கு நிவேதனம் செய்வது இத்தல வழக்கம். இதனால் இது அமுதமண்டபம் என்று வழங்கும். [பக். ருஎ, பா. ககூ]

புழுங்கலரிசியன்னம், பாகற்காய்ப்புளிங்கறி, அரைக்கீரைச் சுண்டல் இவைகளின் நிவேதனம்.

முந்நூற்றுவர்களுக்குரிய நிலங்களை வேறொருவன் அபகரித்துக்கொண்டபொழுது அவை அவர்களுக்கே உரியனவென்று ஸ்தாபித்தற்பொருட்டு அவர்களுடன் பாண்டியனுடைய ஸபைக்கு வழக்காட ஓரந்தணர் வடிவங்கொண்டு சென்ற ஸ்ரீ ஆத்மநாதர், தத்தம் வீடுகளிலிருந்து மேற்கூறிய வியஞ்சனங்களோடு அவர்கள் கொணர்ந்த கட்டமுதை வழியில் உவப்புடன் அமுதுசெய்தருளினமையின், இவைகள் நிவேதிக்கப்படுகின்றனவென்று சொல்வர். இது வீரவனப்புராணத்துள்ள பொதிசோறு நிவேதனம்செய்த படலத்தாலும் தெரிகின்றது.

இத்தலத்தில், திருநந்திதேவரும் ஸ்ரீசண்டேசரும் இல்லையாதலால், ஸ்வாமிதரிசனஞ்செய்ய விரும்பியவர்கள், உள்ளே செல்லும்போது ஸ்ரீ மாணிக்கவாசகர் திருமுன் நின்று,

"[illegible]
[illegible] ॥

என்னும் சுலோகத்தையும், தரிசித்துவிட்டு மீளும்போது அவர்முன் வந்து,

"[illegible] ।
[illegible] ॥"

என்பதையும் விண்ணப்பித்தல் மரபு.

## இந்நூலிலுள்ள துதிவகைகள்.

க. மாணிக்கவாசகாதுதிகள்: கடவுள் வாழ்த்திலன்றி ஒவ்வொருபடலத்தின் முதலினும் உள்ளன.

### சிவஸ்துதி.

உ. அஷ்டகம்: இது பிரமதேவர்செய்த துதிகளாகவுள்ள எட்டுச் செய்யுட்களையுடையது. [பக். கoகூ - எ, பா. உக - அ.]

௩. திருமால்செய்ததுதி: [பக் கசு, பா. கசு - உo.]

ச. காலாக்கினியுருத்திராசெய்ததுதி: [பக். ககஎ, பா. கஉ - கசு.]

ரு. ஸ்ரீ மாணிக்கவாசகா செய்தனவாக உள்ளதுதி. [பக். கருசு - எ; பா. எo - எகூ.]

சு. ஸ்ரீ மாணிக்கவாசகா முறையீடு. [பக். கககூ - உ, பா. க௩ - எ.]

எ. சோழராஜன்செய்த துதி. [பக். கஎகூ - எ, பா ருo - ருகூ.]

அ. அதர்மனும் இலக்குமியும் செய்ததுதி. [பக். உo௩, பா. சo - சஉ.]

கூ. ஒருவேடன் செய்ததுதி. [பக். உoஎ, பா. கசு - எ.]

### திருவாதவூரர் உபதேசம்பெற்ற திருப்பெருந்துறை வேறொன்றன்று இந்தத்தலமே.

### திருவாசகம்.

"தெங்கு திரள்சோலைத் தென்னன் பெருந்துறையான்
அங்கணனந்தணனா யறைகூவி"

"தீட்டார் மதில்புடைசூழ் தென்னன் பெருந்துறையான்
காட்டா தனவெல்லாங் காட்டிச் சிவங்காட்டி"

[திருவம்மானை, க, கூ]

"தென்னன் பெருந்துறை யாளியன்று
காதல் பெருகக் கருணைகாட்டித் தன்கழல் காட்டி"

[திருவார்த்தை, கூ]

"தென்னன், பெருந்துறையின் மேய பெருங்கருணை யாளன்
வருந்துயரந் தீர்க்கு மருந்து" [திருவெண்பா, ௪.]

"தென்பாலைத் திருப்பெருந் துறையுறையுஞ்
சிவபெருமான்" [திருவேசறவு, ௮]

இங்கே காட்டிய அருமைத் திருவாக்குக்களிலுள்ள 'தென்னன் பெருந்துறை' என்ற பகுதிகள், பாண்டிநாட்டிலுள்ள இந்தப் பெருந்துறையே திருவாதவூரர் உபதேசம்பெற்ற ஸ்தலமென்பதைத் தெரிவித்தல் காண்க.

'திருப்பெருந்துறை கடற்கரையிலுள்ள ஊரன்று; ஆதலால், திருவாதவூரர் உபதேசம்பெற்ற ஸ்தலம் வேறொன்றாக இருத்தல் வேண்டும்' என்பது ஒருசாரார் கொள்கை; இத்தலம் மிழலைக்கூற்றத்திலுள்ளதென்று முன்பு (முகவுரையின் முதற்பக்கம்) காட்டிய தக்க ஆதாரங்களால் தெரிதலாலும் மிழலைக்கூற்றம் நெய்தனிலத்தைச்சார்ந்ததேயென்பது அடியிற்குறித்த செய்யுளின் பகுதியால் வெள்ளிடைமலைபோல் விளங்குதலாலும் இனி அவர்கள் அங்ஙனம் எண்ணாரென்று எண்ணுகிறேன்:

"நெல்லரியு மிருந்தொழுவர்
செஞ்ஞாயிற்று வெயின்முனையிற்
றெண்கடற்றிரை மிசைப்பாயுந்து
திண்டிமில் வன்பரதவர்
வெப்புடைய மட்டுண்டு
தண்குரவைச் சீர்தூங்குந்து
தூவற்கலித்த தேம்பாய்புன்னை

மெல்லிணர்க் கண்ணி மிலைந்த மைந்த
ரெல்வளை மகளிர் தலைக்கை தரூஉந்து
வண்டுபட மலர்ந்த தண்ணறுங் கானன்
முண்டகக் கோதை யொண்டொடி மகளி
ரிரும்பனையின் குரும்பைநீரும்
பூங்கரும்பின் றீஞ்சாறு
மோங்குமணற் குவவுத்தாழைத்
தீநீரோ டுடன்விராஅய
முந்நீ ருண்டு முந்நீர்ப் பாயுந்
தாங்கா வுறையு ணல்லூர் கெழீஇய
வோம்பா வீகை மாவே ளெவ்வி
புனலம் புதவின் மிழலை"

[புறநானூறு, உச]

இந்த ஸ்தலத்தின் ஸம்பந்தமான அரியவிஷயங்களை எனக்குப் பரமகிருபையோடு தெரிவித்தருளியவர்களும் சிவபக்தி அடியார் பக்திகளிலும் சிவஸ்தலங்களின் சரித்திர ஆராய்ச்சிகளிலும் ஒப்புயர் வற்று விளங்குபவர்களும், திருவாவடுதுறை யாதீனத்தில் இப்பொழுது எழுந்தருளியிருக்கும் பெருவள்ளலாகிய ஸ்ரீலஸ்ரீ அம்பலவாண தேசிகரவர்களால் பாதுகாக்கப்பெற்று வருபவர்களுள் ஒருவருமான தேஜியூர் பிரஹ்மஸ்ரீ மஹாதேவசிவனவர்களுடைய திருவடித்தாமரைகளுக்கு அநேகவந்தனங்களை ஸமர்ப்பிக்கின்றேன்.

தம்முடைய ஆசிரியர்களாகிய மேற்கூறிய ஸ்ரீலஸ்ரீ அம்பலவாண தேசிகரவர்களுடைய கட்டளைப்படியே திருப்பெருந்துறைக் கட்டளையை மேற்கொண்டு சிவதருமபரிபாலனத்தைப் பண்டைக் கால முறைப்படியே மிகவும் செவ்வனே நடத்தி அவர்களுக்கும் மற்றவர்களுக்கும் பெருமகிழ்ச்சியை விளைவித்துவரும் ஸ்ரீமத் சுந்தரலிங்க ஸ்வாமிகள், இப்புராணத்தை நான் ஆராய்ச்சிசெய்யுங்காலத்திலும் நான் சென்றிருந்தபொழுதும் எனக்கு அப்பொழுது அப்பொழுது வேண்டியவிஷயங்களை, முந்நூற்றுவர் பரம்பரையினருள் ஒருவராகிய பிரஹ்மஸ்ரீ ஆத்மநாதநம்பியாரவர்கள் முதலியவர்களைக்கொண்டு தெரிவித்தும், பல இடங்களுக்குச் சென்று அரிய செய்திகளை எளிதில் அறிந்து கொள்ளும்படி செய்வித்து ஆதரித்தும் இதனை விரைவில் வெளியிடும்படி என்னை அடிக்கடி தூண்டிக்கொண்டும் வந்தார்கள். இவர்களுடைய திறமையும் அன்புடைமையும் மிகப்பாராட்டற்பாலன.

இந்நூலைப்போலவே இந்தஸ்தல ஸம்பந்தமாகவுள்ள மற்ற நூல்களையும் வெளியிடும்படி இவர்கள் செய்வார்களாயின், தமிழ் நாட்டிற்குப் பேருபகாரமாக இருக்கும்.

இப்பதிப்பிற்காணப்படும் பிழைகளைப்பொறுத்துக்கொள்ளும் வண்ணம் விவேகிகளை வேண்டுகின்றேன்.

வெண்பா.

குருந்துறையுஞ் செல்வக் குருமணியே தெய்வப்
பெருந்துறையா யெங்கடவப் பேறே—மருந்தனைய
பேரா யிரமுடைய பெம்மானே யன்பர்களுக்
காரா வமுதே யருள்.

சென்னை
6-7-1913.

இங்ஙனம்,
வே. சாமிநாதையன்.

உ

கணபதி துணை.

# திருப்பெருந்துறைப்புராணம்.

## கடவுள்வாழ்த்து.

### விநாயகர் காப்பு.

மாமேவு புயனிறத்து மோட்டாமை முதுகொருகை வாங்கித் தற்குப்
பாமேவு வயிறிரண்டென் றருச்சிப்பார் கொள்ளாத படியென் பாதி
தாமேவு தந்தையகன் மாபணிந்து புகழொன்றே தான்கைக் கொண்டு
நாமேவு கருணையின்வாழ் களிற்றுமுகப் பெருமானை நயந்து வாழ்வாம். (௧)

### வெயிலுவந்தவிநாயகக்கடவுள்.

இலவுவந்த செவ்வாயெம் பெருமாட்டி பார்வையொடு மிருகரு முன்னூல்
சொலவுவந்த நமபெருமான் பார்வையுமேற் றமாசிறப்புத தோற்றி யாங்குப்
பலவுவந்த பொழில்வளஞ்சால குருந்துறையும பெருந்துறையிற் பணபு கூரு
நிலவுவந்த முடியனொடுமெ வெயிலுவந்த மெய்க்களிற்றை நினைந்து வாழ்வாம்.

### சொக்கவிநாயகக்கடவுள்.

தக்கவினா யகன்மறையுட் பொருடோந்தயர் திடுதிபுன ரூங்கு மாமே
கக்கவினா யகன்மகச்சா லையினெனுந்த தீசிமுதற் கணிப்பி லோர்கள்
புக்கவினா யகனமாந்து முதலானா யென்றெடுத்துப் போற்ற மேய
சொக்கவினா யகன்புகலு மிககவினா யகனாயிற் றுன்னு றென்னே. (௩)

### ஆன்மநாதக்கடவுள்.

கார்பூத்த வண்டகம்பாய் முண்டகஞ்சார் நான்முகனுங் கவுத்து வப்போர்த
தார்பூத்த வோராபானு மாபானுங் கைலாய சைலத் தானை
நார்பூத்த துதியெடுப்பக் குருந்துறையும் பெருந்துறையி னயந்து மேவி
யார்பூத்த வருள்கொழிக்கு மான்மநா தக்கடவு ளடிதாழ்ந் துய்வாம். (௪)

### சிவயோகாம்பிகையம்மை.

தூயநா மத்தருவ முருவமெவை யெனினுமொரு தோன்றல் போன்றே
பாயநா னிலவனைப்பின் கணுமடர்வா ளணமெறித்த படியே போல
வாயநா தங்கடந்த வான்மநா தக்கடவு ளமர்தற் கேற்ப
மேயநாயகிசிவயோ காம்பிகைதன் விமலாத்தாண மேவி வாழ்வாம். (௫)

### சபாநாயகர்.

அனைப்புலித்தோன் மயிருருப்பக் காற்புலித்தோன் மயிர்முகிழ்ப்ப வணிபல்
வனைப்பகன்று குலையவொரு பாமபுநிலை நின்றுநனி மகிழமேகருத [பாமபும
திளைபபயமா தலைஇக்கவலக் கிழக்கிளங்கன் னிகையினபந் திளைப்ப நீராழ
தனைப்பயனு மணிமன்று ணடநவிலு மொருமுதலைச் சரணஞ சார்வாம். (சு)

### சிவகாமியம்மை.

மாறுகரு தாதுமுகின் மழைபொழிவ தெனினுமுடல் வளமா மினமுன்
னூறுபல வாமிடையீ னளததுபோ லாதுவள முயிரகண மேவி
வீறுமணி மன்றுணட மென்றுமூ றறநோக்கி விளங்கா ணநதப்
பேறுபெறக் காட்டலெனு மருணமழைபெய் பசுமுகிலைப பேணி வாழ்வாம.

### குருந்தமூலப்பெருமான்

கரியவனுங் கலததலமும பாதமவன மனைவியுடல கலபபத் தோன்றிப்
பிரியமிக வெழுநதருளி வந்துதிரு வாதவூரப பெரியா போறறித்
துரியநிலை கடநதுசிவ போகமது வுண்டுகளி தூனற நீழல
விரியவுயா குருநதடியி லிருந்தருளும பெருவாழவை விளமபி வாழவாம. (அ)

### குதிரைச்சேவகர்.

அரியமறை மேலாமெனன் றுரைப்பதனைக கறறவாறா ளனைவ யானே
தெரியவல ரல்லாதாா தெரிவர்கொலோ யாவாகளுந் தெரியு மாறு
பிரியமிகு மொருவருககாத தலைச்சாததது முதலியவை பிறஙக நாளு
மூரியவொரு பரியேறி யுலாயசே வகன்மலாததா ளுளளத் துளவாம. (கூ)

### வீரபத்திரக்கடவுள்.

மேயசிவ நிந்தைபுரி வெய்யவாகருப புரிசமூவாய வேறின் றன்னுர்
மாயவொறுத திடலனறி யென்னுமறைக இலககியமா வாளைகக கொணடு
தீயமகம் புரிதக்கன் சிரமறுததுச் சோமதாருஞ் சிதையச செய்த
நாயகமா விறல்வீர பத்திரனம பனைவணங்கி நயந்து வாழவாம. (௧௦)

### சோக்கவிநாயகக்கடவுள்.

அஞ்சொகக நினைதநிவோர் கருவிபிற வேணடாமெனன் றறைதறேற்ற
நஞ்சொக்க வழன்றெழுமால் களிறனைமுகத் திருபாலு நகுவெண் டிஙகட்
பிஞ்சொக்க வொளிர்கோட்டு னொன்றுகொடு தருமமெலாம் பிறஙக மாட்டி
மஞ்சொக்க மதமபொழிந்து வருசொக்க மாலகளிற்றை வணஙகி வாழவாம.

### குமாரக்கடவுள்.

புரமுதலவென் றறுபுகழ்மாத் திரங்கொண்ட தந்தையினும் பொரு
ளோா யானை, யுரனறவென் றகனெழுமோா கியுங்கொண்டு மிகுசிறப்பை யுறு
முன்னேனும, பரவுறச்சூா தடிந்தவற்றே டோங்குகே தனமொருகை பற்றப்
பெறற, விரவுமல மருந்துறையும பெருந்துறைக் குமாரனடி மேவி வாழ்வாம்.

### திருநந்திதேவர். வேறு.

முத்தியை யடைவோர் ஞான முந்துற வடைதல் போலச்
சத்தியை யொருபா லுய்த்த தலைவனை யடைவோர் முந்திப்
பத்தியை யியற்றித் தன்னை யடைதரப் பண்பார் யோக
சித்தியை யடைந்த நந்தி தேவனை வணக்கஞ் செய்வாம். (௧௩)

### அகத்தியமுனிவர். வேறு.

நெடுமை குறுமை யுயர்விழிவை நிரலே யவற்றிற் கெதிர்மறையாப்
படுமென் மையினிற் செயவல்லான் பரவை யுண்டான் மிகவுயர்ந்து
விடுமத்தென் றிசையைச் சமஞ்செயலால் வெற்பை யடர்த்து எழுந்ததலாற்
கொடுவினை மாலைச் சிவஞ்செயலா லென்னு முனிதாள் குறிக்கொள்வாம். (௧௪)

### திருஞானசம்பந்தமூர்த்திநாயனார். வேறு

பாலன வின்னு முண்டான் செற்றுவியப் பார்த்து வந்த
மாலன வின்னுண் கொள்ள வன்பாலோர் சிறுபொழு துண்டான்
மேலன வுலகினை முனை விமலனைக் கண்டு காட்டி
நூலன வொருநூல் சொற்ற நோன்மையார் றெழுது வாழ்வாம். (௧௫)

### திருநாவுக்கரசுநாயனார்.

பாலிடை நஞ்சங் கண்டு பதைபதைத் தோடிப் போய்ப்பா
னாலிடை யவருண் பார்க்கு நவின்றமா லயனுண் ணஞ்சப்
பாலிடை நஞ்சங் கண்டு பதைப்பின்றித் தாமுண் டோர்பா
னாலிடை யவரே யென்னப் பொலியுநோன் மையார்தாள் போற்றி. (௧௬)

### சுந்தரமூர்த்திநாயனார்.

வரைபல பலபெ யர்த்து மருவுபன் றுணையு மன்று
புரையறச் செறித்தோ ருந்தி கடந்தமால் புந்தி நாண
தரைகிழித் தெழுமோ ருந்தி தான்வழி விடமுன் பாடி
விரையவை யார்மேய விமலர்தாள் சென்னி சேர்ப்பாம். (௧௭)

### திருவாதவூரர்.

இந்திய மொன்றற் காமனை யிடந்தபன் ஞணமும் யன்று
முந்திய பாதங் காணு முகுந்தனே மாற வைத்து
நந்திய சிரத்தப் பாத நகுகுருந் தடிமேவப் பெற்
றுந்திய விறுமாப் புற்ற வொருவருக் கன்பு செய்வாம். (௧௮)

### சண்டேசுரநாயனார். வேறு.

ஆதிமுத லிடையில்லா வாதிதனைத் தாபித்தே
யாத்திகழும் பாலாட்டி வழிபடுங்கா லப்பெவம்போல்
லாத்தியக்க மென்றுப்பா னடியறுத்து விடைமேலா
லாதியொடு மாதனைக்கண் டமர்ந்தபிரான் பதம்பணிவாம் (௧௯)

### அறுபத்துமூவர். வேறு.

புரிவினை புரிவோ னெய்தும் பயனது பொருந்த நல்கும்
பெரியவன் சைவ மன்றிப் பேசாமற் றுள்ள வென்று
தெரிதரு மனத்த ராகிச் செயற்கருஞ் செயன்மேற் கொண்ட
பரிவறு பத்து மூவர் பாததா மரைகள் போற்றி. (உ0)

### சேக்கிழார்நாயனார்.

பலவுறு மடியார மேன்மை பாடவல் லவரென் றெங்கள்
குரவரு ளொருவ ரன்பிற் குறிக்கொடு துதித்தல் கண்டுந்
தரமிகு சிறப்பு வாய்ந்த தன்மையார் சேக்கி ழாரைக்
கரவறத் துதியே மென்னிற் கடும்பிழை யாகு மன்றே. (உக)

### முந்நூற்றுமறையவர்.

பிறைமுடிக் கணிந்த வெங்கள் பெருந்தகைப் பதியைத் தமமோ
டுறைதர வயன்மா லாதி யாவரு மஞ்ச நேர்ந்து
நிறையெம்மோ டொருவ னென்று நிகழ்த்துறத் துணிமுந் நூற்று
மறையவர் செம்பொற் பாத மரைமலர்க் கன்பு செய்வாம. (உஉ)

### மற்றையடியார்கள்.

பெருந்துறை யான்ம நாதப் பெருந்தகை யால யத்துத்
திருந்துபல் பணிசெய் வோருந் தெளிபொருள் சிவமே யென்று
பொருந்திய மனத்த ரியாரும் புன்மையேன் மனத்து நீங்கா
திருந்துவெவ் விடைய காடி யெழாவகை யிருத்து வாரால. (உ௩)

### பஞ்சாக்கரதேசிகர். வேறு.

அறைகடல்சூ ழுலகீரியா வருமுண்மை சொலக்கேணமி னறமு யன்று
மறைமுதலா கியகலையோ திடல்வேண்டா வவையனைத்தும் வயங்கி நாளு
முறைதிருவா வடுதுறையெங் குருநமச்சி வாயன்பே ரொன்றே யோத
விறையிலிக பரமுத்தி யுண்டாகு மவைகொடுப்ப திவைமே லென்னே. (உ௪)

### பின்வேலப்பதேசிகர்.

சுருதியெனு நம்முதலா ரியனைமுனம் வழிபட்டு நயந்து பின்ன
ரந்திமதி புனைசடிலத் திறையைவழி படுதன்முறை யதுமா ருது
வந்திவணியா முறைனமென் றுறைதல்போற் பெருந்துறையை மருவி மாசு
சிந்தியமர் துறைசைப்பின் வேலப்ப தேசிகன்றாள் சென்னி சேர்ப்பாம். (உ௫)

### அம்பலவாணதேசிகர்.

புண்ணியவா வடுதுறையிற் பொல்லாத பாவியேன் பொருட்டி யாரு, மெண்
ணரியவம் பலவாண னெனுந்திருப்போ ரூண்டதனுக் கியையத் தோன்றித்,
திணணியமா மலமூலத் தொடுசிதைய வடிமுடியிற் செறித்தாட்கொண்டு,
கண்ணியபே ரின்பளித்தா னவறகிசுரியாற் றுதற்காய கைம்மா றென்னே. ()

**சுப்பிரமணியதேசிகர்.**

இருந்திருவா வடுதுறைச்சுப் பிரமணிய தேசிகற்குழ் தினிய கூறிப்
பொருந்திதயத் திருத்தினே னுணவுதவு வேனென்று புகன்றாந் காளே
வருந்திமுய லவுமெனது போதவினை வொழிந்ததந்தோ மற்றென் செய்கே
னருந்திறலா ரியன்பசிக்க வுண்பானென் றொருபழியு மடைந்த ளேனே. ()

கடவுள்வாழ்த்து முற்றிற்று

---

# அவையடக்கம்.

துன்னுவளம பொலிகாசி மான்மியத்தை மொழிபெயர்ததத தோன்ற
நீயே, பன்னுகென யானபாடக் கேட்டுவந்தோன் றுறவொழுககப் பணபான
மிககோன், மின்னுபெருந துறைககுரவன் கட்டளைமேற் கொடுநிகழும விர
தம் பூண்டோன், முன்னுபுகழ மிகுதிருவா வடுதுறைச்சுப் பிரமணிய முனி
வா கோமான்.

### வேறு.

வலமலி யான்ம நாதா மான்மிய மொழிபெ யாதது
நலமலி தமிழாற பாடி நன்றுநீ தருதி யென்னப்
புலமலி வில்லே னேனும் புகனறசொன் மறுக்க மாட்டே
னிலமலி புலவா முனபு நிகழததிடு தணிபுற றேனுல். (௨)

கிறியுறு மதுர வாக்குக் கேட்டுவப் பவனென் றுகாச
சிறியநின் வாக்குங கேட்டல் செய்யுங்கொ லெனவினை மேனி
முறிநிக ருமைய னைக்க வுவககுமெய யொருவா முநதி
யெறிகலு மேறற தோர்ந்தே யிசைப்பதற் கிசைந்தேன மனமே. (௩)

மலைவிலா வருளோ வன்றேல வழுவிலா வியலோ நனுசொ
னிலையறென் றிறைசீர் பாடே னெடிதுநாள கழிததே னெள்ளி
னுலைவினை யில்லை யாக வேறொன்று முதவா தாகத்
தலைவிளக் கெரிததுய்ந தாரதனு சரித்திரங கேட்டி ருநதும. (௪)

மணிமணி யாகத் தோன்றும வாரதனைதகொள செவிவெம பாசப
பிணியினேன் வறிய சொல்லும் பேணுது விடுமேல வான
மணிமதி யன்றி யுற்கை யனைததையும் விலககும வாவி
நணியதா மனைய லான்மற் றனைத்தையு நலியப் போக்கும. (௫)

மூவரு மிறைஞ்ச நின்ற முதலவ னுண்ம காதன்
யாவரு மிறைஞ்ச நன்கேற் றினிதருள் சுரகு மென்னின்
மூவருந் துதிப்பக் கொண்ட முடிவிலின் பனைய பெம்மான்
யாவருந் துதிப்பக் கொள்வா னென்பதற் கிழுக்கொன் றுண்டோ. (கூ)

மறையினும் விரிந்தாற் போல்வ தொகையென வகுத்தா ரந்த
முறைதவ றியதொ கைக்கு மொழிந்திலா வேறு நாம
நிறைபெரும புராணங் கூறு நெறியிஃ தென்று ருள்ளா
லுறைதவ றுறினும வேறு பெயருறாத திடவல் லாரோ (எ)

முடியமெய்ஞ் ஞானந தோந்தா முன்னவ னுண்ம நாத
நெடியவன புராணந தனனு ணிகழ்ந்தது குற்ற மேறு
மடியவ னவனு ணாதத வுணருஞ்சித தாத லாலே
கொடியதென் றென்மேற் குற்றங் கூறவுந துணிவா கொலலோ (அ)

வென்றசீ ரான்ம நாத ரெனும்பெயா விழைந்தார் ஞான
நன்றிலா வெனைவி லக்கா நாவலூ ரருக்கு வெண்ணெ
யனறருள் செயதா ரென்று மருச்சனை பாட்டே யென்று
ரொன்றநின் பாட்டே யென்று ருறுதியென் னிதனமேல் வேணடும. (கூ)

அவையடக்கம் முற்றிற்று.

---

# சிறப்புப்பாயிரம்.

தென்பூத்த பழனமெலாங் கன்னலுஞ்செந் நெலுமுயாந்து சேணு ளாவும
பொன்பூத்த பெருவளஞ்சால் பெருந்துறைமான் மியந்தமிழா றபுனைதலசெய்
கொன்பூத்த ஞானகலை முதற்பலவு மறிபத்தோ குணசதான மிககான் [தான
மன்பூத்த சிராமலைவாழ மீனாட்சி சுந்தரநா வலவ ரேறே.

சிறப்புப்பாயிரம் முற்றிற்று

---

# திருநாட்டுப்படலம்.

## திருவாதவூரர் துதி

இருவினை சிமிழ்க்க யாத்த லெய்திமேக் குருகி யுக்கு
மருவவே றியுமி ழிர்த்தும வருந்துபல் பவத்தி னுள்ளு
மொருபவ மேனு மெய்தா தானந்த முற்று வாழவான்
றிருவளர் வாதவூரர் சேவடி சேர்ந்து ளோமே.* (௧)

## நாட்டின் பொதுவளம்

மின்னிய வருள்கூற் கொண்டு மிளிர்சிவ யோக மாதோ
டன்னிய மில்லா வான்ம நாதாதா மமரு மேன்மை
துன்னிய தலமுற் பல்ல தன்னகர் துவன்றக் கொண்டு
மன்னிய பாண்டி நாட்டின் வளஞ்சில கூற லுற்றாம். (௨)

பெரும்படி யகத்தி லுள்ளா பெருந்தவ நனிசெய தேய
விரும்படி யடைதற் காய மெய்ச்சிவ லோக மனபா
லரும்படி யொருவாக காக வழைக்குமுன் னெளிதாத் தன்பால
வரும்படி தவஞ்செய தன்றான் மாப்புகழப பாண்டி நாடு. (௩)

புண்ணியக குமரி யெனறு பொருநையென றுவா னோரு
நண்ணிய வையை யென்று நயக்குமவெண குடிலையு மென்று
வண்ணிய வீரி ரண்டு மறமுத ஞனைகு மாசப்
பண்ணிய தவதத தன்றே பணபுசால் பாண்டி நாடு. (௪)

வலனுடை வருண னேவ வருகடல் வறப்ப வென்ற
வலமர் முகிலை வென்ற வடிமுடி யுடைய தாய
குலநக ரொனறு போலக கோணைமா மதிலசூழ வளமைப
பலநக ருடைய தமமா பலாபுகழ பாண்டி நாடு. (௫)

கமபந்தங காது நீதத கரியமான் முதலோ ரேதத
வமபந்த மாகக்குங் கொஙகை யானையை வயஙகோ குன்றி
னமபந்த மறுப்பான் வேட்ப நயந்தரு தெயவ நாட்டுச
சம்பந்தம் பெறற தன்றே தனைபுகழ பாண்டி நாடு. (௬)

எந்தநன் றுடுநே தன்னை நோககுவா னியஙகு மேக
மநதநன் றாட்டு மாறி னடிப்பிணப புறமென றஞ்சி
முந்தநன் கமைய நோககிப பொழிதர முறறு மேன்மைச்
சநதமா தவஞ்செய தனறு தனாபபுகழ்ப பாண்டி நாடு. (௭)

---

* திருவாதவூரர்துதி, இப்படியே இந்நூலுள் ஒவ்வொருபடலத்தின் முத லினும் கூறப்படும்.

மருவுட லின்ப மேவ மணங்கெழு நறிய சாந்து
மொருவரும் வாசக் காலு முதவுவ தன்றி யான்மாப்
பெருகுறு மின்ப மேவப் பிறங்குதீந் தமிழு நல்கும்
பருவரை யுடைய தம்மா பலர்புகழ் பாண்டி நாடு. (அ)

புண்ணிய வெண்ணீ றுய பொருவருங் கவசம் பூண்டு
பண்ணிய பத்தி வைராக் கியமெனும் படைகை யேந்தி
யெண்ணிய சரியை யாதிச் சேனைநான் கெழுப்ப ரப்பித
திணணிய சனனத் தெவ்வைச் செறுவது பாணடி நாடு. (கூ)

மறையுணர் புலவர் பொன்செய் வணிகர்மன் னவரே போல
நிறைபெரும் புகழ்வே ளாளா நெருங்கப்பட் டொருகே டின்றி
முறைவினை யுடைத்தா யம்பொன் முகக்குமா கரம்பல் கொண்டு
குறையறப் பொலிவ தம்மா கொற்கையா பாண்டி நாடு. (கo)

மறையொலி யொருபா லாக வயஙகுமா கமபு ராணத்
துறையொலி யொருபா லாகத தோன்றிய பாண்டி நாட்டின்
முறையொலி பொதுவிற் சிலல மொழிதரப் புக்கென் சொற்று
மறையொலி படுகொண மூவின் வளஞ்சில வறைய லுற்றும. (கக)

மழைவளம். வேறு.

சுருப்ப லங்கலெம பிரானமா சுருதிசூழ் வெளளிப
பொருப்ப மைநதோ ருருக்கொடு கொண்டன்மீப் போய்நீங்
குருப்ப வாழிநீா கவாந்தொளி ரிந்திர நீலப்
பருப்ப தத்துருக் கொண்டுமீண் டனபுவி பரவ. (கஉ)

மீண்ட கார்மழை நம்மையூா திறலுடை வேந்தன்
கூண்ட சேனையோ டமர்த்துழி யவன்குலாஞ் சென்னி
யாண்ட மாமுடி சிதர்தரச் சிதர்ததரும புகழா
னீணட நாட்டின்முற் பொழிவது தருமென நினைந்து. (கங)

உருப்ப மோவுறப் பொழிதிறங் கறறநா முள்ளத
தருப்ப மோப்பிடு தணடமிழ் சீதளச் சந்தம
விருப்ப மேவுதண் மாருத மேவிய பொதியப்
பருப்ப தத்தடை வேமுறை யாமெனப் படர்ந்து. (கச)

வேலை நேர்நிற வகோா யகன்றிரு மேனி
மாலை யாந்தழாய் நாறிய வுரிமறைத் தாங்குச்
சோலை சூழ்தர நின்றவான் பொதியத்தின் றேற்ற
மேலை வானரு முணர்தரா விதநனி மறைத்து. (கரு)

## திருநாட்டுப்படலம்.

கடிய கற்பநாட் டெம்மிறைக் கிளையவன் கலக்குந்
தொடியிற் கைம்மட மகளுடற் குருப்பமே துறந்த
கொடிய வேனிலாங் கோளராக் குலைகுலைந் தின்றே
முடிய வாற்றுவா னெனலபொர மின்னுபு முழங்கி. (௧௬)

பருவ மாறனுட் கொடுமுது வேனிலாம் பருவம்
வெருவ வொவ்வொரு திவலைகண் முந்துற வீழ்த்தித்
திருவ மேவிய பெருந்துறை யகத்தமா செம்மல்
பொருவ வொன்றுமி லருண்மழை பொழிந்தெனப் பொழிந்த. (௧௭)

ஆங்கு மேவிய முகில்புன லடிக்கடி பருகிப்
பாங்கு மேவுற நால்வகை நிலமெலாம் பரந்து
தேங்கு மாமழை பொழிந்தன வள்ளியர் திறம்போல்
வீங்கு வேனில்போய் வேறிடம் புக்கொளித் தன்றே. (௧௮)

பெருமை மேயசம புனலெலாங் குடங்கையிற் பெயதோ
ரருமை யின்றியுண் டவனம ரிடமிதென் றழன்று
கருமை யாழிமா மலயமேற் கவிழ்திறங் காட்டும்
பொருமை மாமுகின் மீளவு மாவயிற் புகுதல. (௧௯)

பகையை வெல்வது கருதிவா ரிதிமிசைப் படர்ந்து
தகையு றுதுற நெருககவு முடைதராத தவததின்
மிகையு ணாந்துவெள ளியதென விளாததன மேக
மகைசெய் வேனிலவெந் தீயொடு கோபதீ யவிததே. (௨௦)

வளாம லிந்தன வருவிகள் கலுழிகள் வனஞ்சா
தளாம லிந்தன வேரிகா லோடைவான் றடங்க
ணிளாம லிந்தன தணபணை நெய்தன்மிக் கூறித்
திளாம லிநதன சிறுமணற கேணியெத் திசையும. (௨௧)

கயிர வப்பகை யிருமறைத் தெழுந்தபல காருஞ்
செயிர றப்பொழி மழைபரந் தெங்கணுஞ் செறியப்
பயிர்ப ரப்புநா னிலமொரீஇ யுட்டினம பாறிற்
றுயிர்வ ரக்குற ளுச்சிதைந் தோடுவ தொத்தே. (௨௨)

மழைபொ ழிந்தநீ ரெஙகணும பரந்துசென் மாட்சி
பிழைசெய் வேனில்வெப் பொழிந்ததோ பெருநில மடந்தை
யுழையெங காயினு முள்ளதோ வென்றுளத் தமைய
விழையுஞ் சோதனை புரிகுவான் மீச்செலல் கடுக்கும். (௨௩)

பொங்கு மாமுகி லிடையறப் பொழிந்தநீர் வெள்ள
மெங்கு மொப்பநன் கியங்கியு முட்கொளா வியல்பாற
றங்கு மேதினிக் கினிமிகை யென்பது தகக்கொண்
டங்கு நின்றுவீரன் கடலகத் தடைத்ததை யன்றே. (௨௪)

போற்ற வாமுடை யூழனு பவித்திடும் பொழுதே
யேற்ற மாகவா காமிய மீட்டுறு முயிர்போ
லூற்ற மாமழை பொழிந்தநீ ரேங்கவு மவாவி
யூற்ற மாநதிப் புனல்கொளு மேரிக ளுலப்பில. (௨௫)

வாரி வாய்க்கொடு மழைபுனல் பொழியுமென் றறிந்து
சீரி யோர்களவ் வாரியைப் புகழ்திற நுசெய்யார
நாரி பாகாதம பெருந்துறைத் தளிப்பணி நருதார
மூரி வேமபுடை யான்பணி யென்றெவா மொழிவார. (௨௬)

அலங்கு ஞாயிறு தோன்றலு மிருளழிந் தாங்கு
நலங்கொள காலையு மாலையுந் தவிர்ந்துநண் பகலி
லிலங்கு மாறுதித் தியாவாககு நனிவெதுப் பியற்றும
பொலங்கொள பாலைகா ருதிக்கலு மழிந்ததுபோ யிற்றே. (௨௭)

மாய காரியப் பொருள்களை மடந்தையோர் புறத்து
நாய னாகொளக் கொடுத்தவா நவிலொரு வினைப
மாய வான்பயன் பெறுதல்போ லுவாக்குநீ ராழி
மேய காருமிற குதவிப்பின் கவாநதது விழைநீர (௨௮)

விழைந லத்தகாரக் காலுமா கியபெரு வேநதன
றழைய மண்ணிறுத தமைக்கமை தவாப்பட மாடங்
கழைகொண மால்வரை யதனபுறத் திடைவிசி கயிறு
பிழையி லாமணி கொழித்திழி யருவியின் பெருக்கம. (௨௯)

எவ்வு யிர்க்குமா தாரமா மழைவர வெதிர்ந்து
செவ்வி சானமயி லகவின கோகிலந் திகைத்த
வெளவி யமபெருக் கவுணியர் வரவெதிர்ந் தளவில்
சைவ ரேத்திட வமணரா தியர்திகை த்தைபோல். (௩௦)

சந்த மால்வரைப் பாண்டிநன் னாட்டிடைத் தவாம
விந்த வாறுறப் மழைவள மியர்ரெடுத் திசைப்பார்
நந்த வாகிய வைந்திணை வளத்தினு நயப்ப
முந்த வாமகுறிஞ் சித்திணை வளஞ்சில மொழிவாம. (௩௧)

## குறிஞ்சி.

வரைப யந்தவன் மகவெனப் படன்மயி லூாதல்
வரைய மைந்தனான் மகட்புணர் விலைமதி யான்போல்
வரைபெ றிந்தன னெனத்தவ நிலைநின்று வயககி
வரைகள் சேயிடங் கொளப்பொலிந் தோங்குவ மாதோ (௩௨)

அருவி யாாதரு சாரல்வாயப பஃறரு வமைய
மருவி மென்மலா தோறறுவ வேண்முடி வைப்பான
வெருவி வண்டுகெ ளுருவிதம விலககுவ வேங்கை
பொருவில சணபக் மறறவை சூழ்தரப் புனாநதே. (௩௩)

புனைம ணிததொகை வரனறின் ரோரிடைப் போகட
டணிவி லாத்திீன வளாநணி போற்றுவ ரெயினா
நினைத ருநதரந் தெரிதராா பர்றபுடி னிகரி
லனைய தாழுயர் பிழிபிழ் புயாபென வாமால். (௩௪)

நிறுவ றற்குழற் கொடிச்சியா கவணமணி நிறுவித
திறுகு ரறகொளபுள் ளிரிதரச் சுழறறுபோ தொருகா
லறுதி றததினைந் தொழிதர மணியவண் வீழு
மறுகு பாம்பினைச சுழற்றவாய மணியுதிாந தென்ன (௩௫)

ஓஙகு சாாலிற் றவழமதிப் பிறைவழுக குற்றுத
தேங்கு நீாச்சுனை யகமவிழ நவ்வென்று சினைமேற
பாங்கு வாழகுரங் கொன்றதன மேலுறப் பார்ததோ
ரீஙகு நின்பெயா குரஙகியென பஃதுமெய யெனபாா. (௩௬)

எவ்வ மில்லராய்ப் பெற்றது கொணடுவப பெயதல
செவ்வி யோாகட னெனறெளித தாஙகுறு செவ்வி
நவவி னோகருண்டக் குறததியா நயநதடை யுடுபபா
ரொவ்வ தில்லெனப் புன்றினை புன்கிழங குணபாா (௩௭)

மேய வெணபிறைக் கோட்டுடை தேததடை விடுகரும
பாய வினமது வருவியா னையினகடாம் பரப்புற
றூய செமமையால வெணமையாற கருமையா லனறித
தோய யாவரும பஃகுத்துணா தரததரோ சொல்லின். (௩௮)

மந்தி முனசெலப் பெருமபலாப பழசசுளை வவ்வி
யுந்தி யுள்ளிடைக் கடுவன்பின புகவுண ராது
லந்தின் மற்றொன்று புகவெளி வநதுடன றமாககு
முந்தி மாதவாய்க கவியிரண் டமாததவோா முறைபோல் (௩௯)

கயமு னிக்குலம் பிணைத்தனர் வட்டமாய்க் கணமே
வியவ றைத்தலைத் தினைக்குரல் பரப்புபு மிதிப்ப
வயம றச்சிலை யெயின்குடி விடமுகின் மருண்டு
பயமி குத்தொரு சிறைப்புகூஉ வுருமொலி பரப்பும். (௪0)

கடமை பன்றிமான் முதலிய மிருகமூன் கவர்ந்து
சுடர்கொ ளுந்தழற் காய்ச்சுபு தேனிற்றோய்த் தருந்து
மடமை யென்னெனக் கிராதரை யிகழவா யுண்டோ
படவ ரரவணி காளத்தி யார்செயல் பார்த்தும். (௪க)

கொடியி டைக்கொடிச் சியர்முலைக் கோட்டினுக் குடைந்தே
நெடிய மால்வரைக் கோடுக ணீனிற முகிலான்
முடிய மூடப்பட் டொளித்திடு மூரிமா லியானை
வடிய கோடுகள் விளர்த்திடு மணியகம் பரிதலும். (௪உ)

பிண்டி யந்தளிர் வாடுதல் கண்டுளம் பிணங்கி
யண்டி யாரமென் னறுந்தளிர் கொய்துதம் மங்கைக
கொண்டி ரங்கினீர் கொண்மினென் றிரந்திடக் கொள்வார
மண்டி யெங்கணுங் காவல்செய் புனங்களே வயங்கும். (௪௩)

உறும்ப லாயிர யோனிதோ றுதித்தன வாய
வெறும்ப லாவுயி ரியாவும்வாழ் திசைகுறித திறைஞ்சுங
குறும்ப லாவுடைக் குன்றமொன் றுடையது குறிஞ்சி
தெறும்ப லாயிர வாயினுன் செப்பலு மாமோ. (௪௪)

வான மேவிய வாழ்க்கையா புளிஞராய் வந்து
தான மெங்கணும் விராவுறுந் தடங்கொடுங் குன்ற
மேன நாடொறு ஞாலமுற் காட்டியாங் கிருப்பின்
மான மாருமக குறிஞ்சியின் றவதத்தையார் வகுப்பார். (௪௫)

இகல வாவுதோட் குருயி குடித்தவெம் மிறைவன்
சகல யோனியு மின்புற யானைதோ டமூவி
யகல மாபரங் குன்றிடை யமருமேற் குறிஞ்சி
புகல வல்லரியார் முல்லையின் வளஞ்சில புகலவாம. (௪௬)

## முல்லை

மானு ருததபுத தான்முனம வாளியா லெனினு
மானு ருத்தமூஉம் வாஞ்சைய ஞேதலி னவனுன்
மானு ருததழை விப்பதை யெண்ணுபு மாலை
மானு ருத்தகான் றெய்வமாக் கொண்டது மாதோ. (௪௭)

ஞாய வன்வனங் காததிட வதிதலின் மயக்க
மாய தெய்திடா வண்ணமாவ கமருவ வனமீப்
பாய கார்முகி லவுன்வடி வொப்புமை படர்ந்து
நேய மோடவட் பயிலுவ பெயலொடு நிலவி. (௪௮)

பரவு தேரசைந் தாடுமா லைகளெனப் பல்பூ
விரவு தொத்துக ளேக்கிய மதலைகூ விளஞ்சாரந்
துரவு மேவியோ திமமுரு தோங்கிடு திறததா
லரவு பூண்பவன் சடைவன மவ்வன மாமால. (௪௯)

மூவ கைத்தொழி லுளுமிடைத் தொழின்முயன் றுற்றுந்
தேவன மேவலி னிடையரோ யாவயிற் செறிவார்
மேவ் வானினாத தோழமும விசைததெழு கன்றிற்
காவ தாகிய தீவுமாங் காவகுறப் பரப்பி. (௫0)

சாயு நுண்ணிடை யாய்ச்சியா தனிாக்கைமத் திட்டுத்
தோயும வெணடயி ருடைத்திடு துழனியாற் றுளனி
யேயு மோாபுதல் புகுமுயல் கலயத்தா னினப்பால
பாயு மோதையா லயலபுகு நிலையிலாா பணபின். (௫௧)

முருகு வார்குழ லாய்ச்சியா முளிபடேஉத் தோய்ந்த
பெருகு நின்றுகொள் வெணணெயைப் பிறங்கழ லேற்ற
வுருகு காலெழு மணங்குலா வலினுறு மாங்கு
வெருகு சூழ்வன யந்திரம புனைந்தவெள் ளேற்றின். (௫௨)

இனித்த வேய்ங்குழ லோதையு மேறுபூண் மணியும
பனித்த மாலையு மெளவல்வண டேலும பசுஙகார்
குனித்த வில்லொடு தோன்றலுங கோகிலத தொழிப்புந்
தனிதத மங்கைய ரிருகணைகசாய் கூறறெனு தகைய. (௫௩)

தொறுவி மார்மொழி பயின்றிடக் கோகிலத் தொகையு
மறுவில் வாணகை யரும்பிட வயஙகிய தளவு
நிறுவு வார்குழல் கனிந்திட நேயஞ்சா களவு
மிறுதி யில்வனத நிறுதியில் லனவென வியையும். (௫௪)

கோடு கூரிய கொழுவிடைப் புறம்பொலி யிமிற்குங
கூடு மாய்ச்சியர் கலமபொலி குடம்புரை முலைகளு
காடு திணடிறன் மதனுடைக் குறுமபொறை நாடர்
நீடு தோளிணை யுயர்ந்தவொத் தனவென நிலவும. (௫௫)

எள்ளுஞ் சாமையு மவரையுந் துவரையு மிறுங்குங்
கொள்ளு முற்கமுங் கோத்திர வமுங்கொழும் புல்லுந்
தள்ளு நீர்மையின் றிடந்தொறும பொலிவன தவாமே
நள்ளு மாலவ ைா கானக ணணிய வெனன. (௩௬

தூய கூவிளங் குருந்துவண கடுக்கைபைந் தூர்வை
மேய வானிலைந் தோடுகொன் யாற்றறல் விளைமிக்
காய முலலையின் களமபழ முதலமை தலினுன்
மாய வன்சிவார்ச் சனைசெய வருத்தமை போலும். (௩௭)

போற்று மாயவன் மேனியின் கருமையைப் புகழ்கோ
சாற்று பூவையிற் றைதந்தபூக் கருமையைப் புகழ்கோ
வாற்று மாய்ச்சிய ரணிகுழற் கருமையைப் புகழ்கோ
தேற்று செஙகதிாக் கிரணமுங் காரெனச் செயயும. (௩௮)

நாணப் பேரருங கடிக்குழ ஙைகைய ரோடுந்
தானப் பேரர சாதியா தவாதுவந திறைஞ்சி
வானப் போமுடி யாயென மருதருள் வழஙகுங
கானப் பேருறத தவமபுரிந் ததுகமழ புறவம. (௩௯)

அல்லை வென்றிகொள் கநதரச் சுந்தரத தண்ண
லெலலை யில்லதாம போருள் சுரந்தினி திருககுந்
தொலலை வைப்பென லாயவா டானையுந துவன்ற
முல்லை மாதவஞ செய்ததேற் பிறிதெவன் மொழிவாம. (௪0)

வேதம யாவையும பிரணவப் பொருளெனல் விளக்கப்
போத நாயகன் மதலையை யுவநதமா புநதூ
ரேதந் தீரகொண் டமாவனத் தியல்பினைன் னுரைத்தாகு
சீத மார்வய னிலவளத தினுஞ்சில தெரிப்பாம (௪க)

## மருதம். வேறு.

அருமணி வைரம வாரி யகருவுஞ் சநதுஞ சாய்ததுக்
கருமதக் களிற்றுக கோடு கையரிக கொண்டு விண்டோ
யொருவனை நின்றுஙகல்லென் றிழிநதுறப் பரநது வாரிப்
பெருவயி றகங்கு ழமபப் பெருகுறும் பொருநை யாறு. (௪௨)

பிறைமுடிக கனிந்த வெஙகள் பெருந்தகைச் சுநத ரேசா
நிறைதலில் குழிவ யிற்றுக் குறட்குநீ ரசைத ணிக்க
மறைமுனி மழைத்த வாறின் றழைததனா மொழியின் மன்னு
மறைதரு மிதனுலென்ன வையையும் பெருகா நிற்கும். (௪௩)

கங்கையின் பெருக்கோ தெய்வக் காவிரிப் பெருக்கோ வன்றிச்
செங்கையி னுடல் கொண்டார் திருவருட் பெருக்கோ வெற்பன்
மங்கைதன் னருட்பெ ருக்கோ மறறிஃ தெதந்சொப் பென்னச்
சங்கையின் ருய்ப்ப ரந்து பெருகுறுந தனிவெள ளிாறு. (௬௪)

பெருகிய நதிநீர் வெள்ளம பெருமத கூடு சென்று
மருவிய வேரி புககாங் குறுமத கூடு சென்றுந்
திருவியல் கழனி யெங்குஞ் செறிந்துபல வுயிாக டோறு
மொருபரம் பரன்வி யாபித துறுதிறங் காட்டிற றனறே. (௬௫)

அளப்புரு முயிாகள் செய்யு மன்பினுக் கேற்ப யாரு
மளப்பரு மான்ம நாத ரருணிறைந் தென்ன நாட்டு
ளளப்பருங் கழனி கொளக்கக கியைதர வாறறு வந்த
வளப்பரு நீர்நிறைந்த தாாததனா களம ரெலலாம. (௬௬)

சாதியின் றமையா தானஞ் சாதிசெய் வினையென் ருோாந்தாங்
கோதிய பழையர் பாறபோய் வாய்ககடை வழிய வுண்டு
மோதிய மூவ ருளளு முழுப்பல விராம மென்னக
மாதிய வலந்தோண மேற்கொண டெழுநதனா களம செல்லாம. (௬௭)

நுகநடு வோககால் சேர நோனமையிற பொருததி நததந்
தகமிளிா கருஙக டாகக டாழவுயா பொழியப் பூட்டி
மிகமிளிர் தாவி டக்கை மேழிபற றுபுவ லககை
யகமொரு முட்கோல வாஙகி யார்ததுழு தனராான மளளா. (௬௮)

புரத்தல்செய பவனில் லாய புடவிமெய் வடுவ னைததும
பரத்தலசெய யாமற செய்கை பாங்கெனக கருதி யாஙகாங்
குரததமுன் னோந டககு முறுவிளாப் படைசசாண மாய்கருந
தரததது பின்னோ பின்னுஞ சாாவுவத தகைய மாதோ. (௬௯)

குறிகொளும பகட்டு நாஞ்சிற் கொழுமுகங் கிழித்துச் செல்லச்
செறிபசும் புறக ளாதி யாவையுஞ் சிதைந்து மாயந்தே
முறிதரு மூழத்த லெய்த முடியவு மாறி மாறி
செறியுழு தொழின்மு யன்ருர் நெமேம்பணை யெலாஞ்சே ருக. (௭0)

தழைதரல் புரிப வணக்கியாந் தழைதான் முறையே யென்று
குழைதரு தழைக ளாய்ந்து கொவெந்து நணிப ரப்பி
விழைதர மிதித்தல் செய்து மேயகங் கரிந்து யர்த்திப்
பழையநீ தகருத் தேய்த்த பான்மைய தெனச்செய் தாரே. (௭௧)

கரம்புகா ணரிய தாக்கி மேடவல் கழியு மாறு
பரம்புமேற் கிடத்தி யூர்ந்து பாறிய தோட நாளில்
வரம்புறு வரம்பில் செய்யும் வாழ்கவென் றிறையை வாழ்த்தி
நிரம்புநென் முளைவி தைத்தார் நிரப்பெனு முளைசி தைத்தார். (௭௨

கலங்கனீர் தெளிதல் கண்டு கவிழ்த்திளம் பருவச் சேயி
னலங்கிளர் பசியு ணர்ந்து பாலூட்டு நற்றாய் மான
விலங்குறு மள்ளர் நன்னீர் வேண்டிய காலத் துய்ப்பக்
குலங்கிளா முளைக ளெல்லாங் கூடுழை வளர்ந்த வன்றே. (௭௩

ஊறுநீர் பருவ நோக்கி நாறெலா முறப்ப றித்துச்
சேறுநீர் முளையின் மோதி முடிசெய்தோ ரிடச்ச ரக்கை
வேறுவே றிடத்தி னுய்க்கும் வாணிகர் விழைய மள்ளர்
மாறுநீர் பணைக டோறு மதித்தனர் சுமந்துய்த் தாரால். (௭௪

ஆய்பிழி மாந்தி மீன்க ளளவும்வெற் றிடமின் றென்ன
வேய்புனை திரடோ ளாற்றுக் காலாட்டி மார்வி ராவிச்
சாய்தர நாறு நட்டார் சாய்வொழித் திடுமக் குத்
தோய்தரா திதுவென் றம்ம நிமிர்ந்தன தோகை காட்டி (௭௫)

முளைவிளாத் தப்பாற் பச்செனு ற்றயதோர முறைமை போலத்
தலைதொறு நாறு வெள்ளென் றாய்த்தனி பசப்பிற் றங்கக
களைவருந் தவத்திற் கூறாக் காமமா தியசார்ந் தென்ன
விளைசரோ ருகமுன் னாய பற்பல மிடைந்த வன்றே. (௭௬)

களைகளை பருவ மென்று கடைசியா தமமைக் கூவித
தலைதொறு மள்ள ருய்ப்பச் சார்ந்துவெள் ளோதி மங்கள்
விளைநடை கற்பா னெனணி விழைந்துபின் றொடர வாங்காங்
குளைபல களைக ளெல்லாங் கொல்லுவா னமைந்தா ரன்றே. (௭௭)

பேருற வுற்ற போதுஞ் சிறப்பகை யேனும பேணார்
சீருற வுயர்ந்தோ ரல்லார் செததவ ரென்றன் மெய்யே
யோருமா லுந்தி யாயு முழத்திய ருறுப்பு நள்ளாச்
சாருமோர் பகையான் மாண்டு சாயந்தவம புயங்க ளெல்லாம். (௭௮)

நகமெனுந் தோட்டி யாலே நக்கவெள் ளாம்ப லெல்லாந்
தகவொறுத் தனர்கை யேவாற் றாமரை பலவுங் கொன்று
ரதுமிர் புல்லின் மேலா லங்கிரி யெடுத்து வைத்துட்
புகவடர்த் தனர்மற் றின்னும் புரிந்தவைக் களவுண் டாமோ. (௭௯)

கொடியபுண் டரீக மங்கோ கனகநீ லோற்ப லஞ்சூழ
கடியரக் காம்பல் வள்ளை முதற்களை யின்ற யாவுங்
கொடியவென் றொருபேர் பெற்றுக் கடைசியர் கொல்லப் பூட்டி
படியிலெவ் வுயிர்க்குந் தீதே கொடியன வெனும்போ பற்றல். (அ0)

சிலமலர் குழலில் வேய்ந்தார் சிலமலர் கழுத்திற் சேர்த்தார்
சிலமலர் கையிற் கொண்டார் சிலமலர் மோந்தெறிந்தார்
சிலமலர் வாயின் வைத்தார் சிலமலர் வரப்பி னுய்த்தார்
சிலமலர் காண்மி சித்தார் தராதரந் தெரிந்தா ராரோ. (அக)

விண்ணமை பசுக்கூ ருருகு ராதியர் விளிந்தாற் போல
மண்ணமை பயிர்க்கூ றுய களையெலா மாய்ந்த பின்ன
ரெண்ணமை யுலோப மிலரா ரிரும்புகழ் பணைத்தாற் போலக்
கண்ணமை கழனி யெல்லாம் பணைத்தன கழைகொ லென்ன. (அஉ)

இளங்கருக் கொடுமு திர்ந்து வயிரகெட் டிட்டி போலுந்
துளங்கருந் தோற்றங் காட்டி வெளிப்படு மேத துவன்றி நின்று
வளம்படு கதிர்க ளெல்லா மதிவிடு கதிர்வி ராவி
யுளங்கொளக் கனத்துச் சாய்ந்த வுயிரெலா நிமிர மாதோ. (அங)

கொல்லரம் பயின்ற தாய கொடுமபிறை யிரும்பு கைக்கொண்
டொல்லெனக் கழனி தோறு முழவர்க ளொருங்கு புகுந்துச்
சொல்லெனப் பட்ட வெல்லாந் தூரகத் தரிந்து சாய்த்தார்
வல்லையின் வரிந்து சென்னி வைத்தனர் களத்துச் சேர்ப்பார். (அச)

பாகசா தனன்சி னந்து பருப்பத மனைத்து மள்ளி
மேகவா கனத்தைக் கூவி மிதித்திட விடுத்தன் மான
மோகமா நெற்போர் தள்ளி மொய்கடாப் பிணையல் செய்து
வேகமா மிதிக்கச் செய்தார் வெவ்வலிக் களமா மாதோ. (அரு)

ஊர்தரு மிறைவன் மெய்வே றுயிர்வேறு படுத்தன் மானச்
சார்தரு கடாவை வேறு நெல்வேறு சமைக்கக் கண்டு
போர்தரு திணிதோண் மள்ளர் பொருந்திய பலால நீக்கி
யார்தரு நெற்கு வித்துத் தூற்றின ரளவை செய்வார். (அசு)

கொற்றவ னிறி லொன்று கொளக்கொடுத் தறங்க ளெல்லா
மற்றமின் றுகத் தோன்று தொடுமுறை யமைய நல்கி
மற்றதை வாரித் தத்த மனைவயி னுய்க்கு மோர்ப்புக
கற்றவர் புகழ்விண் ணாடு காதுகை பொதத்ச் செய்யும். (அஎ)

கழைவடி சாறு காய்ச்சிக் கட்டிகொள் வாரு மிஞ்சி
விழையரி சனமுன் னாய வேறுபல் வளங்கொள் வாரும்
புழைமண்ப் பொதுமா தோடு புதுப்புன லாடு வாரு
முழைவிழிக் கிழத்தி மார்த மூடலை யுணர்த்து வாரும். (௮௮)

இறைபுரி யாட லெட்டெட் டியற்றுவா னேற்றமாக
முறைமையி னவர்க்கு ரூர்ந்தி முளைத்தவைப் பாய மூதூர்
நிறைசிவ லோக மென்ன நிகழ்திரு வால வாய்தன்
னுறைகெழு மருதத்துள்ள தெனினினிச் சொல்ல லென்னே. (௮௯)

மாவண மேனிப் பொன்போல் வாளுகிக் குறிக போலத்
தேவண மாலாக் கொண்டா ரேறறினி தமரு மூதூர்
பூவண மென்ப தந்த மருதத்தே புணரு மென்னி
னுவணச் செம்மை யாரு ளியாவரே நயக்கி லாதார். (௯0)

ஆடக மிளிரும் வையை யருகிற்சை வந்தா பித்த
வேடகங் கொணட தாய வேடக மாப்ப னாமுற
கூடகங் கொண்ட மென்பால் வளதெவன் குறித்துச் சொற்று
நாடக நிகழு நெய்தல் வளஞ்சில நவில லுற்றும். (௯௧)

## நெய்தல்.

மழைவளஞ் சுரந்து விணனு மணனும்வாழ தாசசெய் கொ[illegible]மூ
விழைதரு முணவு நல்கு மேன்மைமிக குடைய தாகிப்
பழையமா நதிகட் கெல்லாம் பதியெனப் பட்ட வாரி
யுழையுறப் பெற்ற நெய்த லோம்புவன் வருண னுளும (௯௨)

பொருசுறு மருப்பொன் றூன்றிப் புன்னையம போது சூட்டிப்
பெருகமீ னுணவு நலகிப் பேணுபு வணங்குந் தோறும
வெருவறக் கோட்டி னின்றும வெளிப்பட வருணன் றேன்றித
திருவமப் பாதர்க் கீயுஞ் சிலைத்தல்வான் செவிடு செய்யும். (௯௩)

இரும்பினைத் திரித்தா லன்ன விருங்கருங் கோட்டுப் புன்னை
யரும்புகொள் குடுமி பற்றி யந்துகிக் கொடிவ ளைபபக்
கருங்கடற் றிரையெப் போது மறைவது கணடு மாங்கே
விரும்பியல் குவவி லாபம் விளைவதை யறிகி லேமால். (௯௪)

இடார்தப வாரி மேய விருஞ்சுற வாதி மீன
மடாவலை வீசிக் கோற லன்றியுந் தூணடி விட்டுப்
படருறக் கோறற காகப் பரதவ ரமைத்தாற் போலுந
தொடர்புடைப் பகன்றை யெங்கு மருமபுக டோற்றுங் காட்சி. (௯௫)

இறையவன் சினகரு மாறென் றியற்றியா மிழிந்தா மேனு
மறைகட் லுவக்கு மாறென் றூற்றிமிக் குயாவா மென்று
முறையுற வெண்ணித் தாழை மொய்பல புலவு மாறக்
குறையறப் பூத்தெண் டிக்குங் கொளப்படும் வாசம் வீசு. (௯௬)

தளிர்படு மிண்டி வைப்புந் தவாக்கொடி முல்லை வைப்பு
மொளிர்செழுங் கமல மாமபூ வுற்றதண் மருத வைப்பு
மிளிருண வாக்கா நீலம விராயதே யாக்கு மென்று
குளிர்திரை நெய்தல வைபபிற் குடிகொளுங் காகப் புள்ளு. (௯௭)

திரையெடுத தெறியுஞ சங்குஞ் செழுந்துகிரத் திரளும் விணமீன்
புனையொளி முதது மற்றும் பொருந்துவ வனைத்துங் கொள்வான்
கரையகஞ் செறியும் வண்ணு கங்களபொற பொதிய விழக்குந்
தரையிது கணடும் புன்மை யடைமொழி சாற்ற லென்னே, (௯௮)

ஓரொலிக் குவமை சொல்லி னுலகளுசூழ பரந்த வாழி
யாரொலி யுரைப்பா கறற வறிவுடை யவாக ளியாரும்
பாரொலி நிகழு நாவாய் பற்பல படைத்த லாலே
பேரொலி யுடைய தென்று பேணுபு மதிததா போலும. (௯௯)

நல்லவை நல்ல செய்யு நாட்டவா மதிக்க நாளு
மல்லவை யல்ல செயயு மென்பதை யறிந்தா மன்றே
பல்லமுண் டகமபுன ளுகம பானனல் வாசம் வீசு
முல்லமுன் னுய பன்மீ னுற்றதீ வாசம வீசும. (௪00)

நல்லது தீய தோடு நண்ணுறிற தீய தாநன
கல்லது நலல தோடே யணுகுறி னல்ல தாகு
மொல்லுநன னீல மீன்சாரந் துறுபுலா னுறு மீனும
புல்லுநீ லஞ்சாரந் தேனின் மணநாறு மிகுபு ணர்ப்பால், (௪0௧)

மழைவளம வேண்டி நிற்கு மருநிலத தவர்போ லாது
விழைவள நமகதீதென்று வெயிலவளம் வேண்டி நிற்குந்
தழைதொழி லுமணர் தமமாற் றரப்படு முப்பி னேங்கல்
பிழையற வெவரும் வேண்டுமெ பெருஞ்சுவை யாயிற் றம்மா. (௪0௨)

உருவள மிரண்டி னுலு முற்பெரி யவரே யேனும்
பருவரல் கண்டுஞ் சற்றும் பயன்படா ரவ்வி ரண்டு
மருவிய சிறிய ரேனும் பயன்படு வாரு முண்டாற்
பொருதிரை கடல்சிற் றூறற் கேணியாற் பொருந்த வோர்ந்தாம். (௪0௩)

சிலைவலி யிராமற் குற்ற பாதகந் தீர்த்த மேன்மை
நிலைமரு விராமே சஞ்சீர் நிலாந்தனுக் கோடி யோடு
மலைவற வைக செய்தன் மாதவஞ் செய்த தென்னிற்
கலைவலீ ரனைய் செய்த னிலப்புகழ் கரையப் போமோ. (௧0௪)

வரையிரு சிறகு மாய்ததான் வானக வாழ்க்கை மேவிக்
கரையறு மகிழ்ச்சி யெய்தக் கைமல ரொருவே ரெட்ட
விரைகமழ கடப்பந் தண்டார் மேலவன் செந்தில் வைப்புந்
திரையெறி செய்தன் மேய தெனினினிச் செப்ப லென்னே. (௧0௫)

கனியருள் சுரகருந் தீரதத நலமெலாந் தன்பாற் கொண்ட
புனிதமல கியபே ராழி பொருந்திய செய்தன் மேன்மை
தனிலெவ னுரைத்தாங் கெரறறி தனியர் சிருககப பெறற
கனியழற் சுரமாம பாலை யினுஞ்சில கரைவா மன்றே. (௧0௬)

பாலை வேறு.

பாலை யென்பது நானில மருங்கினும் பரல்கூர்
மாலை வன்றிட ரேமுது வேனில்வாய் மாலை
காலை தீர்ந்துவெ கதிர்சுடு கடுமபக லாய
வேலை வெப்பமிக் காய்நிலைப் பிறுஞ்சுடும விறறறே. (௧0௭)

ஈநது மெய்சிறு குரம்பையாங் காங்குற விறைததுப்
போநது வாழ்குவா மறத்திய ரோடுபுள் ளுவர்கள்
காந்து வெஞ்சின விந்தைதா டொழுந்தொறுங் கடும்போா
தீர்ந்து வன்றிற லரிதத்திடப் பெற்றநீர் மையராய். (௧0௮)

சுரநி லத்தமர் தரினுமா றலைதநிடு தொழிலாற்
பரவு நானிலப் பொருள்களு மிறுக்கர்கைப் பற்றி
யுரவு மேவுற நுகருவர் கல்லுண வுண்டு
விரவு மென்புறு வுயர்தல்கண் ணேகியும விடாரால். (௧0௯)

கொடுமை யாளரே யாயினுங் கூடுபெ காரப்
படுவ துண்டுகர்ச குரததா னெல்லியாற் பலவா
யிடுகை னிக்கள விலைவிரைப் பாடல மதுவாற்
றொடுவ றுஙகிணை றகநிறைத் துறுவதச் சுரமே. (௧௧0)

இந்த நாடுகாப் பவன்றிர லோண்மிசை யிவர்சம்
பந்த முண்மைதேர்ந் தாவயின் வேம்புகள் பரவு
மந்த நாயகன் சிவக்குறி யவாவலோர்ந் தறியச்
சந்த மார்கனி கிளையெலாந் தைததரப் பழுக்கும். (௧௧௧)

எருமை பேட்டிற்குச் சிறகரால் வெயின்மறைத் தியங்கிப்
பொருள்க ருத்துறப் போமவர் செலவழுங் குவிக்குந்
தெரிய வாவயி னியங்குவான் சென்றகெட் டராக்கள்
புரிமு றுக்குடைந் தாலெனப் புரளுவ போகா. (௧௧௨)

இலங்கை மாநகர் வாழ்நருள் வீடண னென்னத்
துலங்கு மாவயிற கன்னிகா ரம்பல துவன்றி
நலங்கொள் காதலா பின்றொடர் நங்கையர் வருந்தா
தலங்கு சீறடி யின்புறப் பஞ்சிக ளமைக்கும். (௧௧௩)

ஓங்கு நம்பெய ரிங்கில முற்றதென் றுறந்து
வீங்கு பாலைக ளாவயிற் பழுப்பன மேன்மே
லாங்கு மேவியக் கனியுணின் வெளிப்படா ததர
நீங்கு றுமலோட் டதொடும் பொருந்துத னிசமே. (௧௧௪)

இன்ன பாலைவெந் தழலெனக் கொதிப்பினு மிகழார்
முன்ன மாலைய ணுடிய தெதையென முன்னி
னென்ன பாலைசால் வளத்திலென் னறைந்தன மறைவாஞ்
சொன்ன நானிலத் தைந்திணை மயக்கமாந் தொடர்பும். (௧௧௫)

## திணைமயக்கம்.

வரைகொள் பாகன்மேற் படாதரு கறிக்கொடி வாவி
விரைகொண முல்லைநீள் குருந்தின்மேற் படர்தர மேவிப்
புரைகொண் மஞ்ஞைகான் வாரண மெதிர்புரிந் தியங்குங்
கலைகொள் கூத்தியர் கயிற்றெதி ரெதிநடப் பதுபோல. (௧௧௬)

மேய வான்குழக் கன்றுண லொழிந்தபின் வீபோ
லாய தோரவ லம்மபுக வவ்வவ லகத்தே
பாய மாமரு தக்கத லிக்கனி பலவுந
தோய வீழ்வது கணடேல் கெடுத்தின்னுஞ் சொலலும. (௧௧௭)

செய்ய முண்டகச் செய்வள ரோதிமச் சேவன்
மெய்யி னெய்தன்முண டகத்துறு மகரந்தம் விராவத்
தைய லார்பெடை புதுக்கடித் தன்மைதோந் தூட
லைய மற்றதி தடிக்கடி தாள்பணிந் தணையும. (௧௧௮)

அலையு றும்பவ ழக்கொடி செழும்பணை யகத்து
நிலைபெ றும்வய லைக்கொடி நெடிபடு முல்லை
மலைவில் பூவையைத் தழுவுவ மாலைமா மகளு
முலைவில் பூமக ளுந்தழீஇ யுவப்பதை யொக்கும். (௧௧௯)

கடலெ றிந்திடு தாளமென் கரும்பெறி தாள
மிடல்கொள் வேழவெண் மருப்பெறி தாளமான் மிளிர்பல்
விடல்செய் முத்தமற் றிவைமதூ கத்தல ரியைய
வடன்ம றத்தியர் வாரியோர கறையிலிட் டவைப்பார். (௧௨௦)

அன்ன ரிவ்வள மலிதரு குலத்திணை நான்கு
மன்ன வெவ்வகைக் குடிகளு மரபுளி வைகச்
சொன்ன மேயெனத் தலங்கிடும வழுதிநாட் டிறுசீ
ரென்ன சொற்றன நகர்வளத் திறுஞ்சில விசைப்பாம். (௧௨௧)

திருநாட்டுப்படலம் முற்றிற்று.

ஆகத்திருவிருத்தம் ௧௫௮.

# திருநகரப்படலம்.

பேசரும் வளத்தான் மிக்குப் பிறங்குறு வானங் காப்போன்
றேசமை வாழ்க்கை வேண்டேன் செய்பதா மரைமே லணணல்
வீசரும் வாழ்க்கை வேண்டேம விணடுவின வாழ்க்கை வேண்டேம்
வாசகப் பெருமான் செம்பொன் மலரடி வாழ்க்கை யோமே. (௧)

வேறு.

நிலமெ லாம்புகழ் தெடுநகா பலவுந நினைத்த
பலமெ லாந்தரு நகரமுஞ் சிலவவை பரவ
வலமெ லாமபொலிக் துயாந்ததோன் றேயென வயங்கு
நலமெ லாமபொலி நாம்புகழ பெருந்துறை நகரம். (௨)

கூட்ட வல்லது பலவகைக் குடியையுங் கூட்டி
யூட்ட வல்லது பலவகைப் போகமு மூட்டிக்
காட்ட வல்லது புண்ணியப் பொருளினைக் காட்டி
நாட்ட வல்லது கயிலையிற் பெருந்துறை நகரம். (௩)

நீடு வானவர் குழாத்தொடு நிகழ்மக வானுங்
கூடு முண்டகா சனத்தனுங் கொண்டன்மே னியனும்
பாடு மெல்லையி னிறைஞ்சியுட் புக்கனர் பரவ
நாடு மாண்மியம் படைத்தது பெருந்துறை நகரம். (௪)

அறிய வானவ ரியாவரும் வீதிதோ றணைந்து
செறிய வீழ்ந்துவீழ்ந் தடிக்கடி பணிந்தெழு திறத்தான்
முறிய கற்பக நாறுறு முண்டகத் தோடு
நறிய பைந்துழாய் நாறுறும் பெருந்துறை நகரம்.

ஒளிகு லாம்பல விமானமு மதப்பெருக் குணூறு
வளிகு லாங்கவுள் வெள்ளைவா ரணமும்வெள் ளனமுங்
களிகு லாங்கலு ழனும்புற நகர்த்தலை காப்ப
நளிகு லாம்வளம் படைத்தது பெருந்துறை நகரம். (௬)

மதிசெய் வெள்ளிய மாடமு மாடமேன் மதியுந
துதிசெய் வாலிய கொடிகளுஞ் சூழமுத தார
நிதிசெய் மாலையும படைத்தமைக் கேறபகீள் வெள்ளை
நதியு மேழாபுறம படைத்தது பெருந்துறை நகரம். (௭)

மறைக ளாகமந் தோறறலாற் பரமன்வாய் மாலுங்
குறைத ராவொளி யாலநித தியமுருக் குணததான்
முறையி னியாவரும் வணங்கலான முதலவன் போலு
நறைவி ராவிய பொழில்சுலாம பெருநதுறை நகரம. (௮)

ஆய விந்நகர் வளமெலா நோக்கிமிக் காசை
மேய தன்மையா லாசைமா நகரென்றும வெறுக்கை
பாய தன்மையால் வெறுககைமா நகரென்றும பகர்வார்
நேய மாபுல மையர்நிறை பொன்னக ரினையே. (௯)

எநத மாநக ரெங்கணும புகவியங் கிடுவா
ரந்த மாசிறு துறையதைப் பற்றுவ ரிதனை
நநத வெய்துநா பெருந்துறை நயந்தகா ரணத்தா
லந்த மில்லதோா பெருந்துறை யென்றதா லகிலம். (௧௦)

குரவு பூண்பவ ரியாவரோ யாயினுங் கொன்றைப்
புரவு வேணிய னேயெனப் பாவனை புரிவா
ரரவு சூடவ னேகுர வேற்றினி தமரும
பரவு மாநகர்க குவமையு முணடுகொல் பார்மேல். (௧௧)

மதிமி லைச்சிய சடாடவிக் கடவுளை மதியிற்
கதிவி ருப்பமை யடியவா சூழவது கடுப்பப்
பொதிவ ளத்தமை திருப்பெருந் துறைநகாப் புறததே
துதிவி ருப்பமை யிளந்தளி ரிரும்பொழில் சூழும். (௧௨)

மணிநி றத்தவன் மார்பமே வையமம் மார்பி
னணிக வுத்துவ மணிதிருப் பெருந்துறை யாகும்
பணிசெ யம்மணி சூழ்தரு பைந்துழாய்ப் படலை
திணிம திற்றிரு நகரிது சூழ்திகழ் சோலை. (௧௩)

ஆய சோலையின் மங்கைய ரம்மனை யாடப்
பாய வானர மதுகண்டு மாங்கனி பறித்தது
தோய விண்ணக மெறிதரச் சுரரவை பற்ற
நேய மாரிவை மீடரா தென்னென நினையும. (௧௪)

பொங்கர் சூழ்பசுங் கமுகின்மேற் றவுவ புலாநீர்
மங்கு றச்செழுந் திரையலின் கொழுந்துமாத் திரமோ
பங்க மொன்றறப் பன்மலர் வாருபு பரவக்
கொங்கு கொண்டெழு சிதநித் திரையலின் கொழுந்தும. (௧௫)

சோலை வாய்நிலா மிலாங்கலித தலையுமஞ் சுருமபரா
மாலை மாதரார் மார்பமுந் தாங்குவ குருமபை
பால வாமொன்று சிறுமையின் மறைப்புணும பருமை
யேல வொன்றஃ துண்ணுமால வேறுமை யிதுவே. (௧௬)

வாவி வாளைதாய வலிமுக மசசுற வியற்ற
மேவி மற்றது தென்னையின் பழக்குலை மிதிபப
வோவி யப்பழ மாவிவீழ்ந் ததனையச் சுறுத்துந்
தாவி யாவரு மிடாக்கிடர் செய்வது தகவே (௧௭)

நெடிய கந்தியஞ் சூழல்வாய் நிலவுவெள் ளாற்றுக
கடிய வெண்டிரை வளைப்பவீழ் பழம்பசுங் கதலி
முடிய வாங்குலைக் கூனக மோதுதல் முன்னாள்
வடியி ராகவன் வில்லுண்டை கூனுறன் மானும. (௧௮)

தெங்கு சேர்பொழின் மாயவ னிற்பது சிவனுந
தங்கு செவ்விய தேததடை சக்கரம் போலு
மங்கு வெண்பிறை யொருபுறத் துறலவனை யாகும்
பொங்கு செங்கதிர் நடுவுறல் கவுத்துவம் புரையும. (௧௯)

நந்த னங்களி னுலவகை மலர்களு நந்தி
மந்த மாருத மேற்றமர் தருக்கரு வண்ட
ரந்த மில்லென வீழுத லமரர்தே மென்று
முந்த வர்தவு ணர்கள்பொர மொய்ப்பது புரையும. (௨௦)

மன்னு மேன்மைசா ருப்பெருந் துறைப்பெரு வளந்துணை
முன்னு சிற்சில பொதுமையின் மொழிந்தன மப்பாற்
றுன்னு மூவகை நகருளும் படைபல துதைந்து
மின்னு கின்றதா கியபுற நகர்வளம் விரிப்பாம். (௨௧)

## புறநகர்.

### யானைக்கூடம்.

கோடு கொண்டன மணியுடை யனமதங் குலவு
நீடு பேரரு வியவுருப் பெரியன நிலவு
மாடு வன்மைய வரைபொரூஉம் யானைநின் றிடுவ
வீடு சான்றியங் கிடுவன வேற்றுமை யிதுவே. (௨௨)

கறைய டிப்புகர் முகவரை நின்றிடு கம்ப
லுறைவெ தித்திடு மதப்பெருக் குவட்டெடுத திடலா
னிறையு மறநது மூவங்க யெனப்படு நிகழபாற்
பிறைப்பு ணாச்சியர் வாரியென் றிட்டனா பெயரே. (௨௩)

ஒரும ருபபுநால் வாயக்கரி போகிய தண்ட
மருவு றக்கறை யடிச்சுவ டுறுவமற் றவற்றுட்
பெருகு றக்கடா நிறைதலாற் பெட்டளி யுணப
வொருக லக்கள்பன் மறையவா கூடியுண் பதுபோல் (௨௪)

கறைகொள் காற்றொடா கைத்தொட ரன்றியுங் கால்பன்
முறையெ ழுஞ்செவி யடித்தொட ரெதற்கென மொழிய
நிறைக டாம்பொழி குஞ்சர மியங்குறு நிலத்திற்
குறைவி லாக்கருங் கோலஞ்செய் தெனவவை குலவும். (௨௫)

எதிர மேவிய மருவலர் மருவல ரென்னக
கதிர்கொள் வானகக் கால்கொடு கயங்குற மிதித்தும
பிதிர்செய் தீங்கிரி யாணமோ வாப்பெருந் துமபி
யதிர யாநதகூ டம்பல வயங்குவ வாங்கே. (௨௬)

### குதிரைப்பந்தி.

பரியெ னப்புலர் வேண்டலிற் பரியெனு மொருபோ
தெரித ரப்பெறு குதிரைக டம்முருச் சிவணு
மரிபு ணர்ச்சிமெய் வடுப்படா விதமுளத தமைததே
யிரித லற்றிடத் தோய்ந்துந்தோ யாவித மியங்கும். (௨௭)

பரிக்கு ழாங்கடன் முழக்கமி ரிட்டத்தினும் பரவும
விரிக்கு நெட்டலை கவிழ்தலை மற்றவை வீசுந்
தெரிக்கு முத்தினம் விலாழியிற் சிதறுறை யெனினு
மரிக்கு மோர்வட வைப்பெயர் முரணுடைத் தன்றே. (௨௮)

சிறையி லாழலே பறந்துகொக் கெனும்பெயர் தேற்று
மறையில் பூப்பின்றி மணந்துபா டலப்பெயர் வயக்கு
நிறையி லக்கண மேவியுங் கோரப்பேர் கிலவு
மறையு ளுதுமே லெழுந்துகந் துகப்பெய ராக்கும். (௨௯)

எங்க டமருரு வாதிநா லெடுத்திட விளைத்த
திங்கள் சூடிமற் றதன்'மிசைச் சிவணலா லளைய
வங்கண் மாலையான் மறைக்குமே லானென்ப ரதனு
ணங்கள் வான்புகழ் பெரிதென நவிறல்போன் முழங்கும். (௩0)

பகைத்த மன்னவர் மணிமுடி மிசைக்குரம் பதிக்கு
முகைக்கும் வீரர்க்கு வெற்றியே நாடொறு முய்க்குந்
திகைத்த தன்மையில் வாம்பரி பற்பல செறித்த
நகைத்த மந்திர மாவயி னெணணில நணணும. (௩௧)

தேர் நிலை.

அம்பொன் செய்தகா லதன்மிசை வயிரஞ்செ யச்சா
லும்ப ரொண்பது மராகஞ்செய் பரப்புதன் மிசையே
நம்பு நீலக்கான் மிசையொளிர் மேதக நயந்த
பம்பு தேரெலாம் பூதலைந் தடுக்கிய படியாம். (௩௨)

வெற்ற மேபொரு ளெனகொண்டு விளங்குமே தகவாற்
றொற்ற மாசயந் தனமென வொருபெயர் கூறிக்
கற்ற நாவலர் புகழுந்தேர்க் காற்கடுப் பதனுக்
குற்ற காற்கடுப் போரணைக் காற்கடுப் பொவ்வா. (௩௩)

அருக்க னென்பவ னுடொறு மாழ்கட லாழத
நிருக்கு ருவொரு செலவன்றி மீடலுந் தெரிநத
பெருக்க மாருமிப் புறநகாத் தேரெனப் பிறங்கு
முருக்கு லாவுதேர் பெருவொரு நாணத்தா லன்றே. (௩௪)

விணகி ழித்திடு முடியுமோர் வியாளமு நடுங்க
மண்கி ழித்திடு மடியுங்கொ ளிர்நகர் மணிததே
ரெண்கி ழித்திடும் படிசெலுந் தன்மையெய்த தன்றே
கணகி ழித்திடு நுதலிதேர் நிலையுற்ற கடனே. (௩௫)

அடரு மாற்றல ரெதிர்ப்படி னுகவத் தன்னுர்
குடரு மூளையுஞ் சோரியுங் கொழுவுமவன் னரம்பின்
றொடரு மென்புமற் றுள்ளிவுந் துவையலே யாகப்
படருங் கால்வலித தோகிலே யாவயிற பலவால. (௩௬)

## வீரரிருக்கை.

கண்ணி மைத்திடார் வேலெதிர் கனன்றுமே விடினுங்
கணணி மீன்றுவைத்த காலபின்வைவ யாக்கழல் வீரர்
கண்ணி வப்புறு தும்பைசூ டுதல்கண மேனுங்
கணணி வாகையே சூடலென் றும்மவர் கற்றோர். (கஎ)

ஆசை யெட்டினு நிறாஉம்பிர தாபத்தி னவிமர்தா
மாசை சேர்வது வரினுயிர் பொருளென வையார்
தேசை யார்கழ லார்பகை யெதிர்சினங் கழலா
ரீசை பாலின னிளமூளை யெனத்தகு மியல்பார். (கஅ)

சிலைவ ணகுமு னெதிர்ப்படு மாற்றலர் திண்டோண
மலைவ ணகுவா வாள்கொடு வீசுமுன் மாற்று
ரலைக டற்புவி யவர்கொள வீசுவ ரனையர்
நிலையுடைத்திற விறறென நிகழ்த்துவா ரெவரே. (கக)

இனைய வீரர்த மேவலா ளருமிகல் யானை
துனைவ யப்பரி சயந்தனக் கருவிதோற் றுநரு
முனைய வாயுதஞ் செய்நரு மாய்ப்பலர் முற்றி
நினைய மேவிய விருக்கைக ளாவயி னெருங்கும். (சo)

வருவ செல்வன கரிபரி முழக்கமு மணித்தேர்
தருவ தாகிய முழக்கமும பகனொடுஞ் சலதி
யொருவ மிக்கெழும் புறநகர் வளஞ்சில வுரைத்தாம்
பொருவ தொன்றிலா விடைநகர் வளஞ்சில புகல்வாம். (சக)

### இடைநகர். வேறு

தொகுபொன் மாடமுஞ் சுடாசெய் கூடமுந்
தகுபல் சோலையுந் தடநன் மாலையும்
புகுந ரியாவரும் பொருந்த சோகசுபு
நகுசு வர்க்கமு நரக மென்பரால். (சஉ)

பற்ற வாளி படருஞ் சோலைவாய்க
கற்ற மங்கையா கைதொட் டாட்டத்தோ
மற்ற மாதரா ரூச லாடியாங்
குற்ற மைந்தரை யூச லாட்டுவார். (சங)

மாட மேலிவர் மங்கை மார்கைசற்
றோட நீட்டிமே லுற்ற கற்பகப்
பாட வாங்கனி பறிப்ப ரிம்மையே
பீட வாமறு மையும்பெற் றாரரோ. (சச)

பலவின் மாடமேற் பளிங்கை நீர்நிறை
தலமெ னுநபச் சுரபி தாவிடு
முலவு தேவுரு வுற்ற போதினு
மலம ருதெனின் மயக்கந் தீருமோ. (௪௫)

கொடிய மாடமேற் கூடு வார்திற
னெடிய வானவர் நிரம்ப நோக்கியுட்
படிய வோரமுக காறு பற்றலா
லடிய தாமக வாகக நீததனர். (௪௬)

முகைசெய் கூந்தலார் முறிசெய் கைகளாற
றகைசெய் பந்தெடுத் தறைத ரக்கொங்கை
யுகைசெய் தொண்டுகி னேக்கு மோரிடா
பகைசெய் வாக்குறிற பார்ப்பு றுரெவா. (௪௭)

தைய லாமுகனு சரிகொ லோவெனக
கைய தாமதி காளை மைந்தர்கள்
செய்ய மாடமேற் சோப்பக கண்ணிடு
மைய ளாவலான் மறுவென் றுயதே. (௪௮)

கோல மாதரைக் கூடும வாஞ்சையுட்
கோல மைந்தாமேன் மாடங் கூடவைக
கோலன் றேர்மிசைக் கொணடு மென்றதக்
கோல னுப்புகுங குறங்க ணாடரோ. (௪௯)

இலக்க மாயபா சவலி டிக்கும்பேர்
துலக்கை தாககலா லுதிர மாங்கனி
நலக்க வொன்றனை நணணுங் காலையொன
றலக்க ணீங்குற வடைத லுண்டரோ. (௫௦)

வஞ்சி யர்கலார் மாட மீமிசைக்
கஞ்சி யாதுகில் கமழ வூட்டிய
வஞ்செ ழும்புகை யடைத லாலன்று
மஞசு வான்புகை வண்ண மென்பரால். (௫௧)

முல்லை மாதரார் முலைக்குத் தோற்றன்று
வொல்லை யம்புய முறுக்கு டைந்திடும்
புல்லு றுதபங் கம்பு ரிந்திடற்
சொல்லு மீதொன்று பல்ல துன்னுமே. (௫௨)

பிணைய ஞர்முலை பிறங்கு கைத்தழீஇ
யிணையு மைந்தர்த மார்ப மூழ்துவ
துணையி லாத்தமிழ் முனிகை தொட்டபோ
திணையி லர்வளா யழுந்த லென்னவே. (௫௩)

துங்க மைந்தர்தஞ் சிகையிற் றோகைமார்
பங்க யப்பதச் சுவடு பாய்தலா
லங்க நான்மறை யாய்ந்த வேதியர்
தங்கண் மைந்தரெச் சாதி யாருமே. (௫௪)

ஆவி வாயினி தாடு மாதரா
ரேவி னும்விழி யிகுளை மாரெனத்
தூவி யோதிமர் தொடர்ந்து செல்லுவா
ரோவில் பேதைமை யொழிக்க வல்லரோ. (௫௫)

மங்கை மாதரார் வாரி சம்பொரூஉஞ்
செங்கை மேவுவ கிள்ளை தேருங்கா
லங்கை யாவடி வங்க லாதடங்
கொங்கை யுந்தக மேவல் கூடுமே (௫௬)

நீடு தோள்வலி நிலைஇய மைந்தர்கள்
பாடு மாதரைப் பரிந்து வேட்டொளி
யோடு பேர்மறு கூடு லாவுத
னூடு மிந்திர னறுமொ றுப்பனல். (௫௭)

காவ ணத்திடைக் கதலி யாத்துமென்
பூவ ணத்தொடை புனைதல் செய்தபே
ராவ ணதெழில் கேட்ட டைந்தவர்
மாவ ணத்தவா னுலகம் வாஞ்சியார். (௫௮)

மண்டு தீஞ்சுவை வாய்ந்த சிற்றுணாக்
கண்டு நேருறாக் கனியு மற்றவுங்
கொண்டு போமெனக் கூறுந்தேமமு
துண்டு ளார்க்கும்வா யூற்றுண் டாக்குமே. (௫௯)

நயம மைத்தசொன் னங்கை மார்முலை
யியலு மைந்தர்க ளியாவ ராயினும்
புயநெ ருங்குறப் புரியும்,வீதிக்கு
நியம மென்றபேர் நீதி யாங்கொலோ. (௬௰)

கடையுறப்படா வளங்க ளிந்திடு
மிடைடாகர்ச்சிறப் பென்னு மாத்தன
மடையும் விண்ணுலக தனை யொள்ளுபு
மிடையு முண்ணகர் வளமும் விள்ளுவாம். (௯௧)

அகநகர். வேறு.

அகழி.

போழ்ந்தவண் குசைநுனி யனைய புந்தியர்
தாழ்ந்தபல கலைகளு முணர்ந்த சான்றவா
வீழ்ந்தநுண் புலமையர் மிளிர்க ருத்தினு
மாழ்ந்தது சூழ்ந்தபே ரகழி யென்பவே. (௯௨)

எண்ணிய கடலெலா மிந்த வண்ணமாப்
பண்ணிய வெனவிதிக் குணர்த்தும் பான்மைகொண்
டண்ணிய சிவபிரா னமைத்த வாழியா
நண்ணிய பெருந்துறை நகாக்கி டங்கரோ. (௯௩)

வாரியு ளொளித்தமை நாகம் வணடமி
ழாரியன் குடிக்குங்கெவ் வறியு மேயென்று
பேரிய லரணமாப் பிறங்கிப் பாமபுரி
சேரிய நினைக்குமேற் செப்ப லின்னுமென். (௯௪)

ஒருகடல் கணமேற் றுள்ள வாரியுந்
திருகறச் சேர்ததறி வாஞ்சை தீர்ந்தனஞ்
சுருதிசொ லிந்நகர் சூழ்கி டங்கெனுங்
கருதருங் கடலினை கண்ட பின்னரே. (௯௫)

வெளியுற மணவர விந்த மாதிவீ
களிகரா முள்ளுறக் காணும பேருதேத்
தெளிநல மகமபுறந் தீய தேற்றமை
யளிநலப் புத்தர்மா றுய மைந்ததே. (௯௬)

மதில்.

மும்மதில் வானவர் முனிய மேயதா
லம்மதி லிறைவனு லழலப் பட்டவென்
றிம்மதின் மற்றவர் விரும்ப வெய்திமற்
றெமமதி லிதற்கிணை யென்னக் காக்குமே (௯௭)

கொடியது கொடியது கோளை நாஞ்சில்சா
னெடியதென் பாரகெத் தன்று நீள்பொறிக்
கடியதா லொருபொருள் கண்ணிற் கண்டன
முடியதொன் றனைவிழி முகர்த திலலையால். (௯௮)

உயர்மதி லுயர்மதி லென்று ளாக்குமிப்
பெயர்மதி லிதுமற்றைப் பெரும திற்கெலா
முயர்மதி ளூன்விதி யண்டத் துச்சியாம்
பெயரதி னுயர்திறம் பெற்ற தில்லையால் (௬௯)

பொறியடக் குபுபகைப் புலனை டர்தகளு
செறிதர வுயர்பொருட் சிவமி யாவரு
மறிதர வுயர்தலா லனைய மாமதி
னெறியமை முனிவரா நிலைமை காட்டுமே. (௭0)

கதிர்மதி முதலவாக் கனையுங் கோளெலா
மதிர்வற வழங்குதற் காய நொச்சிவாய்
முதிரபகைக் கஞ்சுபு மூடு ருப்புத
வுதிர்தலி லாததிறத் துறற வென்றுமே. (௭௧)

பரத்தையர்வீதி.

இராப்பக லெனுதிணை விழைச்சி யற்றலால்
விராய்த்தழு வுநரிவ ரெனுத மெய்ம்மையா
லராப்படக கடிதடக் கணிகை யர்நலா
ரோராப்பெருஞ் சேரிமற் றும்பா சேரியே. (௭௨)

அடிநிலங் கூடில வணியல வாடில
நெடியகண ணூடில நிற்ப வோவியங்
கடிமனைச் சுவர்ப்புறங் கணிகை யர்நலார்
படிநல நசைஇச்சுரா படர்ந்த தொக்குமே. (௭௩)

நகைக்குறி நகக்குறி நயந்த னைதிடல்
வகைப்பய னறுசுவை யமுத மார்திட
றகைதிற முருதுகை தட்ட லாதிய
முகைத்தலை வியந்தெரி மாணபின் முறறுவ. (௭௪)

பாடலாற் சிலாபொருள் கருவி பமபநின
ருடலாற் சிலாபொரு ளலாவி னேதத்தி
னீடலாற் சிலாபொரு ளேயம போல்விராயக
கூடலாற் சிலர்பொருள் கொள்ளை கொள்வரே. (௭௫)

முன்னவர் கலப்பினு மூரி நீரப்பிவி
மன்னவா கலப்பினும் வணிகர் கூடினும்
பின்னவா கலப்பினும் பெட்டின் பாககுவா
ரென்னவ ருககுமின் பாகசு மீசன்போல். (௭௬)

முன்னிய வெச்சில்யா வருமு கத்தலால்
வன்னியும் போதமட வாரு மொத்தன
ரென்னினு மிருவரு மீயும் வெப்பந்தான்
றுன்னிடி னீங்கிடிற் சுடுதல் வேற்றுமை. (எஎ)

கணிகையர் பொதுநலங் கருத்தி லெள்ளுநர்
தணிவரி தாகிய தரும மெள்ளுவா
ரணிதரு மூருணி யறலை யெள்ளுவர்
பிணிதவிர் முத்தியின் பழமுட் பேணலார். (எஅ)

வெள்ளணி செவ்வணி மேவி மற்றவ
ரொள்ளணி வீதிவா யுலாவு மங்கையர்
தள்ளரு மவாபெருந் தவத்திற் பூந்தளி
ரிள்ளரு மங்கையர் விராய தொக்குமே. (எகூ)

கலையழுக் குறுமையாற் சிவிறி கைவிடா
நிலைதிறத் துடம்பின்வே றெழாத நீர்மையான்
மலைமலர் வாமேரு வண்ணஞ் சூடலா
லலைகடற் புவியகத் தரம்பை மார்களே. (அ0)

இப்புவி யரம்பைய ரென்ற தென்னெனி
றப்பில்பூ சுரரெனு மொழியுந் தப்பதா
மொப்பரும் பரதத்தைய ருறையுஞ் சேரியி
னப்பெரு வளந்தெரிந் தளகை தோற்றதே. (அக)

## வேளாளர்வீதி.

கரைபொரு நதிகளுட் கங்கை மேலதவ்
வுரைபெறு நதிகுலத் துதித்த வேதவாற்
றரைபுகழ் தூய்மைமுன் னுய சார்ந்தசீர்
வரைவில்வே ளாளர்தந் தெருக்கண் மல்குவ. (அஉ)

தினகரன் முனமிருள் செறிவ தாயினு
முனகரு ணல்லருண முயங்கு மாயினு
மனகமெய்ச் சுகுணவே ளாண்மை மாக்கட
மினமனை யிடைப்பசி யில்லை யில்லையே. (அ௩)

அருமருந் தனையவே ளாள ரோம்புவர்
வருவிருந் திலரெனில் வாட்டந் தீர்வரோ
கருமுகில் வேண்டிய காலம் பெய்வதை
யொருவுறி னுய்குவ துலக மெங்ஙனம். (அ௪)

மின்னிய புலமையர் மேவி னூடொறு
மன்னிய பொருட்கவி மாலை சூடுவர்
துன்னியர் வுற்பலத் தொடையின் வாடடமுள
ளுன்னிய திறத்தாமற் றெதையு வப்பரே. (௮௫)

கொடையொடு முகமனுங் குறிக்கொள் சீலந
னடையொடு ஞானமு நகக வுற்பலத
தொடையொடு செந்தமிழத் தொடையு நாடொறு
முடையவர் தெருவள முரைக்க முற்றுமே. (௮௬)

## வைசியர்வீதி.

கணிதமில வயிரமுங் கமல ராகமு
மணிமுணித தரளமு மவிாகோ மேதமுந்
தணிவிலவித் துருமமுந் தாமப ரம்பலால்
வணிகாத நெடுநதெரு வலன விந்ததேம. (௮௭)

எதுபுகூஉ வினவினு மினஞ்சுட் டாமலே
யதுதர வலலவ ரிமமி யாயினு
முதுகணக கிடையொழி யாமு யற்சியா
கதவுதல் விடுதலுட் கணித்துச செய்வாரில். (௮௮)

கொள்ளுநாட் கொள்ளலுங் கொணட யாவையுந
தள்ளுநாட் டள்ளலுந் தெரிந்த தன்மைய
ரள்ளுநா ளுவப்பதி னவைதம் பானின்றும்
விள்ளுநா ளுவப்பது மிக்க தாமன்றே. (௮௯)

நிறையுயிா புணாதர முன்ன நின்றதாங
குறையுயி ரொழிதரல் குறித்துக் கற்பவ
ருறைதரு நந்தொழி லொதத தாமென
மறைதலி லாப்பெரு மகிழச்சி பூபபரே. (௯௦)

ஒருபுணர்க் கிரணடுமூன் றுற்ற காலையுங்
கருதுறு தோன்றலி லுவத்தல் கைககொள்வா
ரருகிதிக் கிழவனி னுதுந தாளினுற்
றிருவெனு மவாதெருச் செப்ப முற்றுமோ. (௯௧)

## அரசர்வீதி.

மருவல ரொடுசமர் வலியச் செய்தவர்
திருவுறக் கவர்ந்துவிண் செல்ல வுய்த்திடுமண
ணொருசில ரைத்தடித் தாண்டின் புய்த்திடும
பெருமனிற பொலிபவர் தெருப்பி றங்குவ. (௯௨)

மகபதி யமாத்தநாண் மற்றிம் மன்னர்பாற்
றகவடைக் கலம்புக றகவெ ணுச்சில
நகமடைந் தெனப்பொலிந் துயர்நன் மாளிகை
யிகவரு மன்னாத மியல்பென் சொல்லுகேன். (௬௩)

வண்டுதொட் டிடுமுனம வணடு தொட்டிடா
மண்டுதார் தரியலா மார்பிற் சூட்டவான
கண்டுநேர் மொழியவர் கணடு கொள்வரே
லண்டமேற் றவாதிற லறையப் போவதோ. (௬௪)

அரியுகைப் பவளேதத மமபு யஙகொரு
கரியுகைத் திடுதலுங் கலினம பூண்டவாம
பரியுகைத திடுதலு முருளை பாய்பரிக
கிரியுகைத் திடுதலும வலலா கேடிலார. (௬௫)

ஆடலும் பாடலு மனுப விததிரா
வூடலுங் கூடலு மொருங்கு துய்ததனைந்
தோடலும வாடலு முருப்ப கைததிற
நாடலு முளாராதிற நவில முற்றுமோ. (௬௬)

மறையவர்வீதி.

மிகுமறை யங்கமோ டுணாந்த மேன்மையாற்
றகுமறைக் கொடியொரு கையிற றுங்கினார்
நகுமறைப் பொருளுற நயந்த சிந்தையரா
தொகுமறை யவாதெருச் சொல்ல நின்றதே. (௬௭)

தவமறை யவாமகச் சாலை வாஞெரீஇக
குவலயம பயிலுமா கூட்டி யூட்டலா
லிவாதரு பெரும்புக ழிந்தி ராதிய
ரவணாயும பூசுர ராகக ஞரரோ. (௬௮)

முதல்வழி சார்பெனு மூன்று நூல்களு
மிதமுறத தங்கணெஞ் சிருக்கு மென்பதைச்
சுதமின்மூந் நூல்களுந் தோயப் பூணலாற்
கதமறக் காட்டுவர் கரிசின் முன்னவர். (௬௯

விற்படை வாட்படை யாதி வேறுள
கொற்படை சுமப்பவ ரியாருங கும்பிடப்
பொற்படை மந்திர மென்று போற்றிடு
சொற்படை சுமந்தனர் துன்னு லாரற. (௪00)

அதிதியர் பசித்தழ லவித்துக் கற்பெனும்
பொதிதழல் வளர்த்திடும் பொன்னனை கொம்பனார்
மதிநுதற் பார்ப்பன மடநதை மார்செறி
துதிமறை யவர்தெருச் சொல்லத் தீருமே. (௧௦௧)

## ஆதிசைவர் மாளிகைகள்.

மறையுட னாகம முணர்ந்த மாட்சியர்
பொறையொடான மார்த்தப ரார்த்தம போற்றுவா
ரறைபெரும் புகழ்மிகு மாதி சைவர்வாழ்
நிறைவள மாளிகை நிலாமொரா சாரெலாம். (௧௦௨)

## வைதிகசந்நியாசிகள் மடங்கள்.

மறைமுடிப் பொருளுணாக த்வர்ம யக்கமோ
ரிலறயுமில லவாபகை யெறிம ழுப்பொருஉங்
குறைவிறன டியாததவெண கோவ ணத்தின
ருறைதிரு மடஙகளு முளள வாஙகொாசாா. (௧௦௩)

## சைவாசாரியர்களிருக்கை.

மேவரும பகுவம் விருமபி நோககுபு
மூவகைத தீக்கையு முறையி னாற்றிமுன்
னேவருஞ் சரியைமுன் னியஙக வுய்ததுயா
பாவனஞ் செயபவ ாிருககை யும்பல. (௧௦௪)

## சைவசந்நியாசிகள்மடங்கள்.

பதிபசு பாசததின் பகுபபு ணாந்தற
முதிாதர வுருவமுன மூனறு முறறரு
ளெதிருறக கணடுமே லினப மார்சைவ
மதிமுனி வாருறை மடஙக ளுமபல. (௧௦௫)

## கல்விச்சாலையும் பிறவும்

இலக்கண விலக்கிய மெலாமு ணர்த்துவார்
கலக்கமில் கழகமுங் கவிமுன் னலவரு
முலக்கரும வாதஞ்செய துறையி டங்களும்
விலக்கரு மற்றவு மேய வோாபுறம். (௧௦௬)

## அன்னசத்திரம்.

முரிவரு முலலைவெண முகைய மூரலுந்
தெரிசெழும பொன்னிறப் பருப்புந் தீஞ்சுவை
யிரிதராக் கருனையும பாகு மேனவும்
பரிவொடு மூட்டுசத திரமும் பல்லவே. (௧௦௭)

### தண்ணீர்ப்பந்தர்

திநகர னெழுமுனீர் தெவ்வி மோரளா
யினநிறை தோறுமுப் பிலிகு சங்கலந்
துனலுற வாக்கியோர் கனியு மொப்பநல்
கனபுனற் பந்தரு மனந்த முண்டரோ. (௧௦௮)

### திருக்கோயில்.

தூயபல் வளப்பெருந் துறைசெம் பொறறச
டாயது பற்பன்மா ளிகைய தன்கணே
மேயபன் மணிநடு வுறவி ளங்கிடு
நாயக மாமணி நம்பி ரானறளி. (௧௦௯)

### மாணிக்கவாசகசுவாமிகள் மண்டபம்.

சிகரமுன் மேயதோா தெய்வ மணடபங
ககனமாா விச்சுவ கன்ம னேயடை
துகலறப் புரிந்ததென் றேத லாமலா
லகனிலத தாக்குந ரரியா போலுமே. (௧௧௦)

கோடிய கொடுமைகையுங் குலவு தூணடொறு
நீடிய விம்பமு நிகரி னுணடொழில்
கூடிய யாவுமுட் குறிதது நோக்கினு
மாடிய சேடனு மறைய வல்லனே. (௧௧௧)

### திருக்கோபுரம்.

யானள வுரைபபதற் கெளிய தாகுமோ
வானள வுயாநதபொன் மணிசெய் கோபுர
மீனள வோங்குபு மேலும் போநகொடிக
கானள வதெநெடுங் ககனந் தாஙகுமால். (௧௧௨)

### திருமதில்

மதில்கடந் தவனென வயங்கு மையனிம
மதிலகட வானென வழஙக வோங்குபொன்
மதில்பல கதிரவன் மதிமுற் கோள்கணம்
மதிலென நாடொறும வைக வைகுமே. (௧௧௩)

### குதிரைச்சேவகர்மண்டபம்.

ஒருபரிச் சேவக னுய வுத்தமன்
மருவுமற் புதப்பெரு மணிசெய் மண்டபந்
திருவமிக் கோங்குறு தெய்வ நாட்டினு
மருமைய தெனிற்பிறி தறைவ தென்னையே. (௧௧௪)

## குருந்தவிருட்சம்.

மறைமுத லாகமம் புராண வங்கவ
மறைதருபுராணமந் திரங்க ளெண்ணிலா
யறையிலை யரும்பலர் வாசத் தேனெந்தாக
குறைதவிர் ஞானமாக் குருந்த நிற்குமே. (௧௧௫)

## குருந்தமூலச்சபை.

செழுமலர்க் குருந்தமேற கவிததல் செய்திடப்
பழுதில்பொற் றகடுறப் பரப்பு மோரசபை
யெழுதரு மறைமுடிக் கெட்டு ருவொரு
முழுமுத லுருவென முன்ன மேவுமே. (௧௧௬)

## சிவயோகாம்பிகைகோயில்.

ஒள்ளிய வருந்தவ யோக நாயகி
வள்ளிய வருவென வயங்கு மோரதளித
தெள்ளிய பொன்மயச் சிகர மாதிய
கள்ளிய கவாதரு நயனம யாவையும். (௧௧எ)

## மாணிக்கவாசகசுவாமிகள்கோயில.

மன்னிய மாணிக்க வாச கபபிரான்
றுன்னிய பெருந்தளித் தொகக பண்மணி
மின்னிய விளஙகுதல விழைந்து சோகஙமிக
குன்னிய கதிரவெதுப் புறறி யஙகுமால். (௧௧அ)

## படைகற்புகை.

ஆயபொற படைகளின் றுமி மேலெழூ
வாயிலின வெளிப்படல் வழுதி முனனைநா
ளேயகொண டலைச்சிறை யிட்டு விடடிடத
தாயது மீசனுமொரு தன்மை தேறறுமே. (௧௧௯)

## ஒலிவகை.

மகதியாழ் முனிவரன் வடித்த வீணையி
னிகரிலா வொலிமறை நிகழ்தது பேரொலி
குறையிலாத தமிழ்மறை குலாய பேரொலி
முறையுறு காலமு முழங்கு கின்றவே. (௧௨௦)

இன்னவாம் பெருவள மியைந்த கோயிலு
ளுன்னரும் பெருந்தவ யோக மாதொடு
மன்னமென் னடையொடு மான்ம நாயகா
நன்னலத் தருணெறி நடாத்தி வைகுவார். (௧௨௧)

மறுவறு பெருந்துறை வளமெ லாஞ்சொல
வுறுநகை யொருவிதத் தோதித் தீர்த்தன
மறுபகை யுந்தவிர்ந் தையர் வாழ்தரப்
பெறுவன நைமிச வளமும் பேசுவாம். (கஉஉ)

திருநகரப்படலமுற்றிற்று.

ஆகத்திருவிருத்தம் உஅ௦.

# நைமிசப்படலம்.

மந்தி ரிப்பவர் மனத்துளாய் மற்றவ ருறுகண்
மந்தி ரிப்பவ ரினனும்வான பேரரு ணனிசு
மந்தி ரிப்பவ ராணநதத துயபபவா வழுதி
மந்தி ரிப்பவ ரவரெமைப் புரபபவர் மன்னோ. (க)

மந்தி யாயிர கோடிவீழ் பசுந்துழாய் மாரப
னுந்தி யாகிய தாமரை முளைததெழு மொருவன்
முந்தி யாரையும் படைத்தநா ளிடைததவா முயறசிட
புந்தி யாதிய விடஙகளிற் றோன்றிய புனிதர். (உ)

அனையா தமவழித் தோன்றிய பறபல வறிஞர்
நினைய வல்லமற் றவரரு ணிரம்பிய நெறிசால
வினையம வலலவ ராயபன் முனிவரு மேவித்
துனைய வோரிடைக் குழுமியுள ளத்திது சூழவார். (ங)

வந்தி டததுமை மணாளன்மிக் காரருள் வழங்க
வெந்தி டத்துநா மிருந்தருந் தவஞ்செய வியலு
மந்தி டததிடை யூறுறா தென்றெடுத் தறைய
நந்தி டததவன மதலையை நணுறுவா மென்று. (ச)

தணணந் தாமரைக் கிழவனை யடைந்தனா தாழ்ந்தார்
வணணம் பொன்னினும் வயங்குவா யருந்தவம வயக்க
வெண்ண மெங்களுக் கதற்கியை தேமிதென் றிசைப்பாய்
வெணணந் தேர்ந்தியோ னறிதர னருளொடு விராவி. (இ)

என்ற புணணிய முனிவர்சொ லஞ்செவி யேற்று
நன்றெ கின்கொடி யுயர்த்தியோ னுள்ளத்து நாடி
முன்ற யங்கொரு தருப்பையை நேமியா முடிந்து
சென்ற லங்கிட விஷர்க்கிடங் காட்டெனச் செப்பி. (கூ)

உருட்டி விட்டன னீதுரு ளாதுதங் கிடமே
தெருட்டி நின்றநீர் தவஞ்செயு மிடமெனச் செப்ப
வருட்டி றங்கூறித் தஞ்சலி செய்தன ரவனி
வருட்டி யேகுமவ் வளைவழி மாதவர் சென்றார். (௭)

சென்ற நேமிவெண் டிரையெறி கங்கையந் தீரத்
தொன்ற மேவிய வுதக்கூறு மொருவனத் துற்று
நின்ற மைந்திடத் தங்கிய தாதலா னுனும
வென்ற வவ்வன நைமிச நாமமே வியதால். (௮)

மன்னு மாதவர் தவத்தினுக் கூறுவா னவுணர்
துன்னு மாசெயி னவர்தலை துணித்திடற் பொருட்டு
மின்னு மாமணி மார்பினன் விடுத்தசக் கரமேபோ
லுன்னு நான்முகன் விடுத்தசக் கரமவ னுறையும். (௯)

அகைக்கும் வெம்பொறி யாகிய பகையைந்து மடக்கி
நகைக்கு முண்மையா கியபெருஞ் செயங்கோ னடத்தி
முகைக்கு மாதவ வரசவ ணமர்ந்துமூ வுலகு
முகைக்கு நேமியொத் ததுமல ரோனுய்த்த நேமி. (௧௦)

வான யாறுதோய் தலினமதி தவழ்தலின் மதலைக
கான மேவலின் வில்லுவங் கமழ்தலிற் கணனொன்
றூன நெறியான் சடாடவி நைமிச வடவி
யேன மானமகன் காணபதொன் றெய்தில தொன்றே. (௧௧)

சிருக்கு மேவிய வலக்கைமா முனிவாவென் றினைவத
தருக்கு மேயமா னொருபுறத் தரிறுபு தவிர்க்க
மருக்கு லம்மல ரிடக்கையா லவரதை வருட
லிருக்கு மோருரு வெய்திநேர் திடத்தழா மேய்க்கும. (௧௨)

உரைக்குஞ் சீதள மவ்வன முறப்பரப் புதலால்
விரைக்குந் தார்முடி வானவ ரொடுதின மிளிர்தா
மரைக்கு நாயகன் சருக்கொள மேவுவன் குமுத
கிரைக்கு நாயக னேயெனத் தோன்றுவ னிரம்ப. (௧௩)

கனிசெய் மாதவப் பெருமைய ரைந்தழ னூப்பட்
கனிவி னுள்பல வமர்ந்துளங் கலங்குறு திருத்தல
பணிய டர்ப்பவன் வெப்பமுட் புகாவகை பாற்றித
தனிவ யக்குமவ் வனந்தரு தண்மையா லன்றே. (௧௪)

பெருகு மாதவர் புரிமக குண்டத்துப் பெருந்தீ
யருகு நீர்கவைக் கொழுந்தெழீஇச் சுடுதலி னந்தோ
வுருகு நம்முல கெனச்சுர ருள்ளஞ்சி யன்றோ
கருது மழமுகில வாணயா றடியுறக கண்டார். (௧௫)

யோக மாதவர பலருமீஇ கனிமுயன் றுஞற்றும்
யாக சாலையி னெழுமீபுகை யிடைப்படிந் தன்றோ
மேக சாலங்கள் கறுததன மற்றவை விராவ
வாக மெங்கணுங கறுததா லுவாககட லம்மா. (௧௬)

நாத மேலவ னடிக்கலப் புறுவது நயந்தா
ரோத மேவுறு ரடிசிலெப் போதுநீத் திருத்தல்
போத வாமபலா விளாவுயா நாவல்பூக கதலி
சூத மாதிய தருஙகனிச் சுவையுணாந் தனரே. (௧௭)

கண்ட போசுத ரிசனமா னமகெனக் கனாயத
தணட வாததளி ரிலைமலா காய்கனி தழையக
கொணட மேன்மைய தஃதுணாந் தேகுல மலர்மே
லணட னேமிதன் பெயரியை யவட்டவிாந் தன்றே. (௧௮)

ஒளிக்கு மாறொரு முனிவரன வையவு முறநது
களிகருந் தானவ ரலைகவு மொருவன்கைக் கவாநது
தெளிக்கு மாநில நிறுவவும் படாத்திரு வனத்தை
யளிக்கும வன்மையி லாதயாம் புகழுதற் காமோ. (௧௯)

இன்ன நைமிசப் பெருவன வாழ்க்கைய ரின்னு
மன்ன மேனமு முணர்தரா னலங்குவெண ணீறும்
பன்ன வாம்புகழக கண்மணி மாலையும பரிப்பாா
சொன்ன வைந்தெழுத் தோதுவ தலாறபிற சொல்லாா. (௨௦)

சதம கததிறை வாழபத நறுஞ்சத தளஞ்சா
ரிதம லாப்பொருட் டிறைபதங கொடும்பகை யெறியுங
கதமி குத்தசக் கரத்தவன் பதமெலாம் வமன
பதமெ னக்கருத துறநினைப் பவராருட் பவரே. (௨௧)

இன்ப மெய்தினு மெதிர்மறை யெய்தினு நமக்கு
முன்பு மைந்தன வாமுட னுமென முன்னும்
வன்பமைந்தவர் வனாபொரு குணத்தவர் வயஙகு
நன்பு யசசுர தேனுவிற் பயன்படு நலத்தாா. (௨௨)

கொடியகா லெழுஉக் குலவரை யொன்றின்மே லொன்று
படிய வீழ்தர வெறியினும் பரவையே மெழுந்து
முடிய மூடினும் பூதமைந் தடுக்கிய முறைமை
மடிய மேவினுந் தந்நிலை மடிதரா வலியார். (௨௩)

மன்னு சங்கரன் மான்மியப் புகழ்ச்சிர வணத்தார்
பன்னு மற்றவ னருட்குறி பூசிக்கும் பண்பார்,
துன்னு மாநிக மாகம வுணர்ச்சியிற் றேலார்
பின்னு மிப்பவஞ் சததியல் பொழித்துயர் பெரியார். (௨௪)

மாத வத்துயா சவுனக னகத்தியன் வசிட்டன்
கோத மன்சுதீக் கணணன்போ தாயனன் குசுரு
காதல் விந்துசாண டில்லியன் சருச்சரன் கபிலன்
சாத நீரபுகழ விச்சுவா மித்திரன் சநகன். (௨௫)

ஆணி மாணடவி யனகருக கன்னர பததன்
பாணி னிப்பெய ரான்பரா சரன்பயி லவனே
கோணி ரணகோ லினன்பிர சண்டன்குச சகனே
மாணி ரப்பியன் புருசுணடி புலத்தியன் வசசன். (௨௬)

கிருதன் பாரகவன் றிரணதூ மாக்கினி கிரீசன்
றிருதன் சமபுச தானந்தன் சனகன்மா தேவன்
பிருகு ரோமசன் சனந்தன்மா தேசனே பிருங்கி
வருப ரத்துவா சன்புல கன்வாம தேவன். (௨௭)

அததி கூசுமாண டனறததாத் திரேயனங் கிரசு
முததி சால்சனற் குமாரன்று லபபியன் முறகம்
னததி ரிப்பெய ரான்சுனப் புச்சனே யசிதன
சித்தி சாலக் மருட்டணன் புகழ்ச்சுனச சேபன (௨௮)

இலகி தன்வசு காதநியா யனனிரும பகவன்
வலசு கன்றதீ சிப்பெய ராளிமார்க கண்ட
னலச ஞதன்கண் ணுவன்விபண் டகனகு சாதன
மலமி லாபதத்தம் பன்கிரி சரன்றுரு வாசன. (௨௯)

கற்கி சநதிர சூடன்கா சிபனருட் காணன்
முற்க லன்சம தக்கினி சரபஙகன் முழங்கு
நற்க லைச்சிருங் கன்சுனன் புசுண்டனு ரதன்சீ
ரொற்க மில்சிலா தன்றூம பானனெண் சுதன்மன். (௩௰)

பதுமன் சீருப மணியன்னா தாதபன் பரவு
முதுபு லத்தசா பாலிபப் புருமொழி சுமந்து
சதுமு கன்சொலுக் கிரவீரி யன்றவு மியனே
விதுமு டிக்கன்பு சால்கவுண டின்னிய மேலோர், (௫௧

அரித கன்சவு பரிபளுப் பதனரு ளமைந்து
பிரிய மார்தரு மாசுவி லாயனன் பிறங்கி
விரியுஞ சீர்ச்சுன கன்குணக் காலவன் மேன்மை
திரித ராததே வலன்றிர ணவிந்துமுற் செய்யோர். (௫௨)

சிறந்த வோரிடைக குழீஇயினர் திகழிம வரைதந்தோன்
றறந்த வாக்கொடி பங்கின ருளத்தருள் கூர
வுறந்த வாறிரண் டாண்டள வுஞறறுமோ ரியாக
மறந்த பப்புரி வதற்குபக் கிரமித்தார் மன்னோ. (௫௩)

விதிய மைந்தபுண ணியமகச் சாலையின் மிகக
துதிய மைந்தபன் னியர்மகார் துவன்றுமா ணுக்க
ரதிவி ருப்பினிற் றத்தமக் கியலபணி யாறற
மதியின் மிககவா மனுப்புகன் றழல்வளாத திகொல். (௫௪)

முன்னு மாதவர் தங்குழாத் திறகொரு முகமாப
பன்னு பேரருட் சவுனக முனிமுகம் பாரா
மன்னு மாநில வளாபபினி லளவினமான் மியதத
வின்னு மாலய னுணாதரான் றளிபல வென்ப. (௫௫)

அனைய மாத்தளி யருவுரு வுபயமென் றறையு
மினைய மூன்றனு ளுருவமு முபயமு மெய்திப்
புனைய நன்றமை தலமபல வுள்ளன புந்தி
நினைய நோக்கியுங் கேட்டுமியா நிரமபின முவகை. (௫௬)

ஆதி யோதிய வரூபமாயப் பரசிவ மமருஞ
சோதி யார்தல மின்றள வுணர்ந்திலஞ் தோன்றுங
கோதி லாயஃ துளதில தென்பதுங குறியே
மோதி னின்னலீ துணாததிடு வாபிற ருளரோ. (௫௭)

எனறு கூறலுஞ சவுனக னெடும்பொழு தெணணி
நன்று கூறினீர் நானுமோரா தருநசை யுடையே
னின்று தேற்றுவா ரூதனை யன்றிமற் றியாரே
யன்று தீரவ ஞற்றெளி வாமென வறைய. (௫௮)

அந்த வேலையி ரொன்பது புராணமு மளவாச்
சந்த வோருருக் கொண்டுவெண் ணீற்றொளி தயங்கப்
பந்த மேவியு கணமணி மாலிகை பரித்து
நந்த வைந்தெழுந் துளமபதி தரநடந் தென்ன. (௩௯)

இரவின் முன்செலல் பகலெனிற் பின்செல லியைந்தார
வரவு போகிலா னமக்கிவ னேயென மதித்தார
புரவு பூண்டவன் வாழ்க்கையோர் பொருளெனப் போற்றார்
கரவு தீர்ந்தமா ணாககர்தாந தொடருபு கலப்ப. (௪0)

அருள மைந்திரி நாட்டமும விகசித மாய
பொருள மைந்திடு வதனமும புண்ணியம் பொலிந்து
தெருள மைந்திடு சிந்தையும வடிவமுஞ் சிறப்ப
மருள மைந்திடாச சூதமா முனிவரன் வநதான் (௪௧)

வந்த சூதனை மழைவர வெதிர்கொளு மயிலிற
சந்த மேயபொன் வைப்பினை யெதிர்கொளுந் தணியாப்
பநத மார்வறி ஞனிற்குரு வெதிர்கொளும பழநா
னந்த வோர்கரி லருந்தவ ரெதிர்கொள நயநதார். (௪௨)

இருக்கை நின்றெழீஇ யாடினர் பாடின ரெதிர்சென்
றிருக்கை யோதினா பணிநதன ரியம்பினர் முகமன்
றிருக்கை நீததவ ரழைததுவந் தாதனஞ் சேர்ததுத்
திருக்கை யாலருக கியமுதற செயவன செய்தார. (௪௩)

நின்ற காலையி னீயிரெல் லீருமே ரிருக்க
வென்ற தோரநதிரு மருங்கினு முவப்புட னிருந்தா
ரன்ற வேலையிற் சவுனகன் கைதொழு தறைவா
னன்ற வாமக மொனறுநாந் தொடஙகின நயப்ப. (௪௪)

ஆய வேலையெற் பாரததுறு வரமொலா மமல
நாய ஞாரு வாயமா நறறல முளதோ
மேய பாரிடை யில்லதோ சொல்லென வினவத,
தூய நிற்கொடு தெரிதர லாமெனச் சொற்றேன். (௪௫)

நீயு மப்பொழு தெய்தினை யாமெலா ரெடுநா
ளாயு மாதவ மாற்றின மாலென வறிந்தாம
பாயு மால்விடைப் பகவனே யனையநீ பரிவுற்
றேயு மெங்களுக் கிசைத்திடல் வேண்டுமென் றிரந்தான். (௪௬)

உரைவி னாவிரு செவிக்கணு மமுதமூற் றியது
புரைய வேறலும் புந்தியு ளுவப்புமீப் பொங்க
நரைகொ ளேற்றினா னருள்கொலிவ் வினாவென நயந்து
கரையு ளத்துற நெடும்பொழு தெண்ணுபு கண்டே. (சஎ)

இருக ரங்களுங் குவித்தனன் கண்கணீ ரிறைப்ப
மருவு மன்புளந் ததும்பிட வாய்மலர்ந் தருள்வான்
பொருவி லீர்வினா வியதல முளதொன் றுபுதிதன்
றொருவு றுதுளத் துறததுமின் பெருந்துறை யதன்பேர். (சஅ)

இந்த மாத்தலம் வேதவே தாந்தங்க ளெல்லா
முந்த வோதிடு மருபமா யமர்ந்தநம் முன்னோன்
பந்த மோசகமாங் கருளுவ னதன்றிறம் பகர்வா
ரிந்த மாநிலத் தில்லையெப் புவனத்து மில்லையால். (சகூ)

அரிய வித்தல மான்மியங் காந்தத்தி னாகக்கு
தெரிய மேவிய வுருத்திர சங்கிதை செப்பும்
விரிய வோர்பவு டிகமுமுற் றனைக்கு மெய்த்த தவத்தீர்
பிரிய மேவிய மந்தண மாமது பேசின். (ரு0)

முதுபு கழ்த்தவ முனிவிர்காள் முழங்குமிப் புராண
மிதுவ னாக்குநா மொருவர்க்கு முரைத்தில மெனினுஞ்
சதும றைப்பொரு ளுணர்ந்தநுங் களுக்குறச் சாற்று
வதுசி றப்பென மனமெழு மாதலால் வகுப்பாம் (ருக)

பாங்கு மாதவர் பற்பலர் குழீஇத்தவம் பயில
வோங்கு நைமிசச் சிறப்பினிற் சிறிதெடுத் துரைத்தாம்
வீங்கு சீர்கெழு புராணத்தின் மிசிரவர லாறதை
யீங்கு நாமினி யாவருந் தெரிதர விசைப்பாம். (ருஉ)

நைமிசப்படல முற்றிற்று.

ஆகத்திருவிருத்தம் ருஉ.

# புராணவரலாற்றுப்படலம்.

நண்ணிய மூகை பேச நல்லரு ளூட்டம் வைத்த
புண்ணிய வாத வூரர் பொன்னடி சென்னி சேர்த்தா
மெண்ணிய விப்பு ராண மொன்றுகொ லெல்லாம பாடத
தண்ணிய வாசகு முன்னு யாவையுந் தருவ ரன்றே. (௧)

வெள்ளிய வுருவம வாய்ந்து வெள்ளிய வருவி போர்த்து
வெள்ளிய மதியந் தாங்கி வெள்ளிய படிக மேனி
வெள்ளிய நீறு பூசி வெள்ளிய பிறைகூ டோபால
வெள்ளிய முறுவ லானோர் வெள்ளிய கைலை குன்றில். (௨)

இனிதம ரந்தி வண்ணத் தெம்பிரான் பாதம போற்றிப்
பணிமதி முகத்த ளாய பருப்பத ராசன் செல்வி
கனிவொடு மருப மாய்நீ கலந்தமா தலமற றியாது
கனிநகை யுடையேன் கேட்க நயந்தருள் புரிதி யென்றாள். (௩)

என்றலு முவகை பொங்க விரும்பெருந் துறையென றேத்தி
யன்றதன் சிறப்பு முற்று மமைதர வருளிச் செய்தா
னன்றமை யுமையா ளோடு நந்தியெம் பிரானு நோற்கும்
வென்றியம புலிக்கா லண்ணன மைந்தனும விருப்பிற றேர்ந்தார். (௪)

ஆயமா தவத்து நந்தி யண்ணறன் னடிகள் போற்றும
தூயசீர்ச் சனற்கு மாரற குரைததன னனைய தோனுந்
மேயதன் னடிகள போற்றும் வியாதனுக் குரைத்தா னன்னு
னேயமோ டெனக்கு ரைத்தா னிகழுமோர் வகையா லினனும். (௫)

மலைமக ளோடு நந்தி வானவன் கேட்ட காலத்
தலைவற வொருங்கு கேட்ட வடிபுலிக் காலோன் மைந்த
னிலையுப மன்னி யப்பேர் நிகழ்மழ முனிவன் சிந்தித்
துலைவிலற் புதத்த னுயாங் குறைந்தான்பன முனிவ ரோடும். (௬)

உறைதரு நாளு ளோர்நா ளுயர்சிதம் பரத்திற் றொல்லை
மறைமுத றந்தை காணப் புரியுமா நடனங் காண்பா
னிறைபெரு வாஞ்சை மேவ நிறைந்தபன் முனிவ ரோடுங்
குறைதவிர் தில்லை மூதூர் குறுகினா னெடுஞ்சீ ரனானன். (௭)

தெரிபெருந் தளியுட் புக்குச் சிவகங்கை நன்னீர் தோய்ந்து
பரிதரு சபைநேர் சென்று பயில்பர மாநந் தக்கூத்
தரியவற் புதத்துதென்று வமைதரத் தரிசித் தேத்திப்
பிரியமிக் கவன்றன் றந்தை யடிகளும் பேணிப் போற்றி.

செழுமுனி வாருஞ் சூழத் தெய்வத சபையென் றோதும்
வழுவறு மாயி ரக்கான் மண்டப நாப்ப ணெய்திக்
கொழுமணி பீடத் தேறி யிருந்தனன் குற்றந் தீர்ப்பான்
முழுதுல களந்த மாயோன் முடியடி வைத்த மூர்த்தி. (கூ)

இந்தவா றிருக்குந் தெய்வ வியலுப மன்னி யப்போச்
சந்தமா முனிவன் பாத தாமரை வணங்கிப் போற்றி
நந்தவா தரவு பொங்கி நயப்புறக் கனிவு தோன்ற
வந்தண்மா முனிவ ரெல்லா மமைதர வினவ லுற்றார். (க0)

மருவருங் கயிலா யத்து மருவுநாட் டென்பா லேயோர்
பொருவருஞ் சோதி தோன்றப் பொருக்கென வெழுந்து கும்பிட்
டொருவரும் புளகம் பொங்க விருவிழி யுறைப்ப நின்றாய்
வெருவரு முளத்தி னேமீ தென்னென வினாத லோடும். (கக)

தூயமா தவத்தா லால சுந்தரா தென்பாற் றோன்றி
நேயவா தரவிற் றொண்டத் தொகையரு ளிரமயப் பாடித
தாயனார் பாங்கர் மீள்வா ரென்றவா சரித மெல்லாந்
தோயநீ யருளிச் செய்தாய் சொலவிய விரிவினாலே. (கஉ)

காழிநா ளுடைய ராய கவுணிய ராமூா வந்த
வாழிநா வரைய ராதி யிறுபத்து மூவர் மாணபு
மாழிசூ ழுலகு போற்றுந் திராவிட வேத மாய
வூழிநா யகனு வக்க வுற்றதே வாரச் சீரும. (கங)

மற்றதுந் தெரிந்தே மின்னும் வாசக வேதச் சீருஞ்
சொற்றவர் சீரு மன்னார் வழிபடூஉத் தூய மேன்மை
பெற்றமாத் தலத்தின் சீரும் பேசுகென் றுரைத்த லோடுங்
கற்றவர் புகழு மந்த முனிவரன் களிப்புத் தூங்க. (கச)

அருளமை யான்ம நாதர் சிறப்புமற் றவர்வி ராய
பொருளமை தலச்சி றப்பும் பொங்கழற் புனற்சி றப்புந்
தெருளமை மறையோன் மாயோன் றிறலுருத் திரப்பே ரணணல்
வெருளமை யாது போற்றி மிக்கபே றுறுசி றப்பும். (கரு)

மற்றவர் போற்றி வேண்டும் வரமெலாம் பெறுசி றப்பு
மற்றமில் வாதவூர ரவதாரம் புரிசி றப்புங்
கற்றவர் புகழ மைச்சாய்க் காரியம் புரிசி றப்பு
முற்றவெம் பரிமாக் கொள்ளப் பொருளுட னுறுசி றப்பும். (௧௬)

பெருந்துறை யடைந்து ஞான வடிவமாய்ப் பிறங்கித் தெய்வக்
குருந்துறை குரவற் போற்றி யுபதேசங் கொள்சி றப்பு
மிருந்துறை யெவர்க்கு மாய வாசக மெடுத்தி யம்பி
யருந்துறை யல்லாப் புத்த ராறழித் திடுசி றப்பும். (௧௭)

பூரண வடிவ மாகிப் பொலிந்தினி தமர்சி றப்பு
நாரணன் முதலோ ரேத்த விழாக்கொண்ட நகுசி றப்பு
மாரண விசேட மாய வாசகத் தருஞ்சி றப்பு
மோரண வெடுத்து ரைத்தா னியாவரு மின்ப மெய்த. (௧௮)

தெருளுப மனிய வள்ளல சிவகண முனிவர்க் கிவ்வா
றருளுப தேசஞ் செய்தா னனையருட் டௌமி யப்பேர்
மருடபு முனிசிற் றிதது மாற்றருந் தலைமை பெற்று
னிருடப முனாந டந்த தீதுமே லுரைப்பா மன்றே. (௧௯)

மருடரு மலர்ந்து மிக்கும வன்மைமே வியபு ராணத்
தருடரு வரலாற் றைததோ தரவெடுத் தறைந்தா மப்பாற்
பொருடரு கல்வி கேள்விப் புண்ணிய முனிவீர் தேர்மின்
றெருடரு புகழ்ப்பு ராணச் சிறப்பினை யுரைப்பா மன்றே. (௨0)

புராணவரலாற்றுப்படலமுற்றிற்று.

ஆகத்திருவிருத்தம் ௬௨.

---

## புராணச்சிறப்புரைத்தபடலம்.

எந்தப் பிறப்புமு கொடியதென் விம்மா நிலத்தி லெல்லாரு
முந்தப் புகல்வ ரதுநிற்க வாத வூரெம் முழுமுதலைச்
சந்தப் பனுவல் கொடுதுதிக்கச சாாந்த பிறப்பெப் பிறப்போமுட
றந்தப் பிறப்பைப் பலகாலு மன்பிற் றொழுதஞ் சலிசெய்வாம். (௧)

அருவா யுருவா யருவுருவா யநாதி யாய்நித் தியமாயின்
புருவாய்ச் சததாய்ச் சித்தாய்மற் றொன்றாய்ப் பலவாய் நிர்க்குணமாய்க்
கருவாய்ச் சருவ வியாபகமாய்க் கண்ணாயக் கண்ணுட் கருமணியாய்
மருவாய் மலராய் மணியொளியாய் வயங்கு மான்ம நாதசிவம். (௨)

மூல மலமாஞ் சகசமல மொழியா நின்ற வியாபகமே
யேல வமைந்த வியாப்பியமே யென்னு மிரண்டு மாகாது
சால வியாத்தி யாய்ப்பிணிக்கத தழுவிக் கிடந்த வுயிரனைத்துங்
கோல வின்பம பெறவாதி சிருட்டி யாற்றக் குறித்தநாள். (௩)

எல்லா வுயிரு முயநிமித்த மிலிங்க மூர்த்தி யாய்த்தலமாய்ச்
சொல்லா நின்ற தீர்த்தமாய்த் தவன்ற வுலகெங் கணுமாயிற்
றல்லா மலநோய் மருந்தாய வனைய தலங்க ளாமுன்னே
நல்லா தரவி னுருபமாய் நயந்த திருந்தப பெருந்துறையை. (௪)

எங்கு மருப வியாபகமா யியைவ தெனினு முடம்பனைத்துந்
தீங்கு நறுமபான் முலைத்தோற்றுந் தகைபோ லான்ம நாதசிவம்
பொங்கு வளஞ்சால் பெருந்துறைகட் டோற்றும் புகலிவ் வேதுவினாற்
கொங்கு மலிபூம பொழிலதுகா ரணமாத் தலமாக கூறுவார். (௫)

இதுகா ரணப்பேர் பெற்றதனு லெல்லாத் தலமுங் காரியமா
முதுபா ரிடைப்போ பெறுமுனிவீர் மொழிந்த துண்மை யெத்தலத்து
மதுவார கழுநீர் மாலிகைதோள் வயங்க வொளிகா ரணகுருவாய்ச்
சதுமா மறையத தலததன்றி யமரா நிற்குந் தனிமுதலே. (௬)

அன்ன தலத்தின் மான்மியமுற் றறையா நிற்கும் புராணமுமுன
முன்ன வருளுங் காரணபு ராண மென்று மொழிந்திடுவா
ரென்ன புராணத் துளுஞ்சிறந்த வீது கரும ஞானமெனச்
சொன்ன காண்ட மாய்ப்பொதுமற் றுண்மை யென்றுஞ் சொலப்படுமால். ()

இன்னு மியலுந் தந்திரமே யியம்பா நின்ற மந்திரமே
மன்னு முபதே சமமேயென றுரைக்குங் கலைமூ வகையுமாம
பன்னு மிவற்றுள் வருதலாப் பனவா பெற்ற துபதேச
முன்னு மிரண்டு மேனொபெற றனவென றுணாமி னுணர்வுடையீர். (௮)

ஞான முண்மை யுபதேச கலையோ டொன்று நிலத்தினவா
மேன விரண்டு மற்றுமுள விரண்டு கலையோ டொன்றுவன
வான வினைய பெருஞ்சிறப்பா லளவாப் புராணங் களிற்சிறந்து
கான விதழி புனைவாருக் குவகை செயுமுட் கருதிவீர். (௯)

சுத்தி பதியும் பரிபாகந் தங்கப் பிறந்தை வெறுத்தின்ப
முத்தி விரும்பு மவரேயிப் புராணங் கேட்கு முறைமையினர்
சித்தி யமைந்த புராணத்தின் சிறப்புச் சொற்றாந் தவுமியனைப்
பத்தி யமைந்த புரூரவா வடைந்த பரிசு பாடுவாம். (௪௦)

புராணச்சிறப்புரைத்தபடலமுற்றிற்று.

ஆகத்திருவிருத்தம் ௬௪௨.

## புரூரவா தவுமியனையடைந்தபடலம்.

ஒருவாத மலக்குரமபை யேகாமென் றுரைப்பாரும்
பெருவாத வாருகதம் பிடகமுதற் பெட்பாரும்
வெருவாதத் தோபகுதி மேனமுத்தி யென்பாரும்
திருவாத வூரரடி சிந்திக்குந் தரத்தரோ. (௧)

கண்ணின்மணி நமக்கென்று கலைமகளா லவாவுறு
மெண்ணினளப் பரியவள மியல்பமைந்த மாநகரம்
விண்ணினம ராவதிதன் னிலைவழீஇ வீழ்ந்தவரி
மண்ணினமர்ந் திருந்தென்ன வயங்குறுமத் தினநகரம். (௨)

அந்தவள நகர்புரப்பா னந்தவள நீறணிவா
னந்தவள வெனுங்களத்தா ரந்தவளக் கருங்காம
முந்தவளத் தரும்பென்ன முயங்குகினை வடிவழக
னெந்தவளக் கருமொவ்வா தெனப்பொலியு மிரும்படையான. (௩)

கலைபலவுங் கற்றவர்க்கோ ரகண்ணுய கல்வியினு
னிலையெனவா யுரைத்தலபெய ரெனக்கொடுக்குங் கரதலத்தா
னலைகடல்சூழ் செம்புடவி யனைத்துமொரு குடைநிழற்றிப்
புலைமிடிவே ரறக்களைந்து போக்கியெழும் விறல்வீரன். (௪)

உரைப்பார்வா யுரைப்பவைதன் புகழேயாம் படியுயார்தான்
றரைப்பால்வா ழுயிர்க்கன்றித் தரியலரே யானூர்க்கும்
விரைப்பால்வண் கற்பகத்தார் மிலைச்சவான் கொடுத்துவப்பான்
றிரைப்பான்மால் யிழிவளரத் திசையுருட்டு நேமியினான். (௫)

ஒருபுடைவெவ் வராக்கொளினு மொருபுடையா லுலகனைத்துங்
கருகிருடீர் தரவிளக்குங் கடவுண்மதிக் குலத்துதித்தா
னிருநிலத்தி லுயிர்வருத்தந் தன்வருத்த மெனக்கொணடே
பொருதளித்திட் டவையுவப்ப வுவப்பெய்தும் புந்தியினான். (௬)

எண்ணியபல் பரசமயக் கனைகடலை யடையாதுடந்து
கண்ணியவண் பெருஞ்சைவப் பயிர்வளர்க்குங் காட்சியினன்
றண்ணியதிப் பியகுணத்தான் றத்துவமா நெறிநிற்பான்
புண்ணியமே வடிவென்னும் புரூரவா வெனும்பெயரான். (௭)

ஆன்றபல பெருங்கேள்வி யமைச்சர்புரோ கிதராதி
யேன்றவர சுரிமையுடைச் சுற்றத்தா ரெலாஞ்சூழத்
தோன்றமதிக் குடைநிழற்றித் துன்னலர்வெம் பகைமுருக்கித்
தேன்றதும்பு வாகைகொளீஇச் செய்யகோ னடாத்திடுவான். (௮)

குணநிறைந்த பேரழகின் கொள்கலமா மனையவிருந்
தணவரிய தன்னேவற் றலைநிற்கு மைந்தர்களு
மணவரிய விருந்தினரு மொக்கலா யமைந்தாரு
மனமலியப் பொலிதெழுவ வாழுநாள் களுளொருநாள். (௯)

அள்ளல்வயற் பெருந்துறைவா ழான்மநா தப்பெருமான்
விள்ளலமை யாதவருண் மேவுபரி பாகமுறத்
தள்ளலமை யாச்சுற்றந் தனைநீங்க விடைகொடுத்தே
யெள்ளலமை யாததனி யிடத்திருந்தி தெண்ணுவான். (௧௦)

நீரிலெழு மொகுளே நிகர்க்குமிள மைப்பருவ
நீரிலெழுந் திரைபோலு நிரம்பவெழுந் துடைசெல்வ
நீரிலெழு தெழுத்தினையே நிகரவழி தருமுடம்பின்
நீரிலமை பெருவாழ்க்கை யென்னென்று நிகழ்த்திடுவாம். (௧௧)

குடருமெலும் புங்கொழுவுங் குருதியுமீ ருளுந்தசையுந்
தொடருநரம் பும்போர்த்த தோலுமூ னையும்வழும்பு
மடருமுவர் நீருநனி யருவருக்கும் பல்வீயும்
படருமுட லையும்பொருளா நினைப்பரோ பண்புடையோர். (௧௨)

இயக்கமிரண் டொழித்திடுகோ லெவ்வளவின் பவ்வளவே
முயக்கமிகு மங்கையர்த மோகத்தால் வருமின்பம்
நயக்கவிது கருதாது நாளுமவர்த் தோய்ந்துவத்தல்
வியக்கருமின் பெனலன்றி பல்வீழ்ந் துவத்தல்பொரூஉம். (௧௩)

மிதவையினோக் கமைத்துழலு மீன்கொலைஞன் போற்கவரும
பதமிதெனப் பார்த்துழலும் பாழ்ங்கூற்றுண் மையினலெவ்
விதமுமுடம் பொழியுமதன் மேற்புரிவ தொன்றுமிலை
யிதமிகித மேயுயிர்க்குத் துணையாக வெய்திடுமே. (௧௪)

புண்ணியமே லிடிற்சுவர்க்கம் புக்களந்த காளமர்ந்தே
யண்ணியபோ கங்களிப்ப வனுபவித்து மதுதீர்ந்தா
லெண்ணியபா தகமிழைகையா லிரவுரவ மாதியுற்றே
பண்ணியவெவ் வியபோக மனுபவிக்கும் பதைபதைப்ப. (௧௫)

இந்தவித முழலுமுயிர் சுகமுறுவ தெக்கால
மந்தமினஞ் சிவபெருமா னருளபதியப் பாகமரீஇப்
பந்தமறுத் துணைமைநெறி பற்றிடுவ தெக்காலஞ்
சந்தமிகு மின்பமுத்தி சார்ந்துயவ தெக்காலம். (௧௬)

வெள்ளியநீ றுறப்பூசி மேதகுகண் மணிபூண்டே
யுள்ளியவஞ் செழுத்தினரா யுணமைநெறி யியங்கடியார்
வள்ளியமா மலர்ப்பாத மரீஇப்பணிசெய் தொழுகினுற்
றெள்ளியஞா னசிரியற் சேர்ந்தனைத்தும் பெறலாகும. (௧௭)

இந்தவர சாட்சியினோ ரனுத்துணையு மின்பமிலை
சந்தமுறு தவநெறியே சார்வேனென் றுளந்துணிந்து
கந்தமலர் மாலைமுடி காதலன்சென் னியிற்கவித்து
முந்தவமை யரசுரிமை முழுதுமவன் வயமாக்கி. (௧௮)

வேண்டுபொருள் கைக்கொண்டு விடையுங்கொண் டியாரிடத்துந்
தாணடுபெரி மன்னர்பிரான் றலஙகள்பல சேவிதது
நீண்டுகளிப் பெழவருவா னிறைபுவனத் துயிரடைந்து
மாண்டுகெதி பெறுகாசி வளநகரம் வந்தடைந்தான். (௧௯)

ஆனந்த வனத்தடைந்தாங் களவிலுவப் பினனாகி
யானந்த முத்துயிர்க்க வாலோனிங கடைந்தவித
ஞானந்தஞ் செருககொழிந்த தென்றரவிந் தங்கவனீ
ரானந்தந் துறைக்கங்கை யாற்றினிடைப் படிந்தெழுந்து. (௨௦)

தொழுதார்க்கே யருள்சுரக்குந் துண்டியா னையைத்தொழுது
கழுதார்க்குங் காட்டகததுக் கலப்புறினுங் கனிந்துகனிந்
தழுதார்க்கு முன்னிற்கு மகிலநா யகன்கழல்வண்
டொழுதார்க்குந் தளத்தடங்க ணுமையம்மை பதம்போற்றி. (௨௧)

காலவயி ரவப்பெருமான் கழலிணைகை யாற்றொழுது
தாலநிகழ் பெருங்கீர்த்தித் தண்டபா ணியைவணங்கி
மாலமையாப் பெருமுத்தி மண்டபத்தியா ரையும்போற்றிச்
சீலமிகு மன்னர்பிரான் சென்றனன்மற் றுங்கொருசார். (௨௨)

சென்றவிடத் தெதிர்தோன்றுந் திருமடத்திற் போய்ப்புக்கா
னன்றமையத் தான்புரிந்த நற்றவத்தின் பெரும்பயனை
யன்றமையக் கண்டான்போ லானந்தம் பொங்கியெழத்
தன்றகைமைக் குலகுருவாந் தவமியனை யெதிர்கண்டான். (௨௩)

வளமாருஞ் சிதம்பரத்தில் வண்புலிக்கான் முனிமைந்தன்
களமாருஞ் சிந்தைகொளாக் காதலுப மன்னியன்பாற்
றளமாரு மலர்த்தடஞ்சூழ் பெருந்துறைமான் மியமுழுது
முளமாரும் படியுணர்ந்தா குணர்திருக்குஞ் சிந்தையனை. (௨௪)

வெள்ளியகுப் பாயமென வெண்ணீறு சண்ணித்த
வொள்ளியமே னியிற்றிரிபுண் டரம்பொலிய வொளிர்வானைத்
தெள்ளியகண் மணிமாலை சிரங்கரமார் பாதியுறப்
புள்ளியதோ லாதனமேல் வீற்றிருக்கு மபுண்ணியனை. (௨௫)

காண்டல்பர சிவகோசங் கேட்டலவ னருட்காதை
வேண்டலவ னருட்பேறு வேறின்றென் றிருப்பானைத
தூண்டல்செயா மணிவிளக்கின் றோற்றமே ருறுவானைக்
கீண்டல்செய்மால் கிடையாத்தாள் கிடைத்தமைந்த மனத்தானை. (௨௬)

கண்டுபர வசனாகிக் கைகட்லை மேற்குவிய
மண்டுபுனல் விழிவார மயிர்ப்புளக முடலபோர்ப்ப
விண்டுமொழி தழுதழுப்ப விமமிதில மிசைவீழ்ந்தா
னண்டுமடி யவர்க்கருளு மன்னமுனி வாநோக்கி. (௨௭)

மன்னாநீ யெழுகவென வாய்மலர்ந்து வாழ்த்துதலு
முன்னாநான் செய்ததவ மொழியளவன் றென்றெழுந்தான்
றன்னாத ரவுசிறப்ப நீறளித்தான் றகவேற்று
நன்னுமம புகன்றணிந்தா னன்முனிவ னிருக்கென்றான். (௨௮)

என்றமொழி மறுதொருசா ரிருந்தமதிக் குலவேந்த
னன்றமையு முகநோக்கி நன்முனிவ னுரைசெய்வா
னென்றமைநின் னரசாதி பரிணமத் துற்றனவோ
வின்றெமக்கோ துகவெனநின் னருளினினி யனவென்றான். (௨௯)

இனியனவென் றுரைத்தவனை யிருங்கருணை யொடுநோக்கி
முனிவரனம பாலவந்த கருமமெவன் மொழிதியெனப்
பனிமதியக் குலவேந்த னெழுந்துபணிந் தனனாயப்
புனிதமுனி வரற்கொருசா ரிருந்துபுக லுவதானான். (௩௦)

அரசுரிமைச் செயல்புரியு மதனிலெனக் காசையிலை
விரசுபல் பிறப்பாலு மேவுதுயர்க் கஞ்சினேன்
பரசுசுக முத்தியுறப் பேராசை பதித்தடைந்தேன்
வரசுகுணக் குன்றேயென் மனத்துளதின் னமுமுண்டால். (௫௧)

காரியமா மூலமெங்கக் காரணநின் றுதித்ததுபே
ராரியநன் ருகவெளித் தழித்துமறைத் தருள்புரியுஞ்
சீரியநா யகனியல்பென் சிறந்தகா ரணகுருவா
யோரியவெத் தலத்தமாவா னுரைத்தருள வேண்டுமால். (௫௨)

இத்தனையுந் தெரிந்துமுத்தி யெய்துவான் சரணடைந்த
பித்தனையெள் ளாதருள வேண்டுமெனப் பின்னுமெழுந்
தத்தனையன் பருக்கன்ப னுயவனைத் தூயவனை
முத்தனையா னைப்பணிந்து முன்னிருந்த விடத்திருந்தான். (௫௩)

இருந்தமதிக் குலவேந்த னியல்பனைத்து முளத்தெண்ணித்
திருந்தவிரு வினையொப்புச் செறிந்தபெருங் காரணத்தாற்
பொருந்தமல பரிபாகம புணர்ந்ததா லெனக்கருதி
யருந்தவன்சாம் பவதீக்கை யாற்றினனவ் வரசனுக்கே. (௫௪)

கமலரோன் றுறவெடுத்துக் கடல்புடைசூழ் புவியாண்ட
புரவலனன் னுதல்விளங்கப் புண்ணியசாந் தம்புனைந்து
பரவுதன தருகிருத்திப் பவளவாய் மலர்ந்தருள்வா
னுரவுமிகு மழமுனிபா லுபதேசம பெற்றுயர்ந்தோன். (௫௫)

வெருவாத மலபந்தம் வீட்டுதற்காத் தவமியனைப்
பெருவாய்மைப் புரூரவா வடைந்ததிறம் பேசினு
மருவாரு மலாப்பொய்கை வாய்ந்ததிருப் பெருந்துறைவா
ழருவான்ம நாயகர்த மநாதிமூர்த் தம்புகலவாம். (௫௬)

புரூரவா தவமியையடைந்தபடலமுற்றிற்று.

ஆகத்திருவிருத்தம் ௫௧௮.

---

# ஆன்மநாதர்.

## அநாதிமூர்த்தச்செயலுரைத்தபடலம்.

வெருவாத பரசமயக் குறும்பெறிந்து சைவமென விளம்பா நிற்கும்
பெருவாய்மை யரசோங்கப் புவியிடைவே தாகமங்கள் பிறங்கச் செய்தே
யொருவாத குருந்துறையும் பெருந்துறையுற் றுணர்ந்த வுததி மூழ்குந்
திருவாத வூரடி கட்கிப்போ மும்மலமுஞ் சிதறிப் போமே. (௧)

அரசகே ளாகமஞ்சொ லாதிமூர்த் தத்தனைமுன் பறைவா மெங்கும்
விரசுபசுக் களுக்கெல்லாம் பதியாகித் தனிமுதலாம் விமல மாகி
யுருவருவ மருவுருவ மில்லாதா யுணர்வினுக்கோ ருணர்வாய் நித்த
மருவுபரி பூரணமாய்ப் பராபரமா யுயிர்க்குயிராய் வயங்கு மொன்றே. (௨)

வாக்குமனோ தீதகோ சரமாய வப்பொருடான் மலத்தைப் பற்றிப்
போக்குவர வுற்றுழலு மெவ்வுயிர்க்கு மிரங்கியின்பம் புணர்த்த வேண்டித்
தேககரு ளாலைந்தொழிலுஞ் செய்யுமதற் கைந்தொழிலாஞ் செயலுந் துன்பம்
போக்கவினைத் திமேறிவு முதன்மையும்வே றொருவர்தரப் புணர்ந்த வன்றே.

இயல்பேயா மதற்குமே லொன்றுமிலை முடிவிலதே யெவையு நாச
மயமாகப் புரிந்துயிரை மலத்தொடுக்கி மலபாகம் வருதற் காப்பின்
வியனுகுஞ் சூக்குமசிட் டியைவிதித்துத் தூலசிட்டி விதித்தற் காக
வயன்மாலைப் படைத்தவரா லசுத்தமா யையைப்பிறப்பித் தளிக்கப் பண்ணி.

துதிமேய வுருத்திரனை மகேச்சுரனைச் சதாசிவனைச் சுத்த மாயைக்
கதிகார ராக்கியவ ரதிற்றூல கிருத்தியங்க ளாக்கச் செய்து
மதிமேவு மெல்லாக்கா ரியங்களுக்குங் காரணமாய் மன்னித் தானே
பதியாகி நிற்குமஃ திச்சையினுற் கொளுமுருவின் யான்மை கூறில். (௫)

ஆதிதொறு மாதிதொறு மிச்சாஞா னக்கிரியை யாகி மூன்று
பேதமுற வளர்பரா சத்தியையே சுயமபுருவாப் பேணி நின்று
சோதிவடி வாய்வாக்கு நான்கினையும் விந்துவினிற் றோன்றச் செய்து
மேதகவி னவற்றுதித்த வக்கரத்தைச் சொற்பதமா விரித்துப் பின்னர். (௬)

போதமிகு வேதமா கமமங்க மிருதிபல பொருளுங் காட்டும்
பேதபுரா ணங்கலைகண் மந்திரதந் திரங்களெலாம் பிறங்கப் பேசி
நீதமிகு மவைபொதுவுஞ் சிறப்புமாம் படிமுறையி னிறுவிப் பின்னர்த்
தீதணுகாக் கன்மகாண் டமுஞான காண்டமுமாய்த் தெரிவித் தெங்கும். (௭)

திருவரச னுளுமுல கினுக்காணைத் திருமுகங்கள் செலுத்தி யச்சொன்
மருவுநெறி நடப்பவருக் கின்பமுமந் நெறிநடவா மடமை யார்க்கு
வெருவுபல துன்பமுமே வுறவிதித்தல் போலிரண்டா விளம்பு காண்டத்
தருமகன்னூல் வழிநடப்போர் நடவார்க ளுறும்பயனுஞ் சாற்றிப் பின்னர். (௮)

காரணகா ரியகுருவாய்த் திருமேனி கொண்டுயிர்கள் கதிவி ராவச்
சீரணுகு முபதேசஞ் செய்வானவ் வுபதேசச் செயல்கடாமு
மோரணுஞ் சமயமுடன் விசேடநிரு வாணமென வெடுத்துக் கூறுந்
தாரணியி லொருமூன்றுச் சாற்றுவாத் தீக்கைநெறி சார்வோர் தாமும். (௯)

கருதுதிரி மலத்திலொரு மலமுடைய விஞ்ஞான கலர்களென்றும்
பெருகுமிரு மலமுடைய பிரளயா கலர்களென்றும் பிரித ராமே
மருவியமும் மலமுடைச்ச கலர்களென்று மூவகையாய் மன்னு மிந்தப்
பொருவருபல் லுயிர்களுக்குப் பக்குவமு நால்வகையாப் பொருந்து மன்றே.()

மந்ததர மென்றுமந்த மென்றுந்தீ விரதரமென் றும்மா செல்லா
மந்தமுற வருமதிதீ விரமென்றும் பெயராமற் றவைக்கு வாழைப்
பந்தமுறு தண்டெசு விறகுலர்ந்த விறகிருந்தைப் பண்பா மென்றே
நந்தலிலந் நால்வகைப்பக் குவங்களுக்கு முவமான நவில்வார் வல்லோர்.

## வேறு.

இன்ன நான்கு வகைப்பாக மியைந்தோர் கதியெய் துதற்குரித்தாய்
மன்னு மினிய மார்க்கமுநால் வகைக ளாகு மவைபகரி
னுன்னு சரியை கிரியைசிவ யோக ஞான மெனவுரைப்ப
ரன்ன வகையும் பொதுவுண்மை யென்ன விரண்டா மவையுரைப்பாம். (௧௨)

உலக போகந் தனக்காசை யுற்றுப் புரிதல் பொதுவாகு
மலகி லதனை வமனபத மாக மதித்துப் பரசிவனுக்
கிலகு மாசை யொடுமியற்று மினிய தொழிலே யுண்மையாம்
பலபோ கமுந்தாழ் வுயர்வாகப் பரம னீவன் பலமிரண்டுள். (௧௩)

உண்மைச் சரியை முதன்முடித்தோ ருயர்சா லோகா தியையடைவா
வண்மைப் பொதுவுற் றோர்களஃ றிணையாம் பதத்தில் வதிவாரத்
திண்மைப் பலன்கள் பெறுமுயிர்க்குச் செககா ரணனுஞ் சிவன்குருவாய்த்
தண்மைக் குணமெய் யுபதேசஞ் சாற்றும் வகையுஞ் சாற்றுவாம. (௧௪)

இயல்பு பொதுவுண் மையதாயெவ் வுயிர்க்கு மியையு மவ்விரண்டி
லயலின் மருவு குணமபொதுவா மமல வுண்மை தன்னியல்பா
மயல்செய் பொதுவி னுறுமுயிர்க்கு வருகா ரியதே சிகனுகிப்
பயன்மே வமல வுயிருடலாய்ப் பதிந்து செய்வ னுபதேசம். (௧௫)

தனதா மியல்பிற் சாருயிர்க்குச் சத்தி யெனுந்த னியல்புருக்கொண்
டினிதா கியகா ரணகுருவா யியம்பி யிடுவ னுபதேச
முனநா முரைத்த மகாமாயை முழுதும் புநித மாதலினூற்
சனிவோ டதில்வாழ் விஞ்ஞான கலரே பிரள யாகலரே. (௧௬)

ஆய விவரு ளொருவர்தமக் கறிவுக் கறிவா யொருமலந்தீர்த்
தேய வருள்வன் மற்றொருவர்க் கியைய முக்க ணூற்புயங்கூர்
பாய மழுமான் காளகண்டம் பதித்து விடையின் மேற்றோன்றித்
தோய வமர்ந்த விருமலமுந் துரத தேக வருளுவனல். (௧௭)

அசுத்த மாயைத் தனுவிடங்கொண் டமருஞ் சகலர்க் கவரேபோல்
விசுத்த கருணைத் திருவுருத்தீ பகமாய் மேவி விரும்பிமுன்னின்
றிசிதகுக் காந்த மிரும்பைவலித் திடுமோ போல விழுத்துநனீ
வசித்துப் பிடித்து நிறீஇயிருளா மருளும் வெளியு மறமாற்றி. (௧௮)

நோக்காற் பரிசத் தால்வாக்கா னுவல்பா வனையான் மிகுநூலா
லாக்குஞ் சிவயோ கப்பயில்வா லருள்சே ரினிய வவுத்திரியாற்
றீக்கை புரிந்து பரிபாகஞ் செய்தவ் வுயிரைத் தானாக்கி
வாக்கு மனத்துக் கெட்டாத்தன் மலர்ச்சே வடிக்கீழ் வைத்திடுவன. (௧௯)

இன்ன வாறு காரியகா ரணதே சிகரா யியலியல்பின்
மன்னு மினிய சதாசிவமே மகேச மேநல் லுருத்திரமே
யென்னு மிவைகா ரியவடிவா மிலகு மநாதி மூர்த்தமொன்றே
முன்னு பரம காரணதே சிகரா மவர்சீ மொழிவாங்கேள். (௨௦)

காண்டற் கரிதா கியபரிபூ ரணவா னந்தக் கடலாகிப்
பூண்டெவ் விடத்து மவரேயெப் பொருளு மாகி நிறைதரவும்
பாண்டி நாடே. பழம்பதியாப் பகரு மநாதி மூர்த்தவிட
மீண்டு மருவும் பெருந்துறையா யெவருங் காணும் படிகாட்டி. (௨௧)

இனிதாஞ் சிவதீர்த் தங்கணவந் தருபே தங்க ளுறவியைதது
தனது கருணை யாமருளே தழைத்த குருந்தா யிடவதன்பா
லுனுதற் கரிய கோயிலொன்று காட்டி யோகாம் பிகையினொடும்
புனித வான்ம நாதரெனப் புவியேழ் போற்ற வீற்றிருப்பார். (௨௨)

அவரே யெவர்க்குங் காரணதே சிகரென் றறிதி யுலகெங்கு
மவரே யமர்கா ரியகுருவா யமர்ந்து விளையா டுவரென்று
மவரே யநாதி மூர்த்தரென்று மநாதி மூர்த்தத தலந்தீர்த்த-
மவர்சே ரிடத்தே யமையுமென்று மறையு நிகமா கமமனைததும (௨௩)

இருள்சேர் மலஞ்சேர்ந் தெவ்வுயிரு மிடர்ப்ப டாம லெடுத்தாளு
மருள்சே ரான்ம நாயகர்த மநாதி மூர்த்தச் செயலுரைத்தாம்
வெருள்சே ராம லெஃவுயிரும் புரந்து வீடு விருமபினோய்
தெருள்சே ரருட்ச தாசிவமூர்த் தத்தின் றிறனுஞ் செப்புவாம. (௨௪)

ஆன்மநாதரநாதிமூர்த்தச் செயலுரைத்த படலமுற்றிற்று.

ஆகத்திருவிருத்தம ௪௨௨.

---

# சதாசிவமூர்த்தமுரைத்தபடலம்.

நல்லரு நடுங்கப் புலிங்கமும் புகையு நகவிரு விழியினுந் தோற்றி
வெல்லரும் பகட்டு மிசைவரு மியமன் விறற்றடி யடிமுடிக் கொள்வா
ரல்லருஞ் சுவண நகர்நிலை வழுக்கி யவனியில வீழ்ந்தமர்ந் தன்ன
சொல்லரு மொளிசால வாதவூ ரடிக மேணயடி முடிக்கொளா தவரே. (க)

எவைக்குங்கா ரணமா மகாதிமூர்த் தத்தி னியலுமா யிரத்திலொன் றாக
நிவப்புறு பரையே யாதியே விருப்பே நிகழ்தரு ஞானமே தொழிலே
யுவப்புறு சிவத்த தவத்துறச் சத்தி யுதித்தலபோ லொன்றினொன் றுதித்துத்
தவத்தினுக் கரியோர் தொழுதுய்ய நிமித்தஞ் சதாசிவ மைந்தையுந் தருமால்.

திகழ்பரா சத்தி யிடத்தினிற் சிவச தாக்கியர் திருந்துமா தியினிற்
புகழ்மிகு மமூர்த்தி சதாக்கியர் மிக்க புநிதவிச் சாசத்தி யிடத்தின்
மகிழ்தரு மூர்த்தி சதாக்கிய ரறிவின் மன்னுகத் தருசதாக் கியரோ
ரிகழ்வுறுக் கிரியா சத்தியிற் கரும சதாக்கிய ரினிதுதித் திடுவார். (ங)

பத்திலொன் றாயச் சததிக டொறுமுற் பவித்தமற் றவருருப் பகரிற்
சுத்தமா கியநற் பராபரம் பரஞ்சூக் குமந்தூல சூக்குமந் தூலம்
வைத்தவைந் திலிங்க மாய்விளங் கிடுவர் மன்னுமவ் விலிங்கங்கொள் வடிவும்
புத்தியி னுறக்கேள் சிவசதாக் கியர்தாம புகழ்மிகு சுத்தமே வடிவாய். (ச)

அந்தமி லாத வதிசூக் குமமா யளந்தறி வொணகிலா வொளியா
யுந்துமா காய மின்னென வளர்ந்தெவ் வுலகமும வியாபித்து நிற்பர்
கந்தலி லமூர்த்தி சதாக்கியா சோதிக் கதிர்கோடி தோன்றுதூண் போன்று
நந்தலி லொளியு ளறிவதற் கரிய நகுதிரு மேனிகொண் டமர்வார். (ரு)

மூர்த்தியா கியநற் சதாக்கிய ரிச்சை முதிர்குணத் தொடுநகலை யோடு
மாத்தமா யியைந்தக் கினிப்பிழம் பிலிங்க மாகியுச் சியினொரு முகமுங்
கூர்த்தமுக் கணணு முடையராய்ச் சிறந்த கொள்கையுந் திருப்பர்கத் தருவுஞ்
சீர்த்திகொண் ஞானத் துதித்தலா லத்த ரெனுந்திரு நாமமொன் றுற்று. (சு)

சீலமா கியநற் குணமுறும் படிகத் தேசுடை யிலிங்கமா யதன்மே
ஞலமை முகங்க ளுப்பணிற் றுலங்க நயனம்பன் னிரண்டுடை யவராய்ச்
சூலமொண் மழுவா ளபயகால் வலக்கை சுமந்திடத் தரித்திட நாற்கைக்
கோலநா கம்பா சம்மொளிர் கண்டை கோதிலா வரதகன் கமைத்து. (எ)

சீரணு வியகல் விலக்கணத் தோடு சிறந்தவீற் றிருப்பாராற் கருமப்
பேரணு வியமெய்ச் சதாக்கியர் தாமும் பிறங்குறு கிரியையி னுதித்த
காரண மதனு னுதமே வடிவாய்க் கனாவிந்து பீடத்தின் மேலாற்
பேருத லிலாத தொழிலமர் பிண்ட காயராய்ப் பிறங்குருக் கொண்டு. (௮)

முன்புரைத் திட்ட சதாக்கிய நான்கு முதிர்நாத மாய்வந்து கூட
வன்புற வொன்றாய்த் திரண்டரு வுருவ மாகியீ சானந்தற் புருட
மின்புறு மகோரம வாமதே வஞ்சீ ரிலகிய சத்தியோ சாதம்
வன்பமை யைந்து முகங்களா யிலங்க மாட்சியிற் றெரிதருவீற் றிருப்பார். ()

இந்தகற் கரும சதாக்கியர் வடிவ மியம்புறிற் சகளநிட் களமா
மூந்ததிற் சகளம் பரவிந்து நாத கலைகளு முடிவிலா வபர
விந்துநா தத்தின் கலைகளுஞ் சததி கலைகளும விராய்முப்பத் தெட்டாய்ப்
பந்தமுற் றுருவாய் மருவுநிட் களமுன் பகர்ந்தவைஞ் சத்தியே யாமால். (௧௦)

சத்தியா கியநிட் களவெளி யதனிற் சகளமிந் திரதனுப் போலுஞ்
சுத்தமா கியதர்ப் பணநிழல் போலுந் தோன்றிடு முத்திலை விழைந்தோர்
சித்தமா கியபங் கயத்தினி லிவனைத தெளிதரு படிகநன் னிறமும
வித்துரு மச்செஞ் சடைமுதன் முடியும் விளங்குமா னனங்களோ டைந்தும்.

மூவைந்து விழியு மீரைந்து கரமு முண்டக மலர்ப்பத மிரணடுந்
தாவிலாச் சூலம பரசுவாள் குலிசந் தயங்கப யம்பொலி வலமும்
வாவுபன் னகம்பா சாங்குசங் கண்டை வரதமே வியவிடப் புறமு
மேவிடச் சகலா பரணமுற் றவராய் மிகுமிலக் கணமுடை யவராய். (௧௨)

சந்தன மொளிகூ ராடைபூ மாலை தரித்துநீள் கையுகிர விளங்கச்
சிந்தையுண் மகிழ்புன் னகையொடுஞ் சாந்த குணதொடுந் திகழ்தரத் தியா
தந்தமி லாதே யகததினும புறத்து மருச்சனை புரிவர்மற் றவர்க்குப் [னித்
பந்தமா கியமும் மலத்தொடர் பறுததுப் பரகதி யருளுவ ரென்றும். (௧௩)

இப்படி. யடியா ரிருதயந் தோறு மிருப்பது போலவெஞ் ஞான்று
மொப்பறு சிவலோ கத்தின்வீற் றிருப்ப ருவர்செய லுரைத்தன மப்பாற்
செப்பருங் குணத்தி னுலகெலாஞ் செங்கோல செலுத்திடு வேந்தர்தம் வேந்தே
தப்பற வடுததார்க் கருண்மகேச் சுரர்தந் திறத்தையுஞ் சாற்றுதுங் கேண்மோ.

சதாசிவமூர்த்தமுரைத்தபடலமுற்றிற்று.

ஆகத்திருவிருத்தம் ௪௩௬.

# மகேச்சுரமூர்த்தமுரைத்தபடலம்.

பதுமமல ரிருப்பாயும் பாற்கடன்மேற் கிடப்பாயும் பகரக் கேண்மின்
விதுமுடியா கமஞ்சகல ரென்றுநுமைப் புகலுதலால் விழைந்தெந் நாளுஞ்
சதுமறைசூழ் வாதலூ ரடிகணிகாத் தனமெனவுட் சறறு மெண்ணீர்
புதுமையுற வெண்ணிலபக் குவயாமு மெணணுவதிற் புகரொன் றின்றே. (க)

காரியநா ரணவுருவாஞ் சதாசிவரிற் றோன்றிமிகு கருணையோடும்
பாரிலமர் வெள்ளிவே தண்டமே யெந்நாளும் பதியா வாழு
மேருறுநன் மகேச்சுரர்தம் பெருமையையா மறிந்தமட்டு மியம்பு வோங்கேள்
போருறுவேற் புரவலவென் றினியதவு மியமுனிவர் புகல்வா ரானூர். (உ)

நவந்தருபே தங்களெடொறு மேகனாய் நடித்திடுமெல் லான்ம நாத
சிவன்றிகழுஞ் சதாசிவரின் மகேச்சுரராய்த் திகழ்ந்தெழுந்து சிறப்பி னிந்தப்
புவனமுழு தயுநிமித்தம் பொருந்திருபத் தைந்துருவிற் புணர்ந்து நின்றிவ்
வவனிமிசை விளையாடு மற்புதந்தேர்ந் தியாவரெடுத் தறைய வல்லார். (ங)

புண்ணியர்க ளறிவதலாற் புன்மையறி வுடையோர்கள் புந்திக் கென்று
மெண்ணியறிந் திடலரிதா மியாவரா யினுந்துணிந்திவ் வுலகு தன்னி
லுண்ணிறைந்த வன்பினொடு மோருருவை நினைந்திடிற்பல் லூழி காலம்
பண்ணுதவப் பலனங்கை நெல்லியென வக்கணமே பலிக்கு மன்றே. (ச)

அன்பர்நிமித் தம்புகழ்சால் சிதம்பரமுற் புடவியிடத் தழிவி லாத
வின்பவுரு வாய்ப்பொலியு மாலயத்துஞ் சிவலோகத் திடந்துந் தோன்றி
மின்பரவு பேரொளியின் விளங்குமகா கயிலாய மிசைவாழ் கின்ற
நன்புகழ்சேர் மகேச்சுரனூ நல்லோர்க டியானிக்கு நலமுங் கேளாய். (ரு)

கோடிசூ ரியப்பிரபைத் திருவுருவு மைமமுகமுங் குழைகள் பதது
நாடூமு வைந்துதிரு நயனமுமீ ரைங்கரத்தி னலஞ்சேர் சததி
நீடுதிரி சூலம்வேல் கட்வோங் கம்வரத நிறைந்த நாதஞ்
கூடுதம ருகமுகனிமர் தளம்பாம்பு செபமாலை குளிர்நீ லப்பூ. (சா)

இவையுடைய ராத்தியா னித்தறிவ ரவருள்ளத் திரக்க மேவித
தவமலிபல் லுயிர்களுக்கும் வீடருளத் தமதாதி சத்தி தன்னு
லவமனுக்குந் திரோபவமாந் தொழில்புரிந்தா ணவமலநோ யகற்று பாக்கும்
பவமுறுநற் சுவர்க்கமுநீ ணிரயமுமே மருந்தாகப் பண்ணி மேலால். (எ)

பண்டிதஞ்செய் வைத்தியராய்ப் பிணிதீர்த்துப் பலன்கொடுப்பர் பலனீ தற்கா
வெண்டிசையிற் கொண்டவுரு வெண்ணரிதா யிடினுமவற் றினிதாய் மேலாய்க்
கொண்டவிளை யாடுமொரு குறியிருபத் தைந்தாமக் குறிகொண் டெங்கு
மண்டர்பிரா னுவந்தாடும் விளையாட லொவ்வொன்று விறையக் கேணீ. (அ

வேறு.

மந்திரவா ரியன்மனையை மதியாது புணர்பிழையா
லிந்திரனு தியருடற்ற விளைத்தபய மெனும்பொழுது
வந்திரவோ னடிமையென வெடுத்துமுடி வைத்திடலாற்
சந்திரசே கரரெனும்பேர் தாங்கினர் சங்கரனார். (கூ)

பத்தர்தொழுங் கேதாரப் பதியிலுமை தவம்புரிந்து
சுத்தமுனி வரனெனையுஞ் சூழ்ந்துதொழும படியின்னே
யொத்தநின்மே னியிற்பாதி யுதவுகென வுதவுதலா
லத்தநா ரீச்சுரரென் றுயினார் தாயனார். (க0)

அளிப்பவர்காப் பவர்சென்னி யடங்கவறுத் துறக்கோத்து
வெளிப்படமா லிகையாக்கி விழித்தியா லுலகனைத்து
மொளிப்பவழற் றுபுநடன முமைகாண வியற்றுதலாற்
றெளிப்பாட ரூசரெனச் சிறந்தாரொப் பிறந்தாரே. (கக)

மெலியாத பனிவரையில் விமலையுதித் துறப்புரியு
மொலியாரு மருந்தவங்கண் டுவணமணம் புணர்ந்துலகு
சலியாது பெருமபோகந் தவப்பயில நல்குதலாற்
கலியாண சுந்தரரா யினர்கனற்கட் பெருமானார். (கஉ)

மிக்கவர்நா மெனுமுனிவர் மிடைதாரு வனத்துமக்குத்
தக்கவர்நா மெனவனையர் தையலார் நிலைகுலைவுற்
றுக்கவரா கப்பயிக்க முறவடைத லாற்பயிக்கம்
புக்கவரா யினர்சரணம் புக்கவரைப் புரப்பவரே. (கங)

ஆயவுல கழிவுறுகா லறக்கடவுண் மேவுவதோ
மேயவிது நமக்குமென விடையுருவங் கொண்டடைந்து
தூயமல ரடிபோற்றத் துவன்றூர்தி யாகென்றே
யேயவதன் மேற்கொளலா லிடபவா கனரானார். (கச)

தனையடையு முனிவருக்கா னிழற்றங்கி மறைமுடிவாந்
தனையுணர்த்தி யமருநாட் டண்டிழாய் மாலேவத
தனையுணரா னுய்க்கருப்புத் தனுவளைத்தோர் கணைவிடுவே
டனையெரித்த லாற்காம தகனரா யினரம்மா. (கரு)

பூலமுனி தமைப்பூசை பண்ணியமர் திறங்குறியா
தேலமுனி வொடேபாச மெறிந்தடற்றும் யமன்வெருவி
மாலவவன் மார்புதைத்து மாய்த்ததிறத் தாற்கால
காலரெனும் படியாரூர் காலமெலாங் கடந்தவரே. (கசு)

மேருவொரு சிலையாக வெய்யவரா நாணாகக்
காருருமால கணையாகக் கைக்கொடுசென் றேவின்னும்
பாருமுவப் புறப்புரமூன் றெரித்தருளும் பான்மையினல்
யாருமவ ராதிரிபு ராந்தகரென் றிசைப்பாரால். (கஎ)

கன்னிவிறோ தத்தின்முகக் கணபுதைத்து விடுத்தநாட்
டென்னிவிர னுருவோவை தொடுகடல்சூ ழுலகழிக்க
முன்னியதென் றமராநடு நடுங்கவதை முடிக்கொளலான்
மன்னியமா மறையுரைத்து வயக்கிடுகேசு காதரப்பேர். (கஅ)

தீயவழற் கொழுந்தெழுந்து சேணளக்க மகம்புரிந்து
பாயமுனிக் கணம்பிறப்பித் தேவவினா இப் படர்கரியை
யாயவிறற் சிஙகமென வடர்ந்துரித்த காரணததாற்
தூயவனை யானையுரித் தவரெனச்சொல் லுவரின்னும். (ககூ)

நங்கார மொழிந்துசிறு விதிசிறியோர் தமைநயந்து
பங்கார வுதவேனென் றுரைத்துமகம் பண்ணுங்கா
லுங்காரத் தொடுதோன்றி யுதையழித்த லால்யாக
சங்கார ராயினர் சஙகரநா மந்தரிததார். (உ0)

பாலிடத்தா னெய்போலப் பரந்ததனைப் பசியவிலை
யாலிடத்தான் றெழுதுதொழு தன்புருகி யருந்தவத்தான்
மேலிடததான் றேன்றியிடம் விராவவமைத் திடுதிறத்தான்
மாலிடத்தா னென்றொருபேர் மறையிடத்தான் றங்கினன். (உக)

தராதலமீ தருச்சுனன்செய் தவநிலையி லொருகேழல்
விராவுதல்கண டொருவேட வேடமரீஇ யிகன்றவனங்
கிராமலெடுத் தெதிர்ந்தடிபட் டிரஙகியருள் செய்தலினாற்
கிராதவடி வத்தரெனக் கிளப்பனவா லென்றாலும். (உஉ)

சங்கார காலமெலாந் தழலாக விழித்துவெளிச்
சிங்கார பீடமிசைச் சிருட்டிதிதி செயுமவர்தம்
பங்கான முழுவெலும்பு பரித்தமருங் காரணததாற்
கங்காள நாதரெனக் கற்றுணர்ந்தோ ரெடுத்துரைப்பனா. (உங)

வரசாத மலிசேய்ஞல் வளம்பதியாற் றாரடியே
விரசாத னமாக்கொடுமை விழைத்துபா லாட்டல்கண்டே
பரசாத வனைத்தடிந்தார் பாலுவந்து தண்டீசப்
பிரசாத ரெனுநாமம் பெற்றார்சத் தியோசாதர். (௨௪)

அண்டர்மக பதிமலர்மே லயனெடுமா லாதியராந்
தொண்டர்முறை யிடற்கிரங்கிச் சுடுவிடமுண் டருடிறத்தால்
வண்டரிசைத் திடுகொன்றை மாலைவே ணியர்நீல
கண்டரெனும் பெயர்பெற்றார் கைகுவித்தியா வருமிறைஞ்ச. (௨௫)

எக்கரவு மில்லானை யிணர்த்துழாய் மாலுவா
லக்கரமோ ரைந்தோதி யடியிற்கண் ணப்பியன்பு
மிக்கரவோ வெனநேமி விழைந்தளித்த காரணத்தாற்
சக்கரதா னேசரெனு மொருதிருப்பேர் தாங்கினார். (௨௬)

நோக்கந்த மெய்தாமே நூக்கருந்தீ யாய்நிமிர்ந்தா
ராக்கந்தம் பாலாவா னனைத்துயிருந் தொழுதுய்யக்
காக்கந்தக் குழலுமையாள் கந்தரொடு மமர்தலிற்சோ
மாக்கந்த ரெனுநாமம் பெற்றுவயங் கினரன்றே. (௨௭)

மதிக்கருள்கூர் தும்பிமுக வல்லசுரன் றனைமாட்டித்
துதிக்கருளோ ரிடத்தேதத் துவன்றுபுகர் முகத்தயா
நிதிக்கருள்கூர் தலினுலகெங் கணுநிறைந்தார் நீடுகணை
பதிக்கருள்வா ரென்றுநிக மாகமங்க ளினும்பகரும். (௨௮)

போதனெடு மாலொருகாற் புண்ணியநா யகாதம்மோ
டாதலுறு மொருவரெனு மகந்தைகெட வொருகான்மெய்ம்
மோதவிரு பாலவரை முளைப்பித்த தாலேக
பாதவுருத் திரரென்று பகருவா ரொருநாமம். (௨௯)

அகாரமுருப் பலவாய வக்கரந்தோ றுறுதலென
விகாரமறப் பலவுயிர்க ளிடத்தும்வியா பகமாகி
யுகாமையுறப் பெரும்போக முதவுதிறத் தாலென்றுஞ்
சுகாசனத்த ரெனும்பெயருந் தோன்றவுரைத் திடுமறையே. (௩௦)

ஒன்றுசிவா லயங்கடொறு முதீசியெதிர் திசைநோக்கி
யென்றுமியல் பதியொடுயிர் கலத்தலிது போலென்று
நன்றுறுஞ்சின் முத்திரைக்கை கூறநயந் தயர்தலினு
லன்றலின்மூ லாசிரிய ரென்றுரைக்கு மருமறையே. (௩௧)

பாயமல ரிருப்பானும் பரவைமிசைக் கிடப்பானுஞ்
சேயபற வையும்விலங்கு மாய்த்தேடித் திகைத்திடகோ
னேயமிக வோரிலிங்க நின்றுவெளிப் படுதலினன்
மேயவிலிங் கோற்பவரென் றுரைத்தருளும் வேதமெலாம். (௩௨)

துணைத்தெழுந்த மூலையுமையா யேபசு வாய்மதுர
மிணைத்தெழுந்த பாலாட்ட வெளிப்பட்டவ் வுருவிரித்துப்
பணைத்தெழுந்த களிப்பினொடு மிணைத்திடலாற் பரமர்தமக்
கணைத்தெழுந்த நாயகரென் றொருபெயரா கியதம்மா. (௩௩)

இந்தவித மோரிருபத் தைந்துருக்கொண் டினிதியன்று
பந்தமுயிர் களுக்கொழிக்கும் பண்புகூர் மகேச்சுராதா
ரந்தமது பெருந்துறையி னடுகுருந் தடிவாழு
மந்தமில காதிமூர்த் தத்தர்ன்ம நாயகரே. (௩௪

ஆதிசத்தி யாலுயிராக ளத்தனையுந் திரோபவித்துச்
சோதிமுத்தி யெளிதுய்க்கு மகேச்சுரர்தந் திறஞ்சொற்றுங்
கோதியற்ற லொழிந்தவுயி ரெவையுமுளங் குறித்தருளு
நீதியுற்ற வுருத்திரசீ கண்டரரு ணிலையுரைப்பாம். (௩௫)

மகேச்சுரமூர்த்தமுறைத்தபடலமுற்றிற்று.

ஆகத்திருவிருத்தம் ௫௪௪.

# உருத்திரமூர்த்தமுறைத்தபடலம்.

வெள்ளியபங் கயக்கிழத்தி விம்மியிறு மார்தமூலை வீதகந் தாக்கத் [ரார்
துள்ளியவெண டோளவளையான் வளர்ந்தவெழுத் தற்றபயன் றோன்ற வோ
நள்ளியநந் திருவாத வூரடிகள் வாய்மலர நம்மா னேருற்
றௌள்ளியகை யால்வரைந்த பலவெழுத்து ளோரெழுத்தை யோர்ந்துளாரே.

வாரிபுடை சூழ்புடவி நடுநிற்கு மாமேரு வரைக்கோர் பாலகர்
மூரிநெடுங் கைலைமகா கைலையது காரியமா மொழிய நிற்கு
மேரியலு மகேசரரு ளேதுவுருத் திரராங்க ணிருந்து வாழ்வார
சீரியகான் முகனெடுமா லிந்திரனு தியர்நிதமுஞ் சேவித் தேத்த. (௨)

அவரேபல் லுலகினுக்குஞ் சங்கார காரணரா யசல மீன்ற
துவர்வாயி னுமையவனு யகராய்ப்பல் லுருத்திரர்க்கோர் தோன்ற லாராய்
நவமேய தலங்கடொறு மிறையவராய் விழவாதி நலங்கொண் டெஞ்ஞான்
றவமேய வுயிர்க்கெல்லாந் தக்கபலன் கொடுத்தருளுந் தலைவ ராவார் (௩)

சுத்தவித்தைக் கதிபராய் மால்யனு தியரேவற் றொழில்கள் செய்ய
நித்தியரா யமர்வர்களிக் தடியர்தியா னத்திலுறு நிலைமை கூறின்
மத்தமறு கொக்கிதழி மதியரவு நதிசடைமேல் வைத்து நாலு
கைத்தலத்து மான்மழுவு மபயவர தமுநீலக களமுங் கொட்டி. (௪)

பைங்கணு மையினுெடும் படர்கேழற் கோடுநெடும பாம்பும விணனு
ரங்கமா லையுமபுயததி லணிந்துபுலி யதளுடுதத வழகு தோன்றச்
சங்கணிந்த குழைதோன்றக் கருணைமுகப் புன்முறுவ றயங்கித் தோன்றக்
கொஙகமையுங் குளிர்ந்தமலர்ப் பதந்தோன்ற நின்றுகதி கொடுப்ப ரன்றே.

ஆதிபூ கயிலாயப் பெருந்துறைப்பைங் குருந்தினம ரான்ம நாத
ரோதியவிச் சுத்தவித்தைக இறைமையுருத் திராரகி யுருத்தி ரப்பல்
பேதமெலாம் படைத்துமிகு சங்காரத தொழிலருளும பெருமை தன்னைச்
சீதமதிக் குலவேந்தர் வேந்தனே யாமுனக்குச் செப்பக் கேண்மோ. (௬)

வேறு.

சிவஞ்சத்தி சிறக்குஞ் சதாக்கிய மகேசந் திகழ்சுத்த வித்தையோ ரைந்துந்
துவர்துவ மான்ம நாயகர் தமக்குச் சுதந்திர வடிவமா தலினு
லெவர்புரி தொழிலு மவர்புரி தொழிலா மிதற்குவே றையமொன் றுண்டோ
நவந்தரு விதத்து மேகநா யகனே நடிப்பனென் றுகமஞ் சொலலால். (௭)

சுத்தமா யையினு மசுத்தமா யையினுந் தோன்றிய வண்டத்தின் றொகைக
ளித்தனை யெனவெண ணுதலரி தாமா லியலுறு மைந்தொழி லியல்பும்
வைத்தனர் பலவா வவற்றிலிவ் வணட மாய்ந்துபின் னுதித்திடுங் கால
நித்தரா கியசங் காரநா யகர்முன் னிகழ்த்திய விலிங்கத்திற் றேன்றி. (௮)

ஒருசதா சிவராய் மகேச்சுர ராய்முற் றொழித்திடப் படுமுருத் திரரா
யிருவித மெனுமுன் பின்னென லொழிந்தே யெவ்வுரு வேணடினு மியைந்து
மருவதி காரக கயிலையின மேவி வயஙகுமைம முகப்பிரே ரகத்தாற்
பருவதி கார வைவரைப் படைத்துப் பஞ்சபூ தத்தினு நிறுவி. (௯)

மந்திரம் பதம்வன் னம்புவ னந்தத் துவங்கலை யாறென வகுத்துத்
தந்திரம் புகலத் துவாவயன் முதலோர தாமுறப் பகிர்ந்தளித் தவருக்
குந்துமைந் தொழிலி லொவ்வொன்றே மிகுமா றுதவியவ் வைவர்க டம்மி
னந்தபூ மிசையோ ஞரண னீங்க நலமிகு மற்றைமூ வரையும். (௧௦)

சமைதம தினமாக் கொண்டயன் மாலைத் தாம்புக லேவல்செய் வாரா
வமைவுசெய் தயனுற் றிசைபுரப் பவரா யமரரா வித்தியா தரரைக்
கமைமுனி வரிராக் கதரியக் கரைக்கந் தருவர்சித் தர்கள்கரு டர்களைச்
சுமைபெறு யாழ்க்கிம் புருடர்கின் னரரைத் துவன்றுவிஞ் சையர்மருத் துவரை.

ஈரெழு மனுவை நவக்கிர கனாமீ தெழுமுகேக் கணங்களைக் கடலைப்
பாருறு முலையை நதிகளை வனத்தைப் பறவையை நரர்களை மற்று
மூருவ திருப்ப தியாவையும் படைக்க வுதவிசெய் தவையெலாம் புரககத்
தாருறு தழாயச் சுதற்கருள் புரிந்து சக்கரப் படையுநன் கருளி. (கஉ)

ஆணவ மயக்கா விருவர்செய் தொழிலு ளறம்பிறழ் தொழினட வாம
னீணிலங் கீழ்மே லெண்டிசை முழுது நினைந்தகாத் திடுவதற் காகப் [பர்
பேணுருத் திரப்பேர்ச் சிவகண நாதப் பெருகவையும் படைத்தங்கங் கமைப்
மாணுமக கணத்துத் தொகையினுட் சிறிது வகுத்திடக கேட்டிமன் னவனே.

வேறு.

சோதி யாயருட் சுயம்பிர காசமாய்ச் சுடாக்கயி லையின்மேவு
மாதி காரண ராமுருத திரர்தமி லாயிரத தொருகூறு
நீதி சேரநா சிருத்தரைப் படைத்தபி னிகழநா தரைமேலா
வோத நந்தனா வியோமரு பரைவியா பகரையு முதிப்பித்து. (கச)

அருவி யாபக ரிற்பிரிந் தவரெனு மாடகே சுரர்க்கென்று
மருவு மோரெழு பாதலம் புரந்திடு மாண்புநல் கியபின்னைப்
பெருவி யோமரு பரிற்பிரிந் தவரெனப் பேசுகூர் மாணடர்க்கு
வெருவு மாநர கனைத்தையும் புரந்திடும் வெற்றிசா ரெழினல்கி. (கரு)

அனந்த ரிற்பிரி வானகா லாக்கினி யுருத்திரா தமககன்பிற்
கனந்த ருமபிர மாணடத்தின் வளமெலாங் கடிவதற் கருணல்கி
யினம்பொ ருந்தநா தரிற்பிரி வானவா தாரசத் தியையென்று
மனங்க ளித்திலே சாகவண டமகளைத் தாங்கென வரநல்கி. (கசு)

எணணி லாவயி ரவாகளைத் தம்மிடத் திருந்துதித் திடப்பண்ணி
நணணு கேத்திர தீரத்தங்காத் திடலெனு நயக்குமோர் தொழிலீந்து
வண்ண நன்னுதற கண்ணிடை வீரரை வரவழைத் தவாமெயயிற்
றிண்ண மாம்பல பூதகோ டிகள்வரச் செய்துசே வகராக்கி. (கஎ)

ஐய ஞர்தமை யரியெனு மோகினி யரிவையின் வரப்பண்ணிச்
செயய நேமியுஞ் சூலமும பாய்பரித திரளுமவெண கயமாவும்
வெய்ய பல்படைப் பூதரும பெற்றுநீ மிக்கவுக் கிரததோடுமே
வைய கத்தமர் பதியறம வளர்த்திடென் றன்பொடு வரீநல்கி. (கஅ)

மான்ம ழுப்பெறு கரத்தரா யிடபவா கனத்தராய்ச் சடைதாங்கிக்
கான்ம லிந்தபூங் கொன்றையு மரவமுங் கடவுட்கண மணித்தாரும்
பான்ம லிந்தவெண ணீறுமெய் யுறப்பெறு மீசர்பன் னொருபேர்கள்
வான்ம லிந்தகீ ழுத்தர மூலையில் வசித்திடும் படிசெய்து. (கக)

### வேறு.

தனது சத்தியி னூற்றகூ ருச்சதத மாத
ரினிய பத்திர காளியி டாகினி துர்க்கை
வனமு றுங்கவு மாரிசண் டிகைபக வதியே
கனப டைக்கலத் தொமேம்வரு மாகடைக் கணித்து. (உ0)

கோடி கோடிபல் கோடியா கியகுறட் பூதம்
பாடி யெங்கணு மாடிடப் பரப்பியெம் பரம
னேட லர்ந்தபைந் தருப்பொலி கயிலையி லிருந்து
நீடு மைந்தொழில் புரிவனத் தொழில்செயு நெறியால். (உக)

நாளி லேபசு புண்ணிய மிகுந்துநன் னலஞ்சார்ந்
தாரு மாசிவ புண்ணிய மபுத்திபுத் தியுனூற்
றேளி நற்பொதுச் சிறப்பிரு வகையில்வந் துறுவன்
காளு லாமிருண் மலத்தினைப் பயப்பயக் கழிதது. (உஉ)

பாக மேவிய வுயிர்கள்புன் சமயத்திற் பதியா
தியோக நாயகி தலைவனுட் சமயததி லூறுதித்
தாக மாய்க்குரு வருள்பெற நாடிடுந் தாகம்
போக மீதுறிற் பொதுவகைத் தீக்கைகள் புரிந்தும். (உங)

முத்தி யேபெறு வோமெனத் தாகமுண் முதிர்ந்து
பத்தி மேவுயிர்க் குண்மைத்தீக் கைகள்பணபிற் செய்துங்
குத்தி ரம்மிலாத தலந்தொறுங் காரிய குருவா
யொத்தி ருந்திரு முத்தியன் பளவறிந் துதவி. (உச)

துலங்கு காரண குருவுரு வாய்ப்பெருந் துறையு
ளிலங்கு நற்றிருச் செழுமலர்க் குருந்தடி யிருந்தே
புலன்கொ ளும்படி ஞானநோக் காலருள் புரிந்து
நலன்பொ ருந்துபே ரன்பினுற் பெறுமின்ப நலத்தை. (உரு)

அனுதி மூர்த்தரா மான்மநா யகரினி தருள்செய்
தினுத வன்பவக் கடலுரு துயிர்களை யெடுத்து
மனுதி தானந்த வருட்பெருங் கடலினுண் மடுததுப்
பினுத ரம்பெறு பேரின்பப் போகம்வீ சிடுவார். (உசு)

திருப்பெ ருந்துறைக் குருந்தில்வாழ் சிவனையே சிறந்த
கருத்தி னுன்மிகுங் காரண குருவெனக் கழறு
மருத்தீ மென்கொலோ வென்றுநீ கேட்டிடி லரச
பொருத்த மாயுனக் கறிந்திடும் வகையிங்குப் புகல்வாம். (உஎ)

கேளெ ணத்தவு மியர்சொல்வார் கேவல சகலு
நீள வத்தையிற் படுமுயிர்த் துன்பெலா நீக்கிக்
கோளி லாதநற் சுத்தத்தி லிருத்தமுன் குருவா
யாளு நற்சிவ லிங்கமாஞ் சங்கம மாக. (௨௮)

ஆதி யிற்பர சிவன்கொளு முருவமுன் றவற்று
ணீதி சேர்சிவ லிங்கமுஞ் சஙகம நிறைவும
போத மேவுகா ரியகுரு வாயருள் புரியும்
பேத மற்றகா ரணகுருத் தன்மையைப் பேசின். (௨௯)

தஸர்தொ றுந்திகழ் தாபர சஙகம மாகி
மலங்க ணீக்கிட மாப்பெரும் பூசைகொண் டிருந்து
நலங்க ளீவதல் லாற்றனிக் கோயினற் குருவுக்
கிலங்கு மத்தலத் திராமையாற் காரிய வியல்பே. (௩௦)

ஆத லாலிவர் காரண குருவென்ப தறிதி
காத லாலுருத் திரர்பெருஞ் சிறப்பினைக் கரைந்தா
மோத லாலுள நினைத்தலாற் றீண்டலா லுறுநோய்
வீத லாலுயர் வெள்ளிய நதிப்புகழ் விரிப்பாம். (௩௧)

உருத்திரமூர்த்தமுரைத்தபடலமுற்றிற்று.

ஆகத்திருவிருத்தம் ௬௱௨.

---

# வெள்ளாற்றுப்படலம்.

கடுவெலிப் பாசம் வீசி யுயிரொலாங் கவர்ந்து கொள்ளு
மடுதிறற் கூற்றஞ் சீற்றத தடிபிடி யெனுஞ்சொற் கேளார்
கொடுமலத் தாறறல் குன்றி முதலொடுங் குலையக் கொன்ற
வடுவினம் வாதவூரர் வாசகத் தொருசொற் கேட்டார். (௧)

படுவெள மிதப்பக் கொண்ட பாண்டிநா டாளும் வேந்தன்
வடுவறு குணத்தான் மிககான் மதிக்குலத் துதித்த தக்கான்
றொடுகழற் காலா னெல்லாப் புரவலர் தொகைக்கு மேலான்
கெடுதலில் சீர்ச்சு வேத கேதுவென் றுரைக்கும் பேரான். (௨)

தூயவெண் ணீறு பூசித் துலங்குகண் மணிகள் பூண்டு
நேயவைந் தெழுத்து மெண்ணி நிருமலன் பதமபூ சிப்பா
ஞயபஞ் சலகை டோறு மணைந்தணைந் துறச்சே விப்பான்
பாயபஞ் சமருஞ் சூழ வெழுந்தனன் பகர்நன் னுளில். (௩)

தழுவுதன் ளுட்டி னுள்ள தலமெலாஞ் சென்று சென்று
வழுவற வாங்காங் குள்ள தீர்த்தமு மாபி ளுடித்
தொழுதுளங் களிக்கும் வேந்தன் ருகசமா தவத்தின் பேற்று
அழுவலன் புடையோ னுகிப் பெருந்துறை யுற்ற னன்றே. (௫)

மிக்கினி தடுத்து ளார்தம் வெம்பவக் காடு தீதற்
கக்கினி யாயே மன்னு மக்கினி தீர்த்த மாடி
நக்கினி யாச்சோ மூன்று மெரித்தார்நல் லருள்செய பாகருப்
புக்கினி வெயிலு வந்தார்ப் போற்றுது மென்று போந்தான். (௬)

மாதவப் பிரிய மென்ன வயங்குசீ ருதி மெய்யம்
மாதவத் துலங்க வங்கை மலர்குவித தளதது வேறெண
ணுதவத் திறம்போய் மாய வன்புமிக் கோங்க னோவந்
தாதவப் பிரியர் பாத மடைந்துதாழ்ந் தெழுநது போற்றி. (௬)

அருந்தவ முனிவ ராலு மாரண னெடுமா லாலும்
பெருந்தலை மறைகளாலு மளந்தின்னும பேச வொணுு
திருந்தசெஞ் சடளா யெஙகு மிருப்பினும விசேட மாகக்
குருந்தடி யமரும் வாழவைக் கணடுக்கும் பிட்டா னன்றே. (எ)

எகநா யகியை யனபாக் கிருவினை யறுத்தின் புய்கரு
மோகநா யகியை யணட முழுதுமா யினுமெம மாறகோர்
பாகநா யகியைப் பாகம பணணியெம் மையுமாட் கொணட
யோகநா யகியைக் கணணுற் றுருகுபு பணிநதா னன்றே. (அ)

எழுவுறழ் தடந்தோள் வேநத னிரிதரா திந்த வணணஞ்
செழுமலாக குருநத மேய சிவபரஞ் சடளா யோக
முழுமுதல் வியைப்பூ சிதது முனிவிலத் தலத்து வாழ்நாட்
கெழுவொரு நதியி லாமை யெணணுபு கிலேசங் கொண்டான். (௯)

தலம்பல வினுமே லாமித் தலந்தனி லருள்சா றீாததக
குலம்பல விருககு மேனுங் குலத்திழிந் தாரு மூழ்கி
நலம்பா மாக வெய்த நதியிலா திருத்த னன்றோ
நிலமபா விடுமா ருன்று நிருமிததல் வேணடு மென்று. (௧௦)

நகுகுருந் தடிவா ழான்ம நாதர்தந் திருமுன் சென்று
நெகுமனங் கனியக் கண்க ணீருகுத் திடநேர் தாழ்நது
நகுபநல் லுடையா யென்னைக கைக்கொளென் றெழுந்து நின்று
புகுமுகம புரியு மாறு போற்றின னீது வேணடும. (௧௧)

கங்கையோர் பத்துஞ் சென்னி யொருசடைக் கரக்கச் செய்தாய்
மங்கையோர் பங்கா விந்த மாப்பெருந் தலத்தி யாக்கு
மங்கையா மலக மென்ன வருள்செய்மா நதியொன் றின்றே
சங்கையி லாது மேவத் தந்தரு டாரா யென்னின். (கஉ)

அடியனேன் கண்ணீ ரேபல் லாறுகப் பெருகா நிற்கு
முடிவிலந் நீரு மோலிச் சடையெலா முகக்கு மாறு
நெடியதோரா வேலை யுண்டா மதுநிகழ வதற்கு முன்னே
கொடியனேன் கவலை தீரக் கொடுத்தியோ ராறறை யென்றான். (கங)

என்றலு மான்ம நாத னிரங்கியா காய வாக்கா
னன்றருள் செய்வார் மன்னு நயந்தொரு சைய மெய்தி
நின்றருந் தவஞ்செய் வாயே னினைத்தவா முடித்து மென்றா
ரன்றது கேட்ட வேந்த னடங்கரு மகிழ்ச்சி யெய்தி (கச)

சையமால் வரையை யெய்தித் தவாவரு ளான்ம நாதர்
செய்யதா மரைத்தா ளுள்ளஞ் செறிதரச் செறித்து நின்று
மெய்யவா மன்ன ரேறு மெய்யவா வாது வாட்டி
வெய்யவா தவமுன் யாவு மேவுறத் தவமபு ரிந்தான் (கரு)

அருந்தவஞ் செயுஞ்சு வேத கேதுமன் னன்பு நோக்கிக்
குருந்தடி யமரு மையா கோலமா மறையோ ராகிப்
பொருந்தமற் றவன்முன் செல்லப் பொருக்கெனக் கண்டு தாழ்ந்தான்
வருந்தலை பன்னா ளுஞ்செய் மாதவ மகிழ்ந்தே மென்றார். (கசு)

என்றவ னெதிரோர் தீர்த்த மின்றினுண் டாக்கி யீது
நன்றிரு பாக மாகிக் காவிரி நாப்ப ணுகச்
சென்றிரு பாலு மோடித் தில்லையின் வடக்கோர் கூறாய்
மன்றநா மகிழுந் தெய்வப் பெருந்துறை வடக்கோர் கூறாய். (கஎ)

ஓடுபு பரவை சாரு முறைத்தவிக் குடிநீர் நாம
நாடுநின் பெயர்முற் சொலலா னனிலம் புகலவ தாக
வாடுநர் கம்பே ரின்பத் தாடுந ராகக் காட்சி
கூடுநர் நமது காட்சி கூடுந ராக வினனுமு. (கஅ)

இருபகுப் பாயி யங்கு மிந்நதி யிரண்டு பாலும்
பொருவரு வளங்க ளெல்லாம் பூப்பன வாக மூழ்கி
யொருவருஞ் சிராத்தஞ் செய்வோ ருலப்பிலா ளளற்ற மூந்தி
வெருவுறும பிதிரர் தமமைக் கரையேற்றி விடுவா ராக. (கக)

ஆயவன் கயாச்சி ராத்த மாயிர மேனு நின்பேர்
மேயசன் னதிச்சி ராத்த மொன்றனை வெல்லா வாக
தூயமற் றிதனைக் கண்டார் தொட்டாருட் கொணடா ரியாரும்
பாயகம் முலகஞ் சேரும புண்ணியப் பால ராக. (உ0)

உலகுப கார மாக வொருகுருந் தடியின் மேவு
மலகினம் மருள்கு றித்தே யலகினுண் முயன்று நோற்று
வலனுடை யிவ்வ ரங்கண் மாட்சியிற் பெற்ற நீயு
மிலகுகம் மடிக்க லப்பி னெய்தியின் புறுவா யாக. (உக)

என்றுபல் வரமு நல்கி மறைந்தன ரெங்க ளைய
ரன்றெதி ரமைத்த தீர்த்த மலையெறிந் திருபா லாகி
வென்றுமேம் பகோ வேரிக கிருபாலும் விராவி யோடிச்
சென்றுவான் பரவை தோய்ந்து திருந்துமா நதியா யிற்றே. (உஉ)

அதிசயம் பயப்பப் பொன்னித தென்றிசை யவாவிச் செல்லு
நதிவழி வந்து மன்ன னகுபெருந் துறைக்கு நீசி
மதியமை துறையின் மூழ்கி வயங்குவெண் ணீறு பூசிப்
பதியெனு மான்ம நாதர்ப் பணிந்துள முவந்தா னன்றே. (உ௩)

அற்றைநா ளாதி யாக வமரரே முதல்யா வோரும
கற்றைவார் சடையா ரன்று கட்டளை யிட்ட வாய்மைப்
பற்றையா தரித்து மன்னன் பெருமபுக ழையுமபா ராட்டி
விற்றையா றிற்கு நாமம வெள்ளாறென் றிசைத்தா ரன்றே. (உச)

வானந்த மலைவி ராவ மாப்பெருக் கெடுத்து நேரும
கானந்த முறப்பெ யர்த்துக கடுத்துமேல் வரும்வெள் ளாற்றை
யீனந்தப் பானீப் போர்தோய்ந் தானந்த மெய்த லாலே
யானந்த வெள்ளா றென்று மறைகுவ ரறிந்து ளோரே. (உ௫)

மணிபல கொழித்து வாரி வரையகில் சந்து ருட்டிக்
கணிதமின் மலாப ரப்பிக கடுகுபு வருவெள் ளாற்றி
னணிகெழு மஞ்ச னங்கொண் டான்மநா யகரை யாட்டுந்
துணிவினா பெறுமாப் பேற்றை யாமேயோ சொல்ல வல்லேம். (உ௬)

பொருவருஞ் சுவேத கேது மன்னவன் புரிந்த நோன்பால்
வருபெருந் திரைவெள் ளாற்றின் மாட்சியை யெடுத்துச் சொற்று
மிருவரு முணரா வைய ரினிதம ரிடமாய்ப் பாவர்
மருவரும் பெருந்து றைச்சீர் விசேடமும் வகுப்பா மன்றே. (உ௭)

வெள்ளாற்றுப்படலமுற்றிற்று.

ஆகத்திருவிருத்தம் ௩௨௯.

# பெருந்துறைவிசேடப்படலம்.

பாய மாமலர்க் கற்பக நீழலவாழ் பவன்பதம் விழையார்நன்
காய தாமரை மலர்மிசை யிருப்பவ னருமபதம் விழையாரின்
பேய நாடொறும் பாமபணைக் கிடப்பவ னிருமபதம் விழையார்வான்
றோய வாவிசூழ வாதவூர்த் தம்பிரான் றுணைப்பதம விழைந்தாரே. (௧)

அநாதி முத்தனு மான்மநா யகப்பிரா னைத்தொழி லினிதாற்ற
வநாதி யேசெழும பிரணவ பீடமா வவாயமா திறததானு
மனாதி மேற்பரா குணடலி வடிவமா மன்னிய திறததானு
மனாதி யொப்பவ நாதிமூர்த் தத்தல மறைபெருந் துறையென்னும். (௨)

மேய மேன்மைசால் பிரணவ நாதநல் விந்துவக் கரமற்று
மாய மாமறை யாகம மாதிய வனைத்துநூற் பொருளெல்லாந்
தூய யோகநற் பீடமாக் கொபேரா தோன்றமே வுதலாலே
பாய சீர்த்தியத் தலமொன்றே யுலகெலாம் பரிததுமே விமெம்மா. (௩)

விரிய வெப்புவ னங்களும் வாழ்பவர் விணணவர் விணணுளி
யரிய தாமரை மேலவன் மாலவ னளப்பிலா முனிவோராக
டெரிய வந்தவர் திறைஞ்சுபு நினைபொரு டிருத்தகக் கொளக்கொண்ட
பெரிய தாயபண டாரமொத் ததுதிருப் பெருந்துறைத தலமம்மா. (௪)

திருவ மல்கிய திறததினுற் றிருமக டிருவநல் குறுகல்வி
மருவ மலகிய திறததினுற் கலைமகண மாண்புசான் மெய்ஞ்ஞான
வுருவ மல்கிய திறத்தினுற் பராபரை யொததநற் றவர்கதின்ப
மிருவ மலகிய கருணைசால் பெருந்துறை யெனுந்திருத் தலமம்மா. (௫)

உயிர கத்தமர்ந் தான்மநா யகரெனு மொருபெயர் பெற்றுராங்
கயிர்த பப்பிர சன்னமா யமாதலி னனைத்துயிா களுமபோலுஞ்
செயிர றுத்தடைந் தார்க்கன்பு செறித்தலாற் றிருவாதவூரண்ணல்
கயிர வததிரு வாயமலா வாாத்தையுங் கடிக்குமத தலமம்மா. (௬)

சரியை வேண்டினர்க் கதன்பய னல்கலாற் றவிர்தரா தினிதாற்றுங்
கிரியை வேணடினர்க் கதன்பய னல்கலாற் கிளாபெருஞ் சிவயோகம்
தெரிய வேண்டினாக் கதன்பய னல்கலாற் றிருந்திய சிவஞானம்
புரிய வேண்டினர்க் கதன்பய னல்கலா லான்மநா யகர்போலும். (௭)

## வேறு.

வரவு ருத்திர நாயகர் மன்னிய கயிலை
பரவு சீர்ப்பெருந் துவாதசாந் தத்தலம் பண்பின்
விரவு மான்மகா யகரம ரித்தலம் விளம்பிற்
கரவு தீர்தரு சோடசாந் தம்மெனக் கரைவார். (அ)

இன்னு மப்பெருங் கயிலையை யுலகமென் றிசைக்கு
மன்னு மாபுரு டனுக்குற விசுத்தியா மதித்துப்
பன்னு நான்மறை திருப்பெருந் துறையெனும பதிதா
னுன்னு மாதுரி யாதீத மாலென வுரைக்கும். (கூ)

சகள ரூபமாங் கயிலைமுன் னெவ்வகைத் தலத்து
மகள ரூபமாந் திருப்பெருந் துறைப்பதி யதிகு
நிகள மாகிய பந்தநீத் தின்பமா நிறைவொப்
புகள மாவறப் புணாதரு திறத்தினுற் பொலியும். (கo)

இந்த மாத்தலந் தனக்குயர் வொப்பதொன் றில்லை
யந்த மாதியு முளதென வுரைவது மில்லை
யெந்த நாளுந்த னியல்பினிற் றவிர்தலு மில்லை
யுந்த மேவினோ ருட்பிறப் புறுநரு மில்லை. (கக)

கங்கை யாறுசூழ் காசியா தியதலங் கலப்புற்
றங்கை யாமல கம்பொர வாறறுபுண் ணியங்கள்
சங்கை தீருமா மேருவே யெனினுமித் தலத்து
மங்கை பாகர்முன் புரியணுத் துணையுமா னுவால். (கஉ)

ஒருபெ ருந்துறைத் திருவிழாச் சேவிக்க வுறுவார்
மருவு தற்கிடங் கொடுத்தவ ருணப்பதம வழங்குந்
திருவ மிககவர் திருமடஞ் சமைத்தவர் தெய்வப்
பொருவில் சீர்த்தியு மவாபெறும் பேறுமியார் புகல்வார்.

நந்த னப்பணி யியற்றுநர் நறுமலர் பறிததுப்
பந்த முற்றிடத் தொடுத்தணி பவாதளிப் பரவ
முந்த நெய்விளக் கிடுபவா பிறபணி முடிப்போ
ரெந்த வானருங் கீழ்ப்பட மேற்படு மியல்பார். (கச)

அன்ன தானநன் காற்றினும் பிறிதறஞ் செயினு
மன்ன வற்பமு மேருவாய்ப் பெருத்திடு மரபாற்
றுன்ன வத்தலத் தடைந்தன ராறறிடத துணிவா
ரென்ன வேறுபல் றலததுமெய் தாரறி யியலபார். (கரு)

### வேறு.

நலமலி யித்த லத்தி னமங்கே ளனுதி மூர்த்தத்
தலமருள் வடிவ மாய பெருந்துறை சான்றோ ரியாருஞ்
சொலவொளி மயமாய் மேய சிவபுரந் தோன்றெஞ் ஞான்றும
இலமில தாய ஞான க்ஷேத்திர மின்னுங் கேளாய். (௧௬)

மன்னிய புகழ்க்கு ருந்த வனம்யோக வனமெஞ் ஞான்று
மின்னிய புகழான் மிக்க தென்கயி லாய மேன்மை
பன்னிய வொருகால் வேத புரம்பவித் திரமா ணிக்கந்
துன்னிய யோக பீடப் பதியின்னுஞ் சொல்வ துண்டால். (௧௭)

பாரூத்தி புரமெய்ஞ் ஞானத் தவமெனப் பகரி ரண்டே
யிராவுற்று நிறைந்த தேசு வனம்விளங் காதிக் கைலை
யொராவற்றி னொளிர்மும் மூர்த்தி புரமுப தேச மூது
ரிராவற்ற நாம மின்னும பலவல்ல வியம்பப் பேரமோ. (௧௮)

பெயரிவைக் கேதுப் பின்பு பேசலாற் றெரிய லாகு
முயர்தலப் பெருமை சொற்றா மொருதரஞ் சொலினுஞ் சன்மத
துயரறுத் தின்ப வாரி தோய்த்திடுங் கருணை மூர்த்தி
மயலறு பெயருஞ சற்றே வகுத்துணா யாடக் கேணமோ. (௧௯)

பெருந்துறைவிசேடப்படலமுற்றிற்று.

ஆகத்திருவிருத்தம் ௨௪௮.

---

# மூர்த்திநாமவிசேடமுணர்த்தபடலம்.

மறைபுகல் சரியை யாதி வயங்குநாற் பாதம் பற்றி
முறைமையி னொழுகல் வெஃகார் முதுவள வாத வூரெம்
மிறையிரு பாதம் பற்றி யியங்குதல் வெஃகி னோரோர்
குறையில ரடுத்து ளார்தங் குறைவினை முடிப்ப ரன்றே. (௧)

நலமலி யனாதி மூர்த்தி நயத்தலா லனாதி மூர்த்தத்
தலமென்ப ரனாதி மூர்த்தத் தலேசனென் றொருநா மம்பெற்
றிலகுவ னிறைவன் முன்ன மெதிர்வழக் காடி வெட்டி
இலவடு வகத்தி னின்று நீரெழு சீர்மை தன்னால். (௨)

பெருந்துறை யென்றோர் நாமம் பெற்றது சிவபி ரானும
பெருந்துறை யீச னென்னப் பெரியவ ரெடுத்துச் சொல்வர்
திருந்துற நன்மை நல்கிச் சிவபுர மாய தாங்குத்
திருந்துற வமர்த லாலே சிவபுரே சப்பேர் பெற்றான். (௩)

ஞானநல் குதவான் ஞான நேத்திர மெனும்பேர் நண்ணிற்
றீனமி றலமு ஞான கேத்திரே சப்பேர் பெற்றான்
வானவர் பிரானுங் குந்த மரீஇக்குருந் தவன மாயிற்
றூனகா யகன்கு ருந்த வனேசனென் றறையப் பெற்றான். (ரு)

பனாசிவ யோகஞ் செய்தல் பற்றியோ கவன மென்ன
வுனாசெய்வ ரிறைவன் றானும் யோகவ னேச னானு
னிரைவட கைலை நோக்கித் தென்கயி லாய மென்பார்
கனாயிலாப் பெருமா னுந்தென் கயிலாய நாத னானான். (௬)

பிரமனால் வேத மேற்கப் பேசுத லாலும் வேத
புரமிறை யவனால் வேத புரேசனென் றொருபேர் பெற்றான்
வரபவித் திரமா யந்த மணிப்பெயர் பூண்ட தானத்
தரன்பவித் திரமா ணிக்க வாசனென் றறையப் பெற்றான். (சு)

துதிபுரி யோக பீடந் துன்னலால் யோக பீடப்
பதியரன் யோக பீடப் பதியவ னெனும்பேர் பெற்றான்
மதிபனா தவஞ்செ யாற்றாற் பராசத்தி புரமாய் மன்னு
நிதிநிகர் பிரானு மந்தப் புரவாச னெனநி கழ்ந்தான். (எ)

வனமறை யொளியாற் றேசு வனமெனு மொருபேர் பெற்ற
தனகநா யகனுந் தேசு வனேசனென் றறையப் பெற்றான்
மனமுறு நிட்க ளஞ்சார் வலத்தாதிக் கைலை யென்பா
பனவர்நா யகனு மந்தக் கைலையம் பரம னானான். (அ)

அரன்முதன் மூவர் போற்ற லாற்றிரி மூர்த்தி நாமப்
புரமிறை யவன்மும் மூர்த்தி புரவாச னெனும்பேர் பெற்றான்
வரவுப தேசஞ் செய்யும வலத்துப தேச மூதூர்
கரவிலா னுபதே சப்பேர் நகரக்கா வலப்பேர் பெற்றான். (கூ)

எரிபுரை சடையி னாரொன் றிரிந்தமுந் நூற்றி னாரோ
டிரிமையி னளாவி முந்நூற் றொருவரென் றொருபேர் பெற்றார்
தெரிதரு சதாசி வாதி யைவருந் தியானஞ் செய்து
பரிவொடு துதிக்கு நீராற் பரமசு வாமி யானார். (கo)

சகமெலாம் வணங்கக் கண்டு தக்கவா றுபதே சித்துச்
சகருரு வெனும்பேர் பெற்றா ரிப்பிரா தமக்கி ரங்கி
நதவழக் குனாத்து வென்று நாயகத் தன்மை மேவி
நகவில்லைக் கொண்ட வையர் விப்பிர நாத ரானார். (கக)

அருமறை யவரா யத்தி யயன்ஞ்செய் வித்த லாலே
யொருவருஞ் சத்த ஈாத ருபாதியா யருமா ஞர்மேல்
வருதிறல் வழுதி மூன்ற வாம்பரி யுகைக்கு மாண்பாற்
சுருதிசொ லுண்மை யீரச் சுவநாத ரெனும்பேர் பெற்றார். (கஉ)

அயன்முத லொருமூ வர்க்கு மருளுப தேசஞ் செய்த
செயன்மரு வலின்மும மூர்த்தி தேசிக ரெனும்பேர் பெற்றார்
பயனமை யான்ம நாதர் நாமங்கள் பகரி னின்னும்
வியனுள வாருங் கண்டு விளம்பிட வலலா ரியாரே. (கங)

இத்திருப் பெயரு ளொன்றை மறவாம லியம்பு வோரு
முத்தமிழ மருவ மைந்தர்க் கிட்டுற வழைக்கின் றோருஞ்
சத்தமி லின்ப ரூபத தனிமுத லொடுகெ லகலு
முத்தரே யாவ ரினனு மொழியவும் வேண்டுங் கொல்லோ. (கச)

அன்னிய மில்லா வான்ம நாயக் ரருளு மங்கண்
முன்னிய வெடுத்துச் சொற்று மூவுல குய்யு மாறு
மன்னிய மலையான் மங்கை வந்தள வளாவு மேன்மை
துன்னிய யோக பீடச் சிறப்பினைச் சொல்ல லுற்றாம். (கரு)

மூர்த்திநாமவிசேடமுரைத்தபடலமுற்றிற்று.

ஆகத்திருவிருத்தம-கூசுரு.

---

# யோகபீடச்சிறப்புரைத்தபடலம்.

ஞாலமிசைப் பயிலுவன சறறேனு முணராது நகுசு வேதக
கோலவுருக் கொணடவனி முழுதிடந்து பாதலததுக் குறுகி யாங்குஞ்
சாலமுயன் றனமந்தோ ஒவனநெடுமா றளர்வெய்தத் தரணி மேலச்
சிலமல ரடிபயிலத தெரிவாத வாரரடி சிந்தித் துய்வாம். (க)

தோற்றுமதி யுகலையு மலருநறு மணமுமொன்றாய்த் தோன்று மாபோற்
றேற்றுதிரு வருளான்ம நாதரியற் குணமாகிச் செல்வ மாகிச
சாற்றிலய போகவதி காரமெலாஞ் செய்யுமொரு சத்தி யாகிப்
போற்றுமறை யாகம்பு ராணவிதி காசமுதற் பொருளு லாகி. (உ)

தரைமுதலா மைம்பூத வடிவாகி யவற்றுறுதத் துவங்க ளாகி
யுரைசெயுஞ்செல் காலநிகழ் காலமெதிர் காலமெனு மொருமூன் றாகி
விரையவரு பரிதிமுத லொளியாகித் திசையாய்க்கீழ் மேலு மாகி
வரைவில்பல்லா யிரகோடி யணடமா யவையீன்ற மாதா வாகி. (ங)

என்ளுக்கு ணெய்யிருக்கு மியல்பேபோ லெங்குமுறைந் திருந்து போகம்[ன்பு
கொள்ளுமுயிர்க் குறிப்பறிந்து முணர்த்துசுவர்க் காதிபலன் கொடுத்துப் பி
மெள்ளமெள்ள வபுத்திபுத்தி பொதுமூன்றிற் சிவதரும மிருவித் துண்மை
தெள்ளுசிவ சரியைமுதற் புண்ணியத்தா லனைத்துயிருஞ் சிவத்திற் சேர்த்து.

தரைபுகழ்கா ரியரூப சத்திவடி வாயெல்லாத் தலத்து மேவு
முறைசிறந்த பெருமானுக் கிடப்புறமும் வலப்புறமு முற்று மேவிப்
புரையிலுயிர்க் கருள்செய்வா ளுமைம்பான் பீடத்துப் பொலிவா ளாகி
வரையவற்று ளைம்பத்தொன் பான்பீடங் காரியமா வயகக் கொண்டு. (௬)

தவமலியும் பெருந்துறையிற் காரணசத் தியின்வடிவந் தானே யாகி
யுவமையிலாத் துரியபதத் தொளியேகா ரணயோக பீட மாக
சுவமொடதிற் சிவயோக நாயகியென் றொருகருணை நாமத் தோடுஞ்
சிவபரா சத்தியென்றும் வீற்றிருப்ப ளப்பீடச் சிறப்புங் கேண்மோ. (௭)

ஓங்கார மெழுகோடி மந்திரத்தின் வடிவினையு முட்கொண் டென்று
நீங்காத வடிப்பீட மாயிருப்ப வதன்மேலா னிலவு பீடம்
பாங்கான நால்வேதா கமமங்க முதலாம்பல் கலைக ளெல்லாந் [மோ.
தாங்கோசை கொண்டமுப்பத் தெண்கலையா மவற்றின்பேர் சாற்றக் கேண்

நிவர்த்திபிர திட்டைவித்தை சாந்திசாந் தியாதீத நிலைமை வாய்ந்த
வுவப்புறுநல் லபரவிந்து கலையைந்தா மொளிரபர நாதந் தன்னுட்
கெட்சிவள ரிந்திகைதீ விகையுரோ சிகையிறெடு தலங்கி யேயுற்
பவித்துயர்மோ சிகைவளரு மூர்த்துவகா மினிகலைகள் பகரு மைந்தாம். (௮)

தலையணியச் சூக்குமைசூக் குமையமிர்தை மிருதைவியா பினிதா மாய
கலைகள்பர விந்துகலை யாகவுமா பரநாத கலையு மைந்தா
நிலவியா பினிவியோம ரூபையனந் தையனா தைநி கழ்தது
மூலவிலநா சிருதையென வொளிர்நாத விந்திரண்டு மொருநாற்றில். ()

மதியிருபா னெடுசுக்கு மைபைசந்தி மத்திமைவை கரியஞ் சோதி
யதிவாமை சேட்டைரவுத் திரிசயைநல் விசயையப ராசி தையோர்
பதிவடிவப் பிராமிமுத லெழுமாத ராம்பதினெண் கலைக ளோடுந்
திதிமுப்பத தெணகலையும் பொருபதமா சனமாகத் திகழ வாங்கு. (௧0)

சிரொன்று மினியகாற் பத்துமுக்கோ ணததமருஞ் செல்வி யாகிப்
பேரின்ப முதவுபிர மக்கிழத்தி யாயிருப்பள் பிறைசேர் சென்னிக்
காரொதுன்று கறைமிடற்று ரெவ்வுருக்கொள் ளினுமவாகா தலியாய் வாசத்
தரொன்று குழலுடையாள் முதலான சத்திகளாய்த் தயங்கி யென்றும். ()

சிவன்புரியா டலுக்கேற்குந் திருக்கோலங் கொண்டுலகந் தரிசித் துய்ய
வுவந்தவிளை யாடலினி தாற்றவளிச் சிவயோக வுமையா டானே
பவம்புரியுந் தக்கன்மக ளெனறவிர்க்க வளக்குமக ளாகி யந்த
சிவந்தவரை நின்றுபெருந் துறையடைந்து தவம்புரிந்த சீர்மை சொல்வாம்

வேறு.

பெருவிதி பயந்த சிறுவிதி யென்பான் பிறைகுறச் செய்தமா தவத்தி
னிருமையி னண்ட பகிரண்ட மனைத்து மீன்றதா யேயொரு மகளாய்
மருவிநன் கமாநாட் பரம்பரன் மணந்து வணகயி லாயத்தை யடையத்
திருகுசா லனைய சிறுவிதி கொடிய தீயவா ணவமலச் செருக்கால். (௧௩)

மருகரு ளொருவ னுகவெவ் வுலகும் வழுத்துமா தேவனை நினைந்தே
பெருகரு ணந்தி யனுஞையும் வேண்டான் பிறங்குவான் கயிலையின் மேலா
லொருகருங் கண்ட னுமையொடு மமரு மோலக்க முற்றன னுங்குத்
திருகரு ணமைக்கண் டெழுந்திலா னிந்தச் சிவனெனச் சினந்தனன் மீண்டு.

ஒருமக மியற்றித் தாமத குணத்த னொருவனை விலக்கிமற் றுள்ளார்
சருநனி நுகரக் கொடுப்பனென் றெழுந்து சாலையொன் றியற்றின னுங்குப்
பொருதழல் வளர்க்க விமலைமா தேவன் பொன்னடி சென்னியிற் சேர்த்துத்
திருவிலி பாற்போய்த் திருத்துவ னென்று சேர்ந்தன ளவன்மகச் சாலை. (௧௫)

கனிமனத் தமர ரெண்ணிறுன் முயன்றும கனவினுங் காணரு முதல்வி
தனியொரு தன்பா லெளிவரல் கண்டுந் தானவ மதித்தன னிருந்தான்
முனிவொருங் கடைந்து புரிமகங் கெடுமா மொழிந்துயோ கத்தழல் புகுந்து
பனிவரை மகவாய்ப் படர்ந்தன ளதுசெய் பணடைநற றவமபழு தாமோ.

வரையிறை மனைவி மேனைபா ராட்டி வளர்த்திட வுயிரெலாம் வளர்ப்பாள்
புரையற வளர்ந்தம மனைகழுங் காதி புரிகுழன் மகளிரோ டாடி
விரைமலர் குற்றுச் சிற்சிறுள் கழிய விமலனை மணப்பது கருதித்
திரையமு தனையா டவஞ்செயல் குறித்தா டிவவியாழ நாரத னடைந்தான்.

கனிமனத் தடைந்த மகதியாழ் முனிவன் கௌரிதன் றுணைமல ரிறைஞ்சிப்
பனிமலர்க் குழலா யுலகெலாம பயந்த பாவைகே டிருவுளத் தமைத்த
முனிவருங் கரும மியாதென வினவ மொய்குழல் வெண்ணிற முனிவா
தனிமுத லடைந்து மணஞ்செயற் காய தவம்புரிந் திடுதிறங் குறித்தேன்.

அதுபுரி வதற்கா மிடமெது வாமென் றுய்ந்திருந் தனனெலா முணர்ந்த
முதுபுகழ் முனிவா முன்னுபு நீயே மொழியென மறுவலும் வணங்கிச்
சதுமுகன் முதலா முயிரெலா மீன்ற தையனிற் குணர்த்துவ னியாம்...
கதமென வினய திறத்தினு புகல்வேன் கருதகுற விருதெனப் புகல்வான்

குளிர்புனற்பொருனைப்பாண்டிநன்னாட்டிற்குருந்துறைபெருந்துறையென்றோ
ரொளிர்பெருந் தலமுண் டத்தலப் பெருமை யுணர்த்துத லியாவர்க்குமொல்
களிமலர் மிசையோ னாதிமூ வருக்கு நயந்தருள் புரிந்ததா னாறுமாந் [லா
தளிரியன் மேனி யன்னையத் தலமே தவஞ்செயத் தகுபல மென்றான். (௨௰)

எனமுனி மொழியக் கேட்டமாத் திரத்தே யெம்பிராட் டிக்கழன் மெழுகின்
மனநனி யுருகக் கணகணீர் வார மதிப்பரு முவகைமீக் கூர
வனவர தமும்பாண் டியவள நன்னா டாற்றுமா தவப்பய னடையக்
கனகமா மதில்சூழ் பெருந்துறை யடையுங் கருத்துறக் கொண்டன ளன்றே.

தந்தைதா யினையும் படிமொழிந் தெழுந்து தடவிமா னத்தின்மேற் கொண்டு
சிந்தைகூ ரளவில் பரிசனஞ் சூழத் தெய்வதுந் துமிபல வியம்ப
வந்தையின் முனிவ ராமுழக கெடுப்ப வமரர்கள் பூமழை பொழிய
நிந்தையி றெய்வப் பெருந்துறை யடைந்தா ளினைதரா ரிருதயத் தடையாள்.

மருவியசெம்பொன்விமானநின்றிழிந்துமலர்க்கரஞ்சென்னிமேற்குவித்துத்
திருவிய றளியுட் புகுந்தழ னுமத் தீர்த்தநன் காடிநீ றணிந்து
குருவிய னயன மணித்தொடை பூண்டு கோதிலைந் தெழுத்துளங் குறித்தே
பொருவிய லாத வாதவப் பிரியப் புகர்முகக் களிற்றினைக் கண்டு. (௨௩)

தளிவலஞ் சூழ்ந்து தம்பிரான் வடிவந் தானெனுங் குருந்தினை யருச்சித்
தொளிவள ரான்ம நாயகர் திருமு னுற்றன்பு மிகப்பணிந் தெழுந்து
களிகொள மலர்க்கை தலைமிசைக் குவித்துக் காரணா தீதவான் பொருளே
தெளியநா னின்னை மணப்பது வேட்டேன் றிருவருள் புரியென நிற்ப. (௨௪)

மறைமுடிப் பொருளுள் ளிரங்கியா காய வாணியா லருள்செயு மணங்கே
கறையறு மணியு மதனிடத் தொளியுங் கலந்தென நீயுமோர் நாமு
முறைதுவ மெனினு நீபுரி தவங்கண் டுனைமணந் திடுவதற் குள்ள
நிறைதரு விருப்பங் கொடுநினை வாலை யாம்படி நினைத்தன மன்றே. (௨௫)

நினைத்தவா றாகி யித்தலத் தடைந்தாய் நிட்களஞ் சகளநிட் களத்தோ
டனைத்தவாஞ் சகள மெனுமொரு மூன்று ளரும்பெறல் யோகநா யகியே
முனைத்தநிட் களமாஞ் சகளநீ யிரண்டு முயங்கிய தியோகபீ டங்கா
ணனைத்தனை மனைய பீடமே லமர்ந்து நவின்றநிட் களத்தொடுங் கலந்து.()

மாதவம் புரிமோ புரியுநீ யுணரும் வண்ணநாங் காட்சிதந் தருளித்
தீதற நினைந்த விதமுடித் திடுவாஞ் சேறியென் றருள்செயக் கேட்டுக் [தா
காதலுங் கடலு ளாழ்ந்திமே லெழுவாள் கடப்பதாழ்ந் தனள்விரைந் தெழுந்
னோதலங் கமையா யோகபீ டத்தை யுற்றமர்ந் தருந்தவம் புரிவாள். (௨௭)

## வேறு.

குந்த ளக்கருங் கூந்தல் சடிலமாக்
கந்த ரத்தணி கண்டிகை யாரமாச்
சுந்த ரத்திரு நீறு துதைந்தது
சந்தி ரக்கலை போலத் தயங்கிட. (௨௮)

சிற்றி டைக்கொடி தாங்குதல் சீரையாப்
பொற்று லைக்குழை பூண்டது சங்கமா
மற்றொ ரொப்பிலா மாதுமை கோயிலு
ளுற்ற போதந்த யோகபீ டத்தமர். (௨௯)

கருணை நாயகி காதலொ டெந்தழீஇப்
பெருகு நீரொடு நீருறு பெற்றிபோ
லொருவி லோருரு வுற்றவ ளோடொன்றாய்
மருவி னுள்யோக பீடத்தின் மாதவம். (௩௦)

ஒருப தம்மடித் தோர்பத மூசிமேன்
மருவ வூன்றி மலர்க்கை யிரண்டையுங்
குரும ணிச்சடை மீது குவித்துமூக்
குருவ நன்னுதி மீதுகண் ணூற்றிட. (௩௧)

அவாவொ டெங்கும் பகத்தினல வாயுவை
யுவாம தித்தலத் தொன்ற வொடுக்கியே
சிவாய மந்திர நாவிற் செபித்துமேற்
றவாத சாந்தத்திற் சோதியுந் தானுமாய். (௩௨)

ஏக போகமா யெங்கும் வியாபக
மாகி யின்ப வதீத சுகத்தொடு
மோக மாய்க்குருந் தத்துறை மூர்த்தியைப்
பாக வுட்கொடு புணர்ந்தனன மாதவம். (௩௩)

அந்த வேலையெம் மையன் குரோதனைச்
சந்த மாருமை செய்தவங் காதறீ
யெந்த வைப்புமுய் பாக்கென் றியம்பலு
நந்த மற்றவ னுங்கயந் தானதை. (௩௪)

செய்யு மேன்மைத் தவத்தின் செயலுணர்ந்
தைய னங்கவட் கற்புத மாம்படி
துய்ய வெள்விடை மீமிசைத் தோன்றினின்
றுய்ய யோகத் தியானத்து ணர்த்துவான். (௩௫)

உன்றன் மாதவங் கண்டிங் குவப்பொடே
மன்றல் செய்திட வந்தனம் யாமென
வினறி தென்கொலென் றெண்ணி விழித்தநு
மனை று மேவிம யாசலத் தங்கனேர். (௫௬

யோக பீடத்திங் குற்ற வுருவொடேர்
தாக மோடங்ஙன் றங்கிடக் கண்டவ
ளேக காதனு முன்பிட பத்தின்மேற்
போக மேவுருக் காட்சி புரிந்தனன். (௫௭)

கண்டு நாணொ டெழுந்துகை கூப்பிந
லண்டர் கோன்மணஞ் செய்வதற் காமெழிற்
கொண்ட கோலமுட் கொண்டொரு கோயிலு
ளொண்டொ டிக்கை யுமைபோ யிருத்தலும். (௫௮)

இமைய மன்னனு மேனையு மியாவரு
முமையங் குற்ற வதிசய முண்ணினர்
தமைத ராமகிழ் வுற்ற வமைதியிற்
சமைய வாவயி னியாவருஞ் சாருவார்.

புண்ட ரீகனு மாலும்புத் தேளிரு
மண்ட லச்சடை மாதவ ரியாவருங்
கொண்டன் மேயவே தண்டக் குழாங்களு
மெண்டி சைக்கண காதரு மெய்தினர். (௬0)

அற்பு தத்தொடு மண்ணன்முன் போய்த்தொழ
வெற்பு காதனை நோக்கிவிண் ணேரெலாம்
பொற்பு மேவுநின் பூவையை யணைவல்வேட்
டிற்பு குந்தின மின்றென வோதலும். (௬௧)

மயன்வி தித்த மணப்பெரு மண்டபத்
துயர்ம ணப்பொலி வுற்ற வுமையைமெய்ப்
பயன்கொள் வெற்பன் பரமற்கு நன்மணச்
சயமு றப்புணற் றூலா யளித்தனன்.

துதிம ணம்புரி தோகையொ டெம்பரன்
கதிகொண் மால்விடை யேறிக் கயிலையுற்
றதிக மாம்விளை யாட்டி னமர்ந்தனன்
பதியு மன்பர் துதித்துப் பரவவே. (௬௨

அம்மை யோகநன் காற்றிய பீடத்தின்
வெம்மை தீர்சிறப் போதினம் வேந்தனே
யெம்மை யாளிறை யேவலி னாலடை
செம்மை வீரன் றிறமும் விளம்புவாம். (௨௨)

யோகபீடச்சிறப்புரைத்தபடலமுற்றிற்று.

ஆகத்திருவிருத்தம் ௬௦௭.

# வீரபத்திரப்படலம்.

யாவரும் புகழ்சி வானு பவமெவ்வா றிருக்கு மென்னின்
மேவரு முருகிவான் றுற்றுப் பெருந்துறைக் கோயின் மேவித்
தாவரும் பூசை யோடு சாறுங்கொண டண்டர்தோக் கெல்லா
மோவருஞ் சோறு நல்கி யுவந்துவீற் றிருக்கு மன்றே. (க)

சிறுவிதி யென்பான் செய்த தீமகச் சாலை யெய்தி
மறுவறு முமையாள் சீறித் திருவுரு மறைத்த பின்னர்த்
தெறுவலிக் குறுந்தாட் பூதச் சேனையோ னெற்றி நாப்ப
ணுறுவிழி திறந்தா னங்கின் றுதித்தனன் வீர னென்பான். (௨)

சடைமுடி யண்டத் துச்சி தடவரப் புயந்தி காந்த
முடைபட நெருங்கக் கண்க ளுலப்பரும் புலிங்கங் கொட்ட
மிடைபுகைப் படலம் வாயில் வெளிப்படப் பிறையுந் தஞ்சென்
றடைதரு மெயிறு தோன்ற வாரழற் சுவாலை வீங்க. (௩)

பலகைவாள் வைரம் வைவேல் படுதழற் கணிச்சி சூல
மிலகுசக் கரந்து ரோண மங்குசம் பாச மின்னுங்
குலவுவன் றண்டந் திண்டோ மரமுதற் குலவ வேந்திக்
கலகமொன் றறத்து மிக்குங் கைபல பொலியா நிற்க. (௪)

கொண்டமே னியிலுண் டாய குறுவியர்ப் பிடைச்ச னித்த
புண்டவா வெயிற்றுப் பேழ்வாய்ப் பூதவே தாளக் கூட்ட
மண்டரு நடுங்க வோரெண் ணாயிர கோடி சூழத்
தொண்டர்தம் பெருமான் முன்பு தொழுதெழுந் திதனைச் சொல்வான். (௫)

எழுகடல் குடிக்கோ மேரு வரைபெயர்த் தெடுத்து மற்றை
முழுவரை யெல்லாந் தூ ளாக மோதுபு முடிக்கோ மாலைச்
செழுமல ரோனைக் கையாற் பிசைந்துபொட் டிடுகோ செந்தீ
யொழுகவெங் கணும்வி ழிக்கோ வுறுதனை கவிழ்த்தல் செய்கோ. (௬)

திகைக்கடாக் களிற்றை யொலீஇச் சேர்த்துவால் பிடித்த டிக்கோ
முகைக்குமண் டங்க ளாய முழுதுங்கைக் கொண்டே பற்றி
னுகைக்குமோ ரீடல் செய்கோ பற்பல வுரைப்ப தென்றீ
நகைக்கெலா முணவு செய்கோ வருளென நவின்று நின்றான். (௭

மோகமார் மூடத் தக்கன் முதல்யாரு நமக்கு நல்கும்
பாகமின் றென்று கூறிப் பண்ணுவான் மகமன் னான்பா
லேகிநீ பாக முண்டோ வில்லையோ வெனக்கே டைய
னாகிய வவன்ம றுக்கி னடர்த்துவா வென்றா னையன். (௮)

இடபெணி யிதுதா னேவென் றெயிறெலா மிலங்க நக்குக்
கொடுவலிப் பூதஞ் சூழக் குறுகினன் யாக சாலை
விடுதல்செய் யாம னான்கு வாயிலுங் காவன் மேவத்
தொடுகெழற் காலான் வைத்துத் துண்ணென வுட்புக் கானால். (௯)

வீரனுட் புகுத லோடும் வெம்புலிப் போத்துக் கண்டு
சோருமான் குழாங்க ளென்னத் துண்ணென நடுங்கி வீழ்ந்தார்
யாருமற் றனைய வேலை யழிதகைத் தக்கன் முன்போ
யோருமெம் பெருமான் பாக முண்டுகொ லிலைகொ லென்றான். (௧௦)

இலையென மொழியா னுண்டென் றியம்பிடா னிருப்ப வன்னான்
றலையற வாளால் வெட்டித் தழல்படு குண்டத் திட்டு
நிலைகுலைந் தோடு மெச்சன் றலையையு நேரே வெட்டி
யலைபுரிந் தனன்மற் றுள்ள வமரர்கள் பலரு மாய. (௧௧)

சிறுவிதி மனைவி முன்னாச் செறிந்தபன் மாதர் தம்பாற்
குறுகுபு முன்போ யம்ம கோபத்தில் வருபெண் டெய்வ
நறுவிரைக் குழல்வார் காது நாசிவன் முலைமுன் னாகச்
செறுவலி கொண்டு கொய்து தெறுசின மொழித்த தன்றே. (௧௨)

கொடுவலிச் சுழலுஞ் செங்கட் குறியதாட் பூத மெல்லாங்
கடுகிமற் றமர மாதர் கலையரை யறநெ கிழ்த்துப்
படுமுலைக் குவடு பற்றித் தழீஇத்தழீஇப் பருகி வாய்நீர்
விடுதலற் றிருந்த காம விடாய்தவிர்த் திருந்த வன்றே. (௧௩)

உடையநெய்க் குடம னைத்து முருட்டுபு பொரியையச் சிந்தி
மிடைதரக் குவித்த வோம விறகெலா மொன்று செய்து
பு[illegible]கக் குழியி லிட்டு நீரனீர் புகட்டிப் போக்கி
நடைமழச் சிறுபூ தஞ்செய் குறும்பினை நவில்வா ரியாரே. (௧௪)

இவ்வண்ணங் கோபத் தீயை யாகத்தி யோடு மாய்த்துச்
செவ்வண்ண மேனி வீர னின்றனன் சிவனை யுள்ளி
பவ்வண்ண மேழல வெங்கு மாயவ னதனை யோர்ந்து
வெவ்வண்ண மறுப்பா னீங்குத் தோன்றின னைவெள் ளேற்றின். (௧௫)

விடைமிசை யமலற் கண்டு தாழ்ந்தெழுஉ வீர னிற்ப
வுடையவ னிரங்கி யாரு முயிரடைந் தெழுமா செய்தி
சடையவ வெனலு மையன் சாற்றிய வாறெ ழுப்ப
நடைதளர்ந் தெழுந்தெல் லாரு நாரணும் பிரானைத் தாழ்ந்தார். (௧௬)

தாழ்ந்தெழுந் தொதுங்கி நிற்குந் தண்டுழாய் முகுந்த னாதிப்
போழ்ந்தசிர் தையனை நோக்கிப் பொய்ம்மனத் தக்கன் வார்த்தை
வீழ்ந்தநீர் பட்ட பாடு விரிப்பதென் சிவத்து ரோகத்
தாழ்ந்தமை தீரு மாநம் பெருந்துறை யடைமி னென்றான். (௧௭)

என்றுரைத் தவரைப் போக்கி வீரனோ டிமிலவெள் ளேற்றுக்
குன்றுகைத் தொருவே தண்டங் குறுகிவீற் றிருந்தா னம்மை
தென்றிசைச் செல்லுங் காலைச் சேறிநீ காவற் கென்று
நன்றிசைத் திடலால் வீர பத்திர நமயன் போந்தே. (௧௮)

அம்மைசந் நிதியி னின்றே காவல்செய் தமரா நின்றான்
செம்மைகொ ளவற்றாழ்ந் திட்ட சிதகிகள் பெறுவா ரியாரு
நம்மையாள் பவனசொற் பற்றி நாரணன் முதலோர் ஞால
மும்மையேத் தாங்க ணெய்தி முருகனூர் சிவத்து ரோகம். (௧௯)

பகலருந் திறல்சால் வீர பத்திரப் பெருமான் றோற்றத்
திகலருஞ் சிறப்பு மம்மை சந்நிதி யியைந்த வாறு
முகலருங களிப்பிற் சொற்றா மொளிர்பெருந் துறையி லொன்று
தகவருந் தீர்த்த மேன்மை யனைத்தையுஞ் சாற்று வாமால். (௨0)

வீரபத்திரப்படலமுற்றிற்று.

ஆகத்திருவிருத்தம் ௬௨௭.

---

## தீர்த்தப்படலம்.

அயனரிதாழ் தில்லைமூ வாயிரரு மையரே
பயனமையும் வாசகத்தின் வாச்சியநீர் பகருமென
மயன்மருவாச் சபைநேரே மரீஇச்சுட்டி யுணர்த்தினு
ரியன்மருவு செஞ்சரண மெமமனே ருயிர்க்காரணம். (௧)

## †சிவதீர்த்தம்.

நலமாரும் பெருந்துறையி னவதீர்த்த நாளுமுள
வலமாருஞ் சிவமாதி மலரவனீ ருக்கணையுங்
குலமாரு நவபேத மவையெனக்கூ றுவரறிந்தோர்
சலமாரு மதில்பொடித்தா ரனாதியே சமைத்தனரால். (உ)

ஆயநவ தீர்த்தத்து ளமலமாஞ் சிவதீர்த்த
மேயசபைக் கீசான விதிக்கிலுமை தளிவாயிற்
பாயவெதி ரொருகூவப் படிவமா யினிதமருந்
தோயமதில் வானவருந் துளைந்தாட லரிதாகும். (ங)

அன்னசிவ தீர்த்தததி லொருதிவலை யருந்திடுவோர்
முன்னமமை மலமாயை கன்மமுத லறமுருக்கிப்
பன்னமல ரணையான்முற் பல்லோரு நறுமுறுப்ப
நன்னலமார் சிவக்கலப்பு நண்ணியனு பவிததமாவார். (ச)

மலையரையன் மகள்யோகம் பயிலுதற்கு மருவியநா
ளலைவரிய வத்தீர்த்தத் ததிவிருப்பங் கொடுபுவனத்
தலைவனைத்தாழ்ந் தொருதிவலை தலைமிசைகொண டவர்சன்ம
நிலைகுலையும் படிவரந்தா வெனக்கொண்டு நிறுவினுள். (ரு)

எண்ணரிய மகத்துவஞ்சால் சிவதீர்த்த மேனையதீர்
நண்ணரிய புகழான்ம நாதகூ பப்பெயர்பெற்
றண்ணரிய வபிடேக மாட்டுதற்கே பாங்காகுங்
கண்ணரிய வதன்பெருமை கட்டுரைக்க வல்லவரியார். (சு)

## அக்கினிதீர்த்தம்.

ஆதிநா யகன்கோயிற றென்மேறகி லருளுருவப்
பூதிநா யகன்றழற்கண பொருந்தநோக் குறப்பாய்ந்த
கோதிலாத் தழலெழுபா தலமுருவக குதித்தெழுந்த
தீதிலாப் புனற்பெயரக் கினிதீர்த்த மெனப்புகல்வார். (எ)

ஆயதனை யறிஞர்சத்தி தீர்த்தமென வறைதருவார்
பாயவதன் மகத்துவத்தை யாமேயோ பகர்தருவோந்
தோயமதைத தொடிற்பருகிற் றுளைந்தாடி னேக்குறினு
ளேயவினைத் திடிற்றகவி னியல்பயனை யளப்பவரார். (அ)

திருந்துபுகழ் மலரயன்புத் திரனை சுவாயம்பு
பொருந்துதவத் தாற்பிறந்த புத்திரரோ ரிருவருளர்
வருந்துதலி லொருவனு மம்பிரிய வர்த்தனனு
மிருந்திறல்சான் மற்றொருவன் பெயருமினி யறையக்கேள். (க)

சத்தான குணமுடையான் றிண்ணளிக்கா கராமானுன
முத்தானைக் களிற்றரசர் முடிதேய்க்கு மொய்கழலான்
கொத்தான மலர்க்குழலார் மடலெழுதுங் குலக்காம
வித்தான பாதனெனி லொருபெயர்பெற் றவனம்மா. (௧௦)

அன்னவனியா வரும்புகழு மரும்புதல்வற் பெற்றெடுக்கு
முன்னமுடை யவனாகி மூரிநீ ரவனியிடத்
தென்னதலஞ் சிறந்ததல மெனவினு விதெளிந்து
பின்னமற வந்தடைந்தான் பெருந்துறையாஞ் சிவபுரத்தை. (௧௧)

வந்தவனப் பெருந்துறையின் வளமுழுது நனிநோக்கி
யிந்தவளத் தலமொன்றே புவிப்பயனு விருந்ததல
மந்தமிலா விஃதடைந்தேற் காகாத தென்னென்று
சந்தமுற மிகமகிழ்ந்து தவஞ்செய்யக் கருதினான். (௧௨)

ஒள்ளியதண் புனலாயு மக்கினிப்பே ரொழியாத
வள்ளியதீர்த் தம்படிந்து வயங்கியவெண் ணீறணிந்தே
நள்ளியகண் மணிமாலை புனைந்துநயந் தைந்தெழுத்து
முள்ளியசிந் தையனாகி யொண்மலர்க்கை குவித்தெழுந்தான். (௧௩)

மிக்கவரா யினிதமரும் வெயிலுவந்தா தமைப்போற்றிச்
சொக்கவிநா யகர்பதமுந் தொழுதுகுருந் தினைவணங்கித்
தக்கவரேத் திடுமான்ம நாதர்முனஞ் சார்ந்திறைஞ்சி
யக்கமணி யாஞ்சிவயோ காமபிகைபா தமும்பரவி. (௧௪)

எண்ணியகா ரியமுடிகக வேண்டுமென வெடுத்தியம்பித
தண்ணியவா ரழற்றீர்த்தத் தடங்கரையி லடைந்தமர்ந்து
புண்ணியவா ருமான்ம நாதாதாள் புந்திகொடு
நண்ணியநா ருண்டாவு நயந்துயோ கத்தமர்ந்தான். (௧௫)

உணருமே யோகிருககு முததான பாதனரு
ரெண்ணுமே யொழிவாகொ லடியவருக் கெளியவாதாந்
தண்ணுமேற் றேன்றுத சடைமுடியோ டயன்முயன்று
பணுமே னியினெதிர்ந்தார் பார்த்தனுட னமரெதிர்ந்தார். (௧௬)

அண்ணலடைந் தமைதெரிந்துத தானபத னெழுந்துபணிந்
தெண்ணலினி யென்னேயென் றிருகைகுவித் தெதிர்நிற்க
வுண்ணலவிட மாககொண்டா ருயாமேரு முடியமர்ந்து
நண்ணலமை கோளியக்கு மகவளித்தோ நடவென்றுங் (௧௭)

சொல்லமுடி யாமகிழ்ச்சி தலைக்கொண்டு தொழுதுபோய்
வல்லதன திருக்கைமரீஇத் தருவனு மகப்பெற்று
நல்லமக மேருமுடி நண்ணவைத்துக் கோளியக்கு
மொல்லைமதி தெரிந்தவந்தா னுத்தான பதனென்பர். (கஅ)

இன்னுமொரு கதையுரைப்பா மெறிதிரைநீ ரிருந்தடத்து
மன்னுதகட் டகட்டுகெடு வாளைமீன் வெடிபோய்வான்
றுன்னுசெழுங் கற்பகத்தின் கழுத்தொடிக்குஞ் சூழ்வளஞ்சால்
பன்னுபெரு விதர்ப்பமெனும் பைதிரத்தி லொருநகரம். (க௯)

கனகமதில் புடையுடுத்த காம்பிலி நகர்க்கொருசா
ரனகமலி விபுலமெனு மந்தணர்சே ரியிலுள்ளான்
றினகரமண் டலம்பொருவுந் தேசுசா லொருமறையோன்
முனகரிய தொழில்விசுவம் பரனென்ன மொழிபெயரான். (உ0)

அன்னவனுக் கிருவர்மனை வியருள்ளா ராங்கவருண்
முன்னவள்பேர் கனகையொரு முளையுடையாண் முளையில்லாள்
பின்னவண்மற் றவடேரம் பெயர்ப்பதற்கம் மறையவன்று
னன்னரறம் பலமுயல்வான் றீர்த்தமெலா நணிப்படிவான். (உக)

அதுதெரிமூத் தவணெஞ்சத் தழுக்காறு நனிபூண்டே
யிதுபுரியு முயற்சியெனி னிளையாளுக் கொருமகவு
கதுமெனவே தோன்றிடுந்தோன்றி னமதுகா தலன்செல்வங்
குதுகலம தறவிரண்டு கூறுகிக் குறைபடுமால். (உஉ)

முற்றியவெ[illegible]ர் றுயரமெலா முதலோடு முடிப்பனெனப்
பற்றியநஞ் சுணவூட்டிப் பாதகிகொன் றுடலவனைச்
செற்றியபா தகம்வருத்தத் தேயமெலா முழிதந்து
மற்றியலோர் வனமடைந்து வன்றியா வுயிர்மாண்டாள். (உங)

கோலத்தா னுயிர்மாய்ந்தாள் குணுங்குருவ மொன்றடைந்து
சூலத்தாற் பொலியங்கைத் தோன்றலா ராணையினுன்
ஞாலத்தா ரீர்நிழலை நண்ணுமே கவன்றலைவாள்
பாலத்தார் விழிப்பெருமான் பெருந்துறையோர் பாங்கடைந்தாள். (உச)

ஆயவிடத் தொருவிருக்க மேலமர்ந்தா ளக்காலை
சேயமிகு புறுவொன்று நிறைதாபம் பெடைக்கொழிப்பான்
பாயவுழல் றடம்படிந்து பறந்துமே லெழீஇச்சிதறத்
தாய்புனற் றிவலையொன்று சோர்வொழிபேட் டெனின்றும். (உரு)

சோர்தருபேய் மகளுடம்பிற் றேய்தாவவ் வுருநீங்கிச்
சார்தருபா தகமனைத்துந் தவிர்ந்துதே வுருவாகி
நேர்தருசெஞ் சடையாளர் நெடுங்கயிலைப் பதியடைந்தாள்
சீர்தருமா தேவிபணி தலைக்கொண்டி னெய்தினளால். (உசு)

அருவளத்தக் கினிதீர்த்தம் படிந்தவாண் கபோதகம்பெண்
புருவுடம்பின் விழுத்தியபஃ றிவலையிற்போர்ந் தொருதிவலை
மருமயற்பே யுடல்படியத் தேவுருவம் வந்ததெனி
னிருமலரத் தடப்பெருமை யெம்மனோர் சொலற்கெளிதோ. (உஎ)

## தேவதீர்த்தம். வேறு.

தண்ணய வான்ற நாதர் சந்நிதி யவாசித் திக்கி
னண்ணிய நெல்லிக் காவு ணயந்தமர் தருமோர் தீர்த்தம்
புண்ணிய வரனே ரியாரும் போந்துபோந் தாட லாலே
யெண்ணிய தேவ தீர்த்த மென்பரா லதற்கு நாமம். (உஅ)

அன்னதை நாத தீர்த்த மென்றறி வுடையோர் சொல்வார்
பொன்னவிர் கமலம் பூத்த புனலதிற் படிவோ ரியாரும்
பன்னரு மிம்மை யோடு மறுமையும் பண்பிற் றுய்த்து
மின்னவிர் சடையான் பாத மேவிவீற் றிருப்ப ரீற்றில். (உகூ)

தென்றிசைக் கடற்றீ ரத்திற் செல்வமுங் கல்வி யுஞ்சேர்ந்
தோன்றிய வளத்தா னுரு மோங்கரி மந்தி ரப்பேர்
துன்றிய புரமொன் றுண்டு சுரநகர் வாழ்க்கை யோரு
நன்றிய லாங்கு மேவ நண்ணுவர் வேட்கை மாதோ. (௩0)

அந்தநற் புரத்தி லெம்மா னாலய மொன்றுண் டென்று
நந்தமக் கருளு மீச னுமமோ மந்தி ரேசன்
பிந்தலி லருள்சா லும்மை பிரமநா யகியென் பேராள்
பந்தமி லிருவ ருக்கும் பஞ்ஞினர் திருவி ழாவே. (௩க)

சாறுசெய் தினத்து ளோர்நாட் டையலோ டைய னாதி
யேறுகொண டலங்கா ரஞ்சா ரெழிற்றிரு வீதி யெய்திப்
பேறுதங் கடியார்க் கெல்லாம் பெறற்கருங் காட்சி நல்கிக்
கூறுதன் கோயி லுள்ளாற் குறுகிவீற் றிருந்தா னன்றே. (௩உ)

இருள்செறி கால மாக விறபுகு நடவை தேருந்
தெருளின்மித் திரனென் பானோர் மறையவன் கிகரிக் கப்பாற்
பொருளிலை யெனக்க ழித்த நீபத்துட் பொருந்து மொன்றை
மருளறக் கழியிற் கோத்து வழிக்கொடு நடந்து போனுன். (௩௩)

அன்னவன் முன்பு செல்லச் சிலர்தொடர்ந் தகத்துட் போவான்
மின்னகு தீப நோக்கி விரைதரத் தொடர்ந்து சென்றார்
சொன்னவச் சிவால யத்தெண் ணெய்கவர் துரோக மேவ
வென்னரும் வறுமை மூடப் பட்டிறந் தளற்றி லாழ்ந்து. (ருச)

நெடிதுநாள் கழிந்த பின்றை நிலத்திழி பிறப்பி னுற்றார்
கொடியமற் றிதற்கு மூல மெனக்கூறு மித்தி ரன்றான்
றடிதரா நிரப்பு மூடித் தரையிற்பன் னாளு ழன்று
கடியவெந் நோய்க்கோட் பட்டுக் காலனூ ரடைந்தா னன்றே. (ருரு)

ஆவயி னிரய மெல்லா மளப்பினு ளனுப வித்து
மேவருங் கிருமி யாதி வேறுவே றுதித்து மாய்ந்து
பாவமன் னுமலி யாகிப் பல்லிடத் துழலுங் காலை
யோவரும் பெருந்து றைப்பாற் பிதிர்வன முற்றா னன்றே. (ருசு)

சுவைச் சாம்பர் வீழ்ந்து புரளலுந் தூய ஞானம்
வவெறச் சிறிதுண் டாக மற்றந்த வலியி னாலே
பமெலர்த் தேவ தீர்த்தம் படிந்துபா தகந்த டிந்து
கொமெலக் குறும்பு மாய்த்துக் கூடுபே ரின்ப முற்றான். (ருஎ)

அறத்தினை வேண்டி னாலு மளப்பரும பொருள்க ளாய
திறத்தினை வேண்டி னாலுந் திகழ்தரு மின்ப மென்னு
நிறத்தினை வேண்டி னாலு நிகழுமிம் மூன்ற னுக்கும்
புறத்தினை வேண்டி னாலும் பொலியகல் கிமெத் தீர்த்தம். (ருஅ)

## முனிவர்தீர்த்தம்.

உமைமண வாளன் கோயி லுத்தர திசையின் கண்ணே
யமைசிறப் புடைய வீதிக் கருகொரு தீர்த்த முண்டாற்
கமைமுனி வரர்க ளாடிக் களித்தருந் தவஞ்செய் நீராற்
சமைதரு முனிவர் தீர்த்த மென்மனர் தலைமை சான்றோர் (ருகூ)

இன்னுமற் றதனை விந்து தீர்த்தமென் றெடுத்துச் சொல்வார
பன்னுமற் றங்கீ ராடிற் பாதக மனைத்து மாயுந்
துன்னரும் மலக்கி ழங்கும் தொட்டெறி வன்மை மேவு
மின்னுமஞ் சடையான் பாதக் கலப்புமே விடுவ துண்மை. (சுo)

கொழிதமிழ் மணக்குஞ் செவ்வாய்க் குறுமுனி வரனென கோமான்
பழிதபு பொதிய மேவும் படிவழி யியங்குங் காலைக்
கழிந்வத் துருவா சன்றன் காதல ரிருவ ராய
வழிதகைக் கொடுவோ தாவி வில்வல னடுத்து மேவி. (சுக)

வஞ்சகத் தூட்டல் கண்டு மீற்றவர் தமைமீ ருந்கி
நெஞ்சகத் துறுவன் மைந்த ரிவரென நினைந்து நாளு
மஞ்சகத் தொழித ராத பெருந்துறை மருங்கு வந்து
நஞ்சகக் கழுவா யாநீர்த் தமிழ்முனி வரனி னைந்தான். (சஉ)

தண்ணிய முனிவா தீர்த்தஞ் சார்ந்துசங் கற்பங் கூறிப்
புண்ணிய முனிவ ஞடிப் போர்த்திய பழிய னைத்து
மண்ணிய விசேடம பெற்றுன் மற்றுமத தீர்தத மாடி
யெண்ணிய பேறு பெற்று ரெண்ணிலா ருலகி லம்மா. (சந)

அகத்திய முனிவன் பின்னு மமைந்தவெள் ளாற்றின் மூழ்கி
மகததுவ மிகுமவெள் ளாற்றின் வடகரை யிலிங்க நட்டுத்
தகத்திகழ் பூசை செய்து தன்பெயர் நிறுவிப் போனு
னிகத்தியல் போக மாதி யெய்தவா ரதுபூசிப்பார். (சச)

## அசுரதீர்த்தம்.

அங்கண ருபாத்தி யாய ராயமர் கழக மாகத்
தங்கிய வாநகோர் தானந தனககுப்பச் சிமதிக கின்கட்
பொங்குமோர் தீர்த்த முண்டாற் புகரற வசுரர் தோய்ந்து
பங்கமில் வரங்கள் பெற்று ராதலாற் பாரி லுள்ளோர். (சரு)

வலிதரு மசுர தீர்தத மெனும்பெயா வழங்கா நிற்பா
சலிதரு தரமி லாத சதாசிவ தீர்த்த மென்றும்
பொலிதரு புலவா சொல்வா ரஙகதிற் புகுந்து மூழகின்
மெலிதரும பாவ மெல்லாம வீட்டின்ப மெய்து மன்றே. (சசு)

## வாயுதீர்த்தம்.

மருவிய குருந்தி னுக்கு வாயுமூ லையிலோா தீாததம
வெருவற வாயு மூழ்கி வயிற்றுநோய் வீட்டி வாழ்ந்தா
னொருவிலத் திறத்தால் வாயு தீர்ததமென் றுரையா நிறபா
திருவினர் மகேச தீர்த்த மென்னவுஞ் செப்பு வாரால். (சஎ)

உரைத்தவண புனலா றின்னு முரைக்கவேண் டியவோர் மூன்று
திரைத்தடம் பின்பு சொல்வாந் திருப்பெருந் துறைய கத்து
வரைத்தடந் தோட்கு ராதி யாவரு மடிய மாட்டிப்
புரைத்தசீரக் குமாரன் வந்து பொருந்திய திறமுஞ் சொல்வாம். (சஅ)

தீர்த்தப்படல முற்றிற்று.

ஆகத்திருவிருத்தம சுஎகூ.

# குமாரர்வருகைப்படலம்.

அறமுத லறமுத லென்ற றைந்திடா
திறமுத லெனத்துணி யியல்பு நல்கிடு
முறமுத னூலென மொழியும் வாசகப்
புறமுதன் மலரடி புந்தி மன்னுமால. (க)

ஒருசிறு விதிமகச் சாலை யுற்றவன்
றருதக ரூனுணச் சமைந்த வானவர்
வெருவறக் கடையெலா மேனி கொண்டெனப்
பெருவலிச் சூர்முத லோர்பி றந்தனா. (உ)

எண்ணினு ளருந்தவ மியற்றி நெற்றித்தீக்
கண்ணினான் பால்வர மனைத்துங் கைக்கொண்டா
ரண்ணுபே ரண்டமா யிரத்தெட் டாளுவா
ருண்ணிலா மருள்சிறி தேனு முற்றிலார். (ங)

அன்னவ ரலைத்திட வலையின் வாய்த்தரும்
பென்னவா னவரெலா மலைத லெய்ந்தனர்
சொன்னமா தேவர்க்குத் துரோகஞ் செய்பவ
ளின்னதோ வின்னமு மெய்து மென்பரால். (ச)

ஆலவாய்க் கரும்பென வவுண ராலுடை
மாலயன் முதலிய வானு ளோரெலாம்
வேலைநஞ் செழுததமைக் காதத வித்தகன்
சோலைசூழ் திருப்பெருந் துறைவந் தெய்தினார். (ரு)

அய்யனே யபயம்வெவ் வரிண மோதிய
கய்யனே யபயம்வெங் காலற் செற்றகாற்
செய்யனே யப்யமா தவத்தர் சிந்தைவாழ்
மெய்யனே யபயமியா மெலிவு மேவினேம். (சு)

முத்தனே யோலமெம் முதல்வி கொண்டரு
ளத்தனே யோலம்வின் ணவாம்பெ ருந்துறைக்
கத்தனே யோலமெங் களைக ணாகிய
நித்தனே யோலமென் றிறைஞ்சி நின்றனா. (எ)

ஆயவக் காலையி லாண்மை நாயகர்
சேயமுற் றவர்முகம் பார்த்து நீரெலாங்
காயமேற் போம்வட கயிலை யண்ணுமின்
பாயநம் பவனத்து பான்மை மேவவே. (௮)

என்றலும வடகயி லாய மெய்திரு
ரன்றலி னந்தியெம் மண்ண ஞுடொழுஉ
மன்றமர் பிரானுக்கெம் வரவு செப்பென்று
ரொன்றவ னனுஞைபெற் றுள்பு கச்செய்தான். (௯)

உருத்திர மூர்த்தியை யுவந்து கண்டனர்
கருத்தமை தரவடிக் கடிப ணிந்தனா
பருத்தெழு மகிழ்ச்சியிற் குடந்தம் பட்டனர்
திருத்தக வவாமுக நோக்கிச் செப்புவான். (௧௦)

ஒன்றுநீ ரஞ்சலி ரும்பர் காள்வளங்
குன்றுறுப் பெருந்துறை கூடி மேவலா
லன்றுநும் பகையெலா மழிவ தாகுமா
லின்றுநா மதற்குவே றியற்ற லுணடெனு. (௧௧)

ஆறுமா முகங்கள்கொண் டமர்ந்துட் டாதுவை
வீறுவா ணுதற்கணில் வெளிப்ப டுத்திடக்
கூறுகா லழறலைச் சுமந்து கொண்டுபோய்த்
தேறுமா கங்கையிற் செலுத்தக் கங்கையும். (௧௨)

மறுவறு பெருஞ்சர வணத்தி னுய்த்திட
வறுபொறி களுமறு குழந்தை யாகியோங்
குறுதினத் துமையவ ளொன்று செய்தொளி
பெறுகயி லைக்கிரி பிறங்க வுய்த்தலும். (௧௩)

ஆறுமா முகத்தவ னுய நம்பிரான்
வீறுசெய் தம்பிய ரொடும்வி ராவியே
மாறுதீர் பெருவிளை யாட்டின் மன்னுத
றேறுமா லயன்முதற் றேவர் கூடுபு. (௧௪)

மறைமுத லடித்தலம் வீழ்ந்து வாழ்த்தியே
முறையிட விரங்கிய முக்க ணுயக
னிறைபதி னொருவரை நிகழ்தன் சத்தியை
யுறைபடை யாகச்செய் தங்கை நல்குபு. (௧௫)

இன்னும்வேண் டுமெலா மினிதி னீந்திவட்
டுன்னுமவா னவர்பகை தொலைத்து வாவென
மின்னுதம் பியரொடும் பூத ரோடுமேய்
மன்னுதா ரகனுயிர் மடிய மாய்த்தபின் (௧௬)

வழியமர் தலமெலாம் வழுத்தி யாவரு
மொழியலை வாயிடை யமர்ந்து முந்துபொன்
பழியவு ணர்கணிலை பகர வோர்ந்தட
லொழிவரு மிளவல்கு ரூருற் றெய்யென. (௧௭)

மீண்டபி னியாவரு மேவிப் பின்வர
மாண்டசீர் வீரமா மகேந்தி ரம்புகுந்
தாண்டவ னவுணர்த மனிக மாய்தரத்
தூண்டடு படையெலாந் தூண்டல செய்யுநாள். (௧௮)

அரிமுகத் தவுணனே யாதி யாகிய
வெரிமுகத் தவரெலா மிறந்து போம்படி
தெரிபடை செலுத்திமேற் றிகழுஞ் சட்டியி
லுரியசூ ராயமா வுடல்பி ளந்தனன்.

கோழியு மயிலுமாக் குலவ னோக்கியாங
கூழிகா ணிருங்கொடி யூர்தி யாக்குபு
வாழிவா னவர்சிறை விடுத்தொர மால்வரைச
சூழியா னையின்பிடி தோள்பு ணர்ந்தரோ.

ஏலுமவா னகங்குடி யேற்றி மாமறை
நாலுமோர் பெருந்துறை நண்ணி யப்பனை
யாலுமே தகவுசா லன்பிற் போற்றிட
மாலுமா றிலாரொடும் வந்த னன்னரோ. (௨௧)

அம்மையப் பனைத்தொழு தடிவ ணங்குபு
வெம்மையில் பெருங்களி மேவு சிந்தையான்
கொம்மையொண் மயின்மிசைக கொண்டு கோபுரச்
செம்மைசே ருத்தர திசையிற் றானததில. (௨௨)

வடதிசை நோக்குபு மகிழ்ந்து வைகினு
னுடனடைந் தவரெலா மொருங்கு நோக்கியாங்
கிடமிகு பெருந்துறை குமார வென்றுள
மடனிகு மன்பொடு வணங்கி வாழ்த்தினர். (௨௩)

கூறிய பெருந்துறைக் குமாரர் சேவடிக்
காறிய மலர்பறித் தணியு கல்லவ
ரேறிய சனனபா தகமெ லாமிரீத்
தூறிய சிவானந்தத் துவந்து மன்னுவார். (உ௪)

கொடிமதிற் பெருந்துறைக் குமாரர் வந்தவா
றொடிவற வுரைத்தன மோங்கற் றேளிநாய்
கடிதவில் பெருந்துறை யெனற்குக் காரணம்
படியற விளம்புவாம் பணிபிற் கேட்டியால். (உ௫)

குமாரர்வருகைப்படலமுற்றிற்று.

ஆகத்திருவிருத்தம் எ௦௦.

# பெருந்துறைப்படலம்.

கதிரழல் கண்ணே மெய்யே கஞ்சமே லிருப்பான் பாகே
யதிர்வனைக் கரனம பேறில் லேயினு மாவதாக
வெதிரில்வான் பரமா காரென் றியற்றமி ழுண்மை சொற்ற
முதிர்புகழ் வாத வூரெம் முதல்வரே யெமையாட் கொண்டார். (க)

இறையவ னொருமா தேவ னேயெனத் துணிந்த நீரார்
மறைமுழு வதுமு ணர்ந்து வைதிகத் துறையி னின்றார்
குறையற வங்க மாதி யாவுமுட் கொண்ட சீலா
பொறையுரு வமைமூந் நூறு மறையவா புகழான் மிக்கார். (உ)

ஆற்றறீத் தொழிலே யின்று மறைபசுக் கொலையே யேனு
மேற்றலோர் பழியு மில்லா ரியாவருந் தொழும்பே றுற்றார்
சாற்றலென் னெம்பி ரானைத் தங்களு ளொருவ னாகப்
போற்றல்கொண் வேப்பா ரென்னி னியாமேயோ புகழ வல்லேம். (௩)

தஙகளு ளொருவ னாகத் தம்பிரான் றன்னைப் பெற்ற
துங்கமார் கதையென் னென்னிற் சொல்லுவா மன்னு கேண்மோ
திஙகளங் குலத்த னுய செழியர்கோ மகனெ ருத்தன்
பங்கமி லான்ம நாதர் பணிசெயற் குரிமை யாய்ந்து. (௪)

கங்கைசூழ் காசி நின்றுங் கற்றமுந் நூறு வாய்மைத்
துங்கமா மனறயோர் தம்மை வருவித்தான் றேலா மேன்மை
யங்கவர் பாண்டி நாட்டி லவிழ்மலர்க் குருந்த நாளுந்
தங்கிய வனத்தை மேவச் சுகுணபாண் டியனுரு சார்ந்தான். (௫)

வழுதியர் பெருமாற் காக்கங் கூறினர் மறையோ ரெல்லாந்
தொழுதன னிருக்கை நல்கித் தூயபொற் கலிங்க மூன்றா
றெழுகொளித் தட்ட மேலா லெண்ணின னொருங்கு வைத்துச்
செழுமுகத் தொவ்வொன் றாகச் சிறப்புறக் கொடுத்தா னன்றே. (௬)

எஞ்சிய தொன்றேற் பாரி னில்லாத குறையென் னென்றான்
விஞ்சிய புகழார் தம்மை மேதகப் பலகா லெண்ணி
யஞ்சிய மனத்த ராகி யையமுற் றொருவர்க் காணேந்
துஞ்சிய புகழா யென்ன செய்குவாஞ் சொற்றி யென்றார். (௭)

வழுதியு மறைவ லாரு மயங்கின ரிருக்குங் காலை
யெழுதரு மறைக டேறா விறையவன் குருந்தி னின்று
முழுமறை யவனுத் தோன்றிப் பூழியன் முன்ன ரெய்திச்
செழுமுந் நூற் றுவரெம் மோடென் றுரைத்தன ரியக்கந் தீர்த்தார். (௮)

இழுதையர் தமைச்சா ராநா மெஞ்ஞான்று மிவரை நீங்கேந்
தழுவுவ மெனநீ றள்ளி வழுதிதன் னுதலிற் சாத்திப்
பழுதறு மாக்கங் கூறிப் பரவுபொற் கலையு மேற்றுத்
தொழுதகு மறையோர் கூட்டத் தொருவராத் துன்னி னாரால். (௯)

மதிநலம் பொலிமுந் நூற்று வருளிவ ரொருவ ரென்றே
யதிசயம் பயப்ப வான்ம நாதருக் கறைந்தா ரோர்பேர்
திதிபுரி தென்னர் கோமான் மறையவர் செய்யு மன்புந்
துதியிறை யவர்தாஞ் செய்யு மருளுஞ்சீர் தூக்கி நின்றான். (௧௦)

மின்னகு வேலான் செம்பொன் மாளிகை வெவ்வே றாக்கி
யன்னவர்க் குதவி யவ்வூர் மானிய மாக நல்கி
யின்னமும் வேண்டுஞ் செல்வ மியாவையு நிரப்பிப் பின்னர்
தன்னக ரடைந்தா னான்ம நாதர்தா டலைமேற் கொண்டே. (௧௧)

ஓதிய மறையோர் தம்மு ளொருவரா யான்ம நாத
ராதியில் வந்த வாறீ தறைந்தன மப்பாற் கேண்மோ
சோதியை யான்ம நாதச் சுயம்புவை யருச்சித் தேத்திப்
போதியன் மறைவ லானும் புகழ்மறை யவர்கள் வாழ்நாள். (௧௨)

எண்ணிய மறையோ ரெல்லா மிராப்பக லன்பு பொங்கப்
புண்ணிய வான்ம நாதர் பூசனை முயலு மாற்றா
லண்ணிய சிறுவர்க் கத்தி யயனஞ்செய் விப்ப தற்கோர்
தண்ணியர் வேறி லாமைத் தளாவுளத் தடைந்தா ரன்றே. (௧௩)

இருமுது குரவர் கோயிற் பணிவிடை யமைத்தெஞ் ஞான்று
மொருவரும் வேலை யாகு மொருபெரும் பேறு பெற்றோம்
வெருவறு சிறார்க்கு வேதம் பயில்விப்பார் வேறு காணேந்
திருவரு ளுணரே மென்று சிந்தைசெய் திருக்கும் காலை. (௧௪)

மான்றசிந் தையராய் வந்து மாலயன் முதலி யோர்க
டோன்றநின் றிரத்தல் செய்யச் சுடுவிட மமுதாக் கொண்டார்
சான்றமா மறையோ ருள்ளத் தளாவினை யொழியார் கொலலோ
வான்றதா மேயு பாத்தி யாயராய் வெளிக்கொள் வாரால். (௧௫)

எமைகளும் வியாபித் துள்ள வழகெனப் பட்ட வெலலா
மங்கணுற் றொருவி ருத்த வடிவமா யமைந்த தென்னத்
திங்களன் தமரா நின்ற செஞ்சடை யான்ம நாதர்
தமைகளுன் இனன்வேண் டாவோர் கிழவுருக் கைக்கொண் டாரால். (௧௬)

மன்னிய நுமையீன் வேணு வனத்திடைப் பெற்ற தேயோ
வன்னிய மில்லாப் பாசு ரதனிடைப் பெற்ற தேயோ
மின்னிய வின்னு மெங்குப் பெற்றதோ விளம்பீ ரென்னத்
துன்னிய வேணுத் தண்டஞ் சுடரொரு கரங்கொண் டேன்றி. (௧௭)

அளைக்கலை முடியி னின்று மளைக்கலை யாய தென்னப்
புளைத்தவெண் கலிங்கம் பின்பு போக்குகோ வணத்தி னோடு
வளைத்தமுன் கொய்செ ருக்கு மடிததெடுஉச் செருகி மேலா
லுளைக்குமே கலைவி ளங்க வுடுத்தது சரியக் காட்டி. (௧௮)

எவ்வுருக் கொண்ட போது மிதுவிடே மெனக்கொண டாங்குச்
செவ்விய நுதலின் மெய்யிற் செறிந்தவுத தூள னததோ
டவ்விய மனுக்கு நீற்றுப் புண்டர மழகு செய்து
கவ்விய தாய வெள்ளிக் குப்பாயக் கட்டிற மேன்ற. (௧௯)

மதியமு தொழுக்கி யாஙகு வயங்குமுப் புரிநூற் கிட்ட
பொதிதரு முறைகொ லென்னப் பொற்றமேற் கலிங்கஞ் சாத்தித்
துதியபாற் கடலி னுப்பட் டோன்றிய மொக்குண மேலோர்
பொதியபுண் டரீகஞ் சார்ந்தாற் போனறா முடிபின் னுல. (௨௦)

திருத்தகக் கொண்டு மெய்யிற் சிவமணங் கமழ்வ தோர்ந்து
பருத்தகார் வணடி னங்கள் பற்பல வந்து வீழ்ந்தாங்
கருத்தநான் மறைக ளேத்த வவிருங்கண் மணிகள் பல்ல
பொருத்தமார் சென்னி யாதி யிடமெலாம் பொலியா நிற்ப. (௨௧)

வளையுருத் திரிந்து வேறோர் வளையுருக் கொண்ட தென்னக்
களையவிர் செவியிற் செம்பொற் குண்டலங் கவினச் சேர்த்தே
யிளைமதத் துழாயி னுன்க ணெலும்பது பிணங்கா நிற்கத்
தளைபவித் திரமோ ரங்கை விரற்றலைத் தயங்கப் பூண்டே (௨௨)

எழுதுதற் கரிய தாகி யியைந்ததோர் பாதக் காப்புச்
செழுமல ரடியிற் சேரத் திகழ்வலக் கணணின் வெப்பந்
தழுவுதன் மறைக்கு மாறோர் தடங்கரங் கவிகை தாங்க
முழுமுத லவரிவ் வாறோர் முதுவடி வுற்று ரன்றே. (௨௩)

தளாநடை தனககு மோராற் றலைச்செயுந் தண்ட மென்று
இளருல குளைத்த றேற்றக் கேடிலஃ தூன்றிக் கொண்டு
விளர்குடை நிழலி யங்கி வேதிய ரவைமுன் னுக
வளரொளி மறையோர் வந்தா வாய்சிவ சிவவென் றாப்ப. (௨௪)

வந்தமா மறையோர் தம்மை யிருந்தமா மறையோர் கண்டு
முந்தநே ரெழுந்து சென்று முகமலர்ந் தினிது போற்றிச்
சந்தமார் தமதி ருக்கை கொடுவந்து தாழ்ந்தி ருத்தி
யெந்தவூ ரிருந்தும் போந்தீ ரையரே யியம்பு மென்றார். (௨௫)

எங்குநா மிருப்போ மூரென் றிசைப்பதொன் றில்லை யேனுந்
தங்குவாஞ் சிவபு ரத்துந் தவாதவன் பினாத மாட்டு
நங்குதீர் மறைவல் லீர ஙாதாககோ ரிடமு முண்டோ
பொங்குநூல் சிறுவ ருக்குப் போதித்தல வல்லே யென்றார். (௨௬)

ஐயரிம் மாற்றங் கூற வந்தண ராகி யுள்ள
செய்யருண் மிகம கிழ்ந்து சிறுவாபோ தனையில வல்ல
மெய்யரே லோரி ருக்கு விளம்புவீ ரென்றார் நாலெண
கையர்கா ணுதார் செவ்வாய் மலர்ந்தனர் கருணை செய்வார். (௨௭)

வன்னமே பதமே யாரும் வகுத்துரை கிரம மேமேற
சொன்னவரன் சடையி ருக்கே தூயபஞ் சாதி யேமற்
றுன்னரும் பிறவே யெஃலா முதாததமுற் சுரததி னேடு
மன்னவெத் திறங்க ளுஙகார் மழையெனப் பொழிந்தா ரன்றே. (௨௮)

அந்தநா ளுரைத்தா ரிந்நா ளறைவதோ ரருமைத் தாமோ
பந்தமா மறவி யாதி யுயிர்க்குணும் பரித்து ளாரோ
சந்தனா ரனைத்துங் கேட்டுச் சதுமறை வல்லா ரன்றே
நந்தமா மறையோ ரெல்லா நவிலொணு வுவகை பூத்தார். (௨௯)

சிறுவரீங் குள்ளார்க் கத்தி யயனஞ்செய் வித்தல் வேண்டு
மறுவறு நமக்கென் வேண்டும் வருத்துணை செய்வீ ரென்னப்
பெறுவதும் பிரியு மல்லாற் பிறிதெவ னமக்கு வேண்டு
முறுபசிக் கன்னந் தம்மி னுதவொன்றே போதுமென்றார். (௬௦)

அன்னதே லைய ரேயெம் மகத்தொறு மொவ்வோர் நாளா
வின்னமு தருந்து வீரென் றிசைத்தன ரிசைந்தா ராகிச்
சொன்னபன் மகாரைக் கூட்டித் தூயவோ ரிடத்த மர்ந்து
நன்னலம் பெருக வோது வித்தலை நடாத்த லுற்றார். (௬௧)

தொழுகுலத் தவர்சி றார்மேற் றூயதாங் கருணை நாட்டம்
பழுதறு முபாத்தி யாயர் செலுத்தது பூடஞ் சொல்லச்
செழுமதிப் பிறைபோற் கல்வி தினந்தொறும் வளர்த லோக்கி
யெழுதரு முவகை பொங்க விருபிறப் பாளர் வாழ்நாள். (௬௨)

மன்னிய மதுரை மேய வரதுங்க வழுதி யூழற்
றுன்னிய சுவர்க்க முற்றா னவன்மகன் கௌமா ரன்றான்
மின்னிய மவுலி சூடி மேதினி புரக்கு நாளிற்
றுன்னிய குறும்பர் தங்க டோன்றலா கியவுண் டாக்கன். (௬௩)

கலையுணர் வழுதியாய கௌமார னட்புப் பெற்று
நிலையுரி மையும்பெற் றானாய் நிகழ்பவன் கொடிய தீமை
யலைசெயற் கஞ்சா னெங்க ளான்மரா யகனைப் போற்றுந்
தலைமையர் தண்ணாதம் பூமி தனைக்கவ ரெண்ணங் கொண்டான். (௬௪)

தன்னுடை நகர்க்க டுத்த நகரமாத் தீங்க லாலே
மன்னுடை மறையோர வைகுஞ் சிவபுர வளப்பார் முற்று
மென்னுடை நிலமா மென்றே யெண்ணுறு கவர்ந்து கொண்டான்
முன்னுடை வழுதி நல்கு முறிவிலா வணத்தி னோடும். (௬௫)

பரம்பர வான்ம நாதர் பணிவிடை செய்வா ரென்று
நிரம்பமை மறையோ ரென்று நெஞ்சத்துச் சற்று மெண்ணு
வரம்பறு கொடியோ னெல்லாங் கவர்ந்தனன் மறையோ ரெல்லா
முரம்பயில் செயலொன் றில்லா ரோய்யென வாட்ட முற்றார். (௬௬)

வழுதியோ விளைய னன்னான் மாட்டதி நட்புப் பெற்றான்
பழுதுசெய் குறும்பர் தோன்றற் பாதகம் புரிவுண் டாக்க
னெழுதரும் புகழான் முன்னு ளியைதர நமக்க ளித்த
முழுவதுங் கவர்ந்தா னியாஞ்செய் முறையிஃ தென்று தேரேம். (௬௭)

மறையவர் நிலமென் றோதா வுணமுங்கைக் கொண்டா ளுட்சி
முறைதன தாகச் செய்தான் முற்றிய வயலார் காட்சித்
துறையையுந் தவிர்ப்பா னென்ன செய்யலாந் துணிபென் னேயெம்
மிறையவ ரான்ம நாதர் திருவுள மென்னே வென்பார். (௩௮)

மறைவழி யியற்றுஞ் சந்தி வந்தனை தவிர்ந்து ளோமோ
குறைபசி யென்ற டைந்த குணத்தரை விலக்கி னோமோ
வறைபர தனங்கொண் டோமோ வான்மநா யகர்தம் பத்தித்
துறையினிற் றப்பி னோமோ சூழ்ந்ததித் தீமை யென்பார். (௩௯)

அய்யரே யெம்மை யாளு மான்மநா யகரே மேனிச்
செய்யரே யென்றுந் தீராச் செல்வரே மழுமா னேந்துங்
கையரே காலற்காய்ந்த காலரே யெக்காலத்து
மெய்யரே யெளியே மென்னே பிழைத்தனம் விளம்பீ ரென்பார். (௪௦)

வழுதியந் நாண மக்கு வருவாயோர் குறையின் றுகத்
தொழுதத வியவி தத்தாற் றுயரறத் துய்த்தல் செய்து
பழுதற வான்ம நாதர் பணிவிடை செய்து வந்தோ
முழுவதுங் கவர்ந்தான் பாவி முன்னியென் னுவ தென்பார். (௪௧)

உயிர்முழு துவந்து காக்கு மொருத்தியோ காமபி கைத்தாய்
செயிரற நம்மைக் காத்தல் செய்யாது விடுமோ வென்பார்
கயிரவப் பகைவி டெக்கு மாதவங் களிப்பிற் கொணடார்
பயிர்நிலங் கவர்ந்தான் றீங்கும் பரித்துவந் தனரோ வென்பார். (௪௨)

அந்தணர் தம்மு ளியாமு மொருவரென் றன்று வந்து
சந்தன வெறப னல்குஞ் சன்மான முமபெற் றுள்ளார்
நந்தமை யாளா தெஙகு நடந்தனர் கொல்லோ வென்பா
ரிந்தவண் ணம்பல் லோரு மிரக்கமுற் றிதுது ணிந்தார்.

செழியன்மற் றினைய னாக விருக்கினுஞ் செழிய னுக்குக்
கழியுநட் பாள னாக விருக்கினுங் கடிய பாவி
யொழிவிலச் செழியன் றூன்போ யுற்றதை யுரைப்போ மாயின்
வழிவிடுந் தெய்வ மென்னு மறையவ ரொருப்பட் டாரே. (௪௪)

அன்னதோர் பொழுது பாத்தி யாயரா விருக்கு மையர்
பன்னகா பரணர் கூடற் பதிவயி னடைந்து தென்னன்
முன்னுளார்நீ ருரைப்ப தென்னே மொழிமின மறிய வென்றூர்
தன்னமும் வஞ்ச மில்லா சாற்றிட லுற்று ரன்றே. (௪௫)

அரசனுக் காக்கங் கூறி யருக்சென் றிருந்து தொண்டு
பரசுநான் மறைய ருத்தம பகாதுமென் றொருவர் சொற்றார்
விரசுப நிடத மெல்லாம் விரித்தெடுத் துரைப்போ மந்த
வரசுகு ணத்தோ னும்மன்முனென் றொருவர் சொற்றார். (௪௬)

ஒருவரா கமங்க ளெல்லா முணர்த்துதுந் தெரிய வென்று
றொருவரா கமசா ரத்தை யுணர்த்திடி னுவக்கு மென்று
றொருவர்நஞ் சத்த நூலா னுலகெலா முவக்கு மென்று
றொருவர்மீ மாஞ்சை யுள்ளு முத்தர முரைப்போ மென்றார். (௪௭)

ஒருவர்நஞ் சிவபுரத்தின் மான்மிய முரைப்போ மென்று
றொருவரக் கினிதீர்த் தத்தின் பெருவள முரைப்போ மென்று
றொருவர்நம் மான்ம நாத ருண்மையை யுரைப்போ மென்று
றொருவர்யோ காம்பி கைத்தாய் மகத்துவ முரைப்போ மென்றார். (௪௮)

ஒருவர்பல் புராணத் துள்ள வுண்மையைத் தெரிப்போ மென்று
றொருவர்பல் லிதிகா சங்க ளுள்ளன வுரைப்போ மென்று
றொருவர்நன் மிருதி யெல்லா மொழிவற வுரைப்போ மென்று
றொருவர்மற் றிவற்று ளென்னை நியாயம்யா முரைப்போ மென்றார். (௪௯)

ஒருவர்மந் திரநன் னூலி னுள்ளவை யுரைப்போ மென்று
றொருவர்நாற் பத்து முக்கோ ணத்தியல் புரைப்போ மென்று
றொருவர்நீ றளித்த லோடாக் கமுமினி துரைப்போ மென்று
றொருவர்நா மங்க ளாதி பவந்தென வுரைப்போ மென்றார். (௫௦)

இவ்வித முரைத்தல் கேட்டே யிளநகை வாயிற் றோன்றச்
செவ்விய மறையீ ரியாமும வருதல்சிந் திததோ மென்று
ரவ்விய மில்லீ ரத்தி யயனஞ்செய் வித்தல் வல்லீர்
கவ்விய நீருங் கூடிற் காரிய சித்தி யென்றார். (௫௧)

என்றுரை யாடி யாரு மிணர்மலர்க் குருந்த மூல
மொன்றுற வடைந்து போற்றி யுவப்புறு மனுஞை பெற்றுத்
துன்றுமின் சுவையான் மிக்க தோட்கோப்புப் பொதிசோ றேந்தி
யன்றலின் மதுரை நோக்கி யடைதர வழிகொண் டாரால். (௫௨)

தண்டமொன் றொருகை யூன்றித் தளர்நகைக் கிகலுண் டாக்கிப்
பண்டரி யுணராப் பாதம் பார்மக ளுடம்பு தோயக்
கண்டவ ரதிச யித்துக் கனிந்துநெஞ் சுருகா நிற்க
வண்டர்நா யகரோ யாய வையருந் தொடர்ந்து சென்றார்; (௫௩)

வழிப்படு தலங்க டோறும் வழிபடு நியமத் தோரா
யிழிப்பருந் தீர்த்த மாடி யிலிங்கநா யகரைப் போற்றிக்
கழிப்பரும் பொரிசோ றுண்டு தண்ணீரும் பருகிக் காதல்
செழிப்புற வன்று பார்ப்பார் சேரியிற் றங்கிப் போவார். (௫௪)

மலைவனங் கலுழி பண்ணை வரம்பில கடந்து சென்று
கலையென வாடல் செய்த கண்ணுதன் மதுரை சார்ந்தாங்
குலைவரும் விமானக் கோயி லுட்புகூஉப் பணிந்து போற்றித்
தலைமறை யவர்க ளியாரும் பாண்டிய னவைமுன் சார்வார். (௫௫)

பாதகக் கொடியோன் செய்த படிறொழித் தருள்வீ ராயின்
மோதகத் தொடுதெங் கங்காய் முந்நூறு முந்நூ றாக
வாதவப் பிரிய ரேநீ ரமுதுசெய் திடுவீ ரென்று
போதகத் தலைமை யாளர் புகன்றனர் போற்றிப் போவார். (௫௬)

செழியர்தம் பெருமான் கோயிற் கடைத்தலை சென்று நின்றே
யொழிவருங் காவ லோர்ப்பார்த் துரைமினெம் வரவை யுங்கள்
பழிதபு மரசற் கென்றார் நீவிர்யார் பகர்மி னென்னக்
கழிவளச் சிவபு ரத்து மறையவர் காணு மென்றார். (௫௭)

காவல ரரசன் முன்போய்க் கைகுவித் திறைஞ்சி நின்று
மேவலர் புரங்கள் செற்றார் சிவபுர மேவி வாழும்
பாவலர் சீர்த்தி மிக்க பனவர்க ளின்னைக் காணு
மாவல ராகி வந்து கடைத்தலை யடைந்தா ரென்றார். (௫௮)

மேயவர் தமர்க ளெம்முன் விரவுமா விடுக்க வென்று
ஞயபொற் கடைகாப் பாள ரந்தணர் முன்ன ரெய்தி
நேயமம் மரசன் முன்னா நீவிர்சென் றடைமி னென்னப்
பாயபன் மறையுந் தேறும் பனவரோ டடைந்தா ரியாரும். (௫௯)

தென்னவன் முன்ன ரெய்தித் திருத்தகு மாக்கங் கூறி
நன்னுத னீறு சாத்த நயந்துளங் கனிந்து போற்றி
யன்னவ னிருக்கை நல்க வினைவரு மிருந்தா ருங்கள்
பன்னரு மொழுக்க மெல்லா மூறின்றிப் படர்வ தேயோ. (௬௦)

குறையிலை யாகி வாழ்தல் கூடுங்கொ லெனவி னவ
விறைவநின் றுணை யாலெங் கெழினெவன் ஞாயி றென்று
முறைமையி னிருந்தோம் வந்து முளைத்ததோ ரிடையூ றைய
வந்றயுமற் றதுவி னவி னதிசயம் விளக்கு மென்றார். (௬௧)

அன்னதென் னெனவி னாவி னான்மறா யகராதி
முன்னவர் பணிசெய் பாக்குன் முன்னவ ரெமக்கு விட்ட
நன்னில மனைத்து நின்னை நட்டலுன் டாக்கன் கொண்டா
னின்னதே யிடைஞ்ஞ் றன்பா லிசைத்திட வந்தோ மென்றார். (௧௨)

இவர்மறை யனைத்தும் வல்லா ரிவருப நிடதம் வல்லா
ரிவர்நலா கமங்கள் வல்லா ரிவர்புரா ணங்கள் வல்லா
ரிவர்வியா கரணம் வல்லா ரிவர்தருக் கத்தின் வல்லா
ரிவரிதி காசம் வல்லா ரென்றுமீ ளவுமு ரைத்தார். (௧௩)

எல்லாம்வல் லவரென் றாலு மெடுத்தவில் வழக்கிற் கென்னும்
பொல்லாவொனர் நிலங்க வர்ந்தா னெனப்புகன் றுள்ளீ ருங்கள்
சொல்லார்நன் னிலமென் றற்கா வணத்தொட ராட்சி மற்று
நல்லார்தங் காட்சி மூன்று ளொன்றேனு நாட்டு மென்றான். (௧௪)

மூன்றனு ளொன்றை நாட்டு மென்றிறை மொழியக் கேட்டார்
தோன்றவொவ் வொன்றில் வல்லே மென்றமை துணியு மாறு
சான்றவவ் வரசன் முன்னு விளக்கிடச் சமைந்தார் கேட்ட
மீன்றவிர் கொடியா னென்னு மிவையென நகைத்து விண்டான். (௧௫)

ஆளுகை யவன தாயிற் றமைமுறி யையுங்க வர்ந்தா
னீளுறு மயலார் காட்சி யுண்டவர் நேரே சொல்லார்
கோளுறு குறும்பர் தோன்றல் கொல்லுவா னெனவுள் ளஞ்சி
வாளுயர் மன்ன ரேறே யென்செய வல்லே மென்றார். (௧௬)

என்றலுங் குறும்பர் தோன்ற லிம்மறை யவர்தம் பூமி
யொன்றநீ கவர்ந்த துண்டோ வில்லையோ வுரைத்தி யென்றான்
மன்றமற் றவன்கும் பிட்டு மன்னவா மறையோ ரென்பார்
முன்றம தென்பா ராயின் முயலுக்குங் கோடுண் டென்றான். (௧௭)

இந்தவா றிசைப்பா யாயி னெனதுபா ரென்ப தற்கு
முந்தவா தாரம் யாது மொழியெனத் தொன்று தொட்டு
நந்தவா ளுதலா தாரம் வேறிலை நவிறற் கென்று
னந்தமா நிலத்திற் குள்ள வடையாள முரைத்தி யென்றான். (௧௮)

இருபனை யளவ கழ்ந்த போதுநீ ருறு தந்தப்
பெருநில மென்று ளுங்க ணிலமெனிற் பெருமை மிக்கீர்
மருவடை யாளஞ் சொல்வீ ரென்றலு மறையோ ரெல்லாந்
தெருமரு லுற்று ளாயர் தெரியயாஞ் சொல்லே மென்றார். (௧௯)

மண்டொடு கருவி கொண்டு வெட்டிடின் வெட்டு வாயி
லெண்படு குமிழி தோன்று மென்றுகை யெடுத்துச் சொற்றார்
திண்படு மனனுண் டாக்கன் சிந்தையு ளுவப்புக் கொண்டா
னண்புசான் மறையோ ரெல்லா நடுங்குபு சாம்பு கின்றார். (எo)

கெடுநோணங் கிருகந் தோறு நிரம்பவுண் டிருந்த விந்தத்
தடுமாறு மறையோ னென்ன சாற்றினா னந்தோ விச்சொல்
வடுவாகும் வெட்டு வாய்நீர் காட்டிட வல்லான் கொல்லோ
படுமாறென் னென்று சிந்தை பதைபதைத் திருந்தா ரன்றே. (எக)

உண்மைகொ லைய ரேநீ ருரைத்ததென் றரசன் கேட்ப
வுண்மையே யுண்மை யேமற் றுண்மையே யென்றார் மீட்டு
முண்மையே யெனிலுண் டாக்கா வுனாற்றுவ தென்னை யென்றா
னுண்மையே யவர்பா ரேயென் றுரைத்தன னுலைத வில்லான். (எஉ)

மொழியுமந் தணர்கா ணீவிர் முன்செல்வீ ரென்று போக்கிப்
பழியிலான் பரிமேற் கொண்டு பரிசனத் தொடுபின் சென்றான்
கொழிகளிப் புடையா னாய குறும்பனுங் கூடச் சென்றான்
வழியெலாங் கடந்தி யாருஞ் சிவபுர மருவி னாரால். (எங)

நன்னலம் பயக்கு மான்ம நாதனைத் தொழுது போற்றி
மன்னனோ ரிடத்து மேவி மறையவர் தம்முண் மூத்தீர்
சொன்னவா காட்டு மென்றான் றுதிகவு மார மன்னா
வின்னபோ தகழ்தற் காய கருவியிங் கிலையே யென்றார். (எச)

கருவியா யிரத்தின் மேலுங் காண்வர வரவ மைத்தான்
வெருவின்மற் றவனைக் கொண்டே வெட்டுவித் திடுதி யென்றார்
பொருவிலா வெங்க ளையர் புரவலன் றலைய சைத்தாங்
கொருவினுண் டாக்கா கைக்கொண் டோரிடத் தகழ்வா யென்றான். (எரு)

அன்னவன் கருவி கைக்கொண் டவலொரீஇ மேடு நோக்கிப்
பன்னருங் களிப்பி னோடு மகழ்தரப் படருங் காலை
முன்னவ ரறுபத் தாறு மொழிகோடி தீர்த்த மெல்லா
மன்னவாங் குள்ளங் கொண்டார் நினைத்தவா மரீஇய யாவும். (எசு)

ஓரிடத் தொருகொட் டேன்றி வாங்கலு முறுநீர் தோன்றிக்
காரிடர் மறையோர் நீங்க வவன்முகங் கலங்க மோதிற்
றோரிட நோக்கிப் பின்னும் வெட்டினா னுநகு மிக்க
காரிடர் தனககுண் டாக வெழுந்தது கடுகி நீத்தம. (எஎ)

உறுபுனல் வெட்டுந் தோறு முறவெழுந் தவனு முகத்தி
லுறுவித மறையா நிற்கப் பற்பல்கா லுறத்து டைத்தே
யறுதியில் லாது பின்னும் வெட்டுந்தோ றவ்வா றாக
வறுதியுற் றதுபா ரென்றன் னுணமு திறம்போன் றன்றே. (எஅ)

ஒழிதரான் வெட்டுந் தோறு முறுபுனல் பெருகி யெங்கும்
வழிதரப் பரவ லாலே பெருந்துறை யெனும்பேர் வாய்ந்த
தழிவிலங் காரங் கணடோ ரியாவரு மதிச யித்தார்
பிழிமலர் வேப்பந் தாரான் பேருவப் புடைய னானான். (எகூ)

அந்தண ரெலாந்தி கைத்தா ரமரர்பூ மாரி தூர்த்தார்
சந்தன மலய வெற்பன் மறையவர் தம்மை நோக்கி
யிந்தவா றறிவித் தாரை யிங்கழைத் திடுமி னென்றான்
முந்தமற் றவர்கள் சென்று முண்டக மலர்த்தாள் போற்றி. (அ0)

மன்னவ னழைத்தா னாங்கு வருவது வேண்டு மென்ன
அன்னவன் பாலெ மக்கிங் காவதென் னென்று கூறி
முன்னரு மொருகு ருந்த மூலத்துட் போயொ ளித்தார்
தன்னமு முணர்த ராவந் தணருளந் திகைத்தா ரன்றே. (அக)

உறவதி சயம்வி ளைத்தே யொருகுருந் தத்தொ ளித்த
வறவனா ரான்ம நாத ரேயென வறிந்தார் நம்பான்
மறமறப் பன்னாண மேவி மனைதொறு முண்டி ருந்த
பெறலரும் பேறுந் தோந்தோ மெனப்பெரி துவந்தா ரன்றே. (அஉ)

பெருவிறல் வழுதி முன்போய்ப் பெருவழக் காடி வென்ற
வொருவர்நம் மான்ம நாத ரொளித்தனா குருந்தி லென்று
மருவுற வுரைப்ப வன்னான் மலர்க்கரஞ் சென்னி கூப்பிப்
பொருவிலார் செயலோ வென்று புந்தியி லுவகை பூத்தான். (அங)

பாயதன் னுரிமை யெல்லாம் பறித்தனன் மிகச்சி னந்து
தீயனுண் டாக்கன் றன்னைச் சிறைககளம் புகச்செ லுத்தி
நேயவந் தணருக் கந்தச் சிவபுர நிலத்தி னோடு
மேயபற் பலவு நல்கி விருப்பொடு போற்றி விட்டான். (அச)

தன்னவைக் களத்தி லெய்தித் தகவழக் காடி வென்ற
முன்னவர் தமக்கா மாறு மொழிபல வளமு நல்கிப்
பொன்னடி தொழுது யோகாம பிகையையும் போற்றிச் செய்ய
கன்னலங் கழனிக் கூடற் பதிகவு மாரன் புக்கான். (அரு)

மறையவர் பலருந் தங்கண் மறைமுத லாட லுன்னிக்
குறையறு செல்வர் துய்த்துக் கோயிலி னகத்துச் செய்யு
நிறைபணி தலைமேற் கொண்டு நிரம்புவா னவர்வ யிற்றி
னுறைபசி யகித்து வாழ்ந்தா ரொள்ளழற் கருமத் தாலே. (அசா)

பொருசினக் கடுங்கண் யானைப் புரவல புகழான் மிக்க
பெருவளச் சிவபு ரந்தான் பெருந்துறை யெனும்பேர் பெற்ற
தொருவற வெடுத்துச் சொற்று முபதேச மலரோன் பெற்ற
வருமைசா றிறமு ரைப்பா மற்புதம் பயப்பக் கேணமோ. (அஎ)

பெருந்துறைப்படலமுற்றிற்று

ஆகத்திருவிருத்தம் எஅள.

---

# பிரமனுபதேசப்படலம்.

சீரடி யாள்செய் நிந்தையில் வெந்தை திருத்தக நாடொறு முண்டார்
பாரடி யுள்ளாக் கியகெடு மால்கொள் பாகமுள் ளார்க்குமீ னவனு
லோரடி கொடுப்பித் தார்கெடு மால்கொள் பாகமில் லேற்கொரு தாமே
யீரடி கொடுத்தார் ஞாயிறெங் கெழினு மெவனெனை விருப்பனியா னினியே.

திரிபுவ னத்தும் வாழ்பவர் மூன்றுச் செப்புகா லத்தொடு வாழ்வர்
தெரிதரு மவற்றுட் கிருதக மொன்று திகழ்கிரு தாகிரு தகமொன்
றரியகி ருதக மென்பதொன் றுதி யுரைத்தகா லத்தள வையினி
னரியரா மனுக்க ளொருபதி னுல்வ ரழிவரென் றுரைக்குமெந் நூலும். (உ)

ஒருபதி னுல்வ ரழிகிரு தகத்திற் குரைத்திடு மளவையா தென்னி
னிருசகத் திரமா மீரிரண் டிகெமென் றியம்புவ ரிவையொரு நாளா
மருவுமிந் நாளோர் பதினைந்தோர் பக்க மதியிரு பக்கமா றயன —
கருதிரண் டாண்டைம் பஃதொரு பரார்த்தங் கவாயிரு பரார்த்தமு மொழியின்

விதியவன் றபுமிந் நாட்பெயர் கிருதா கிருதக மெனவிளம் பிடுவோர்
மதியிது பிரமப் பிரளய மாகு மலரவர் கோடியோ ரிறப்பிற்
றதிமுகுந் தனுக்கோர் நாளந்நாட் கணக்கிற் றொக்கநா ளுண்டள வொழியிற்
றிதிபுரி யனையா னிறப்பனந் நாள கிருதக மென்றுசெப் பிடுவோர். (ச)

சறுவசங் கார மாவதந் நாளே சாற்றுமுக் காலத்திற் றேற்ற
முறுவன வெவையு மொடிப்பவன் காலாக் கினியுருத் திரனுடித் துயினை
மறுவொழித் திடுவான் கேவலத் தொடுக்கி மறுவலுஞ் சிருட்டியா திகளைப்
பெறும்வகை விடுப்ப னவனெவ னென்னிற் பெருந்துறை யான்மநா யகனே.

உரைத்தவிவ் வண்ணந் தோற்றமுற் றொடுகெகு மும்பர்கள் பலருளெவ் விடத்
வினைத்தலைப் துளவோ னுந்தியி லுதித்த விதியொரு கற்பத்தி லுகைக்கு [தும்
துரைத்தகுண் டையினு னருள்பெறல் கருதி நானிலத் தெத்தலம் புகலென்
றுரைத்தசிந் தையினோ டெங்கணுந் திரிவி யெய்த்தன னெகியே வருவான். ()

அடைதரு தொழிலை வெறுத்தவ னாகி யானந்த முத்தியை யடைவா
னுடைதிரை யொழியாக் குணகடற் கரையே யுறுவழி யாவியங் கிடுவான்
படைபரித துயர்தோட் பாண்டியன் புரக்கும பைதிரம் புக்கன னேக்கத்
தடையற மேலபா லிரண்டுகோ வதத்திற் றங்குமோ ரடவியைக் கண்டான். ()

கண்டவுவ் வடவி பேரொளி மயமாக் கட்புலப் படுதலு முவந்து
கொண்டவா தரத்தின் விரைந்துவந் தாங்குக் குறுகலு மவ்வுழி மறைந்த
தண்டமூ டுருவு மொளிமறைந் ததுநம் மபக்குவத் தாலெனக் கலங்கிப்
பணடவா வின்சொற் கலைமகண முனுளன் பதைபதைத தவனியில் வீழ்ந்தான்.

அய்யகோ வைய கோவெனக் கதறி யலரவ னிரங்குத னோக்கிச் [லிய
செய்யமே னியில்வெண் ணீறொளி விளங்கத் திருவரை வெண்டுகில் பொ
வையமா தரிக்குங் கண்மணி விளங்க வண்குழை யிருசெவி யுறவோர்
கையமெய்ஞ் ஞானப் புத்தகத் தொடுமோர் கையிற்சின் முத்திரை கவின.(கூ)

வேதபா துகைமேற் கொண்டெமை யாளும் வித்தகர் பெருந்துறை யான்ம
நாதர்தாங் காட்சி கொடுத்தனர் கண்ட நான்முக னவர்முனஞ் சென்று
காதர மடைநா னொரொரு நீயார் கவினுறப் பொலியுமிவ் வனமா
ராதரம் பயப்பத தோன்றிய வொளியா ரறைதர வேண்டுமென் றிரந்தான்.()

அன்னபோ தனையான் முதுகுதை வந்தெம் மான்மநா யகர்பெருங் கருணை
துன்னமா மையினின் றவனைநோக் கித்தோன் றுநீ சிருட்டிசெய் பவனியா
முன்னமே யுள்ள வான்மநா யகரிம் முனியிலா வனங்குருந் தவன
மென்னவோ துவார்பூ லோககை லாய மென்றுமோர் பெயரெடுத் துரைப்பார்.

ஒளியுரு வாகி யண்டமூ டுருவி யுனதெதிர் நின்றதும் யாமே
தெளியென நவின்று சாம்பவ தீக்கை செய்தெழுத் தைந்துமுன் னவின்றுங்
களிவளர் சமய தீக்கையாற் சரீர மடங்கலுஞ் சுத்திசெய் தருளிக்
களிவிசே டத்தாற் பிரமமந் திரத்தைக் கனிவொடு மருள்செயக் கணித்து. ()

அழல்விழி நோக்கி யேழுபா தலக்கீ ழமைந்ததன் பாதநீர்த் தத்தைக்
கழலுறு தெழுப்பி முன்னமே வைத்த கடுந்தழற் றீர்த்தத்துண் மேல்பா
லுழறவிர் கிணற்று நீர்மலர் மிசையோ னுவப்புட னாடிடப் பண்ணி
யெழலுறு சிறப்பி னினியதா யிலங்கு பிரமகா யத்திரி யிசைத்து. (கரு)

தத்துவ ஞான மார்க்கமே சாரத் தவாக்கரு ணையிற்பின்பு முன்மைச்
சுத்தவைந் தெழுத்தைத் துகளற நவின்று தோன்றுமித் தலத்துநின் வாழ்நா
ளொத்தவோ ராருடந் தவம்புரிந் தனையே யுளங்கரு தியதளிப் போமென்
றத்தனா ரமறைந்தார் மறைதலு மலரோ னங்ஙனந் தவஞ்செயல் குறித்தான்.

அல்லியங் கமல மளப்பறப் பூத்தே யலங்குறு சிறப்பமை சோந்தார்க்
கொல்லியம புனலுக் கழற்றிசை யமருங் குடவயிற் றுதவ முவக்கு
நல்லிளங் களிற்றை வணங்கிநீ ராட்டி நறியமோ தகமுத லூட்டிக்
கல்லிய வினையா னல்வரம் பெற்றுக் கரைந்தவத் தீர்த்தத்தின் மேல்பால, ()

தவம்புரி சாலை யினிதுறச் சமைத்துத் தனக்குப தேசஞ்செய் பரம
சிவன்றிரு மேனி காணுத லவாவித் தியானஞ்செய் தசைவற விருந்தா [ன்றி
னுவந்துமுன் னுரைத்த நாள்கழிந் ததற்பி னுமையொடும் விடைமிசைத் தோ
நிவந்தபல் கணமுஞ் சூழ்தரக் காட்சி கொடுத்தன னின்மலப் பெருமான். ()

சடையிளம் பிறையுங் கங்கையு நெடுமா றங்கையு மானொடு மழுவு
மிடையற வில்லாச் செங்கையு நெற்றி யிலங்குமுப் புண்டர நீறு
முடையென முயங்கு பெரும்புலித் தோலு முரகமா கியமணிப் பூணுந் [ன்.
தடையில்கூற் றுயிருண் டொளிகெழு தாளுந் தயங்கநேர் கண்டன னெழுந்தா

எழுந்தனன் குழைந்து விழுந்தனன் மீட்டு மெழுந்தனன் றிருமுன நின்று, செழுந்தகை மலாக்கை சென்னிமேற் கூப்பிச் சிந்தைநெக் குருக வெண் கணணுங், கொழுந்துவிட் டோங்கு மருவிநீர் பொழியக் குறிக்கொளாச் சிறியனேற கிருகாற், றொழுந்தகைக் காட்சி கொடுத்தருள் பெருமை சொற்றிடுந் தரத்ததோ வென்பான். (கஅ)

பனிமழை வெயிலால் வருந்துபு பன்னாள் படாபுனல் காலுணக் கொண்டு
முனிவவற் றமைத்தும் புதலொடு மிலதை மொயத்தபுற் றெழுவத னுப்பட்
டனிமர மெழுந்து வானளாய் நிறபத் தம்முரு வதனுளா வமர்ந்து
மினியமா தவஞ்செய் பவர்க்கருங் காட்சி யெளியதோ சிறியனேற கென்பான்.

எண்ணிலா மறையும வந்திய ராக விருப்பினு மெண்ணிலா வடியா
ருணணிலா வன்பிற் றுதிநனி புரிவ துலகெலா மாய்வளாந் திடினுந்
தணணிலா மௌலி வேணியா யடியேன சாறறிடுந் துதியுளோா சார
மண்ணிலா தெனினுங் கொள்ளுதல் கடனென் றட்டகம் புகலுவ தானுன்.()

வேறு.

சதது ரூபசொ ரூப நிர்க்குண தற்ப ரச்சுக வற்புத
சிதது ரூபக துரிய மேற்படு சிற்ப ரச்சிவ போகமு
நிததி யததனி யின்ப சாகர நின்ம லப்பத முத்தியு
மத்த சுததவ நாதி முத்தந லான்ம நாதவெம மையநீ. (உக)

இமப ரேத்திடு சத்தி பேதமி சைந்த நிட்கள பேதமும்
தம்ப மாய்த்திகழ சகள நிட்கள தன்மை மேவுத டத்தமு
மும்பர் போறுச தாசி வாதிப வுத்த யுத்தர்கள் பேதமு
மம்ப ரந்தபெ ருந்து றைச்சிவ வான்ம நாதவெம மையநீ. (உ௨)

எரி ணங்கும கேசு ரப்பிர வுத்த ரெண்ணதி காரமுங்
கூரி ணங்கயில் கொளளு ருத்திர கோடி யீசர்கள வாசமு
நார ணன்கொள்வை குந்த மேயநன் னலமுஞ் சத்திய வுலகமு
மார ணம்புகழ் சிவபு ரப்பர வான்ம நாதவெம் மையநீ. (உ௩)

மாக முற்றபு ரந்த ரன்பெறு வாழ்வும் வானவர் வாழ்க்கையும்
பாக முற்றிரு நான்கு திக்கும பரித்து ளாரமை யிட்டமு
மோக மற்றவ நேக சித்தர்கண் முனிவு பெற்றுள சித்தியு
மாக மச்சது வேத மாபுர வான்ம நாதவெம மையநீ. (உ௪)

சோரந்தி டாவலி கொண்ட சந்திர சூரி யர்க்குறு சோதியுஞ்
சார்ந்த சேய்புத னரசன் வெள்ளிச னிககி ணங்குரு ணங்களுஞ்
சேர்ந்த சத்தமு கிற்றி றங்களுந் திகழு டுக்கண ராசியு
மார்ந்த ருநுவ னத்து மேவுந லான்ம நாதவெம் மையநீ. (உ௫)

வழிப டுங்கலை கற்ற பன்னக மன்ன வன்சிர பாரமு
மெழில்கொ ளேழுல கேழச முத்திர மெண்ப ருப்பத நிலைகளுந்
தழிய மைந்தபல கோடி யண்டமுந் தாங்கு தாபர மாவது
மழிவில பூகயி லாய மேயந லான்ம நாத வெம மையநீ. (உ௬)

படிக்கு மாகம வேத சாத்திரப் பல்க லைப்பொரு ளாவது
முடிக்கு நால்வகை நடைக ளாற்பெறு முத்தி யின்பமு திர்ச்சியுங்
கடக்கொ ணுப்பவ சாக ரக்கரை காணு தற்கொரு மிதவையு
மடக்கொ ணுதெழு தேசு சால்வன வான்ம நாதவெம் மையநீ. (உ௭)

ஓபொ ருதத்தெழு கோடி மந்திர தேசு மிக்கவோங் காரமு
மேர்ப ரித்தபஞ் சாக்க ரப்பொரு ளாகி யெங்குமி ருப்பது
மோர்தி றத்தமை பிரம மந்திர வுறுதி யோடுமெற் றுள்ளவு
மார்ப ரசசிவ கேத்தி ரப்புர வான்ம நாதவெம் மையநீ. (உ௮)

இன்ன நற்றுதி யட்ட கம்பூசன் றேத்து மின்னிசை கேட்டனர்
சென்னி கம்பித மாக வுள்ளமு வந்து செங்கம லத்தனுக்
குன்ன முற்புரி வினைக ளியாவுமொ ழித்து நிலைபெரு ளுதவியே
மன்ன யத்தினெ டுத்த மெய்ப்பய னண்ணு மாறுபொ ருத்தினர். (உ௯)

வேறு.

எண்ணியகா ரியமுடிந்த தென்றுவிதி மிகமகிழ்ந்தா
னண்ணியநா யகர்மறைந்தார் நான்முகனும் வெருக்கொண்டே
யண்ணியமுன் கண்டவிடத் தணுகிநோக் கினனியாருங்
கண்ணியபைங் குருந்தொன்றே கண்டுதொழு தின்புற்றான். (௫௦)

குருந்தருவப் பெருமானார் விடைகொண்டு கோகனகத்
திருந்துலகம் படைப்பானே திமத்திவர்ந்து கணங்களுக்கு
விருந்துசெய்தன் னுலகடைந்து வெண்கமலப் பெண்ணோடும்
பெருந்துறையா ரடிக்கமலம் பேணிவாழ்ந் திருந்தனனே. (௫௧)

தனக்கமைத்த நாண்முழுதுந் தான்புரியும் படைப்பியற்றி
மனக்கினிய பெருமானா ருபதேச மறவாணாய்ச்
சினக்கமைமை முதலொழிந்த சீவன்முத்த னாயீற்றிற்
கனக்கருங்கண் டனைக்கூடிப் பரமுத்த னாய்க்களித்தான். (௫௨)

எழுநாவோன் புனலகமேற் கியைந்தகிணற் றுருவாகீர
முழுதாய மறைத்தீர்த்த மெனமொழிவ ரதின்மூழ்கிச்
செழுவேத முழுதுணர்ந்து வாதரா யணன்றிகழ்ந்தான்
பழுதாரா வதன்மேல்பாற் பண்ணினனவ் விதியொருநீர். (௫௩)

நீயவெலாந் தவிர்பிரம தீர்த்தத்துக் குடைந்தாடி
மேயசெபந் தபந்தானஞ் சிராத்தமவி திப்படிசெய்வோ
ராயவர்தாம் பெறும்பேற்றை யாமேயோ வறையவலலோம்
பாயதலை யரவிறையும் பகரமாட் டானென்னின். (௫௪)

மருத்தவிரா மலர்வாவி மருங்குடுத்து வளமோங்கும
விருத்தபுரி யெனுநகரில் விருத்தேச ராலயத்திற்
பொருத்தமுறப் பணிசெய்து போற்றிவரும் விருப்புடையான்
றருத்தகையந் நகாவாழ்வான் சம்புவெனு மொருமறையோன். (௫௫)

அந்தமறை யவனொருநேண் மதிமதிவா ரத்தமையப்
பந்தமறு திருவிளக்குப் பணிசெய்ய வொருகிண்ண
நந்தகறு விரையான நெய்கொண்டு நயந்தேகிச்
சந்தவிருத தேசர்திருச் சந்நிதியிற் போய்ப்புகுகான். (௫௬)

புக்கவன்பஃ றகழிதொறும் பொருந்தவாக் குபுதிரியிட்
டக்கணிமா லையருவக்கச் சுடர்பொருத்தி யவிர்தரக்கண்
டுக்கவிளை யவணுகி யுவந்துபணிந் தூறத்துதித்துத்
தக்கமனை யகம்புகுந்தான் கிண்ணமுந்தன் கைக்கொண்டே. (௫௭)

மட்டியலுங் கொன்றையார் மூரத்தளிபோய் வருகின்னைத்
தொட்டியசெய் சிறிதுணரா னிருந்தனனவ் வோருமறையோ
னெட்டியலு மூர்த்தியார் பொருள்கவர்ந்தா னெனுந்தோடங்
கிட்டியதோ ரணுத்துணையா யினுங்கேடு பயக்குமே. (௩அ)

அளந்தநாள் கழிந்திறந்தா னந்தகனூ ரிடைப்புகுந்தா
னுளந்தவாத் துயர்பெருக வுறுநரகெ லாந்துளைந்தான்
கிளந்தபா தகமேசடங் கெழுவலாற் கடலுடுத்து
வளந்தவாப் புவியகத்தும் வந்துபுழு வாசசனித்தான். (௩௯)

அந்தவுருப் பலநீங்கி யழகியப வானியொடு
சந்தமிகுங் காவேரி சங்கமமாம் பதரிவனது
தந்தவொரு மண்கேத் துருக்கொண்டா னக்காலை
முந்தவொரு கிழப்பருந்து முன்னியதைக் கவர்ந்ததால். (௪0)

உண்ணமுடி யாமனனி தூரமுறப் பறக்குங்கா
லெண்ணமுனம் புரியறத்தா லேற்றமாம் பெருந்துறைக்கட்
செண்ணமலர் நிறைபிரம தீர்த்தநேர் செலுங்காலை
யண்ணவினைத் ததுபருந்தாங் கப்புனல்வீழ்ந் ததுதவளை. (௪க)

அந்தநெடும் புனல்வீழ்ந்த வச்சமயத் தொருபாம்பு
முந்தவிழுங் கியததனை முயங்குறுபூ ணுக்கொண்டு
கந்தமலர் விண்பொழியக் கணஞ்செலுத்தும் விமானமிசைச்
சந்தமறை யவனிவர்ந்து தண்கயிலா யமபுகுந்தான். (௪உ)

தெரியாது கவர்ந்தபொருள் சிறியதினுஞ் சிறியததன்
பரிகார மிதுவென்னிற் றெரிந்துகவா பாதகத்தோர்
விரிவாய நரகமெலாம் விதியாயு ளுளமட்டுஞ்
சரியாது துளைந்தாலுந் துயர்நீங்குந் தரத்தரோ. (௪௩)

செறிபூமொய்த் தெழுபிரம தீர்த்தத்தின் பெருஞ்சிறப்போ
டறிவேதற் குபதேச மானதுரைத் தாமிதுமுற்
குறிஞான காண்டமெனக் கூறுவார் திருமால்வந்
தெறிபாசத் தவனுக வருள்பெற்ற தியம்புவாம். (௪௪)

பிரமனுபதேசப்படலமுற்றிற்று.

ஆகத்திருவிருத்தம் அ௩க.

---

# திருமாலுபதேசப்படலம்.

*தென்றிசை கொள்ளுங் கொள்கை சென்னிநாட் டுள்தலத்து
ளொன்றிசை யன்பெ ழுச்சி யுற்றவைம் பெயரி னுப்ப
ணின்றிசை யெழுத்தால் வேத னிருமித்த வெழுத்தை மாய்ப்பான்
றுன்றிசை பவஞ்ச நாமே லெழுத்தெனத் துணிந்து ளோமே. (௧)

தளர்விலா வனந்த கோடி சருவசங் கார காலத்
தளவிலாக் களேப ரங்கங் காளமா வநாதி மூர்த்தர்
வளர்புயத் தணிய மாய்ந்த மாயவ ரன்றிப் பின்போர்
விளர்தபு மாதி காலத தயன்பெறு விண்டு வென்போன். (௨)

தன்றிருப் பதும நாபி தனில்வரும் பிரமர் கோடி
பொன்றிடு கால மட்டும் பொலிதரப் புவன மெல்லா
நன்றுறத் திதிசெய் தன்ன நாளெலாங் கழித்துக் கங்கு
றுன்றிய விரவு முற்றுந் துயில்கொளீஇ விடிந்த பின்றை. (௩)

பொருந்துகண் விழித்துப் பார்க்கும் போதுதன் புண்டரீக
வருந்திரு நாபி மீதோ ரந்தணன் றோன்றி மேலா
வருந்தலச் சீவபு ரத்தின் மாதவ மியற்றி யின்பந்
திருந்துமெய்ஞ் ஞானத் தோடு சிருட்டியும் விடாது பெற்று. (௪)

சத்திய வுலக மேவித் தாமரைத் தவிசி லேறிப்
பதமெனப் படுமு டம்பு பலித்திடத் தனக்கு நல்கிச்
சித்தமெய்ப் பொருள்சால் சீவன் முத்தனாய்த் திகழக் கண்டு
புத்திரி னவன்பான் மேவிப் புயனிறத் தண்ணல் கேட்பான். (௫)

மைந்தனும் பிரம வித்த வாழ்வுனக் கார்கொ டுத்தார்
புந்திசெய் துரைத்தி யென்னப் புயனிறத் தவனை நோக்கித்
தந்தையாய் நீயெ னக்கு யான்றந்தை யாயு னக்கு
வந்திட வருளு முக்கண் வள்ளலார் தந்த தென்றான். (௬)

நன்றுரை செய்தா யென்று நளினயோ னியையு வந்தே
யுன்றனக் கருள்பு ரிந்த வுத்தமத் தலம்யா தென்னத்
தென்றிசைப் பெருந்து றைக்கேத் திரமென்று செப்பக் கேட்டாங்
கின்றுநான் சென்றுன் போல வின்னருள் பெறுவே னென்றான். (௭)

---

* தென்றிசை - அவாசி; கொள்கை - மதம்; தலத்துளொன்று - ஆரூர்; அன்பு - ஈரம்; எழுச்சி - ஏவு; இவற்றின் இடையேயுள்ள எழுத்துக்கள் வாதவூரர.

வாகமை யுனது வேத வாக்குரு ளென்று பெற்றுத்
தாகமோ டநாதி மூர்த்தத் தலமென விளங்கா நிற்கும்
பூகயி லாய ஞான புரமடைந் திரவோன் மேய
சேகரர் நுதற்கண் ணுஞற்செய் தீர்த்தநீ ரன்பிற் றோய்ந்து. (அ)

வெள்ளிய நீறு மேலோர் விரும்புகண் மணிதன் மேனி
கொள்ளிய வணிந்து நீழ லுவவாக்குஞ் சரத்தைப் போற்றி
வள்ளிய பீட மேவும் யோகநா யகியை வாழ்த்தி
நள்ளிய மால்கு ருந்த மூலத்தி னயர்ந்து வந்து. (கூ)

அட்டாங்க பஞ்சாங் கததோ டவனிமேற் பணிந்து போற்றி
யெட்டான மூர்த்தி யேயெண் குணத்தனே யிமையோர் வாழ்வே
சிட்டான வான்ம நாத தேசிகா சிவனே காவென்
றுட்டாகம் பெருக நையு முரிமைகண் டுவந்து நாதன். (கo)

குருந்தமர் கோலங் கண்டு கொள்ளுஞா னக்க னல்கிப்
பொருந்திய சமயா சாரப் பொருள்பெறு விசேட தீக்கை
பரிந்தருள் செய்து நீநற் பத்தியோ டுத்த ரததி
லிருந்தபிப் பிலத்தின் கீழ்ச்சென் றிருந்தவ மியற்றின் வந்து.. (கக)

வேண்டிய வரங்க ளெல்லா மிகமகிழ்ந் தருள்வோம் போவென்
றூண்டவன் புகலக் கேட்டே யாவயின் மகிழ்ச்சி யோடு
நீண்டசெஞ் சடையா பாத நெஞ்சுற நினைந்து கொண்டு
மாணடகு மரசின் டாறபோய் மாதவம புரிய லுற்றான். (கஉ)

அஞ்செழுத் தோங்கா ரத்தோ டல்பொடு சபித்து நெஞ்சக்
கஞ்சமீ தான்ம நாய கனையிரீஇப் புலனகண மாற்றித
துஞ்சலோ டுணவி லாது சுகாசன மிசையி ருந்து
விஞ்சுநல் யோக மாய மெய்ததவஞ் செய்ய லுற்றான். (கந)

நீலவெற் பசையா தொன்று நிலமிசை யிருததல் போல
மாலமை யோகத் தன்மை மலர்க்குருந் திறைவ னோர்ந்து
சாலவு மகிழ்ந்தம் மாயோன் றவம்புரி வைப்ப டைந்து
மேலெலாங் குளிர்ச்சி பொஙக மென்கையாற் றடவும் போது. (கச)

அமிழ்தநீ தளக டற்க ணழுந்திமே லெழுவான் போலுட்
டமிழுற வுணாந்தெ ழுந்து சரோருக நோகக னேகசி
யிமிழகுயின் மொழியாள் பாகன் குருவடி வியைக் கண்டாங்
கெமிதயத் துற்ற கோல மிதுவென விறைஞ்சிச் சொல்வான். (கரு)

வேறு.

பரனே கணங்கண் முதல்வா புரங்கொல் பகைவா புயங்க மணிவாய்
வரனே சிவந்த வடிவா துலங்கு மழுமா னமர்ந்த பிரியாக்
கரனே கரந்தை சிரமாலை கொன்றை கமழார்பொ ருந்து சடையா
யரனே குருந்த வனநாத நின்ற னடிசேரு மன்ப ருளுவாய். (௧௬)

இமையாரொ டியானு நனியஞ்ச வேலை யெழுநஞ்ச முண்ட திறலாய்
கமையாது மின்றி வருகாலன் மாள விறைநீள் கமழ்ந்த சரணா
வுமையாண் மணந்த மணவாள தந்தி யுரிபோர்வை கொண்ட வொருவா
வமைவார் குருந்த வனநாத நின்ற னடிசேரு மன்ப ருளுவாய். (௧௭)

தொழநேயம் விஞ்சி யறமேய வன்பர் துயர்தீர நின்ற சுடரே
தழன்மாழ்கு கின்ற திருமேனி கொண்ட தருவேதெ ருண்ட குருவே
பழகார ணங்கண் மிகுமாக மங்கள் பலநூலி னுஞ்சொன் முதலே
யழகார்கு ருந்த வனநாத நின்ற னடிசேரு மன்ப ருளுவாய். (௧௮)

பொருமார னங்க மனன்மூழ்கி வெந்து பொடியாக வென்ற விழியாய்
வருமோர் விலங்கி னுரியாடை கொண்ட வரதாவி லங்கை நகரா
ளொருபாத கன்றன் வலிபோய டங்க வொருதாண கங்கொ டடர்வோ
யருமாகு ருந்த வனநாத நின்ற னடிசேரு மன்ப ருளுவாய். (௧௯)

பெண்ணாத ரஞ்செ யொருபாக வங்கி பிணையேந்தி சண்ட னெனுமுக்
கண்ணாவி ருண்ட களநாத வன்பர் கருதுள்ள மேவ ரியசெவ்
வண்ணாம துப்பெய் துறவாசம வீசு மதலைத்தொ டைக்கு ரியனே
யண்ணாகு ருந்த வனநாத நின்ற னடிசேரு மன்ப ருளுவாய். (௨0)

வேறு.

இவ்வண மாவன் மிகத்துதி செய்திட வெழின்மேய
மைவண நீல மிடற்றிறை போக்கரு மகிழ்வெய்தி
யுய்வகை பெற்றிடு பஞ்ச தசாக்கரி யுபதேசந்
திவ்விய மாவருள் செய்து வினைப்பகை தீர்த்திட்டு. (௨௧)

எவரையும் வெற்றிகொ ளுந்திற முந்திரு வென்சத்தி
யவமினி றதத்க லாமலி ருக்கவு மழகார்ந்த
புவனமெ லாந்திதி யாணை நடாத்தவும் பொருவில்லாத்
தவமிகை யாலுறு மாதவ னென்றோர்த னிபபேரும். (௨௨)

சிந்தையி லன்பொடு தம்மை நினைந்திடு செயலுந்தந்
தந்தமி லின்பநி றைந்தமர் வாழ்க்கையு மருளாநஞ்
சந்திர சேகர நாதர்ம றைந்துயர் சதுவேத
மந்திர மாநகர் மேவிய மர்ந்தனர் மாயோன்பின். (௨௩)

ஈசனை னுக்கிர வித்தசெல் வத்தொடேமிதமேவ
வாசக ருன்றவ மாற்றிய தேத்தொரு ருங்கோயின்
மாசமை யாதவை நூந்தவி டத்தினும் வளமேவத்
தேசமை யும்படி செய்தமர் வுற்றான் திருவோடும். (உச)

### வேறு.

மாயவன் றவஞ்செய் தேத்து வைகிய தீர்த்தந் தானு
ராயண தீர்த்த மென்ப ரறிந்தவ ரதனிற் றோய்வார்
பாயமுப் பகையுஞ் செற்ற பண்பினு னுயர்மெய்ஞ் ஞான
மேயவ ராகி யெல்லா வினைகளும் வீட்டி வாழ்வார். (உரு)

கனைபொரு மணிமுத் தாற்றங் கரைக்கணோர் நகர முண்டா
லுனைபெறு குடிக ணான்கு மந்தக ரொருங்கு வாழும்
வனைவில்சம் பத்தி னோடு வைணவ வணிகனீர்சூழ்
தனைவெறுத் திடவுள் ளான்கே சவனென்பா னவ்வூர் வாழ்வான். (உசு)

அனையவன் கொடிய பாவக் குழிசியா யறிஞ ராகி
நினையவுள் ளவராய்ச் சைவ நெறிநிற்கு மேலோர் தம்மைத்
துனையநிந் திப்பான் சைவ துரோகத்திற் றலைநின் றுள்ளான்
புனையவாஞ் சிவால யத்துப் பொருளெலாங் கரவிற் கொள்வான். (உஎ)

தீயமா பாவி யிந்தச் செய்கையி னொழுகு நாளின்
மேயசம் பத்த னைத்தும் வீந்தன சுவாச காச
மாயதிப் பிணிமுன் னான வடர்ந்தன வமைத்த வாழ்நா
டேயவிவ் வுலக நீத்துத் தீநர குலகத் துற்றான். (உஅ)

ஆங்குவெந் நிரய மெல்லா மளப்பினா ளனுப வித்துக்
கோங்கிள முலையாள் பாக னுலயப் பொருட்கோ ளாய்
தீங்குநின் றிடுதே லாலச் சேடமுங் கழிப்பான் மண்மே
லோங்குவெம் புலையர் சேரி யிடையொரு ஞமலி யானான். (உகூ)

இழிதரு ஞமலி யானோன் பெரும்பசி யெழுந்து பற்றி
யொழிவற வருத்த வெய்ய புலையரு மொருங்கு மொத்த
வழிவுறீஇ யாங்கு நின்று மடுத்ததோர் வேடச் சேரி
கெழியின னங்குச் சற்றாண் டிடைத்துயி ரோம்பு நாளில். (௩0)

அனையவெஞ் சேரி வாழ்ந ரடவியொன் றடுத்து வேட்ட
வினைசெய றுணிந்தார் மேவும் வெய்யநாய்க் குலங்க ளோடு
துனையமற் றிதுவுஞ் சேர்ந்து சொல்லொணு விடுக்க ணுற்றுக்
கனைகுரன் மிருகம் வாழுங் காட்டகத் துற்ற தன்றே. (௩க)

செறியுமக் காட்டோர் கேழல் சினந்திதை முரீக்க வோடி
நெறிபல கடந்தெய்த் தேகா னிளவிட் டுலக மெல்லா
மறிபெருந் துன்றக்கண் ணேகா ராயண தீர்த்தக் கோட்டு
முறிவுற வந்தந் நீரின் முயங்குற வீழ்ந்த தன்றே. (௫௨)

வராகமு மொக்க வீழ மாய்ந்தன விரண்டு மப்போ
தராவணி கைலை யெம்மான் கணங்களை யனுப்ப வாங்கு
விராவிய கணங்க டெய்வ வுருச்செய்து விமானத் தேற்றிப்
புராதனக் கைலை யுய்ப்பப் பொள்ளெனப் போகுங் காலை. (௫௫)

நன்றியின் றிழிந்த தீய நாயுரு வொழித்த தேவன்
பன்றியி னுருவ நீத்த பண்ணவன் முகத்தை நோக்கி
யொன்றிய நமக்கச் சென்ம மொழிந்துயர் புற்ற தெவ்வா
றின்றியா னுணரு மாறிங் கியம்புவாய் கொல்லோ வென்றான். (௫௪)

தெரிந்தனன் புகல்வே னென்று செப்புவான் வராக தேவன்
விரிந்தநீர்த் தரங்க மார்கா விரிப்பெருந் தீரத் தோர்பாற்
புரிந்தபல் வளமார்த் தாண்ட புரமென்றோர் நகருண் டாங்குப்
பரிந்தபன் மறையோ ருள்ளோர் பனவன்யான் பாவி யானேன். (௫௬)

தினநசை யோடி யோடிச் சிராத்தபோ சனமே செய்வேன்
கனங்கர் கண்டன் கோயிற் பொருளெலாங் கரவிற் கொள்வான்
மனனமர்ந் தொருநாட் கஞ்ச பாத்திர மொன்று வவ்வித்
தனபதி யனைய நின்கைத் தந்தன னீயுங் கொண்டாய். (௫௬)

அந்தவே தவினை லியான்செத் தளவினு ணரகந் துய்த்து
முந்தவெங் கேழ லாகி முட்பயில் காட்டு ழன்றேன்
றந்தது மருமமே லேற்ற வணிகனுந் தகவி னீயு
நந்தவெந் நிரயத் தாழ்ந்து நாயுரு வானா யன்றே. (௫௭)

இருவரு மநேக கால மெரிபுணா துன்பந் துய்த்துப்
பொருவரும் பெருந்து றைக்கட் பொருந்துநா ராய ணப்பே
ரொருவருந் தீர்த்தத் தாழ்ந்தவ் வுருத்துறந் திவ்வா றானோம்
வெருவருங் கைலை சார்வா மினியென விளம்பி னானால். (௫௮)

எண்ணருங் கோடி கால மிருந்தவ மியற்றி னாலு
நண்ணருங் கயிலா யத்து நாயும்பன் றியுமா யுள்ள
தண்ணரு முருவ நீத்தார் சார்ந்துவாழ்ந் திருந்தா ரென்னிற்
பண்ணரு மரிதீர்த் தத்தின் பெருமையார் பகர வல்லார். (௫௯)

வாசித்த மலர்த்தார் மார்ப னுன்னவ திருமால் வந்து
பூசித்த வண்ணஞ் சொற்றும் புத்தியு ணிணைப்பார் பாவ
மோசித்த கருணைக் காலாக் கினியுருத் திரர்தா மூற்றி
நேசித்த திறத்துப் பூசை நிகழ்த்திய திறமுஞ் சொல்வாம். (௪0)

திருமாலுபதேசப்படல முற்றிற்று.

ஆகத்திருவிருத்தம் ௮௭௧.

# காலாக்கினியுருத்திரருபதேசப்படலம்.

*புதல்வியே சேய்மை தனக்கெதிர் மறையே பொருந்தவெள் ளிலைபுணர் கமுகே, யிந்நிலில் இனியே திரட்சியே செவ்வா யென்றனை செயுநில மகனே, முதல்விநம் மிறைமே னியிற்கொளும் பங்கே முகத்தலங் காரமாங் கணனே, சுதமிலிவ் வெண்பேர் நாப்பணெட் டெழுத்தெட் டெழுத்தெனிற் றோற்றமு முண்டே. (௧)

வேறு.

சங்கார காலமரி யயன்வாழ் வைப்புந் தருவுலகுந் திசைப்பாலர் தங்கு வைப்பும், பொஙகோத வுததிவரை புவிமற் றியாவும் பொடியாக்கி வெள்ளியநீ றெடுத்துப் பூசிச், சிஙகார வுருவமாய் நிற்குங் காலச் செந்தழற்பே ருருத்திரரா சிரியற் கண்டு, பொங்கார்வத் தொடும்பூசித் தருள்கொள் வான்றம் போனூற்றெட் டுருத்திரர்கள் புடையிற் சூழ. (௨)

செஞ்சடா மகுடம்விரிந் தொளிர நாகச் செம்மணிக்கங் கணம்விளங் கச் செறிபூங குல்லை, கஞ்சநா றியபஞ்ச வடிவி ளங்கக் கரும்பன்றிக் கோடா மை யோடு தூஙக, விஞ்சுதலை மாலையெலும பணிகு லாவ வேன்மழுவா ணேமிதண்டு சூலந் தோட்டி, யஞ்சரோ ருகக்கையமை தரச்சி லம்பொள் ளடியலம்ப முக்கண்ணும் விராவி நிற்க. (௩)

நெடுங்கழுத்துங குறுந்தாளும் பருத்த கையு நீளுகிரும் பிறையெயிறு நான்ற வாயு, மொடுங்கலில்பங நித்தலையுங் குழிந்த கண்ணு முயர்மார்பும் பெருவயிறு மொன்று ரஞ்சுங். கொடுங்கொலைச்சூ லமுங்கபா லமும்வி ளங்கக் குழையசைய வுடைதுவளக் குதித்துத் துள்ளி, யடுங்கனத்தி னிடிமுழக்கு மஞ்சப்பாடி யாடியெண்ணி லாப்பூதப படைக ளெய்த. (௪)

* புதலவி - குமாரி; சேய்மைதனக்கு எதிர்மறை - அணிமை; வெள்ளிலை புணர்கமுகு - பாக்கு; இனி - சுகம; திரட்சி - கவான்; நிலமகன் - குசன்; பங்கு - பாகம்; கண் - பார்வை; இப்பெயாகளினிடையேயுள்ள எழுத்துக்கள் மாணிககவாசகா.

துந்துபிகா களமபூரி மணிசே கண்டி துடிமுரசு பமபைசின்னந் தடாரி பேரி, மொந்தைகல்ல வடந்தக்கை முழவு வீணை முருடுமுதற் பல்லியமு மிய ம்பா நிற்கச், சுந்தரவெள் விடைக்கொடிமுன் போத மற்றுஞ் சொல்லாத சின்னமெலாந் துவன்றி மொய்ப்பக், கொந்தலர்பூம் பொழில்புடைசூழ் சிவபு ரத்தைக் குறுகியஙகண முன்னமைந்த கோல நீஙகி. (ரு)

சாந்தகுணத் தவவுருவங் கொண்டு நீறு தரித்துருத்தி ராக்கமணி தலை தோண மார்பு, வாய்ந்தகரத் திடைமருவப் பூண்டு குந்த வனததினுக்கு மாற ளிக்கும் வடகீழ்த் திக்கி, லேய்ந்துவளர் மகிழ்வனத்திற சாலை செய்தாங் கிருந் துபஞ்சாக் கரசெபத்தோ டிடைவி டாமற், பாந்தளணி பெருந்துறைச்சிற் பரன்குரு ணைஞசிற் பதித்துமிகு தவஞ்சிலநாட் பண்ணுங் காலை. (சு)

சதுவேத புரமேவு மான்ம நாதர் தவம்புரிசீ லத்தமைகா லாக்கி னிப் பேர், முதுவாய்மை யுருத்திரருக் கருள்வா யென்று முந்துபுதம பெருஙகருணை யுந்த லாலே, கதிமேய விடையேறி யொருபால் யோகக் கன்னியமர்ந் திடச் சடைமேற் கலைவெண் டிங்க, ணதிபோகி தலைமாலை கொன்றை தும்பை நக் கக்கூ விளந்தாவை யெருக்க ளாவ. (எ)

திருவிறிரு முகக்கருணை யொழுகச் செவ்வாய்ச் சிறுமுறுவ லொளிரமி ளிர் வளைத்தோ டாட, வரியரவும் புரிநூலு மிதழித் தாரு மணிகெழு பொற் பணிபலவு மார்பின் மின்னக், கரியவிடத் திருநீல கண்ட மியாருங் கைகு விக்கும் படிவிளங்கக் கரங்க ளான்குந், தெரிமறிமான் மழுவபய வரதந் தாங் கத் திண்புலிததோ றிருவரைமேற் செறிந்து நால. (அ)

வேசமுருத் திரிந்தபரி புரமபொற் றுண்மேல் வீழந்தலற மலரவன் மால் விண்ணோ ரேததப், பேதமிலா முனிவராகிம புருடர் சிததர் பிறங்குநா ரதா முதலோா புகழ்ந்து பாடச், சீதமதிக குடைகவிப்பப் பதங்க ரெங்குஞ் சிறந்த வொளி விளக்கெடுப்பத் திசைகாப் பாளர், போதமணி யடைப்பைமுதற் பல வுந் தாங்கிப் போதநறுங் கற்பகம்பூ மாரி பெய்ய.

கணநாதர் தொண்டரெலா மிருகை கூப்பக் கனிந்துளாகரு மரவொளி யேழ் கடலிற் பொங்க, மணநாறு மிளந்தென்றல வந்து லாவ மாமுகில்கள் விதானமிட மகிழ்ந்து நந்தி, குணமார்கட் டியங்கூற வெயிலு வந்த குஞ்சரமா முககன்றுங் குமரவேளுந், தணவாமூ டிகமயின்மே லிவாந்து முன்போ தர வெளியே வழியாகச் சார்ந்து வந்து. (கo)

மகிழ்வனததிற் றவம்புரியு முருத்தி ரேசர் மனமகிழ்ந் திருக்காட்சி வழ ங்குங் காலை, நெகிழ்தருகண் மலர்குளிரக் கண்டெழுந்து நிலமீது வீழந்தி றைஞ்சி நிகர்த ராவன், புகிழ்யவிழ்த தெனவளர வாடிப் பாடிப் பொலிந்திரு கண் மழைபொழியப் புளகம் போர்ப்ப, முகிழுறுகை செஞ்சடா முடிமேற் செல்ல முன்னின்று தோத்திரங்கண் மொழிவ தானார். (கக)

அடிகளெனீ ரொன்றுமிலா முதலே போற்றி யகண்டபூ ரணஞான வமுதே போற்றி, முடிவில்வெளி யெனநிறைந்த வெளியே போற்றி முத்திக்கு வித்தாய வொளியே போற்றி, வடிவெழுத லரியபெரும் பொருளே போற்றி மறைமுடிவு மெட்டாத மணியே போற்றி, நடியெனவன் பினர்வேண்ட நடிப்பாய் போற்றி நறுமலர்ப்பூங் குருந்தவன நாதா போற்றி. (கஉ)

காதமரும் வண்சங்கக் குழையாய் போற்றி கைலாய மலைமேய கடலே போற்றி, சீதமதிக் கொழுந்தணிந்த சடையாய் போற்றி, திரிபுரமு நீறெழமுன் சிரித்தாய் போற்றி, பாதமலர் கொடுநமனை யுதைத்தாய் போற்றி பங்கயத்தோன் றலையரிந்த பரனே போற்றி, நாதவுரு வேதவுரு வானாய் போற்றி நறுமலர்ப்பூங் குருந்தவன நாதா போற்றி. (கங)

தேனமருங் கொன்றைமலர்த் தாராய் போற்றி சித்தசனை யழற்குணவு செய்தாய் போற்றி, மானமர்செய் மழுவிருகை பொறுத்தாய் போற்றி வரிசிலையா மாமேரு வளைத்தாய் போற்றி, போனகமா விடமுண்டும் பொலிவாய் போற்றி பொற்பொதுவி னின்றுநடம் புரிவாய் போற்றி, ஞானவொளி யாய்விளங்கு சுடரே போற்றி நறுமலர்ப்பூங் குருந்தவன நாதா போற்றி. (கச)

இச்சையின்றிப் பிச்சைகொண்ட விறைவா போற்றி யேழுலகுங் கடந்துநின்ற வெளியே போற்றி, கச்சையென வரவசைத்த கடவுள் போற்றி கதிகெழுவெள் விடைவருமுக் கண்ணா போற்றி, பச்சையொடு பவளநிறம் படைத்தாய் போற்றி பசுபதியா மனாதிமுத்தப் பரனே போற்றி, நச்சையமு தாக்கியன்பாப் புரப்பாய் போற்றி நறுமலர்ப்பூங் குருந்தவன நாதா போற்றி.()

ஓமவழற் கிறையோமுட் பொருளே போற்றி யோகநா யகிபுணருத் தமனே போற்றி, தாமரைக்க ணொன்றணிந்த சரணா போற்றி சக்கரமால் வேண்டவருள் டலைவா போற்றி, மாமனென விமாசலத்தை மகிழ்வாய் போற்றி மலைமகளை மணம்புணர்ந்த மணியே போற்றி, நாமவெழுத் தைந்துணர்த்துங் குரவா போற்றி நறுமலர்ப்பூங் குருந்தவன நாதா போற்றி. (கசு)

வேறு.

இப்படிநற் றுதிபுரியு மிசைகேட்டு மனமகிழ்ந்து
செப்புமழ லுருத்திரர்க்குத் திருநோக்காற் றீக்கைபுரிந்
தற்புதச்ச டாக்கரத்தோ டகோரவுருத் திரமனுவு
மொப்புயர்வொன் றில்லாத வுபதேசஞ் செய்தருளி. (கஎ)

ஐந்தமையுந் தொழிலினொ டியாவதொழி லுனக்குமுனந்
தந்ததவர்த் திதிதிருக்கச் சகலவர முங்கொடுத்தோ
மெந்தமருட் பதத்திலுதித் திறுசெய்கா ளொடுங்குதலா
லுந்தனக்கு மலமாயை யொடுக்கமிலை யென்றுணர்த்தி. (கஅ)

நீயேகாம் பேதமெனாநிகழ்த்துதலொன் றிலையுனக்குத்
தாயான திரோதவருட் சத்தியே யுன்கோப
மாயாத பேர்கபமோ குணமென்ப ரத்தனையும்
வீயாத பல்லுயிர்கண் மேவுமலம் விடுப்பதற்கா. (க௯)

களிம்பகற்றப் பொன்சுடுவோர் கணக்கெனநீ கொண்டதுவாம்
விளம்புமல மற்றவுயிர் மேற்கருணை யுனக்குமுண்டா
மளர்தறியா மலவுயிர்கட் கதிகாரி நீயேயாக்
துளங்கலிலாச் சங்காரத் தொழிலொடுவாழ்ந் திருசுகத்தே. (௨0)

நச்சும்வர மினியுனக்கு நம்பால்வேண் டுவதுணடே
லச்சமற வுரைத்தியென வஞ்சலித்தென் னுளத்துன்றுள்
வைச்சிருக்கும் வரம்வேண்டு மஃதன்றி மாண்புடையாய்
நிச்சயமா வினுமொன்று வேண்டுமது நிகழ்த்துவன்கேள். (௨க)

அடியனேன் றவமபுரிந்த வித்தானத் தடிகேணன்
கொடிதராச் சிவலிங்க வுருவாதல் வேணடுமய
லிடியவோர் சிவகங்கை யெனப்புகறீர்த் தமும்வேண்டுங்
கடியபூ வாதிகொண்டியான் கனிந்தருச்சித் திடல்வேணடும். (௨௨)

நலம்பொலியுங் கயிலாய நாதனென வொருதிருப்பேர்
நிலம்பொலியும் படியடிகே ணீபூண்டு கொளல்வேண்டும
வலம்பொலியு மூனைக்கண்டு வணங்கிவாழ்த் துநரெல்லாம்
பலம்பொலியும யாவையுநன் கனுபவிக்கும் படிவேணடும். (௨௩)

இந்தவர மருளுகென விலிங்கமுந்தீர்த் தமுமாங்குச்
சந்தமுறத தோற்றிமறைந் தொருகுருந்த வனஞ்சார்ந்தா
ரந்தமிலாப் பெருகருணை யானமநா யகரிப்பாற்
கந்தமல ராதிகொடு பூசிக்குங் கடன்பூணடார. (௨௪)

வனைத்தபுகழ்ச் சிவகங்கைப் புனலாடி மகிழடியின்
முனைத்தவொரு சிவகொழுந்தை யத்தீர்த்த முகந்தாட்டி
வினைத்தமது மலர்சூட்டி விரும்புநிவே தனமூட்டித்
தினைத்தமகிழ்ச் சியிற்றூப தீபமுங்கோட் டினர்மாதோர். (௨௫)

பிரியாம லுடன்வந்த பெருங்கணநா யகர்மலர்மா
தரியாதி வானவர்க ளாராயு முனிவரர்க
ளுரியாராஞ் சித்தாமுத லோதும்பெருந் தவத்தரெலாஞ்
சரியாத வன்பினராய்த் தாந்தொழுது பூசித்தார. (௨௬)

ஏத்துதிரு மகிழடிக்கீ ழிவ்வண்ணம் பூசித்துச்
சோத்தனடி யோமென்று குருந்தடியும் போய்த்தொழுது
வாய்த்தவுருத் திரரண்ட முகட்டினிற்போய் வாழ்ந்திருந்தார்
சாய்த்தவினை மற்றோருந் தத்தமிடம் போயமர்ந்தார். (உஎ)

விளைத்தமலர் மகிழடியில் வீற்றிருக்கும் பெருமானை
யுளைத்தவிதிப் படிபூசை யுபகரணத் தியற்றுநரும்
புனைத்ததுதி புரிகுநரும் புந்தியுற நினைக்குநருந்
திளைத்தவினைக் கடல்கடந்து சிவலோகத் தின்புறுவார். (உஅ)

மதியுதய மதிவார மதிகதிரை யாரக்கவர்நா
ளதிபலஞ்செய் பிரதோட மாதியவாய்ப் பூசிப்போர்
துதிகயிலை புகுவர்சிவ கங்கையுறத் தோய்வாரும்
பதிகருணைக் கிலக்காகிப் பரலோகத் தின்புறுவார். (உகூ)

கனசவுராட் டிரதேயக் காளிந்திக் கரைவில்வ
வனமெனுங்ஷேத் திரம்வில்வ வனநாத ரெனப்புகலு
மனகருள ரவரமரு மாலயத்திற் பணிபுரிவான்
றனமுனெவற் றினும்வாஞ்சை சற்றேனு மில்லாதான். (௩0)

அந்தநக ரிடையேற்கு மையத்தாற் பசியொழிப்பான்
பந்தமென லணுகாத படியொழுகும் படிமத்தான்
சிந்தலிலாச் சிவநேயஞ் செறிபண்டா ரம்பொருவான்
வெந்தமடி போலமர்வான் விரூபாக்க னெனும்பெயரான். (௩௧)

அன்னவன்றன் சீலமுழு தறிந்தநா டினிதோம்பு
மன்னவனோர் வரவழைத்து மறையவர்தங் குலமணியே
நன்னயமார் வில்வவன நாயகாகோ யிலையோமப
வென்னருகின் பேரலாகா ரென்றுசிறப் புறத்துதித்து. (௩௨)

அன்னதளி முழுதோம்பு மதிகார நடத்திவர
னின்னதெனக் கொடுத்தனம்யா நேர்ந்துகரங் கோடியென
மன்னவன்பல் காலிரப்ப மறுத்தனன்மற் றமைச்சாமுனோ
ரென்னருஞ்சொல் வார்த்தையினு லேற்றுமீண் டன்னமாதோ. (௩௩)

கதிருதய மெழுமுனமைங் கன்னலெனத் துயிலுணர்ந்து
பிதிர்தலின்மெய்ச் சுசியாற்றிப் பிறங்கியவெண் ணீறணிந்து
மதியமையுக் தலத்தடைந்து மலசலநீத் தருநூல்சொல்
விதியமையுங் கோன்மென்று மென்றுமிழ்ந்து தூயவனாய். (௩௪)

தளிமூன்று மிலக்குமிதீர்த் தம்படிந்து நீறணிந்து
களிசெயுங்கண் மணிபூண்டைந் தெழுத்துமுளத் துறக்கணித்தே
தெளிதருமா லயம்புகுந்து வில்வவனச் சிற்பரனை
யெளியவர்பங் காங்காருண் ணியவதியைப் பூசித்து. (ருரு)

தழையவதி காரஞ்செய் தானத்தி லினிதமர்ந்து
விழையவரு சிவத்துவிசர் முதலோரை விளித்துமனங்
குழையவவா முகநோக்கிக் குறைவின்று வுபுமுடித்துப்
பிழையமையா விதநடத்தும் பெருந்தொழிலிற் றலைநின்றான். (ருசு)

பொறையொன்று திருமனத்தான் விலவவனப் புராதனராம்
பிறையொன்று சடையார்த மாலயத்துப் பேணுதொழிற்
குறையொன்றும் வாராது நடாததுபுகொள பொருளிலள
விறையொன்றுங் கொளானீறே யேற்றைய மேற்றுண்பான். (ருஎ)

சிலர்பாற்போய்ப் பாற்பசுக்க டெவ்வுபுசேர்த் தனன்றளிக்காச்
சிலர்பாற்போய் நந்தவனஞ் செயநிலஞ்சேர்த் தனன்கவர்ந்து
சிலர்பாற்போய்ச் சோலைவளஞ் செறிதரக்கைக் கொடுவிட்டான்
சிலர்பாற்போய்க் கொண்டுவிளை நிலமேன்மே லுஞ்செறித்தான். (ருஅ)

சீலங்கொள் விரூபாக்கன் சிறந்தவதி காரத்திற்
காலங்கொள் பூசையினுற் கருதுபல விழாவினு
லாலயங்கொண் மிடற்றுருக் கமுதாகுரு சிறப்பினுற்
கோலங்கொ ளொன்றாலுங் குறையிலையென் றிறைமகிழ்ந்தான். (ருகூ)

மிக்கமகிழ் மேவுதலால் விரூபாக்கன் றனையழைத்துத்
தக்கமணிப் பணிகாம்பு ஷரணிபுகழ் நேத்திரங்க
டொக்கபல்பாத் திரம்விளைநன் னிலமாதி துன்னுரூர்
நக்கழலாக் கினர்க்கென்றே யிறைகொடுத்து நலஞ்செய்தான். (சுo)

இந்தவித மொழுகுநா ளெங்குஞ்சென் றையமெடீஇப்
பந்தமற வுணனுமவிரூ பாக்கனுக்கு மூப்புவா
நந்தவுட லந்தளர்ந்து நரமபெலும்பு வெளிப்பட்டுச்
சந்தமுற நடக்குநடை தடுமாறக் கோல்கொண்டான. (சுக)

உணவொழியத் தளாகாலை யுமாபதியா லயத்துள்ளா
லணவுசிவத் துவிசனத்தி யயனஞ்செய் வான்கரணன்
பணமலிகோ சங்காப்பான் பாகஞ்செய் வானுகத்
தணவருமை வருநகூடி விரூபாக்கன் றனைசசார்ந்தார். (சுஉ)

ஐயுறே மூப்பினு லலசினி ரலைந்தமுது
செய்யமுடி யாதினிமேற் சிகரிமடத் திடையமர்ந்தா
னுய்யநா மொவ்வொருநாட் கொவ்வொருவ ராக்கொணர்ந்து
வெய்யதா வமுதுசெய் விரும்பியுத வுவமென்றார். (௫௩)

ஆயவிரு பாக்கனுமற் றவ்வார்த்தை தனக்கிசைந்து
பாயமடத் தமர்ந்தான்மேற் பன்னியலை வருமிக்க
நேயமுட னெவ்வொருநாட் கொவ்வொருவ ராகிரம்பத
தூயவமு தளித்துவந்தார் தொலைந்தனவிப் படிப்பன்னாள். (௫௪)

சோறுச்மா தலுத்தாரித தொழினமக்கே லாதென்று
மாறுபடு மனததாராய் மற்றொருநா ளவன்பால்வந்
தூறுதவிர தாயாங்க ளுதவுவதி லொருநாள்போ
லேறுதவத் தீர்நடக்க வருததமுறு மாலின்னும். (௫௫)

ஆறிப்போஞ் சமைத்தவெலா மதுநுகரி னோயின்மை
மாறிப்போம பிணிவந்து மூப்பினிடை வருத்துமேல்
வீறிப்போம் பெருந்தவத்தீர் மேன்மேலு மபராத
மேறிப்போ மெங்களுக்கொன் றியம்புதல்கொள் வீரெனறா. (௫௬)

நீர்தேடி வைத்தவிளை நிலமுழுதுந் துரோணமலர்
கார்போலு மெனவெண்ணெ ணனிவிளையுங் கமழ்சோலை
யோர்சாலின் கனிகாய்மற் றினுமுதவும் பசுக்களெலாம
பார்சோரப் பால்பொழியும் பாயமடைப் பள்ளியிடை. (௫௭)

ஒருவனைவைத் தெண்ணியவா றடப்புரிவித் துண்பதுவே
பெருநலனென் றாகேட்ட விருபாக்க னதுபேணி
வெருவலிலா முன்புரிதீ வினையினு லுடன்பட்டான்
மருவியமற் றவர்போனா மதிவழிசசெய் துணடிருந்தான். (௫௮)

சின்னாளிப் படியுண்டு தீராநோய்க் கோட்பட்டு
முன்னுவெந் துயரழுந்தி முதுமறையோ னிறந்தொழிந்தான்
றென்னுமக் கடுங்கூற்றின் றமர்கொடுபோய்த தீவிடமு
மன்னுவெந் நிரயமெல்லாம் புகுத்திவருத தினர்மாதோ. (௫௯)

எண்ணிறு ணிரயமெலா மனுபவித்து மீறாகாக்
கண்ணில்பா தகத்தாலே காவிரிநாட் டொருகிளியூர்ப்
புண்ணில்வாய் வைத்துழலும் புலையர்சே ரியினுழனாய்ப்
பெண்ணிலோர் பெண்ணுயாய்ப் பிறந்தனன்வா தனைப்பவோன். (௬௦)

புலையர்மனை யுட்புகுந்து புலாற்பாண்டம் வாயில்வைத்து
நிலைகுலைய வவர்மொத்த நெடுந்தூரங் குளாத்தகன்றே
யுலைவுமிக விவ்வண்ண முழிதருநாட் கருக்கொள்ள
வலைமுனவி லைவாகளு மடிந்துபற மாயுதித்தார். (௰க)

முடிவெல்பற ழாயுதித்த வழுவருளு முதுமறையோன்
வடிவமையு மிழிசென்ம நூறெடுத்து மாய்ந்துமாய்ந்
திடுகுமொரு புலைச்சேரி யிடைப்புலைய னுய்ப்பிறந்தான்
கடுமுதலை யாய்ச்சிவகங் கையிற்பிறந்தா னைவர்களும். (௰உ)

புலையுருக்கொண டவனெடுநாட் போகாத துயரமுழந்
தலைபுனனு டகன்றுதென்னு டணையவரு காலளவா
விலைமலர்செற் றியகுருந்த வனநோக்கி யெய்துவான்
மலைவின்முனல் வினைதழுவ மகிழ்வனத்தி னிடைப்புகுந்தான் (௰௩)

முதுவேனில் வருத்தமுற மூச்செறிந்து வருபுலையன்
சதுவேத புரவடகீழ்த் தங்குமகிழ் வனத்தருகு
மதுவேயு மலர்ப்பொய்கைச் சிவகங்கை வந்துவீழ்ந்
திதுவேகம் முயிர்காப்ப தென்றுதுளை தருகாலை. (௰௪)

ஐந்துபொறி யலைப்பதுபோ லைந்துமுதலையும்பற்றி
நைந்துசித றிடவுறுப்பு நலியவவ னுயிராமாய்ந்தான்
வந்துபர சிவனருளாற் கணநாதா மானமிசை
நந்துசுர வுருநலகி யேற்றிநடந் தனரமமா. (௰௫)

மானமிசைச் சென்றவவன் வளைகயிலா யம்புகுந்தாங்
கீனமில்பல் போகமுந்துய்த் தினிதிருந்தான் சிவகங்கை
யானதடத் துதித்தசிறப் பான்முதலை யானவருந்
தானவுல கடைந்தரங்குத கவிரபோகந் துய்த்திருந்தார். (௰௬)

இரும்புலைய னுனலு மெண்ணுது படிந்தாலும்
பெரும்புவன மேத்துகயி லாயபதம் பெறகொடுத்த
தரும்புமலர்ச் சிவகங்கை யமமட்டோ முதலைகட்குஞ்
சுரும்படையாக் கற்பகப்பூஞ் சோலையுல களித்ததால். (௰௭)

பத்தியுட னடைந்தொருவர் பகரும்விதிப் படிமூழ்கிச்
சுத்திதரு நீறணிந்து தூய்தாங்கண மணிபுனைந்து
சத்தியனைந் தெழுத்தெணணி மகிழடியார் தமைப்போற்றின்
முத்தியடை குவரென்றே மொழியவும்வேண் டுவதேயோ. (௰௮)

போதவுருத் திரரடைந்து போற்றுதிற மெடுத்துரைத்தா
மோதவளம் புவியுவப்ப வொள்ளியசெந் தமிழ்பொலியப்
பாதகங்கள் பறந்தோடப் பரசமயர் தமொற
வாதகக ரடிகளவ தரித்ததிறம வகுததுரைப்பாம். (௫௧)

காலாக்கினியுருத்திரருபதேசப்படலமுற்றிற்று.

ஆகத்திருவிருத்தம் ௬௩௦.

# திருவாதவூரர் திருவவதாரப்படலம்.

முடியார்கொள் பெருமானும வாதவூா முனிவரரு
மடியாரு மாண்டானு மாயமுறை யினரவரைக்
கடியாரா யடைதருவார் கலந்துநுக ரின்பத்தோர்
படியாரே யெனினவருக கென்னமுறை பகர்வாம்யாம். (௧)

வளைவளைய நடுப்பொலியு மாநிலமா மடக்கொடிக்குப்
புரையிறிரு முகமாகும் பூழியாகோ மான்றிருநா
டுரைசெயுமய முக்ககணணு யொளிதருங்கா விரியினுநீா
கரையறமே லெழுமவையைக கரையுளதாம வாதவூர். (௨)

இழைகாட்டு நுண்ணிடையா ரெழில்காட்டும பொழிலெங்குங்
குழைகாட்டு கறுஞ்சூதங் குயில்காட்டு மயிலகாட்டுந்
தழைகாட்டு மற்றுமுள தடைஞ்சினைகள் வயலனைத்துங்
கழைகாட்டும் பொய்கைமின்னூர கண்காட்டுங் கயல்காட்டும. (௩)

கடுத்துவரு புனல்வையைக் கரையுயரக கடிதலைக
ளெடுதெறியு மணியஞ்சி யிரிந்தோடு மோட்டெருமை
படுதொருவா வியிற்பாய வாயகுவரால் முட்டிடப்பால
விடுத்துமிதந் திடுமொருபால் வெள்ளமிதந் திடுமால்போல். (௪)

வேலியென மிடைகரும்பி னடுப்பாகம் விளைகதிர்ச்செஞ்
சாலியறை தரச்சூசி தாந்துளைதத தணடனைத்தாய்
வாலியசா றொழுகவிடப் பெருகியது மடையுடைத்துக்
கோலியவெவ குமபரவுங குறிககுமொரு கடலேபோல. (௫)

மழைபொழிவ தெனநாளு மதுப்பொழிவ மலர்ச்சோலை
தழையுமுகிற் கொடியென்னத் துகிற்கொடிதங் குவதொச்சி
யிழையுமலை மாறுபடுஞ் சோறுபடும் வியன்மாடங்
குழைவின்மத னெனப்பொலிவார் வுனப்பொலிவா கழன்மைந்தர். (௬)

இழைமணிமங் கையர்கடையு மிட்டிடையு மொருபிடியே
குழைநிகர்வ தூஞ்செவ்வாய்க் கொழும்பாட்டும் வள்ளையே
மழைநிகணாம் பான்முன்கை மருவியொலிப் பனவண்டே
விழைவுறுமா லையுமுள்ளம விரும்புமா லையுங்கற்பே. (எ)

இருள்காட்டுங் கரியகுழ லெரிமணிப்பூண கிழக்குதயப்
பொருள்காட்டு மறையோர்முற் புந்திசெய்நால் வரும்புனைந்த
மருள்காட்டுந் தரமுணரா மாநீறு மதிக்கிரணத்
தெருள்காட்டு மெனினிரவுந் தினகரனு மதியுமிகை. (அ)

ஊடலெடுத் தெறிமுத்த மொள்வயிர மாணிக்கங்
கூடல்கொள்வீ திகளுவர்நீர் கூடாத கடலொக்கும்
வாடலின்மா லையுஞ்சாந்து மான்மதமு முறலகொளவா
ளூடலமை தரப்பரப்ப னயந்தவா வணம்பொருவும். (கூ)

வேதநனி முழங்கொலிக்கு மிக்கவா கமமாமபல்
பேதநனி முழங்கொலிக்கும் பெருமகனூ ரியவொலிக்குங்
கீதநனி முழங்கொலிக்குங் கெழுகளிறு திகளொலிக்கு
மோதநனி முழங்குமொலி யொவ்வாதா லொவ்வாதால. (கய)

வாதவூர் மறையொழுக்க மலலான்மற றென்றுமரு
வாதவூ ரடைந்தாரை மலக்குரம்பை யகத்தினிரு
வாதவூர சிவானந்த வாரியிடை யழுததலொரு
வாதவூ ரெனப்புகலும் வாரதைவா னிடத்துமுள. (கக)

ஒளிகெழுதற் குறுபெயர்கொண் டுலகமெலாம் வழங்குமொரு
வளியுதவ லிரண்டெனவுண் மதித்துதவல் கற்றென்ன
வளிமருவ விம்மைமறு மையுமடைந்தாரக் களித்துவக்குந்
தெளிமருவு பன்மறையோர் செறிந்ததிரு வாதவூர். (கஉ)

சோணாடு தலைசிறப்பத் துதைபிரம புரமெனவும
வேணாடும் வனப்புடையா மிடைந்ததிரு நடுநாட்டின்
வாணாடு நாவலூர வளர்திருவா மூரெனவு
காணாடு மதிவழியோ னாட்டுளதவ் வாதவூர. (கந)

புத்தர்முதற் பல்சமயப் பொய்க்குழிவீழ்ந் துழல்கின்ற
மத்தர்நினை தோறுநினை தோறும்வாய் வெரீஇத்தாழ
வத்தர்தொழும் பியற்றியாங்க ணினைதோறு மகமகிழ்ந்து
முத்தரினுங் களித்துயர முளைத்துளதவ் வாதவூர. (கச)

சிறவாத நெறியகற்றிச் சிறந்தநெறி யினைநிறுத்தி
மறவாத வன்புகொடு மண்ணொடுவோன் றுதித்துய்யப்
பிறவாத நெறியண்டந்த பெருந்தகைமு னவதரித்த
வறவாத வூர்ப்புகழை யாமேயோ வறைகிற்பேம். (கரு)

இந்தநக ரகம்வாழு மிருபிறப்போர் தங்குழுவு
ளந்தமிலாப் புகழ்பெறுமா மாத்தியர்தங் குலத்துதித்தார்
சந்தமிகு மறையொழுக்கந் தலைநின்ற பெருங்குணத்தார்
பந்தமகற் றிடுஞ்சைவப் பற்றுவழி வழியமைந்தார். (கசு)

தன்னமுமா சில்லாதார் சம்புபா தாசிருத
ரென்னநவி லுமத்தா ரெல்லாருந் தொழப்பொலிவா
ரன்னவரில் லறக்கிழமை யமைந்தொழுகு கடன்பூண்டார்
மின்னவிருஞ் சிவஞான வதியெனும்பேர் மேவினார். (கஎ)

இத்தகைய மனையாரோ டியைந்துவாழ் தருமறையோ
ருத்தமர்வெம் பரசமயக் குறும்பொழிக்கு மொருமதலை
யத்தரரு ளாற்பெறுவா னுதரித்த கருத்தினராய்ச்
சித்தமொரு வார்தினமுஞ் சிவாலயதில வழிபடுவார். (கஅ)

கதிருதய மெழுமுனமைங் கடிகையெனத் துயிலொருவி
யதிர்புனலின் மூழ்குபுநீ றணிந்துவிழி மணிபூண்டு
சதிருறுமைந் தெழுத்தெண்ணித் தழைதருநந் தனம்புகுந்து
பிதிர்தலிலா மலர்குற்றுப் பிறங்குதொடை தொடுத்தணிந்தும். (ககூ)

ஆனநறு நெய்வாகித் திருவிளக்கு நனியமைத்து
மோனவடி யவர்க்காணின் முந்துபுசென் றுபசரித்து
மானவமு தூட்டியுமவ் வாதவூ ரிறைவர்விழா
வீனமறச் சிறப்பித்து மினும்பலசெய் தியலுநாள். (உ0)

அடுந்திறஞ்சார் பிடகநெறியதுமுதலி யெனறுமேற்
படுந்திறமொன் றேனுமுண ராதபா தகரடாந்து
விடுந்திறமில் வேதநெறி யறமாற்றி வெய்யபெருங்
கொடுந்துயர நெறியமைத்தார் குலவுதமிழ் நாடனைத்தும். (உக)

அதுதெரிமா முனிவரரு மமரருமற் றவர்க்கிறையுஞ்
சதுமுகனு நெடுமாலுந் தாங்கரிய கவலையராய
முதுபுகழ்சா றிருக்கயிலை முன்னுபுசந் நிதியவணங்கிக்,
கதுமெனயா மிறைவன்பொற் கழற்றொழுவர் தனமென்றார். (உஉ)

நாதிபுகுத் திடப்புகுந்து நம்பெருமான் கழல்வணங்கிப்
பந்தியினின் றனர்வந்த கருமமெவன் பகர்மினென
வந்திமதி முடித்தபிரா னருளுதலு மாரெழுந்து
முந்திமொழி குவன்பிடகர் முயன்றுசெய்தீ வினையனைத்துமே. (உ௩)

திரைக்கடல்சூ ழுலகமெலாஞ் சீவரப்போர் வையரடர்ந்து
வரைக்கரும்வை திகசைவ மார்க்கமொழித் தனரதனு
லுரைக்கருந்தீக் கருமமிலை யும்பர்பசித் தனர்மெலிந்தா
ரரைககலைதிக் காகவுளா யடியேங்கள் செய்வதெவன். (உ௪)

என்றுகுழைந் திஃதடியேம் விண்ணப்ப மென்றிசைப்பக்
குன்றுகவித் தவன்முதலீர் கொடியசாக் கியர்வலியை
வென்றுகளை குதுநீவிர் போதிரென விடைகொடுத்து
மன்றுநடிப் பவனவர்கோண் மாற்றன்மனங் கொண்டிருந்தான். (உ௫)

அதுகருதி யமாதருநா ளாயிரவா கணநாதர்
சதுமறையும் புகழ்நாலாஞ் சததிபதிந் தவர்குழுமிப்
புதுமதிய முடித்தபிரான் பொன்னடிதாழ்ந் தனரெழுந்தார்
முதுபுகழா கமத்துணைமை மொழிந்தருள வேண்டுமென. (உ௬)

இரந்தருளத் திருவுள்ள மிரங்கியிது பெறவேண்டின்
வரந்தருமுத தரகோச மங்கையிடை நீவிரெலாம
பரந்துசெலீஇ நமைதொழுது பணிவிடைசெய் திருப்பிரேற்
புரந்தருணு மாங்கருள்வோம் போமினென விடைகொடுத்தார். (உ௭)

அடிபணிந்து கணநாதராயிரரு மங்கின்று
படிபுகழும் பெருவளஞ்சால் பாண்டிநாட் டகமபுகுந்து
கொடிமதிலுத் தரகோச மங்கையிடைக் குறுகினர்
முடிவில்பர மானந்தக் கடற்றளையு முதுக்குறைவார். (உ௮)

வலனமையுத் தரகோச மங்கைபுகுந் தவர்தீர்த்தக்
குலமுழுதும் படிந்தாடிக் கோமளவெண் ணீறணிந்து
நலமருவு மைந்தெழுத்து நன்கமைய மனதவெண்ணிப்
புலனமையுந் தம்பிரான் றிருமுன்னர்ப் போய்ப்பணிந்தார். (உ௯)

இரவுபக லிவ்வாறு தொழுதருகி யிருக்குமவர்
ரவுதவிர் செயல்கண்டு கண்ணுதலு யகன்கருணை
விரவுமுளத் தொடுமறையோர் வேடங்கொண் டாங்குற்றுன்
வரவுதெரிந் தாயிரரு மலரடிக்கீழ்ப் பணிந்தெழுந்தா. (௩0)

ஏழுகணநா யகர்தமையோ ரீடத்திருத்தித் தானுமிருந்
துழுபமரம் பசியவிய வொழுக்குதேங் கொன்றையினன்
முழுவலுடை மற்றவர்தம் முகநோக்கி யாகமத்தின்
செழுமயமா முண்மைசொல வுபக்கிரமஞ் செயல்குறித்தான். (௩௧)

அப்போது முப்பத்து முக்கோடி யமரர்களுங்
கைப்போது குவித்தருகிற் கலந்துசூழ் தனாபோத
வெப்போது கொடுந்தொழிலின் விராமிரட்டி யவுணர்களுந்
துப்போது தூரத்தே சூழ்ந்துசே வித்துவர. (௩௨)

அரம்பையுருப் பசிதிலோத் தமையாதி யரமாதர்
வரம்பயிலு முழவாதி மாண்புதழீஇ யெதிர்நடிப்பப்
பரம்புபலர் வெண்கவரி யெடுத்திருபக் கமும்வீச
நிரம்புவளை மிசைமதிபோ னிகழொருவெண் குடைநிழற்ற. (௩௩)

கொழுங்கதலித் துடவையெனக் கொடிக்காடு முன்போதச்
செழுந்தரளத் தாலிசைத்த சிவிறிபல வளியெழுப்ப
வொழுங்குறுதண் டமுங்கோணற் றண்டமுமுன் னுறநடப்ப
வழுங்கலிலா வொலியன்முத லாம்விருதா வளிசெறிய. (௩௪)

சங்கநிதி பதுமநிதி தயங்குசிந்தா மணியளவாத்
துங்கவளம் பொலிகாம தேனுமுதற் சொலுமனைத்தும்
பங்கமற வெழுகடைகட் பாவையெதிர் நோக்கிவர
வங்கனகத் தருவைந்து மமையநிழ னல்கிவர. (௩௫)

வெள்ளியமா மலைமேலோர் மின்னலொடோர் கருமேகம்
வள்ளியசெந் தாமரையா யிரம்பூத்து வைகுதல்போற்
றெள்ளியவெள் யானையின்மேற் றிகழ்புலோ மசையினொடு
முள்ளியவா யிரங்கண்மலர்ந் துறுவரராக கமப்புகல. (௩௬)

வெளியாய நடவையிடை விளங்கவரு மிந்திரனைக்
களியாய கருத்தினொடுங் கண்டுவெந்தொல் லையின்மறந்தார
தெளியாய கணநாத ராயிரருட் சேரொருவா
வளியாய வுணவுணும்பூண மாதேவ னஃதுணர்ந்து. (௩௭)

திருவாத வூரினிடைத் தினந்தோறும் பணிவிடைசெ
யொருவாத தவமறையோ ருள்ளியகா ரியமுடிய்
வெருவாத தேரரெலாம் வேறற்றா ரென்றுமுகில்
பொருவாத மேனியன்முற் புலவரெவா மகிழதூங்க. (௩௮)

உண்மையுரைத் திடாமே யுபக்கிரமஞ் செயுங்காலை
வண்மையிது வெனவேறோர் விடயத்து மனமுய்த்தாய்
தண்மையின்மற் றிதனுலித் தரணியிலோர் பிறப்புற்றே
யண்மையினச் செல்வமனு பவித்துநமை யடைகென்றான். (௩௯)

என்றுசொல நடுநடுங்கி யென்செய்கே னெனக்கதறு
நன்றுதெரி கணநாதர் முகநோக்கி நமபெருமா
னென்றும்வெரு வலைநாமே யுன்றனைமே லடிசூட்டிக்
கொன்றுமல மின்பநிலை கொளச்செய்வோ மெனப்புகன்றான். (௪0)

விடைகொண்டு பரமனருண் மேற்கொண்ட கணநாத
ருடைகொண்ட கடன்மடந்தை யுவப்பெய்த வாதவூர்
நடைகொண்ட சம்புபா தாசிருதா நன்மனையா
லடைகொண்ட திருவயிற்றி னமருக்கும் கருவானார். (௪௧)

கற்றதிரு மறையவர்தங் காதலியார் பாறகருப்ப
முற்றதிறங் குறிப்பினு லுணர்ந்துபிரா னருள்போற்றி
மற்றதிடை யூறடையா வண்ணமுற மாமறைநூல்
சொற்றசடங் குகளனைத்துந் துகளறச்செய் தனர்முடித்தார். (௪௨)

மதியமொரு பதுஞ்செல்ல மாமறைநூ றலையெடுப்ப
விதியமையு மாகமங்கண் மேன்மேலுங் களிசிறப்பத்
துதியமைபு ராணமெலாந் தொக்கொருங்கு கூத்தாடத்
திதியமைபன் மொழியுள்ளுந் திராவிடமிக் குவப்பெய்த. (௪௩)

சதுவிதமாம் பாதங்க டினித்தனியுண் மகிழ்ச்சிபெறக்
குதுகலித்து வைதிகமுஞ் சைவமுமேன் மேற்குலவப்
புதுமலர்க்கற் பகநாடு பொழிந்துதுயர் கழிந்திருப்ப
வதுபொருண்மற் றிதுபொருளென் பாருளத்து மைய்மற. (௪௪)

அருகாத பரசமய மத்தனையுந் தமோற
வுருகாத கன்மனமு முடைந்துகெகிழ்ந் தொருங்குருகக
கருகாத பொய்யுரைவாய் களுமெய்ம்மை சொலத்தொடங்கப்
பெருகாத நதியனைத்தும பெருவெள்ளங் கொடுபெருக. (௪௫)

கனவகத்து மறமறியா களுமதனிற் றலைநிற்ப
மனமொழிமெய் யொருமூன்று மியாவருமா றுறாக
வனகபர சிவபத்தி யடியேமைப் போல்வார்க்கு
மினமணியா தியிற்சிறப்பக் காப்பாற்றுஞ் செயறழைப்ப. (௪௬)

வெய்யவன்முற் கோளனைத்தும் விரோதமிலா நிலைநிற்க
வையகமெல் லாம்பரந்து மந்தமா ருதமுலவக்
கையமையாக் குறும்பனைத்துங் களைந்துலகம் புரப்பவர்தஞ்
செய்யநெடுங் கோல்பொலியத் திருவவதா ரஞ்செய்தார். (சஎ)

தந்தையா ரதுகண்டு தாவாத மகிழ்சிறப்புற்
றெந்தையார் திருவருளா லியைந்ததெனப் பாராட்டி
நிந்தையார் பரசமய நீறுபட்ட தெனத்துணிந்து
முந்தையார் சூதவினை முதலியன முடிப்பாரால். (சஅ)

ஒருநாம மேனுமிலா வுத்தமருக் கெண்ணிறந்து
வருநாம மெடுத்தோத வல்லாரா யெல்லார்க்குங்
கருநாம மொழித்தருளக் கடவார்க்குக் கடவாத
திருநாமந் திருவாத வூரரெனச் செப்பினார். (சகூ)

ஈசானர் முதலாக வியம்புபதி னொருவரையு
மாசான நனிசெய்து மழவிடையூ ருகிவரு
மாசான பலவகற்றி யருளுவீ ரெனப்போற்றித்
தேசான பெருங்கருணை செழிச்சிடக்காப் பியற்றினா. (ருo)

பரசமயர் வாயிலிடப் பற்றியெடுப் பவர்போலக்
கரமலரோ ரிரண்டனையுங் காசினியின் மிசைப்பதியா
வரமுழந்தா ளொன்றெடுத்து வயமகுதிரு முகமெடுத்துந்
திரமுறுபொற் குழையாடச் செங்கீரை யாடினார். (ருக)

விரவுகருங் கன்மனமும வெந்தழலவெண் ணெயினுருக
புரவுடைய ரியாவோரு முவப்புறத்தா லசைத்திடுவா
ரரவுமணித் தொட்டின்மிசைக் கிடக்கவரு மையிற்கிடத்திப்
பரவுபல ருள்ளுருகித் தாலசைப்பப் பரிந்துவந்தார். (ருஉ)

திருவாத வூரினமர் செஞ்சடையோனை கருமிடற்றார்
பொருவாத நடநவிலும் போதிலடிப் போதின்வனை
தொருவாத சிலம்பினொலிக் கொப்பத்தாக் குதல்பொருவத
தருவாத வூரர்கையாற் சப்பாணி கொட்டினார். (ருங)

நித்தமெனப் பாராட்டி மேயவிரு முதுகுரவா
சித்தமுவந் திடப்பிணங்குஞ் செயன்மார்க்கத நப்பட்டுத்
தத்தமனம் புண்படவோரா தாம்விருப்புற் றுறிற்பவஞ்ச
முத்தமளித் தருளுவாரா முத்தமளித் தருளினார். (ருச)

அருகர்பவுத் தன்னையாதி யாஞ்சமயர் தமோற்றமீ
பெருகவினி தவுதரித்தாய் பெருமான்ற னருட்பேறே
திருகமையாக் குணவாமாத் தியர்குலசிந் தாமணியே
வருகவரு கெனவழைப்ப வந்துதழீஇ யுவப்பிப்பார். (௫௫)

மூகைவா யாம்பன்மலர்த் தலினொத்தாய் முதற்குரவ
ஞேகைகூ ரருள்பெறலா லொவ்வாய்வந் தனையேற்பாம்
பீகைசா ணட்புறுவா யில்லையே லிறப்புறுவா
யாகையா லம்புலிநீ யாடவா வெனவுவப்பார். (௫௬)

வெருக்கழலத் தமையடைந்தார் மேவியபல் சிற்றிலெலா
மருக்கமழுந் திருவடியாற் சிதைத்தல்வயக் கியதென்னப்
பெருக்கமிகு புழுதியெலாம் பிறங்குறுசிற் றடிபடியத்
தெருக்கடொறும் பேதையர்செய் சிற்றில்சிதைத் தருளினா. (௫௭)

விரவுபர சமயமெனும் விடவரவுக் கிடிமுழக்கா
வரவுமிகு சைவமெனு மயில்களுக்கு முகின்முழக்கா
வுரவுகெழு வழுதிபகை யும்பல்களுக் கரிமுழக்காப்
பரவுகுணில் கொண்டுசிறு பறைமுழக்கி யருளினர். (௫௮)

சேயவிளம் பரிதியினுந் திகழுமிளங் குழவியா
ராயவரி மருத்தனனு மட்ல்வழுதிக் கமைச்சாகிப்
பாயவவ னெமிதிசை திசையுருளப் பண்ணுதல்போ
லேயமணி பலபதித்த வெழிற்சிறுதே ருருட்டினர். (௫௯)

முகையனைத்து மலாதாலை முன்னவன்பொ னடிககாககிப்
பகையனைத்து மறமாற்றிப் பரமசிவ நெறிவளர்த்து
நகையனைத்துந் திரணடென்ன நகப்பொலிந்து நால்வேத
சிகையனைத்துந் தெரிவார்ககோர் சிகையமைத்தார் திருநாளில். (௬0)

மறையாதி யெக்கலையும் வயங்குமுதல் வழிசாாபென்
றறைவார்கண் மூவகையா யத்தகைய மூன்றா லு
நிறைவாய மனத்தரெனு நோதெரிப்பார் போலமறை
முறையாலே திருமாாபின் முந்நூன்முங் கப்புரிந்தார. (௬௧)

பிறையெனநா டொறும்வளர்ந்து பிறங்கியா வோருமெதே
தறைபதினு றகலையுளா லாரணமே யாகமமே
நிறைதருபு ராணமே நிகழ்த்திமெற் றுளவனைத்துங்
குறையறக்கற் றுணர்ந்தாரெங் குடிமுழுது மடிமைகொள்வார். (௬௨)

திருவமிகு குடிப்பிறந்த செயலானு மதர்வணநூ
லொருவவுணர்ந் தவரல்ல ருதனாலுங் கரிபரிதேர்
மருவவுகைத் தலுந்தெரிந்தார் தெரியாத வகையாதே
பருவமுறா வெமக்குமேருள் பாலிக்கும் பெருந்தகையார். (சுங)

வேதமுத லெக்கலையு மேதினியி லுணர்வார்தம
போதமொரு சங்கையுறிற் றிருவாத வூர்புகுந்து
நாதவெனத் தொழுதேத்தி நவின்றுதெளிந் தேகுவரேற்
சாதமிவர் கல்விநிலை யெவராளக்கத் தக்காரே. (சுச)

பேதமார் தரப்பொலியும் புரூரவா மன்னவனே
வாதவூ ரிறையவர்தா மவதரித்த மாண்புரைத்தா
மேதமார் மறையவர்சூழ் வியன்மதுரைப் பாண்டியன்பா
லேதமோ வமைச்சாரா யியலுமுறை யெடுத்துரைப்பாம். (சுரு)

## திருவாதவூரர் திருவவதாரப்படலமுற்றிற்று.

ஆகத்திருவிருத்தம் சுசுரு.

---

# அமைச்சுரிமைபூண்டபடலம்.

அட்டொழித் தருளு மைய ராரரு டலைமேற் கொண்டு
மட்டொழி யாது பெயயு மலரகருழன் மூகைசெவ்வாய்க்
கட்டொழித் தவரே நந்தங் கட்டொழித திவெரா ரென்று
விட்டொழி யாம லன்னோர் விரைமலர்ப் பதம்பூண் டேமால். (க)

எதிரினம் மிறைகு லத்து முதலிலவ கிரதந் தோற்றுங்
கதிர்பொரு திவைத்தக் கூனுங் கைக்கொடு நரைத்து வானத்
ததிர்வுற வியங்குந் தாரக லறமென மாட முன்றுற்
பிதிர்வறத் தாங்கி யுய்க்கும் பெருமபுகழ் மதுரை மூதூர். (உ)

இருந்தவர் துதிமு ழக்கு மிகற்கரி பரிமு ழக்கும
பொருந்தவிண் ணவர்கள் வந்து போதலிற் படுமு ழக்குந்
திருந்தமற் றெழுமு ழக்குஞ் செயிரறத் துஞ்சும் போது
மருந்தமிழ் முழக்கந் துஞ்சா தாலவா யென்னு மூதூர். (ங)

விழவொலி கணப டாது வீதியின் மிஞிறும் வண்டு
முழவொலி கண்ப டாது தொங்கலி லுவக்குஞ் செவ்வாய்
மழவொலி கண்ப டாது மாடத்தி லரங்கந் தோறு
முழவொலி கண்ப டாது முத்திகண் படுக்குங் கூடல்.. (ச)

திகழ்பெரும் பாண்டி நாட்டின் திருமுக மாகி யென்றும்
புகழ்மிகு மனையு கூடல் புரப்பவ னூரூற் ருறு
நிகழ்தரு தண்மை நீங்கா நிலாமதிக் குலத்து வந்தா
னகழ்மறத் தினன்கு லேச னருந்தவத் துதித்த வீரான். (௫)

அருளுரு வாய செல்வி யங்கயற் கண்ணி யோடுந்
தெருளுற வமருஞ் சுந்த ரேசாதந் திருத்தாட் கன்பும்
பொருள்பெறு தமிழு மோவாப் புகழ்நன் னீதி யாவு
மருளறத் தவஞ்செய் தீன்ற மகவுபோல் வளர்க்க வலலான். (௬)

எங்கணும் வியாபித் துள்ளா னிவனென வறியா ராகித்
தங்களுள் வேறு வேறு பிதற்றுவார் தவாநாண் கொள்ள
வங்கையிற் பிரம்பு கொண்டே யறிவிக்கு மறிவன் மிக்கான்
றங்கையிற் பொலியுந் தூய்மை கருத்துறத் திருத்தி னூல். (௭)

திரிபற வனைத்து நூலுந் தெரிந்தவன் பகைவர் தம்மைப்
புரிசினக் களிற்றிற் சிங்கம் புகுந்தெனப் புடைக்கு மாற்று
லரிமருத் தனனெ னும்பேர் பெற்றவ னவனி யெல்லாம்
பரிவறச் செங்கோ லுய்த்துப் பண்பொடு வாழு நாளில். (௮)

அறிவுடை மாந்தர் சில்லோ ரடுத்தன ரொருநா ளன்னூர்
நெறிவர வுவப்பி னேற்று நிலவிய நந்நாட் டேனுங்
குறிகெழு பிறநாட் டேனுங் குலவதி சயமென் னென்றுன்
செறிமலர்த் தொடைய லாயீ தென்றவா செப்ப லுற்றா. (௯)

இந்தமா நகர்க்க டுத்த விரும்பொழில் வாத வூரி
லந்தமா தியினம் பெம்மா னருட்பெருந் திறத்தி னாலே
வந்தவா ருரு மாமாத் தியமறை யவர்கு லத்தின்
முந்தவா தரித்து தித்தா ரொருவரா மொழிவ தென்னே. (௧௦)

அவர்பெயர் வாத வூர ரகவையீ ரெட்டுற் றார்மற்
றவரதி மதிநுட் பதனைக் கலவியை யளப்பார் ரியாவ
ரவர்திற மூலக மூன்றும் வேட்பதா யமைந்த தைய
வவர்திற மொருநீ காணத தக்கதென் றறைந்து போனார். (௧௧)

சான்றவா வார்த்தை கேட்ட தார்த்தடம புயக்கோ மாற
னான்றவ ரவரைக் காணு மதிவிருப் புடைய னாகி
யேன்றவா சிலரை விட்டா னெய்தியாங் கவரை யழைப்ப
மான்றவர் கருதா வையர் வழுதிமுன் னடைந்தா ரன்றே. (௧௨)

இளங்கதி ருதய மேயென் றிசைதிரு மேனிப் பணபுங்
களங்கமின் மதியந் தோன்றிற் றெனுங்கவின் முகமுங் காம
ருளங்கெழு செய்ய வாயு மொள்ளிய கருணைக் கண்ணும்
வளங்கெழு மார்புந் தோளு மனங்களி பயப்பக் கண்டான். (௧௩)

மறைமுதற் கலைக ளெல்லா மாண்புற வினவுந் தோறுங்
குறைதவிர் விடைகொ டுக்கக் கொற்றவ னுவகை பூத்து
நிறையெது வினவி னானு நிகழ்த்திடு மிவர்க்கின் றுதி
யறைகுதிர் பிரம ராய ரென்றமைச் சனைப்பார்த் தோதி. (௧௪)

ஊனிட ரகற்றுங் கல்வி யொருங்குணர்ந் திருந்த வையா
மானிட ரல்லர் மற்றை வானவர் தம்முள் யாரோ
கானிட நட்ட மாடுங் கடவுட னருளோ பன்னு
ஞானிட ரறச்சூழந் தானுந் துணிவதில் லெனந யந்தான். (௧௫)

கற்றமற் றிவனை யுள்ளான் சருவிக ளில்லா னேனு
மற்றமின் றுக வுள்ளா னவைமிக வுள்ளா னேனுஞ்
செற்றமில் லிவனை யில்லா னில்லானெத் திறத்தி லேனும்
பொற்றயற் றிவனைக் கொள்கை பொருளெனப் புல த்தி னாய்ந்தான். (௧௬)

பழுதற நமக்குக் கண்ணாய்க் கவசமாய்ப் பாது காக்கு
முழுதுண ரமைச்சீ ருங்க டமக்கெலா முதன்மை யீர்.
செழுமறைப் பிரம ராயர் தமைச்செய்தோ செய்தோ மென்றான்
வழுதியவ் வமைச்ச ரெல்லா மகிழ்ந்தன மகிழ்ந்தோ மென்றார். (௧௭)

மிக்கதுங் குறைந்த துஞ்சீர் தூக்கிடும் விறல்சால் வேந்தன்
றக்கது செய்தா னென்னுத தத்தமி லமைச்சர் சொற்றா
புக்கது நமக்கோர் செல்வ மெனமற்றோ ருவகை பூததா
ரக்கது பூணபெம் மான்சிெ யருளென வைய ரேறறா. (௧௮)

வழுதியர் பெருமா னிந்நாள் வாதவூ ரரைய ழைப்பித்
தெழுதருங் கல்வி யாராய்ந் தினியவோர் போபு ணர்ந்து
தொழுதகு முதல மைச்சின் பாரமுஞ் சூட்டி னானென்
முழுதல குயய வென்று மொழிந்தன வுலக மெலலாம். (௧௯)

பெருவிலைச் செம்பொ னாடைப் பிறங்குருப் பாயந் தேசு
தருதலைச் சாதது மாயோன் றானும்வெஃ குத்த ரீய
மருமணி மதாணி யாழி யாரமொ டீண் கடகம் பொன்னுண
டிருமணிக் குழைமுன் மற்றுஞ் செயிரற வழஙகிப் பின்னர். (௨௰)

மழைமதக் களிறு பாய்மா வாவுமான் பூண்ட பொற்றே
ரிழைமணிச் சிவிகை மற்றும் விருதினிக் கியல நல்கிக்
குழையுடற் கவரி வெற்றிக் கொடிகுடை யால வட்டந்
தழைதரு மொலிய லாதிச் சம்பத்தும் பெருக நல்கி. (உக)

குடமுழா முரசு மொந்தை கொக்கரை தடாரி பேரி
படகமுற் பலவு நல்கிப் பசும்பொழி லுறையுள் செங்கோ
லிடனற வினைகி ராம மெண்ணில நல்கிச் சந்தந்
தொடலையு நல்கி மற்றுந் தொகுசிறப் பனைத்துஞ் செய்தான். (உஉ)

பெருஞ்சிறப் பனைத்தும் பெற்று ஞாயிற்றிற் பிறங்கா நின்ற
வருந்தவப் பிரம ராய ரரிமருத் தனனுந் தென்னன்
றரும்புற விடைபெற் றெல்லாச் சம்பத்தும் புறத்தே சூழ
விருஞ்சிவி கைமி யின்மேற் கொண்டாங் கியமெலா மியமபப் போனார். (உங)

எரிமணி யிமைக்கு மோநாச்சி யிந்திர விமானக் கோயிற்
பரிவொடு புகுந்து சோம சுந்தரர் பாதம் போற்றிப்
புரிகருங் கூந்தற் செவ்வாய மங்கயற் கண்ணி பொற்று
ளுரிமையிற் போற்றி நீறோடு முற் றுவந்தனர் மீண்டா ரன்றே. (உச)

இருமுது குரவ ராய விருந்தவ ரரச னல்கப்
பொருவரு மமைச்சின் போரம் புதல்வனார் பூண்ட தோர்ந்து
வெருவரும் பரமார்த் தங்கள் வெல்லுதற் கிதுவுந் தானோர்
கருவியா யிருக்கு மென்று கருதின ருவகை பூத்தார். (உரு)

நிறைகுடந் தீப முன்னு நெருங்குமங் கலங்க ளேந்திப்
பிறைநுதன் மடவார் சேரப் பிறங்குபல் லியமு மார்ப்ப
மறையவர் வாழ்த்து மல்க வளமலி யுறையுள் புக்கார்
கறைமிடற் றானையே னெஞ்சுங் காணியாப் புக்க வையர். (உசு)

அவரவ ரிருக்கை செல்ல வனைவர்க்கும் விடைகொ டுத்துப்
பவர்படு சடில மோலிப் பண்ணவற் கன்ப ரோடுந்
தவர்மன மில்லா வையர் கலந்தன ரமுது கொண்டு
தவர்புக ழமைச்சின் பாரந் தரித்ததற் காய தோர்வார். (உஎ)

மறுதின முறையு ணின்றும் வழுதியர் பெருமாற் காண
வுறுபெருஞ் சிறப்பி னோடு மூர்திமேற் கொண்டு போந்து
தெறுவலி யவனைக் கண்டு திகழ்ந்தம் மிருக்கை மேவி
நறுமுறு பகைவ ரச்ச நண்ணுமா றெண்ணு வாரால். (உஅ)

*பெருவெளி மேல்பா லாகப் பெருங்கடல் கீழ்பா லாக
வொருவரும் புனல்சால் வெள்ளா றுத்தர மாகத் தெற்குப்
பொருவருங் குமரி யாகப் போர்த்தான் செல்லை யுள்ளு
மருவிய குடிக ளல்கு மிறைப்பொருள் வருவாய் தேர்ந்தும். (உகூ)

பொலிதர வெய்து மூல்கு பொருளுடை வருவாய் தேர்ந்தும்
வலிமரு வலர ளக்கு மாணபொருள் வருவாய் தேர்ந்து
மெலிவிலா கரங்க ளல்கு மிகுபொருள் வருவாய் தேர்ந்து
நலிவற வனாதர் நல்கு நகுபொருள் வருவாய் தேர்ந்தும். (ஙo)

இன்னமு தருத்துஞ் சாலை யினியநீர் வாக்குஞ் சாலை
நன்னலம் பயக்குங் கோயி லுறேங் கல்விச் சாலை
சொன்னமற் றறப்பு றத்து வழிச்செலுந் தொகையு நாளும்
பன்னரும் புடைக்கு நல்குந் தொகையுமபார்த் துறம திந்தும். (ஙக)

பல்வகை வரவு தம்முட் பல்வகைச் செலவும் போக
வொல்வகை யெச்ச மாகிப் பண்டாரத் துறையப் போகு
நல்வகைப் பொருளி ருப்பிவ் வளவென நன்கு தேர்ந்துஞ்
சொல்வகை வல்ல வைய ரரசனுக் குறுதி சூழ்வார். (ஙஉ)

ஒருவினை தொடங்குங காலை யுறுபொருள் படையி ரண்டவ்
வருவினை தொடங்குங் கால மதுதொடங் குபாய மற்று
மருவிடை யூறு நீக்கி முடித்திடு வண்ண மாகப்
பொருவரு மங்க மைந்தும் பொருந்தவா ராய்ச்சி செய்வார். (ஙங)

வினைபுரி திறத்தெஞ் ஞான்று மேவசை விலாமை நாளும்
புனைகுடி காத்த னீதி நூல்களைப் பொருநத வாய்ந்து
நினைவிதி விலக்குற் றோர்த னிகழ்த்திய வைந்த ளேடு
நினையவுங் கைக்கொண் டுள்ளார் முயற்சியை யிகவா ரென்றும். (ஙச)

பொருதொழி னேர்ந்த காலைப் பொருதிடு பகைஞர்க் கோகை
தருதுணை யாயி னோரைப் பிரித்தலுந் தமமைச் சார்ந்தார்
மருவலர்ச் சாரா தின்சொல் கொடையினுல் வசமாக் கல்லும்
வெருவறப் பொருத்த வேண்டிற் பொருததலு மிகததேர்ந் துள்ளார். (ஙரு)

காரியச் செய்கை யொன்று பலவித மாகக் காணி
னேரிய வவற்று ளாவ தொப்பவா ராய்ந்து தோவார்
சீரிய வதுசெய் போது பலிப்பது நாடிச் செய்வார்
வீரியம் பெறப்பி ரித்தல் பொருத்தலில வேட்பச் சொல்வார். (ஙசு)

---

* பெருவழியென்றுமபாடம்.

அறிந்தசொற் றிடவல் லார்த மறிவையுஞ் சிதைத்துத் தானு
மறிந்திட லில்லா னேனு மரசனுக் குறுதி யொன்றே
யறிதலைந் திடுதல் வல்லா ரரசனுள் வெருண்ட போது
மறிந்தவர் தமக்கு றெண்ணு தரசனுக் கூறு தீர்த்தல். (௩௭)

பலவுரைத் திடலென் முன்னாட் பகைவரா யுள்ளார் யாரும்
விலகுறு தரசன் பாங்கர் மேவினர் நட்புப் பூண்டார்
வலமிகு செங்கோல் செல்லாத் தீபத்து வாழ்கின் றாரு
நிலவரும் பொருள்வி டுத்து நேசிப்ப வியற்றி வாழ்நாள். (௩௮)

அழிபொரு ளுணர்வு மென்று மழிவதின் றாகி யின்பங்
கொழிபொரு ளுணர்வும் போதின் மணமென மனத்துட் கூடப்
பழிபடு மிம்மை யாசை பந்தமா மறுமை யாசை
யொழிதர வெச்ச மாகி யுள்ளது பெறுதல் வேட்பார். (௩௯)

படிமுழு வதும ளந்த பைந்துழாய்ப் படலை மார்பன்
படிமுழு வதுமில் லென்னும் படியொரு கேழ லாகிப்
படிமுழு வதுமி டந்துங் காணொணாப் பதும பாதம்
படிமுழு வதுங்கொண் டாடும் பத்திகொண் டுணர வேண்டின். (௪௦)

வேறு.

கறையடி முதலா வுறவியீ றாகக் கனைபல யோனியிற் பிழைத்து
நிறைதரு மக்கட் பிறப்பு வேண்டு நிகழ்தரு மப்பிறப் புள்ளுங்
குறைவறு மாயுட் டாய்வயிற் கருவாக் கூடுறல் வேண்டுமேற் றதனு
ளுறைகொடுங் கிருமிச் செருமுத லாக வுரைப்பவை பிழைத்திடல் வேண்டும்.

ஒருபது மதியஞ் சென்றவக் காலத் துறுதுயர் பிழைத்துமண் மேலால்
வருதிறம் வேண்டும் வந்தவக் காலும் வருடந்தோ றடைதுயர் பிழைத்துப்
பெருகிய காலை மலம்பகற் பசித திரைபிறங் கிருளிவை பிழைத்தும
வெருவற வெழுங்கா விளமுலை மடவார் விழிக்கடை யெனும்வலை பிழைத்தும்.

கலையெனப் புகலும் வாரிதி பிழைத்துங் காமரு திருவெனப் பட்ட
நிலையுறு செல்லற் பிழைத்துநல் குரவா நிகழ்பெருங் கொடுவிடம் பிழைத்து
மலைசெய்புல் வரம்பாம பலதுறை பிழைத்து மாதரங் கூரமா மேருச்
சிலையுடைப் பெருமா னுள்ளென நினையுஞ் சித்தமுண் டாகுதல் வேண்டும்.

கடவுண்மற் றொருவ னுளனெனுஞ் சித்தங் காதலிற் றோன்றிய பொழுதே
மடனமை சுற்ற முழுமையுங் கூடி வாய்திறந் தாற்றிடு தாமன்று
திடமிலீ தென்று நாத்திகர் பலருஞ் செறிந்தனர் பிதற்றுவ ரின்னு
மிடனமை விரதம் பரமெனப் புகல்வ ரிவரையும் பிழைத்திடல் வேண்டும்.()

டூளைசெயூ றனைத்துங் கடப்பினுங் கரும மூயிரிறை யுண்டெனப் புகற
றிளைசெய்நீர் ஞாலத் தில்வழக் காகுந் திருந்திட லலாதுயி ருண்டோ
வளைசெய்பூண் முலையா ரொடுகெலந் துவக்க வாய்த்திடு மின்பமே யின்பம்
புளைசெய்மற் றோர்கள் புன்மையிற் புகலும் புகழ்ச்சியென் றுருவ தின்னும்.

இளமுலை மடவா ரொடுபெரி யங்கத் தியைத்தவைந் தமளிமே லிவர்ந்து
வளமிகு விளைசால் பாகடை மென்று மருங்குறு கலையற நெகிழ்த்தாங்
குளநெகக் கலச முலைமுகம் வருடி யுவப்பவா யூறன்மிக் குண்ணுந்
தளர்வறு புணர்வே யின்பென வுரைப்பான் சாற்றுலோ காயதன் மன்றே. ()

பகரவீ காரக் குழியிடை யழுந்தும் பன்றிமற் றதைவியந் திடல்போற்
சிகரமா முலையார் மயலகத் தழுந்துஞ் சிதடர்மற் றதைவியந் திடுவார்
புகரவாந் தோனெய்த் தேரரென்பு ணிணமுட் பொருந்திய மூளையே மச்சை
விகரமாஞ் சிதநீ ரிவைதிரண் டசுத்த மேயது சுத்தமெவ் விதத்தால். (சஎ)

இறைகொலை யிலன்மற் றவனலா லுயிரி லியையுமைங் கந்தமு மவிவே, நிறைபெறு முத்தி யெனப்பவுத் தன்சொ னெறிகொளா ரறிவுடை யவர்தா, மறைவறத் தோன்றும் பொழுதுதாய்க் கொலைசார் வழுவின னிறந்தொழி காலத், தறைதரு முத்தி பெறுநரியா ரென்னி னதற்கொரு விடையிலா மையினால். (சஅ)

தலைமயிர் பறித்துப் பாயுடை யுடுத்தித் தழைசுமந் துடல்வருத் திடலே
நிலைதவம் பழைய கருமமுண் டொழியி னிலவிய பொன்னெயில் வட்ட
மலைவற வமாவா னருகமர்ந் திடலே மாண்புறு முத்தியென் றுரைப்பா
ரலைதர வத்தி நாத்தியென் றுரைத்த லமைந்தனால் கொடுபெயி லமணர். ()

உடம்பினை வருத்த லேதவ மென்னி னுறைகழித் தொளிறுவா ளேந்தி
யடம்படச் சேதித் திடுதலுந் தவமா மடருமுற் கருமமுண் டொழிவுற்
றிடம்பட வமைந்த பொன்னெயில் வட்டத் தெய்துதல் கூவத்துட் படிந்த
கடம்படிந் தொருவ ரெடாமன்மே லெழுமோ காரியம் போலுமான் மாதோ.

நிகழ்தரு மாயா வாதத்தோர் பேத னிரீச்சுர சாங்கிய னென்றே
யிகழ்வருஞ் சுத்த னுயிர்திரி குணமு மிரிதலே முத்தியென் றிசைப்பன்
புகழ்தரு சுத்த னெனின்மறைப் புண்ணூன் பொலிதரு பிரகிரு தியினாற்
றிகழ்தரு முத்தி பெற்றுளா னெனினுஞ் சேர்ப்பதற் கோரிறை வேண்டும்.()

புரிவினை முடிவின் ஞானமொன் றுண்டாய்ப் பொருந்துறு மாதொழிற் பட்
யிரிதர வலைவகற் போலுயிர் கிடத்த லெனல்பிர வாகரன் முத்தி [டே
தெரிவினை மறுமைப் பயன்றரா தொழியா சிலையென வுயிர்கிடந் திட்டாற்
பரியுமவ் விடத்தோர் பேறிலா மையினாற் பழிபடு முத்தியே யாமால். (ருஉ)

குளிகைதாக் குதலுங் காளிதஞ் செம்பு குலேந்துபொன் ஞனவா போல
வொளியருள் வலியான் மலங்கெடன் முத்தி யென்னவோ தவன்பேத வாதி
தெளியுமா கமங்க ணித்திய மெனலாற் செறிமலங் காளிதம் போல
விளிதரா தென்றும் பேறுெடு பெறுவான் மேவுத லெங்ஙன மாமால். (௫௩)

புழுவினை வேட்டு வாளிசெய் திடலபோற் பொருந்துயி ரினையரு ளெடுத்து
வழுவறு மாயா சரீரமே யாக்க மற்றது நித்திய மாகிப்
பழுதற விருக்கை முத்தியென் றுரைப்பான் பகர்தரு சிவசம வாதி
முழுதுமா மதுசா ரூபமே யன்றி முத்தியென் றுரைத்தலு மாமோ. (௫௪)

நிருமல வெளியை முகின்மறைத் தாங்கு நிலாவிய சுத்தமா யிருக்கு
மொருபிர மத்தை மறைத்திடு மாயா வுபாதியவ் வேதுவி னாலே [போ
பெருகிய சீவான் மாவெனப் படுங்கால் பெருவெளி யுதிப்பப்
லொருவறி வுதிப்ப வுபாதிபோ முத்தி யுதுவென்ப ஞன்மாயா வாதி. (௫௫)

இந்தச்சீ வான்மா வினுக்குள தாகி யிலங்கிய விவேகஞா னந்தான்
முந்தத்தா னேயுள் ளஃதெனின் மாயா மோகத்தான் மூடப்பட் டிடாஞ
னந்தப்பின் புள்ள தாயதென் றெடுத்து நவின்றிடி னிலதுள தாகா
தெந்தப்பான் மையினு லிதனையு முத்தி யென்றெடுத் திசைப்பர்மற் றவரே.

பாயமா யாவா தத்திற்பாற் கரியன் பரமொன்றே பவஞ்சமா யுயிராய்
நேயமா நிகழு ஞானமாம் பொழுதே நிறைபாஞ சாரந்துயி ரழியு
மாயதே முத்தி யென்பன்வான் பிரம மாகாது பவஞ்சமோ டான்மா
தூயவான் மாக்கெட் டிடுதலிற் பெறுவான் சொல்லுதற் கியாருளர் மாதோ.

மேயசங் கிராந்த வாதியென் றுரைப்பான் விமலனூர் திருவருள் பதிந்து
தேயமிக் கமைந்த பசுகர ணம்போய்ச் சிவகர ணங்களாய்க் காட்டித்
தாயவக கினிபோ லொன்றுபட் டிடுத லாவதே முத்தியென் றுரைப்பான்
தூயவக் கினியுங் காட்டமு மொன்றுத தொகநுின், றிடுதிற மின்றே. (௫௮)

ஆதியாங கடவு ளாய்வழி பாட்டி னமைந்தபல் லுயிரையு மழியாச்
சோதிவை குண்டத் திருத்துமா லென்று சொல்லுவா பாஞ்சராத் திரர்தா
நீதிவை குண்டத் திருத்துவ னென்று நிகழ்த்துத னிற்கவவ் வாதிக்
கோதிய வந்த முறமெனின் முத்தி யுண்மையை யுரைக்கவேண் டுவதோ. ()

இயம்பிய விவைமுற் பல்லவுந் திருத்தி யிலலன வுள்ளது வாகி
நயம்படு முத்தி புணர்தரல் வேண்டு நாடிது நன்குணர்த் திடுவோர்
வியம்படு புவனத் தெவரெனத் தெரிவான் விடாதுநல் லாரடை தோறும்
பயம்பட விறைவி யுள்ளது பெறுத பணையின ராய்த்தளர்ந் தமர்வார். (௬௦)

பொதுமையிற் புகலும் வேதமுஞ் சிறப்பிற் புகலுமா கமங்களுந் தெள்ளி
மூதுதவப் பெரியோ ராய்ந்தமர்ந் தனர்தா முறையுற நடாத்தமைச் சியலென்
பதகுறை யுருமற் புரூரவா வேந்தே பகர்ந்தன மந்திரி யாய் [பாம்.
புதுமைமற் றவரே பெருந்துறை மருவப் போர்தகா தையுமெடுத் துரைப்

அமைச்சுரிமைபூண்டபடலமுற்றிற்று.

ஆகத்திருவிருத்தம் ௪௦௫.

# திருப்பெருந்துறையடைந்தபடலம்.

திருவா சகத்திற் கொருமுதல்வா செல்வா செல்வர் பேரரேறே
தருவா சகத்து மென்முறைகே ளென்று புல்லர் தமைத்தாழ்ந்து
மருவா சகத்து மிசக்கொண்டு மாழாந் தலைந்து மறையாதி
யொருவா சகத்து முருகாதார் திருவா சகத்து ளுருகாரே. (க)

வெளிமூன் றுருவெட் டாய்ச்சிவமூன் றுருவொன் பானாய் விளங்கிடுமே
ரொளியஞ் சரண மிரவுபக லொழியா துள்ளத் திருத்தலொடு,
மளிதுன் றியதார்ப் புயவழுதி யமைச்சின் ஞெழிலும் வழுவாமற்
றெளிவொன் றியபல் கலையில்வலார் சிறப்ப நடாத்தி வருநாளில். (உ)

இந்த வுலக போகவெறுப் பெய்திற் றென்ப தெவமரா
முந்த வணங்க விண்முழுதாண் முதல்வன் மலர்மே லவன்றிருமா
னந்த வமையும் போகமெலா நாடா வமன பதமாகச்
சந்த மருவு மொருநாலாஞ் சத்தி பதிந்த தையர்பால். (௩)

சத்தி பதிந்த மாத்திரத்தே தக்கோர் புகழ்மந் திரியார்க்கு
முத்தி விருப்ப மேன்மேலு மூளா நிற்க வதுநலகுஞ்
சித்தி யமைந்த வாசிரியற் றேடித் தேடி வருந்துவார்
பத்தி யமைந்தோ ருருக்கொண்டு பயின்று லன்ன பான்மையார். (௪)

ஞானா சிரிய னென்றுவரு நம்முள் ளுறையுஞ் சங்கையெலா
மானா விருப்பின் வினைவினா யறையத தெளிவ தெப்போது
மானா வவன்பே ரருட்கிலக்காய் வயக்கி யடிக்கீழ் வைப்பதென்று
தேனா தரிக்குஞ் சிவானந்தத் திளைததின் புறலென் றெனநினைப்பார். (௫)

பொருப்பா லென்னுஞ் சுமைபரித்தோன் போகட் டிடவெண் ணுதல்போலு
நெருப்பால் வளையப் படுமொருவ னீங்க நினைக்கு மதுபோலுங்
கருப்பா லுறுததும் பிரபஞ்சக் கலப்பின் வீடு கருதுவார்
திருப்பா லுறுவ தென்றென்று தெரிந்து தெரிந்து முயலுவார். (௬)

## வேறு.

அருள்பெற வணிய ராய வன்புரு வாத வூரர்
பொருள்பெறு மொருநாள் வில்லும் புலியுந்தங் கொடியு யர்த்தார்
தெருள்பெறு மற்றை மன்ன ரியாவருந் திரண்டு சூழ
மருளற விருக்கும் பாண்டி மன்னவ னவையிற் புக்கார். (எ)

புக்கவர் வழுதிக் கென்றும் புரிவது போல வன்றுந்
தக்கது செய்தன் ஞன்கை காட்டிய தவிச மர்ந்தார்
மிக்கவ ரிவர்தஞ் சூழ்ச்சி வியாழமு மடையா னென்று
தொக்கமன் னவரெல் லாருந் துதித்தன ரமைச்ச ஞரை. (அ)

அதுபொழு தத்தில் வாவு மபெரித் தொகுதி பேணு
முதுதொழி லாளர் வேம்பன் முன்புவந் தடியில் வீழ்ந்து
கதுமென வெழுந்து நின்று காலுறக் குடந்தம் பட்டாங்
கிதுசெய்வி ணப்ப மென்றே யினையன புகற லுற்றார். (கூ)

சிறந்தவாம் பரிகண் மேய திரைபொரு மிலாயத் துள்ள
விறந்தவாம் பரிகள் போக வெஞ்சிய பரிக ளுள்ளும்
விறந்தமூப் படைந்த பல்ல மேயநோ யடைந்த பல்ல
மறந்தவா வேலாய் நல்ல தரிதென வருத்தா ரன்றே. (க0)

இவரிஃ துரைத்த லோடு மிரும்புலி யுயர்த்த வேந்துந்
தவர்கொடி யுயர்த்த வேந்துந் தண்மதிக் குலத்து வேந்தே
யுவர்படு குணக டற்பா லுறுதுறை யனைத்து மவந்த
வவரவர் தேயத் துள்ள வபெரி யனைத்து மென்றார். (கக)

என்றலும் வாத வூரர் திருமுக மிறைவ னோக்கி
யொன்றநம் பண்டா ரத்தில் வேண்டுவ வொருங்கு கொண்டு
கன்றல்செய் காடு நாடுங் கடந்துகீழ் கடற்க ரைக்கட்
சென்றுவாம் பரிக ளெல்லாங் கொள்ளுதிர் சிறப்ப வென்றான். (கஉ)

விடையது பெற்றெ ழுந்து மீனவன் பண்டா ரத்தி
லடைதரு புத்வ னைத்துந் திறந்தன ராங்குட் புக்கு
மிடைதர வேழெழ் கோடி பசும்பொருள் மிதப்பக் கொண்டு
கடைமுனம் போல டைத்துக் கயலிலச் சினைபொ றித்து. (கங)

வெளிவந்து நெடுங்க ழுத்தல் வெரிந்மிசைப் பொதிசெய் தேற்றித்
தெளிவந்த காவலாள ரோடுமுன் செல்ல வேவி
யொளிவந்த கோயி லுள்புக் கும்பர்நா யகனை யேத்தி
பளிவந்த சிந்தை யாளர் செல்லுதற் கமைந்தா ரன்றே. (கச)

மேயபாற் கடலி லூர்ந்த வெண்டிரை நாப்ப ணுள்ளாற்
றூயமா மதிவி ளங்குந் தோற்றமே யென்ன முத்தத்
தாயவான் சிவிகை நாப்ப ணலங்குற வமர்ந்தார் மேனிப்
பாயநீற் றொளிவி ராய் வென்னுளத் தமரும் பண்பார். (௧௫)

குழையொளி மதாணி மின்னுக் கொளுந்தலைச் சாத்தி யாரும்
விழைமணிக் கடகமாதி விளங்கிளங் கதிரைச் செய்யத்
தழைமணிச் சிவிகை மார்பிற் றங்குமுத் தார மற்றும்
பிழையற வொளிகால் வீசிப் பெருமதி யுதயஞ் செய்ய. (௧௬)

சல்லரி முருடு மொந்தை தகுணிச்சங் குடமு ழாவே
கல்லவ டஞ்சின் னங்கா களம்பேரி பீலி தாரை
மல்லலம் பம்பை வண்கொக் கரைமற்று முள்ள வாய
பல்லவுங் கடலு டைந்த பான்மையி னியம்பா நிற்க. (௧௭)

குடைகொடி யால வட்டங் கோணுருத் தண்டங் கோண
லடைதரு தண்டம் பிச்ச மவிர்மணித் தோர ணங்கண்
மிடைதரு மொலிய லாதி மேவவா வளிக ளெல்லா
முடைகட லுதிக்கும் வெய்யோ னொளியற மறைத்துச் செலல. (௧௮)

இடியுள முட்க வார்க்கு முழக்கின வெழிலி மாண்பு
மடிதரப் பொழியா நிறகு மதத்தின புடவி யஞ்சு
மடியின பெருங்கா லஞ்சு மஞ்செவி யினவெஞ் ஞான்றும்
படிதுழாங் கைய வெங்கும் பார்ந்துகுஞ் சரங்கள் செல்ல. (௧௯)

நிலமக ளுடலந் தோய்ந்துந் தோய்வில வெனநேர் போகும்
வலமிகு கதிய மாற்றார் மணிமுடி யுறுகு ரத்த
கலகல வார்க்குந் தார கழிதராக் கடிவா ளத்த
பலபல வாக மொய்த்த பரித்திர ளொருங்கு செல்ல. (௨௦)

கிரியெனப் பெயர்தோற் றத்த கீண்டுவான் மேற்சென் மேல
பரிபல முழுங்கப் பூண்ட பார்கிழித் தோடுங் கால
வரிவயப் போத்து நேரு மடங்கலார்க் கசனி யேற்றிற்
றெரிதர முழக்கஞ் செய்யுந் தேர்பல செல்லா நிற்க. (௨௧)

படைபல மின்னுக் காட்டப் பரிசைமா மேகங் காட்ட
வுடைதிரை யுட்கத் தோன்று மொலியுரு மொலியைக் காட்ட
மிடையுட லொழுகும் வேர்வை மிகுமழை பொழிதல் காட்ட
வடையவும் வான மேவத் தடர்த்தென வீரர் செல்ல. (௨௨)

பரிமிசை யிவர்ந்து ளாரும் பாய்மதம் பொழிவ போலக்
கரிமிசை யிவர்ந்து ளாருங் கற்றெனைச் செல்லும் பொற்றேர்க்
கிரிமிசை யிவர்ந்து ளாரு மாய்க்கிளர் வீரர் காளு
மரிமிசை யிவர்ந்து ளான்சிற் றடிமுடிக் கொடுசூழ் போத. (உரு)

எண்ணிய தெண்ணி யாங்கே யெய்துதல் குறித்துப் பெம்மான்
மண்ணிய மணியே நேரும் வாலருள் செலுத்தச் செல்லும்
புண்ணியர் தாமி வர்ந்த சிவிகையைப் பொறுக்கப் பெற்றார்
நண்ணிய வியங்கா நிற்ப வியங்கினார் காடு வாழ்த்த. (உசு)

புண்ணிய வாத வூரர் பொங்கெழின் மதுரை மூதூர்
நண்ணிய கோட்டை வாய்தல் கடந்தனர் நண்ணுங் காலை
யெண்ணிய குமர வேளுக் கிருப்பிட மாகி யாருங்
கண்ணிய வுயர்கு றிஞ்சித் திணைசென்று கலந்தா ரன்றே. (உஎ)

ஆசக மில்லா வைய ராரரு ளிரம்பப் பெற்று
வாசக மென்னுந் தேறல் வழங்குதல் காட்டி யாங்குப்
பேசுப விருளு மேலூர் பிறைக்கோட்டி னுலு டைந்து
வீசுபல் லருவி யாக விடுவன சுவையந் தீந்தேன். (உஅ)

இவரளப் பரிய செம்பொன் கொண்டன ரெய்து கின்றார்
கவர்மன மில்லா ராகிக் கண்ணுதற் சார்பி னின்று
ரவர்கொளக் கொடுப்ப வன்னார் கையேற்ப தறிவித் தாங்குப்
பவர்படா துயருங் காந்தள் பரவுற மலர்ந்த வெங்கும். (உஎ)

ஆணவ மல்மென் றேது மடுசினக் களிற்றை நாளு
மேணமை யருளென் றேது மிகற்றேட்டி கொண்டி யாருங்
காணவென் றுள்ளார் நம்மை யென்செயக் கடவ ரென்று
நாணமுட் கிடப்ப வஞ்சி யிரிவன நகுமா வியானை. (உகூ)

நன்புல மறையோ ரென்று ஞானிலம் புகழப் பட்டா
ரன்பொரு வடிவ மாகி யாரருள் பெற்ற போதே
யென்பெலா முருகா நிற்க விருவிழி பொழிதல் காட்டும்
வன்புல வரைக ளெங்கு மறுகிழி யருவி யீட்டம். (உகூ)

இனையன நிகழா நின்ற விரும்பெருங் குறிஞ்சி நீந்திப்
புனைகட லனிகத தோடு புண்ணிய வாத வூரா
நனைமலர்க் கடுக்கை யாதி நலந்திகழ் தருக்க மேன்றித
துணைநிகர் வளத்தான் மிக்குத் தவலருங் காடு சார்ந்தார். (௩௰)

எண்ணரும் பொருள்கைக் கொண்டு வாதவூ ரிறைவர் செல்வா
ரெண்ணருங் குதிரை கொள்வா ரெய்துவ ரொருங்கிங் கென்றே
யெண்ணரும் புகழ்சால் வேம்ப னெண்ணிய தென்னு மென்றே
யெண்ணருந் தளவ மெல்லா நகைத்தன விடங்க ளெங்கும். (ருக)

இவரிடை யிருந்த நம்பேர் பெற்றதொன் றிரிந்து போய
திவரவ ருணர்ந்த காமிய கெதிர்ப்பட லொல்லா தென்று
தவர்பயில் காட்டி னூடு தங்கிய மான்க ளெல்லாந்
தவர்விடு கணையெ திர்ந்த தன்மையிற் றுவி யோடும். (ருஉ)

வாசக நவிலுங் காலை வயங்கிய தமைச்சி றப்பித்
தாசற நவிலு நன்றி யறிந்தன மகிழ்த லேய்ப்பப்
பாசடைத் தருக்க டோறும் பயில்செழுங் குழைப்பான் மேவிக்
கூசமொன் றின்றிச் செங்கட் கோகிலந் தொழிக்கு மாலோ. (ருங)

மேயமற் றிவர்பெம் மான்பால் விடாவிருப் புடையா ரன்ப
தாயவெவ் வுலகுந் தேற்றற் கமைந்தவோர் சான்று போன்ற
பாயபுற் கறிக்கக் கல்லாப் பசுளங் கன்றை நீத்து
மேயமை யாம லெங்குங் கதறுபு விராய சேதா. (ருச)

அந்தமில் புகழான் மிக்கா ரடைந்தனர் நம்பா லென்று
கந்தமென் மலர்க ளேவி வழிபடு கான நீங்கி
மூந்தவுள் ளனதா யாசை முதலிய வொருங்கு மாய்த்த
பந்தமில் லவர்ம னம்போற் பசையறு பாலை சார்ந்தார். (ருரு)

சுழல்கின்ற சூறை மோதத் தூங்குகோங் கலரின் பஞ்சி
யுழல்கின்ற தன்மைத் தாகி யொய்யெனப் பறக்குந் தோற்றங்
கழல்கின்ற காமத் தையா கருதிவா தாடு காலத்
தழல்கின்ற சினவெம் புத்த ரலைதிறங் காட்டிற் றம்மா. (ருசு)

வெடியவான் முதுவா யோரி விராயெதிர் பயிலுங் காட்சி
நெடியவாம் புரவி கொள்ள நிதியங்கொண் டணைவீ ரேனுங்
கடியகா னணைவோ மன்றிக் கடும்பரி யணையா வென்று
படியவாந் தன்மை காட்டும் படியென லாயிற் றன்றே. (ருஎ)

நேயமா வந்த னீர்நுந் நிகழ்வினைக் காடு முற்றுந்
தூயதாம் பெருந்து றைக்கட் சுடுதலெவ் வாறு கூடுந்
தீயவாந் தழற்கொ ழுந்தாய்ச் சிவனுமென் னிடத்தஃ தொல்லும
பாயதூ றருகு தோன்றி ரெனப்பரம புவமொந் தியே. (ருஅ)

நயப்பெரும் புகழ்சா லெங்க ளவனிக் கரசர் முன்னாள்
வியப்பரு மமணராய வீணர்தங் கலப்பு நீங்கி
யுயப்படுஞ் சைவஞ் சார்ந்த தொப்பவெம் பாலை நீங்கிக்
கயப்பிலா மருதஞ் சார்ந்தார் கருதவென் னுளத்துஞ் சேர்ந்தார். (௩௯)

தனியனா யமரு ஞானா சாரியற் றேடிச் செல்வீ
ரினியவ னெதிர்வா னும்மை யெதிர்ப்படுங் காலத் தெம்மை
முனியலா காமை வேண்டு மெனல்பொர முழங்கி வண்டா
ணணியலர் கழுநீர் வாவி நயப்பவெவ் விடத்து மல்கும். (௪௦)

புறவிரு ளகலத் தோன்றும் பொங்கொளி ஞாயி றென்ன
வுறவக விருள கற்று மொருஞான பானு வெய்தத்
திறமுறுஞ் சைவ ரியாருந் திருமுக மலர்வ தேய்ப்ப
நறவெழ மலர்ச்சி காட்டி நக்கபங் கேரு கங்கள். (௪௧)

மாரவே ளங்கை மேவி வரிசிலை யாகி யேவு
மாரமா மலர னைத்து மருச்சனை மலராக் கொண்ட
வீரர்தா மணைந்தார் காண வெள்குது மெனவ ளைந்தாங்
கீரமார் சுவைத்தண் டெல்லா மிடந்தொறும் வளைந்து நின்ற. (௪௨)

கருபுகழ் வழுதி நாடு நாடுமந் திரியாய்த் தொன்னூற்
புருமுறை நடாத்த லாலே பொழிதரு முகின்மற றியாவு
மிருவிழை வுற்று மன்ன மேன்மையார் தமைவ ணங்கத்
தருமென வணங்கல் போலத் தலைவணங் கினசெஞ் சாலி. (௪௩)

நீறணி வேணிப் பெம்மா னிருமல வுமையா ளோடும்
பேறணி யன்பர் நெஞ்சப் பிறங்குபோ தமர்த லேய்ப்ப
வீறணி புண்ட ரீக மிசைப்பேட் டோடன்ன மேய
சேறணி மருதந் தீர்ந்து திரையெறி நெய்தல் சார்ந்தார். (௪௪

அரசிய லமைச்சின் மேயு மதிற்சிறு பற்று மின்றிப்
பரசமே வியநம் மையர் திறமெனப் பரந்த வாரி
விரசழல் கொழுந்து கொள்ள மேவுவர் நீருட் டோய்ந்து
மூரவவுப் புறைத்த லின்றிப் பயிலுவ வுளமீ னெல்லாம். (௪௫)

மலிதரு புகழான் மிக்க வாதவூ ரடிக ளானு
மொலிதரு சுத்த முற்ற ருற்றன ரிங்கி லத்திற்
பொலிதரு புலவ னைத்தும் போக்குவா மென்று தாழை
கலிதரப் பூத்து நூற்றுக் காவதம் வாசம் வீசும். (௪௬)

கரிமுதற் படைக ளோடுங் காணவிர் நிலத்தி யங்கும்
பெரியவ ரிதற்கோர் பாங்கர்ப் பெருந்துறை மருங்கு வந்தார்
தெரியுமவ் வெல்லை வந்து சேர்தலு நெக்கு நெக்குப்
பரிவுள முருகிற் றெண்ணிப் படுமெழு கினும்வி னார்ந்தே. (௪௭)

பொறுக்கலா காத பாரம் பொறுத்தவ னிறக்கி யாங்குக்
குறுக்கலா காத வாதை யாவையுங் குலைந்து போக
வெறுக்கலா காத வின்ப மேவிய திரண்டு கண்ணு
மறுக்கலா காத வாரி பொழிந்தன வருவி மான. (௪௮)

இந்திய மைந்த னுக்கு மினியன வெய்தா நிற்கச்
சந்திய ரோளுங் கணனுந் துடித்தன தகவ லத்தே
நந்திய விவற்று லென்னை யாள்பவ னயந்து வைகு
முந்திய விடமீ தென்றே முன்னின ருவப்புக் கொள்வார். (௪௯)

சிவிகைநின் றிழிந்தா ரிந்தத் தேமடைந் தார்தஞ் சென்ம
மவிகைசெய் திடுதெ லாகு மாதலா லமர்வா மென்றார்
குவிகைய ராகிப் பக்க நின்றவர் குறித்த வாறே
கவிகையீர் செய்வ தென்று காரியஞ் செய்ய லுற்றார். (௫௦)

கரிபரி யிரதஞ் சூழ நிறுத்தியக் கடையி னுள்ளால்
வரிகழல் வீரர் சூழ்ந்து வைகிட விருக்கை செய்து
தெரிதர வதனுக் குள்ளாற் றிகழ்பட மாடஞ் செய்து
புரியுடை முந்நூன் மாபர் பொருந்திநன் கமரச் செய்தார். (௫௧)

அணிபட மாடத் துள்ளா லமர்பவர் வேத நான்குந்
துணிபொரு ளான்ம நாதர் துணையடி வணங்க வெண்ணிக்
கணிதமில் சனங்க ளோடு கைகுவித் தெழுந்து வல்லே
மணிமதிற் கோயில் புக்கார் வாரழற் றீர்த்தந் தோய்ந்தார். (௫௨)

நீறுகண மணிபு னைந்து நிழலுவ வாத வைவகை
யாறுசெய் தான மோனப் பிள்ளையை யடிவ ணங்கி
யேறுவந் தேறு மான்ம நாதர்தந் திருமு னெய்திப்
பேறுவந் தளிப்பா யென்று பேசுபு வணங்கி னாரால். (௫௩)

வெள்ளிய நீறு வாங்கி விளங்கநெற் றியிற்பு னைந்தே
யொள்ளிய கருணைத் தாயாம் யோகநா யகிமுன் சென்று
வள்ளிய வன்பு பொங்க மனநெகிழ்ந் துடையத் தாழ்ந்து
தெள்ளிய கருணை பெற்றுச் சென்றனா ருருந்தஞ் சூழ்ந்தே. (௫௪)

பரிசன மூன்னும் பின்னும் படாதர வந்து தாழ்ந்து
தரிசனஞ் செய்து செல்வார் தமையறிந் தாங்க ணுள்ள
புரிமறை யுணர்மூந் நூறு பூசுரர் களுந்தொ டர்ந்தார்
வரிகழலரச மைச்சர் தமக்கிது வகுக்க லுறமூர். (ருரு)

இத்தல மாாதி மூர்த்தத் தலமிதி லடைந்து போற்றி
முத்தலம் படைப்போன் முன்னு மூவரும பேறு பெறமூா
கைத்தல நெல்லி யென்னப் பலந்தரும் கருதி னூலு
மெத்தல மிதனுக் கொப்பென் றெடுத்துரை யாட வல்லேம. (ருசு)

ஏன்றுபற் பலவு ரைத்துத் தொடர்தரு மினைய ரோடு
நன்றுதம் மிருக்கை யெய்தி நகவவர்க் கிருசகை நல்கிக்
குன்றுத லில்லாச் செம்பொன் கோடிசன மானஞ் செயது
வொன்றுத லில்லா வன்பிற் போக்கினர் தனிய மர்ந்தார். (ருஎ)

மறையவர் போன பின்பு மஞ்சனஞ் செய்து கொணடு
பிறைமுடிப் பெருமான் பூசை பேணுபு பிறகைச் செய்து
நிறைசுவை யமுத முண்டு நிலவவாய் பூசிப் பின்றை
யறையயர் வுயிர்த்த மார்ந்தா ரடியனேன மனதத மாந்தாா. (ருஅ)

வழியியங குதலால் வெப்பம வாதலு ரடிகட் காய
தழியாா மறையே மென்னி லருமபழி யாகு மென்று
பழியறத் தனனு ளோாநதோர் பசுமபொழில் புகுநது ளான்போற்
கொழுகதிாச் செல்வ னோடிக் குடகட லழுவம் புக்கான். (ருக)

தாவர மாகி யுள்ள சைவந்தா பிகக வல்லா
மேவர வோரூர் நின்றும் வேறோரூ ரடைநதா லென்ன
மாவர வொளியோன் றென்பா லொரீஇவட பாலிற் சாரச்
சீவரப் போாவை யென்னச் செககாவா னெழுநத தனறே. (சுO)

ஒருஙகுவா தாட வலலா ரொருவரு மில்லை யென்று
நெருஙகுபல் பவுதத ராய நிறையிலாா வளாகதாற் போல
மருஙகுகு ரியனு மிலலை மதியிலை யுடுவு மில்லென்
றிருஙகடல் சூழ்வைப் பெங்கு மிறுத்தன வந்த காரம். (சுக)

இரவுமே விட்ட தநதோ வென்செய்வா ருலகத் துள்ளார்
கரவுமே லிடுமே யென்று கண்ணோட்ட நனிய டைநது
பரவுசெய் மதிக்கு முன்னம் போயுப கரிப்போ மெனமூ
தரவுகூா தரமு ளைத்த தாரகைக் கணங்க ளெல்லாம். (சுஉ)

இவைகொலோ நமையி ரிக்கூமெண்ணுமை யொன்று செய்த
னவைபடா ததுவோ வென்று நத்தமெண் ணுற்ற காலைச்
செவையுறு வதுபொ ருளுய்ச் செழுமதி யுதயஞ் செய்தான்
குவையுறு வருமல் லம்ம கொடிசெடி யகத்தொ துங்க. (கரு)

இன்னண நிகழுங் காலை யிரவுசெய் கடன்கண் முற்றி
நன்னலத் திமுது செய்து நகுபுக ழமைச்ச ருர்தா
மின்னகு மமளி மேலான் மேவினு ரான்ம நாத
ருன்னரு மருளா லாங்கோர் சிறுதுயி லுற்று ரன்றே. (சுச)

கனவிடை யான்ம நாதர் கதிர்க்குமோ ருருவந் தாங்கி
யனகமார் குருந்த நீழ லமரவும விடாது சூழ்ந்து
வினவுமா ணுக்கர் பல்லோர் மேவவுந் தாமெ திர்ந்து
மனநெகு மாறு மேன்மேல் வணங்கவுங் கண்டா ரன்றே. (சுரு)

அருந்தவத் தினரிவ் வாறு கண்டழு தழுதி ரங்கிப்
பொருநதமுன் காணுக் காட்சி கணடனம் பொய்யா காது
திருந்தமற் றவனே யென்னை யாட்கொளுந் திறத்தோ னென்று
வருந்தலற் றிருந்தார் வெய்யோன் வருதலை நோக்கி மாதோ. (சுசு)

சீதநீர் வளத்தான் மிகக திருப்பெருந் துறையை நாடி
வாதவூ ரடிகள் வந்து சார்ந்தமை வகுததுச் சொற்றும
போதநா யகனே யான பொஙகொளிக குரவற் கண்டு
காதலி னுபதே சமபெற் றிடுதிறங கரைய லுற்றும். (சுஎ)

திருப்பெருந்துறையடைந்தபடலமுற்றிற்று.

ஆகததிருவிருத்தம ககஉ௬.

---

# உபதேசப்படலம்.

பரமபரன் செவ்வாய்ப் பாடல் பந்தத்தை நல்க லோடு
நிரமபுமுத் தியையு நல்கு நிகழ்திரு வாத வூரா
வரந்தழை செவ்வாய்ப் பாடன் மயக்கறுத தெந்த ஞான்று
முரமபெறு முததி யொன்றே நல்கிடு னுமைப்ப தென்னே. (க)

கதிரவன் வரவு நோக்கிக் கண்டுயி லாம லைய
ரதிர்புன லிருகண வார வழுதழு திரஙகுங் காலை
முதிரருட் குரவன் காட்சி முந்துபு தானுங காண
வெதிரற வருவான் போலவ் வினன்குணக் குதயஞ் செய்தான். (உ)

சிவப்பிர காசந் தோன்றுஞ் செயிரறு காலத் தேமுன்
னவப்பிர காச மாகி யமைந்தன மாய்ந்தாற் போலத்
தவப்பிர காசஞ் செய்த சந்திர னுடுக்க ளெல்லா
மெவப்பிர காச மெய்திற் றென்றுபோய் மாய்ந்த வன்றே. (௩)

கருமல மென்னப் பேசுங் காரிருட் டடைவுற் றுங்குப்
பொருமிருள் வளையப் பட்டுப் போதுற்றோ மதுபோய் மாள
வொருகதி ருதித்த தூறென் றுளத்துகொ ளினியென் றையர்
திருமுக மலர்ந்த தென்னச் செய்யதா மரைம லர்ந்த. (௪)

ஒள்ளிய வாத வூர ருபதேசம் பெறுவா ரின்று
தள்ளிய நமக்கென் னுங்கொ லெனப்பர சமய ரெல்லாந்
துள்ளிய வாய்கு விந்த தோற்றம்போ லோடை யெல்லாந்
தெள்ளிய வாம்ப லாதி செய்யவாய் குவிந்த வன்றே. (௫)

இன்னண நிகழுங் காலை யெங்களை யாளு மையர்
சொன்னதங் கரும மாற்ற வெழுந்தொரு துறைக்கட் சென்று
ரன்னவர் வருமு னன்ம நாதரா ரியராய்ப் பல்லோர்
துன்னவொண் குருந்த நீழ லமர்திறஞ் சொலல லுற்றும். (௬)

கதிரொரு கோடி யொன்றாய்த் திரண்டெழு காட்சி யென்ன
முதிரொளி மேனி காட்ட மூவுல கத்து மொய்த்த
பிதிர்தலி லழகெ லாம்ப் பிறங்குருக் கொண்ட தென்ன
வதிர்மறைக் கப்பா லாரோ ரந்தண வடிவங் கொண்டார். (௭)

வீழ்சிக ழிகைக்கு மேலான் மிலைச்சிய வுருத்தி ராக்க
தாழ்வட மிலங்க நெற்றி தடம்புய நிறமுற் பாவம்
போழ்திரு நீற்றி னோடக் கணமணி பொலிய வுந்தி
யாழ்திரு வரையில் வெண்டு சள்ளொளி நிலவு வீச. (௮)

துலங்குமிவ் வுருகொண் முன்னந் துதைமுடி மதியொ ழுக்கு
மிலங்கமு தொருவு ருமை விமையந்தென முந்நூல் பொற்ப
வலங்கிள ரிருசெ விக்கண் வளைக்குழை பிணங்கா நிற்ப
கலங்கிளர் பொன்செய் வேற்றுக் குழைமரீஇ நயப்பத் தூங்க. (௯)

வந்துபைங் குருந்த நீழல் யோகவா சனம்வ லத்தா
ணந்துறக் கீழ மைத்தாங் கிடத்தாணமே னகவ ளைத்து
மூந்துமுத் தரியம் யோக பட்டத்தின் முயங்கப் பூண்டு
நந்துசெய் கூற்ற முட்கக் கருதவ னுளைச நோக்கி. (௧௦)

தெருளிர வுநவத் துள்ள சிவஞான போதந் தாங்கி
யருளிடக் கரங்க வித்து ஞானமுத் திரைய மைர்த
பொருள்வலக் கைவி ளங்கப் புன்னகை முகத்த ரும்ப
மருளற வீற்றி ருந்தார் மாலயன் றேடிக் காணார். (கக)

இவர்நிலை யின்ன தாக வொருவரி லீரைஞ் ஞூற்று
ருவரிலா மனத்தார் முன்சொ லுத்தர கோச மங்கைத்
தவர்சொறே மிருந்தா ரெல்லா மானிட ராகிச் சார்ந்து
கவரிலார் வனைந்து வைகி யாற்றலுங் கழறி யுய்வாம். (கஉ)

வேதநூ லுரைப்பார் சில்லோ ருரைத்தவை விளக்க மிக்குப்
போதமாம் படிப குத்துப் பொருணுரைத் திடுவார் சில்லோ
ராதரம் பயப்பக் கன்ம காண்டத்தை யறைவார் சில்லோர்
மேதக வமைந்த ஞான காண்டமே விரிப்பார் சில்லோர். (கங)

உரைத்ததன சென்னி யாய வுபநிட முரைப்பார் சில்லோர்
வரைத்தவிப் பொருமை நிற்கச் சிறப்பென வகுக்கப் பட்ட
விரைத்தவா கமங்கண் மேலு மேலுமோ திடுவார் சில்லோ
ரிரைத்தமற் றவற்றி னுள்ளு முண்மையேற் றிசைப்பார் சில்லோர். (கச)

பரசம யத்தின் றோடம் பகுத்தெடுத் துரைப்பார் சில்லோர்
தரமிகு சைவ மொன்றே சான்றதென் றிசைப்பார் சில்லோர்
விரவது வுளுஞ்சித் தாந்த சைவமே விட்ட காலை
யுரனறு மென்பார் சில்லோ ருண்மையென் றுரைப்பர் சில்லோர். (கரு)

சரியையே முதனு னூலுந் தனித்தனி யோதி யோதி,
விரிதரு பொருளு மாய்ந்து மேதகப் புகல்வார் சில்லோர்
தெரிதரு புராண மெல்லாந் தெரிந்தெடுத் திசைப்பார் சில்லோர்
பரிதரு முபபு ராணந் தனித்தனி பகர்வார் சில்லோர். (கசு)

உடைவெண்கோ வணமே கீளே யுணவுகைப் பலியே யொண்கண்
படையக விடமே சாந்தாப் பரிப்பது தெய்வ நீறே
மிடைகல னுருத்தி ராக்க மாலையே வேறு வேண்டா
நடையினா தனித்தி ருக்கை நயந்தவ ரானார் சில்லோர். (கஎ)

திருவிய றங்க ளுள்ளாற் றிகழ்ஞான பானு விற்கு
மருவிய வுதய மத்த மயமென்ப தின்மை யாலே
கருவிய விருளு மில்லார் காண்டகு பகலு மில்லா
ரருளிய லென்னுந் தானத் தமர்ந்துவாழ் கின்றார் சில்லோர். (கஅ)

ஆடுவர் சிலர்கை கொட்டி யாடுதற் கிசையா வண்ணம்
பாடுவர் சிலருன் மத்தர் பாலர்பை சாசர் போல
நீடுவர் சிலர்கை கூப்பி நேருறத் தொழுவார் சில்லோர்
கூடுவர் சிலர்நி னைந்து குழைந்துகைத் தழுவார் சில்லோர். (௧௯)

இத்தகை யடியா ராகு மொருவரி லீரைஞ் ஞூறு
வித்தகர் விருப்பிற் சூழ நடுமிளிர் குருந்தி னீழ
லுத்தம ரமருங் காட்சி யொளிர்தாரா கணங்கள் சூழ
முத்தவெண் மதிய நாப்பண் முயங்கிய தோற்றங் காட்டும். (௨௦)

வழிபடு நால்வ ருக்கா வடகிழ லமர்ந்த காட்சி
மொழிபடு வாத வூர்மா முனிவரற் காகப் பைந்தேன்
கொழிபடு மலர்க்கு ருந்தக் கொழுநிழன் மேவ வோவென்
றொழிபடு திறமில் காட்சி யுறுவா ருவகை பூத்தார். (௨௧)

அழகிய துறைக்கட் சென்று ராவயிற் கரும முற்றி
மழவிளங் கன்றை நாடி மனம்பதைத் தணையாப் போன்று
குழகர்தங் கோயில் வாயில் குறுகினார் நெடுங்க ணீர்த
வழுவகன் மார்பின் மேனி மயிர்ச்சிலிர்ப் பொருங்கு மேவ. (௨௨)

நெஞ்சநெக் குருகா நிற்க நேர்பணிந் தெழுந்துள் புக்கார்
வஞ்சமி லான்ம நாதர் சந்நிதி வந்து கூடிக்
கஞ்சமென் கரங்கள் கூப்பிக் கரைந்துயோ காம்பி கைத்தாய்
செஞ்சரண டொழுது சூழ்ந்து சென்றனர் திகைத்து நின்றார். (௨௩)

நின்றுள மதித்த லோடு நெடியமா லயன்முன் னோனோ
சென்றுசென் றணுகுந் தோறுஞ் சேயனாய்ச் சிந்திப் போருக்
கன்றவர் சிந்தை யுள்ளே யணியனாய்ச் சுடரோர் மூன்றும்
வென்றுமிக் கொளிவிட் டோங்கு சோதியை விளங்கக் கண்டார். (௨௪)

மறைமுழு மையுமென் கோவம் மாமறைச் சென்னி யென்கோ
நிறைபெருந் தொண்ட ரானோர் நெஞ்சகக் கோயி லென்கோ
நறைசெயிக் குருந்த நீழ லுறையனு ருறைவ ரேலோர்
குறைவிலா விதையா தென்று குறித்துளங் கூறு கிற்பேம். (௨௫)

பைங்கள்வார் குருந்த நீழ னென்னனும் பார்த்த தில்லை
கங்கணன் குடைய தேவுங் காணுமா தவமுள் ளானே
செங்கண்மா விடந்துங் காணாத திருவடி மலர்மண் டோய
வெங்களை யாள வென்றே யெழுந்தரு ளியவிது வென்பார். (௨௬)

வெள்ளிய நீற்றி னோடு வெள்ளிய முறுவ லோயேங்
கொள்ளிய வமைந்த மூல மலம்விளர்த் திடக்கு மைக்குக்
தெள்ளிய மேனித் தேசே சிந்தையுட் டேசு செய்யு
மள்ளிய தொழிதற் கெண்ணி னடியாதங் குழுவே சாலும். (உஎ)

நெருநலிற் கனவிற் கண்ட வண்ணமே நிரம்ப வின்று
கருதுதற கரிய காட்சி நனவிலுங கணடே னீது
பெருகொளி யமர ரேனுங் கனவிலும் பெறுவ ரோவென்
றுருகுவா ரெக்கு ரெக்குள் ளுடைவரோ வியம்போ னிற்பர். (உஅ)

மறையவ ராகி யிங்கண் வைகுவார் காந்த மொத்தார்
பொறையவ ருணோர் நின்று பொருத்திடு வாரை யொத்த
திறையுமன் பில்லா நாயேன் மனமிரும் பொத்த தென்றுற்
குறையவ னுய்யுங் காலங் குறுகிய தென்று வப்பார். (உகூ)

இவ்வண்ண மெணணி மற்று மெண்ணுவ தொன்று மில்லை
செவ்வணண விவரே நமமை யாட்கொள றேற்றந் தீரா
நவ்வண்ண மவ்வண் ணமபோய் நசித்தவென் றோடிச் சென்றே
யவ்வண்ண மாயி னார்த மடிவணண மலர்க்கீழ் வீழ்ந்தார். (௩0)

வீழ்ந்தவ ரெழுந்தி ராமல் வீழ்ந்தவா கிடப்ப நோக்கி
யாழந்தவான் கருணைச் சோதி யெழுகவென் றருளி றேர்ந்து
வாழநதனேன் வாழ்ந்த னேனென றெழுந்திரு மலர்கைக கூப்பித
தாழந்தடி மலரின பாங்காச் சார்நதுநைந உருகி நின்றார். (௩க)

ஆயவப் பொழுதாங குள்ள வடியவ ரொருங்கு கூடித
தூயதம் பெருமான் செமபொற் றுணைப்பதந் தொழுது வாழ்த்தி
நேயமிக் கணைந்துளாரை யாட்கொள னெறியே யாகு
நாயனே யென்று வேண்ட நகைமுகக் கருணை பூததா. (௩உ)

கண்ணிய காலம் வேணடேங் கனவிய துணாதல் வேணடேம்
புணணியந் திரண்டு வந்தாற போன்றமற் றிவாபொ ருட்டியா
மெணணிய தெணணி யாங்கே முடித்துமின் றிரலே யென்றார்
தணணிய வடியா ரெல்லாந் தாழ்ந்தர முழக்கஞ் செய்தார். (௩௩)

ஐந்தொழி னடாத்துந் தேமா யான்மநா யகர்வி ளங்கு
மைந்தெழிற் சபைக்குப் பின்னர் வண்குருந் தடியொன் றேயவ்
வைந்தொழி லுங்க டந்த வனுக்கிர கத்தே மென்று
மைந்தடி யவர்பல் லோரு மதித்தன ரலங்க ரிப்பார். (௩ச)

விரிமலர்க் குருந்தஞ் சூழ வெண்பளிங் குன்ற மப்போ
தரிபளிங் கெடுத்தோர் வேதி யாக்கிமற் றதற்கு மேலாப்
புரிசெய்காற் றூணி நீஇமேற் போகட லனைத்தும போகட்
டெரியவைம் பொன்ப ரப்பி யொருசபை விளங்கச் செய்தார். (௩௫)

தேசிக னமருந் தான மென்பதுதேற்றி யாங்குத்
தேசிக மமரா நினற செம்பட்டு விதானஞ் செய்து
கோசிகப் பிரியர் வைப்பா மிதுவென்ல் குறிப்பிப் பார்போற்
கோசிகங் கொய்தெ டுத்துச் சூழவுங் குலவத் தூக்கி. (௩௬)

அரும்புவெண் டரள மாலை யலங்காற் புறத்துந் தூக்கி
விரும்புகப் புரச்சாந் தத்தால் வேதிமே லிடத்தை நீவி
வரும்புது ஞாயி றென்ன மணிவிளக் கனந்த மேற்றி
யிரும்புளுங் கரைய மற்று மியல்புற வலங்க ரித்தார். (௩௭)

செய்யசீ ரடியார் கூடி யின்னன செய்யும் வேலை
வையமுற் றுய்ய வந்த வாதவூ ரடிகண் முத்தித்
தையலைப் புணருங் காலஞ் சார்ந்தரே யுறுத லன்றி
வெய்யயா முறல்கூ டாதென் பானில்வெய் யோனொ ழிந்தான். (௩௮)

கதிரவன் மறைத லோடுங் காரிருள் வான ளாய
ததிர்தர வுடுக்க ளாங்கீழ் கருமபின வலைவக்கு நாப்பட்
பிதிர்தலில் கலைகள் வீசிப் பிறங்கினன் மதிநீ லப்பட்
டெதிர்வின்முத துறகட் குஞ்ச மியைந்தமேற் கட்டி மானும். (௩௯)

பூவினுட் சிறந்தா மேனும் பொழுதுபோ குற்ற காலை
மேவுநந் தமக்கென் னுமென் றரவிந்த மொருங்கு வீந்த
தேவினுட் சிறந்தா பாதஞ் சிவனுவம் யாமே யென்று
வாவியுட் பொலிந்த மூந்தி மாணடசெங் கழுநீ ரெல்லாம். (௪0)

அளிகிள ரந்தி யாதி யத்தயா மத்தின் காறுந்
தளியமை பணிசெய் வாருந் தகச்செய்து கழிந்த பின்றைத்
தெளிகிளர் மூன்றும் யமந் தீர்ந்தது காலாம் யாம
மொளிகெழுத் தோன்றிற் றுங்கண் வாதவூ ரருமுற் றூரால். (௪௧)

கனிமலர்க் குருந்தி னீழ னக்கவா சனத்தின் மேலாற்
றனிமுத றென்பா லுக்கி முன்புபோற் சார்ந்தி ருந்து
புனிதமிக் கமைந்து வந்த வாதவூர்ப் புலமை யோரைக்
கனிவுற வெதிரி ருத்திக் கனிந்துபக் கிரமஞ் செய்வார். (௪௨)

அருள்கொடு மனுமுன் னுமா றத்துவா வையுஞ்சோ தித்து
வெருள்கொடு பதைத்து நீங்க வவற்றினை வேறு செய்து
தெருள்கொடு பயிலா நிற்குஞ் செவ்விய திருநோக் கத்தான்
மருள்கொடு மறைத்து நின்ற மாமலஞ் சிதைய நோக்கி. (௩௫)

கரமலர் சென்னி சூட்டி மாயையுங் கருமந் தானும்
விரவுறு வண்ணம் போக்கி விளங்குபொற் கலையான் மூடி
யுரமிகு லுக்க பஞ்சாக் கரவுப தேசஞ் செய்து
வரமிகு முயிர்தா மாகும் வண்ணம்பா வனையி யற்றி. (௩௬)

ஊத்தொடு முயிரை வவ்வி யுற்றதோர் பிரம நாடி
வளப்பெரு நெறியே போய்தது வாதசாந் தத்தின் மேலா
லளப்பரு மிருப குப்பற் றுணர்தந் துய்க்க வுய்த்துக்
கொளப்படு மொருபற் றின்றிக் கோதிலா வொருதா மாக்கி. (௩௭)

உடல்பொரு ளாவி மூன்று மொழுக்குநீ ரொடுகே வர்ந்து
விடலரும் விருப்பிற் பாத பூசனை விளைத்தி யென்ன
மடலவிழ் கழுநீர் சாந்த மான்மத மாதி யாய
கெடலில்பல் பொருளுங் கொண்டு கேழ்கிளர் தரப்பூ சித்து. (௩௮)

மறைபுகன் முகம னெல்லா மரபுளி முடித்த பின்னர்
நிறையருட் குரவர் தாட்கீழ் நேர்பணிந் தெழுவார் சென்னிக்
குறைவிறம் பாதஞ் சூட்டிக் குறிக்கொளு நுதலின் மீது
கறையில்வெண் ணீறு சாத்திக் கழுநீர்மா லையுந்த ரித்தார். (௩௯)

ஆரிய னடிப்பூ மாலை யணிமுடி புனையப் பெற்ற
சீரிய வாத வூரர் செவ்விய வான்ம நாத
ரேரியற் கருணை யோகாம் பிகையிவர் பதம்ப ணிந்து
மூரியம் பரம ஞான மூர்த்தியா யமர்ந்தா ரன்றே. (௩௮)

புறவிருண் மாறு மாறு போதரு மென்னைப் போல
மறவிரு ளாய தீய வகவிருண் மாறு மாறே
பறவுரு விவர்வாய் நின்றே ரருங்கதி ருதிக்கு மென்று
திறமுறத் தெளிக்க வந்தான் போற்றின கரனெ ழுந்தான். (௩௯)

தினகர னுதயங் கண்டு திருவருள் பெற்ற வையர்
மனமெக வெழுந்து போந்தக் கினிப்புனன் மருவி யாடி
முனகர்கொள் ளாத நீறு கண்மணி முயங்கத் தாங்கி
மனகவா ரியன்பொற் றாட்கீழ்ப் பணிந்தெழுந் தருகு நின்றார். (௪௦)

வேறு.

நின்றமையும் வாதவூர் முனிவர்நா யகருணைக்கா ணிரம்ப நோக்கி
நன்றமைய நேரிருத்திச் சிவஞான போதமெனு நன்னூல் கைக்கொண்
டின்றமைய வுலகோப காரமாக் கைக்கொண்மி னென்று நல்கி
யன்றமைய வதனகத்துப் பொருளனைத்துந் தொகுத்தருளி னறைவ தானார்.

புறமகமா மதத்துழன்றும் புகல்வருணாச் சிரமநிலை போற்றி நின்று
மறமிருதி மறைபகரு மாற்றுவழு வாதுமக மனைத்துஞ் செய்து
முறவுயரும் வேதாந்தப் பொருடேர்ந்து முற்றியபி னுணர்வான் மிக்கோர்
நிறமருவு பெருஞ்சைவ நெறிதீக்கைக் கிழமையுறு நேய ராவார். (௫௨)

புரிதருமத் தீக்கைபல திறனுகு நோக்கூறு புகற வெண்ணல்
விரிதருநூ லியோகமவுத் திரியெனவே ழிவற்றீற்று விளம்புந் தீக்கை
பரிதருமா றமைகிரியை ஞானமொரோ வொன்றேழுப் பால தாரு
முரிதருமா றமைசமய விசேடநிரு வாணமென வுஞற்ற லானே. (௫௩)

எண்ணியவித் தீக்கையடைந் தவர்நம்மைச் சேர்தவமீ ரிரண்டே யாகு
மண்ணியவண் சரியையெனக் கிரியையென யோகமென வமல மாக
நண்ணியமெய்ஞ் ஞானமென வவைகொடுத்த னம்முலக நண்ண லாதிக்
கண்ணியநம் மொடுகலத்த லீருக நாற்றிறனுங் கனைந்த நான்குள். (௫௪)

அறிவுருநா மமர்கோயி லலகிடுதென் மெழுகன்மல ரடவி மேவிச்
செறிமலர்குற் றெண்ணிலீருடை செய்தணிதல் விளக்கமிகத் தீப மேற்றன்
முறிவினம தடியரைநா மெனக்கருதிப் பணிபுரிதன் முதலாந் தாத
நெறியமையுஞ் சரியையினை யாற்றுவா ரெம்முலக நிலவி வாழ்வார். (௫௫)

தூயமக நெறிக்காகும் விசேடமெய்திப் பூசைசெயச் சொற்ற கொண்டே
யாயதிற லாதார சத்திமுதற் சத்தியெனு மம்பு யதது
மாயமிலா தனமுதலாப் பாவித்தா வாகித்தா வரண மாதி
யேயவியற் றுபுதீயோம பிடுகிரியைப் புத்திரரெம் மருகி ருப்பார். (௫௬)

இயமாதி யெட்டுறுப்பி னியல்படைந்தே யிருவளியி னியக்க மோப்பி
வயமாரு நடுநாடி யுறப்பயின்று றுதார மரீஇய வோர்ந்து
நயமாக மதிவரைப்பி னெய்தியமு தருந்தியொளி நம்மோ டொன்றும்
வியமாய சகமாகக யோகுழப்போ ரெம்முருவ மேவி வாழ்வார். (௫௭)

பழியிலவை முற்றியருள் பதிந்துவினை யொப்பெய்தும் பருவத் தியாமே
கழிமகிழவிற் றேசுறறமுறீஇ நிருவாணத் தத்துவாக் கழலப் போக்கி
யழிவிலரு ளுறுக்குமெழுத் தைந்துநவின் றமலபாச மகற்றி யின்ப
மொழிவரிதா வுய்த்திடுதல சன்மார்க்க மென்பதஃ துணைக்க லுற்றும். (௫௮)

உருவருவங் குறிகுணங்கள் சுட்டவீ டொரீஇயனைத்து முயிர்கரு கல்கி
மருவியுடன் றெழிற்படுத்துப் புலன்கொளுவி வீடுதவு மாட்சித் தாகி
நிருமலமா யழிவறநின் றோங்கொளியாய் நனிவிளங்கி நிகழும் வேதத்
தொருமுதலாம் பதியொன்றே யன்னதுநா மேவுயிரி னுண்மை கூறின். (ருகூ)

அரிபளிங்கிற் பற்றியவை தாமாய்ச்சத் தசத்தும்பாத் தறிசத் தாகித்
தெரிவசிப்ப வருநிறைவாய் மூவகையெண் ணிலவாய்நித் தியமாய் நாளும்
பரியிருளு மொளியுமலாக் கண்ணியல்பா யுறுநம்மாற் பகருஞ் சுத்தி
விரியவமைந் தின்பமொன்றே யுறுவனசிற் றுணர்வினவாம் வெம்பா சந்தான்.

ஒன்றாயெண் ணருமாற்ற லுடைத்தாய்நித் தியமாய்ச்செம் புறுமா சொப்பா
தொன்றாய்நம் மருளினு னீங்குவதிக் கருமலத்தின் றொடர்ச்சி நீங்க [யத்
நன்றாய தனுவாதி தருமாயை யுணவாக நவிலுங் கன்ம
மென்றாய மூன்றொடுமா யேயநிகழ் திரோதாயி யிரண்டுங் கூட்ட. (சுக)

ஆயமல மைந்தாகு மவற்றினொடு பழவினையு மாண வத்தின்
மேயவொரு முதலுநமக் கில்லையான் மாவிற்கே விரியுமாயை
யேயகன்ம நமதருளல் லாமலா விக்கென்று மியங்கா வாகுந்
தாயமல பந்தவுயிர்க் கிப்பந்தம் பொருத்தலப்பந் தந்தீர்த் தற்கே. (சுஉ)

மாசுகழித் திடப்புடைவைக் குவரூட்டு திறம்போலும் வைய மாதி
வீசுபடைப் பளிப்பழிப்பு மறைப்பதுநீக் குதலாய வினையோ ரைந்துந்
தேசுமலர் மிசையுறைவான் முதலியவை வரைகொடுநாஞ் செயவு மோர்சா
மேசுவிகா ரம்படையே மவிகார வியல்பினுக்கோ ரீறின் றாமால். (சுங)

விடமரவை யெவன்செய்யுந் தீயினைச்சு டெவன்செயுமிவ் விதமே போல
வடருநெடு மாயையெம துடைமையா யினுமயக்க மாற்றா தெம்மைத்
தொடர்தருமிந் திரஞாலம் புரிபவனை மயக்குவதோ தொடங்கான் மாவை
யிடர்செய்மல மயக்காதேன் மாயையுங்கள் மழுமயக்கா விரிந்து போகும். ()

தெளிசிவமா கியநாமு நமைநீங்கா வருளாஞ்சத் தியுமான் மாவுங்
களிதிரோ தாயியுமபிற் படுமாமுற் படுமலத்தின் கருமை தேய
வளிகெழுநஞ் சத்திகலப் புறுங்கலப்பப் புண்ணியமே லாகு மாக
வுளிமலபா கமும்பிறக்குஞ் சதநிபதி தரும்பின்வினை யொப்பு மேவும். (சுரு)

அன்னதுசார் தரமலமென் றறைந்ததிரோ தாயியரு ளாயே நிற்கு
மன்னவத னுண்மூல மலத்தொலைவ தல்லாமன் மற்றொன் றுண்டோ
சொன்னவெம திச்சைமுதன் மூன்றுமுயி ரிச்சைமுதற் றொக்க மூன்றும்
பன்னவிளக் கம்புரிநது வியாப்பியமாக் குபமேலாய்ப் பீடரு மன்றே. (சுசு)

அருளினெனை யுந்தனையு மறிந்தவுயிர் கதிரொடுகண் ணணைந்தாற் போலத்
தெருளினெம தள்ளடங்கி யனந்த மொன்றுமே தினையா நிற்கு
மருளில்யான் முதலென்ற லருளின்யான் முதலென்றன் மாறி மாறாப்
பொருளினருண் முதலென்ற லதிலழுந்த லவிர்ந்தெம்மைப் புணர்தன் முத்தி.

முன்னமே யழிந்ததுசஞ் சிதமேறு வினையுளதேன் முற்று தாகுஞ்
சொன்னவா றருளினுன் வாதனைமெய் யியங்களவுந் தோன்றா நிற்கு
மன்னதுமஞ் செழுத்தைவிதிப் படிகணிக்கப் போநமையா லயமுன் மூன்றிற்
பின்னமற வழிபடுதல் சீவன்முத்தி பரமுத்திப் பேறு மீண்டே. (சுஅ)

என்றுதிரு வாய்மலர்ந்து தொகுத்துரைத்த வனைத்தும்விரித் தியம்பிற் றாக
நன்றுபலித் திடுகவென நகைமுகத்தி னருளூட்ட நல்க லோடும்
வென்றுமிளிர் திருவாத வூர்முனிவர் மனங்கனிந்து மெய்பொ டிப்பத்
துன்றுமல ரடியின்முடி தோய்தரவீழ்ந் தெழுந்துநின்று துதிப்பஞ்தானுர். ()

வேறு.

தொழுபவ ரொருபாற் றுதிப்பவ ரொருபாற் றுதித்துள நெக்குநெக் குருகி, யழுபவ ரொருபா லிவரெலா நிற்க வடியனேன் றனைப்பிடித் தாண் டாய், பழுதினின் கருணைத் திறத்தையென் புகல்கோ பாண்டிநா டியற்றிய தவத்தாற், கொழுமலர்ச் சோலைத் திருப்பெருந் துறையிற் குருந்தடி யிருந் தருள் பரனே. (எ0)

உள்ளுதோ றிழிபை யுள்ளுபு பவஞ்சத துழிதருஉ வொதுங்கிய வெனக்கு
மள்ளுதோ றன்பூ றாக்கையொன் றருளி யாணடுகொண் டனையிது தகுமே
விள்ளுதோ றப்பா லாய்ப்பொலிந் தோங்கும் விமலனே விமலமார் சிந்தை
கொள்ளுதோ றுவகைகூர் திருப்பெருந் துறையிற் குருந்தடி யிருந்தருள் பரனே.

வழிவழி யடிமை யுவந்திலேன் மலடு மலர்க்கரங் கன்றிடக் கறந்து [மோ
கழிதுய ரடைந்து கிடக்கின்ற வெனையுங் கண்டுகொண் டாண்டதெத் திற
மொழிதடு மாற நெஞ்சநெக் குருக முனிவறத தொடர்பவர் முதலே னே.
கொழிமலர்ப் பொழில்சூழ் திருப்பெருந் துறையிற் குருந்தடி யிருந்தருள் பர

ஏலவே யொருப்பட் டெற்றைக்கும் பாழுக் கிறைத்தொரு பயனுமில் லேனைச்
சீலமா முனிவர் திருக்குழாத தோடுஞ் சேர்த்துநீ யாண்டது தகுமே
காலகா லாகங் காளவே தாள கணம்புடை சூழதர நடிப்பாய்
கோலமார் செல்வத் திருப்பெருந் துறையிற் குருந்தடி யிருந்தருள் பரனே. ()

கனிவிள விருக்கக் காய்கவர்ந் துண்ட கள்வனு மென்னையும் பற்றி
முனிவரு முனிவர் கூட்டத்து ளொருசார் முனிவறக் கூடுமா றளித்தாய்
புனிதமென் கனியே புந்தியூ றமுதே பொங்குமா ணந்தவான் பெருக்கே
குனிகொடி மாடத் திருப்பெருந் துறையிற் குருந்தடி யிருந்தருள் பரனே. ()

சுவைபடு மவனீத் தமியுணக் கொள்ளுந் தொழுத்தையேன் றனைவலிந் திழு
நவையிலா னந்த வமுதமூட் டினையா னைகவிலைத் திடுமெடி யேற்குந் [த்து
கலையழ லடைந்த மெழுகென வுருகக் கற்றநற் றவருளத் துணையே [னே.
குவைமலர்ப் பொழில்சூழ் திருப்பெருந் துறையிற் குருந்தடி யிருந்தருள் பர

திருநெடு மாலன் றொருகரு மாவாய்த் திண்புவி பாதல மிடப்புற்
றொருவற முயன்றுங் காணரு மலர்த்தா ளுதத்தையேன் றலைகளி தாமோ
வருமணி விளக்கே யானந்தப் பிழம்பே யளிகனிந் தெழுசுவைக் கனியே
குருமணி மாடத் திருப்பெருந் துறையிற் குருந்தடி யிருந்தருள் பரனே. (எசு

அண்டரு முனிவர் கணங்களு மற்றை யவர்களு நறுமுறப் படைய
வண்டரு மலர்த்தா ளென்கருந் தலைக்கு மணிமுடி யாயதற் புதமே
பண்டரு மொழியாள் பங்கவோ மேலாம் பரமவோ பரவியெஞ் ஞான்றுங்
கொண்டலின் முழவார் திருப்பெருந் துறையிற் குருந்தடி யிருந்தருள் பரனே.

என்னைநா னறியே னையகோ பகலோ டிரவெனப் படுவது மறியேன்
முன்னைநான் செய்த தவமெவ னென்னை முழுமதோன் மத்தனுக் கினையா
லன்னையே யப்பா வொப்பிலா மணியே யடியவர்க் கெய்ப்பினில் வைப்பே
கொன்னைமா மதில்சூழ் திருப்பெருந் துறையிற் குருந்தடி யிருந்தருள் பரனே.

செம்மையொன் றில்லாச் சிறியனேன் கவலை தீர்தர யோகநா யகியா
மம்மையோ டெழுந்து வந்தினி தாண்டா யான்மனீ யகவதற் கடியே [கோ
னிம்மையே செயுநகைம் மாறெவன் மறுமை யேனுமொன் றில்லையென் செய்
கொம்மைமா மதில்சூழ் திருப்பெருந் துறையிற் குருந்தடி யிருந்தருள் பரனே.

இன்னணந் துதிக்கும் வாதவூர் முனிவ ரிருந்துதி திருச்செவி யேற்று
முன்னவர் மலர்ப்பைங் குருந்தடி யமர்ந்தா முனிவிலாப் பேரருள் பொங்க
மன்னநன் மணியே வார்த்தையாய்த் திரண்டு வருமொரு காரணக் குறியா
லன்னமா ணிக்க வாசக னெனும்பே ராகவின் றுதியென் றறைந்தார். (அ௦)

அதுசெவி யேற்று நெஞ்சநெக் குருகி யடிக்கடி தாணமிசைப் பணிந்தே
யிதுபெறுந் தாதத ஞெவடி நாயே னெரிமணிப் பொலன்றவி சொன்று
கதுமென ஞமலிக் கிடுவது மியல்போ கடையன்பா லிலக்குணங் கண்டாய்
மதுமலர்க் கழுநீர் மாலிகைத் தடந்தோள் வள்ளலே யெனப்பணிந் தெழுந்தார்.

அடியனேன் கொணர்ந்த செம்பொருண் முழுது மையநின் னாலயத் தினுக்கு
முடிவினின் னிடப்பால் வீற்றிருந் தருள்வாண் முனிவிலா தமர்திருத் தளிக்கு
நடிவினின் னடியர் குழாத்திற்கு மாகக் கைக்கொளல் வேண்டுமென் றிரப்ப
நெடியமா லின்னு முணர்தரா ரதற்கு நேர்ந்தன ராயருள் செய்தார். (அஉ)

வேண்டுவார் வேண்டு வதனையே நல்கும் விமலனார் திருவருள் பெற்றுத்
தாண்டுவாம் புரவி கொளக்கொடு வந்த சாற்றரும் பெரும்பொரு ளெல்லா
மீண்டுமா தளிநண் பணிசெய வல்லா ரியாவருங் கொள்கவென் றிறைத்துப்
பாண்டிநீற் றொளியெம் மண்ணலார் கோயிற் பணிசெய்ய முயற்சிய ரானார் ()

உருக்கிவார்த் தன்ன தூணமு நெடிதா யோடுபு திகழ்கொடுங் கைகையுந்
தருக்கிமே லெழல்போற் றலையெடுப் பமைந்த தம்பவிம் பங்களு மழகு
பெருக்கியோர் படித்தா யிடந்தொறு மமைந்து பிறங்குமுத் தரங்களு மாசு
கருக்கிவார் பலகை பரப்பிய தென்னக் கவினுறப் பாவுபல் கல்லும். (௮௪)

இவைமுத லமைத்துக் குருந்தநன் னீழ லிருந்தபொற் சபைமுதற் புதுக்கிக்
குவைமலர்க் குழல்யோ காம்பிகை யமருங் கோயிலும் புதுக்கிமற் றிவைசூழ்
நவையின்மண் டபமு நகுதிரு மதிலு நக்கபொன் செய்தகோ புரமுஞ்
செவ்வையுறச் செய்து முடித்தனர் தழற்போர்த் தீர்த்தத்தின் படிகளு மமைத்தார்.

புனிதராய்த் தொண்டு புரியுமுந் நூறு பூசுரர்க் கிருக்கையுஞ் சைவ
முனிவர ருறையத் தக்கமா மடமு முனிவிலா லயப்பணிக் குரிய
வினியரா யுள்ள மற்றைய ரமரு மிருக்கையு மினிதுற வமைத்துப்
பனிமலர்ப் பொழிலு நந்தன வனமும் பலவிளை நிலங்களு மாக்கி. (௮௬)

எஞ்சிய பொருளை யாலயத் துள்ளா லியைத்திடு மொருகரு வூலந்
துஞ்சிய விருத்தி யான்மநா யகர்தந் தொக்கவைப் பாலஃ தெவரு
மஞ்சிய காவல் வீரபத் திரரே யன்னதுங் காக்கவென் றோதி
விஞ்சிய புகழெம் வாதவூ ரடிகள் வேறிடத் தமர்ந்துயோ கிருந்தார். (௮௭)

ஆயவக் காலைப் பாண்டியன் றமரா யடைந்தவர் யாவருங் கூடி
மேயமற் றிவரென் செய்தன ரந்தோ வேந்தர்தம் பொருள்வ[illegible]மன்றோ
தூயநற் புரவி கொண்டதெங் கெனிமென் சொல்லுவார் மிகத்தெரி யிவரே
பாயவித் தகாத தொழிறலைநின் றுற் பரிப்பவ ரார்மனு நீதி. (௮௮)

என்றுரைத் துருகிச் சென்றவ ரடிதாழ்ந் தியாவரு மெழுந்துகை குவித்து
நன்றுசெய் தில்லீ ரையரே யரசர் நகுபொரு ணமன்னிலுய கொடுதால்
வென்றுமேம் படுபல் குதிரைகொள் ளுவதெவ் விதமெனப் பன்முறை விளம்ப
வொன்றுமாங் குணரா திருந்தன ரனையா ருரைப்பதிற் பயனிலை யென்று. ()

மீண்டுதம் மிருக்கை புக்கன ரின்றே வேந்தனுக் கறிவியோ மென்னி
னீண்டுமிக் குற்ற நம்மதே யாமென் றெண்ணுபு வாதவூ ரமைச்சர்
தாண்டுவெம் பரிமாக் கொளக்கொடு வந்த தனமெலாம் வேறுறப் போக்கித்
தூண்டுமோ ரைத்தி லிருப்பரென் றெழுதித் தூதுபோக் கினரா சனுக்கே. ()

சென்றது தவர்வெங் காலினுங் கடிது சென்றுபாண் டியனவைவ் புகுந்து
நன்றவாய் வணங்கி முடங்கல்முன் வைப்ப நங்கமுடி வேந்தனு மதனை
யொன்றவோர்ந் துரையென் றொருவனை யேவ வுவனிரு கைகுவித் தேந்தி
வென்றசீ ரமைச்சா தஞ்செய லனைத்தும் விரித்துரை செய்தனன் மாதோ.()

பழிதப வரசர் காரிய நடாத்தும் பண்புசால் வாதவூ ரமைச்சர்
செழிபொருண முழுதும் வேறுவே றாகச் செலவுசெய் தாரெனல் கேட்டுக்
கழிசினம பெருகக் கண்சிவப் பேறக் கடுமொழி யுடையவ னாகி
யொழிவரு மற்றை யமைச்சரை நோக்கி யுறத்துடி துடித்திவை பகர்வான்.()

வாதவூ ரமைச்சர் செய்கையிற் றென்னின் மற்றினி யாரைநம் பிடலா
மேதமே யொருவர் தம்மைநம் பிடுகை யெனவவர் நாணமுற் றகன்றார்
போதவங் குள்ளா ரியாவரும் விலகிப் போயினு ரச்சமேற் கொண்டே
காதர முறமற் றொருவனின் றனைக் கடிதொரு முடங்கறீட் டென்றான். ()

வழுதியர் பெருமா னெழுதிய முடங்கல் வாதவூ ரமைச்சர்கண் காண்க
முழுநிதிக் குவையோ டெய்தினி ரதற்கு மொய்பரி கொண்டிலீ ரெனினச்
செழுவயப் பரியோ டெய்தலா மின்றேற் செம்பொனோ டெய்தலா மொன்று
தழுவிலீ ரெனின்மேல் வருவது நமக்குச் சாற்றவும் வேண்டுமோ கொல்லோ.

என்றெடுத் தெழுதிக் கயலிலச் சினையு மிட்டொரு தூதுகைக் கொடுத்துச்
சென்றுநீ வாத வூரர்பாற் சேர்த்துத் திருமுகென் றுரைத்தன னுரைப்ப
வன்றவன் றொழுது வாங்குபு காலே யாமிவன் காலென விரைந்து [டான்.
மன்றலங் குருந்தப் பெருந்துறை யடைந்தான் வாதவூ ரமைச்சரைக் கண்

திருமுகங் கொடுத்தான் வாங்கிமுற் றுணர்ந்த சிவானந்தச் செல்வராங்
கெழுந்து, குருமணி முன்போய்ப் பணிந்துகை தலைமேற் குவிதெதிர நின்
றெனை யாண்ட, வொருபாஞ் சுடரே பாண்டிய னோலை யுய்த்தனன் கடுஞ்
சினத் தினனாய், வருமிதற் கடியே னென்செய்கோ வென்ன வள்ளலார் வாய்
மலர்ந் தருள்வார். (கூசு)

ஒன்றுமஞ் சற்க வாவணி மூலத் துறுபரி யனைத்துங்கொண் டணைவா
னன்றவை காண வழுதியர் பெருமா னனியுள மகிழ்தரு மின்னும
வென்றமை பரிகட் கிலாயமும் பிறவும விசாலமா வமைத்திடல் வேண்டு
மென்றுரைத் திடுமுற் சிறப்பொடு மதுரைக் கேகுமின் னேயென் வுரைத்தார்.

உரைத்தசொற் றலைமேற் கொடுபணிந் தைய ரோய்யென வான்மரீ யகரை
விரைத்தபூங் குழல்யோ காம்பிகைத் தாயை மேவுபு தாழ்ந்துதாழ்ந் தெழுந்து
புரைததபொன் மாட மாளிகை சூழ்ந்து புந்தியை யாவயி னிறுவி
யிரைத்தபல் லியமு மியம்பத்தன் படைதங் கியவிடத் தண்டந்தனர் மன்னோ.

பரிகரி முதலாம் படைகடங் கிடத்துப் படர்ந்தபின் வாதவூ ரையர்
தெரிதர வனைத்துந் திருக்கணு ணோக்கிச் சேனைகா வலரையு நோக்கி
விரிபுகழ் மதுரை மீனவன் முன்ன மேவுவா மியாமினி நீருந்
தெரிதரவிரைவி னெழுகென வெடுத்துச் செப்பின போகவொருப் பட்டார்.

பொருதொழிற் பகைஞ ருடறுணைத் தெழுவேற் புரூரவா மன்னவ ரேறே
கருமலச் செருக்கு வாதவூ ரையர் காமரு பெருந்துறை நகர்சார்ந்
தொருவிரல் லுபதே சம்பெறு திறத்தை யுரைத்தன மதுரையை யடைந்து
வெருவரும் பரிகள்செலுத்திமீனவன்பால்விடைபெற்றதிறனுமேலுரைப்பாம்.

உபதேசப்படலமுற்றிற்று.

ஆகத்திருவிருத்தம் ௧௨௨௩.

---

# மதுரையையடைந்து விடை பெற்றபடலம்.

துளிவளர் கண்ணீர் மல்கத் தொழுதகை தலைமே லேற
வளிவளர் குருந்த நீழ லடைந்துப தேசம் பெற்றே
யொளிவளர் மூர்த்தி யாகி யுரைக்குமுப் பாழும் போக்கித்
தெளிவளர் முழுப்பாழ் பெற்ற செல்வனைச் சிந்தித் துய்வாம். (௧)

குடைகொடிக் காடு மலகக் குஞ்சர முழக்கம் பொஙக
வடைபரி மாவு தேரு மார்த்தன முன்பின் போத
விடைவெளி யின்றி வீர ரெங்கணு நெருங்கிச் செல்ல
வுடையவ ரன்ப ரம்பொற் சிவிகையூர்ந் தூடு சென்றார். (௨)

திரையம ருலகுங கொற்றி செறிந்தம ருலகுங் கான
நிரையம ருலகும் வானந் தடவிட நீண்டு போய
வரையம ருலகு மோடை மடுக்குளம பழன மாகிப்
புரையம ருலகு நீத்துப் பொருக்கென மதுரை சார்ந்தார். (௩)

செங்கன கத்தாற் செய்த திருப்பெருங் கோயி லுட்புக்
கெங்கணு மொளிப ரப்பு மிந்திர விமானத் துள்ளா
லங்கயற் கண்ணி யோடு மமர்ந்தவர் பாதம் போற்றி
மங்கள வழுதி கோயி லடைந்தனர் வாத வூரர். (௪)

மீனவர் பிரானை முன்னங் காணுமா கண்டார் மேன்மே
லானபே ருவப்ப னாகி யளவளா யிருக்கை நல்கி
மானமா வருமோ பொன்னே வந்ததோ வெனவி னவத்
தேனவா மொழிய மைச்ச ரின்னன செப்ப லுற்றார். (௫)

கொண்டுபோம் பொன்னெ லாமாக் கொடுவரு வார்க்கே யீந்தேன்
கண்டுபோ ரிரவி சிங்கங் கண்டுசென் மதிமூ லத்தில்
வண்டுசா ரூரா யீண்டு வரும்பரி யனைத்தும் வேறு
யண்டுநீ ரோடை மற்று மந்திர மமைக்க வென்றார். (சு)

என்றலு முண்மை யன்றி யியம்பிடார் வேறொன் றென்று
கன்றலின் மனத்த னாகிக் கவுரிய னுவகை பூத்தான்
முன்றமர் வரைந்த தேற்ற முறைக்குள காரணம் பூண்டா
னன்றமை மெய்ம்மை கூறி னியாவரே நயக்கி லாதார். (எ)

ஆவணி மூல நாளு மணித்தாக வனையா னிற்கு
மாவணி காண்பா மென்னு மருப்பெரு மகிழ்ச்சி பூத்துக்
கோவணி செம்பொ னாடை யுருமணிப் பதக்க நல்கிச்
சேவணி கொடியா ரன்பர் தமைச்செலச் செலுத்தி னானால். (அ)

கொழுதிவண் டளைந்து பைந்தேன் கூட்டுணு மலங்கற் றிண்டோள்
வழுதிபால் வரிசை பெற்று மாமணிச் சிவிகை யேறி
யெழுதியா வரும்ப டிக்கு மிரும்புகழ் வாத வூரர்
பழுதிறம் மிருக்கை புக்கார் பரவுமெம் முளத்தும் புக்கார். (கூ)

இசைபடு மூல முனா ளென்னுமிந் திரனுண மேவ
வசைபடு மொருவன் றென்னர் மன்னவன் முன்ன ரெய்திக்
குசைபடு பரிக ளானை யெய்துதல் கூடுங் கொல்லோ
நசைபடு மொழியே சொன்னார் நயமபட வமைச்ச ரென்றான். (க0)

அன்னவ னச்சொற் கூற வரிமருத் தனனுந் தென்னா
மன்னவன் மனந்தி ரிந்து வன்கணார் சிலரைக் கூவிச்
சொன்னசொற் பிழைத்த வாத வூரரைத் தொடர்ந்து பற்றிப்
பன்னரும் பாடு காவற் படுத்திப்பொன் வாங்கு மென்றான். (கக)

வரைசெய்தோள் வழுதி யிவ்வா றுரைத்தலும் வன்க ணாள
நுரைசெய்கம் மடிக டம்மை யுரைத்தவப் படியே செய்தார்
திரைசெய்நீர் ஞாலங் காணத் தேசிக னாகி யாண்டார்
புரைசெய்கன் மலர்ப்பொற் பாதம் போற்றினர் துதிக்க லுற்றார். (கஉ)

வேறு.

பஞ்சாதி மறைபகர்ந்த பரமனே பைங்குலைநெற்
செஞ்சாலி விளைபழனப் பெருந்துறைமா தேவனே
நஞ்சாதி யுண்டயன்மா யனைப்புரந்த நம்பனே
வஞ்சாதி யென்றளித்தாய் கைவிடுதே லழகேயோ. (கங)

விடையேனை மூதிலூரும் பெருந்துறைவாழ விமலவோ
வடையேனை யடைக்கலமென் றெனையோ பெரும்பொய்யே
யுடையேனைக் கிறிசற்று முடையேனை நாயான
கடையேனை யாட்கொண்டிங் கைவிடுத லழகேயோ. (கரு)

எண்ணுவோ வரும்வளஞ்சால் பெருந்துறைவா ழீசவோ
வண்ணுவோ வரியயனு மணுகரிய வொருபாகம்
பெண்ணுவோ கழைகுழைத்தான் பிறங்குடல நீறுக்குங
கண்ணுவோ வாட்கொண்டிங் கைவிடுத லழகேயோ. (கசு)

மைவிடா விழியுமையாள் வாமத்தாய் வளர்சாலி
செய்விடாப் பெருவளஞ்சால் பெருந்துறைவாழ் செல்வத்தாய்
பைவிடாப் பூணணிவாய் பற்றின்றிக் கலந்தாரைக்
கைவிடா யடியேனைக் கைவிடுத லழகேயோ. (கசு)

திருவடிசூட் டிடப்பெற்றுஞ் செம்மையிலாத் தென்றிசைக்கோன்
பொருவுவே ஞயினேன் புகல்வதெவன் பெருந்துறையா
யருவருக்கும் பிரபஞ்சத் தலையாமே யடைந்தார்தங்
கருவறுப்பாய் நாயேனைக் கைவிடுத லழகேயோ. (கஎ)

வேறு.

என்றுனைந் திரங்கு மோரை யிருசெவி யேற லோடு
மன்றுபைங் குருந்த நீழ லாண்டவர் தரியா ராகி
கன்றிரங் கோதை கேட்ட கறவைபோற் பதைப தைத்துக்
துன்றுதங் கணத்தி னோரைப் பார்த்திது சொல்ல லுற்றார். (கஅ)

மூலநா ளின்று மேய தன்பனை முடிகோ மாறன்
சாலவுண் முனியா முன்னந் தாம்பரி செலுத்தல் வேண்டு
ஞாலமீ துள்ள வாய நரியெலா மொருங்கு சேர்த்துக்
கோலவாங் குதிரை யாக்கிக் கொண்டுபின் னீவிர் யாரும். (கக)

வாம்பரி மள்ள ராகி மற்றுமப் பரிமேற் கொண்டே
தேம்புத லின்றிச் சென்மின் செழுமறைப் பரிமேற் கொண்டு
தோம்படா நாமு நாப்பண் டோன்றுவோ மென்ன லோடு
மாம்பரி சென்றெல் லோரு மவ்வண்ண மமைந்தா ரன்றே. (உ0)

நரிகளைப் பரிக ளாக்கி நாடுபல் கணத்தி னோரும்
பரியுகைத் திடுவோ ராகிப் படர்ந்தமை பார்த்தெம் மையா
தெரிமறைப் புரவி மேலாற் றிகழ்தலைச் சாத்து முன்னு
விரிதரப் புனைந்து தாமோர் வீரராய் நடுவட் போவார். (உக)

கூற்றுருக் கொண்டா லன்ன கொடுமைய கொடிய தாய
காற்றுருக் கொண்டா லன்ன கடுப்பின வடலைத் தீயே
வேற்றுருக் கொண்டா லன்ன விழியின வசனி யாய
வேற்றுருக் கொண்டா லன்ன முழக்கின விவுளி யெல்லாம். (உஉ)

ஒள்ளிய கரிய பல்ல வுறுசிவப் புற்ற பல்ல
தெள்ளிய பொனனி றத்திற் சிவணிமேற் றுய பலல
வெள்ளிய நிறத்த பல்ல மிச்சிரம் வாய்ந்த பல்ல
பள்ளிய பஞ்ச வன்னம் பொலிதா வடைந்த பலல. (உ௩)

வல்லிய முட்கப் பாய்வ மல்லர்நெஞ் சுட்கப் பாய்வ
சொல்லிய முயல்க ளெல்லாந் தோற்றன வுட்கப் பாய்வ
கொல்லிய வெழுந்த கூற்றிற் கொழுவிடை யுட்கப் பாய்வ
புல்லிய மற்று முள்ள கதியவினை போகப் பாய்வ. (உ௪)

வெய்யவாள் கொடுமு கத்து வெட்டிறு மெதிர்த்துச் செல்வ
வையமே லுள்ள கோட்டை மதிலெலாந் தாண்டிச் செல்வ
மெய்யவாய்த் துறந்தோ ருள்ளின் விரைந்தொரு நெறியே செல்வ
செய்யபோர்க் களத்து மாற்றார் திருமுடி யிடறிச் செல்வ. (உ௫)

நிரையெழு குதிரைக் கூட்ட நிமிர்ந்தடி வைக்குந் தோறும
வரைபல பட்ட கான மரந்துகள பட்ட பணிலைத்த
தரைமுழு வதுமவெம பாலைத தரையெனப் பட்ட தாளா
லுரைசெய்வ தெனனை மேலவினை ஞாலகுமனை ஞாலகா யிறறே. (உ௬)

அடுபரிக கூட்ட மிவ்வா றிணைநதொரு மதுரை சூழ்போ
யுடுவொடு மதிலூர தாணடி யுள்வயிற புகக சில்ல
நெடுமதில் வாயி லூடு நெருக்குபு புகுந்த சிலல
கொடுவெரி யெனமேற முவி மாடமேற் குதித்த சிலல. (உ௭)

தளியக வீதி யுள்ளுந தளிப்புற வீதி யுள்ளுங
களிகிளர் திருததே ரோடுங காமரு வீதி யுள்ளும்
வெளியொடு முடுக்க ருள்ளு மிகுகடை வீதி யுள்ளுந
தெளிதரு சதுக்கத துள்ளுஞ் சிலைததெழு குதிரைக் கூட்டம. (உ௮)

மறையவ ராதி நால்வா மாளிகை வாயின் முன்று
மறைபுறக் குடிக ளானு ரமருமில வாயின் முன்னுங்
குறைவின்மற் றிடஙக ளெங்குங் குதிரையாய நிரமப லாலே
நிறைபெரு மயக்கம பூண்டாா நெடுநகா மாநதா யாரும். (உ௯)

சனமியங் காத வண்ணர் தார்ப்பரி தனைதத லோடு
மனமயங் குற்றுச் சில்லோர் மன்னன்முன் னோடிச் சொற்றா
ரனகமிக் குள்ள தூய வமைச்சருக் கலக்கண் செய்தோ
மெனநினைந் தென்செய் தோமென் றிரங்குபு பதைத்தான் வேந்தன். (௫௦)

சிறந்தவர் தம்மை யேவிச் சிவிகையி னேற்றி யெம்மு
னறந்தவா வாத வூரெம் மமைச்சனைத் கொணர்மி னென்னப்
பறந்தனர் சென்றவ் வாறு கொணர்தலும் பரிந்து நோக்கி
யுறந்தவென் றீமை கொள்ளீ ரென்றுப சரித்தா னன்றே. (௫க)

முன்னநீ ருரைத்த வாறே மூலநா ளின்றே வந்து
பன்னருங் குதிரை யெல்லாம் பரந்தன நகர மெங்கு
மின்னவை யியக்க வல்ல தலைவரா ரியம்பு மென்றா
னன்னவை யறியேன் யானு மென்றன ரறிந்த நீரார். (௫௨)

அரிமருத் தனனு னின்றே யறிதரல் விழைந்தே னென்னப்
பரியுகைத் திடுசில் லோரைப் பார்த்துங்க டலைவர் தம்மைத்
தெரிதரக் காட்டு மென்று தெரிந்தமர் திரியார் கூறக்
கரியுரி போர்த்த வீரர் கடும்பரி யுகைத்துச் செல்வார். (௫௩)

சுட்டுதற் கரிய சோதி சூழ்பரிப் பாகர் சுட்டப்
பட்டுநேர் வருத னோக்கிப் பாண்டியன் பதைத்தெ ழுந்து
கட்டுவிட் டிலகு சோதி யிதுவெனக் கைகு வித்தா
னெட்டுவிட் டடாப்பெ ருந்தன் னுள்ளமு முருகி நின்றான். (௫௪)

மறுவனு மெம்பி ரான்செய் மாயையா லென்னே யிந்தத்
தெறுபரி மேல்வந் தாற்கண் டெழுந்தனஞ் செங்கை கூப்பி
முறுவலொன் னலர்க்குண் டாக வென்றுள முன்னி முன்னி
யறுதியி னாணம் பூப்ப வெழுந்தவா றமைந்து நின்றான். (௫௫)

இருடபு மமைச்சர் நம்பண் டாரதி லெடுத்துச் சென்ற
பொருளள வைக்கு மேலாப் போந்தன பரியென் றெண்ணித்
தெருடர வினையெ லாமெத் தேயதது நின்று வந்த
வருள்கெழு மமைச்ச ரேயா னறிதரல் வேட்டே னென்றான். (௫௬)

என்றுரை யாடு முன்ன ரெழுதரும் பரிமா மேலா
ரொன்றுரை யாடக் கேண்மோ வுரவுநீ ராலங் காப்போய்
நன்றுரை வாத வூரர் கமகருத வியசெம் பொன்னு
வின்றுரை கடந்த வாசி யித்தனை யுவகொ ணர்ந்தோம். (௫௭)

இவையிவை யிவ்வித் தேய ழிவையிவை யிவ்வி யல்ல
விவையகல் விசயங் கொள்ளு மிவையிரா விசயங் கொள்ளு
மிவையிரு போதங் கொள்ளு மிவைபெற லரிய யார்க்கு
மிவையெலாந் தெரிதீ யாலென் றிவைதா லெடுத்துக் கூறி. (௩௮)

இன்னவாம் பரிய லைத்து மின்றுநீ கொள்ளிற் பாண்டி
மன்னவா நினவே நாளை வருபவைக் குடம்ப டேய்யாஞ்
சொன்னவா றுணிபே யென்று துண்ணெனக் கயிறு மாறிப்
பன்னவாம பரிநீத் தெல்லாப் பரிகளுங் கொடுத்தா ரன்றே. (௩௯)

பொருந்துறு மிலாயஞு சேர்த்துப் போந்தவ கணங்க ளோடும்
பெருந்துறை வந்து சேர்ந்தார் பெருமறைப் பரிமேற் சென்று
ளருந்தமி ழாளி யாருக் குவகைசெய் தமரிற் போக்கி
யிருந்தனன் றென்னர் கோமா னெண்ணருங் களிப்பின் மூழ்கி. (௪௦)

வேறு.

வாதவூ ரடிகண் முன்னிலை யாக வழுதியர் பெருந்தகை யன்பாஞ்
சாதநீர் துளைதல் கருதியோ வந்தி தனக்கருள் செய்வது குறித்தோ
வேதவாம் புரவி மேற்கொடு வந்த வித்தக ரற்றைநா ளிரவே
போதவாம் பரியா யினவெலா நரியாய்ப் போதர நினைத்தனர் முன்னே. (௪௧)

அரையிராப் பொழுது நண்ணலும் பரியா யினவெலா நரிகளாய்க் குழுமி
விரைதரச் சூழு மென்னமா மாய மிடைகுறுங் காட்டிடைப் பயில்யா
முரைபரி யாகி மனிதரைச் சுமந்தா மொருசிறைப் புகுந்தங்கட் டுணடாம்
புரைபடு கடலை முற்றுமகொள் ளுண்டாம் புகர்படு மோஞ்சா திக்கே. (௪௨)

கொத்தைநா கந்தோ நினைக்கவா யூ றங் கோதிலா நற்தென்று பெறுகோ[சம்
மித்தைதயன் றியுஞெண் டிலகொலோ வென்று மிடுகைப் பிணநகர் பெருஞ்
பத்தையென் றடைவோம் பண்ணிய தவத்தாற் பண்டுருப் பெற்றனம் வள்ளி
யத்தைசேய் வழிச்கோன் றமாதெரி தருமு ணகறலே கருமமென் றெழுந்து.

ஓடின சில்ல தாவின சில்ல வூளையிட் டெறின சில்ல
நாடின வாய்முற் குதிரையண டதது நகக்கடித் திழுத்தன சில்ல
கூடின குடரைப் பறித்தன சில்ல குருதியை நக்கின சில்ல
வீடின முனமுள் ளவைகளு மெனவி டாதுறு புரிந்தன சில்ல. (௪௪)

தெருவெலா நிகலன் சதககத்து மூளன் சிறுமுடைக் கருமபல வொண்டீன்
மருவிய மாட மனைத்தங்கோ டீமயு வாவியங் கரையெலா மோரி
பெருமுழ வதிரு மரங்கததஞ் சிமபு பேசுமெங் கணுஞ்சிரு காவன்
கருதுமுற் பகலிற் பரியென மலிந்த கருதிராப் பொழுதிடை நரியே. (௪௫)

நகருளார் விழித்தா ரலக்கண்மிக் குற்று நடுங்கினு ரனையருட் சில்லோ
ரிகல்வலி மாறன் கண்படை கொள்ளு மிடம்புகுந் தனர்முறை யிட்டார்
பகல்வரு பரியெ'லாநரி யாகிப் பரவியூ றிழைத்திடு மென்ப [டான்.
தகறா வுணர்ந்தான் மிகத்துடி துடித்தா னமைச்சர்மே'லசினங் கொண்

வஞ்சமிக் கியற்று மமைச்சனைப் பற்றி வன்சிறைப் படுத்தியா வோரு [தார்
மஞ்சமிக் கொறுத்தெம் பொருளெலாங் கவர்மி னென்றன னவரது செய்
நெஞ்சநெக் குருகிக் குருந்தடி யிருந்த நிமலனை நினைந்தன ரிருந்தார்
தஞ்சமுற் றவர்க்காப் பெருந்துறை வையைத் தடநதி பெருகிட நினைந்தார்.

புடவிமுற் றகழ்ந்து பாதலம் புகுத்தப் போந்தநீ ரெனவையை பெருகித
தடவியன் கரைகண் முழுமையு முடைத்துச் சார்ந்தது வெள்ளமா நகரு
ளிடவிய வீதி யெங்கணும் வெள்ள மிரும்பொன்மா ளிகையெலாம் வெள்ள
மடவியர் பயிலு மரங்கெலாம் வெள்ள மற்றெங்கும் வெள்ளமா கியதால்.(சஅ

மகவினை யெடுப்பார் மாடமே லிவர்வார் மற்றிதுஞ் சாயுமே யென்பார்
தகவினை யமைந்த மன்னவ னீதி தவறின னெனப் புகல்வார்
நகவினை நடாத்து மமைச்சனை யொறுக்க நயந்ததால் விளைந்ததீ தென்பார்
பகவினை யொ[illegible]ங்குஞ் சொக்கநா யகர்க்கும் பாங்கொ லித்திற மென்பார்.

வளமலி கூட[illegible]லின்னண மறுக வாதவூ ரமைச்சனைச் சிறைவைத்
தளவற விருந்தார் தந்தமர்க் காப்பா ராய்ந்துகை விட்டன ரகன்றூர்
களமினெஞ் செங்க ளடிகளீ ரிதுவுங் கண்ணுத லாரரு ளென்றே
யுளமுறக் குறித்தா ரும்பாகோன் கோயி லுற்றன ரியோகமுற் றிருந்தா. ()

(தினகர னுதிக்கு முன்னரே செழியன் செழுமணி முகப்பிடை வந்து
கனமிகு மமைச்ச ராதிய ராய காரியம் பாாப்பவாக கூவி
வனமலி பெயர்த்து வருபுனல் வையை வன்கரை முழுவது முயரச்
சனமுழு மைக்கு மளந்துவிட் டடைக்குந் தகுதிசெய் வீரெனப் பணித்தான்.

புத்தியென் றமைச்ச ராதிய ரெழுந்து பொருக்கெனக் குடிமுழு தெழுதி[தாா
யொத்தியல் குடிகட் கொவ்வொரு கோலென் றறவளந் தடைக்குமா விடுத
பத்தியிற் பல்ாலம் பரப்புவாா சில்லோா பரிகிறுத் துபுதழை பரப்பிப்
பொத்திய மண்ணைச் சொரிகுவாா சில்லோர் போக்கற மகிழுவார் சில்லோா.

வெட்டுவர் சில்லோர் வெட்டுமண் கூடை மிதப்புறக் கொண்டுபோ
யுடைப்பிற், கொட்டுவர் சில்லோர் கொட்டிய மண்ணூற் குறியுடைப் பொழு
தாத் திண்டோ, டட்டுவா சில்லோர் தகைப்பரு முனிவு தலைகொள லன்னை
யென் றிறைஞ்சிக், கிட்டுவர் சில்லோா பாமபுக ளுருட்டிக் கிடததிசீ கிறுத
துவர் சில்லோா. (கூ)

இவ்விதங் கரைமுற் றடைபடுங் காலை யிலகுமம் மதுரைமா நகர்வாழ்
செவ்விய ளொருத்தி நரைத்தமூ தாட்டி திங்களா யிரந்தொழு துள்ளா
ளவ்விய மின்றிப் பிட்டுவிற் றுண்பா ளடுசுவைப் பிட்டினை முன்னே
கவ்விய வன்பிற் கடவுளுக் கருத்திக் கரிசறப் பின்புவிற றிடுவாள். (௩௪)

வந்தியென் றுரைக்கும் பெயரின ளனக்கு வரைந்தகோ லளவடைத் திடுமாண்
முந்தியெங் கணுநா டியுமபெற லிலலாண் முனியுமே யரசனென் றஞ்சி
நந்திய துயரத் தழுந்தவா டினமு நகப்படைப் பதுங்கிவே தனங்கொ
ளந்தியொண் ணிறத்தெம் பிரானடி சிந்தித் தாவலித் திரங்கிடுங் காலை. (௩௫)

பழங்கலை யுணரார் பழங்கலை யொன்று பற்றுபு திருவுரை சூழ்ந்து [துச்
குழங்கலை யிண்டை நிகர்சுமை யடைமேற் கூடையொன் றுறம்படி கவிழ்த்
சழுங்கலை யுறுமற் சமைத்தமண் வெட் டி தாரணி தோண்மிசைக் கிடத்தி
முழங்கலை வையைக் கரையடை யாளாய் முந்தினர் முந்தரா யுள்ளார். (௩௬)

அடியவன் மனைமுன் புகுந்தனர் கூலி யமைதரக் கொடுத்தொரு வேலை
தடிதரா தென்பாற் கொள்ளுந ருளரோ சாற்றிட லாமென வினவ
வடிதராக் கவலை யழுந்துவா ளிந்த வார்த்தைகேட் டுமுவந் தெழுந்தாள் [ள்.
படியவாம் வையைக் கரையெனக் களந்த பங்கடைப் பாய்கோலோ வென்று

என்றலுங் கூலி யாதுநீ தருவா யென்றனர் வெந்தைதா னிடுவே
னென்றமற் றதனை யேற்றுநீ வேலை யொருங்குசெய் திடுகென வுரைததாள்
பின்றலில் கூலி யதுவெனி னினனே பெருமபசி தீரதரக் கொடுத்தா
னன்றமை தரவுண் டிளைப்பொரீஇ வேலை நவிற்றிடு வேனென நின்றார். (௩௮)

தெள்ளிய பொழுதி லட்டசிற் றுண்டி சிரகடை பொதிதப வுண்டா [ள்
வள்ளிமற் றதனிற் கலப்பவுங் கலந்தே யருந்தபபா வெனக்கொளார்ந் திட்டா
வெள்ளிவெள் விடையார் துகில்விரித் தேற்று விரைதர வெடுத்துவாய்ப் பெ
நள்ளிய வனையா ளன்பொடு சேர்தது நயந்தன ரமுதுசெய் திடுவார். [ய்து

சுடுதலிற் கதுப்பி னுதக்குவா ரென்ன சுவையதிப் பிட்டெனப் பகாவார்
விடுதலி லிஃதிட் டவட்குநா மியற்றும வேலைமற் றிதுகொலோ வெனபா
ரடுதலிற் பொலிமற் றிதுபர சிவனுக் கர்ப்பண மாமெனப் புகழ்வார்
தடுவரி விருப்பி னமுதுண்டு வேலைத் தலைப்புகு வேனெனப் போந்தார். (௪௦)

சென்றவர் யானே வந்தியா ளென்று தெரிதரக் கணக்கிடைக் குறிப்பித்
தொன்றமற் றவளுக் களந்தபங் கெதுவென் றுறவினு யிதுவெனத் தெரிந்து
நின்றவர் வியப்ப வெட்டுவார் வெட்டி நிரம்பிய கூடைமண் கொடுபோ
யன்றலின் வேற்றுப் பங்கிடைக் கொட்டி யடைபடக் கண்டுவந் திடுவார். ()

(விளைதர வந்தி பூங்கினுங் கொட்டி வெள்ளநீர் கரைத்திடக் கண்டு
புரையுற நகைப்பார் மீளவுஞ் சுமந்து போகட்டுப் போகட்டுப் பார்ப்பார்
கரைபட லின்றிக் கரைபட லுணர்ந்து கையுறக் கொட்டுபு குதிப்பார் [பார்.
புரையுற வேற்றப் பங்கடை கரையும் பொருக்கெனக் காதல்கண் டுவெட்

வேலையித் திறஞ்செய் திளைத்தவர் போன்று மீளவும் வந்திபாற் சென்று
மாலையெம் மனையாய் நினக்களந் திட்ட வண்கரை யடைபடு கின்ற
தாலைய மின்றே தனிபசித் தடைந்தே னட்டபிட் டிடுகென் றினிய
பாலையிக் கடைந்தாண் மறுவலு மிடமுன் பான்மையி னேற்றனர் நடந்தார்.

(தலையுறு வேலைத் தலைமரீஇ யாங்கோ சாரிருந் தமுதுசெய் திடுவார்
நகைபுரிந் தெதிர்ப்பட் டவர்க்குநன் கருளி நாடவர் வேலையுந் தவிர்ப்பார்
பகையுறு தவரு மிவர்வழிச் சேறல் பார்த்ததி காரிகள் புடைப்ப
வகையுறு தொருங்கு மகிழுவா ரிவ்வா றுடியங் குறப்பயில் காலை. (கச)

(வந்தியான் வந்தியாளெனக் கணக்கில் வரைவித்தான் கூலியுங் கொண்டான்
சிந்தியான் வேலைத் திறமனுத் துணையுஞ் செப்புசம் வார்த்தையு மேலான்
புந்தியா னளத்தற் கரியவ னென்னப் பொலிகுவா னியாவனோ வினைய
னந்தியா மெவ்வெய்செய் குவனென மருண்டார் நாடுமெவ் வினைத்தலை நின்றார்.()

(அதுபொழு தீர்மர்த் தனத்திறல் வழுதி யடைகரை நோக்குவா னுன்ற
முதுமதி யமைச்ச ராதிய ரோடு முன்னினா னடைபட்ட துணர்ந்து
குதுகல முற்று னுடைப்புமா றுத கொளகையோ ரிடத்திடைக கணடே
யிதுகரை படாத தென்னென வெகுண்டா னிதற்குரி யவனெவ னென்றான்.

வழுதிதன் சொற்கேட் டஞ்சின ரெவரும் வந்திதன் பங்கது வடைப்பா [ளான்
னெழுதுவித் தொருவ லடைந்தனன் வேலை யியற்றில னிசைப்பதுங் கொள்
பழுதின்மற் றவன்றன் வடிவினை நோக்கிப் பயந்தன மடிக்கவு[illegible]தேனை
முழுதுமுன் மத்த னெனநின் றானென்று மொழிந்தன ரொருவனேர் வணங்கி.

அன்னவன் யாவ னெனவயன் மாலா லருமறை யாலளந் தறியா
முன்னவன் றனைக்கை தொட்டிழுத் தரசன் முன்னுற நிறுத்தினர் சில்லோர்
பின்னவன் றனைப்பாரத் தேடங்கிற களந்த பெருங்கரை யடைத்திலை யென்றம்
மன்னவன் வினவப் பராமுகஞ் செய்து வள்ளலார் நிற்பது கண்டு. (கஅ)

ஒருகையிற் பிரம்பு வாங்கின னோங்கி யொய்யென வெரிநிடைப் புடைத்தான்
மருவுமப் பிரம்பி னடியடித தவனும் வழுதிதன் முதுகிடைப் பட்ட
திருமைமற் றவன்பன் னியர்க்கெலாம் பட்ட திளஞ்சிறார் தமக்கெலாம் பட்ட
தருமதி யமைச்சர் தமக்கெலாம் பட்ட பட்டதாங் குள்ளவர் பலர்க்கும்.(கக)

அரியயன் மலைவா னமரர்பன் முனிவ ரவுணரி ராக்கதர் சித்தர்
கரிசில்கிம் புருடர் வித்தியா தரரொண் கருடர்சா ரணருர கேசர் [குர்
விரிமருத் துவரெண் வசுக்கண்மற் றியார்க்கும் விலங்குபுண் முதலிய வுயிர்க்
தரிகரு வுயிர்க்கும பயப்டதெவ் விடத்துந் தாமவியா பித்துளார் தமும்பு. (எ0)

பொருக்கென வாங்கோர் கூடைமண் ணெடுத்துப் போகட்டுக் கரையு டைப் பொழித்துத், திருக்குநன் னுதலின் மறைத்தவர் மறைந்தார் செழியர் கோ னுயிரங் கூடை, நெருக்கிமே லிடினு நிரமபுறு வுடைப்போர் கூடையா னிரம்பிய திறனுஞ், சருக்கரை யளாம்பிட் டளித்தவள் விமானர் தழீஇமிசை யுலகுபோந் திறனும. (எக)

தானடி பட்ட திறனுமாங குள்ள தன்றம ராயினா பலரும
யானடி பட்டேன் யானடி பட்டே னெனப்பதை பதைத்திடு திறனு
மேனடி பட்டா மேனடி பட்டா மெனாக கிரங்கிடு திறனுங்
கானடி பட்ட கிம்பமா விகையான் கருதினன் மயங்கி காலே. (எஉ)

வள்ளலா காய வாணியால் வழுதி மன்னவ வாதவூ ரமைச்ச
ரெள்ளலா காநின் பொருளெலா நமக்கே யீந்தன ரஃதுண ராயா
யுள்ளலா காத வினைசெயதாய் நரியை யுறுபரி யாக்கிமாற் றினம்பின் [நாம்.
கொள்ளலாத் தீங்கு பினுஞ்செய்தா யந்தோ குறிக்கொளா வதுபொறுக் கலா

வெள்ளநீர் பெருகி யலக்கணுற் றுபுமேல் விடுபடா வன்புநம் பாலே
யுள்ளவன் பொருட்டா ளாகிமண் சுமந்தே யுனதுகைப் பிரம்படி யேற்றோம்
பள்ளநீ ருலகில் வாதவூ ரமைச்சன் பரிந்துனக் குறுதியே செய்தான்
கள்ளமி லவனிச் சையின்வழி யியங்கக் கைகுவித் தியக்குதி யென்றார். (எச)

என்றசொற செவியி லேறலும பிழைதத்தே னென்செய்தே னென்றழு திரங்கி, நன்றமை வழுதி யடிக்கடி தொழுது நாயனார் பேரரு ணினைந்து, கன்றலி லமைச்சா முன்புபோய்ப் பணிந்து கைகுவித் தெழுந்துநின் றடிகேள், புன்றரத் தடியேன் செய்பிழை யனைததும பொறுததிடு கென்றென் றிரந்தான். (எரு)

மன்னவா மன்ன தேணமதி நின்னை மறறுநான் சார்ந்தகா ரணத்தான்
முன்னவ ரருள்பெற் றய்ந்தன னீயென பிழைத்தனை மொழிதியா லென்றத்
தென்னவர் கோமுன கோவணங் கீளிற் செறிதரப் புனைந்தன ரெழுந்தா [ன.
ரென்னவா கனுங்கண் டிரங்கால் லமைச்ச ரிறையவன் பணிந்தனன் விடுதரா

வாதவூ ரிறைவர் மதுரையை யடைந்து வழுதியா பிரான்விடை பெற்றுப், போதமேற் பொலியத் துறவுபூண டெழுந்த புண்ணியக் கதைதொகுத் துரைத்தாஞ், சீதநீர்ப் பழனப் பெருந்துறை முதலாத திருத்தல மனைததுங்கண் டிறைஞ்சி, யோதவார் தில்லை புகுநதுபுத தலைவென றோங்கொளி கலந்தவா றுரைப்பாம். (எஎ)

மதுரையையடைந்து விடைபெற்றபடலமுற்றிற்று.

ஆகததிருவிருததம சுரு00.

---

# தில்லையையடைந்தபடலம்.

ஆரருள் வடிவ மாய வன்னையார் திருக்கண் சாத்தச்
சீரரு ளம்ப லத்திற் றிருநட நவிலு வாரே
பேரரு ளொடுகை யேடு பிடித்தெழு திடப்ப ணித்தா
காரரு ளடியா ரோடு நமையெழு தவும்ப ணிப்பார். (க)

யாவருங் காணு மாறே துறவுகொண் டெழுந்த வையர்
தாவருஞ் சுந்த ரேசர் சந்நிதி முன்னர் தாழ்ந்து
மேவரும் பெருந்து றைப்பான் மேவினர் குருந்த நீழ
லோவருங் குரவற் காணு ரொய்யெனப் பதைத்து வீழ்ந்தார். (உ)

அழுதழு தரற்றி யேங்கி யையகோ வைய கோவிப்
பழுதுறு பாவி யேனைத் தனிவிட்டுப் பாதம் பற்றித்
தொழுதுயு மடியா ரோடு மெங்கொளித் தனையோ சோரு
மிழுதையேற் கிரங்கா வண்ண மென்னையென் பிழைத்தே னென்பார். (ங)

பிறைமுடிக் கணிந்த வேணிப் பிஞ்ஞக ரன்பு சாலாக்
குறையுடை யாரும் பாடிக் கொண்டருள் சுரத்த லெண்ணி
மறைபுகழ் நமச்சி வாய வாழ்கவென் றெடுத்துக் கொண்டு
முறைபெரு கன்பு பொங்க வாசக மொழிய லுற்றார். (ச)

அண்ணஃலீ தருளை கலகு மற்புத மறியே னென்று
மெண்ணரு மதிச யங்கண் டாமென்று மெனது நெஞ்சந
திண்ணறக் குழைத்தா யென்றுஞ் சென்னிமன் னுந்தா ளென்
மொண்ணல னின்னைக் காண்ட லுறவாசைப் பட்டே னென்றும் (ரு)

உய்தமீரன் வாழே னென்று முன்னடைக் கலமே யென்றுஞ்
செய்வதொன் றறியே னாயேன் செத்திலே னவா வென்றும்
பொய்யமை யாத நின்றாள் புணருநா ளென்நா ளென்று
மெய்துமா றழைக்கி னீய தெந்தவென் றருளா யென்றும். (சா)

திகழ்திரு வார்த்தை யெண்ணண் திருப்பள்ளி யெழுச்சி யாதி
நிகழிவை பலவும பாடி நெஞ்சநெக் குருகி நிற்கப்
புகழ்பர னடியார் சூழ்ந்து போற்றவெள் விடைமேற் றோன்றி
யிகழ்வரு மழனீ ராப்ப ணழலெழ வெண்ணி னாரால். (எ)

மற்றதி லியாரு மூழ்கு மாகடைக் கணித்தா ரன்னோ
சொற்றவா முழுகி யன்பிற் சூழ்கண நாத ராகிப்
பொற்றமே லுலகிற் புக்கார் வாதவூர்ப் புனிதர் தம்மை
யுற்றதில் லையினீ யாலேன் றுரைத்தனர் மறைந்தா ரன்றே. (அ)

தில்லைவா வென்று சொன்னோ திருவுள மென்றி ரங்கி
யொல்லைதாழ்ந் தெழுந்து மெய்தா னரும்பியென் றுறவெ டுத்து
வல்லையோர் சதகம் பாடி விடைபெற்று,வணங்கிப் போந்தா
கொல்லையா னுகைப்பார் மேய வுத்தர கோச மங்கை. (௯)

விருப்புற வாங்கு நீத்தல் விண்ணப்ப மருளிச் செய்யக்
குருப்பொலி சடையா ராண்ட குருந்தமர் வடிவங் காட்ட
வருப்புயர் காதல் பொங்க வடிபணிந் தாங்கு நின்று
மருப்பயின் மலர்நீர்ப் பாணடி மருஉந்தல மெலாஞ்சே வித்து. (௧0)

சென்னிநன் னாடு புக்குத் திருவிடை மருதூர் தாழ்ந்து
மன்னியம் பிகையோர் பாகா மகிழ்ந்தம ராரூ ரெய்தி
யின்னியற் புலம்ப லோதி யிருங்கழு மலத்தைச் சார்ந்து
பன்னிய புகழ்ப்பி டித்த பத்தரு ளிச்செய் தாரால். (௧௧)

மணிகிளர் சென்னி நாட்டி லாவடு துறையா னைக்கா
மணிகிள ரீங்கோய் வெற்பு வாஞ்சிய மறைக்கா டாதிக
கணிகிளா தலங்க ளெல்லாங் கண்டுகண் டிறைஞ்சிப் போற்றித
துணிகிளா பெண்ணை சூழு நடுநாடு தொழப்புக் காரால. (௧௨)

முதுகிரி வெண்ணெய் நல்லூர் மொய்புக ழதிகை நாளும்
பதுமமே லிருப்பான் போற்றும பாதிரிப் புலியூ ராதி
கதுமெனக் கண்டு போற்றிக் கைகுவித் திறைஞ்சிச் சென்றா
புதுமதி முடித்தா ரேயாய்ப் பொலியணா மலையின் மாதோ. (௧௩)

ஆவயிற் றிருவெம் பாவை யம்மானை யருளிச் செய்து
தூவயிற் சூலத் தார்முற் றேற்றிய கோலங் காட்ட
நாவயிற் புகழ்ந்து போற்றி நலமலி தொண்டை நாட்டிற்
சேவயிற் பொலிவார் மன்னுந் திருவேகாம பரம்ப ணிந்து. (௧௪)

காமரு மங்காட் டுள்ள காளத்தி யாதி யாய
தேமருங் கொன்றை யாதங் தலமெலாஞ் சென்று போற்றிப்
பூமருங் கழுக்குன் றத்திற புகுந்தருட் குரவன் கோலந்
தாமரும் படிநேர் கண்டு தண்டமிழ் மணக்கப் பாடி. (௧௫)

ஆண்டவர் தில்லை வாவென் றருளிய துறவி னைந்து
பூண்டபல் கானுங் குன்றும் பொருபுன னதியு நீந்தச்
சேண்டவப் பொலியா நிற்குந் திருச்சிற்றம் பலம்பு குந்து
காண்டல்பெற் றடங்கா வன்பிற் கண்டபத் தருளிச் செய்து. (கசு)

திருக்குலாப் பத்துங் கோயிற் றிருப்பதி கம்மி ரண்டு
மருக்குலா மகவன் மூன்றும் வணபொற்சுண் ணந்தெள் ளேண
மிருக்குலா வுந்தி யார்தோ ணோக்கம்பூ வல்லி யின்னுங்
குருக்குலாந் திருப்பொன் னூசல் கோத்தும்பி யன்னைப் பத்து. (கஎ)

கூவிய குயிற்பத் தச்சப் பத்துக்கோ தறுத சாங்க
மேவிய விவைகள் பாடி விடாதகன் னடனம போற்றிப்
பாவிய பலரு மபோற்றப் பண்புசா லதத லததே
பூவியல் பன்ன சாலை யொன்றதிற் போந்தி ருப்பார். (கஅ)

ஆயவக் காலைத் தில்லை யம்பல நின்றும் போந்த
தூயவ ரொருவர் சொல்லாற் றுணைணெ னுங் கலக முறறுப்
பாயவீ ழத்தி லுள்ள பவுத்தர்கள் பல்லோ ரோடு
மேயவா சிரியன் வந்தான் வேந்தனுங் கூட மேவ. (ககூ)

வந்தவன் புலியூர் நாப்பண் மலர்செறி பளளி யுள்ளான்
முந்தவெங் கழாக்கால் வைக்த முறையென வமர்ந்து கொண்டே
யிந்தவம் பலத்தி னுள்ளா விருததுவேன் போதி மேய
வந்தமி லாகத் தேவை யென்றறைந் துறக்கு ரைப்பான். (உ0)

பொங்குவுண்டில்லை மேய பூசுர ரதுபொ ருரா
யங்கவ னெதிர்போய்ச் சேற்றி லமையவிட் டெறிகற் போலத
தகுபல் வாய்மை சொற்றுந் தகாவுரை வருத னோக்கி
யிங்குநாய்க் கெதிர்கு ரைப்பா ரிலையென விலகி னாரல். (உக)

விலகிய வந்த ஞானர் வெவ்விய பவுத்தர் செய்யுங
கலகமு மவரசாா புள்ள காவலன் வரவுந் தீட்டி
பலர்புகழ் மன்ற நீயிங கணைதரி னன்று மென்று
சிலரொடு முடங்க லுய்த்தார் சென்னிமேற் கொண்டு சென்னி. (உஉ)

மறுதின மாங்கு மேவி மறையவர் தம்மைப் போற்றிக்
குழுமுய லகன்வெந் நின்று குயிற்றுான் னடமும் போற்றி
வெறுவிய பவுத்தா செய்யுங் கலகமும விளங்கக் கேட்டுத்
தேறுமகா தேவ ருளளார் செவ்வியீர் கவலீ ரென்றான். (உங)

ஆயவவ் விரவே செம்பொ னம்பலத் தாடு மையர்
தூயமூ வாயி ரர்க்குந் தனித்தனி கனவிற் றோன்றி
மாயமி லாமா ணிக்க வாசகர் சார்பு கொண்டாற்
றீயவிப் பவுத்தர் தம்மை வெல்வீரென் றருளிச் செய்தார். (உ௪)

அந்தண ரொருங்கு கூடி யையர்தா மருளிச் செய்த
சந்தவின் மொழியுட் கொண்டு நயந்திறை வணக்கங் கூறி
மூந்தவங் கடைந்தா ஞான முதல்வரைக் கண்டார் நீவிர்
நொந்தயர்ந் தடைந்த தென்னோ நுவலுவீர் கடிதி னென்றார். (உ௫)

நெறிதவ ழீழ தேய நின்றும்பல் பவுத்தர் தங்கள்
குறியர சோடும் போந்து முலவுகம புலியூர்த் தங்கி
யறிவுரு நம்பி ராணை யகற்றியம் பலத்திற் போதி
செறிபவன் றனைத்தா பித்தல் செப்பின ருழலு கின்றார். (உ௬)

அன்னவர் கலக மெம்மா லறிந்துநீ நன்று டாரு
மன்னனு மிங்கு வந்து மருவினு னனையார் முன்போய்
றென்னனு முரைத்தோஞ் சில்ல ரோல ரெறிந்து சொற்றார்
பின்னர்யா மென்செய் வோநம் பிரானையே யெண்ணி னொந்தோம். (உ௭)

ஆடுதல் வல்ல வைய ரருளினெங் கனவிற் றோன்றி
வாதே லொழிமி னீவிர் மாணிக்க வாச கப்பேர்
நீடுத லுள்ளார் சார்பு மேபெறி னவரால் வெற்றி
கூடுதல் பெறுவீ ரென்று ரவ்வுரை கூற வந்தோம். (உ௮)

என்றன ரிவர்மா ணிக்க வாசக ரென்ப தோரா
ரன்றெமை யாண்டா ரன்றி யாரறிந் தனரென் றுயிர்த்து
நன்றமை யவரே யிந்த நான்மறை யவரெ லாமென்
றொன்றவுண ணினைந்தெ ழுந்தா ரவரொடு மொப்பி லாதார். (உ௯)

வந்துபொன் னம்ப லத்தை வலஞ்செய்து தொழுதுட் புக்கு
சந்துபல் லுலகு மேத்த நடஞ்செய்வா ரனுஞ்ஞை பெற்று
முந்துதாழ்ந் தெழுசோ ணாட்டு முதுபுகழ் மன்ன னோடு
முந்துமோர் மண்ட பம்புக் குறைந்தனர் வாத வூரர். (௩௰)

புண்ணிய நீறு பூசாப் புலையரை நேர்பா ரோமென்
றெண்ணிய வாத வூர ரெழினியு ளினித மர்ந்து
திண்ணிய பவுத்த ரெல்லாஞ் சேரவிங் கழைமி னென்ன
நண்ணிய சிலர்போய் வாதஞ் செய்யநன் னுதிர்நீ ரென்றார். (௩௧)

சிலரஃ துரைத்த லோடு சிவரப் போர்வை யாளர்
பலருமற் றவருண் மேலாப் பார்தரு குரவ ரோடு
மலர்கண்மண் டபத்து வந்தா ரவர்வழி யிறையும் போந்தான
மலர்புகழ் வாத வூரர் வாதமே னடாத்த லுற்றார். (௫௨)

தெரிகலைப் புத்த ரேறே சிறுநரி யரியோ டேற்கும்
பரிசெனச் சைவர் தம்பால் வாதஞ்செய் பயன்மேற் கொண்டா
யரியநுங் கடவு ளாவா னெனையன்மற் றடையா நின்ற
விரிதரு மின்ப முத்தி யெனைத்துமேல் விளம்பு கென்றார். (௫௩)

தருமமாம் பிடக மோதிச் சாற்றுபல் யோனி தோறு
மருவிய பிறப்புற் றெல்லா வுயிர்க்குமாண் புறுதி செய்து
பருவர லெவ்கு மோவப் பாதுக்க துக்கி யாகி
யருகொலை யொழிந்து போதி வாழ்பவன் கடவு ளாவான். (௫௪)

உருவம்வே தனைகு றிப்புப் பாவனை யொடுவிஞ் ஞான
மருவுமைங் கந்தங் கூடி யுணர்வுண்டாய் மாய்தல் பந்த
கருதுமக் கந்தம் பொன்றன் முத்தியிக் காமர் ஞானம்
வெருவருந் தவத்த ரல்லாற் பெறுவரோ வீண ரென்றான். (௫௫)

அறமுள தென்று நன்னூ லறைந்தன னிறைவ னென்றா
யுறவுற வுணர்வு தோன்றிக் கணத்திடை யொழியு மென்றாய்
திறமிகு பொருளுஞ் சொலலுந் தேடுமு னுணர்வு மாயும்
பெறலரு நன்னூல் சொற்ற பெற்றியெத திறத்திற் சொற்றி. (௫௬)

ஓதுபல் யோனி தோறு முதித்தெகை னிறைவன் றானே
தீதுசா ராது யிர்க்குச் செறிவிப்ப னுறுதி யென்றாய்
போதுபல் லுயிர்க்கு மாலைப் போக்குற நினைந்தோர் தாமே
மீதுபன் மாலை யேற்ற லொத்தது மிகவு நன்றே. (௫௭)

இறைபா துக்க துக்கி யென்றனை கணவந்த தீர்ந்த
பிறைநுத லியாதந் துக்கம் பேசருங் கணணி குததிக்
குறைகொள்வார் துகக நின்பே ரிறைதுக்க மென்று கோடி
யறையொரு காமுன கூட்டி யருளிய தழகிற் றாமே. (௫௮)

கொலையிலா னிறைவ னென்று கூறினை பிறக்கும் போதே
மலைவிறாய் வயிறு கீண்டு வந்தவ னறவ னன்றோ
புலையொழித் துணர்தி யின்னும் புலிமுத லாய காலை
நிலைதரு புல்லோ வுண்டா னிறைபல புதது ரேறே. (௫௯)

திருந்துமைங் கந்தத் தோடு தேகமுங் கெட்ட காலைப்
பொருந்துகன் முத்தி யென்று புகன்றது பிடகு மென்றாய்
வருந்தலி லிறைவ னுக்கு வடிவமின் றாசி னீழ
லிருந்தவோர் வடிவம்பேர்த்த தேய்ந்ததோ மதியி லாதாய். (௪௦)

அழிதரிற் கந்த மைந்து முத்தியென் றறைந்தா யைந்து
மழிதரின் முத்தி பெற்றா ரரெனக் கடாவுங் காலை
யழிதரு மைந்தி னுண்டா முணர்வென வறையி னைந்து
மழிதர விலையா முத்தி யாவது மிலையே யென்றார். (௪௧)

இவையுரைத் திடுகாற் சீறி யெரிசினங் கொண்டெல் லாரு
நவைசொல முயன்றார் ஞான நாதர்நா மகளை நோக்கிச்
செவையிலார் வாக்குஞ் சேர்வாய் சிரிய திதுவே யாமுய்
குவையென வன்று னீங்கக் கொள்கைநீத் தூம ரானார். (௪௨)

பரியவர் சார்பி னின்ற பார்த்திப னீன்ற செல்வப்
புரிகுழ லுற்ற மூகை போக்கிய சமய மேயோர்
திரிபிலாச் சமய மந்தத் தெய்வமே தெய்வம் யானு
மூரியன்மற் றதற்கே யென்றா னெய்யெனப் புத்த ரெல்லாம் (௪௩)

இறையவன் கைவி டாமை யெண்ணிமந் திரங்க ளெல்லா
மறைதப வுரைதுப் புத்தா காவென வணங்கிப் பார்த்தார்
சிறைகொளிம மூகை செவ்வாய் திறப்பதிங் கில்லை யிந்தத்
தறையிலிச் சமய முமபோ யிறறெனச் சலிததி ருந்தார். (௪௪)

அதுபொழு தாரததா வேந்த னன்றதிச் சமய வாற்றல
கதுமென மூகை யிந்தக கனனிகை யொழிவ ளாயி
னெதுபுரி தண்ட நுங்கட் கென்றனன் செக்கி லிட்டுக்
குதுகல நமக்குண டாகத் திரியென்றார் கொள்கை தீர்ந்தார் (௪௫)

வாதவூ ரிறைவா முன்போய் வணங்கியிம் மூகை தீர்ததுச்
சாதமாஞ் சைவ மேன்மை சாதிக்க வேண்டு மென்னப்
போதகா யகரு மந்தப பொற்கொடி வதன நோக்கி
யேதமே வாத நீறு கொடுத்திவை வினவ லுற்றார். (௪௬)

அறிவிலாப் புத்தர் முன்ன மறைசிவ நிந்தை யெல்லாஞ்
செறிதா வினவ வந்தச் செழுங்கொடி விடைகொ டுத்தாண்
மறிதா மூகை தீர்ந்த வாதெரிஇ மகிழ்ந்தார் யாரு
முறிவிலாச் சாழ லாவவ் வினவிடை மொழிந்தா ளாயா. (௪௭)

வாய்தடு மாறி யுந்த மடமையர் சொற்ற வாறே
பாய்பெருஞ் செக்கி லிட்டுத் திரித்தனன் பல்லோர் தம்மை
தோய்புனற் பொன்னி நாடன் சூளுறுப் புத்த ரெல்லாந்
தீயத னுப்பண மேவச் சேரப் போரவை வீசி. (சஅ)

வெண்டுகில் புனைந்தப் போதே வெண்ணீறு மணிந்து சைவ
வண்டுறை புகுந்தா ரீழ மன்னனுஞ் சைவ னானான்
மண்டுமென் போருங வாத வூரரை வணங்கி யப்பாற்
றெண்டுகொண் டாடு மையர்சேவடி துதிக்க லுற்றான். (சகூ)

வே று.

மணிவள ரொளியே மலர்வளர் மணமே வான்வளர் வாயுவே யென்னத்
துணிவள ரத்து விதம்பொலி சுடரே தூயவா னந்தவான் பெருக்கே [ளே
கணிவளர் கடுக்கை மதிநதி சடையிற் கலப்புறக் கொண்டவொண் பொரு
யணிவள ரமுதே யம்பலத் தாடு மையனே யுய்யுமா றருளே. (டுo)

மண்ணிய மணியே மாசிலா முத்தே வான்பெருஞ் சுவையுடைக் கனியே
கண்ணிய முக்கட் காமரு கரும்பே கற்பனை கடந்தமா முதலே
யெண்ணிய வெண்ணி யாங்கடி யவரே யெய்தகன் கருளருட் கடலே
யண்ணிய திருச்சிற் றம்பலத் தாடு மையனே யுய்யுமா றருளே. (டுக)

தலைவரு முதலே தற்பரப் பொருளே சம்புசங் கரமகா தேவ
நிலைவரு தேவே ஞாதுரு ஞான ஞேயம்வே றெனப்பகுப் பாரு
மலைவரு மவையில் லென்றுரைப் பாரு மருவுதற் கரியசெஞ் சோதி
யலைவரு மமுதே யம்பலத் தாடு மையனே யுய்யுமா றருளே. (டுஉ)

மருளறத் துமித்து வழுத்துமெய் யடியார் வாழ்தர வாழ்விக்கு முதலே
யிருண்மலந் தழுந்து மஃருகப் பரிசே யெய்துறத் தருந்தமா மணியே
தெருளிடத் தொளியே செழுஞ்சுவைக் கனியே தெய்வவான் [illegible]க தருவே
யருளுருப் பெரியா யம்பலத் தாடு மையனே யுய்யுமா றருளே. (டுங)

செம்மையொன் றின்றிச சிறியரோ டிணங்குஞ் சேதனைய ரென்றுங்கா ணரியாய், கொமமைவெள் விடையாய் கொண்டதோ லுடையாய் கூரிய மூவிலைப் படையாய், மும்மைமா வுலகு மேததிடப் பொலிவாய் முன்னிய முன்னியாங் களிப்பா, யம்மைகண காண வம்பலத் தாடு மையனே யுய்யுமா றருளே. (டுச)

இடையறு வன்பு செய்பவ ருளளத தெறறைகரு மொளிர்மணி விளக்கே
மூடையறு வுடம்பு பொருளென மதியா முததர்தஞ் சிததததட் டேனே
நடையறு மறையின் முடியமா பொருளே நாலரு பாதியில லாதா
யடையறுப் பொழில்சூ ழம்பலத் தாடு மையனே யுய்யுமா றருளே. (டுடு)

உறத்திரு வருளச விறகுறப் பற்றி யுன்றைவா ருள்ளொளிர் விளக்கே
நறப்பயில் கடுக்கை நதிமதி யரவு கருதலை மாலையென் பணிந்தாய்
சிறப்பொடு பூசை செய்துய வெங்குந் திருத்தல மாதிமுன் மூனு
யறப்பெருங் கடலேயம்பலத் தாடு மையனே யுய்யுமா றருளே. (௪௬)

பொழிசுவைக் கனியே பொங்குமா ரமுதே போதவா னந்தமெய்ப் பொரு
வழிவழி யடிமை செய்பவ ரெய்ப்பில் வைப்புமா நிதியெனு மலையே [ளே
கழிவனப் புடைய வுமையொரு பாகக் கடவுளே கடவுள ரேறே
யழிவிலாச் சோதி யம்பலத் தாடு மையனே யுய்யுமா றருளே. (௪௭)

இருவினை சிமிழ்க்க யாத்துழ லாத் தினியனை யாண்டருண் முதலே
பொருவருஞ் சுடரே புண்ணியப் பொருளே பொங்கொளி ஞாயிறே மலருண்
மருவெனப் பொலிவாய் மாணிக்கக் கூத்தா மதிநில வெறிக்குஞ்செஞ்சடையா
யருள்பழுத் தொழுகு மம்பலத் தாடு மையனே யுய்யுமா றருளே. (௪௮

குணங்கிளர் கடலே கோமளக் கொழுந்தே கொண்டன்மே னியனயன்
முதலோர், வணங்குபொற் பாத மாணிக்க மலையே வரும்பவ மாற்றுமோர்
மருந்தே, யிணங்குதீங் கனியே யெய்தரும் பொருளே யெற்றைக்கு மினிய
தீம் பாகே, யணங்குகண் கான வம்பலத் தாடு மையனே யுய்யுமா றருளே.()

வே று.

இவ்வண்ணந் துதித்தல் செய்த வீழநா டாளு மன்னன்
செவ்வண்ண மருவுஞ் சைவ சிகாமணி யாகி வாழ்ந்தா
னவ்வண்ண முதல்வன் பொற்றா ளடைந்தமற றையொல் லாரு
மிவ்வண்ண மேயுய் வண்ண மெனறுணிந் துய்ந்தா ரன்றே. (௫௦)

அவரவ ரிருக்கை மேவ வவரவர் தம்மைப் போக்கித்
துவரிதழக் கன்னி காணச் சுந்தர நடன மாடும்
பவர்படு சடையான் முன்போய்ப் பணிந்தருள் பெற்றுத் தாமே
யிவர்செழும் பன்ன சாலை யிருந்தனர் வாத வூரர். (௫௧)

ஆயவர் நாளிற செம்பொ னம்பலத் தாடு மைய
ரேயமா மறையோ ராகி யேடெழுத் தாணி கொண்டு
பாயமற் றவர்முன் சென்றார் பனவரே நீயா ரென்ன
மாயமில் பாண்டி நாட்டுப் பெருந்துறை வதிவோ மென்றார். (௫௨)

வந்தகா ரியமென் னென்ன வாதவூ ரிறைவ ரேநீர்
பந்தநீத் துலக முய்யும் படியினி தருளிச் செய்த
சந்தவா சகம்வ ரைந்து போதற்குச் சமைந்து வந்தே
னந்தயா நிதியே யின்றே நயந்தருள் செய்வீ ரென்றார். (௫௩)

என்றலு நமச்சி வாய முதலினி தமையக் கூறி
நன்றமை படையெ ழுச்சி நருப்புடை யாட்சி யச்சோ
வொன்றநின் றூலாவு றும்பத் தொத்தயாத் திரைப்பத் தோதிப்
பொன்றலி லெலாமு டித்தார் பூசுரர் பின்னுஞ் சொல்வார். (சுச)

இயம்பிய வனைத்து மைய ரேயினி தெழுதிக் கொண்டே
னயம்படு கோவை யொன்று நவின்றிட வேண்டு மென்ன
வயம்படு மவரு முள்ள மகிழ்ந்தனர் பாடப் பாடச்
சயம்படு மறையோர் தாமும் வரைந்தனர் சலித்த லின்றி. (சுரு)

முற்றிய பின்மா ணிக்க வாசகர் மொழிந்த வாறே
பற்றிய வெழுதி னேனம் பலவாணன் கையெ ழுத்தென்
றுற்றிய தனது பேரு முலகறி தரவ ரைந்து
மற்றிய லேடு காப்புச் செய்துகைக் கொடும றைந்தார். (சுசு)

மறைந்தவர் போத வாதவூரருண் மயங்கி மன்று
ணிறைந்தவா கொல்லோ வென்று நெஞ்சநெக் குருக வெங்கு
முறைந்தவர் மன்றுண் மேவி யுவந்தய னரிமுன் னோர்க்கு
யறைந்தனர் நம்பா லன்பன் பாடிய தறிதி ரென்று. (சுஎ)

பின்னர்மைக் காப்புச் செய்து பிறங்குபுத் தகஞ்சேமித்து
நன்னரைந் தெழுத்தி னும்ப படிமிசை நயக்க வைத்தா
ரன்னதை மறுநாண் மூவா யிரருமாங் கமையக் கண்டு
தென்னவற் புதமென் றங்கை யேந்தினா தலைமேற் கொண்டார். (சுஅ)

திருமுறை யுடைய விழுத்துச் சிறப்புற வாதி யந்த
மொருமுறை நோக்கி னாக வுலகெலா முய்ய வாடு
பெருமுறை யவர்தி ருக்கை யெழுத்தென விறங்கக் கண்டா
ருருமுறை யனையா ருற்ற மகிழ்ச்சியா ரளக்க வல்லார். (சுகூ)

ஓங்குபொற் சிவிகை மேலா லொய்யென முறையை யேற்றித்
தேங்குபல் லியமு முழங்கத் திருவாத வூரா முன்போ
யீங்கிது நமது பாட லெழுதினர் நம்மா னென்
றாங்குவைத் தஞ்ச லித்தா ரழுதழு தவருங் கண்டார். (எo)

முறையிதன் பொருளே யாங்க ளறியுமா மொழிவீ ரென்ன
விறைவளா சபைமுன் சொல்வா மென்றவ ரோடுமாங் கெய்தி
நிறைபெரு நடஞ்செய் வாரே நிகழ்பொரு ளென்னக் காட்டி
மறைமுடி பெறுமுட் புக்கு மறைந்தனர் வாத வூரர். (எக)

ஒளிமய மாகத் தோன்ற வும்பர்பூ மாரி பெய்தா
ரளிவள ரந்த ணாள ரனைவரு மஞ்ச லித்தார்,
வளிவள ருலகி லாணி மகஞ்சிறப் புற்ற தெங்குந்
தெளிவளர் சைவ மோங்கிச் சிறப்புற்று வாழ்ந்த தன்றே. (௭௨)

வாதவூ ரிறைவர் தில்லை மாநக ரடைந்த டைந்த
போதவா னந்தஞ் சொற்றும் புரூரவ மன்ன ரேறே
யோதவாம் பெருந்து றைக்க ணுற்றுன்ம நாத னாததாழந்
தீதமை தரவுட் கோடி யெனமுனி விடைகொ டுத்தான். (௭௩)

தில்லையையடைந்தபடலமுற்றிறறு

ஆகததிருவிருத்தம் க௩௭௩.

---

# புரூரவன் பெருந்துறையடைந்து திருவிழாச்செய்தபடலம்.

தூய மணிவா சகரெனலிற் சுத்த மாயா காரியமுன்
னாய வசுத்த மாயாகா ரியமு மாக வமைந்ததனு.
னேய மருவு தொண்டாமுன திகழு நேய மருவாத
தீய வெனையுஞ் சோத்துவப்பா திகழு மனைய பெயருடைததரா. (க)

சாந்த குணததுத தவுமியனா விடைபெற றெழுந்து தணைபொருவில்
வேந்தன் புரககு நன்னடு மேவு வாவிப் பெருந்துறையுட்
சார்ந்து நகர வளமுழுதுந தனகண விடுதது நனிநோக்கி
யார்ந்து திளைக்க முடியாதென் றடங்கா மகிழச்சி தலைக்கொண்டான். (உ)

மேய குரவன் சொற்றதினும் விசேட மாக விருந்ததித
தூய தலமென றுவப்புற்றுச் சுகுண புரூர வாமன்னன்
னேய தளிக்குப் புறததேழு மகததோ ரிரணடு மாயமைந்த
பாய பெருந்தீர்த தமபடிந்து பாஙகார் திருவெண்ணீறணிந்து. (ங)

கண்ணின் மணிமா லிகைபுனைந்து கருத்தைந் தெழுத்து முளங்கணித்து
மண்ணணி னிழலொன் றவவாத மதமால களிற்றி னடிபோற்றிப்
பண்ணின் மொழியோ காமபிலகததாய பாகங கொண்ட பெருவாழ்வை
நண்ணணி னகலா தொளிரான்ம நாத நாம வருட்கடலை. (ச)

கண்டு தொழுது சிவயோகக் கன்னி திருமுன் சென்றிறைஞ்சி
வண்டு படியு மலர்க்குருந்த மாமூ லமுங்கண் டினிதேத்தித்
தொண்டு புரிவார்க் கேயருளுந் தூய குருவ முள்ளிருத்தி
விண்டு விகர்மன் னவன்றனக்கோ ரிடமுண் டாக்கி வீற்றிருந்தான். (௫)

இருந்த மன்ன னித்தலந்தா னெண்ணி லாமான் மியத்ததாற்
பொருந்த விதற்குத் திருவிழாப் பொலிவி லாத திறமென்னோ
திருந்த வடைந்த வொருநாமே செய்வித் திறைஞ்சு வோமென்று
வருந்த வார்ச்சீர்ப் புரூரவா துயின்றான் மற்றை யவன்கனவில். (௬)

குருந்த நிழலா ரொருமறையோர் கோலங் கொண்டு நேர்தோன்றிப்
பொருந்த நமக்கு விழாச்செய்தல் புந்தி கொண்டா யதுதவிர்தி
பருந்த வாவு வேன்மன்ன பரிவி னம்மைப் பாடினவையர்
திருந்த வைத்த வாதவூர்ச் செம்ம லார்க்கஃ தியற்றுவாய். (௭)

உற்ற யோக நாயகித னுளிசால் கோயிற் கெதிர்முகமாச்
சொற்ற சொக்க விநாயகர்தங் கீழ்பாற் றுலங்கு வடமுகமாப்
பொற்ற கோயி லொன்றமைத்துப் பொலிய வனையர் திருவுருவ
மற்ற மறக்கண் டிற்றுபித் தாண்டிற் கிருகால் விழாச்செய்தி. (௮)

விடைவே தவ்வட முதலாநாம் விரும்பு மூர்த்தி யெலாஞ்செய்வித
தடைவே யவர்க்காக் குதியினுந்தண் டீச பதமீங் கருளினுந்
தொடையார் புயத்தா யிதுவேமற் றெமக்குஞ் சொலுமயோ காம்பிகைக்குங்
கடையா காத வுவப்புறுத்து மறியென் றுரைததுக காந்தனரால். (௯)

என்று கருணைப் பெருமானு ரியமபி மறைய வுடன்விழித்து
நன்று சிறியே னினைததுவு நம்மான் கருணை யிருந்ததுமென்
றென்று பலகாற் பாராட்டி யினியார் பலர்க்கு மெடுத்தியம்பிக்
குன்று குழைத்தா ரியமபியவா றுற்றுத் துணிபே குறிக்கொண்டான். (௧௦)

சினவின் மேரு வளையாகச செய்த பெருமான் கருணையினாற்
கனவி னுரைத்த தானததே கனக மயத்தோர் தளியாக்கி
னவி லெமக்கு வந்தருளு நல்லார் தமது திருவுருவா
தனவில் விளங்கும் படிசமைதத தளியிற் றுபித தனனுளில். (௧௧)

ஆய்ந்த கருணை பொழிவிழியு மழகு பொலியுந் திருமுகமு
மேய்ந்த முறுவற் செவ்வாயு மிளையப் பொலியுங் குழைக்காதும்
வாய்ந்த வளைசெய் தடந்தோளு மாபு மலர்க்கை களுமெம்முட்
டோய்ந்த துணைத்தாள களுநகண்டு தொழுது தொழுதுய்ந் தஃதுலகம்

வாத வூரர் வாசகமே வையத் தவர்தஞ் செவிகவரு
மேத மருவா மலரடியே யேந்த லான்று மனங்கவருஞ்
சீத மருவு செயலொன்றே தெளியச் செயலெ லாங்கவரும்
போத மருவுந் திருமேனிப் பொற்பே விழியெ லாங்கவரும். (கங)

உதிக்குங் குணபா லிளங்கதிரு மொவ்வா வென்னு மணிமகுட
மதிக்கும் வயிரங் கால்யாத்த வாகு வலய மணிசெய்குழை
பதிக்கு மதாணி வெண்டரள மாலை வயிரம் பயில்கடகந்
திதிக்குந் தண்டை சிலம்புமுதற் றிருவா பரணம் பலசமைத்து. (கச)

குடையுங் கொடியு மொலியல்களுவ கோணத் தண்டங் களுங்கோண
லடையுந் தண்டங் களுஞ்சிவிறி யால வட்டங் கவரிகளு
மிடையு மகர தோரணமும் விருதா வளிமற் றுளபலவு
மிடையு முந்த லுமீறுமிலா விறைவ னுவப்ப நனிசெய்து. (கரு)

பரியுங் கனக சிவிகையுஞ்செம் பங்கிக் குறுந்தாட் பூதமும்வெங்
கரியு மிமிலேற் றிடபமுமொண் காமர் பழுத்த கயிலாய
கிரியுங் கனக மணித்தேருங் கிளக்கு மிவைமுன் னூர்தியெலாந்
தெரியும் பிரபை கொழுந்துவிடச் செய்து செய்து முடித்தனன்பின். (கசு)

பலவா நிறத்த நேத்திரமும் பைம்பொ னிழைசா லம்பரமு
நலமார் முத்த மணிகோத்து நகுமா றியற்று கலிங்கமும்பன்
னிலமார் பரிவட் டம்பலவு நீடு பிறவும வருவித்துப்
புலமார் பஃறே யங்களுக்கும பொருந்த முடங்கல் போக்குவான். (கஎ)

திருந்து குருந்தப் பெருந்துறையிற் றிகழ்மா ணிக்க வாசகர்க்கும்
பொருந்து மிதுன மதியமைந்த போது திகழுந் தானாளில
வருந்து தவிர்க்குந் தரிசனமா மற்றந் நாண்முற பததாநாள்
விருந்து விழிக்காம் விழாவினுபக் கிரம மிதனை விழைந்தனாக. (கஅ)

வந்து தரிசித் தெண்ணியவை யனைத்தும பெறலா மெனவரைந்து
முந்து முடங்க லொடுதூது போக்க முனிவின றரசரெலா
நந்து மகிழ்ச்சி யொடுமேற்று கண்ணு பரிச னங்களொடு
மிந்து தவழிற் பெருந்துறைவந் தெய்தி னூரக னளியிணைடி. (ககூ)

வந்த வரசர் புரூரவா மன்னன் றனைக்கண் டடிபணிந்து
சந்த மருவும் பெருங்காத றழைத்து நிற்பப் புரூரவனு
மந்த மில்லாப் பேருவகை யடைய முகமன் பலகூறி
முந்த மருவு மவரவர்க்குத் தக்க விருக்கை முறைகொடுத்தான் (உ0)

தெளிமா ணிக்க வாசகர்தந் திருநா ளின்று முதலென்று
களிகூர் வளமைப் பெருந்துறையில் வாணர் பல்லுங் கடைப்பிடிமின்
வளிசான் மறுகு மணிமாட மாதி வயங்க வலங்கரிமி
ெனளிசார் தரவென் றறிவித்தா னொலிமிக் குறுமா முரசத்தால். (உக)

வாத வூரர் பெருமாற்கு வயங்கு திருநா ளெனக்கேட்டுச்
சீத வயல்சூழ் பெருந்துறையிற் றிருந்த வாழு மவரெல்லா
மோத முடியாப் பேருவகை யுற்றுப் பலவுஞ் சேகரித்துக்
காதன் மருவ வலங்கார முழுதுங் கவின வாற்றுவார். (உஉ)

வான மறைக்குங் காவணமிட் டதன்கீழ் வயங்குஞ் செம்பட்டா
ளான விதானம் பொருந்துறயாத் ததுசூழ் தரக்கொய் துகிறூக்கிக்
கான மெனச்செங் கழைக்கரும்பு கதலி கமுகு கால்யாத்து
மான விளநீர்க் குலைபலவா வயங்கத் தூக்கி யலங்கரித்தார். (உங)

வேதி யனைத்து நறும்பனிநீர் விரய சாந்தங் கொடுமெழுகி
யோதி முடியா முத்தமிடித் துற்ற பொடிக்கோ லம்புனையாச்
சோதி மணிப்பொற் சுடரமைத்துத் தூநீர் நிறைபொற் கும்பநிறீஇப்
போதி யலுமர் தொடுத்தநறும் பொற்பூ மாலை கொடுபுனைந்தார். (உச)

முன்ன மணிந்த கலன்வெறுப்பார் முனிவில் புதிய கலன்பொறுப்பார்
மன்ன கவவண் கலையுடுப்பார் மலர்கள் கொய்து தொடைதொடுப்பா
ரன்ன நடையார் தமைச்சிறப்பித தழகு பார்த்து நயந்தெரிவார்
சொன்ன மகளிர் நடம்புரிய நோக்கி மகிழ்விற் றுளைதருவார். (உரு)

தெருவிற் புழுதி முழுதடங்கத் திருந்து பனிநீ ரினைறத்திடுவார்
பொருவிற் காமன் சமழ்ப்பெய்தத் தமமைப் புனைந்து வெளிபயில்வார்
திருவிற் கொடுபோய் விருந்தினரைச் சிறப்ப வூட்டி யுபசரிப்பா
மருவிற் பொலியுந் தொடைபுனைந்து வணபா கிலையு நல்கிடுவார். (உசா)

தங்க ளுறவா யுள்ளாரைத் தரிசித் திடமா வரவழைப்பா
ரெங்க டவத்தா மிகப்பெரிதா லிந்த விழாநோக் குறுமென்பா
ருங்க டவத்தக் கொப்பிலையென் றுற்றா ாகரத் தனைப்புகழ்வார்
திங்க டவழு மாடமெலாந் திகழப் பலகொண் டலங்கரிப்பார் (உஎ)

கரிய குழல்யோ காம்பிகைக்குங் கருணை யான்ம நாதருக்குந்
தெரிய விழாச்செய் வதுகுறித்தான் செங்கோன் மன்ன னவன்கனவில்
விரிய மலர்செய் குருந்தநிழன் மேவி யவரே யெழுந்தருளிப்
பிரியம் வாத வூரருக்குப் பிறங்கச் செயலென் றுரென்பார். (உஅ)

செய்ய தமிழ்நாட் டுள்ளார்கள் யாருஞ் செறிந்தார் திருநாண்முன்
வைய முழுதுஞ் செறியுமினி வைகற் கிடம்போ தாதென்பார்
வெய்ய நகரின் புறமனைத்து மிடைந்த படமா டங்களென்பார்
மைய வாவு சோலையெலாம் வகுக்க வேண்டு மிடமென்பார். (௪௯)

இந்த வண்ண நகர்வாழ்வா ரியாருந் திருநா ளெதிர்பார்த்துச்
சந்த மலியுமீ பேருவகை தழையப் பொலிந்து பயில்காலை
யந்த மருவா விழாக்கொளுநா ளணிய தாக வதுமன்னவகோண
டேந்த வரச னுபக்கிரமஞ் செய்வீர் மறையீ ருறவென்றான். (௫0)

வே று.

அறைகழ லரச னுரைத்தசொ லுளங்கொண் டாங்கிசை வருமறை யோரு
நறைகமழ் கமல மலர்புரை யிடக்கை ஞானபோ தகமொரு வலக்கை
முறைதெரி ஞான முத்திரை பதித்து முழுப்பிர சன்னமாய் நிற்கு
மிறைதிரு விழாவை நடாத்துத றுணிந்தா ரெதுபுரி குவதென வாய்ந்தார். ()

ஒலிகெழு கழற்கான் மன்னவ ரேறே யொள்ளிய வாதவூ ரடிகள்
வலிகெழு விழாவை நடத்துக வென்றாய் வயங்குமுற் சவமபல விதமாம்
பலிகெழு மவற்று ளெதனையாந் துணிந்து பண்ணுத லுளோத்திரீ யென்றார்
கலிகெழு கடல்சூழ் புடவியாள் பவனுங் கருத்துற விருத்தியஃ துணர்வான்.

மறையவர் வினவுக் கெவ்விடை கொடுப்போம் வயங்குற முன்னைநாட் டவத்
னிறைதவு மியன்பா லிஃதுண ராதே னினைப்பதி றுவதென் னென்று [தா
கறைதப வெண்ணி யிருக்குமக் காலைக் கருதிலம மன்னவ னெடுநாட்
குறையறப் புரிந்த பெருந்தவ முருவங் கொண்டனைர் திடதிறம் போன்று. ()

தூயமா ணிக்க வாசகர் திருநாள் சூழ்கட லுலகெலா முய்தற்
காயகா ரணமா நடத்துகின் றோரென் றறைமொழி யருசெவி யேற்று
நேயமோ டதுகண டிடுதிற நிரம்ப நினைந்துமா னவர்சூழாஞ் சூழத
தாயனு னெங்க டமிழ்முனி யாவருச் சார்ந்தன னரசது கணடான். (௫௪)

பதைபதைத தெழுந்து விரைந்துமுன் சென்று பாததா மரைமிசைப் பணிந்
புதையிருள் கிழிக்குங் கதிர்வர வெதிரம் போருகந் தகமுக மலர்ந்தான் [தான்
சுதைநிக ராசி மொழிந்துநீ றளிககத தூமலாக் கைவிரித தேலா [தான்.
வதைநுத லணிந்து மீளவும் பணிந்தா னலங்குதன் னிருகரைகொண் டனைர்

தூயவிட் டரமிட் டிருத்தினன் பூசை தொடங்குபு செய்துமுற் றியபின்,
மேயவம் முனிவ னிருக்கென விருந்து விண்ணப்ப மொன்றுள தென்று
ஞயமற் றஃதென் னெனத்தவ மியர்பே ரருளினு லடியனித் தலத்துப்
பாயபல் சிறப்பு முணர்ந்தன னிவருப் படர்ந்தனன் றரிசனஞ் செய்தேன். ()

விழாவது நடத்தற் கெண்ணினேன் வேத வித்தகர் கனவிடைத் தோன்றிக்
கழாமணி யனைய வாதவூ ரருக்குக் கருதிய தாற்றென்ற காந்தார்
தொழாவடி யேனு கமஞ்சொலும் பலவுட் டுணிந்தெது செயலென மதித்தேன்
வழாநிலை முனிவா நின்வர வெதிர்ந்தேன் மற்றஃ தருளிசெய்நீ யென்றான். ()

புண்ணிய மனாவும் புரூரவா மன்னன் புகன்றிது கேட்டிட வளவாத்
திண்ணிய புகழ்சால் செந்தமிழ் மணக்குஞ் செய்யவாய்க் குறுமுனியுரைப்பா
கண்ணிய பரம னுயிரெலா முய்யக் கரிசில்வே தாகமம் வகுத்தா [ன்
னெண்ணிய வவற்றாற் புரிகிரி யையுமோ ரிருவகை யென்மனர் புலவோர். ()

வேதமார்க் கமெனும் வைதிகக் கிரியை மிளிர்சுவர்க் காதியாம் போகம்
போதகல் குபுபின் சனனமுண் டாக்கும் பொருந்திய வாகம மார்க்கத்
தாதரச் சைவக் கிரியைதா னிட்ட சித்தியு மமையுமோக் கமுந்தந்
தேதவெம் பிறவி யுறுவகை செய்யு மாதலா லிஃதொன்றே விசேடம். (௩௧)

பரசிவ னுரைத்த வாகமப் படியே பண்ணுதீக் கையும்பல விதமாம்
விரவுசோக் காதி யவுத்திரி யீறு விளம்புவ ரீறிரு வகையாம்
வரமிகு குண்ட மண்டல மாதி வகுத்துமா ணாக்கன்வெம் பாசத் [பேர்.
தரனற வெழுத்தைந் தணர்த்திடு தீக்கைக் குரைப்பராற் கிரியையென் றொரு

அறைதரு குண்ட மண்டல மாதி யனைத்தையும வெளிப்படை யின்றி
முறைமையிற் குரவன் மானத மாக முடித்துமா ணாக்கன்வெம் பாசப்
பொறைதவிர் தீக்கை ஞானமென் றுரைப்பா போற்றிய விப்பெருந் தீக்கை
நிறைதரு விசேட மிவையடைந் தவர்க ணிமலன்று டகவடைந் திடுவார். ()

ஆயவித் தீக்கைக் கருகரல் லாதா ரபக்குவர் விடரிழி குலத்து
மேயவர் சைவா சாரநிர் இத்து விட்டவெம் பாதகக் கொடியோர்
தியமற் றிவரும் பறவைபல் விலங்கு செறிதரு முதலிய வுயிரு[ம்]
ஆயாநற் கதியிற் புகும்வகை யியற்றுஞ் சுந்தரத் தீக்கையொன் றுளதால். ()

எண்ணுமற் றதன்பேர் சாம்பவ தீக்கை யெனப்படு மண்டலம் வன்னி
நண்ணுவண் பலிகா யகர்மகேச் சுரரே நகுகட மந்திர தேவ
ரொண்ணுமற் றிவ்வா றெண்ணுபு செயலா மொளிரிதே யுற்சவ மாகுங்
கண்ணுமற் றதுமைங் கிருத்தியப் பெயராற் கவின்பெறுங் காவல ரேறே. ()

தழைபுக ழனுஞை யங்குரம் வாத்து சாந்திவெள் ளிடபயா கஞ்சீர்க்
கழைதரு பேரி தாடன மாதி காமரு சிருட்டியே யாகும்
புழையிறே வதாவா கனம்யாத்தி ராதா னம்புகல் வாகனோற் சவமே
வழைதுவ சாரோ கணஞ்சக்தி யாவா கனமுதற் றிதியென வகுப்பார். (௪௪)

ப்லிபுன லாட லத்திர யாகம் புகர்யாகாங் குரங்கண யாக
மெலிவில்காப் பணித லாதிசங் காரம் விழைபுனற் கருமங்கா ளாக
கலிவிலா வவரோ கணமுதன் மறைப்பா காடுப தேசஞ்செந் தமிழாற்
பொலிமறைப் பூஸ்ச குரவனுற் சவமுற் புகலனுக் கிரகமென் றுரைப்பார். ()

சொற்றவிவ் விதத்தா லுற்சவ மைந்து தொழிலெனப் புகலுவ துணர்தி
கற்றமன் னவவிவ் வுற்சவந் தீக்கை கைக்கொளா ராதியர் பொருட்டென்
றற்றமின் றுமுன் னுரைத்தன மெனினு மவுத்திரி யாதிபெற் றுரும்
பொற்றமெய்ஞ் ஞான யோகருங கண்டு போற்றிடப் படுவதென் றுணர்வாய்.

ஆயவித் தகைய வுற்சவ சேவை யன்புறச் செய்பவர் பரம
னேயமிக் கவரா யிகம்பர மோக்க நிலவுறப் பெற்றுவாழ் தருவார்
மாயவ னாதித் தேவரும் வந்து வந்துசே விப்பர்யா மிங்கு
மேயது மிதற்கே திருவிழச் சேவை விழைதரார் பிறப்புமெப் பிறப்பே.(சஎ)

மருவுசா கலியம் பாவனஞ் சாந்த மாங்கலி யம்மென நான்காம் [தல்
பொருவிலுற் சவந்து வசமுயர்த் துதன்முற் புனற்கொடை யளவுஞ்செய் திடு
வெருவில்சா கலியந் துவசமேற் றுமல் விழைபுனற் கொடைவரை யியற்ற
லொருவில்டா வனவுற் சவமென வுரைப்ப ருமாபதி யாகம முணர்ந்தார். ()

விழைதரு துவசா ரோகணங் காலே விழவுமில் லாமலே மாலைத், தழை
விழா மட்டு நடத்துதல் சாந்த தாணிவந் துதயமாங் காலைக், குழைவிழா
மட்டு நடத்தன்மாங கலியங குறிகொள முதற்சொல்சா கலிய, மழைமதம்
பொழிபுங் களிற்றின யொன்பான் வகைப்படு மென்பகற் றுணர்தோ. ()

சவுரஞசாந் திரஞ்சா விதகிரங் கவுமா ரந்தைவீ தந்தழை பவுகம், பவுதி
கங கணஞசை வமமென முறையே யிருபத்தேழ்பதினே ழுபதினோ,துவமை
யில் பதின்மூன் றென்பதே ழைந்தா மொருமூன்றுன் றியற்றுநா ளென்
னுந, தவமுளா புகழு மாகமரு சிறந்த தவுமிய முனிவன்மா ணுக்கா. (ரு௦)

பன்னிய விவைவண கொடிமிசை யேற்றிப் பலியிட்டு நடத்துவ தொன்று
துன்னிய விரண்டு மின்றியாற் றுதலு மொன்றுசொல் கொடிமரம் பதியா
மன்னிய படமே பசுவலை கயிறு வளைதரு பாசமா தலின
லுன்னிய திரிப தார்த்தமாந் துவசா ரோகணத் தொடுசெயுற் சவமே. (ருக)

உததம மாகு முரைத்தபல் வகையு ளோங்குறை வீகவுற் சவத்தை
வித்தகக் கொடியேற் றொடுபலி யிட்டு விழைதரப் புரிதியென் றுரைத்தான்
முததமிழ் முனிவன் புரூரவா வெழுந்து முன்பணிந் தனனுளங் கொண்டு[ர்.
சத்தமை மறையோர் தமக்கெலா முரைத்தான் றக்கதென் றேற்றிது செய்வா

பின்னரு மலமி முனிவர னுரைப்பான் பிறங்குறாத விகமெனுந் திருநாட்
கென்னரு மொன்பா னுளெனு வுரைத்தா ரெனினும்பத தம்பதி னென்று
முன்னரு நாளு மாமென வமைததார் மொழிந்தமற் றிதகடைப் பிடித்துத்
துன்னரும்விழாவைநடத்தலாமென்ருன்சொற்றதுத்தமமெனததுணிந்தார்.

எழுபரித் தேரோன் மிதுனரா சியிற்செ லேற்றமா மதிமுத ஞளின்
முழுதுண ராதி சைவனுங் கொருவன் முந்துகா லையின்மயிர களைந்து
கெழுதகு கழுவா யேனவு மாற்றிக் கிளகுமா லையினுமீ ராடி
வழுவறு நியமம பறறுபு சந்தி வந்தனை யாற்றிநீ றணிந்து. (ருச)

பூதசுத் தியினே டந்தரி யாக பூசைசெய் தறப்பவித் திரனும்
மேதகு சிரத்தை மீமிசைப் பொங்க மேதினி வளம்படு நிமித்த
மாதரந தருசா றுபக்கிரமஞ்செய் ததநிறை வேறுமா றனுரை
காதரந் தபப்பெற் றொணமணி வார்த்தைக் கடவுளா ரைப்படி யிறக்கி, (ருரு)

அந்தமில கருணைக் கணேசனைப் போற்றி யான்மநா யகர்சிவ யோகச்
சந்தமா தேவி குருந்தடி யமரா சாரியர் திருநட நவிலவார் [குருக
கந்தவே ளுறனை யொருங்குபெற் றொழுந்து கடையனேன் மனமுநெக்
முநதவா சகநன் கருளினு ரமரு மொயயொளி யாலய மடைந்து. (ருசு)

மன்னிய துவார வானவர் பூசை வண்கருப் பாவர ணத்திற்
பன்னிய பூசை யியற்றுபு பஞ்சா தனமபஞசா வரணநற பூசை
நன்னிய மததி னியற்றுபு நியாசா திகணயந் தாகமப் படிசெய்
துன்னிய வாத்து சாந்தியப் பாற்செய் துறமிருத திகைகவர்ந் ததன்மேல். ()

மேயவாங் குரமாம படிபல விததும விதநிய பின்புறா லுணாந்த
தூயவா ரியன்றன் முன்வலக கரததுச் சுடாந்தபொற் காப்புந லணிந்தா
னுயபின் மறுநாட் பரணியிற காலை யான்மநா யகர்திரு முன்னாப்
பாயசுந் தரபாண டியனியற றியதாய்ப் பரவிய மணிசெயமண டபத்தில். ()

மன்னிய சாந்தி செய்துநம் பெருமான் மாணிக்க வாசக வள்ளல்
பனனிய சிறப்பி னுடகெழுந் தருளப் பணினு னுயதோர காலைத
துன்னிய மலரோன் மாயவன் முதலாஞு சுராகளு மகத்தியன் முதலா
முன்னிய முனிவ ரியாவரு மறற யாவரு மாநகுமொய்த் தனரால. (ருக)

ஆயகா ரணரா மான்மநா யகனா யாநகொரு வைதிக மறையோன்
பாயபே ரன்பி னேத்திரஞ் சாததிப் பாநகுசால் பூசனை செய்து
தூயசாந் தலர்யா லிகைபரி கலமுற் சொல்பரி வட்டததோ டடைந்து
நாயனுர் கொளச்செய் திடன்கருப் பூர நருகடா விளசகமேந் தியபின். (௬0

மூன்றிருக் காதி யாவையு மெழுதார் மொழிந்தரு ளம்பல வாணா
தன்றிருக் கையா லெழுதிய வருமை சாற்றிருக்கோவையார் மறையை
நன்றிருக் காதி யாவையு மொழிய நக்கபொற் பீடமே லேற்றி
யந்திருக் கார யாவருங் காண வழகிய பூசைசெய் ததன்பின். (சுக)

பெருந்துறைக் குருந்த நீழல்வீற் றிருக்கும் பெருங்கரு ணாநிதி யார்தன்
முருந்துறழ் மூரல் யோகநா யகிசேர் மூலகா ரணரொனு முதத
ரருந்தமிழ் வாத வூரரை நோக்கி யருளினு காயவா ணியினுற்
றிருந்தவீ துரைப்பா ராவயிற் செறிந்த தேவர்மு னியாவருங் கேட்ப. (சுஉ)

வேதவே தாந்தம் விளம்புமித் தலத்து மேயயா மூலவ ராவேம்
போதமே யுருவாய்ப் பேரந்தநீ ரெவரும் புகழ்தரு முற்சவ ராவீ
ரோதவாஞ் சோமாக் கந்தர்முன் னாக வுற்றந மங்கிச மெல்லாஞ்
சீதமார் குணநீ ரொருவரே யண்டயத் திருவருள் புரிந்தன மதனால். (சுங)

நாமினி துகைகரு மூர்த்திக ளனைதது நகவுமக் குதவின நமக்குத
தாமினி தாகப் புரியபி டேக நிவேதனஞ் சாத்துபூ மாலை
யாமினி பகலாம் படியணி மணிப்பூ ணிவைமுதற் சிறப்பிப்போர் பவத்தோம்
போமினி யவர்பா னுமிடப் பாகம பொருந்தினு ளொடுகனி மகிழுவேம். (சுச)

ஆயிர நமக்குச் செய்வ தினம்பா லன்புசெய் நுமக்கொன்று செய்வார்
பாயிர மறையு மளப்பதற கரிதாம் பயன்பெற நீரனி கொடுப்போ
மேயமற் றுமகருச் செய்பணி யெமக்கு விழைந்துசெய் பணியினும விசேட
மாயதென் னென்னிற் புதல்வர்மாட் டியற்று மன்புதந் தையர்க்குவப் பாமால.

மன்னிய நுமககு நிகழுமுற் சவததில் வயங்குறச சதிர மமைத்துப்
பன்னிய வனன தானஞ்செய் தோர்க்கும பருகநீ வாக்கிடு வோர்க்குந
துன்னிய மற்றைத் தானஞ்செய் வோர்க்குஞ் சுராதிபன் பதமுத லாக
மின்னிய வெவையு நல்குவோ மீற்று விளங்குநம் பதஙகளுங் கொடுபபோம.

உம்மைநா மாக வுளங்கொடு வழிபா டுஞற்றுவா ரொருபொழு தினுநா
மமமையோ டகலா தமர்திருக காசி யாதியில வசிததிடு பேறுஞ்
செமமைசேர் கஙகை முதனதித தீர்த்த செய்தகே தானமுற் பேறும் [யமே.
வெமமைதீர் தரபபெற்றுவபபரொன றனநதம்விருமபுநுமவிழாச்செய்புணணி

நுமமைநந் தமக்கு வேறெனு நினைக்கு நுவலொணுக் கொடியபா தகத்தோ
ரிமமையெவ் வளவு திருவிருந் தாலு மிழந்துதீ நிரப்புகோட் பட்டுச்
செமமையொன் றின்றி மறுமையில வெய்ய தீநர கெலாந்துனைந் திடுவா
ரமமைசா லுள்ளக கயவர்தா மிருந்த வூரிலுங் கதியிரா தகலும். (சுஅ)

எண்ணருஞ் சனன மிருஞ்சிவ தீக்கை யெய்தியு மாகம புராண
நண்ணரும் பொருளை நனியுளர்ந் துணர்ந்து நவிலருட் குறிப்பூசை செய்துங்
கண்ணரு நம்பா லன்புமிக் காற்றிக் கைவந்த வுததமோத் தமரே [தால்.
பண்ணருந் தவஞ்சா னுமக்கன்பு செய்யும பான்மையா ம்றறையோர்க் கரி

அகளமா யமரித் தலத்தடி யேனை யாட்கொளப் பெருநகரு ணையினுற்
சகளமாய் வந்தீ ரெனைத்தரி சித்தோர் தாம்பெற லென்னென வினவி
னிகளமாம் விருத்தி யெனப்புக லிம்மை நிகழ்ச்சிசான் மறுமையென் றோது
முகளமாம் பேரின் புறவனு பவித்தீற் றெருவினம் மடிக்கலப் புறுவார். (எ0)

ஆண்டினுக் கிருகான் மிதுனமா மதியுத் தரந்தனின் மிதுனலக் கினத்திற்
பூண்டிய றனுமா மதியிலா திரையிற் போர்தனு லக்கின மதனி
லீண்டியா நும்மை யாண்டருள் காட்சி யாவர்க்குங் காட்டுவோங் காண்போா
வேண்டியா தரிக்கு நமதடிக் கலப்பின் மேவுவா ரென்றருளினரால். (எக)

அதிசயம் பயப்ப வான்மநா யகர்பே ரருளினு லருளிய வாத்தை
மதிநலம் பொலியும் வானவர் முனிவர் மானிடர் விருப்புறக் கேட்டுத்
துதிகெழு மினைய திருவிழாச் சேவை துணிபுறச் செய்தலே யெளிதிற்
கதியடை யுபாய மெனக்கடைப் பிடித்துக் கழிமகிழ் பூத்தனர்மாதோ. (எஉ)

அதிசயம் பயப்ப விவைநடந் ததன்பி னன்னன்மா ணிக்கவா சகனாப்
பதிகொடி மரஞ்சா ரிடத்தெழுந் தருளப் பல[illegible]ப்பி னிடபயா கஞ்சீர்
மதிகொள்பே ரிகைதா டனந்தேவ தாவா கனந்துவ சப்பிர திட்டை
துதிதரு கணேச ரொடுபடப் பிரதக் கிணமிவை சூழ்ந்துசெய் ததன்பின். (எங)

கருதியாத் திராதா னந்துவ சாரோ க[illegible]மாரோ வாதமுற் பலவுஞ்
சுருதியா கமச்சொற் படிமுடித் ததன்பின் றூயவா ராதனஞ் செய்து
பொருவருந் திட்டி சுற்றுபு துவசம் பொலிதரு வுடைப்பிர கார
மருவுற வலஞ்செய் தாயவாத தான மணடபஞ்சேர்த்துப்பூ சித்தே. (எச)

அன்றிர வகம்யா காங்குரம் யாக மலங்கொளி வாதவூர்ப் பெருமான்
றன்றிரு வலமுன் கையிற்பொன் செய்து தயங்குநா ணெடுத்தினி தணித
றுன்றிய யாக மத்திர தேவர் சூழ்பலி நாயக ராகச்
சென்றியை வாத வூரர்தம் மோடெந்திக்குபக் தனமுறச் செய்து. (எரு)

குடைகொடி யாதி விருதுக ணெருங்கக் கொண்டல்வெள் குறப்பணை முழங்க
மிடைதரு மலங்கா ரம்பல வாங்கு விராயினர் கட்புலன் கவர
வடைபல்வா னவரும் பூமழை பொழிய வரகர வென்றுபன் முனிவர் [ம்.
புடையுற நெருங்கச் சென்றுலாப் போதும பொலிவினைத்தனித்தனிவகுப்பா

ஆதிநா ளினைய பெருந்துறை யடைபோ தணைந்தது சிவிகையாதலினாற்
சோதிசா லினைய சிவிகைக்கோர் முதன்மை தோன்றவூர் வதுகுறித் தாங்குப்
பாதிமா மதியஞ் சூடினா னருளாற் பயில்விழாப் பரணிநா ளிரவி
லோதிசான் முனிவர் முதலியோ ருவப்ப வொளிருமற் றதிலுலாப்போந்தார்.()

திரிபுவ னமுஞ்சொல் பெருந்துறை மேய செல்வர்தா மருளிய வரத்தா
லரியமற் றவர்வை கிடந்தமக் குரிமை யாமெனல் விளக்குதல் போலக்
கரிசில்கார்த் திகைநாட் காலையில் வெய்ய கதிர்செய்சூ ரியவிருத் தத்தில்
விரியுமா லையினி னிலாச்செயு மதிய விருத்தத்தின் மேயுலாப் போந்தார். ()

ஒள்ளிய தாய வுரோகிணி நனாளு ஞயாகுண வழுதமந் திரியாய்
வள்ளிய போகந் துய்த்தற் கேற்ப வண்கதி ருதயஞ்செய் காலைத்
தெள்ளிய செம்பொன் மஞ்சமு மாலைச் செய்யகோ விரதமு மிவர்ந்தே
யுள்ளிய வடியார் கண்டுகண் களிப்ப வுவந்துலாப் போந்தனர்மன்னோ. (எகூ)

மான்றலை நன்னாட் காலையிற் கல்வி வளத்தினுக் குடைந்ததன் றன்மை
தோன்றலை யரவஞ் சுமந்தறி விக்கு நமக்கெனச் சேடவா கனத்து
மேன்றலை விலாத கயிலையி லிருப்பு மெமக்குள தெனநெறித் தாங்கு
வான்றலை வணகரு கயிலைவா கனத்து மாலையி லிவர்ந்துலாப் போந்தார். ()

சேவைசெய் பவர்மண் கண்டுசே விக்கத் திகழுமா திரைநன்னாட் காலைக்
கோவைசெய் தரள வடம்பல செறியக் குயிற்றுபொற் றண்டிகை மீதுங்
காவைவைத துயாவினை கண்டுசே விக்கக கருதிருண மாலைவெம் பியலா
மாவயி னமையப் பூதத்தின் மீது மமர்ந்துலாப் போந்தன ரையர். (அக)

ஒருபுனர் பூசக காலையிற் றெய்வ வுத்தர கோசமங் கைக்கண
ணிருமல ரருள்கா லிந்திர திருவ னேருறத தெரிந்ததற் கிணங்க
மருமலர் செறியுங் கற்பகத் தடியின் மாலைநாற் கோட்டிபமுடியிற்
றிருவளர் வாத வூரர்தா மருவித் திருவுலாப் போந்தனர் மாதோ. (அஉ)

பூசநாட் காலை மறையுணர் விதிதன் புலமைதோற் றெழிறிறம் விளங்க
வாசநாண் மலர்வா ழனத்தினைக் கொடுக்க மற்றது கவர்ந்துகொண் டதன்மே
லீசனா ரருளா லிவர்ந்தென விவர்ந்து மெய்திய மாலையிற் றரும தார்.
வாசரென் றுரைத்தற் கிணங்கவெள் விடைமேல் வைகியுந் திருவுலாப் போந்

புத்தனை யிருந்து மூகைதீர்த் திலமியாம் புவனங்காண் வரவது தீர்த்த
வத்தனார் தமைத்தாய குதல்விதி யெனினு மபக்குவத் தாலது கொள்ளா
ரெத்தனைப் பிறந்தோ மென்றுமால் கவல வெய்துமா யிலியநாட் காலைச்
சுத்தவா ளரியு மாலைவாம பரியுந் தூண்டுபு திருவுலாப் போந்தார். (அச)

நகுமகத் திருநாட் காலையி லான்ம நாயக ரேயிவ ரென்னு
மிகுமொழிக் கிணங்கத் தேவர்பா வருமாம் வியன்மணித் தேருலாப் போந்து
தொகுகழு வாய்நீ ராடியா றுவார் தோற்றமுந் தாமெனு மாலைத்
தகுநட நவில்வா திருவுருக் கொண்டு தழைமறு கிடையுலாப் போந்தார். ()

பூரநாட் காலை யான்மநா யகர்முற் புண்ணியர் தாஞ்செல வுய்த்து
நாரவா மவர்க்குப் பட்டணி சாத்தி நாடுற நிவேதனஞ் செய்து
பாரவாந் தீபா ராதனம் புரிந்தப் பட்டுமா லிகைமுதற் பலவுஞ்
சேரநம் வாத வூரருக் காக்கித் தீர்த்தத்துக் கனுஞைபெற் றெழுந்து. (அசு)

நித்திய பலியிட் டுற்சவர் திருமு னிகழ்தரு பேரிகை யடித்தல்
சத்தமை தருதே வதாவாக னவிசர்ச் சனந்தீர்த்தாங் குரமிவை யாற்றி
யுத்தமச் சூர ணோற்சவம் புரிந்தே யுறுமுளை விசாசசன மாற்றி
வித்தக மருவ நடாத்துபு தமிழாம்வேதபூ சாவிசர்ச் சனமும். (அஎ)

சாரமென் றுலோகா யதத்துற லெனக்குத் தவிர்க்கவென் றிந்திர னுய்ப்பச்
சேரவந் தொளிரு மிந்திர விமானஞ் செறிந்துலாப் போந்துறு தீரதத
சாரமென் றுலாக்குந் தேவதீர்த் தத்தைச் சார்ந்துதீர்த் தநகொடுத் தப்பாற்
சேரவிட் டிமைக்கு மணித்தளி புகுந்து திருமகவிசர்ச்சனஞ் செய்து. (அஅ)

வாதவூ ருதித்த மூலவர் தமக்கு மகரும்ப நறும்புன லாட்டிப்
போதவா சிர்வா தம்புரிந் ததற்பின் பொருந்திய மாலையி லென்று
மேதமே வாத சத்துவத் துள்ளா ரெனநெறித தாயகுவெண பொன்செய்
சீதமா ரிரத மிவருபு சூழ்ந்து திக்குபந் தனமொழித் ததன்பின். (அகூ)

கொடிமரத் தருகுற் றியாகொடி யிறக்கிக குருந்தநன் னிழலமா கின்ற
நெடியவ ரான்ம நாதர்சந் நிதியி னிலவுமனை டபதநெம துளஞ்சே
ரடியுடை வாத வூரனைச் செலுததி யரகர வென்றுகை கூப்பிட்
படியவர் வானக் குடியவ ரெவரும் பணிந்தெழுந் தனர்மகிழ் சிறந்தார். (கூ௦)

எறுசா றுவசா ரோகண முதலா வியம்ப வரோகண மளவுங்
கூறுமோ ரிரண்டு காலத்தும் விசேடங் குலவபி டேகமே யுணவே
வேறு வேறுகத் தட்டிசுற் றுதலே விசாரணைச் சைவமா முனிவா
பேறுசெய் திருக்கை நெடுபேரி வட்டம பிறங்கிய திருமலா மாலை. (கூக)

சுவையதெங் கங்காய் சொன்னப்பூ வாதித் தொகைகொடு மிகச்சிறப் பித்தல், குவைகொளும் பூநெற்பொரிவெணபொன் மலரே குலவிய பொனனிறு மலரே, யிவையுறக் கலந்தே யிருதையி ளுறு மெடுதெடுத் திறைத தல்கண் ணேற்றி, னவையறத துகில்சூழ்ந் தெறிதல்கோ கனக நகுமல ரடியுறை வைத்தல். (கூஉ)

பகலிர வோயாப் பலியிட லின்னும் பரமனு கமத்தினிற் புகன்ற
தகல்விதி யெவள வவளவு மொருங்கு தகப்புரிந் தனர்வழு வரதே
யிகல்பவப் பகைக்கு மூருந்தென நாளு மியற்றி சனத்திரு விழாவும்
புகல்வதற் குரிய ளுயினே னியானும் பொலிதவ மிக்குளே னன்றே. (கூ௩)

இராப்பதி னெட்டு நாழிகை யளவி லெங்கடே வான்மநா யர்க்குங்
குராப்புனை கூந்தல் யோகநா யகிக்குங் குறிக்கொளு மற்றைவா னவர்க்கு
மராச்சுமை யுலக முய்யவந் துதித்த வுண்ணலார் வாதவூ ரருக்கு
மொராத்திர வியம்பல் கொணடபி டேக முறுகிவே தனம்புரிந் ததன்பின். ()

கோலமா ணிகக வாசகப் பிரானூ குறிக்கொளு மான்மநா யகர்தஞ்
சீலவே காந்த தரிசனம் பெற்றுத் தீபவா ராதனை கண்டு
ஞாலமெய் தரிய மாலிய மேற்று நகுகருப் பூரதீ பமுமேற்
றேலவர் நின்று மெமமையாள் பொருட்டே யெழுந்தரு ளினர்மறை முழங்க.

விழையருட் சொக்க விநாயக ரகோர வீரபத் திரருல கீன்ற
தழையருட் செல்வி குருந்தமர் பரமா சாரியர் திருமுனம் புரியும்
பிழையக தீப நோக்குபு குருந்தப் பெருந்தகை யெதிர்முக மாய
வுழைவட முகமா யிருகரங் கூப்பி யும்பரா ரேத்திட வமர்ந்தார். (கூ௬)

அயதோா காலை யிவர்புரி வதுபோ லாஙகொரு வைதிக மறையோ
னேயமார் பரமா சாரியன் பூசை நிரப்புபு பட்டினன் மறைத்தூத்
தூயதா முபதே சக்குறிப் புணர்த்தித் தொக்கமா லியமெலா முதவி
மேயவா ரியரோ ரிருவாக்குஞ் சமமா விளஙகுமா ராதனஞ் செய்தான். (கூ௭)

அரகர சிவவென் றகத்தியன முதலா மருந்தவ முனிவரா துதித்தார்
பரமவற் புதமீ தென்றய னரிமுற பணணவ ரியாவருமப பணிந்தார்
கரதலங குவிததுக் கணபனி சோரக காமரு புரூரவா வாதிப்
புரவலா பலருங கணகெண வேகைப் புணரிவீழந் தனரெழுந் திலரால். ()

சிவகண மனைதது மித்தரி சனமே திப்பிய மென்றவப் புறற
பவமெனும் புணரி சுவற்றினே மென்று பாருளார் பலருமுட் குழைந்தா
ரவமென லொழிந்த தினியென வெவரு மறைதர வாஙகுநின் றெழுந்து
சிவமணவ கமழுந தளிவலஞ் சூழ்ந்து சிறக்குமாத தானததை யடைததார்.

யாவுமாங் கழுவா யெனுமபி டேக மியைதரப் பெற்றுளன் ஞளின்
மேவுமா ணிக்க வாசகப் பிரானூர் விரும்புதஞ் சேர்க்கைபுக் கமர்நதார்
பாவுசீர் மிகுத்த மிதிலைவாழ் சனகன் பரவுபு முததிபெற றதனை
நாவுமெம் மனமுங் களித்திட வினிது நவிற்றிட லுற்றன மாதோ. (௪00)

புரூரவன் பெருந்துறையடைந்து திருவிழாச்செய்தபடலமுற்றிற்று.

ஆகத்திருவிருத்தம் ௪௭௩.

# சனகராசன் முத்திபெற்றபடலம்.

வாத வூரர்தம்
பாததாமரைப்
போத வாமன
மேத நீங்குமே. (க)

வேறு.

வாவிபயி றகட்டகட்டு வாளைவெடி கொண்டெழிக்
காவியரம் பையாவெருவக் கற்பகத்தின் கழுததொடிக்கும்
பூவியலும் பெருவளஞ்சால் விதேகமெனப் பொலிநாட்டின்
மேவியபொன் மதிலுடுத்த மிதிலைமா நகர்வாழ்வோன். (உ)

கலைபலவுங் கற்றுணர்ந்தான் கற்பகமுஞ் சமழ்ப்படைய
வலைவில்கொடைத் தொழில்பயின்று னரசரெலாம் பணிகழலான்
மலைபொருவு திண்டோளான் மாண்புசா றத்துவந்தோ
தலையறிவின் றலையமைந்தான் சனகனெனு மியறபெயரான் (ங)

அனையவன்றத் துவமுணர்ந்த வாசிரியன் றனையடையும்
வினையமுளத் தொன்றுகொடு விசேடவிலக் கணம்படைதறுப
புனையவுள குடச்செருததற் புனிற்றுக்க ளோரிலக்க
நனையமிளிர் தரதொகுத்து நகாப்புறததோா சாாகிறுவி. (ச)

புரவபுரி பவர்களையும போதுமா றுஙகமைததுப்
பரவுமிவை தத்துவந்தேர் பனவாகொளக் கடவரென
வுரவுமுர சறைவிததே யுவந்திருந்தா னக்காலை
விரவுவள வர்நாட்டு வேதியரியா வருமுணாவார். ()

பொன்னிணலை கரித்து மிளிா புனிற்றுக்கள் கவர்வதற்கு
நன்னிலைமைத் தத்துவந்தேர் நலஞ்சிறிது மிலமானே
மென்னினா சனுமதியா னிருக்கும்விருத் தியுந்தவிர்ப்பான்
பன்னினெவ னுவதெனப் படருழந்தா ரனைவோரும். (சு)

அன்னபொழு தியாக்ஞயவர்க் கியனையடைஇப் பணிந்தெழுந்து
மன்னவன்செய் திறமுரைத்து மறையவாகு ளாமணியே
பன்னரிய பராபவமாம் பரவையழுந் தினநீயே
மன்னவொரு புணையாகி வாழ்விப்பா யென்றிரந்தார். (எ)

அரசர்திர வியங்கவர்த லடாததனி னுந்தானம்
பரசமையா தேற்பதனுற் பசுத்தானம வாங்குதலோ
விரசவத னினுங்கொடிதா மெனத்தரும நூல்விளம்புங்
கரசரண மேற்கவியவ் கக்குலேயு மாறுளும. (அ)

இரந்தமறை யவர்நிமித்த மிரப்பாமென் ளுருப்பட்டுச்
சுரந்தகரு ணையனுகித் தொகைகவல ரொடுமெழுந்து
வரந்தழையுந் திருமிதிலே மாநகரின் புறமவந்து
பரந்தபசுக் களேயேற்ருேம் பனவர்நீர் கவர்மினென. (க)

மறையவர்த முதசரியம் வாஙகியனை யுறயாத்தே
நிறைசிகழி யவிழ்த்து தறி நெருங்கமுடிந் தனரொருப்பட்
டறைகுடஞ்சுட் டொவ்வொன்று கவர்ந்தகம்புக் கனரப்பாற்
குறைவின்முனி வரன்சனகன் கோநகரத நுட்புகுந்தான். (கo)

இனியபசுப் புரந்தவர்க ணடைந்ததனை யிறைக்கியம்ப
முனிவரவு தெரிந்தவனு மெதிர்கொணடு முன்பணிந்து
கனியமையு முசமனுரைத் தழைத்துநடந் தனணலஞ்சா
தனியமைதன் னிக்கைபுகூஉக தழுவுமா தனத்திருத்தி (கக)

அருக்கியமுன் னுயபுரிந் தஞ்சலித்து நின்றிடலு
மிருக்கெனவம முனியுரைப்ப விருந்தவினு வுதல்செய்கான்
றிருக்கிளாமா தவரேறே செவ்வியதத துவஞான
மிருக்கின்முடி புரைத்தபடி யெனக்கியம்ப வேண்டுமென. (கஉ)

மன்னவபக் குவாகமுரைப்ப தல்லாது மறறையாகருச
சொன்னவர்க ளவரோடுந் துணையாகர கழுந்திடுவா
ரின்னலற நினக்குமாதததற கிழுக்கிலேயா லினிதுரைப்பேன்
பின்னமறக் கேளென்று பேசுவா னமமுனிவன். (கங)

அததிபா திப்பிரிய மாரிடதது விளஙகுவதோ
வொததியன்மற் றவருணாவா ருணர்வரோ மற்றையாகள்
சத்தியமாய்ச சகததாயச் சகததிறகுக காரணமாய்வு
பத்தியுளா யதின்விளங்கு பரபலப தாரததமாய். (கச)

அப்பதார்த் தத்தினுக்குக் கருததாவா யமைசான்ற
வொப்பவெலாந் தானுய்த்தா னலலாதா யுறமனுவாய்ச்
செப்புமகத் தாயுருவ மருவமொடு சேரவததை
யப்புமைங்கோ சங்களிந்தி ரியங்குணஙகள் பாறியதாய். (கரு)

வாக்குமனு நீத்தோ சரமாய்மற் றுண்பெனுநூ
போக்குமலி யல்லாதாய்ப் பொலிகின்ற தேபிரம
நீக்குதலின் முதலதிது நிகழ்குரவ னுபதேசந்
தேக்குதலா லெலாம்பிரம மெனத்தெரித லேவித்தை. (கக)

அடுத்தகிது நானென்ப தவித்தைமூன் றுவதிதே
யெடுத்தசக லமும்பரித்தி யாகஞ்செய் தின்பதுன்பம்
படுத்தசம மாப்பெரியர் பயிற்சியொடும் பிரமநிட்டை
தொடுத்தநிறத் தொடுகூடித் துணிவுபெற விருப்பதுவும். (கஎ)

ஆன்றசக லமும்பிரம மாகச்சிந் திப்பதுவு
மேன்றதன்செய் கையனைத்து மிரும்பிரமச் செய்கையென
வூன்றவுட்பா விப்பதுவு முயர்ஞான மாமிதுவே
சான்றநா லாவதெனச் சாற்றுவார் ஞானியரே. (கஅ)

ஒப்பிலதாய் வியாபகமா யுறுசுகத்தைக் கொடுப்பதாய்த்
தப்பில்பர மாய்வடீசா மகோசரமாய்த் தழைவதுவே
செப்பரிய தேயமிலைத் தாவதுதி யானமெனின்
வெப்பிலுரு வருவிரண்டாம் விளம்பிலதா றுவதுவே. (கக)

சாக்கிரஞ்சொப் பனஞ்சுழுத்தி துரியமது தனைக்கடத்த
னீக்கமிலா விவையவத்தை நிகழிவையே ழாவதாம
போக்கருஞ்சத் துவமிரா சதம்புகர்த்தா மதமென்னத்
தேக்குகுண மொருமூன்று மத்திறமுஞ் செப்புவாம். (உ0)

வெள்ளியது பெருங்கருணை மேவியது சத்துவமே
யொள்ளியசெம் மையதார வாரமுள திராசதமே
கள்ளியகார் நிறமவித்தை கயந்ததுதா மதகுணமே
வள்ளியவெட் டாவதிவை யென்றுரைப்பார் மாண்புடையோர். (உக)

பூதகா ரியமாகிப் பொருந்துமிரு வினைக்கேற்ப
வேதமொடு சுகநுகர்தற் கேதுவா யதுதூல
மாதசவிந் தியமபஞ்சப் பிராணன்மனம் புத்தியொடு
சூதமையா யோகசா தனமாகுஞ் சூக்குமமே. (உஉ)

அருவாகி யறிவினுட னறியாமை யுடையதுவாய்க்
கருகாத ஞானம்யோ காதிகட்குக் காரணமாம்
பொருவாத காரணமிம மூவகையாய்ப் புணருடம்பே
வெருவாவொன் பதாவதென விரித்துரைப்பா மேலோரே. (உ௩)

தூலத்தே யுபாதியெலாந் தொகப்பொருந்து மன்னமய
மேலக்கன் மேந்தியமைம் பிராணனொடாம் பிராணமயஞ்
சாலஞா னேந்திரியந் தழுவியது மனோமயமே
கோலவவற் றொடுபுத்தி கூடுதல்வி ஞ்ஞான மயம். (௨௪)

மாற்றரிய மனோமயம்வி ஞ்ஞானமய மாமிரண்டிற்
றேற்றியவான் மாவறிவே சொல்லுமா னந்தமய
மேற்றமிகு மிவைபஞ்ச கோசமென வியம்பிடுநூல்
சாற்றரிய பத்தரவ திவையென்றே தகக்கோடி. (௨௫)

நால்வகைத்தோற் றத்தினுமாய் நக்கசரீ ரங்கடொறுஞ்
சாலவியா பித்தனைத்து நடத்துவதே தகுசீவ
னேனுமுந்தி மேற்களக்கீ ழியைகமலத் தகரவெளி
போலுமத னிடம்பன்னொன் றுவதிது வெனப்புகல்வார். (௨௬)

கருமஞா னேந்திரிய மொருபதந்தக் கரணநான்
கொருவரிய வாயுவைந்திவ் வுறைதருபத் தொன்பதொடும்
வெருவரிய மாயையொடு மிகக்கூடிப் புசிப்பதுவே
தருபோத்தா விதுபனிரண டாவதெனச் சாற்றுவார். (௨௭)

மருவுடம்பி லபிமானம் வயங்கியெழ விராட்டேயா
யொருவிலிர ணியகருப்ப மாயுவக்கு மீச்சுரமாய்ப்
பொருவறமே யதுகருத்தா புகலபதின்மூன் றுவதிது
வருபுவியி லவ்வருணச் சிரமங்க ளுக்கேற்ப. (௨௮)

ஆற்றுநிட்கா மியகரும மிதுபதினான் காவதுவே
தோற்றுகுர வன்சேவை தூயவான் மவிசாரம்
போற்றுபெரி யவரிணக்கம புகழும்வே தாந்தநடை
மாற்றரிய காரியமாம் வருபதினைந் தாவதிது. (௨௯)

என்றவா தனத்திருந்தே யியங்குமிரு வளியடக்கித்
தோன்றவா யுவையெழுப்பிச சொலுமபிரம ரந்தரஞ்சேரந்
தான்றவா னந்தரச மாயசமுத திரத்தழுந்தன்
மான்றலிலா யோகமிதே வருபதினா றுவதுகாண். (௩௰)

எலவிரு தயகமலத் தெழின்மாயை விராய்ச்சகத்தைப
பாலனஞ்செய் பவன்புருடன் பகாபதினே ழாவதிது
சாலவெலா மழிந்துமழி யாததாய்க் காரணமாய்
ஞாலநவி லவ்வியதத நருபதினெட டாவதிது. (௩௧)

அவ்வியத்த முதித்தொடுங்கி நாமமா திகளடைந்த
செவ்வியவா னவர்வியத்தர் செப்புபத்தொன் பதாவதிது
கவ்வியமெய் கோசந்தத் துவமனைத்துங் கடந்துமிளிர்
திவ்வியமேன் மையதான்மா செறியிருப தாவதிது. (௩௨)

அழிபவஞ்ச மகித்தியமென் றையமற நினைப்பதுவே
கொழியநான் மாவிருபத் தொன்றுவ திதுகுறிக்கொள்
செழிசருவ மும்பிரம மெனத்தெரித லத்துவித
மொழியிருபத் திரண்டாவ திதுவென்றே முன்னுதியால். (௩௩)

நூல்பலதே றுபுபவஞ்ச மித்தையென நோக்குபுதா
னேல்பிரம மெனன்மவுன மிருபதின்மூன் றுவதிது
சாலவித்தை தபப்பிரமந் தனைதெரிந்து கொளன்மோக்கங்
கோலியிரு பத்துநான் காவதெனக் கூறுவார். (௩௪)

துக்கமெலா நிவர்த்தியாய்ச் சுகமபெறலே யானந்த
மிக்கவிஃ திருபத்தைந் தாவதென விளம்பிடுவார்
தக்கவிவை யெலாமுணர்தி சனகனே யென்றுரைத்தான்
றொக்கபசுக் கவாந்தமுனி யிறைதொழுது சொல்லுவான். (௩௫)

இவையனைத்துங் கிடைப்பதற் குபாயமெவ னெனக்கேட்ப
நவையிறவு மியன்பாற்போம் பெருந்துறைமான் மியநயந்து
செவையுறக்கே ளெனவிடுத்தது தீர்ந்தானச் சனகனும்போ
யவைவியக்குந் தவுமியனை யடைந்தனைத்துந் தெரிவித்தான். (௩௬)

சொன்னவெலாஞ் செவியேறறுத் தூயதவு மியமுனிவன்
மன்னவநிற் கம்முனிவன் மாயாவா தமபுகன்றா
னன்னதுணர்ந் தவாக்கென்று மையர்பெருந் துறைப்பெருவ
பன்னல்பழு தென்றதன்றேஞ் சிறிதுபகர் தரத்துணிந்தான். (௩௭)

சத்தியமே யாமுனைப்பாஞ் சனகபுர வலகேண்மோ
சத்தியமா கியபிரமஞ் சகத்தாயிற் றென்றுரைகிற்
சத்தியமென் பதுதீர்ந்த சுதந்தியஞ்சாரந் ததுகண்டாய்
சத்தியறா லதுவென்றே சாற்றுவரோ தக்கோரே. (௩௮)

காரணமாம் பரஞ்சகத்தாங் காரியமா கியதென்னிற்
காரணத்துள் ளதுசகத்தாங் காரியதது முளதாமே
காரணஞ்சித் தாஞ்சகத்தாங் காரியமுஞ் சிதமெனச்சொல்
காரணந்தான் மாயையெனக் கரைந்தாலெக் குற்றமும். (௩௯)

அருவமிலை யுருவமிலை பிரமத்திற் கென்றறைந்து
மருவவுறு தியானமிரு வகையவைவிட் களஞ்சகள
மொருவரிய தெனப்புகலி னுரைத்தவிவை யார்க்குரிய
வெருவமைய முன்னொடுபின் விரோதமுற லென்றாலே. (சo)

துக்கமற வொழிதலொடு சுகப்பேறே முத்தியெனின்
மிக்கதுயி லோருயிர்க்கு விளைதலுமற் றதுவாகுந்
தக்கதலா மாயாவா தத்துளகுற் றங்கூற
லுக்கமணற் சோற்றிடைக்கல் லாய்திறத்தை யொக்குமால். (சக)

முதுமுனிவ னினைமருட்ட மொழிந்ததிற முணராதே
யிதுபொருளென் றுளங்கொண்டா யென்றுதவு மியனியம்பக்
கதுமெனவும் மிதிலையர்கோ னெழுந்துகான் மிசைவீழ்ந்து
பதுமனுமொவ் வாயடியேற் குண்மைநெறி பகரென்றான். (சஉ)

என்றமொழி செவியேற்றே யிருங்கருணை தலைசிறப்ப
வன்றலிலாச் சிவதீக்கை யாற்றியடி முடிசூட்டி
நன்றமைய முப்பொருளும் புரூரவற்கு நவின்றபடி
யொன்றவுரை தவன்மயக்க மனைத்துமொழித் தருளினான். (சங)

பெருந்துறைமான் மியமனைத்துஞ் சிந்திக்கும் படிபேசிக்
குருந்துறையும பெருமானைக் குலவுயோ காம்பிகையை
யிருந்துறைபோந் திருவாத வூரடிக ளிணையடியை
யருந்துறையா வையுமாற்றி வணங்குதிபோ வெனவிடுத்தான். (சச)

ஒரொருகா ரணமபற்றி யுதித்தநூல் களைவிலக்கிச
சீரொருவாத திருவருளே காரணமாச் செனித்தெழுந்த
பாரொருவா வாகமநூற் படியொழுகுந் திறமபூணடு
பேரொருவா மகததுவஞ்சால் பெருந்துறையை வநதடைந்தான். (சரு)

கந்துமுறி கடாயானைக காவலன்பு ரூரவன்றான்
முந்துவழி பமுறைமை முழுவதுந்த னுளங்கொணடான்
சிந்துதலி லாததரஙகத் தீரததமெலாம போய்ப்படிந்து
நந்துபுகழ் வெண்ணீறுங கணமணியு நயந்தணிந்து (சசு)

மனுவரசா மைந்தெழுதது மானதமா கக்கணிததுப்
பனுவன்மறை முழங்குதிருத தளிபுகுந்து பணிந்தேததித்
தனுமதியின் மிதுனமதித் தனிச்சாறு சேவித்தே
யினுமவட்செய் வனவனைத்து மியற்றியுவப் புறவமர்ந்தான். (சஎ)

ஆயபுகழ்ப் பெருந்துறையெம் மான்மகா யகர்தோன்றி
நேயமிக மானுான சனகனெனு நிலவிவோய்
தூயவவின் முத்தியென வருள்புரிந்து துணையடிக்கீழ்
மேயகலப் பின்பருளி விண்ணவர்வாழ்த் திடமறைந்தார். (சஅ)

மன்னுபுகழ் மிருசனகன் மாயாவா தத்தையொரீஇப்
பன்னுசிவா கமப்பரவை படிந்துமுத்தி பெற்றதிற
முன்னுமுப புராணத்துட் பார்க்கவழு மொழிதருமா
வின்னுமது கொளறெளிவா மிதுகோடற் பொருட்டன்றே. (சகூ)

நேயமிகு முனிவரர்கா ணீடுபுகழ் மிருசனகன்
பாயதிரு வடிக்கலப்புப் பற்றியவா றெடுத்துரைத்தாந்
தூயகுணஞ் சிறிதுமிலாத் துட்டமறை யோனொருபெண்
மேயபெருந் துறைமேவிப் பெற்றதிறம் விளம்புவாம். (ருo)

சனகராசன்முத்திபேற்றபடலமுற்றிற்று.

ஆகத்திருவிருத்தம் கஙிஉரு.

---

# அதர்மனும் இலக்குமியும் முத்தியடைந்தபடலம்.

வாத ஆரெம் வள்ளலபொற்
பாத தாம மைப்புக
ழோத வோத வோதமா
மேத மோவு மின்பமே. (க)

நன்மை மேய நருமதை
வன்மை மேய மாக்களை
வின்மை மேய வேதியர்
பன்மை மேய தொருபதி. (உ)

வேறு.

அன்னபதி வேதபுரி யெனும்பெயரா ததில்வாழ்வோன்
பன்னருநா லுணர்திரியம பகனெனச்சொ லியற்பெயரா
னன்னர்மறை யவன்முன்னு ணவின்றதீ வினைப்பயத்தா
லென்னகொடு மையுமுருவொன் றெடுத்தனலோர் மகற்பெற்றான். (ங)

அந்தமகன் செயனேக்கி யதர்மனெனப் பெயரிட்டார்
சந்தமிகு மங்கரா ரப்பெயர்தாங் கியகொடியோன்
கந்தடுவெங் களியானை கடங்கொண்டு திரிவதென
வெந்தவிட னுந்திரிவா னெந்தவிட னும்பொருவான். (௫)

மறைமொழிநிந் தனைசந்தி வந்தனைநிந் தனைசிறிதுங்
குறையடையாப் பெரியவர்நிந் தனையாருங் குறிக்கொள்ளா
நறைமலர்ப்பூங் கொன்றையணி நாயனுர் நிந்தனைமற்
றறைபலநிந் தனைகளுஞ்செய் தகலிடத்தே யுழிதருவான். (௬)

ஒருதினஞ்சில் விடர்குழும வொருகானத் தூட்புகுந்தான்
பொருவரும்பல் குறும்புசெய்து போதருங்கா லாங்கொருசார்
மருவுசிவ முனியோகங் கொடுவெதிய வன்மீகம்
பெருகுறமேன் மூடியதாய்ப் பிறங்கவது கண்டணைந்தான். (௭)

இல்லிவழி நோக்குதலு மிருந்தவத்தோன் விழிதோன்றப்
புல்லியவீ தென்னையெனப் பொருக்கெனவோர் வளார்கொண்டு
சொல்லியவவ் விழிகுன்றுன் றூனையயோ கந்தவிர்ந்து
கல்லியதீங் கினனவன்மீ கஞ்சிதைத்து வெளிவந்தான. (௮)

அடுசினங்கொ ளம்முனிவ னதர்மன்முக மெதிர்நோக்கிப்
படுகொடிய மாபாவி யென்செய்தா யெனப்பதைப்பக்
கொடுமையெவன் செய்தனன்கா கோதரங்கள மணியென்றே
முடுகியிது செய்தனனின் செங்கணென முன்னுதேன். (௯)

என்றுசொல மிகச்சீறி யெழுமாவோ னினுங்கொதித்துக்
கன்றுகொலை முதற்பாத கங்களுக்கோ குழிசியா
யன்றுபுலைச் சார்புறறே யலைதிநீ யெனச்சபித்து
வென்றுமிளிர் சிவமுனிவன் வேறிடமபார்த தெய்தினுன். (௧௦)

விடரொடுமெய் வனந்தீர்ந்து விடன்மடனு கியவதர்மன்
சுடர்பொருவு தந்தையுறை தொன்மனையி னுட்புகுந்தா
னிடர்கெடமற் றவன்புகலு மிதமனைத்துங் கொள்ளானுய்ப்
படர்செயலோரந் தவன்றுறவு பற்றியொரு வனம்புகுந்தான். (௧௧)

ஆவயினேர் மரச்சூழ லகம்புகுந்து பனிதவிர்ப்பான்
மேவவொரு புலித்தோலை மெய்ப்போர்த்தி யோவிருந்தா
னேவவிய லாவதர்ம னிச்சைவழி யொருகதைகொண
டாவவெனப் பயில்வானவ் வனத்துமொரு நாளடைந்தான். (௧௨)

செறிமரத்துண்டமாலைவாய்ச் சென்று புலி யிருந்ததென
வறியதாமன் பின்புறம்போ யங்கைத்தண் டுரவோங்கி
முறியவொரு புடைபுடைப்ப முடிந்தானப் பிதாமறையோன்
நெறிகொளபிதா வென்றறிந்து நினைவிலனாய் நீங்கினான். (கஉ)

நீங்கியவன் கொலைப்பாவ நிழல்போலத் தொடர்ந்துவர
வேங்கிமிகு பசிதாக மிரியாது நனிவருத்த
வாங்கியலுங் கொடும்பாவி யணித்தாகக் கண்ணுற்றான்
வாங்கியவெஞ் சிலைமறவர் வழியலைத்து வாழ்சேரி. (கங)

அந்தமறச் சேரியிற்போ யலசினேன் பசியாலென்
றந்தவுரைத் தழுதானம் மறவருமுள் ளிரக்கமுற்றே
யிந்தமறப் பன்றியினூ னெடுத்துநுக ரெனவளித்தார்
நந்தவது நுகர்ந்துபசி தவிர்ந்தானீர் நசைமிக்கான். (கச)

எண்ணிரு மன்புடையா ரிறத்தனினைத் தழுதாலுங்
கண்ணீரோர் துளியும்வெளி காட்டாவிக் காட்டகத்தே
தண்ணீரெய் ககப்பமென் றுளைநந்து தடுமாறும்
புண்ணீரமை மனத்தானங் கொருசூழல் போய்ப்புக்கான். (கரு)

அதுபழையர் வாழ்சேரி யாவயிற்பன் மிடாவீங்கின்
முதுகணிறைத திருப்பதுகளை டுவந்தானாய் முன்னோடி
யிதுவிலைசெய் பவராரென் றெண்ணாய மோரென்றே
கதுமெனமொந் தையின்மொண்டு கடகடெனக் குடித்தனனால். (கசா)

குடித்துநனி தேக்கெறிந்து கொணடநீர் நசைதவிர்ந்து
வெடித்துவரா லெழுவஃவி மென்பணைநன் னிலம்புக்கா
னொடித்துமதி யினைவெறிமே னொக்கலா லுயர்பிறப்பு
மடித்துநர குய்த்திடுகோ மத்தாகா தடித்ததால. (கஎ)

முன்செய்த வினைப்பயனை மோசிக்க வல்லவரியார்
தன்செய்கை யத்தனையுந் தவறென்று கருதானா
யென்செய்கை யிதற்கென்றே யெண்ணியெண்ணி மாழாக்கும்
புன்செய்கை யானுயகோ புலைசசிதனைக் கண்ணுற்றான். (கஅ)

கண்டவுடன் மாரவேள் கடுங்கணைகட் கிலக்காகி
யண்டமுழு வதும்பரவு மரியபழிக் காளானோன்
கொண்டவுவப் பொடுமெவனோர் குறுகியொழி வருங்காம
மண்டவவள் கைப்பிடித்தான் மற்றவளு முடன்பட்டாள். (க௯)

அழுக்குடைகா வதகாற வருவருப்பொன் றில்லானாய்
முழுக்கவமு தாயமைந்த முற்றிழையே யென்னவியர்
திழுக்கமைவா யூறலுமுண் டேந்தல்குற் றடமபடிந்து
விழுககவின்மே வெறத்துய்த்துப் பெருங்காம விடாய்தீர்ந்தான். (௨0)

அடிசில்புலா லெடுத்தவளே யருத்தவினி துவந்துண்டு
கொடியனு வயிற்பயினுட் கொடுங்கள்வார் வாய்க்கடைஞர்
தடியெடுத்து வெரிந்புடைத்து முடுக்குதலுந் தளர்ந்தோடி
முடிவில்புகழ்ச் சாபாலி முனியுறையுட் கருகானான். (௨௧)

புலையரகன் றனரன்றான் புண்ணியவம் முனிமேய
நிலையுயராச் சிரமஞ்சார் நெடுவேனத்தை யகலாது
யலைதருநா ளெப்பவத்தோ வவன்செய்த நல்வினையாற்
கலையுணரம் முனியவனைக் கண்வெதும்பக் கண்ணுற்றான். (௨௨)

ஓதியா லவன்றன்மை யுள்ளவெலா முணர்ந்தானு
யாதிநா யகனேயென் றினைத்துலகும் புகன்முனிவ
னோதியா மிவற்கியற்ற லெனக்கருதிக் கமண்டலநீர்
மாதியா னமபுரிந்து வாரியிறைத் தனனவன்மேல். (௨௩)

அன்னநீர் தோய்தலுநல் லறிவுசிறி துதித்தெழுந்த
தென்னநான் செய்தோமென் றிரங்கியவ னடிவீழ்ந்தான்
முன்னமியா வருமபுரியாப் பாவமுயன் றனைபுரிந்தாய்
சொன்னதிங் கொழிக்கும்வகை யென்றுணிந்தாய் சொல்லென்றான். (௨௪)

அடியனே னதனறி யேனெல்லா மறியும்வித
முடிபுநீ புகறியென முன்பணிந்து வேணடுதலுஞ்
செடியவாங் கானகத்தே சென்றுசிவ முனிவிழியிற
கொடியவளாா கொடுங்கணடிக கொடுஞ்சாப மேற்றனையால் (௨௫)

கெடியகதை கொடுபுடைதது நிகழ்தந்தை யுயிருணடாய்
கொடியமற வர்களருத்துங கொலைபபன்றி யூனுகர்ந்தாய்
வடியமையக குடித்துவந்தாய் வன்புலைச்சி முலைதோய்ந்தாய்
கடியவனல் குணங்கின்றாய் கடையைநீ யெனப்புகன்றான். (௨௬)

சொற்றமுழு வதுங்கேட்டுத் துண்ணென்று நடுநடுங்கி
முற்றவுளம் பதைபதைதது மூர்க்கனே னுய்யுமவகை
யுற்றவழி யருளென்று னோருதவச் சாபாலி
பொற்றதிற முளங்குறித்து நின்றானப் பொழுதின்கண். (௨௭)

குலவுகாம் பிலிவ்ளர் கோபால சாமியெனு
நிலவுவயி னவமறையோ னிகழ்மவன் மனைக்குரியா
ளிலவுபுரை செவ்வாயா ளிலக்குமியென் றொருபெயராள்
கலவுதொடுங் குணம்பூண்டாள் கணவன்மன மகிழ்ந்திருந்தான். (உஅ)

அயலார்தோள் கலப்புறும்பே ராசையுளான் மணவாள
னியலார்தன் னயமொழிக ளெள்ளளவுங் கொள்ளாளாய்
வியலார்தன் புன்றொழிலே மேற்கொண்டா ளதுகண்டு
மயலார்மற் றவட்சினந்தான் வைணவனு மக்கொழுநன். (உகூ)

ஊறாக நீயிருந்தா லொன்றுமுற்றா தெனக்கென்று
மாறாக நஞ்சூட்டி மடித்தாளக் கணவனைப்பின்
வேறாகத் தன்செயலே மேற்கொடலைத் தொழிந்ததற்குப்
பேறாகக் கொள்ளிவாய்ப் பேயாகி யுழிதருவாள். (௩0)

அந்தவனத் தகஞ்சார்ந்தா ளந்தணன்முன் பணிந்துநிற்கும்
பந்தமிகு மதர்மன்முகம் பார்த்தனள்பற் றறநினைந்து
முந்தவழல் வாய்திறந்து முடுகுதலு மவனடுங்கச்
சந்தமுனி யுபகாரஞ் செய்துதடைப் படுத்தினான். (௩க)

ஆயவண்மற் றம்முனிவ னடிபணிந்து குறுகினுக்கு
மேயதியற் றிடநினைந்தேன் விலக்கியதெ னிவ்வுருவம்
போயதெனப் புரியிலையேற் புன்மையினைக் கொடுவென்று
ளுயகவம் முனிவரனு நகைத்திதுகூ றுவதானான். (௩உ)

புருடனைக்கொன் மாபாவி போற்றியென மொழிந்தார்க்கு
மருடனைக்கொல் யோகாம்பா வெனப்புகனின் வாயார
வருடனைக்கொ லதர்மாநீ யான்மநா தாவெனச்சொ
லிருடனைக்கொ லிருவீரு மெய்துவீர் பெருந்துறைக்கே. (௩௩)

பெருந்துறையென் பதுபாண்டி நாட்டகத்தே பிறங்கிடுமாங்
கருந்துறைத்தீர்த் தங்களெலா மடைந்துநா டொறுந்தோய்மின்
குருந்துறையும் பெருவாழ்வைக் கோமளையோ காம்பிகையை
மருந்துறைநோய்க் கெனத்தொழுது வழிபடுமி னினுஞ்சொலவாம். (௩௪)

அருளான்ம நாயறுக் கன்னையோ காம்பிகைக்குத்
தெருளாள்வோ ராட்டியநீர் தேக்குதொட்டிக் கரையடைந்து
வெருள்சாரா விதமொண்டு மொண்டாடி வெண்ணீறே
பொருளாக நினைந்துடம்பெ லாமபுனைமி னினும்புகல்வாம். (௩௫)

அன்னநீ ருடற்பிணியு மமையாத பவப்பிணியு
மென்னபா தகமுந்தீர்த் திடுவ்துசத் தியங்கண்டீர்
சொன்னமார் திருவீதி வலஞ்சூழ்மின் றுதித்திடுமின்
பன்னமே வாச்சிறப்புப் படைததுய்வீர் போமென்ருன். (௩௬)

அந்தமுனி வரன்பாத மன்புகொடு துதித்திறைஞ்சிச்
சந்தமிகு பெருந்துறையாந் தலஞ்சாரும் வழிக்கொணடு
முந்தவவ னுன்மரா தாவென்று மொழிதருவான்
பிந்தவிவள் யோகாம்பா வென்றுபே சுபுநடப்பாள். (௩௭)

ஓயாம லிருவோரு முறைக்குமா மந்திரத்தாற்
சாயாம லோங்கியபா தகமனைத்துந் தலைசாய்ந்த
மாயாம லன்போங்க வந்துபெருந் துறையடைந்தா
ராயாமன் முன்னேநா ளடுகொடுமபா தகம்புரிந்தோர். (௩௮)

தூயபெருந் துறையடையப் பேயுருவந் தொலைந்ததவட்
காயவதர் மனும்பிரம தேசுமரீஇ யவனுனன்
பாயபுகழ்ச் சாபாலி முனிவரன்பன் னியபடியே
நேயமுற விருவோரு நிதமுஞ்செய் தேத்தெடுப்பார். (௩௯)

மிடைகொடுமை பலசெய்து வெவ்வினைக்கே யாளாகிக
கடையரினுங் கடையேனுய் நரகமெலாங் கைகக்கொடற்
குடையவனு யுடைநதுழலில் வொருததனையு மாட்கொணடா
யடைசெறிபைங் குருந்தவனத தணணுவோ வண்ணுவோ. (௪0)

பொல்லாத பாவமெலாம் புரிவதற்கே யுடம்பெடுதேதே
னெல்லாத நரகமெலா மொருஙகுதுனே வதறகமைந்தேன
கலலாத கடையேனைக் கைகொடுததா டலுந்தகுமோ
வெல்லாத வளக்குருந்த வனததமரும விததகவோ. (௪௧)

பஞ்சமா பாதகமும் பன்னுளுஞ் செய்துழன்ற
வஞ்சனே னிததலதது வருவதற்கும யோகியனே
தஞசநீ யென்றடையுந் தணணளிசெய் தாட்கொணடா
யஞ்சமார் துறைக்குருந்த வனத்தமரு மண்ணுவோ. (௪௨)

அருவருக்கு மெனையுநின தடியருளுஞ் சேரத்தாண்டாய்
பெருநெருப்புக கீரமிலை யெனப்பேசல் விளக்கிடவோ
திருவிலிக்கோர் கதியில்லை யெனத்தேர்ந்த திருவுளமோ
மருமலர்ப்பைங் குருந்தவனு வள்ளாநீ யருளென்ருன். (௪௩)

புருடனைக்கொல் பாவியான் புண்ணியரே பெறப்படுநின்
னருடனைக்கொள் வதற்கடைந்தே னழகிற்றே யழகிற்றே
வெருடனைக்கொன் றடியானை மேன்மேலு முயர்த்திமிகு
தெருடனைத்தந் தருள்கருணைச் சிவயோகாம் பிகைத்த!ியே. (௪௪)

விதலைவயெனற் கிருபொருளு மேவவுழ லிவ்விழிநாய்
கதவயிர நமனமுத்துங் கருநரகப் பெருங்கடற்கோர்
மிதவையென நின்னருடந் தாட்கொண்டாய் வியப்பிதுவே
சிதவயிரக் கலன்பூண்ட சிவயோகாம் பிகைத்தாயே. (௪௫)

நாயுருவிற் கடையாகி நரகுழக்கப் போமெனது
பேயுருவந் தவிர்த்தாய்நின் பெருங்கருணைத் திறமென்னே
சேயுருவிற் கிரங்காரியார் சிவயோகாம் பிகைத்தாயே
வேயுருவத் தோளாயென் றிலக்குமியு மிகத்துதித்தாள். (௪௬)

அதர்மனென்போன் றன்பெயர்முன் னகன்றவொரு பெயர்புனைந்தான்
பதமருவு மிலக்குமியு மிலக்குமியே யெனப்பட்டா
ளிதமருவுந் தனுமதியி னெய்துபெருந் தரிசனத்தின்
சுதமிலிரு முதகுர்வர் களுமிவர்க்குத் துணைந்தருள்வார். (௪௭)

மறையோனைக் கணநாத னுக்கிவளர் திருக்கைலை
யுறைவாயென் றய்த்தனரா னாட்கொண்ட வுமாபதியார
கறைதீரு மவ்வாறநம பணிசெய்யுங் காதலியாய்க்
குறைதீர வுறையென்று ளிலக்குமியைக் கோமனையே. (௪௮)

வாளுடையப் பொலியும்விழி யிலக்குமியை மறைக்குலத்துத்
தாளுடையப் பிறந்தானே யாளுடைய தனமைகணடே
வேளுடைய விழிதிறந்த பெருந்துறைவாழ் விதககரே
யாளுடைய ராளுடையா ரென்றகில மெடுதேத்தும். (௪௯)

மிக்கதவச் சாபாலி யருள்வழிமே விருவோரு
மிக்கபுகழ்க் கைலாய மேயதிற மெடுத்துரைத்தா
மிக்கவளப் பெருந்துறையுண் மேவியமற றொருகால்வர்
மிக்கவருட் டிறம்பெற்று விளங்கியகா தையுமவிரிப்பாம். (௫0)

அதர்மனும் இலக்குமியும் முத்தியடைந்தபடலமுற்றிற்று.

ஆகத்திருவிருத்தம் ௧௫௭௯.

# வேடன் முதலிய நால்வர் அருள்பெற்றபடலம்.

புத்தியெய் துநர்களும் பொலிசு வர்க்கமுற்
சித்தியெய் துநர்களுந் தீரத் தீர்த்துயர்
முத்தியெய் துநர்களு முனிவர் வாதவூர்
நித்தியர் திருவடி நேசித் தார்களே. (௧)

வேறு.

ஓங்குமல யாசலத்தி னொருசாருள் ளதுநன்மை
தேங்குதிறம் மருவாத சிலைவேடர் செறிசேரி
யாங்கெறிகுத் தடிபறிகொல் லெனுமார வாரமலாற்
பாங்குபெறு மிரக்கமொழி யெந்நாளும் படுதலிலை. (௨)

அனையகுறச் சேரியிடை யாழிசூ ழிலங்கையிடை
வினையநிசா சரர்குலத்துள் வீடணன்போ லொருவனுளன்
புனையவொளிர் சிவலிங்க மாலைபுனை தருமுடியா
னினையவினித் திடுபெருமா னடிக்கன்பு நீங்காதான். (௩)

அன்னவனுக் குரியமனை யாளிரதி யெனப்பொலிவாள்
பன்னருங்கற் பினிற்சிறந்தாள் மணவாளன் பணிபுரிவா
ளின்னமுத நிகரவளோ டியல்குறவ னிறடி வினைத
தென்னகிழங் குங்கவரா வினிதுண்டு வாழ்தருநாள். (௪)

ஆயவிரா தசசேரிக் கதிபனு மொருகொடியோன்
மேயவிவன் மனைவியெழி லிழைந்தொருநாட் கண்ணுற்றான்
பாயமத வேளவிடுக்கும் பல்கணையாற் புண்ணுற்றா
னேயவினிச் செயலாவ திங்கெதனே யெண்ணுற்றான். (௫)

தன்னுடைய கணவனுயிர் தபச்சாடி னலன்றி
மின்னுடையப் பொலிமருங்குல் விரும்பெனக்கு வசமாகாள்
முன்னுடைய நல்வினையான் முடிப்பதற்காம் வலியுளனை
கொன்னுடைய விக்காலங் குறித்தபடி செயல்வேண்டும். (௬)

என்றுகரு தியதுணர்ந்தா னென்செய்வேன் சிவனேயென்
றன்றுமனை வியுந்தொடர வங்கின்றும வெளிப்பட்டே
துன்றுமிரா வழிநடந்து துட்டனிவிழி காணாமே
மன்றுணட நவில்பெருமான் பெருந்துறையை வந்தடைந்தான். (௭)

கேடில்பெருந்துறையடைந்த கிராதனரு மனைவியொடு
நாடியவா னவதீர்த்த நயந்தாடி நீறணிந்து
கூடியபே ரருளான்ம நாயகர்சந் நிதிகுறுகிச்
சாடியவா தனையுடையா ளுய்ததாழ்ந்து தாழ்ந்தெழுவான். (அ)

இராமுழுதந் துயிலானு யியல்வீதி வலஞ்சூழ்வான்
பராபரனே யடியேனைப் பாதுகாத் தருளென்பான்
விராயபகை வன்வலியோன் வெங்கொலைசெய் திடல்குறித்தா
னராவணிவா யடியேனு னடைக்கலங்கா ணெனப்புகல்வான். (௯)

அற்புமிக விவனிவ்வா றுறைதரமற் றவன்மனைவி
வெற்பரைய னினிதீன்ற விளங்கிழையோ காம்பிகையே
பொற்பமையுந் தாயேநின் புத்திரியா னென்னுடைய
கற்புவழு வாவண்ணங் காத்தருள்வா யெனக்கரைவாள். (௧0)

இந்தவா றமர்தருநா ளிறவுளர்தங் குலத்தலைமை
யந்தமா பாவியவ னணங்கினொடு மெங்கொளித்தான்
முந்தநீர் தேடுமென முற்றியசில் வேடரெழுந்
தெந்தவூ ருந்துருவிப் பெருந்துறைவந் தெய்தினர். (௧௧)

மனைவியொடுஞ் சிவப்பிரியம் வாய்ந்தமர்வே டனைக்கண்டு
துனையவிறை யவன்பாற்போய்ச் சொற்றூரப் பொழுதத்தே
கனையிருண்மால களிற்றுமதன் கடுஞ்சமருக் காற்றானுய்ப்
புனையிழையா சையினெழுந்தான் போர்குறித்துப் படைஞரொடும். (௧௨)

வந்துபெருந் துறைபுகுந்தான் மாதேவன் சந்நிதியிற்
கொந்துமலர் புனைந்தகுழற் குறக்கோதை யுடன்பணிந்து
நந்துவிருப் பொடுநிற்கு நல்லவே டனைக்கண்டான்
சந்துசெறி வரைக்குறவர் தமக்கிறையோ னுங்கொடியோன். (௧௩)

எடநீ யெனைத்தப்பி யிங்குற்று யுய்திகொலோ
தேடவரும் பொருளிறைவற் சோவதென வுணராயோ
கூடமனை வியைகொடுத்தி கொடாயேலுன் னுயிர்வீப்பன்
மூடவிடுத் தொழிதியென மொய்படைஞ ரொடுவளைத்தான். (௧௪)

அதுதெரிபு நடுநடுங்கி யருளான்ம நாயகவோ
முதுவிடமுண் டுலகளித்த முழுமூல காரணவோ
கதுமெனவந் தெனைவளைத்தான் கடும்பாவி யானினிச்செய்
வதுதெரியே னபயமென வாய்திறந்து முறையிட்டான். (௧௫)

ஆலமெழ நடுநடுங்கி யன்றயன்மா லுள்ளிட்டார்
சாலவும்வந் தபயமெனத் தளராது புரந்தனைநீவங்
காலனைக்கண் டபயமெனக் கைகுவித்தல் செய்தசிறு
பாலனைக்காத் தவற்கொன்ற பணணவனு நீயலையோ. (கசு)

வெங்காள மெடுத்தயின்ற விமலவோ யோகமயில்
பங்காள வோமலரோன் படுதலையிற் பலிகொண்ட
கங்காள வோகொடியோன் கடியேனைக் கடியாம
லிங்காள வேண்டுமெனக் கென்றமடைக் கலமென்றான். (கஎ)

புலிவளையப் பதைக்குமான் போற்பதைக்குங் குறக்கொடியு
மெலிவமைநின் மகட்கிரங்க வேண்டும்யோ காம்பிகையே
வலியவன்பின் மூர்க்கரொடும் வளைத்தனனியா னென்செய்கேன்
கலிபொருமற் றவற்றுரந்தென் கற்புநிலை காவென்றாள். (கஅ)

வருந்தாமே யுலகனைத்து மீன்றெடுத்த மாதாவே
பொருந்தாதா னெனைத்தீண்டிற் போவதொழி யாதெனுயி
ரருந்தானஞ் சயின்றவர்பா லமர்ந்தருள்யோ காம்பிகையே
கருந்தார்வண் டமர்குழலாய் காப்பதுநின் கடனென்றாள். (க௯)

அம்மையருள் சுரந்தெங்க ளான்மநா யகற்பாராச்
செம்மையடி கேள்பரா முகஞ்செய்கை தகாதென்னக்
கொம்மைவிடை யுடையானுங் குறுமுறுவல் கொண்டருளி
வெம்மையொரா யுதமவன்கை மேவவிடுத் தருள்செய்தான். (உ0)

அந்தவாள் கையுறலகண் டையரரு ளெனத்தெரிந்து .
சந்தமார் வரைக்குறவன் றூப்புலிப்போத் தெனப்பாய்ந்து
வந்தயா வருஞ்சிறைய மாட்டியிறை வனைத்தள்ளி
யுந்தமார் பாயுதங்கொண் டேன்றிமிதித் துயிர்குடித்தான். (உக)

யாவருங்கண டதிசயித்தா ரான்மநா யகர்புரிந்த
மேவரும்பே ரருணினைந்து விடாதபெரு விருப்பினொடும்
பாவருந்தன் மனைவியொடும் பரம்பரனு லயத்துள்ளா
லோவருந்தே வாய்நின்றான் மற்றிருவர் திறமுரைப்பாம். (உஉ)

மாதங்க னெனுமொருவன் மனைவிமா தங்கியொடும்
பாதங்க மரியயனு மறியாதார் பதமபணிவா
னுதங்க மொழிந்தானுய்க் கேடுகுறிப் பதினமைந்தா
னுதங்க வவன்றுதியோவிற்றுமொரு திறம்பூண்டான். (உ௩)

இந்தவிதம் பற்பலநாண் மனைவியொடு மிவனியங்கச்
சந்தமறைப் பொருளானு ரவற்கிரங்கித் தாரணியி
லெந்தவிடத் தினுமுளபுன் றெய்வமெலாங் கோடுதே
முந்தமகிழ் தரும்பறைக்கு மவ்வாறே மகிழ்முயங்கும். (உ௪)

பறையடித்துக் கோடேப் பிரசன்னப் படுமென்றே
ரறைவரந்தர் தனதீயு மனையவரைக் குறவன்போன்
முறையினிலை நிற்றியென முன்னவன்பே ரருள்புரிந்தா
னிறைமனைவி யொடுநின்று னிகழுமொரு மாதங்கன். (உ௫)

குறவன்முத னல்வருக்குங் கோமான்பே ரருள்புரிந்த
வறமலிகா தையையுரைத்தா மருந்தவஞ்செய் நைமிசத்துத்
திறமலிமா முனிவரெலாம் பெருந்துறைசேர் தருச்சித்து
நிறமலியுந் திருவருள்பெற் றமர்ந்ததிற நிகழ்த்துவாம். (உ௬)

வேடன் முதலிய நால்வர் அருள்பெற்றபடல முற்றிற்று.

ஆகத்திருவிருத்தம் சுடுகூகூ.

---

# நைமிசமுனிவர் பெருந்துறையடைந்து பூசித்தபடலம்.

சேல்காட்டி மிளிர்வயல்சூழ் தில்லைவா ழந்தணாதம்
பால்காட்டி வாசகவாச் சியம்பகர வேணடுமென
மால்காட்டி யிடாச்சபையிற கைகாட்டி வழிவிட்டாா
கால்காட்டி யெமையாளுங் கருணையுடை யவராளுா. (௧)

தாதநெறி முதலனைததுக் தகப்பயின்ற சவுனகன்முன்
மாதவமா முனிவரெலாம பெருந்துறைமான் மியமபகாந்த
சூதமுனி வரன்பாதந் தொழுதெழுந்து முன்னிருந்து
காதவொரு விணணப்ப காஞ்செய்வ துணடென்றா. (உ)

அன்னதெவ னெனவினவ வருமறையா கமமுதலா
வென்னபல நூலுமெடுத் தியம்புதலம் பெருந்துறையென்
றன்னருளி னுணர்ந்தே மூங்கடைந்து தரிசிக்கத்
தன்னமிலா வேணவாத் தலைக்கொடுநின் றனபென்றார். (௩)

என்றவுரை செவியுறலு மிருந்தவத்துச் சூதமுனி
நன்றமையு மிவ்வாலைச நமக்குமுன மேயுளதா
லன்றலிலா நீவிரெலாம் புறப்படுமி னியாமுமுடன்
றுன்றவரு வேமென்றுன் மகமுடித்துத் தொழுதெழுந்தார். (௪)

அந்தநா ளன்றுளே யாகநனி மனமகிழ்ந்து
நந்தவான் வழிக்கொண்டு நடக்கின்று ரக்காலை
முந்தனே யெனுஞ்சூத முனிசவுன காதியரைச்
சந்தமார் தரநோக்கித் தலமனைத்துந் தெரித்திடுவான். (௫)

தன்கணடைந் திறந்திடுவா ரினியிறவாத் தகையருளிப்
புன்கணொழித் திடுதலமிப் பொழினடுத்தோன் றிடல்காண்மி
னன்கணியுன் மாமுகப் பொதுநாமஞ் சிறப்பாக்கி
வன்கணமல மாற்றியமர் வரையிதுகண டிறைஞ்சிடுமின். (௬)

வெள்ளியமா மலைபெயர்த்தான் மிகமுயன்றும் பெயர்க்கரிய
வொள்ளியமா பலவிலிங்க முறைதான மதுகாண்மி
னுள்ளியசீர் வடவெழுத்தச் சுட்குறிநீர் நெடிலுண்முதல்
புள்ளியகவ் வேறமுதற் புணர்தார மிதுகாண்மின். (௭)

சரநாக மொருமூன்றுட் டாநாக மல்லாத
வுரனுக விரோதித்துத் தொழுவனைமற் றதுகாண்மின்
கரவார்பால் வஞ்சமிலாா வஞ்சநிழல காதலித்து
விரவாநன் கமர்தான மெய்த்தவத்தி ரிதுகாண்மின். (௮)

புண்ணியநா வலர்கோவைச் சங்கிலியார் பொருட்டவர்பே
ரண்ணியமெல் லொற்றைவல்லொற் றுக்கியவூ ரிதுகாண்மி
னெண்ணியவோர் தூதுவைக்கொண் டெழுதாதுஞ் சணபையாகோ
னண்ணியமுன் னிரப்பவொளிர் நற்றலமற் றதுதொழுமின். (௯)

பேயுருவ முறவடைந்தும் பிஞ்ஞகனே யிவ்வுருவந்
தாயுருவ மெனப்பட்டார் தொழுந்தலமற் றிதுகாண்மின்
ஆயுருவ மறைமாவார் மறைமாவி னடியமர
வேயுருவத் தோளிதொழு மெய்த்தலமற் றதுகாண்மின். (௧௰)

---

௪. ஸ்ரீகாசி.
,, ஸ்ரீசைலம.
௭. திருகோகர்ணம.
,, திருகேதாரம.
௮. திருக்காளத்தி.
,, திருப்பாசூர்.
௯. திருவொற்றியூர்.
,, திருமயிலாப்பூர்.
௧௰. திருவாலஙகாடு.
,, திருக்கச்சியேகம
பம்.

ஒருகழுகு காணாத வொண்முடியா ரருணைக்கி
யிருகழுகு தொழுமவர்சொல் லெனும்விலங்க லிதுகாண்மின்
மருவுபல நூன்மொழிக்கு மாறுக வயங்கழலாய்ப்
பொருமிருவ ரகத்தினிருள் போக்குமலை யதுகாண்மின். (கக)

புரமூன்று மொருகணையாற் பொடித்ததல மிதுகாண்மி
னுரமார்ந்த வந்தகனை யுருட்டுதல மதுகாண்மின்
பரவான்ற மாணிவழி பட்டகுழி யுதுகாண்மின்
சிரமேந்தி தினைப்புனத்துற் பவித்ததே மிதுகாண்மின். (கஉ)

நீர்செலுத்தல் போற்குளத்து நிதிசெலுத்து மணிமுத்தப்
பேர்செலுத்து நதிசூழும் பெரும்பதிமற் றிதுகாண்மி
னூர்செலுத்து மொருவனைக்கல லொடுஞ்சுமந்து நனிநரலைப்
பேர்செலுத்து புனல்செலுத்தப் பிறங்குபதி யதுகாண்மின். (கங)

ஆக்கறம ருகமியற்ற வளித்தலப யம்புரியப்
போக்கலழற் சிகையாக்க மறைத்தலொரு தாள்புரிய
நீக்கலொரு குஞ்சிதத்தா ணிகழ்த்தமறை முதலின்பந்
தேக்கலுயி ருறநடிக்குந் திப்பியததே மிதுகாண்மின். (கச)

கைத்தோணி கரவாது கடல்கிடந்த படிகாப்பக்
கைத்தோணி விடுத்தனைத்துங் காத்தாகண ணிதுகாண்மி
னெய்த்தோவென் றடைந்தாதம் பிணியனைத்து மிரியவெல்லா
மெய்த்தோதஞ் சூழுமருந் தீவார்தே மதுகாண்மின். (கரு)

வழுவாத மலர்க்கணையான் மாவெழில்சே ருடம்பையழ
லெழுநாவுஞ் சுவைகாண விட்டதல மிதுகாணமின்
கழுதாடு காட்டாடு கால்கால்கா லெனக்கடுகும்
பொழுதேவன் மார்பமுறப் பொருததல மதுகாண்மின். (கசு)

குடைவார்த மொருகுளக்கட் கண்மலரோன் றுறக்கொடுக்கு
மடைவார்கண் மலர்பலவா முக்குளக்கண ணதுகாண்மி
னுடையார்நெஞ் சொருவாத வுலகீன்ற வரைமஞ்ஞை
விடைவார்கே தனற்போற்றி விழைந்ததல மிதுகாணமின். (கஎ)

---

கக திருக்கழுக்குன்றம். கஉ திருத்தினைநகர். கரு புள்ளிருக்குவேளூர்.
,, திருவண்ணாமலை. கங. திருமுதுகுன்றம். கசு. திருக்குறுக்கை.
கஉ. திருவதிகை. ,, திருப்பாதிரிப்புலியூர். ,, திருக்கடவூர்.
,, திருக்கோவலூர். கச. சிதம்பரம். கஎ. திருவெண்காடு.
,, திருமாணிகுழி. கரு. சீகாழி. ,, திருமயிலாடுதுறை.

புரகரன்வெங் கரியுரித்துப் போர்த்தியதே மிதுகாண்மின்
வரமிகுமா தலன்வேள்வி மடித்தவிட மதுகாண்மின்
நரமிகுவெஞ் சலந்தரனைச் சாடியதே முதுகாண்மின்
பரவரிகண் ணிடந்தவனை பெற்றபதி யிதுகாணமின். (கஅ)

ஒன்பதுகோ டியர்சித்த ரொருங்குதொழக் கற்பத்தும்
வன்பதுசாக் தரசுநிலை மாத்தலமற் றிதுகாண்மி
னன்பதும மாதிகொடு நலஙகொள்பதி யொருகோடி
யன்பதுவா யுருத்திரரேத் தெடுத்ததல மதுகாணமின். (க௯)

பரவுபெரு நதியனைத்தும் பன்னிரண்டாண் டிற்கொருகால்
விரவுதிற மடைந்தாட விழைபுனற்றே மிதுகாண்மின்
கரவுதவிர் திருநந்தி காதலித்துத தவஞ்செய்தே
யுரவுமிக நினைத்தவெலா முற்றதல மதுகாண்மின். (உ0)

கோழியர்கோ னுளங்களிப்பக் காவிரிநீர் கொளுமாரம்
வாழியநீ ரொடுஙகொணடார் வாழிடமற் றிதுகாணமின்
வீழியவா யொருத்திக்காத் தாயுமாய் வியக்கவரு
ளாழியநஞ் சுடைபிரா னமர்வரைமற் றதுகாண்மின். (உக)

அரதனமா விலஙகலென வறைவிலங்க லிதுகாண்மின்
மரகதமா மலையென்ன வழஙகுமலை யதுகாண்மி
னரவியம னதிகாரம பெறறதல முதுகாண்மின்
பரனுமையோ ருருவாகிப் பரிந்தமர்தே மதுகாணமின். (உஉ)

கடனுகைக் காயாரோ கணரளித்த பரியுகைக்கு
மடலார்குஞ் சரமுகைக்க வருளியதே மிதுகாண்மின்
கெடல்சாரா வரசசபை கெழுமிமுனி வரர்காண
மடலாகொன் றையர்நடஞ்செய் மாத்தலமற் றதுகாண்மின். (உ௩)

கொழுவனாயின் சாரமறச் குடிததவாதே மிதுகாணமின்
பொழுதினுற விகள்பூசை புரிந்ததல மதுகாண்மின்
செழுமலரோன சிரங்கொயத திப்பியததே முதுகாணமின்
முழுவலிமா றலெவினுனி முருக்கியதே மிதுகாண்மின். (உ௪)

---

| | | | | | |
|---|---|---|---|---|---|
| கஅ. | திருவழுவூர். | உ0. | திருக்குடந்தை. | உஉ. | திருச்செங்கோடு. |
| ,, | திருப்பறியலூர். | ,, | திருவையாறு. | உ௩. | திருவஞ்சைக்களம். |
| ,, | திருவிற்குடி. | உக. | திருவானைககா | ,, | திருப்பேரூர். |
| ,, | திருவீழிமிழலை. | ,, | திருசசிராபபீள்ளி. | உ௪ | திருக்கற்குடிமாமலை. |
| க௯. | திருவாவடுதுறை. | உஉ. | இரததினகிரி. | ,, | திருவெறுமபியூா. |
| ,, | திருவிடைமருதூர். | ,, | திருவீஙகோயமலை. | ,, | திருக்கணடியூா. |
| | | ,, | திருப்பைஞ்ஞீலி | ,, | திருவாரூர். |

புண்டரிக முனிவனையா ரோகணஞ்செய் புரப்பெருமா
னண்டர்தொழ வீற்றிருத்தற் கயதல மதுகாண்மின்
பண்டரிய மறையனைத்தும் பூசித்துப் பயன்பெற்ற
வண்டரிக வாப்பொழில்சூழ் வளமபதிமற் றிதுகாண்மின். (உடு)

பண்டுதச முகற்செகுத்த பழிதீர விராகவன்முன்
மண்டுபெருங் காதலொடு வழிபடுதே மிதுகாணமின்
விண்டுவனந் திடைப்பிறந்த வெணமூர்த்தே யெனக்களாந்து
தொண்டுபெடு வார்க்கருளுஞ் சுந்தரர்வைப் பதுகாண்மின். (உசு)

வனமணக்கு முருவமெனன் மாறிநறுங் கொன்றைதும்பை
யினமணக்கு மருவுருவ மியைந்ததே மிதுகாண்மின்
கனமணக்கு முடிமுதலாக் கைதொழுமூன் றிடங்கொண்டெம்
மனமணக்கும் படியமரு மால்வரைமற் றதுகாண்மின். (உஎ)

எம்மறையு மொழிந்தார்கை யேட்டெழுத மொழிபெயர்த்தே
யம்மறைசொற் றவருதித்த வருந்தலமற் றதுகாணமின்
மும்மறையும் புகழ்சைவத் திறமுழங்கு நீருநெருப்
பும்மறையர் வெளிப்படுத்தப் பொலிதலமற் றிதுகாண்மின். (உஅ)

தானகக ரத்திறொடு சம்பந்தஞ் செய்தவரை
யானதிரு கண்டிடுமி னழகியபி ரானேயென்
றீனமிலாள் கயோலததிற கொளிமுதத மிடப்பெற்ற
வானவர்நா யகருறையு மாத்தான மதுகாணமின. (உகூ)

ஆயவச கசப்பெயரா லலஙகுதல மதுகாணமின்
மேயபுாழ்ச ேதளிசோ மெயத்தலமற் றிதுகாணமின்
றாயதுணை மாலைபுணர் தோளார்தே முதுகாண்மின
மாயவிடைக் காளைபயில் வண்கான மதுகாணமின். (௩௦)

மாலமையாப் பாசுரந்தங் கியவாய்மற் றதுகாணமின்
கீலமெனும் பெயாபூண்டு கிளாதான மிதுகாணமின்
சாலவிருத் தேசுரப்பர் தரித்தாகண் ணுதுகாணமின்
கோலமிகுத் தரமுதறசார் கோசமஙகை யதுகாணமின். (௩க)

---

உடு. திருநாகைககாரோ ணம.
,, வேதாரணியம்.
உசு. இராமேச்சுவரம்.
,, திருநெல்வேலி
உஎ. திருககுற்றாலம.
,, கொடுஙகுனறம்.
உஅ. திருவாதவூா.
,, திருவாலவாய்.
உகூ. திருப்பரஙகுன்றம்.
,, திருபபூவணம.
௩௦. திருவாடானை.
,, திருப்புததூா.
,, திருச்சுழியல.
௩௦ காளையார்கோயில.
௩க. திருவேடகம.
,, திருவாப்பனூா.
,, திருப்புனவாயில்.
,, திருவுததரகோசமங்கை.

இன்னமுள தலங்களெலா மெடுத்தியம்ப முற்றுவவோ
நன்னருள நாங்கருதிற் றணித்தாக நண்ணியதா
லன்னதலத் தினையின்னே யடைந்துதொழு துய்வாமென்
றுன்னரிய பெருந்தவத்தோ ருற்றார்நால கற்றாரே. (௫௨)

தூயபெருந் துறைவலமாச் சூழ்ந்துநிலத் திறங்கினார்
பாயவளங் கண்விடுத்துப் பார்த்தனர்தம மனந்திகைத்தார
மேயவிதற் குயர்வொப்பில் விளம்பலாமிதற்கிதுவென்
றாயமகிழ்ச் சியர்முனிவ ரனைவரும்வீ தியிற்பணிந்தார். (௫௩)

கோளுநா ளுந்தவழுங் கோபுரமு னடைந்திறைஞ்சி
யாளுநா யகர்கோயி லுட்புகுந்தக் கினிதீர்த்த
மூளுமா சமவிதியாற் படிந்தெழுந்து முனகர்கொளா
நாளுமா னந்தமருள் வெண்ணீறு நயந்தணிந்தார். (௫௪)

கண்மணிமா லிகைபுனைந்தே யஞ்செழுத்துங் கணித்தாராய்
விண்மணியால் விடலுவக்கு மழகளிற்றின் முனமேவி
யெண்மணியே யொருகோட்டுக் கற்பகமே யெனுமடியார்
வண்மணியே யெனத்துதித்து மலரடிபோற் றுபுசென்றார். (௫௫)

ஆளுடைய பெருமானை யரவமெலா மெடுத்தணியெண்
டோளுடைய சுந்தரனைச் சுடர்மூன்று நனிவட்கும
வாளுடைய மெய்யானை வருமறலி யுயிர்குடிதத
தாளுடைய வான்மநா தனைக்காணபா னுட்புகுந்தார். (௫௬)

சொக்கவிநா யகர்பாதந் தொழுதுருகுந் தடிநீழன்
மிக்கபொன்னு லாஞ்சபைமுன் விரைந்தேகிக் கணனுற்று
ரக்கரவா ரணியான்ம நாயகரை யப்போதத்
தககவாமே வியமகிழச்சி யாமேயோ சாறறவல்லேம. (௫௭)

இருகணுநோக் குறவிடுத்தா ரிருகைதலை மேற்குவித்தா
ரருகலிலா வரவோமென் றடுத்தடுதது வாய்நவின்றார்
பெருகுமுரோ மஞ்சிலிர்த்தார் விழிப்புனலும் பெருக்கினார்
வெருவழல்சான் மெழுகென்ன மிகவுடைந்துள் ளுருகினார். (௫௮)

இந்நாளே பிறந்தபய னெய்தியநா ளெனப்புகல்வா
ரிந்நாளே பசுபோத மிரித்துயர்ந்த நாளென்பா
ரிந்நாளே கண்படைத்த பேறெய்த நாளெனபா
ரிந்நாளே யின்பமுதநி யெய்தியநன் னாளென்பார். (௫௯)

அழுவாரு மழுதழுதாங் கன்பினுற பரவசராய்
விழுவாரு முடனெழுந்து மேனியுரோ மஞ்சிலிர்ப்பத்
தொழுவாரு நாக்குழறத் துதிப்பாரும் பவக்கடனின்
றெழுவாரு நாமேயென் றிசைப்பாரு மாயினர். (௪0)

இந்தவிதம் பாவுபுகீ ரேற்றுநத னகத்தரித்துப்
பந்தமிலா ரொருவாறு வெளிவந்து பனைதளிசூழ்ந்
தந்தமிலாக் குருந்தடியா சாரியனை யடிவணங்கிச்
சந்தாட ராசர்முத லியாவரையு முறத்தாழ்ந்து (௪௧)

படைத்தளித்துத் துடைத்துமறைத் தருளலெனப் பகரைந்து
முடைத்தலையிற் பலிகொண்டார்க் குடனிருந்து முடித்தருளி
யடைத்தவுல கத்தனுக்கு மாதார மாயெல்லா
முடைத்தனியோ காம்பிகைதன் றிருமுனமுற் றுருரவோர். (௪௨)

ஆங்குமுன முரைத்தபடி யகநெகக்கும பிட்டணைந்து
வீங்குபுகழ்த் திருவாத வூரர்முன மேவினர்
நீங்குதலின் மகிழ்ச்சியராய் நெஞ்சுருக நனிதொழுது
தேங்குபெருஞ் சிவயோகச் செழுந்தேறல் வாய்மடுத்தார். (௪௩)

அரிதுபுறம் போந்தொருசா ராச்சிரமஞ் செய்தமர்ந்து
பிரியமிகக் காலங்க டொறுமபேணிப் போயதொழுவார்
விரிதிரைத்தீர்த் தங்களெலாம் விருப்பினொடு படிதருவார்
தெரியமகிழ் வனத்தமருஞ் சிவக்கொழுந்தை யுந்தொழுவார். (௪௪)

ஓயாத முயற்சியரா யிவ்வண்ண முறைதருநாண
மாயாத பெருங்கீர்த்தி மாணிக்க வாசகர்க்குச்
சாயாத வன்புடையார் தனுமாத விழாவெடுத்தா
ரேயாத வதுதரிசித திடுவாஞ்சை யுடையவராய். (௪௫)

ஆயவா ரோகணமுன் னலங்கவரோ கணமளவு
மேயவுலா விருபோதும் விளங்குறக்கண் டினிதேத்தி
நாயனர் குருந்தடியி னகவருளுந் தரிசனமும்
பாயவிருப் புறப்பெற்றார் பெறப்படுவ தினியென்னே. (௪௬)

எல்லாரு மிந்தவித மேத்தியா னந்தமுற்றுச்
சொல்லாருங் குருந்தவனச் சோதிபால் விடைபெற்றுச்
செல்லாரு நைமிசமாந் தமமிருக்கை யுறச்சேர்ந்தார்
வில்லாரும் புகழச்சூத முனிபூசை மேற்கொள்வார். (௪௭)

அரியபுரா ணந்தாங்க ளறிபாக்கு விரித்துரைத்த
பெரியபுகழ் முனிவரனைப் பிறவகுமா சனத்தேற்றி
யுரியமலர் சந்தமுத லுபகரணம் பலகொண்டு
விரியவருக வியமர்தி விசேடமுறத் தாபித்து. (சஅ)

பரசிவனே யிவனென்னப் பாவித்துப் பூசித்து
வரசன்மா னமுங்கொடுத்து முகமனுரை வழங்கியபின்
விரவுமவன் மாணுக்க ரனைவருக்கு மேதகவிற்
கரவிறுகி லாதிகொடைத் தொழினிரம்பக் கண்டதற்பின். (சக)

ஏற்றமிகு சூதமுனி யிருக்கைசெல வுய்த்ததற்பி
னூற்றவவ னருளியவா றுன்மநா தனைக்கருணை
மாற்றரும்மியா காமபிகையை வாதவூர்ப் பெருமானைத்
தேற்றமுறச் சிந்தித்துத் தெளிந்துவாழ்ந் திருந்தனரால். (டு0)

இத்தகைய புராணத்தை யெழுதுவோ ரெழுதுவிப்போ
ருத்தமமே வப்படிப்போ ருணமையுறப் படிப்பிப்போர்
வித்தகமாம் பொருள்கேட்போர் கேட்பிப்போர் விளம்பிவர்கட்
கத்தமெடுத் துதவிடுவோ ராகியமற் றனைவோரும். (டுக)

இம்மையிலே பெருஞ்செல்வ மியையமனை மக்களொடுஞ்
செம்மைபெற வாழ்ந்திருந்திந் திரன்முதலோர் பதங்களெலாம்
வெம்மையற வனுபவித்து முற்றியபின் மேலாய
வம்மையொரு பாலான்பொன் னடிமலர்சார்ந் தின்புறுவார். (டுஉ)

நோயடையார் மிடியடையார் நுண்ணியர்மே வியசபையின்
வாயடையார் தீயகுண மனையடையார் மாண்பிலலாச்
சேயடையார் சிறும்புலவாந் தீங்கடையார் செறிதளிர்பூக
காயடையார் குருந்தவனப் புராணமது கற்போரே. (டுங)

புண்ணியமார் பெருந்துறைப்பு ராணத்தோர் கவிகற்றோர்
திண்ணியவான் பெருஞ்சைவ சித்தாந்தச் செல்வரா
யண்ணியசித் தாந்தசைவ மடைந்தின்ப நிலைபெறுவார்
நண்ணியமுற றுந்தெரிவார் நலமுணர்க்க வல்லவரியார். (டுச)

தூயவள மோங்குபெருந் துறைப்புரா ணம்பொறித்த
நேயமலி புத்தகமோர் சிறுமனைவாய் நிலைபெறினு
மாயமனை பெருமனையா யளப்பரிய திருவடையு
மேயபுன்றே வமமனையு றெல்லையினு முருதன்றே. (டுடு)

### வேறு.

வாதவூ ரடிகளுக்குப் புரூரவனேற் படுத்தியவா வளஞ்சால் சாறு
பேதமிலா கமப்படியே நடந்ததுமுன் வைதிகத்தாற் பின்னுண் மாறிற்
றோதவமை யாவதுதெய் வீகத்தா லுணர்ந்திந்நா ளுறததா பித்த
போதமலி துறைசையெஞ்சுப் பிரமணிய முனிவர்பிரான் புகழ்மேல் வாழ்க.()

தூயதிரு வெண்ணீறுங் கண்மணியு மைம்பெழுத்துஞ் சுரந்து வாழ்க
வாயபெருந் துறைவாழ்க வான்மநா யகர்வாழ்க வருள்கூற் கொண்டு
மேயசிவ யோகபரா பரைவாழ்க வாதவூர் விமலர் வாழ்க
நேயமலி யம்பலத்து நடநவிலுங் குஞ்சிதத்தா ணீடு வாழ்க. (௫௭)

நைமிசமுனிவர் பெருந்துறையடைந்து பூசித்தபடலமுற்றிற்று.

ஆகத்திருவிருத்தம் ௧௩௫௬.

---

## திருப்பெருந்துறைப்புராணம் முற்றிற்று.

திருச்சிற்றம்பலம்.

உ

கணபதி துணை.

# அரும்பதவுரை

## கடவுள் வாழ்த்து

க. மா - திருமகள். மோடு - பெருமை. ஆமை முதுகு - மந்தரமலையைத் தாங்குதற்குத் திருமால் கொண்ட ஆமைவடிவத்தின் முதுகு. ஓட்டை. தற்கு - தனக்கு; (விநாயகமூர்த்திக்கு). அருச்சிப்பார் - அங்கபூசை செய்பவர். என்பு ஆதி - எலும்பு முதலியவைகள். திருமாலின் அவதாரமாகிய கூர்மத்தைவென்ற விநாயகர் அதன் முதுகோட்டைச் சிவபெருமான் திருமார்பில் அணிந்தனரென்னும் புராணவரலாறு இங்கே அறிதற்பாலது.

உ. இலவு - இலவம்பூ. எம்பெருமாட்டி பார்வை - உமாதேவியாரின் திருக்கண்; சந்திரன். இருகலுமுன் நூல் - வேதமுதலிய நூல்கள். நம பெருமான் பார்வை - பரமசிவனுடைய திருக்கண்; சூரியன். பல-பலாமரம். குருந்து - குருந்தவிருக்ஷம். நிலவு-பிறை. விநாயகக்கடவுள் இத்தலத்தில் நிலவையுடைய சடைமுடியையும் வெயிலையுடைய திருமேனியையுமுடையராயிருத்தல் இருமுதுகுரவர்களுடைய பார்வைகளிரண்டையும் இவர் ஒருங்கே பெற்றிருத்தலைப் புலப்படுத்திய தென்படி. மூத்தபிள்ளையிடத்தே தந்தைக்கும் இளையபிள்ளையிடத்தே தாய்க்கும் மிக்கவிருப்பம் நிகழுமென்பதைக் கம்பராமாயணம், மிதிலைக்காட்சிப் படலம் கஉ0-ம் செய்யுள் முதலியவற்றிலுள்ள அம்பரீடன் கதையாலும், மூத்தப்பிள்ளையிடத்தேமட்டும் தந்தைக்கு விருப்பம் நிகழுமென்பதை, "முத்தமகனிடத்தாவ றெழுந்த பிதாமகற்கே முதிரும" என்னும் விநாயகபுராணச் செய்யுளாலும் அறியலாகும். லத்தில திருக்கோயிலின்றியே எழுந்தருளி யிருக்கின்றனர்.

௩. தக்க ...ன்!. விளம்பு - கேட்டு. அகல மறை - விரிவான வேதத்தினை. மேகக் கவினுய் - மேகம்போன்ற அழகையுடைய திருமாலே!. மகச்சாலையின் அகல் - யாகசாலையினின்றும் நீங்குவாயாக. தக்கன் இங்ஙனம் கூறியதைக், கந்தபுராணம், தக்கயுத்தப்படலத்தாலுணர்க. கணிப்பு - அளவு. புக்கு - புகுந்து. ஆய அகண் அமர்ந்து அவ்வின் முதலாகிய - ஆராயகின்ற உள்ளங்களதோறும் எழுந்தருளியிருந்து அகரவுயிர்போல முதற்பொருளாயினய. மிக்க விநாயகன் எனவும் இக்கவிநாயகன் எனவும் பிரித்துப் பொருள்கொள்க. ... வருகின்ற இடையூறு. என் என்பது இன்மைப் பொருளில் வந்தது.

௪. வண்டு அகம் பாய - வண்டுகள் உள்ளிடத்தே பாயப்பெற்ற. கவுத்தலமபோல் பாறு - சௌஸ்பத்து

மணியாகிய ஒரு சூரியனை யணிந்த. மார்பான் - திருமால். நார் - அன்பு. ஆர் - நிறைவு.

ரு. அருவம் - அருவத்திருமேனி. உருவம் - உருவத்திருமேனி. ஒரு தோன்றல் - சிவபெருமான். எனல்- என்று ஆகமங்கள் கூறுதலை. நாதம்- நாதத்துவம். அமர்தற்கு - அருவத்திருமேனிகொண்டு எழுந்தருளியிருத்தற்கு. மேய - அருவத்திருமேனியுடன் மேவிய.

சு. அரை - திருவரை, ஓர்எண். கால் - பாதம், ஓர்எண். காற்புலி- வியாக்கிரபாதர்; காலாற் புலியென்க. ஒருபாம்பு - பதஞ்சலிமுனிவர். மேக்கு - மேலிடம்; சடைமுடியில். திரை பயம் மாது - அலைகளையுடைய நீர்வடிவமாகிய மாது; கங்காதேவியார்; திரையையும் அச்சத்தையுமுடைய முதுமகளென்பது மற்றொருபொருள். அலைஇ - அலைந்து. கிழக்கு - கீழிடம், கீழ்த்திசை. இளங்கன்னிகை - சிவகாமியம்மை. இதில் முரண் தொடை யமைந்திருத்தல் பாராட்டற்பாலது.

எ. மாறு - கைம்மாறு. உடல் வளம் - உடம்பிற்கேயுரிய வளம். மின் முன் ஊறு - மின்னல் முதலிய இடையூறுகள். இடையீடு - இங்கே சிலகாலம் பெய்யாதிருத்தல். உயிர்கள் வளமேவி. நடம - தாண்டவத்தை. பெற - உயிர்கள் பெற.

அ. கரியவன் - திருமால். அவன் மனைவி - பூமிதேவி. வாதவூர்ப்பெரியர் - திருவாதவூரடிகள். சிவபோகமாகியமது.

கூ. நூலளவை - ஆகமப் பிரமாணம். ஒருவருக்கா - திருவாதவூரடிகள் பொருட்டு. தலைச்சாத்து - தலைக்கட்டு; தலைப்பாகை. உரிய ஒரு பரி- வேதமாகிய குதிரை.

க௦. கழுவாய் - பிராயச்சித்தம். அன்றிக்கழுவாய் வேறின்று என்னும் மறைக்கு. வாள்கைக்கொண்டு அறுத்துச்சிதையச்செய்த; "செருக்கொடுஞ்சிவ சிந்தைசெய் வார்க்கிலை தீர்வு" என்னும் பிரபுலிங்கலீலைச் செய்யுளைப்பார்க்க.

கக. அஞ்சு - ஞானேந்திரியங்களைந்தும். பிறகருவி-வேறு ஆயுதங்களை. நஞ்சு - விஷத்தை. மால் களிறு - கயமுகாசுரன். திங்கட் பிஞ்சு - இளம்பிறை; "மாமதிப் பிஞ்சுமிளை தேர்குயிற் குஞ்சுமுயிர் வாய்மடுத் துண்டொழிவதே" என்பது மதுரைக்கலம்பகம்; ௮௦. களிற்றை மாட்டி.

கஉ. புரமுதல் - திரிபுரம், காலன், காமன் முதலியோர். புகழ் - புராரி, காலகாலர், காமதகனர் முதலிய திருநாமங்கள். யானை - கயமுகாசுரன். அதனொடு - அப்புகழோடு. ஊர்தி - வாகனம். கயமுகாசுரனே விநாயகக்கடவுளுக்கு வாகனமாயினனென்பது புராணவரலாறு; "அத்திக்கிரங்கியருள் பதித்தூர்ந்த வகத்திய வாரணமே" என்பது மாயூரபுராணம். முன்னோன் - விநாயகர். பரவுற - கொண்டாட. சூர் - சூரபன்மன். அவற்றொடு - புகழோடும் வாகனத்தோடுமே. கேதனம் - (கோழிக) கொடி. மருந்து - சிவபெருமான்.

கச. முறையே அவற்றிகு எதிர் மறை - குறுமை, நெடுமை, இழிபு, உயர்பு. எண்மை - எளிமை. அரம- பாதாளம். என்னும - என்று பெரியோர்களால துதிக்கப்படுகின்ற. பெரியகடலைச் ஆசமித்தமையின், நெடுமையைக் குறுமை செய்தலும, குறிய தமது வடிவப்பொறையால தென்றிசையைச் சமமாகும்படி செய்தமையின, குறுமையை நெடுமை செய்தலும, மிக்குயர்ந்த விந்தமலையை அடக்கினமையின் உயர்பை இழிபாக்குதலும் திருக்குற்றாலத்தில திருமாலைச் சிவமாக்கினமையின் இழிபை உயர்பாக்குதலும் வெளியாயின.

கரு. பாலை அளவில்லாத நாளுண்டு. ஆன் - பசு. தொறுவியர் -

இடைச்சியரை. பார்த்து உவந்த. மால்- கண்ணபிரான். அளவில்லாத நாண். ஆன்-ரிஷபதேவர். அளவு -கலந்த. நூலளவு ஒருநூல் - பலநூற் பொருள்களும கலசச்ப்பெற்ற ஒரு நூல்; தேவாரம். நோன்மை யானை -வன்மையையுடையவரை.

கசு. பாலிடை - பாற்கடலினிடத்தே. நூலிடை -நூல்போன்ற இடையையுடைய உமாதேவியாரை. ஓர்பாலவர்-சிவபெருமான். பாலிடை நஞ்சம் - சைனர்கள் பாலிற்கலந்து கொடுத்தவிடத்தை.

கஎ. உந்தி - கடல், ஆறு. மால் -இராமர். திருவையாற்றிற்குச் செல்லுகையிற் காவிரி வழிவிட்டமை இங்கே அறிபற்பாலது.

கஅ. இந்திபம் ஒன்றற்கா - நேத்திரேந்திரியத்தால் தரிசிக்கும் பொருட்டு. முகுந்தன் எமாற. ஐந்தும் - ஞானேந்திரியங்கள் ஐந்தும்.

கக. ஆத்திமுதல் - ஆத்திமரத்தினடியில. மைடயிலவா ஆததி- ஆதி; சிவலிங்கபெருமான. திகழும ஆவின்பாலை ஆட்டி. பொல்லாத தியக்கமுள்ளது. அடி - தந்தையின் பாதததை. ஆததி - ஆபதி; உமாதேவியார். ஆததன - ஆப்தன்.

உ௦. செயற்கருஞ்செயல் - மாது சொன்னகுளால் இளமை துறந்தது முதலியன. பரிவு -அன்பையுடைய.

உக. குரவருளொருவன்.உமாபதி சிவாசாரியார். அவர்கூறியதை, திருத்தொண்டர் புராணவரலாற்றில், ச௦-ம செய்யுளில் வந்துள்ள, "தொண்டர் சீர் பரவவல்லார்"என்பது முதலியவற்றாலுணர்க.

உஉ. தில்லைமூவாயிரவர்களைப் போல் இவர்கள் இத்தலத்தில் ஸ்வாமியைப்பூசிக்கும் குழாத்தினர்.

உங. எழாவகை - மனம் எழாதபடி.

உச. இறையில் - இறைப்பொழுதில். அவை-மறையோதல் முதலியவை

உரு. வந்து இவண் யாம் உறைவாம். இந்தத்தலத்தில் நந்தி தேவர் இலர்.

உசு. ஆவடுதுறையில் தோன்றி. மாமலம் - ஆணவம. அடியை முடியிற் செறித்து:

உஎ. உணவு உதவுவேனென்று புகன்று இருததினேன்.சீபாதவிலைவு- பசுஞானம். ஆரியன்பசிக்கவுண்பான் என்பதை "அந்தமொன்றில்லா வானந்தம பெற்றேன யாது நீ பெற்றனை யென்பால" என்னுந்திருவாசகததால் அறிக.

அவையடக்கம்.

உ. தருதி என்ன - தருவாயென்று சொல்ல. புலம் - அறிவு.

ங. இறி - வஞ்சனை. ஒருவா-சாக்கியநாயனா. கலும-கல்லையும. மேனி ஏற்றதை.

ச. நிலையது=நிலைஇயது - நிலைததது. எள்ளின் உலைவு இல நெய் - எண்ணெய். வேறொன்று- கணம்புல. தலை விளக்கு எரித்து உய்ந்தா -கணமபுல்லநாயனா.

ரு. மணிமணி யாகத்தோன்றும் வாசகததை - திருவாதவூரடிகளுடைய சொற்களை. வறிய சொல - பொருளில்லாதசொல். உறகை - விண்வீழ்கொள்ளி; வானம விலக்கும்; வாவி போகரும்.

சு. மூவா - பிரமன்முதலியரும் மூாததிகள், சைவசமயாசாரியர். முடிவில் இன்பு

எ. மறையினும் - உருபுகள மறைந்தாலும் அந்த முறைதவறிய தொகை - உருபுகள மறைந்தபொழுது வேறு பொருள்படும தொகை.

அ. முடிய - முற்ற. மெய்ஞ்ஞானம் - மெய்மமையாகிய அறிவு நூற்பொருளை. பதி பசு வென்னும்

இரண்டனுள், பதி உணர்த்தும சித்து; பசு உணர்த்த வுணரும் சித்து. கொடியது என்றதற்கு எனது வாக்கு என்பது தோன்றுவெழுவாய்.

௯. ஞானன்மகாத ரென்றன்றிப் பொதுப்பட ஆன்ம நாதரென்னுந் திருநாமத்தைக் கொணடிருத்தலின், ஞானமில்லாத என்னையும் ஆட்கொணடருளுவாரென்றபடி. நாவலூரா-சுந்தரமூர்த்திநாயனார். வெண்ணெய்-திருவெணணெய் நல்லூர். அன்று - அடிமையோலையைக்காட்டி ஆட்கொண்டகாலத்தில். 'அருச்சனை பாட்டே' என்றதை, "மற்றுநீ வன்மை பேசி வன்றொண்ட னென்னு நாமம், பெற்றனை நமக்கு மன்பிற் பெருகிய சிறப்பின் மிக்க, அர்ச்சனை பாட்டே யாகு மாதலான் மண்மே னம்மைச், சொற்றமிழ் பாடுகென்றார் தூமறை பாடும் வாயார்" என்னும் திருவாக்காலுணர்க, (பேரிய. தடுத்தாட். ௭௦)

## திருநாட்டுப்படலம்.

௧. சிமிழ்க்க - கட்ட. மேக்கும கிழக்கும் - மேலிடத்தும கீழிடத்தும்; சுவர்க்கத்திலும் நரகத்திலும். பவம - பிறப்பு.

௨. சூல் - கருப்பம். தலம் - திருப்பெருந்துறை.

௩. படியகத்தில் - பூமியில். அவிரும்படி - விளங்கும்படி. அரும்பு அன்பாம அடி - உண்டாகுகின்ற அன்பாகிய (அ)தன்மையையுடைய. ஒருவர் - வரகுணபாண்டிய தேவர். தன்னென்றது பாணடிய நாட்டை. செய்தன்று - செயதது.

௪. குமரி — கன்னியாகுமரியாறு. பொருநை - தாம்பிரபர்ணி. வெணகுடிரை - வெள்ளாறு. என்று, எண்ணிடைச்' சொல. இந்நாட்டில குமரிமுதலிய ஆறுகள நான்கும அறமுதலியநால்வகைப் பொருள்களாகவும் விளஙகுகினறன.

௫. வலன - வெறறி. வறபபவென்ற அடியையும முகிலை வெனற முடியையும உடையதாகிய கூலநகா - திருவாலவாய கோண — மாறுபாடு, ஐ அசை.

௬. கம்பம் - நடுக்கம், ஞானமுண்டாகியது. வமபு - கச்சினை. யானை - தெய்வயானை. ஓர்குன்று திருப்பரஙகுன்று. நமமுடைய பந்தததை அறுப்பவன் - முருகககடவுள். இப்படலத்துளள ௬௬ - மபாடலைப பார்க்க.

௭. அடிப்பிணிப்பு - கால்விலஙகு. முன்பு உக்கிரபாண்டியரால் சிறையிடப்பெற்றமையின், மேகங்கள் அஞ்சின. சந்தம் - அழகு.

௮. பருவரை - பொதியில்மலை.

௯. சரியையாதி - சரியை, கிரியை, யோகம், ஞானம. சனனத்தெவ்வை - பிறபபாகிய பகைவனை.

௧௦. இது, திருக்குறளில், நாடென்னும் அதிகாரத்துள்ள, "தள்ளா விளையுள்", "பெருமபொருளால்", கேடறியா" என்னும பாடலகளின் பொருளைததழுவிவந்தது.

௧௧. துறை - வழி. முறை ஒலி - முறையான புகழை. புகழ் என் சொற்றும. மறை ஒலி படு - வேதஙகளின முழககஙகள உண்டாவதற்குக் காரணமான.

௧௨. சுரும்பு அலஙகல். உருப்பம நீஙகு - வெமமை நீஙகிய. இந்திரநீலப பருப்பதம் - ஒரு சிவஸ்தலம்.

௧௫. வேந்தன் - இந்திரன். கூணட - திரணட. முடியைச்சிதாத்தது, இநதிரன முடிமேல வளையெறிந்த திருவிளையாடல். புகழால் நீண்ட நாடு - பாணடி நாடு.

௧௬. தருப்பம் - ஒருவகைத்தீக் குணம.

கடு. வேலை - கடல். வடுகநாயகன் - பைரவமூர்த்தி. மேனியை. வானர் - தேவர்.

கசு. இளையவன் - உபேந்திரர், திருமால். மகள்-பூமிதேவி. இடி பாம்பை அஞ்சச்செய்யும்.

கஎ. பருவம் ஆறு - கார்முதலியவை. பொருவ ஒன்றும் இல் அருள்- ஒத்தற்கு யாதொருபொருளும இல்லாத அருள். செம்மல் பொழிந்தென.

கஅ. வள்ளியர் - வண்மையையுடையோர்; அவர்திறம் - கைம்மாறு கருதாமற் கொடுத்தல். ஒளித்தன்று - ஒளித்தது.

கக. 'நம்புணலெலாம்' என்பது முதலியன கடலின்உட்கோள். உண்டவன்-அகத்தியமுனிவர். பொதியில் அவருக்கு இருப்பிடம. ஆழி, எழுவாய். கவிழ்திறம - கவிழுகருந்திறம்; பொழியுமவிதம்.

உ0. நாணமுற்றோர் விளர்ப்பர். அகை - வருத்தம. அவித்து விளர்த்தன.

உக. கலுழி - காட்டாறு. வனம் சார் தரை - முல்லை. ஓடை - நீண்டுள்ளது; நீர்நிலை.

உஉ. கயிரவப்பகை - சூரியன். குறள உ - குற்றியலுகரம்.

உங. மாட்சி கடுகரும.

உச. அடுத்தனை - அடுத்தது, ஐ - சாரியை.

உடு. உடலூழ் - பிராரத்தம். ஊறறம் - ஊறுதல்.

உசு. வாரி - கடனீரை. மழை - மேகம. தளிப்பணி - ஆலயப் பணிவிடை. வேமபுடையான் - வேபபமாலையயுடைய பாண்டியன்.

உஎ. நணபகல் - நடுப்பகல். உதித்து - தோன்றி.

உஅ. மாயகாரியப்பொருள்கள் - மணி, பொன முதலியவை. நவிலொணா இன்பமாய வான் பயன் - முத்தியின்பம்.

உகூ. படமாடம் - கூடாரம. விசிகயிறு - இழுத்துக்கட்டியகயிறு.

௩0. கவுணியர் - ஞானசம்பந்தர். தகைபோல் திகைத்து.

௩க. ஐந்திணைவளம்- குறிஞ்சித்திணை முதலிய ஐந்திணைவளம.

௩உ. வரை பயந்தவள் - உமை. மான்மகள் - வள்ளி நாயகியாரை. வரை - கிரௌஞ்சகிரி. சேய்-முருகக்கடவுள்.

௩௩. பஃறரு - பலமரங்கள். வேங்கை மலரும, செண்பகமலரும் வணடுறாதவை.

௩௪. போகட்டு - போட்டு. இளைவு இல்லா - வருந்துதல் இல்லாத. தாம் தெரியாதவர்கள் இழிந்ததை உயர்ந்ததாகவும் உயர்ந்ததை இழிந்ததாகவும் எண்ணுவார்கள்.

௩டு. கவணில் மணியைவைத்து, குரல் - (திணைக்) கதிர். ஒருபக்கத்துக்கயிறு அற்றகவணிற்குப் படப்பாம்பு உவமை.

௩சு. நௌ - ஓடும் குரங்கி - சந்திரனை; மானையுடையவன் என்பது பொருள்; குரங்கையுடையவனென்பது மற்றொரு பொருள்.

௩எ. தெளிதராகு - தெளிவித்தாற போல. அடையுடுப்பார்- தழையாலாகிய உடையை உடுப்பார்கள்.

௩அ. பிறையின் கோட்டினுல் உடைந்த தேனடை. மதம் அருவி- தேனருவி. இது செந்நிறமுடையது- யானையின் கடாம-யானையின் மதம். இது கருநிறமுடையது

௩கூ. மந்தி - பெண்குரங்கு. கடுவன் - ஆண் குரங்கு. அந்தில் - அவ்விடத்தே. மற்றொன்று - வேறோா ஆண் குரங்கு; யாது-உருமை. இவள் சுக்கிரீவன் மனைவி. கவியிரணடு- வாலியும் சுக்கிரீவனும்.

௪0. கயமுனிக்குலம - யானைக்கன்றின் கூட்டத்தோடு. கணம் - கூட்டம். அறை - பாறை. தினைக்குரல் - தினைக்கதிர். மறம் - வீரம்- எயின்குடி - வேடக்குடி.

௪க. கடமை - ஒருவகை விலங்கு.

காளத்தியா-காளத்தியிலுள்ள சிவ பெருமான். இவர், இறைச்சிகளைத் தேனிற்றோய்த்துக் கண்ணப்பநாய ஞா அருந்த உண்டருளியது இங்கே அறிதற்பாலது.

சஉ. யானைக்கோடுகளில் முத்து ண்டென்பர்.

சங. பிண்டியந்தளிர் - அசோகந் தளிர். ஆரம் - சந்தனம். இரத் தல் தலைவர்களின் தொழில். கொள் வார் - கொள்ளும் தலைவியர்கள்,

சச. எறும்பும் அல்லாத உயிர் களுமாகிய யாவும். குறும்பலாவுடைக் குன்றம் - திருக்குற்றாலத்துள்ள திரி கூடாசலம். இது, பாண்டிநாட்டி லுள்ள கச தலங்களுள் ஒன்று. தெறுகின்றமுநகளையும் ஆயிரம் வா யினையுமுடையவன் - ஆதிசேடன்.

சரு. வானமேவிய வாழ்க்கையர் -தேவர், புளிஞர் - வேடர்கள். கொ டுங்குன்றம் - பிரான்மலை. ஏனம் நாடொணார் - ஆதிவராகத்தால் தேடி யறியப்படாத சிவபெருமான். ஆங்கு ஞாலம் முன்காட்டி யிருப்பின் - அவ் விடத்தே பூமி, அந்தரிக்ஷம் சுவர்க் கம் என்னும் மூன்று இடங்களைக் கா ட்டி எழுந்தருளி யிருப்பாராயின். இம்மலையில் பூமியிலிருந்து மூன்று சிவசந்நிதிகள் உள்ளன. மானம் - பெருமை.

சசு. சூர் - சூரபன்மன். இறை வன் - முருகக்கடவுள். யானை தோள் - தெய்வயானையாருடைய தோளை. திருப்பரங்குன்றம், தெய் வயானையாரை முருகக்கடவுள மணஞ் செய்தருளிய தலம்.

சஎ. மான் - மாரீசனாகிய மானை. வாளியால் தப்பததாளெனினுமென்க. மான் உருத்தழுவும் - திருமகளாகிய மானின் வடிவத்தைத் தழுவிய. திரு மகள் மான் வடிவமுற்றிருந்ததை கந்தபுராணம் வள்ளிநாயகியார் திரு மணப்படலத்தால் உணர்க. மாலை -திருமாலை. மான் உருத்தகான் - மா ன்கள் அழகு பெற்ற காடாகிய முல்லை நிலமானது.

சஅ. சவனம் - துளசி. துளசி யால் திருமாலுக்கு மயக்கம் நீங்கின மைகந்தபுராணத்தால் அறியப்படும். மீப்பாய - மேலே பரவிய. படாந்து -நினைந்து. அவண் - அவ்விடத்தே.

சகூ. தேரிலுள்ள அசைந்தாடு மாலைகள் சரக்கொன்றைப் பூங்கொத் திற்கு உவமம். மதலை - கொன்றை. கூவிளம் - வில்வம். ஓதிமம் - அன் னம். இப்பறவை மருதநிலத்திற்குரி யது.

ருய. மூவகைத்தொழில் - படைத் தல் காத்தல் அழித்தல். இடைத் தொழில் - காத்தற்றொழில். தேவன் - திருமால். ஆவயின் - அவ்விடத்து. தொழும் - பசுக் கொட்டில். தீவு - இடங்கள். பரப்பிச்செறிவாரென்க.

ருக. புதல் - சிறு தூறுகள். கலை யத்துப் பால்பாயுமோதை - பசுக் கறக்கும் ஒலி.

ருஉ. முளிபடுஉ - காய்ச்சப் பட்டு. பெருகு - தயிர். வெருகு - காட்டுப்பூனை. யந்திரம் - வண்டி முதலியவை.

ருங. வேய்ங்குழல் - புல்லாங் குழல். ஏறு - இடபம். பனித்த - குளிர்ச்சியைச் செய்த. மௌவல் - முல்லை. வில் - இந்திரவில். தொ ழிப்பு - முழக்கம். தனித்தமங்கை யர் - கணவனை விட்டுப் பிரிந்தோர். மகளிர் தனித்திருத்தல் முல்லைக்குரி ப்பொருள். இருக்கை சாய - இருத் தலைக் கெடுக்கின்ற.

ருச. நகையரும்பிட - பற்களைப் போலவே தோன்ற. குழல் கனிந் திட - கூந்தலைப் போலவே பழுக்க. களவு - களாச்செடி.

ருரு. குறும்பொறைநாடர் - முல்லை நிலத்தலைவரின். இமிலுகருத் தோ ளிணையுயர்ந்தன, கொங்கைகட்கு அவை ஒத்தனவென்று சொல்லும்படி.

ருசு. இறுங்கு - சோளம். முற் கம் - பயறு. கோத்திரவம் - வரகு. புல் - கம்பு. கானகத்தில் வரை நண

ணிய வெண்ண.

௫௭. குருந்து - குருந்தமரம். தூர்வை - அறுகு. ஆனின் ஐந்து - பஞ்ச கவ்வியம். இன்களம பழம - இனிய களாப்பழம்.

௫௮. பூவை - காயா.

௫௯. நானம் - புழுகு. தானப் பேரரசு - இந்திரன். வான் அப்பு எர் முடியாய் - ஆகாய கஙகையை அணிந்த சடைமுடியை யுடையீர். கானப்பேர் - காளையார கோயில். புறவம் - முல்லைநிலம்.

௬0. ஆடானை - திருவாடானை.

௬௧. புத்தூர் - திருப்புத்தூர். இத்தலததில் பிரணவம் தன் பொருள் சிவபெருமானே என்பதை அறிவிக்க வேண்டித் தவம்செய்து கொன்றை மரமாகிச் சிவபெருமானுக்கு நிழல் செய்கின்றது எனபது புராணவரலாறு.

௬௨. அகரு - அகில். ஒருவரை - பொதியில் மலை. வாரி - கடலின்.

௬௩. குறள் - பூதம்; குணடோதரன். நீர்நசை - தண்ணீர்ததாகம்' அழைத்தவாறு - அழைத்தபடியே.

௬௪ செங்கையின் ஆடலகொண்டார் - திருவாதிரை நாளில தாணடவமாடியருளிய சிவபெருமானது; 'கையால் ஆடல் கொண்டாரென்பது மறறொருபொருள; "செஙகையாட்டினா" (கைமிச.) எனறா திருநாகைக்காரோணப் புராணத்தும். வெளளாறு — தென்வெள்ளாறு.

௬௫. மதகின் ஊடு. வெள்ளம் காட்டிற்று

௬௬. கொள்கைக்கு - கொள்ளுதற்கு.

௬௭. சாதி - கள், ஜாதி. பழையர் - கள்விற்போர். மூவா - பரசுராமன் முதலியவர். அலம் - கலப்பை-

௬௮. எர்க்கால். நததம் தக - இருவையொப்ப. தாழவு உயாபு. முட்கோல் - தாற்றுக்கோல்.

௬௯. புரத்தல் செய்பவன் - திருமால். பாஙகு - அழகு. மூன்று நடக்கும் உறு விளாப்படைச்சாலை மாய்க்கும் தாத்தது பின்னர்.

௭0. குறிகொள்ளும்பகடு - குறித்துக்கொள்ளும் எருமைக்கடா. நாஞ்சில - கலப்பையின. ஊழத்தல் - பதனழிதல்.

௭௧. தழைதரல் - செழித்தல், தழைகளைததருதல். கங்கு - வரம் பின பக்கம். பழையது ஈது அகரு (அகில்) தேய்த்தபான்மையது.

௭௨. கரமபு - தரிசுநிலம். அவல் - பள்ளம. பரம்பு - ஒருவகைப்பலகை. தோடம பாறியநாளில் - தோஷம் நீங்கிய நாளில். வரம்பு - வரப்பு, அளவு. நிரப்பு - தரித்திரம.

௭௩ சேய் - பிள்ளை. விலங்குறு - விலகாத. குலம் - கூட்டம, உயர்வு. கூழ் - பயிர்.

௭௪. நாறு - நாற்று. விழைய - ஒப்ப.

௭௫. பிழி - கள். "மீன்கணினளவுமவெற் றிடங்க ளினமையால்" என்பது' சிந்தாமணி. ஆற்றுக்காலாட்டிமார் - உழத்தியர். நாற்றுக்களைச்சாய்ந்து நடுவது மரபு. சாய்வு - மெலிவு. நிமிாநதவை, நாறுகள.

௭௬. சரோருகம் - தாமரை.

௭௭. களைகளைக் களையும காலம். தளை - வயல். விளையும் நடையை.

௭௮. 'சிறியபகையேனிலுமோமபுதறேறலா,பெரிதும் பிழைபாடுடையார' என்பது, நீதிநெறிவிளக்கம். அலலார் - பகையை ஓமபியவா. தாமரைப்பூ திருமாலின உந்தியாயும. நள்ளா - நட்புகொளளாத, ஒவ்வாத.

௭௯. தோட்டி - அஙகுசம் வெள்ளாம்பல் - ஒருவகைம்லா, வெளளையானை. கைவால் - கையாகிய பாணததால். தாமரை - ஒருவகைக் கொடி, தாவுகினற மரையென் னுமிருகம. புல புறகள, புலி. அஙகிரி - பாதம், அழகியமலை.

௮0. புணடரீகம் - வெணடாமரை. கோகனகம் செந்தாமரை.

கரைகின்ற - சொலலுகின்ற. கொடிய-கொடிகளாக உள்ளன, கொடுமையையுடையன.

௮௨ வினை அமைபவர் - தேவர். சூர் - சூரன். பயிர் - நெற்பயிர். பிணைத்தல்-கிளைத்தல். கழைகொல்-மூங்கிலோ.

௮௩. வயிர ஈட்டிபோலும் தோற்றத்தைக்காட்டி வெளிப்பட்டு. மதிவிடுகதிர்-சந்திரிகை. நிமிரச்சாய்ந்த.

௮௪. கொல்லரம் - கொல்லனது அரம். கொடுமபிறை இரும்பு - அரிவாள். சொல் - நெல். தூர் - அடி. வரிந்து - கட்டி.

௮௫. பிணையல் - பிணைததல்.

௮௬. ஊர்தரும் இறைவன - யமன், கடா, எழுவாய், வை, பலாலம் - வைக்கோல்.

௮௭. ஆறில ஒன்று கொற்றவன் கொளக்கொடுத்து. தொன்று - பழமை. ஆர்ப்பு செய்யும்.

௮௮. கழை - -கரும்பு. வடிக்கும் சாற்றை. அரிசனம்-மஞ்சள். புழைமனம்-உள்ளீடில்லாத மனம். உழைமான்.

௮௯. இறை - சோமசுந்தரக்கடவுள். ஆடல் எட்டெட்டு - சுச திருவிளையாடல். எவர்க்கும - எலலாமூர்த்திகளுக்கும். மூர்த்தி முனைத தலைம. "முனைததானை யெலலாககு முன்னே தோன்றி" என்னும திருவாக்கால் விளஙகும்.

௯0. பொன் போல்வாள்-பொன்னையாள். வணணமாலை எவாகக் கொணடவா.

௯௧. எட்டை அகத்தே கொண்டதாய எடகம்-திருவேடகம். முன்-முதலிய தலஙகள். கூடிய அகஙகொணட. மென்பால - மருதம்.

௯௨. கடலுக்கு நதிபதியென்ற ஒரு பெயருண்டு.

௯௩. சுறுமருப்பு - சுறுமீனுடைய கொம்பு. கோட்டினின்றும-அக்கொமபினின்றும்; சுறுமீனகொமபில் வருணனைப்பூசிபபது நெய்தனிலத்தார் மரபு. திருவம - செலவத்தை.

௯௫. படரூற- துன்பமுற. பகன்றை- புலிநகக்கொன்றை. இதன் பூவிற்குத தூண்டில் உவமை.

௯௬. இறையவன் - பரமசிவன். மொய்த்த பலவகையான புலால் நாற்றம் மாறும்படி.

௯௭. பிணடிவைப்பு - குறிஞ்சி. முல்லைவைப்பு - முல்லை. நீலம் - கருங்குவளைப்பூ; இஃது ஐந்து பாணஙகளுள் கொலைப்பாணம.

௯௮. துகிர் - பவழம். நாகங்கள்- புன்னைகள். புன்மையடைமொழி, 'புன்னாகம என்னும் பெயரில் உள்ளதாகக் கொள்க.

௯௯. ஆர் ஒலி - நிறைந்த ஒலி. நாவாய் - கப்பல், நாவையுடைய வாய்கள்.

௧00. முண்டகம் - தாழை. உல்லம் - ஒருவகை மீன்.

௧0௧. நன்கு அல்லது - தீயது.

௧0௨. மருநிலம - பாலை. உமணா - உப்பளப்போர். உப்பின் ஓஙகல - உப்பின் குவியல்.

௧0௩. கடலாலும, கேணியாலும, நிரனிறை.

௧0௬. கொற்றி - துர்க்கை.

௧0௭. மாலை - இயல்பு. வேலையில. விறறற - விறலையுடையது.

௧0௮. ஈந்து - ஈசசநதோகை. குரமபை - குடிசை. புள்ளுவர் - மறவா. விந்தை - ஸ்ரீலக்ஷ்மி நீஙமைய ராய் வாழகுவா.

௧0௯. இறுககா - பாலைநிலமாக்கள். புறு - தூதுணம புறு.

௧௧0. ச சுரம - பேரீந்து. பாடலம - பாதிரி. தொடுதல் - தோணடபபடுதல்.

௧௧௧ இவா சும்பர்தம் - எறும் சமபந்தம. வேப்ப மாலை பாணடியர்களுக்கு உரியது. அந்த நாயகன் - பாணடியன். ஸ்ரீவரகுணபாணடியதேவா திருவிடைமருதூரில் வேப்பங்கனிகளைச்சிவலிஙகங்களாகப் பாவிதது

அம்மரங்களுக்கு விதானம் கட்டுவி த்த அருமைச்சரிதை இங்கே அறியத் தக்கது; "வேமபுகட் கெல்லாம விதான மளித்தும" என்பதனுலும அறிக; இது, திருவிடை மருதூர்மும் மணிக்கோவை.

௧௧௨. எருவை - கழுகு. பொருள் கருதது றப்போமவா - பொருள வயிற பிரியும் ஆடவர். செலவு அழுங்குவிக்கும் - வருந்தச்செய்து, செலவுதலைத் தடுக்கும். கொட்டராககள் - நீணட பாம்புகள். புரி - வைககோற் புரி.

௧௧௩. கன்னிகாரம் - கோங்கு. பஞ்சிகள் - பஞ்சுகள்.

௧௧௪. ஊறந்து - மிகுந்து. பாலைகள் - பாலை மரங்கள. இப்பழங்கள, உணபவர்களின் உதடுகளை ஒன்றோடொன்று சேரும்படி செய்யும. அதரம - கீழுதடு. ஓட்டம - மேலுதடு.

௧௧௫. மால் அயன் நாடியது, அச் சிவிமலையை முன்னின் இகழார். மயக்கம் - கலப்பு.

௧௧௬. பாகல - பலா. கறி - மிளகு. கானவாரணம் - காட்டுக்கோழி. குறிஞ்சியும் முல்லையும் மயங்கினமை கூறபபட்டது.

௧௧௭. ஆன் குழக்கன்று - பசுவின் இளங்கன்று. அவலகம் - பள்ளத்திளிடத்தே. உலகெடுத்துச் சொல்லுவது, "பழம் நழுவிப் பாலில் விழுந்தது" என்னும் பழமொழி. முல்லை மருதங்களின மயககம.

௧௧௮. முணடகம் - தாமரை, தாழை. தையல் - அழகு. புதுக்கடி - புதுமணம. மருதம், நெயதல் இவற்றின மயககம.

௧௧௯. வயலைக்கொடி - பசலைக் கொடி. நெடி - ஒருவகை வணடு. பூவை - காயாமரம். இதற்குத திருமால் உவமம். நெய்தல், மருதம, முல்லை இவற்றின் மயக்கம்.

௧௨௦. வேழம் - யானை. ஆன் - பசு. இடல் - இடுதல். மதூகததலர் - இருப்பைப்பூ. கறை - உரல். கரும்பு மருதத்திற்கும், யானை குறிஞ்சிக்கும், பசு முல்லைக்கும், இருப்பை பாலைக் குமுரியன. இஃது, ஐந்திணை மயக்கம் கூறிற்று.

## திருநகரப்படலம.

௧. தேசு - ஒளி. வீசுதல் - கொடுத்தல. விண்டு - திருமால.

௨. பொலி பெருந்துறை.

௩. பாடும எல்லை - கொணடாடப்படுகிற தலத்தின் எல்லை.

௪. விமானம் - தேவாக்குரியன. உண்ணு - உணடு. அளி - வணடு.

௭. மதிசெய் - சந்திரனை யொத்த. வெளளை நதி - வெள்ளாறு.

௮. ஆசை - விருப்பம், பொன். வெறுக்கை - வெறுப்பு, பொன.

௧௦ சிறுதுறை - சிறுவழி.

௧௧. குரவு - ஆசிரியத்தன்மை. புரவு - காத்தல். குரவு ஏற்று.

௧௨. கதி - முத்தி.

௧௩. மணி நிறத்தவன் - நீலமணி போன்ற நிறததையுடைய திருமால. படலை - மாலை.

௧௪. அவை - அம்மாஙகனிகளை.

௧௫. திரையலின் கொழுந்து - வெற்றிலைக் கொடியின் கொழுந்து, அலையின் கொழுந்து; அல்லும இன்றும் சாரியைகள. சிந்நதி - வெள்ளாறு.

௧௬. நிலாம் - விளங்கும். இலாங்கலி - தென்னை. அஃது - அம்மறைப் பினை.

௧௭. தாய் - தாவி. வலிமுகம் - குரஙகு. ஆவி - தடாகம். அதனை - அவ்வாவியை. தாவிச்செய்வது.

௧௮. கந்தியஞ்சூழல் - பாக்குத் தோட்டம். கூன் உறல - மந்தாயின் கூன்மீறுதைக அடைதலை. அலை கருவிலலும, பாககுப்பழத்திற்கு மண் உருண்டையும், வாழைக்குலைக்கு மந்தையின் கூன்முதுகும உவமைகள்.

௧௯. தேத்தடை - தேனடை. வளை - சங்கு.

௨0. நால்வகை மலர்கள், கோட்டுப்பூ, கொடிப்பூ, நீர்ப்பூ, நிலப்பூ. மலர்கள் தேவர்களுக்கு இருப்பிடம். வண்டுகளுக்கு அசுரர்களுவமை.

௨௧. மூவகைநகர்-புறநகர், இடைநகர், உண்ணகர். படை - சேனை.

௨௨. கோடு - சிகரம், கொம்பு. மணி - ரத்நம், ஒலிக்குமணி.

௨௩. புகர்முகவரை — யானை. கண் - இடத்தே. உறை - துளி. மூவகை-மும்மதம், மூன்று நீர். பிறை உணர்ச்சியர் - பிறைபோல வளரும் அறிவினை உடையார். வாரி - கடல், யானைக்கூட்டம்.

௨௪. கடாம் - மதம்.

௨௫. தொடர் - சங்கிலி. பன்முறை காலெழும் செவி. கால்-காற்று. எதற்கு - எதன்பொருட்டு.

௨௬. மருவலர் - பகைவர், மணத்தையுடைய அலர். வால்நகம்-வெள்ளிய நகங்கள். கயங்குற - கசங்குற. நிரியாணம் - கடைக்கண்.

௨௭. பரியென் - சுமப்பாயென்று. அரி புணர்ச்சி மெய் - திருமால் புணர்தலையுடைய மெய்; பூமியினுடம்பு.

௨௮. முரணுடைத்து, கர-லுக்கு.

௨௯. பூப்பு - பூத்தல். பாடலம் - பாதிரி. கந்துகம் - பந்து. குதிரைக்குக் கொக்கு, பாடலம், கோரம், கந்துகமென்று பெயர்களுண்டு.

௩0. உருவை. ஆதிநூல் - வேதம். இளைத்த திங்கள் - பிறை. அதன் மிசை - அவ்வேதக்குதிரையின் மேலே. அம் கள் மாலையான் - பரமசிவன்.

௩௧. குரம் - குளம்பு. உகைக்கும் - செலுத்துகின்ற. தன்மை இல்லாத. மந்திரம் - குதிரைப்பந்தி.

௩௨. உதன்மிசை - அதனமேல். மேதகம் - கோமேதகம். பிருதிவிமுதலிய ஐம்பூதங்களினிறம் முறையே பொன்னிறமுதலியன.

௩௩. வெற்றம் - வெற்றி. சயந்தனம் - தேர். தேர்க்காற்கடுப்பு - தேருருளையின் வேகம். காற்கடுப்பு - காற்றின்வேகம். அரைசக்கால் - ஒருசிற்றெண்.

௩௪. சூரியனது தேர்செல்லுதலை மட்டு முடையது; இத்தேர் செல்லுதலையும் மீளுதலையுமுடையது.

௩௫. வியாளம் - பாம்பு; ஆதிசேடன். எய்த்து - அறிந்து. நுதலி - நெற்றியையுடைய சிவபெருமான்; அவரது தேர் - பூமி.

௩௬. துவையல் - துகையல்.

௩௭. இதனமுதலடி, "விழித்த கண் வேல்கொண் டெறிய வழித்திமைப்பின், ஓட்டன்றோ வன்கணவர்க்கு" என்னுந்திருக்குறளின் பொருளையுடையது. சுள் நிவப்புறு. கண்ணி - கருதி.

௩௮. மாசை நேர்வது - குற்றத்தைத் தருவது. தேசை - ஒளியை. ஈசை - அம்பிகை. இளமுளை - முருகக்கடவுள்.

௪0. தோற்றுநர் - தோன்றச்செய்பவர். முனைய - கூர்மையையுடைய.

௪௧. பசல் - பகற்காலம். ஒருவ - (ஒலியை) நீங்க.

௪௨. பற்ற ஆம் நளி. தோம் அற்ற.

௪௪. சற்றே கையை நீட்டி. பாடு, பீடு - பெருமை.

௪௫. பல வில - பலவகையொளி. நபச்சுரபி - காமதேனு; நபம் - ஆகாயம்.

௪௬. கொடிய - கொடிகளையுடைய. மகவாக்கம் - புத்திரப் பேறு; "அழுக்கா றுடையார்க் கதுசாலு மொன்னார், வழுக்கியுங் கேடீன் பது" என்பது திருக்குறள்.

௪௭. முகை செய - தோன்றுதலைச் செய்கின்ற. முறி - தளிர். உகைத்தல் - செலுத்தல்.

௪௮. கையதாம் - தூய்மையையுடையதாகிய. மை அளாவலால.

௪௯. உட்சோல - உள்ளத்தைச் சூழ. ஐங்கோலன் - ஐந்து அம்புகளையுடைய மன்மதன். தக்கோலத்தை மென்றவளாய். குறுங்கண - சாளரம்.

௫0. இலக்கம் - லக்ஷ்யம், அலக்

கண் - துன்பம்.

௫௧. ஆகாயத்தைப் புகைநிற முடையதென்பர்.

௫௨. மூலலை - கற்பு பங்கம் - குற்றம், சேறு.

௫௩. துணை - ஒப்பு. தமிழ் முனி - அகத்தியர். வரை - விந்தியம்.

௫௪. தாமரைப்பூ வேதியர்க்குரியது.

௫௫ ஆவிவாய் - தடாகத்திலே. எவின் - அமைபைப்போலவே.

௫௬. கிள்ளை - கிளி, கிள்ளுதலே. அம்கையா.

௫௭. வேட்டு - விவாகம செய்து. உலாவுதல் - பவனிவருதல. நறு மொறுப்பன் - பொறுமையை அடைவன்.

௫௮. பூ வண்ணத்தொடை - பூ வாலாகிய அழகியமாலே,

௫௯. கண்டும் - கற்கண்டும். தேம் - இடம்

௬௦. நியமம் - நியதி, வீதி.

௬௧. கடை - முடிவு.

௬௨. குசை - தருப்பை. தாழ்ந்த - பொருள ஆழ்ந்த. வீழ்ந்த - விருமபிய.

௬௩. பண்ணிய - பணணுக.

௬௪. குடிக்கும் - குடிப்பான். தெவ் - பகைவனுகிய இந்திரன. சேரிய - சோதறகு.

௬௫. ஆதியாகியவீ வெளியுற. காாம - முதலே. உடு - அகபி. அகததே நலததையும புறததே தீய வேடததையும ஏற்றபுததா - சாககிய நாயனா.

௬௮. கொடியது- கொடுமையை யுடையது, கொடிகளையுடையது. கோணை - மாறுபாடு; ஐ-சாரியை. சால் -மிகுதி. பொறி -யந்திரங்களை. கடியது - காவலேயுடையது.

௭௦. பொறி - இந்திரியஙகள், யந்திரஙகள். பகைப்புலம்- பகைமையை யுடைய விஷயஙகளை;பகைவருடைய இடஙகளை.

௭௧. அதிரவு - நடுக்கம. மூடுரு ப்புதவு - மூடாததகதவு.

௭௨. ஒரா - நீங்காத.

௭௩. அணியல் - மாலே. கண் ஆடில. சுவாபபுறம் நிற்ப. படர்ந்தது- வந்ததை.

௭௪. தகைத்திறம்-தடுக்குந்திறம்.

௭௫. மூரிநீா- பெரியநீரையுடைய கடல்சூழ்ந்த. பெட்டு - விரும்பி.

௭௭. வன்னி- நெருப்பு. காமத்தீ, நீங்கிற் சுடுமென்பதை, "நீஙகிற றெறூஉங குறுகுஙகாற் றணணெனுந் தீயாண்டுப் பெற்றுளிவள்" என்பதனுலறிக.

௭௮. தருமம், வாருணி, முத்தி இவைகள் பொதுவாதலறிக; வாருணி வாரரால் உண்ணப்படுவது; குளம்.

௭௯. குலமகளிர் கருவுயிர்ததிருத் தலேயும் பூத்திருததலேயும் பாத்தையர் சேரியிலுள்ள தலேவர்க்குத் தெரிவிக்கவரும்மகளிர் முறையே வெள்ளணியையும செவ்வணியையும் அணிந்து வருதல்மரபெனபா. பூந்தளி மஙகையர்-நாமகளும திருமகளும்.

௮௦. வேர் - வியர்வை, தெய்வ மகளிர்க்கு ஆடை அழுக்குருது; வியர்வையுண்டாகாது, மாலே வாடாது. புவியகததரம்பைமார் - பூமியிலுளள தெய்வப்பெண்கள்.

௮௧. பூசுரா - பூமியிலுள்ள தேவா.

௮௨. வேளாளா-கங்காகுலத்தாா,

௮௩. மூளகா - கீழமக்கள்.

௮௪. வேளாளர் விருநதை ஓடபு வரிலராயின. இச்செய்யுள், "பெயற பான் மழைபெய்யாக் கண்ணும" என்னும நாலடியாரின் பொருளை உட்கொண்டது.

௮௫. வேளாளா நீலோறபலமாலே யையுடையா.

௮௭. கமலராகம் - பதுமராகம; மாணிக்கம. விததுருமம - பவளம. வலன் அவிநததேம்- வலாசுரனிறநத இடம்;இறந்தபின் தன்னுடைய உடம பிலிருந்து நவமணிகளும உணடாக

வேண்டுமென்று இவன் வரம்பெற்ற வன்; திருவிளையாடல் மாணிக்கம் விற்றபடலம் பார்க்க.

அஅ. இனம சுட்டலாவது, 'பயறுளதோவணிகீர்'என்பார்க்கு அஃதில்லையாயின். 'உழுந்துண்டு' என்றல். கேட்டபொருளையேகொடுப்பாரென்றபடி. இம்மி-ஒருவகை அரிசி; சிறியதோரளவு. கதவுதல் - கொள்ளுதல்.

அகூ. அள்ளுநாள்-கொள்ளுநாள்.

கூ0. உயிரவரினுகருணை மெய்விட்டோடலைக்கற்பவர். 'நம்தொழில்' என்றது, சிறிதுகொடுத்துப் பெரிது கொள்ளுதலை.

கூக. தோன்றலில் - தோன்றல் விகாரத்தில். தாளினுல் திருஆரூம்.

கூஉ. அவர்திருவை. மண் - மண்ணில். ஆண்டு - ஆட்கொண்டு. பெருமனின் - சிவபெருமான்போல.

கூ௩. நகம் - மலை. இகவு-இகத்தல்; நீங்குதல்.

கூ௪. வண்டு - அம்பு. பகைவரைத் தேவராக்குவார். "கண்டுநேர் -கற்கண்டை ஒத்த.

கூ௫. அரியுகைப்பவள் - தார்க்கை. அம்புயம-அழகியபுயம. பரிகஙிரி -தேர்.

கூ௬. ஓடலும் வாடலுமுள்ள பகைவா இழிந்தவா.

கூ௭. மறைக்கொடி - வேததது வசம.

கூஅ. சாலை ஊட்டலால்.

கூகூ தங்கள் நெஞ்சில. சுதம - அழிவு.

க00. கொற்படை - கொல்லுதலையுடைய படை. பெற்பு அடை.

க0க. கற்பிற்கு அழல் உவமை; 'தழலோவென்னுங் கற்புடையதனி நாயகி" - (பாரதம், சூது, உஉக).

க0உ. பொறை - பொறுமை. ஆன்மார்த்தபூசை, பரார்த்தபூசை.

க0௩. மறைமுடி - உபநிடதம். இறையும் - சிறிதும.

க0௪. மூவகைத் தீக்கை-சமயம், விசேடம், நிருவாணம். பாவனம் - பரிசுத்தம.

க0௫. சவிமுன் நால்வர் - சவி, சமகன், வாதி, வாக்கி.

க0௭. நூரிவு - ஒடிதல். மூரல்- அன்னம். கருனை - பொரிக்கறி. பாகு - குழம்பு. பரிவு - அன்பு.

க0அ. தெவ்வி-கொண்டு. நிறைதோறும் - சால்கள் தோறும். இலிகுசம் - எலுமிச்சை. வாக்கி- வார்த்து. ஓர்கனி - நெல்லிக்கனி.

ககக. கோடிய-வளைந்த.

கக௩. கோள்கள் நமமதிலென.

கக௫. ஞானம் ஐந்தாவன: ஞானநூலை ஓதல், ஓதுவித்தல், அதன் பொருளைக கேடடல், கேட்பிததல், சிந்திததல்.

கக௭. அருவென - அருபமாக. நளளிய - நள்ளா; பொருந்த-

ககஅ. கதிர் - சூரியன்.

கககூ. ஆவி-புகை. தாய்- தாவி.

க௨0. முறை - முறைமைய.

க௨௨. அறுபகை - காமமுதலியவை.

## நைமிசப்படலம்.

க. மாதிரிப்பவர் - ஜபிப்பவா கன்மத்தைத் திரிப்பவா. சுமந்து இரிப்பவா. மந்திரிப்பவா-மந்திரியாகியபிறப்பையுடையர்; பவம்-பிறப்பு.

உ. மந்தி - வண்டு. ஒருவன் - பிரமன்.

௩. வந்து வழங்க. எந்திடத்து - எந்த இடத்து. அந்தஇடதது. நந்து- சஙகு.

௫ வயங்குவாய, விளி.தேம் - இடம விராவி இசைப்பாய்.

௬. எகின்கொடி - அன்னக்கொடி. நேமி-வளையம.

௭. அருள்திறங்குறித்து. வருட்டி (=வருடி) - தடவி.

அ. உதக்கு - வடக்கு.

கூ. மணிமார்பினன் - திருமால்.

க0. அகைக்கும் - வருததுகின்ற.

முகைக்கும்-தோன்றும். அரசுஅவண அமர்ந்து. உகைக்கும் - செலுத்தும்.

க௨. சிருக்கு - வேள்விக்குரிய ஒரு வகைக்கருவி. வென் முதகு. ஒருரு எய்தின் - சாரூப்தனித அடைந்தால். தழால-தழுவுதல்.

க௩. தாமரைக்கு நாயகன் - சூரியன். சரு - தேவருணவு. குமுதநிரைக்கு நாயகன் - சந்திரன்.

க௫. அருகுதீர் - சுருங்குதலில்லாத. யாகாக்கினியின் கொழுந்தால் தேவருலகம உருகி வீழாதிருத்தற் பொருட்டே மேகததையும் ஆகாயகங்கையையும் கீழேயிருக்க அமைத்தனர்.

க௬. யாகப்புகையால் மேகங்களும் அவற்றின் சம்பந்தத்தால் கடலும் கறுத்தன.

க௭. நாதம - ஒரு தத்துவம். போத ஆம் - மிக ஆகிய. இதிலுள்ள முனிவர் அடிசிலுண்ணு திருத்தல், இங்கேயுள்ள பலாக்கனி முதலியவற்றின் சுவையை நினைந்தே.

க௮. சுதரிசனம்- நல்ல தரிசனம், சக்கரம். தண்மைதவா.

க௯. ஒரு முனிவரன்-துருவாசர். உறந்து - மிகுந்து. ஒருவன்-கண்ணபிரான். கற்பகவனத்திலும் இது சிறந்தது.

௨௦. பன்ன - சொல்ல.

௨௧. வமனபதம - வாந்திபண்ணினசோறு. இந்திரன் முதலியவர்களின் பதவிகளை மதியாதவர்கள். அருட்பவா - திருவருளாலுண்டானவா.

௨௨. எதிர்மறை -துனபம. உடலூழ் - பிராரத்துவம். வரை - மலை. நன்பயச்சுரதேனு-நல்லபாலையுடைய காமதேனு.

௨௩. முடிய - முற்ற.

௨௪. அருட்குறி - சிவலிங்கம். நிகமம - வேதம். பவஞ்சம் - பிரபஞ்சம்.

௨௫—௩௨.. முனிவர்களுடைய பெயர்கள்.

௨௫. சுதீக்ஷணா.

௨௬. அரபத்தர். கோண் இரண்டு நாலினன் - அஷ்டகோணமஹாருஷி. மாண் இரப்பியர்.

௨௭. உரோமசர்.

௨௮. கூஷ்மாண்டர் தாலப்பியர். அசிதா. சித்திசால்: சித்தி மிகுந்த. அகமருஷணர்.

௨௯. வல்ல சுகர். தநிசிப்பெயரை ஆள்பவர். நல்ல சனதர். நகு சாதர்.

௩௦. கலைச்சிருங்கன்- கலைக்கோட்டு முனிவா. நாரதர். ஒற்கமஇல் - வறுமையில்லாத. தூமபாணர்.

௩௧. முதுபுலம்-பேரறிவு. மொழி- சொல்லப்படுகிற.உக்கிரவீரியர். விது முடி- சந்திரனை அணிந்தமுடியையுடையவர்.

௩௨. சவுபரி. பருப்பதன் - பர்வதமுனிவர். ஆசுவலாயனர். காலவர். திரணவிந்து.

௩௩. இமவரைத்தோன்றுகொடி- உமாதேவியார். உறந்த- மிக்க ஓரியாகம்-நீக்கசத்திரம்.மறம்- பாவம்.உபக்கிரமிததார்- தொடங்கினா.

௩௪. பன்னியா- பூத்தினியர்.மனு- மந்திரம்.

௩௫. சவுநகர் முனிவர்களுக்கு முகம போல்வார். தளி -கோயில்.

௩௬. அருவும் உருவும. உபயம்- ரூபாரூபம்.

௩௭. ஓதின் நின்னலது. பரமசிவன அருவததிருமேனிகொண்டு எழுந்தருளியிருக்கும் ஸ்தலததைக் கேட்கவிரும்பினர்.

௩௮. ஓர்தரு நசை - ஆராயும இச்சை. அனறு தீர - விரோதம நீங்கிய.

௩௯. அந்த வேலை - அந்தச்சமயத்தில. அளவா - கலந்து- சந்தம - அழகு. பந்தம் - கட்டு.

௪௦. பரவு போக்கு இலான் - பரமசிவன். புரவு - காத்தல. கரவு-கள்ளம. மாணுக்கா கலப்ப.

௪௧. விகசிதம் - மலர்ச்சி.

௪௨. மயிலின - மயில போல. நந்த ஓர்நில - மிக உணரு மாணுக்கா

போல.

௪௩. இருக்கை ஓதினர் - வேதத்தை ஓதினர். முகமன் இயமபிகா. திருக்கை - மாறுபாட்டை. திருக்கையால் - அழகியகைகளால்

௪௪. இருக்க - இருந்திடுக. என்றதை ஓர்ந்து. அன்று அவ்வேலையில். நன்று அவாம் மகம்.

௪௫. உறுவரர் - முனிவரர். அருவாய் - அருபமாய்.

௪௬. யாம எல்லாம.

௪௭. உரை வினா - கேட்கும் கேள்வி. புரைய - ஒப்ப. நயந்து - விரும்பி. கரை-உகுகின்ற.

௪௯. நமமுன்னோன் அருபமாய மாந்து. மோககம் - மோக்ஷம.

௫௦. பவுடிகம் - பவிஷியம். மந்தணம் - இரகசியம.

௫௧. சதுமறை - நான்குவேதம. சாற்றுவது - சொல்லுவது.

## புராணவரலாற்றுப் படலம்.

௧. மூகை - பௌத்தமதத்தைச் சார்ந்திருந்த அரசன்மகள்.

௨. படிகம - ஸ்படிகம். மேனியில் ஓர்பால் வெள்ளிய முறுவலான் - சிவபெருமான்.

௩. புலிக்காலண்ணன் மைந்தன் - உபமன்னிய முனிவர்.

௬. மழமுனிவன் - இளமையையுடைய முனிவர்.

௭. மறைமுதல் - சிவபெருமான். தந்தை - வியாக்கிரபாதா. மறைமுதல் தந்தைகிணப்புரியு மாநடம்.

௯. மூர்த்தி - உபமன்னியர்.

௧௧-௩. இவற்றிலுள்ள வரலாற்றைப் பெரியபுராணம், திருமலைச் சிறப்பாலுணர்க.

௧௪. வாசகவேதம் - திருவாசகம்.

௧௫. அழற் புனல் - அக்கினிதீர்த்தம்.

௧௭. இருந்துறை - பெரியவழி. புத்தராறு - பௌததமதத்தை.

௧௮. ஏர அண்ண.

௧௯. தௌமிய முனிவா.

௨௦. மலத்தைத் துமிக்கும்.

## புராணச்சிறப்புரைத்தபடலம்.

௨. இன்பு உருவாய்.

௩. சகசமலம் - ஆணவமலம.

௪. மூலநோய்க்கு மருந்தாய்.

௨-௪. ஆன்மநாதசிவம ஆயிறறு.

௫. இரணடாவதாகிய தோறறும், முற்று. பொழிலையுடைய அத்தலம்.

௬. கழுநீரமாலை, ஆசிரியாகருரியது. எத்தலதது அமராநிறகும்.

௯. ஏன - மறற.

௧௦. பிறாதை - பிறட

## புரூரவா தவுமியரை யடைந்த படலம்

௧. பிடக முதலியவற்றைப் பெட்பார் - பௌத்தர்.

௨. உவரிமண.

௩. அம் தவளநீறு. நாது அவ்வளவு எனும் களததாா - மகளிா. நாதமிக. அளக்கருஙகாமம முநத. அளததுரும்பு - உப்பளத்தில அகப்பட்ட துருமபு. எந்த அளக்கரும்.

௪. புலையையும் மிடியையுமவேரறக் களைந்து.

௫. திரைப்பால் - பாறகடலினிடததே.

௬. "ஒருபுடை பாமபு கொளினு மொருபுடையா, லங்கண்மா ஞாலம் விளககுறூஉ - திஙகள்" -(நாலடியார்) அவை - அவ்வுயிா.

௭. களைகள தலையெடாது.

௯. அணவு அரிய.

௧௧. "நீரிற் குமிழியிளமை" எனனும் செய்யுள், நீதிநெறிவிளக்கம்.

௧௩. வன்றி - பன்றி.

௧௪. மித்தை - மிதப்பு. பதம் சமயம். இதம அகிதம் -புண்ணியம் பாவம.

௧௫ இரவுரவம் ஒரு நரகம்.

௧௬. வயம்-வசம்.

௧௯. யாரிடத்தும் விடையுங்கொண்டு.

உ0. ஆனந்தவனம்-காசி. ஆனந்தம்-முழங்குகின்றசங்கம. ஆலோன்-சந்திரன. இதனால் நந்தம் செருக்கு ஒழிந்தது. கவல் நீங்கா - கவலுதல நீங்காத. நந்து- பெருகிய.

உ௧. துண்டியானை - துண்டிவிநாயகர். கழுது-பேய். அகிலநாயகன்-விசுவநாதர். உழுது ஆரகும். தடங்கண்ணுமை - விசாலாக்ஷி.

உஉ. தாலம் - பூமி.

உ௪. களம் - கள்ளம்.

உ௫. குப்பாயம்-சட்டை. சண்ணித்த - பூசிய. புள்ளியதோல் - மான்தோல.

உ௬. சிவகோசம் - சிவலிங்கம். நிணடல் - கிழித்தல.

௩௧ பரிணமம் - க்ஷேமம்.

௩௧. பரசுதல் - துதித்தல்.

௩உ. ஓரிய - உணரும்படி.

௩௩. பித்தனை - பித்தனாகிய என்னை. முத்து அனையானை.

௩௫. புண்ணிய சாந்தம் - விபூதி. மழமுனி - உபமன்னியர்.

௩௬. அரு ஆன்மநாயகர் - அருவத்தையுடைய ஆன்மநாயகர்.

## ஆன்மநாதர் அநாதிமூர்த்தச் செயலுரைத்தபடலம்.

௧. பெருந்துறையுற்று ஆனந்த உததிமூழ்கும திருவாதவூரர் என்பது "பெருந்துறை புகுந்து பேரின்ப வெள்ள, மூழ்கிய புனிதன்" (நால்வர் நான்மணிமாலை) என்பதை ஒத்து நின்றது. சிந்திப்போம - நினைப்போம, சிதறுண்டு போயவிடும.

உ. பசுக்கள - உயிர்கள.

௩. புணர்ந்த அன்று - வந்தனவல்ல.

௪. அவரால் - பிரமதேவராலும திருமாலாலும.

௬. விந்து - சுத்தமாயை.

௭. நீதம - நீதி.

௧௧. பந்தமுறு வாழைத்தண்டு. பசுவிறகு-பச்சைவிறகு. இருந்தை-கரி. நிரனிறை.

௧௩. வமனபதமூ - வார்த்திபண்ணிய அன்னம்.

௧௯. மகாமாயை - சுத்தமாயை.

௧௪ தனு-உடமபு. விசுத்தம் - விசேஷமான சுத்தம். தீபகம் - பார்வை மிருகம. இசித்து - இழுத்து. வசித்து - வசஞ்செய்து.

உ௧. "மீண்டு வாரா வழியருள் புரிபவன், பாண்டி நாடே பழமபதியாகவும" என்பது திருவாசகம்.

## சதாசிவ மூர்த்தமுரைத்தபடலம்.

௧. புலிங்கம் - தீப்பொறி. தடிகாலதண்டம். அல் - இருள். சுவணநகர - அமராவதி.

௩. ஆதி - ஆதிசத்தி. அறிவு - ஞானசத்தி.

௪. ஆத்தம - ஆப்தம்; உண்மை.

## மகேச்சுர மூர்த்தமுரைத்த படலம்.

௧. இருப்பாய் -பிரமனே. விதுமுடி - சிவபெருமான்; விது - சந்திரன.

௯. ஆரியன் மனையை - குருவின் மனைவியாகிய தாரையை.

௧0. முனிவரன்-பிருங்கி.

கரு. பயிக்கம் - பிச்சை; பயிக்கம் புக்கவர்-பிக்ஷாடனர்.
கசு. பாலமுனி-மார்க்கண்டேயர். மால-மயங்க.
கஎ. அரா - பாம்பு; வாசுகி.
கஅ. வினைஇ படர்கரியை - விரைந்து வந்தயானையை.
உ0. நகைகு-பழிச்சொல்லை. சிறுவிதி-தக்கன். பங்கு - அவிப்பாகம். உதை - அந்தயாகத்தை.
உக. ஆன்நெய - பசுநெய். பாந்தன்னை.ஆலிலைஇடத்தான்-திருமால்.
உஉ. வேட வேடம்மரீஇ- வேடவுருவத்தைஅடைந்து.இகன்று-போர் செய்து.
உரு. கங்காளம் - முழுவெலும்பு.
உச. வர சாதம் - விசேடம் பொருந்திய உண்மை. சேய்ஞல் வளம்பதி-திருச்சேய்ஞலூரில். ஆற்று ஆர் அடி-மண்ணியாற்றினிடைக்குறையிலுள்ள ஆத்திமரத்தின் அடியை. விரசு-கலந்த. பாசாதவனை - துதியாத தந்தையை. தடிந்தார் பால் - வெட்டிய தண்டீசரிடத்தே.
உரு. வண்டர் - வண்டு.
உசு. எக்கரவும் - எந்தக்கள்ளமும. அன்பு மிக்கு அரனே, ஓவென்று சொல்ல. நேமி - சக்கரத்தை.
உஎ. நோக்கு : பார்வை. நூக்கரு - தள்ளுதற்கரிய. ஆக்கம் - விருத்தியாதல. கா கந்த குழல்-சோலையைப் போன்ற மணம் பொருந்திய கூந்தல்.
உஅ. மதிக்கருள் - அஞ்ஞானம்; கருள்-இருள். தும்பிமுக வலலசுரன்-கயமுகாசுரன். துதிக்கு அருள் ஒரிடம - திருச்செங்காட்டங்குடி. புகர் முகத்த தயாநிதி - விநாயகமூர்த்தி.
உகூ. இருபால் - இரண்டுபக்கத்திலும்.
ருக. உதீசிஎதிர்த்திசை - தென்றிசை; உதீசி-வடக்கு. மூலாசிரியர்-தக்ஷிணாமூர்த்தி.
ருஉ. சேய . நெடுந்தூரம் செல்லுதற்குரிய; சேய்மை - நெடுந்தூரம்.
ருரு. இணைத்து - சேர்த்து.
ருசு. திரோபவித்து - மறைத்து.

## உருத்திரமூர்த்த முனைத்தபடலம்.

உ. ஏது உருத்திரர் - காரண உருத்திரர்.
ரு. தோன்றல - தலைவர்.
ச. மத்தமும அறுகும.
கூ. அதிகார ஐவர் - பிரமன் முதலியோா.
கஉ மனு - மனுக்கள்.
கரு. அறம பிறழ் தொழில்- தருமம மாறுபடுந்தொழில; பாவச்செய்கை.
கசு. "நாலிரு கோடிமேற் புகப்பெய்த நரகங்கள், பத்திரட்டியுங் காப்பவா பாரிடப் படையுடைக் கூாமாணடா." (திருவிளை. திருமணப், அஉ).
கஎ. வீரர் - வீரபத்திர[redacted]
கஅ. கீழ் உததர மூலை - வட கீழ்த்திசை.
உஉ. ஒளி - ஒழுங்கு. காள் - கருமை.
உசு. மனுதித ஆனந்தம். பின் ஆதரம: பின் - பின்பு.

## வெள்ளாற்றுப் படலம்.

ச. வழுவல் அன்பு - எழுமையும் தொடர்ந்துவரும் அன்பு.
சு. கக்கு எரித்தார். சோ-மதில். பாகு, வினையெச்ச விகுதி.
கூ. மெய் - உடம்பில், அமமாதவத் தலங்க. வேறு எண்ணாது அவத்திறம்போய் மாய. ஆதவப்பிரியர்-வெயிலுவந்த விநாயகர்.

அ. எமழானுக்கு - சிவபெருமானுக்கு.

௯. செழுவுதல் - பொருந்தல்.

௧௦. பரமாக - மிகுதியாக.

௧௧. சுருபம் - திசை. புகுமுகம் புரியுமாறு - தன்னை அவர்பார்க்கும்படி; "புகுமுகம் புரிதல" என்பதன் பொருளாலுமுணாக.

௧௨. கரக்க - ஒளிக்க. அம்கை ஆமலகம்- உள்ளங்கை நெல்லிக்கனி.

௧௩. மெய் - உண்மை, உடம்பு. ஆதவம் - வெய்யில்.

௧௮. குடிஞை - ஆறு. பெயர்முற்சொல் - சுவேதம்.

௧௯. அளறு- நரகம்.

உ௪. வில்தையாநிற்கும், வில்-ஒளி.

உ௫. வால் நாதம் அலை விராவ - வெள்ளிய சங்கங்கள் அலைகளிற் கலக்க.

## பெருந்துறை விசேடப்படலம்.

௪. பண்டாரம் - பொன்னறை.

௫. இருவ - இருதத.

௬. கயிரவம் - செவ்வல்லி.

௧௦. அகளம் - அருபம். நிகளம் - விலங்கு, ஒப்புகளறப் புணர்த்திடும்; அம்மா, இடைச்சொல்.

௧௧. உந்த - பொருந்த.

௧௩. பதம் - உணவு.

௧௪. தளி - கோயில்.

## மூர்த்தி விசேட நாமமுரைத்த படலம்.

உ. நிலவடு - வெட்டுண்டகுழி.

௪. குந்தம - குருந்த மரம்.

அ. பணவர்நாயகன், ஸ்வாமியின் திருநாமம்; ௧௧ - ம் பாடலைப்பார்க்க.

௧உ. உபாத்தியாயரான் வரலாறு, பெருந்துறைப் படலத்துள லறியலாகும்.

## யோகபீடச்சிறப்புரைத்த படலம்.

௧. கோல உரு - பன்றிவடிவம. இடந்து - பெயாதது. தாணிமேற் பயில.

௧௩. பெருவிதி - பிரமன்.

௧௫. சரு - தேவருணவு.

௧௬. கெடுமா - கெடுமாறு.

௧௭. கழங்கு - கழற்சிக்காய். குற்று - பறித்து.

௧அ. மகதியாழ - நாரதருடைய வீணை. தனிமுதல்-சிவபெருமான்.

உஉ. அந்தை - அகந்தை.

உ௩. நயனமணி - உருத்திராக்க மணி. பொரு இயலாத -ஒப்பில்லாத.

உ௭. புரிமோ - செய்வீராக; மோ, முன்னிலையசை. சேறி-செல்வாய். கடுப்ப - ஒப்ப.

உ௯. சீரை - மரவுரி.

௩௩. பாக உள - பக்குவதசையுடைய மனம்.

௩௪. உய்பாகு -பிழைக்கும்பொருட்டு.

௪௦. மணடலம - வட்டம்.

## வீரபத்திரப்படலம்.

௧. சாறு - திருவிழா. சோறு- முதலி.

உ. அங்கின்று- அங்கேநின்று.

௩. புலிங்கம- தீப்பொறி. தீஞ்சு - பறறுகோடு.

௪. துரோணம வில.

௬. குடிக்கோ - குடிப்பேனோ.
கO. புலிப்போத்து - ஆண்புலி.
க௪. நீர அல் நீர - மூத்திரம்.
க௫. அவ்வண்ணம் போல - அகரவுயிர் போல, நவ்வண்ணம் - மறைத்தலை.
க௬. எழூஉ - எழுந்து. எழுமாறு.
க௭. போழ்ந்த - பிளவுபட்ட.
க௮. வேதண்டம - கைலைமலை
க௯. தாழநத்து இட்ட சிதநிக ஞாலமுமமை - மூன்றுலகம.
உO. ஒன்று - பொருந்திய.

## தீர்த்தப்படலம்.

க. வாச்சியம - பொருள். சுட்டியுணர்த்தினமை, திருவாதவூரடிகள் புராணம், திருவடிபெற்ற சருக்கம, உ௫-ம திருவிருத்த முதலியவற்று லறியலாகும்.
உ. மதிலைப் பொடித்தவர் - சிவபெருமான்.
௩. விதிக்கு - கோணதிக்கு. கூவப்படிவம - கிணற்றுவடிவம்.
௪. பன்னம் - இலை. கறுமுறுப்ப - பொறுமை கொள்ள.
கக. முன்னம் - குறிப்பு.
கஉ. அடைந்தேற்கு - அடைந்தேனுக்கு.
க௪. அககமணி - உருததிராகக மணி.
க௬. தணஆம் மேல் தோன்றுத, ஆம் - கஙகைநீர.
க௭. கோளியககுமக - கோளகளை நடதது பிளளையை.
க௯. பைரம் - நாடு.
உO. சேரி - தெரு. முனகு - கீழமை.
உக. முனை - பிளளை.
உஉ. குதுகலம் - மகிழ்ச்சி.
உ௩. தவனை - நாயகனை. வன்றி - பன்றி.
உ௪. குணுங்கு - பேய். தோன்றலார - பைரவமூர்ததி. பாலம் - நெற்றி.
உ௭. கபோதகம் - புறா.
உ௮. அவாசித்திக்கு - தென்திக்கு.
௩க. பிந்தல் - பின்னிடுதல்.
௩௩. நடவை - வழி. சிகரி - கோபுரம்.
௩௬. ஞமலி - நாய். பிதிர்வனம் - மயானம்.
௩௭. குறும்பு - சேட்டை.
௩௮. மூன்றனுககும புறம் - வீடு.
௪உ. மஞசு - அழகு. தஞசு அககழுவாய - பறறுககோட்டைத தன்னிடததேயுடைய பிராயசசிததம்.
௪௩. மன்னிய - கழுவிய.
௪௪. இகதது - இம்மையில்.
௪௮. சூா - சூரன். புளரதத - உயர்நத.

## குமாரர் வருகைப் படலம்.

உ. தகருன் - ஆட்டிறைசசி. அறககடை - பாவம.
௬. அரிணம - மான்.
கO. குடந்தமபட்டனா - வணஙகி நின்றார்.
கக. அன்றும் - விரோதிக்கின்ற.
கஉ. காலும, அழலும்.
க௫. பதினொருவரை - ஏகாதச வுருத்திரரை.
க௬. மேய் - மேவி.
க௭. அலைவாய் - திருச்செந்தூா. இளவல - வீரவாகு.
க௯. சூராயமா - சூரனுடைய மாமரம.
உO. கொடியும் ஊர்தியும். ஓர் மாலவரை - திருப்பரங்குன்றம.

பிடி - தெய்வயானை,
உக. நாளும் ஒருகின்றீ.

உ௯. மடன் இருமை உள்ள அனபு

## பெருந்துறைப் படலம்

க. கதிர் கண், அழல் மெய். பாகு - பாகன. வுளைக்கரன - திருமால்; அம பும எறும் இல்லும. கதிர முதலி யோர் பரமென்று கூறப்பெறறவரே னும் சிவபெருமானுக்குக் கண முத லியனவாக இருததலின், பரமாகார்.

உ. அஙகம - வேதாஙகஙகள

௫. தோலா - தோல்வியடையாத.

௬. கலிங்கம் - ஆடை.

எ. தஞ்சிய - நிலைபெற்ற.

௯ இழுதையர் - மூடர்.

க௨. போது - தாமரைப்பூ.

க௪. இருமுது குரவர் - தாய்தந் தையர்; யோகநாயகி, ஆன்மநாதா.

க௬. விருத்தவடிவம் - மூப்பு வடி வம். கங்கள் - சிலைகள்.

கஎ. வேணுவனம் - திருநெல் வேலி; அதிலும் பாசூரிலுமுள்ள ஸ்த லவிருக்ஷம் மூங்கில.

க௮. அரைக்கலை - பிறை, அரை யின் ஆடை.

க௯. அறுகரும கெடுகரும. குப பாயம - சட்டை.

உ0 உறைகொல் - உறையோ புண்டரீகம - வெள்ளைதாமரை.

உ௨. வளை - சஙகம; வளையுரு - வளைந்த வடிவம. கணணெனும் பை அணிநத விரல் - பவிததிரவி ரல். பவித்திரம - தருப்பையினுற செய்யப்பெறறது.

உ௩. வேதமாகிய பாதரக்ஷை. வலக்கண் - சூரியன். கவிகை - குடை.

உ௪. தணடம - ஊன்றுகோல. விளாகுடை - வெளுததகுடை.

உ௫. சந்தம் - அழகு.

உ௬. சிவபுரம்-திருப்பெருநதுறை. நங்கு - பழிமொழி அநாதா - தம கு மேல் தலைவரில்லாதவா, கதியறற வா.

உஎ. இருக்கு - வேதத்தின் சிறிய தொரு பகுதி. நாலெணகையர் நாற் கையா-திருமால். எணகையர் - பிரம தேவா.

உ௮. வனனம் - வா்ணம். இது முதலியவை - வேதத்தை ஓதும் வகை.

௩௨ எழுதருமு - எழுகின்ற.

௩௩. குறுமபர் - குறுநிலமன்னர், தோனறல - தலைவன. வுணடாக்க னென்பது அவன் பெயர். குறும்ப வேளாளரென்ற ஒருசாதியார் திரு ப்பெருந்துறைப் பக்கத்துள்ள ஊர்க ளில் இருக்கின்றனர்.

௩௪. அலைசெயல் - வருத்தல.

௩௫. சிவபுரவளப்பார் - திருப்பெ ருந்துறைக்குரிய வளத்தையுடைய பூமி.

௩௬. நிரம்பு அமை - நிரம்புதல மைந்த. உரம் - வலி.

௩எ. எழுதருமு புகழான் - பாண டியன.

௩௮. ஆவணம - சாஸன ஓலை.

௩௯. பரதனம் - பிறருடைய பொ ருள.

௪க துயததல - அனுபவித்தல்.

௪௨. லகரவப்பகை - சூரியன். ஆத வம் களிப்பில் கொணடார் - வெயிலு வந்த விநாயகா.

௪௪. கடியபாவி - வுண்டாக்கன். தெய்வம் வழிவிடும.

௪௫. தன்னம - அறபம்.

௪௬. ஆககமகூறி - அசிகூறி. விரசு உபநிடதம.

௪எ சித்தநூல் - வியாகரணம். மீமாஞ்சையுளளும உததரம - உத் தர மீமாஞ்சை.

௪௯. இதிகாசஙகள் - சிவரகசியம், பாரத முதலியவைகள். நியாயம - தருக்கநூல.

ருo நாற்பத்து முக்கோணம் - ஸ்ரீ சக்கரம். மங்களானி பவந்து - மங்களங்கள் உண்டாகுக.

ருக. காரியசித்தி - காரியம் கைகூடுதல்.

ருஉ. தோட்கோப்புப் பொதிசோறு - தோளிற் கோத்துக்கொள்ளுதற்குரிய கட்டுச்சோறு; "தோட்கோப்புக் காலத்தாற் கொண்டுய்ம்மின்" என்பது நாலடியார்.

ருரு. கலுழி - காட்டாறு ஆடல் - அறுபத்துநான்கு திருவிளையாடல். கலை அறுபத்துநான்காதலின், 'கலையென வாடல்செய்த கண்ணுதன் மதுரை' என்றார்.

ருஅ. பா அலர் சீர்த்தி - பாடல்களிற் பரந்த கீர்த்தி.

சுக. 'எங்கெழி னெவன் ஞாயிறு' என்பது, "எங்கெழிலென் ஞாயிறெமக்கேலோ ரெம்பாவாய்" என்னுந் திருவாசகத்தைத் தழுவி நின்றது; ஞாயிறெங் கெழினு மெவனென விருப்பன்யா னினியே' என்பா பின்னும்.

சுஉ. நட்ட - நட்புற்ற.

சுச. தொடர் ஆட்சி - தொடர்ந்த அனுபவம். நல்லார்தம காட்சி - ஸாக்ஷி.

சுரு. மீன் தங்கிய கொடியையுடையவன் - பாண்டியன்.

சுசு. அஞ்சிச்சொல்லாரென்க.

எo. மண்தொடு கருவி - மண்வெட்டி.

எக. என்ன சாற்றினன் - என்ன வார்த்தை சொன்னான். படுமாறு என் - உண்டாகுந் தீங்கு யாதோ.

எஉ. மூன்றுமுறை கூறுதல் மரபு.

எங. பரிசனம் - வேலை செய்வோருடைய தொகுதி.

எரு. ஒருவி - நீங்கி.

எசு. அவல் ஓரீஇ - பள்ளமான இடத்தைவிட்டு நீங்கி.

எஎ. கொட்டு - மண்வெட்டி. பாவம் கருநிறமுடையதாகலின் அதன் காரியமாகிய இடரைக் காரிடரென்றார்.

எஅ. *அறையாநிற்க - மோத. அறுதி - முடிவு.

எகூ. பிழி - தேன். வேப்பந்தாரான் - பாண்டியன்.

அo மலய வெற்பு - பொதியின் மலை.

அஉ. பேறு - இலாபம்.

அசு. மறைமுதல் - சிவபெருமான். அழற்கருமத்தாலே அவித்து.

அஎ. ஒருவு அற - நீங்குதலற.

## பிரமனுபதேசப் படலம்.

க. அடியாள் - வந்தி. வெந்தைப்பிட்டு. நெடுமால்கொள் பாகமுள்ளார்க்கு - திருமாலைக்கொண்ட இடப்பக்கமுடைய சிவபெருமானுக்கு. ஓரடி - பிரம்படியை. நெடுமால் கொள் பாகம் இல்லேற்கு - நெடிய மயக்கத்தைக்கொண்ட பக்குவமில்லேனாகிய அடியேனுக்கு. ஈரடி - இரண்டு திருவடியை.

ங. ஆறுமதி ஓர் அயனம். இரண்டு அயனம் ஓராண்டு.

ரு. கேவலம் - கேவலாவஸ்தை. மறுவலும் - திரும்பவும்.

சு. முண்டை - ரிஷபம்.

எ. படை - ஆயுதம். [illegible]பதிரம் - நாடு.

கூ. கைய - கையினிடத்துள்ள.

கo. நானார் - நான் யாவன். வனம் ஆர் - வனம் யாது. ஒளி யார் - ஒளியாது.

கரு. சேர்ந்தார்க்கொல்லி அம்புனல் - அக்கினிதீர்த்தம். குடவயிறு - குடம்போலும் வயிறு. ஆதவம் - வெய்யில.

கஎ. நெடுமோலின் தங்கை.

கஅ. இருகால் - இருமுறை.

ககூ. இலதை - கொடி.

உo. வந்தியர் - புகழ்ந்துபாடு

வோர். அட்டகம் - அஷ்டகம்.

உ௨. அம்பரந்த- அழகு பரவிய.

உ௭. நால்வகை நடை - சரியை முதலியன. தேசுசாலுவனம் - சோதிவனம்.

உ௯. கம்பிதம் - நடுக்கம்.

௩௧. ஓதிமம் - அன்னப்பறவை.

௩௨. கனசுகரு நகண்டனை - மேகம்போன்ற கரியகண்டத்தை உடையவனை.

௩௩. எழு நாவோன்புனல் - அக்கினி தீர்த்தம். வாதராயணன் - வியாஸமுனிவர்.

௩௪. பாயதலை அரவு இறை - பரவிய தலைகளையுடைய ஆதிசேடன்.

௩௫. தருத்தகை - கற்பக தருவின் தன்மையையுடைய.

௩௬. தேள்மதி - கார்த்திகைமாதம்.

௩௭. பஃறகழி = பல் தகழி. பல அகல். வாக்குபு - வார்த்து. அக்கு அணி மாலையர். சுடர் - தீபம். உக்க வினையவன் - தீவினை நீங்கப்பெற்றவன்.

௩௮. எட்டு இயலும் மூர்த்தியார் - அஷ்டமூர்த்தியான சிவபெருமான்; "எட்டிசைந்த மூர்த்தியாய்" என்பது தேவாரம்.

௩௯. அந்தகனூர் - யமபுரம்.

௪0. பவானி - ஒரு நதி. பதரிவனம் - இலந்தை வனம்; திருநணு. மணமேகம் - தவளை.

௪௧. சென்னம் - வடிவு

௪௨. அதனை - அப்பாம்பை.

௪௪. குறி - குறித்திடுகின்ற.

## திருமாலுபதேசப் படலம்.

உ. களேபரம - உடம்பு. கங்காளம - முழுவெலும்பு.

௪. வரும் தலமாகிய சிவபுரம்.

௫. பத்தெனப்படும் உடம்பு - தசாவதாரம்.

௬. வாழ்வை.

௮. வாகு - அழகு. இரவோன் - சந்திரன். தீரததம - அக்கினி தீர்த்தம.

௯. கொள்ளிய - கொள்ள. நீழல் உவவாக்குஞ்சரம் - வெயிலுவந்த பிள்ளையார். நள்ளிய - பொருந்திய.

௧0. சிட்டன - ஞானவடிவுள்ள.

௧௧. பிப்பிலம - அரசு.

௧௫. தமிழுற - இனிமையுற. எம் இதயத்து.

௧௬. கரந்தை - சிவகரந்தை. ஆர் - ஆத்தி.

௧௭. கமை - பொறுமை. இறைநீள் - சிறிதுநீண்ட. அமைவு ஆர்.

௧௮. பழகு ஆரணங்கள்.

௧௯. அருமா குருந்தம் - அரிய பெரிய குருந்த மரம்.

உ0. மதலைதொடை - கொன்றை மாலை.

உ௧. பஞ்ச தசாக்கரி - ஒரு மந்திரம்.

உ௨. நிறத்து அகலாமல் - மார்பினின்றும நீங்காமல் திதி - பாதுகாப்பு.

உ௫. தேத்து - இடத்தில். தீர்த்தன்றான் நாராயண தீர்த்தமெனபர். பாய - பரவிய.

உ௭. பாவக் குழிசியாய் - பாவம் நிரம்பிய பானையாய். கரவு - திருட்டு.

உ௯. நிரயம - நரகம.

௩0. ஏமலி - நாய். மொத்த - அடிக்க. கெழியினன் - பொருந்தினன்.

௩௨. கேழல் - பன்றி.

௩௪. பணவன் - தேவன்.

௩௫. நசைஇ - விரும்பி. கனம் - மேகம். மனன அமர்ந்து - மனம் விரும்பி. தனபதி - குபேரன்.

௩௭. அத்த ஹேது.

௩௮. எரிபுரை - நெருப்பை ஒத்த.

௪0. வாசித்த - மணத்தை வீசிய.

## காலாக்கினியுருத்திரர் உபதேசப் படலம்.

க. வெள்ளிலை - வெற்றிலை.

௩. குல்லை - துளசி. அம் சரோருகம் - அழகிய தாமரை. சிலம்பு ஒள்ளடி அலம்ப.

௫. சின்னம் - அடையாளங்கள்.

௬. மால் தளிக்கும். மகிழ - மகிழமரம்.

௭. கதி - நடை. போகி - பாம்பு.

௮. திரிவு இல் - மாறுபடுதலில்லாத. இதழி - கொன்றை.

௯. பரிபுரம் - சிலம்பு. பதங்கர் - சூரியர். அடைப்பை - வெற்றிலைப்பை.

க0. மூடிகம் - மூஷிகம்.

கக. நிகர்தரா - ஒவ்வாத. அன்பு கிழி அவிழ்த்தென வளர. முகிழ் உறு கை - குவித்தகை.

க௨. நடி - நடித்தருள்வாய்.

க௪. மானையும் ஆமர்செய் மழுவையும.

க௫. அசைத்த - கட்டிய.

க௬. குரவர் - ஆசிரியரே.

க௮. உந்து உனக்கு - பொருந்திய உனக்கு.

௨க. வைச்சிருக்கும் - வைத்திருக்கும்.

௨௨. மயல இடிய.

௨௪. சந்தம - அழகு.

௨௫. கோட்டினா - வினோததனர்.

௨௭. சோத்து - சோததம; இழிந்தோர் செய்யும் அஞ்சலி; "சோத்துன்னடியமென்றோரைக குழுமித தொல் வானவர் சூழ்ந், தேத்துமபடி நிற்பவன்" என்பது, திருக்கோவையார், க௭௩.

௨௮. உபகரணத்து - துணைக்கருவிகளைக்கொண்டு. திளைத்த - அலைகளைச்செய்த.

௨௯. மதியையும் கதிரையும். அவாய் - விரும்பி. இலக்காகி - லக்ஷியமாகி.

௩0. அணகர் - சிவபெருமான்.

௩க. ஐயம் - பிச்சை. படிமத்தான் - தவவேடமுடையவன். பண்டாரம - பொன்னறை. வெந்தமடி - வெந்த வஸ்திரம.

௩௨. என்னரும - எத்தன்மையையுடையவரும.

௩௩. நோந்து - உடன்பட்டு. கரங்கோடி - கைக்கொள்வாய்.

௩௪. கன்னல் - நாழிகை. கோல்மென்று - பல்விளக்கி.

௩௫. எளியவா பஙகாம் - எளியவர்களிடதது இரக்கமுடையவராகிய.

௩௬. சிவததுவிசர் - ஆதிசைவர்.

௩௭. அளவு இறை ஒன்றும - இறை அளவேனும்; சிறிதும்.

௩௮. தெவ்வுபு - கொண்டு.

௩௯. அமுது - நிவேதனம.

௪0. மணிபபணி - இரததினாபரணம். காம்பு - கவரிமுதலியவற்றிற்குரியது. நேததிரம் - பட்டாடை. நககு - சிரிதது. இறை - அரசன்.

௪க. எடீஇ - எடுதது.

௪௨. கோசம் - கருவூலம். தணவுரும நீங்குதலில்லாத.

௪௩. அலசினா - மெலிந்தா. சிகரிமடம - கோபுரததின் வெளிப்பக்கததுள்ள மடம்.

௪௪. ஐவர், ௪௨ - ம கவியிற கூறப்பெற்றவர்கள்.

௪௬. அபராதம் - குற்றம்.

௪௭, துரோணமலா - தும்பைப் பூ. பாய - பரவிய.

௪௯. கூற்றின் தமர் - யமபடா. மன்ணு - ஒவ்வாத.

௫0. எண்ணில் நாள். கண - தாக்ஷணியம்.

௫க. கருக்கொள்ள - கருப்பம் கொள்ள. வலை=வலலை - விரைவு. பறழ் - குட்டி.

௫௨. முவெல் - பெண்ணாய். இடுகும - வருந்துகின்ற.

௫௪. சதுவேத புரம் - திருப்பெருந்துறை.

௫௭. தானவுலகு - தேவலோகம். தவிர்தல் - நீங்கல்.

௫௮. சத்தியன் - சக்தியையுடைய சிவபெருமான்.

## திருவாதவூரர் திருவவதாரப் படலம்.

௧. முடி ஆர் கொள் - திருமுடியில ஆத்திமாலையைக் கொண்டருளிய. அவரை அடைதருவார் - அவ்விருவரையும் அடையும்அடியார்கள். இன்பத்தில. ஓர்படியார் - ஒரேதன்மையினர்கள்.

௨. வரை—சக்கரவாளகிரி. புரை- ஒப்பு. பூழியர் கோமான் - பாண்டியன். வாதவூர் ஒளிர்தரும்.

௩. குழை - தளிர். 'சினைகள் மயிலைக்காட்டும.

௪. கடுத்து - விரைந்து. மணியை அஞ்சி. மால்போல் மிதந்திடும்.

௫. ஒரு கடல் - கருப்பஞ்சாற்றுக்கடல்.

௬. வனப்பு ஒலி வார் கழல் - அழகையுடைய முழங்குகின்றநீண்ட வீரக்கழல.

௭. பிடி-பெண்யானை, கைப்பிடி. வள்ளை - வள்ளைக்கொடி, உலக்கைப்பாட்டு. வண்டு -அளிகள, வளையலகள். இரண்டாவது மாலை- இயலபு. கற்பு - முல்லை, பதிவிரதாதர்மம்.

௮ கிழக்கு உதயபபொருள் - சூரியன். புனைந்த நீறு.

௧௦. மகாரியம- யாகததிறகுரிய வாததியம். ஓதம - கடல்.

௧௧. மருவாத ஊா. இருவாத-இருததாத. ஒருவாத-நீங்காத.

௧௨. தறகுறுபெயர் - வாதமென்னும பெயர், 'தன்' என்றது, வாதஊரை. வளி - காறறு. இரணடு - சத்தமும் பரிசமும,

௧௩. பிரமபுரம - சீகாழி. வேளநாடு. வாள - ஒளி. சைவசமயாசாரியா நால்வரும தமருள் ஒததவராதலின், அவாகள் அவதரிதத ஊாகள நான்கும தமமுள் ஒபபனவென்று கூறியநயம் பாராட்டற் பாலது.

௧௪. தொழும்பு - அடிமை.

௧௭. தன்னம் - அற்பம்.

௧௯. ஐங்கடிகை - ஐந்துநாழிகை. குற்று - பறிதது.

௨௦. ஆன நறுநெய் - பசு நெய். மானம் - பெருமை.

௨௧. பிடகம் - பௌததாகமம்.

௨௩. பந்தி - வரிசை.

௨௪. சீவரம் -பௌததர்களுடைய உடை விசேடம்.

௨௫. குன்றுகவித்தவன் - கோவர்த்தனத்தைக் குடையாகப்பிடித்த திருமால். சாக்கியர் - பௌத்தர்.

௨௬ நாலாம் சத்தி - தீவிரதரம்.

௨௭. உததரகோச மஙகை - பாண்டிநாட்டி லுள்ளதொரு சிவஸ்தலம்.

௨௮. முதுக்குறைவு - பேரறிவு.

௩௧. பமரம - வணடு. முழுவல -எழுமையும் தொடரும் அன்பு. உபக்கிரமம் - ஆரம்பம.

௩௨. இரட்டி அவுணா - ௬௬ கோடி அசுரா. துப்பு - வன்மை.

௩௩. முழவு - மததளம. பரம்பு - பரவிய. "மலைமிசைத தோனறுமதியமபோல யானைத, தலைமிசைக கொணட குடையா"என்பது நாலடியார்.

௩௪. கதலித்துடவை - வாழைத தோட்டம. ஒலியல் - ஈயோட்டி.

௩௬. புலோமசை- இந்திராணி. உறுவரா - முனிவா். ஆக்கம் - ஆசி.

௩௭. நடவை - வழி. ஒலலையில - விரைவில். வளியாய உணவுணும பூண - பாமபு; வளி - காற்று.

௩௮. தேரர் - பௌததா. முகில் பொருவாத மேனியன் - திருமால்.

௩௯. அணமை-சமீபம்.

௪௦. ஒன்றும் - சிறிதும். மனத்தைக்கொன்று.

௪௧. நடை-நல்லொழுக்கம. ஆல்

அடை - ஆலிலை.

சரு. திராவிடம் - தமிழ்.

சச. சதுவிதமாம் பாதங்கள் - நாற்பாதங்கள்; சரியைமுதலியன.

சசு. அதனில் - அந்தத் தருமத்தில். தினம் - தினந்தோறும். மணியாதியில் - மாணிக்கமுதலியவற்றைப் போல.

சஎ. வெய்யவன் - சூரியன். கை - ஒழுக்கம்.

சஅ. மூர்த்தையார் சூதவினை - மூதன்மையார்ந்த சாதகன்மம்.

ருo மாசானம் - பெரிய தியானம். ஆசான பல - குற்றமாய பலவற்றை.

ருஉ. தால் அசைத்திடுவார் - நாவை அசைப்பவர்.

ருரு. "வாத வூரினில் வந்தினி தருளிப், பாதச் சிலம்பொலி காட்டிய பரிசும்" என்பது திருவாசகம். கீர்த்தி.

ருச. வித்தம் - பொன். பவஞ்சமுத்தம் - பவஞ்சத்தினின்றும் நீங்குதலே.

ருசு. முதற்குரவன் - சிவபெருமான். பாமபின் - நடையை உறவாய். இதிர சாமமுதலிய நான்கும் கூறப்பெற்றுள்ளன.

ருஎ. வெருவு கழல - அச்சம் நீங்க. மேவியபல் சிற்றில - உடமபுகள்.

ருஅ. உரவு - வலி. உம்பல் - யானை. அரி - சிங்கம்.

ருகூ. சேய - சிவந்த. அவனேமி - அவனுடைய ஆஞ்ஞாசக்கரம்.

சுo. முகை - மலரும்பருவமுள்ள அரும்பு. வேதச்சிகை - உபநிடதம்.

சுஉ. "மாமதியன்னான் வளர்கின்றான்" என்பது சிந்தாமணி. அகவை - பிராயம.

சுச. சாதம் - உண்மை. மேதம் - யாகம்.

## அமைச்சுரிமை பூண்டபடலம்.

க. செவ்வாய்க்கட்டு - பேசாதிருந்த தன்மை.

உ. இறைகுலத்துமுதல - சந்திரன். இரதத்தில் தோற்றுகின்ற கதிர் - சூரியன். பொருது - சகியாமல்.

ந. துஞ்சுமபோதும் - அடங்கும் போதும்.

ச. உழவு - உழுதல். மழவு - குழந்தை.

ரு. 'ஊறுற்றாலும்' என்பது முதலியவற்றில, "ஒருபுடை பாமபு கொளினும்" என்னும் நாலடியாரின் கருத்தமைந்துள்ளது. அகழ்மறத்தினன் - நீக்கிய பாவத்தையுடையவன்; பாவத்தை நீக்கியவன; அகழ்தல் - தோண்டுதல்.

எ. தூய்மையை.

கூ. குலவுகின்ற அதிசயம்.

கக. அகவை - பிராயம்.

கஉ. என்றவர் - எற்றவர்; தக்கவர். மான்றவர் - மயங்கியவர்கள்.

கரு. கானிடம் - மயானத்தில்.

கசு. கருவிகள் - சேனையும பொருளும். பொற்ற - பொலிவுபெற்ற.

கஅ. அகரு - அக்குமணி, உருத்திராக்கம்.

உo. குப்பாயம் - சட்டை. மதாணி - பதக்கம்.

உக. வரூதினி - சேனை.

உஉ. உறையுள் - இரு[illegible]டம். அமைச்சுரிமை

உச. சொச்சி - மதில ; "கபாலி நீள் கடிமதிற் கூடலால வாயிலாய்" என்பது, தேவாரம்.

உசு. கறை - கறுப்பு.

உஎ. கவா மணம - பிளவு பட்ட மனம்.

உஅ. நறுமுறு பகைவர் - பொறாமை யுற்ற பகைவர்; 'நறுமொறு' எனவும் வழங்கும.

உகூ. பாண்டிநாட்டின் எல்லை கூறுவத்தகிய "மேற்குப் பெருவெளி"

என்னும வெண்பாவைப் பார்க்க வரு வாய்-வரும்படி.

௩0. உல்கு-சுங்கம். ஆகரம்-பொருளின் இருப்பிடம். அாதா-உரியா ரற்றவர்.

௩க. அமுதருத்துசாலை-அன்னசத்திரம்,நீர்வாக்குசாலை-தண்ணீர்ப்பந்தா. கோயில்-தேவாலயம. அறபபுறம - தருமத்திற்குரிய ஸாவமாணியம; இறையிலிநிலம்.

௩உ. எச்சம் - மிஞ்சியது.

௩௩. "கருவியுங்காலமும" என்னுந் திருக்குறளையும் அதனுரையையும் பார்க்க.

௩௪ இது, "வன்கணகுடிகாத்தல்" என்னுந் திருக்குறளின் பொருளைத தழுவியது.

௩அ. தீபம் - தீவு.

௩௯. நிதநியாநித்தியவஸ்துவிவேகம மனதறிறகூட. எசசமாகியுளளது, வீடு.

௪0. இல - இல்லை.

௪க. கறையடி. - யானை. உறவி - எறுமபு. இச்செய்யுள் முதலியவற்றின் பொருள்,திருவாசகம், போற்றித்திருவகவலிலுள்ள கக-ம அடிமுதலியவற்றால் விளங்கும்.

௪உ. கலை - வித்தை.

௪௪. இதன ௪ - ம் அடிமுதலியவற்றால், கருமப் பிரமவாதிமுதலியவர்களின் கொள்கைகளும் மறுபபுககளும கூறப்பபெறறன.

௪௩. பரியங்கம் - கட்டில்.

௪எ. சிதடர் - மூடர். விசரம் - நோய்.

௫௩. குளிகை - சிததகுளிகை; மாததிரை வடிவாக வுளளது. காளிதம் - களிம்பு.

௫௪. வேட்டுவொளி - ஒருவகைக்குளவி.

## திருப்பெருந்துறையடைந்த படலம்.

க. திருவா -திருவை யுடையாய. தருவாச - தருவின கீழத் தஙகுதலையுடைய இநதிரனே. கததும -கததுகினற. மருவு ஆசு (குறறததை) அகமமன.

உ. வெளி - ஆகாயம். உருஎட்டு-அஷடமூர்ததம. சிவமுன் உரு ஒனபது- நவநதருபேதம

௪. ஆசிரியனைத தேடி.

௫. மாறு - ஒவ்வாத.

௬. பொருபபால், ஆல்- அசை

எ. விலலும புலியும தம கொடிகளில் உயாததியவா- சேரனும சோழனும்.

௯. வேம்பன்முன்பு -பாணடியன்முன்பு.

கக. தவா - வில.

க௩. புதவு-கதவு. எழேழ்கோடி-௪௯ கோடி; "ஈனமிலாநெறி வந்தபொனனேழெழு கோடிவழஙகினன்" என்பது திருவாதவூரர் புராணம்; (மாகிரி. ௭ அ.) கயல் இலச்சினை-மீன முத்திரை.

க௬. நெடுஙகழுததல-ஒட்டகம்.

கஎ. கலலவடம -ஒருவகைவாததியம

கஅ. ஆவளிகள்-விருதாவளிகள்.

உக. அரிவயப் போதது - ஆணசிஙகம்

உ௨ பரிசை - கேடகம; "மழையென மருளும பஃறோல்" என்பா.

உ௩. அரிமிசை இவர்ந்தனாள்-துாககை.

உ௪ - ௩. குறிஞ்சிவளம.

உ௬. இறால - தேனடை.

உஎ. பவா - நெருக்கம.

௩0 - ௩௪ முலலைவளம.

௩0. அனீகம சேனை.

௩க. தளவம - முல்லை.

௩உ. நம்பேர் பெற்றது -மான் (மகத்துததுவம்). தவர் - முனிவா, வில்.

௩௩. தமைசசிறப்பித்து நவின்றது,

குயிற்பத்து. குழை - தளிர். கூசம் -கூச்சம்.

ஙச. சேதா-செம்மையாகிய பசு.

ஙரு - அ. பாலை.

ஙசு. சூறை - சுழல் காற்று.கோங்கிலவு - ஒருவகைமரம்.

ஙஎ. ஓரி - நரி.

ஙஅ. இதிற் பெருந்துறையை அமைத்த நயம் பாராட்டற்பாலது.

ஙக - சஙு. மருதவளம்.

ஙகூ. கயப்பு (கசப்பு)- வெறுப்பு.

சக. அகவிருள் - அஞ்ஞானம்.

சஉ. சுவைத்தண்டு - கரும்பு.

சச - சுா. நெய்தல்வளம்.

சச. நெஞ்சப் பிறங்குபோது - இதயகமலம்.

சரு. வாரி விரசு அழல் - வடவைத்தீ.

சஅ. வாதை -துன்பம்.

சகூ. சந்து - சந்தனம்.

ருo அவிகை - அவிதல்.

ருக. படமாடம் - கூடாரம்.

ருஙு. எற்றை உவந்து எறுகின்ற.

ருஅ. அயர்வுயிர்த்தார் - சிரமபரிகாரஞ்செய்துகொண்டார்.

ருகூ. குடகடலமுழவம்-மேல்கடற்பரப்பு.

சுo. தாவரம் -நிலைபெற்றது.வடபாலிற்சார - மேருவின்வடக்கேசெல்ல; இங்ஙனம் கூறுவது கவிமதம். சீவரப்போர்வை,பௌத்தருடையது.

சுஉ. என்று ஆதரவு கூர.

சுங. நத்தம் -இருள். குவையுறு - குவிந்து. வரும் அல் - வந்த இருள்.

சுரு. கதிர்க்கும் -ஒளிவீசுகின்ற.

## உபதேசப் படலம்.

க. பரம்புரன் செவ்வாய்ப் பாடல்- வேதம்.

உ. குணக்கு -கிழக்கு.

ங. எவ்வப்பிரகாசமெய்தி நின்று - தமக்குத்துன்பத்தைத்தரும சூரியப்பிரகாசம் வந்ததென்று.

ச. கருமலம் - ஆணவம. ஐயா - திருவாதவூரர்.

அ. தாழ்வடம்- மாலை. போழ - பிளக்கின்ற. அள்ளொளி - செறிந்த ஒளி.

கo. கந்து -கேடு.

கக. இரவுரவம் -ஓராகமம். ஞானமுத்திரை -சின்முத்திரை.

கஉ. ஒருவரில்லாத இரைஞ்ஞூற்றுர் - தொளாயிரத்தொண்ணூற்றென்பதின்மர்; உo-ம் செய்யுளைப் பார்க்க.

கரு. விரவுகின்ற அதனுள்ளும்.

கஎ. கண்படை -படுக்குமிடம்.

உo. உத்தமர் -சிவபெருமான்.

உஉ. கண்ணீர் தவழ.

உரு. என்கோ-என்பேனோ.

உசு. சங்கள் - தலைகள். இங்கு எழுந்தருளின.

உஅ. ஓவியம்- சித்திரம்.

உகூ. காந்தம் -அயகாந்தம். அருள ஒத்தது.

ஙo. நவ்வண்ணம மவ்வண்ணம் - திரோதானமும ஆணவமும அவ்வண்ணமாயினோ - அகாரம போன்றவா.

ஙங. கனவியது -கனாக்கண்டது.

ஙச. மைந்து-வலி.

ஙரு. அரி பளிங்கு- அரிந்தபளிங்கு. வேதி-திண்ணை. தூண்நிரை.

ஙசு. தேசிகம-பொன். கோசிகம்- சாமவேதம், பட்டாடை.

ஙஎ. கப்புரச்சாந்து - கற்பூரம்கலந்த சந்தனம்.நீவி - மெழுகி. இரும்பு உள்ளும் - இரும்புபோன்ற மனமும்.

ஙஅ. முத்தித்தையலை - மோக்ஷமகளை.

சo. "பூவினுட்சிறந்தது பொறிவாழ் பூவே" என்பது, நால்வர் நான்

மணிமாலை.
சக. தனியமைமபணி -கோயிற்ப ணிவிடை.
சரு. மனு - மந்திரம.
சகூ. அருங்கதிர் - திருவாசகம்.
ருo. முனகர் - கீழமக்கள்.
ருச. ஞானமெனவிரண்டேயா கும்
ருகூ. மகநெறி - புததிரமார்க்கம்.
ருஎ. இயமாதி - இயமமுதல். ஒப்பி - ஒழிதது. வியம் - விசாலம். சக மார்க்கம - தோழமார்க்கம். யோகு - யோகம.
ருஅ. நிருவாணத்து - நிருவாண தீக்கையால்.
ருகூ. பதி - சிவம்.
கூo. பாத்து - பகுத்து.
கூக. தொன்று - பழமை.
கூரு. உவர் - உவர்மண்.
கூச. இநதிரஞாலம - இந்திரசாலம்.
கூரு. உளி - அவ்விடத்தில்.
கூகூ. படரும - செலலும.
கூஅ. எறுவினை - ஆகாமியம.
எக. உழிதரூஉ - சுழன்று.
எஉ. மலடு - மலட்டுப்பசு.
எச. கனிவிளவு - விளாங்கனி. முனிவரும - வெறுப்பிலலாத.
எரு. கவை அழல் - கவைத்த கொழுந்தையுடைய அக்கினி.
எகூ. இடப்புறறு - பெயர்த்து.
எஅ. ஐயகோ - ஐயோ.
எகூ. கொம்மை - வட்டம்.
அக. தவிசு - மெத்தை.
அரு. பாண்டு - வெணமை.
அச. தம்பவிமபம் - தூண்களிலுள்ள உருவங்கள். பாவுகல்.
கூக. காலினும் - காற்றைக்காட்டிலும். முடங்கல் - திருமுகம.
கூரு. காதரம் - அச்சம்.
கூரு. திருமுக - திரும்புக.
கூகூ. உய்த்தனன் - செலுத்தினான், அனுப்பினான்.
கூஎ. இன்னே - இப்பொழுதே.
க00. ஒருவி - நீங்கி. செருக்கொருவி.

## மதுரையை அடைந்து விடைபெற்ற படலம்.

ங. இதில் முறையே நெய்தல் பாலை, முலலை, குறிஞ்சி, மருதம் இவை கூறப்பட்டுள்ளன.
ரு. காணுமா - காணுமுறைபபடி.
கூ. இரவி சிஙகம கணடு செல்மதி, ஆவணிமாதம. மந்திரம - குதிரைப்பநதி.
எ. கவுரியன் - பாணடியன்.
கூ. பழுதில தமமிருக்கை.
க0. இந்திரனுள் - கேட்டை. குசை - கடிவாளம.
கக. பாடி காவல் - கனைகழுவான் ஒருவனைக்கொண்டு வேந்தன செய்விப்பதொரு தண்ட விசேடம்; "கோடி காவனைக் கூறுாத நாளெலாம, பாடி காவலிற் பட்டுக கழியுமே" என்பது, தேவாரம்.
கஉ. நமமடிகள்தம்மை - திருவாதவூரரை 'உரைததவப்படியே செய்தார்' என்பது, பெரியபுராணததில், "முனனின்ற பாதகனுந் தனகருததே முற்றுவித்தான்" என்பது போன்றுகின்றது; (பெரிய எறுதி. சo.)
கரு. நஞ்சை முன்புணடு. அஞ்சாதி - அஞசாதே.
கச. விடையையும முகிலையும இருகின்ற. எனை - யறறு. அடைக்கலமென்று அடையேனை. கிறி - வஞ்சனை. உடையேனை - உடைதது விடாத என்னை.
கரு. ஒவரும - ஒழிவில்லாத. கழுகுழைததான - மன்மதன்.
ககூ. கோலததை யுடைய வாவுகின்ற குதிரை.

௨0. பரிமளனா - குதிரை வீரா. தோம - குற்றம். நாபபண - நடு. ஆமபரிசு - ஆகும் விதம்.

௨௧. படர்ந்தமை - வந்த தன்மையை.

௨௨. கடுப்பின - வேகத்தையுடையன. அசனியாய ஏறு.

௨௩. மேல்தாய - மேலே தாவிய. மிச்சிரம் - பல நிறங்களும் கலந்தது.

௨௪. ஐந்துகதிகளை யுடைய குதிரைகள்.

௨௫. கோட்டைமதில, இருபெயரொட்டு.

௨௬. பரல் - பருக்கைக்கல. பணைத்தலை - மருத நிலம.

௨௭. உடு - அகழி. கொடுவரி - புலி - வளைந்த கோடுகளையுடையது.

௨௮. தளி - கோயில். சதுக்கம் - நாற்றெருக் கூடுமிடம. சிலைத்து - முழங்கி.

௨௯. புறக்குடிகள் - அனுலோமர் முதலியோர

௩0. தார் - கிணகிணிமாலை.

௩௧. பறந்து - விரைந்துசென்று. உறந்த - மிகுந்த.

௩௩. நான் இன்றே

௩௫. ஒன்னலாககு - பகைவர்ககு முறுவல் உணடாக.

௩௮. இவ் இயல்ல - இந்தஇயலையுடையன; விரித்தல விகாரம

௪0. அருந்தமிழாளியார - திருவாதவூரா.

௪௧. அனபாம நீா. சாதம - உண்மை.

௪௨. சூழும - சுருதா நின்றன. மணித்தரை - மணிதரை, விரித்தல விகாரம. "மணிததப் பிறவியும் வேண்டுவதே" என்பது, தேவாரம்.

௪௩. கொததை நாகு - குருட்டு நத்தை; "கொத்தையாக்கினீா" என்பது தேவாரம். பெருஞ் சம்பததை - பெருஞ்செல்வததை. வள்ளி அததை சேய் - வள்ளி நாயகியாரின் மாமியா ராகிய தடாதகைப் பிராட்டியாரின் புதல்வா; உக்கிரபாண்டியர். அவருடைய வழியிற றோன்றியகோன, அரிமருத்தன பாண்டியன்.

௪௫. இகலன் முதலியன நரியின் பெயர்கள்.

௪௬. அகல்தர - விரிவாக.

௪௭. தஞ்சம உற்றவர்க்கா - தம்மைப்பற்றுக் கோடாக அடைந்தவா பொருட்டு.

௪௮. போந்த நீர் - கஙகை. இடவிய - விசாலித்த.

௪௯. இதும் - இதுவும. விளைந்தது ாது. பக - பிளவுபடும்படி.

௫௨. புத்தி - உடன்பாட்டுக் குறிப்புச் சொல். பததியின் - வரிசையாக. பலாலம் - வைககோல. பரி - குதிரைமாஙகளை.

௫௩. மிதப்புற - மிக. உடைப்பு ஒழிதா. பாம்புகள - வைக்கோலாற் செயயபபடுந திரணைகள்.

௫௪. திஙகளாயிரம் தொழுதுள்ளாள் - ஆயிரம்பிறையைத் தொழுதவள்; "திஙகளாயிரந் தொழுதாள" என்றா; (திருவிளை. மண. சுமந்த ௪0).

௫௫. அடைததிடும ஆள. முனியுமே - கோபிபபானே.

௫௬. பழங்கலை - பழமையான நூல்கள், பழையதுணி. குழங்கல, இடை - மாலைவிசேடஙகள, குழங்கலை, ஐ - சாரியை. சழஙகல - நழுவுதல. முந்தா - முதனமையையுடையவர்.

௫௮. ஓரீஇ - நீஙகி.

௫௯. சிறறுண்டி - பிட்டு. உடையா - உடைத்து. நளிய - பொருந்திய.

௬0. தடுவரி விருப்பின - தடுதததற்கரிய விருப்பத்தோடு; தொகுததல்.

௬௧. வினாய் - கேட்டு. அனறலில - விரோதித்தலில்லாத.

௬௨. கரைபடல - கரை உணடாதல், கரைதல்.

௬௩. அடைப்படுகின்றதால், ஆ

ல்-அசை இனிய பாலை - நல்லுழை.

சச. நாடுகின்ற அவர்களுடைய வேலையையும், அசையுறாது - வருந்தாது.

சரு ஏலான் - ஏற்றுக் கொள்ளான.

சசு. இதுகரை படாதது - இக்கரை உயராதது.

எ0. தரிகருவுயிர்க்கும - கருவிற்றங்கிய உயிர்க்கும்.

எக. திருகக்கு - கண்.

எஉ. கான் அடிபட்ட - மணம் பொருந்திய. நிம்பம் - வேம்பு.

எரு. வள்ளல், எழுவாய்.

எச. அலகைகள் - துன்பம். ஆளாகி - கூலியாளாகி.

எரு. கன்றல் - வாடுதல். புன்தரம் - அற்பத்தகுதி.

எசு. கீள - லங்கோடு; "கீளார் கோவணமும்" என்பது, தேவாரம்.

## தில்லையையடைந்த படலம்.

ரு. இழுதையேன் - அறிவில்லாதேன.

ரு அற்புதமறியேனென்றது, அற்புதப்பத்து. பினவருவனவற்றை இப்படியே அறிந்துகொள்ளுக. திண்அற-வலிமையற. ஒண்ணலன் -ஒருபொருளல்லேன், "ஒணருளே யொன்பது வாசல் வைத்தாய்" என்பது, தேவாரம்.

அ. மூழ்குமா - மூழ்குமாறு. பொற்ற - பொலிவு பெற்ற.

கூ. கொலலை - முல்லைநிலம்.

க0. பாண்டிமருஉம் - பாண்டிநாட்டிற் பொருந்திய.

கக. கழுமலம - சீகாழி.

கஉ. ஏங்கோய்வெற்பு - ஈங்கோய்மலை. வாஞ்சியம - ஸ்ரீ வாஞ்சியம். மறைககாடு - வேதாரணியம். கணிகிளா - மதிததல மிகக. பெண்ணை-தென்பெண்ணையாறு.

கரு முதுகிரி - விருத்தாசலம. அதிகை - திருவதிகை.

கரு. தேம - வாசனை. தாம மருவுமபடி.

கசு. சேண் பொலியாநிற்கும். தவமிக.

கரு. ஈழம - யாழப்பாணம்.

உ0. "கழாஅக்கால் பள்ளியுள் வைததற்றாற் சான்றோர், குழாஅதது ப் பேதை புகல்" என்பது திருக்குறள். போதி - அரசமரம். தேவு - புத்தன்; தேவை இருததுவேன்.

உக. 'சேற்றிற்கல்லை விட்டெறிந்தாற்போல்' என்பதும், 'நாய் குரைத்தாற் கூடக்குரைப்பாரில்லை' என்பதும் பழமொழிகள்.

உஉ. நீட்டி - எழுதி. சென்னி - தலை, சோழன்.

உரு. குறு முயலகன் வெரிந் நின்று - குறிய முயலகனுடைய முதுகின் மேலே நின்று.

உசு. குறி அரசு - குறிக்கப்படும் அரசன். போதி செறிபவன்றனை - புத்தனை,

ருக. எழினி - திரை.

ருஉ. அலா கண - பரந்த இடத்தையுடைய

ருரு. அரியோடு - சிறகத்தோடு.

ருஎ. மாலைப் போக்குற - மயக்கத்தைபபோகக.

ருஅ. கரம்-கழுதை சிந்தாமணி, நாமகளிலமபகம், கஅக - ம பாட்லைப்பார்க்க.

சஉ. சீரியது - சிறந்தது.

சரு. பரி அவர் - வருந்துகின்ற அப்பௌததர்கள்.

சச. மறைதப- இரகசியம்கெட.

சரு. ஆர்ததார் வேந்தன் - ஆத்திமாலையையுடைய அரசன்; சோழன்.

சஎ. மூகை தீர்ந்தவா தெரிஇ-ஊமைத்தன்மைதீர்ந்தவாறு தெரிந்து. சாழல் - திருச்சாழல்.

சஅ. பாய் - பரவிய. குளஉரு-சபதம செயயாத.

௩௨ ஞாதுரு - காண்பவன், ஞேயம் - அறியப்படுவது.

௩௪. சிதலையர் - இழ்மக்கள்.

௩௫ அடை அருப் பொழில்-இலைகள் நீங்காதசோலை.

௩௬. நறப்பயில்-தேன் தங்கப்பெற்ற. தலமாதி மூன்று-தலம், தீர்த்தம், மூர்த்தி.

௩௮. சிமிழ்க்க -கட்ட.

௪௦. அவ்வண்ண முதல்வன் - அகரம்போன்ற முதன்மையை யுடைய சிவபெருமான்; திருக்கூத்துள், க.

௬௪. பவர் படுசடை- கொடிபோன்றசடை. இவா - விரும்புகின்ற.

௬௫. சந்தவாசகம் . அழகியதிருவாசகத்தை, நமதயாநிதியே.

௬௮. ஐந்தெழுத்தின் நாமப்படி- பஞ்சாக்ஷரப்படி.

௭௨. ஆனிமகம் - ஆனிமாதத்துள்ளமகநக்ஷத்திரம்.

௭௫. முனி - தவமியமுனிவர்.

## புநரவன் பேருந்துறைத் திருவிழாச் செய்த படலம்.

௧. மணிவாசகர் என்னுந் தொடர் மொழியிலுள்ள மணி அசுத்த மாயா காரியம்; வாசகம் சுத்தமாயாகாரியம். மணி - மாணிக்கம்.

௨. பொதியில் வேந்தன் - பாண்டியன்.

௩. இருந்தது - இருந்தது. நவதீர்த்தங்களுள் இரண்டு திருக்கோயிலினுள்ளும் ஏழு புறத்தும் உள்ளன.

௫ விண்டு - திருமால.

௯. வரும்சீர், தவாச்சீர்.

௯. விடை - ரிஷபம்; வேதண்டம் - கைலாயமலை.

௧௧. தன வில் - பொன்னொளி.

௧௪. திதிகரும - பாதுகாத்தற்குரிய.

௧௫ கோணலடையும தண்டம- கோணற்றடி.

௧௭. சேத்திரம -பட்டாடை. பொன் இழை சால அமபரம் - பீதாமபரம; அம்பரம்-ஆடை.

௧௮. விழிக்கு விருந்தாகின்ற விழா.

௨௩. காவணம் - பந்தர். விதானம்-மேற்கட்டி.

௨௪. சமழ்ப்பு - நாணம. மருவின் - நறுமணத்தால.

௨௭. உற்றார - வந்தவாகள்.

௨௯. வெய்ய - விரும்பத்தக்க.

௩௪. தமிழமுனி - அகததியா.

௩௫. தக - ஒப்ப. சுதை- அமுதம். ஏலா -ஏற்று.

௩௬. விட்டரம் - முனிவாக்குரிய ஆசனம.

௩௭ கருதியது ஆற்று - கருதிய திருவிழாவைச்செய்.

௪௩. - ௪௦௦ திருவிழா விலககணமும் அது நடந்தமையும இவற்றிற கூறப்படுகின்றன.

௫௫. சாறு - திருவிழா.

௫௮. சுடர்ந்த - ஒளிவீசிய.

௬௮. நிரப்புக் கோட்பட்டு - வறுமையாற் கொள்ளப்பட்டு.

௭௦. நிகளம்-பந்தம. உகளம-இரண்டு.

௭௮. சூரியவிருத்தம், சந்திரவிருததம்-வாகன விசேடஙகள்.

௮௦. மான்தலை நன்னாள் - மிருகசீரிடம்.

௮௨ கற்பகத்து- கற்பகமரத்தின்.

௮௩. விதி - பிரமன்.

௮௪. அரி - சிங்கம்.

௯௪. ஒரா=ஒருவாத - நீங்காத.

### சனகராசன் முத்திபெற்ற படலம்.

உ. விதேகம்-விதேகநாடு.
ங. விருத்தி - ஜீவிதம; ஜீவிதத்திற்காக அரசனாற் கொடுக்கப்பட்டது.
எ. பராபவம் - அவமானம்.
க0. சிகழி - குடுமி.
கஉ. இருக்க என.
கச - ருடு: யாகஙிய வல்கிய முனிவர் சனகராசனுக்குச் செய்யும் உபதேசம்.
ருடு. இறை - சனகராசன்.
ருசு. நவை இல் - குற்றமில்லாத. தவுமியன் - தவுமியமுனிவர்.
ருஎ அதன் தோம் - அவ்வுபதேசத்தின் குற்றத்தை.
ருக - சங: தவுமியமுனிவர் சனகராசனுக்குச் செய்யும் உபதேசம்.
சச. இருந்துறை போம் - பெரியவழியிற் சென்ற.
சடு. பேர் ஒருவா - கீர்த்தி நீங்காத.
சசு. நந்து - பெருகுகின்ற.
சஎ. மனு அரசாம் - மந்திரங்களுக்கெல்லாம் அரசாகிய.
சஅ. மேய=மேவிய - பொருந்திய.
சகூ. ஒரீஇ - நீங்கி.

### அதர்மனும் இலக்குமியும் முத்தியடைந்த படலம்.

க. ஓதமாம் ஏதம் - வெள்ளத்தையுடைய கடல்போன்றதாகிய துன்பம்.
உ. வின்மை - ஒளியின்றன்மை.
ங. நன்னா - நன்மை.
ச. அங்கராா பெயரிட்டார். இடன்- இடம். எந்தவிடனும பொருவான்: விடனும - விடபுருஷனையும; பொருவான - ஒப்பான்; ஒவ்வானென்பதும பொருந்தும்.
ரு உழிதருவான் - சுழலுவான்.
சு குறும்பு - சேட்டை
எ இல்லி - துவாரம். வளார - சிறுகொம்பு. சூனமுன் - தோணடிஞன்.
அ. சாகோதரம் ; கால் மணி- பாம்புகக்கிய மாணிக்கம்.
கூ. எழுநாவோனிலும - நெருப்பைக் காட்டிலும். கன்று - அடிப்பட்ட. அனறு - விரோதிக்கின்ற.
க0. விடனும் மடனுமாகிய. படர் - துன்பம். அவன் - தந்தையானவன். துறவு - துறவறத்தை.
கக. எவ இயலா - எவவும் நடவாத. கதை - தண்டம. ஆவ எண. கண்டோர் ஐயோவென்று சொல்ல.
கங. கணனுற்றான் - கண்டான்; சோ
கச. அலசினேன்-வருந்தினேன்.
கடு. எண் நாரும் அன்பு - எண்ணத்தைக் கடந்த அன்பு; எண்ணத்தை ஈருமன்பென்றுமாம.
கசு. பழையர் - கள்விற்போர். மிடாவில். ராந்தினமுதுகள் - ஈச்சங்கள். மொந்தை - ஒருவகைப்பாணடம்.
கஎ. தேக்கெறிந்து - ஏப்பம் விட்டு.
கஅ. மோசிக்க - நீக்க.
ககூ. பரவும் - பரவுகின்ற. மணட - மிக.
உ0. அழுக்கு உடை - அழுக்கையுடைய ஆடை.
உங. எது - யாது; இயற்றல் எது. மாதியானம் - பெரியதியானத்தை.
உடு. ஆதன் - அறிவில்லாதவன்.
உக. கடி - கள். கடியவள் நல்குணவை.
ருஉ. குணங்கு - பேய்.
ருச. உறைநோய்க்கு மருந்தெனக.
ருசு. பவம் - பாவம், பிறப்பு. பன்ன - சொல்ல.

௩௯. மரீஇயவன் - பொருந்தியவன்'

௪௨. அஞ்சம் - அன்னப்பறவை.

௪௩. திருவிலி - செல்வ மிலலாதவன்.

௪௫. நாமெயன்றது, தன்னே. வயிரம் - தணியாக்கோபம். மிதவை-தெப்பம். சிதம் - வெண்மை.

௪௭. தன்பெயர்முன்-அகரவுயிர்; அஃது அகன்ற ஒருபெயர்-தன்மனென்பது. தனுமதி - மார்கழிமாதம். சுதம் - அழிவு.

௪௮. பணி - பணிவிடை. காதலி-காதலையுடையவள். சோமனே - அம்பிகை.

௪௯. வேள் உடைய. மன்மதன் கெட.

## வேடன்முதலிய நால்வர் அருள்பெற்ற படலம்.

௧ புத்தி - போகம்.

௨. மலயாசலம்- பொதியின்மலை. ஆரவாரம் - முழக்கம்.

௪. இறடி - தினை.

௮. சாடிய வாதனை - நீக்கியவாதனையை.

௯. விராய - கலந்த.

௧௧. இறவுளர் - வேடர்.

௧௨. சிவப்பிரியம - சிவபக்தி.

௧௪. இறைவன் - அரசனை.

௧௫. இனிச்செய்வது தெரியேன்

௧௬. என்உயிர் போவது ஒழியா

௨௰. அருந்தா - பிறருண்ணாத.

௨௧. தாபபுலிப் போத்து - வலியையுடைய ஆணபுலி. மார்பில் ஊன்

௨௨. பா-பாககளில.

௨௫. பாதம அரியாலும் கம்அயனாலும அறியாதார் - சிவபெருமான்; கம் - தலை. கோடு - கொமபு. நாதஙக - நாவில் தங்க. அவன் துதி - சிவஸ்துதியையே.

௨௬. புன தெய்வம் - அறபதெய்வங்கள்.

## நைமிசமுனிவர் பெருந்துறையடைந்து பூசித்த படலம்.

௧. வாசகவாச்சியம் - வாசகததின் பொருள்.'

௨. தாதநெறி முதல அனைததும - தாஸமார்க்கம,ஸ்தபுததிரமார்க்கம, ஸகமாாககம், ஸனமாாககம

௫. மூர்த்தன் - முதன்மையையுடையவன்.

௬ - ௩௧ சூதமுனிவர் இடையேயுள்ள தலங்களை மற்ற முனிவர்களுக்குக் காட்டல்.

௬. பொதநாமம - சைலமென்பது.

௭. ஏகா கன்னத்திற் சிவலிங்கப் பெருமான்பெயர் மகாபலேசுவரரென்பது. வடமொழி உயிரெழுத்துக்களில குற்றெழுத்துக்களிலலாத நெட்டெழுததுககளுள முந்திய துஏகாரம. புள்ளிய க. புள்ளியையுடைய ககர மெய்;'கே' எனபதை முத[illegible]புணர்ந்த தாரம - கேதாரம.

௮. நாகமென்னும் சொல்லின் பொருள்களுளளே சரிததலையுடையன மூன்று. அவை குரஙகு, பாம்பு, யானை. தாம நாகம -தாவும்நாகம்; குரங்கு. அல்லாதவை பாம்புமயானையும். வஞ்சநிழல் -மூங்கில்நிழல்.

௯. நாவலர் கோவை-சுந்தரமூர்த்தி நாயனரை சங்கிலியாரென்னும் பெயரிலுள்ள மெல்லொற்றை வல்லொ

ம்ருக்கின்ற சககிலியாரெனமுரும; சகரு இலியார் - சுணணிலலாதவா. ஓர் தாது-என்பு. சணைபயர் கோன - திருஞான சமபந்தமூாததி நாயனா. எழு தாதும நிரப்ப.

கo. தாயுருவமெனப்பட்டார - காரைக்காலம்மையார. மறைமாவார் - வேததமைக குதிரையாக வுடைய வா. மறைமாவின - வேதமாகிய மா மரத்தின கீழே.

கக. ஒருகறபத்தில பிரமதேவா கழுகுவடிவங்கொணடு சிவபெருமான திருமுடியைததேடச் சென்றனனென் பது புராணவரலாறுதலின், 'ஒருகழு குகாணாத வொணமுடியார்' எனறா. இதனை, "பூவாா பொற றவிசின்மிசை யிருந்தவனும பூந்துழாய் புனைந்த மாலும், ஓவாது கழுகேனமாயுயாந் தாழந் துறநாடி யுணமை காணாத, தேவாருந் திருவுருவன்" எனனும தேவாரத்தா லுணர்க. அவா சொல் - வேதம். அவா சொல்லெனும் விலங கல் -வேதாசலம்; திருககழுக்குனறம. பொரும்இருவா-திருமாலும அயனும.

கஉ அந்தகன் - அந்தகாசுரன். மாணி - வாமனா.

கங. நிதி - சுநதரமூாததிநாயனாக் குக் கொடுததபொறகுருநதி . நாா செலுததுமொருவரை - திருநாவுக்கர சரை; நாா-அன்பு.

கச. மறைமுதல-சிவபெருமான்.

கரு. கைததோணி - கைப்பாணம். எயதது ஓவென்று அடைந்தார - இளைதது ஓவென்று அடைநதவா எய் தது ஓதம சூழும மருநது ாவாா-அறி ந்து, கடலசூழந்த பூமியாகிய மருந தைக் கொடுததருளுபவா அததலத திற பிணிதீர்தரபொருடடு மணணு ருணடை கொடுப்பது மரபு; "விரி ந்தபுகழப புளளிககு வேளூர் வயி ததியனா, பரிநதுவினை தீாககவலல பணடிதர்கா ணம்மானே,பரிநதுவினை தீாக்கவலல பண்டிதரே யாமாயின், மருநதுவிலை கைககூலி வாஙகாரோ வமமானே,வாயிலே மணபோட்டு வா ங்குவர்கா ணம்மானே" என்னும் பழைய அம்மானைச் செய்யுளாலும் "வினைமருநது திக்கு மண்மருநது தருத தியும" என்னும வேளூர்க்கலம்பகச் செய்யுளாலும இஃது அறியப்படும.

கசு. கால்- திருவடி, நாலன், காற் று; கால் பொருந்துதலம்.

கஎ குளக்கண - நெறறியினிடத் தே. முககுளககண - மூனறுகுளாங க ளுள்ள இடம. உலகீன்ற வரைமஞ் ஞை - உமாதேவியார.

கஅ. மாதுலன்-மாமன்; தக்கன். சலநதரன் - சலந்தராசுரன். கண இடந்து - கணணைப்பெயாதது. வளை சக்கரம்.

கசு. வன்பது சாாந்து -வன்மை யைச்சாாந்து. அரசு - அரசமரம். திருவாவடுதுறைக்கு நவகோடி சித்த புரமென்பது ஒருதிருநாமம். அன் பது வாய - அன்பு வாயநத; பதினொ ருகோடி யுருததிரர்.

உo. வீழ்புனல் - மாமகதீர்த்த ம். உரவு - வன்மை.

உக. வீழியவாய - வீழிப்பழத் தின் தன்மையையுடையவாய. ஒரு ததிக்கு -ஒரு செட்டிப்பெணணுக்கு.

உஉ. ஙகோய்மலைக்கு மரகத மலையென்பது ஒரு திருநாமம். உரவு யமன் - வலியையுடைய யமன. பா ன உமை ஒரு நுவாகி - அாத்தநாரீ சுவரவடிவமாய.

உங. பரியுகைக்கும அடலார - சுந்தரமூர்ததி நாயனார். அரசசபை அரசமபலம.

உச. உறவிகள - எறும்புகள். மால் தலையை விலநுனியானது முரு க்கிய தலம.

உரு. வணடர் இகவா - வணடு கள் நீஙகாத.

உசு. தசமுகன் - இராவணனை. விணடுவனம் - மூஙகிலவனம.

உஎ. வனமணக்குருவும் - திரு மாலவடிவம; வனம - திருததுழாய். கனம - மேகம. பிரான்மலையிலமுடி முதலாக மூன்று இடமுணடெனபது இப்புராணமும், திருநாட்டுப்படலம், சகி - ம பாடலாலும் அறியலாகும.

௨அ அம்மலைற சொற்றவா - திரு வாதவூரடிகள்.

௨௯. தானநகர் - அமராவதி. ஈன மிலாள் - பொன்னனையாள்.

௩௦ அசம் - ஆடு. கசம - யானை. திருவாடானைக்கு அசகச புரமென் பது ஒருதிருநாமம. திருப்புத்தூர் ஆலயத்திற்கு ஸ்ரீதளியெனறு பெயர். திருச்சுழியலில் அம்பிகைக்குத் துணை மாலையென்பது திருநாமம. காளையென்பது திருக்கானப்பேரில் ஸ்வாமியின் திருநாமம.

௩௧. வாய் - இடம். நிலம்-ஆப்பு.

௩௩. உயாவு ஒப்பு இல-உயாவும் ஒப்புமு இல்லை.

௩௫. விணமணி - சூரியன்; அவனால் விடப்படுவது வெயில.

௩௬. வட்குமு - அஞ்சும.

௩௮. வெருவு - அஞ்சுகின்ற.

௪௪. மகிழவனத்தமருமு சிவக்கொழுந்து - காலாக்கினி யுருத்திரர் பூசித்த சிவலிங்கப் பெருமான.

௪௧. கரவு இல் - கள்ளமில்லாத; கரவில கொடை.

௫௩. மனை - மனைவி. காய் அடை ஆர - காயும் இலையும் ஆர்ந்த.

---

# அரும்பதவுரை

முற்றிற்று

---

# சூசிபத்திரம்


| | பக்கம் |
|---|---|
| கடவுள் வாழ்த்து | ௧ |
| அவையடக்கம் | ௫ |
| சிறப்புப்பாயிரம் | ௬ |
| திருநாட்டுப்படலம் | ௭ |
| திருநகரப்படலம் | ௨௨ |
| நைமிசப்படலம் | ௩௮ |
| புராணவரலாற்றுப்படலம் | ௪௫ |
| புராணச்சிறப்புரைத்த படலம் | ௪௭ |
| புரூரவா தவுமியரையடைந்த படலம் | ௪௯ |
| ஆன்மநாத்ரநாதிமூர்த்தச்செயலுரைத்த படலம் | ௫௩ |
| சதாசிவமூர்த்தமுரைத்த படலம் | ௫௭ |
| மகேச்சுரமூர்த்தமுரைத்த படலம் | ௫௯ |
| உருத்திரமூர்த்தமுரைத்தபடலம் | ௬௩ |
| வெள்ளாற்றுப்படலம் | ௬௭ |
| பெருந்துறைவிசேடப்படலம் | ௭௧ |
| மூர்த்திநாமவிசேடமுரைத்த படலம் | ௭௩ |
| யோகபீடச்சிறப்புரைத்த படலம் | ௭௫ |
| வீரபத்திரப்படலம் | ௮௧ |
| தீர்த்தப்படலம் | ௮௩ |
| குமாரர் வருகைப்படலம் | ௯௦ |
| பெருந்துறைப்படலம் | ௯௩ |
| பிரமனுபதேசப்படலம் | ௧௦௪ |
| திருமாலுபதேசப்படலம் | ௧௧௦ |
| காலாக்கினியுருத்திரருபதேசப்படலம் | ௧௧௫ |
| திருவாதவூரர் திருவவதாரப்படலம் | ௧௨௩ |
| அமைச்சுரிமைபூண்ட படலம் | ௧௩௧ |
| திருப்பெருந்துறையடைந்த படலம் | ௧௩௯ |
| உபதேசப்படலம் | ௧௪௭ |
| மதுரையையடைந்து விடைபெற்றபடலம் | ௧௫௦ |
| தில்லையையடைந்த படலம் | ௧௭௦ |
| புரூரவன் பெருந்துறையடைந்து திருவிழாச்செய்தபடலம் | ௧௭௧ |
| சணகராசன் முத்திபெற்றபடலம் | ௧௯௨ |
| அதர்மனும் இலக்குமியும் முத்தியடைந்தபடலம் | ௧௯௮ |
| வேடன்முதலிய நால்வர் அருள் பெற்றபடலம் | ௨௦௫ |
| நைமிசமுனிவர்பெருந்துறையடைந்து பூசித்தபடலம் | ௨௦௮ |

# பிழையும் திருத்தமும்

| பக்கம். | பாடல். | வரி. | பிழை. | திருத்தம். |
|---|---|---|---|---|
| ௮ | ௮ | ௧ | சாந்து | சந்து |
| ௧௦ | ௨௧ | ௧ | கார்க் | கார் |
| ௨௦ | ௧௧௫ | ௨ | மாலேய | மாலய |
| ௨௨ | ௪ | ௩ | ணிறை | விறை |
| ௨௫ | ௨௪ | ௧ | ஒரு | பொரு |
| ௩௧ | ௭௪ | ௩ | றகை | றகைத் |
| ௩௪ | ௯௫ | ௩ | உருளே | உருளேப் |
| ௩௯ | ௧௨ | ௧ | வென்றி | வெந்தி |
| ௪௯ | ௧௦ | ௪ | யமைந்த் | யமைந்த |
| ௫௩ | | | நாதர், | நாதர் |
| ௫௪ | ௨ | ௪ | பரர | பரா |
| ௫௭ | ௩ | ௩ | கத்துரு | கர்த்துரு |
| ,, | ௭ | ௨ | கனுப் | கணுப் |
| ௯௨ | ௩௧ | ௧ | யெதிர் | யெதிர்த |
| ௮௦ | ௩௬ | ௪ | கனோ | கனே |
| ,, | ௩௮ | ௨ | மெழிற் | மெயிற் |
| ௯௯ | ௪௯ | ௩ | யெலவா | யெல்லா |
| ,, | ௫௩ | ௧ | நகை | நடை |
| ௧௦௨ | ௭௨ | ௩ | யெனிது | யெனின்று |
| ௧௧௬ | ௮ | ௧ | திருவி | திரிவி |
| ,, | ௯௦ | ௧ | வொளி | வொலி |
| ௧௨௪ | ௧௩ | ௨ | ஞடும | ஞடு |
| ௧௨௬ | ௨௪ | ௧ | லாங | லாஞ |
| ௧௨௮ | ௪௪ | ௩ | மலர்க | மலா |
| ௧௫௩ | ௪௫ | ௧ | ஊத்தொடு | உளதொடு |
| ௧௫௫ | ௫௯ | ௪ | மேவுயி | மேயுயி |
| ௧௫௭ | ௭௬ | ௨ | ளுத்தை | ளுதத்தை |
| ௧௬௦ | ௩ | ௩ | மடுக் | மடு |
| ௧௯௭ | ௫௪ | ௨ | பிரங் | யிரங் |
| ,, | ௯௧ | ௪ | யன்றலின | யன்றலில |
| ௧௭௯ | ௨ | ௨ | மேவு | மேவி |
| ௧௮௫ | ௫௪ | ௧ | ப்லி | பலி |
| ௨௧௦ | ௧௭ | ௩ | வரலை | வரை |